TIGHT BINDING

UNIVERSAL
LIBRARY
OU_208082
UNIVERSAL
LIBRARY

OSMANIA UNIVERSITY LIBRARY

Call No. Tm 894811 R16T. Accession No. Tm 946

Author Ramasami, Pulavar.

Title Tamil pulavar varisai.

This book should be returned on or before the date last marked below 1958

தமிழ்ப் புலவர் வரிசை

பகுதி - கூ



கழக வெளியீடு: எகஙட

தமிழ்ப் புலவர் வரிசை

பகுதி - ஙட

[எ முதல் சஷ புத்தகங்கள்]

ஆசிரியர்:
திரு. சு. அ. இராமசாமிப் புலவர்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்.
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: Sept., 1955.

THAMIZHP PULAVAR VARISAI

VOL. III

[All Rights Reserved]

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., I/140, BROADWAY, MADRAS-1.

Head Office:

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1. C. 500.

பதிப்புரை

நாடு, மொழி ஒன்றிலேயே உயர்ச்சிபெறும்; மொழியை வளர்ப்போர் புலவர் பெருமக்கள்; அவர்கள் வரலாற்றை அறிவது, அறிவு வளர்ச்சிக்குத் துணைபுரிவதாகும்.

பெயர் தெரியாது மறைந்துபோய் அவர் பாடிய பாட்டுக்களில் கருத்துச் செறிவுடைய சொற்றொடர்களாலும், உறுப்பு முதலிய சிறப்பாலும் பிறவற்றாலும் பெயராகொண்டு நிலவும் புலவர் பெருமக்களும் அஃதன்றி மறைந்து பெயரே தெரியாது, அவர் பாடிததந்த நூல்கள்மட்டில் இருக்கும் புலவர் பெருமக்களும் பலராவர்.

இத்தகைய மாண்புமிக்க கலைச்செல்வர்களின் வரலாற்றை இயன்றவரை தொகுத்து நம் தமிழகூறு நல்லுலகுக்கு அளிக்க வேண்டுமென்ற கருததை அடிப்படையாகக்கொண்டு முதற்கண் சங்ககாலதது வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள் வரலாற்றைச **சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை**' என்னும் தொகுப்பில் பதினாறு தனி நூல்களாக வெளியிட்டோம். பின்னர் அவைகளைத் தொகுத்துக் கட்டடஞ்செய்து நூல்நிலையங்கட்கு ஏற்றவாறு அமைத்து **ஆறு பதிகளாக** வெளியிட்டுள்ளோம்.

பின்னர்ச் சங்க காலத்துக்குப் பின்பு விளங்கியிருந்த புலவர் பெருமக்களின் வரலாற்றைத் தொகுக்க எண்ணித் **தமிழ்ப் புலவர் வரிசை** என்னும் பெயருடன் முயன்று இதுகாறும் **ஒன்று** முதல் **ஒன்பது** நூல்கள்வரை கிடைத்த வரலாற்றைக்கொண்டு **திரு. கூ. அ. இராமசாமிப் புலவரவர்களை** எழுதச்செய்து வெளியிட்டுள்ளோம்.

இவ்வரலாறு வெளியிடுதற்குப் புலவர்களும் அறிவுமிக்க மாண்பினரும் தத்தமக்குத் தெரிந்த புலவர்களின் வரலாற்றைத் தாங்கள் அறிந்தவரையில்—கேட்ட அளவில்—தெரிந்து வரைந்

தனுப்பினால் மேலும் தொடர்ந்து புலவர்கள் வரலாற்றைத் தொகுத்தற்குப் பேருதவியாக இருக்கும். இதனால் புலவர்கள் வரலாறு ஒருவாறு எங்கும் யாவரும் அறிந்துகொள்ளும் வாய்ப்பும் கிட்டும்.

புலவர் வரலாறுகளே, அவர்கள் ஆக்கிய நூல்களின் துணை கொண்டும், நூலினைப் புலவர்களைக் கொண்டும் நன்கு அறியலாம். ஆகவே, இந் நன்முயற்சியில் மூனைந்து சங்க காலத்தைக்குப் பிற்கால முதல் இதுவரை வாழ்ந்திருந்த புலவர்களின் வரலாற்றைத் தொகுத்து முடிப்பதையே முதற்பெருங் கடனாகக் கொண்டுள்ளோம்.

இதுவரை வெளிவந்துள்ள ஒன்பது தனித்தனி நூல்களில் ஒன்று முதல் மூன்று வரையுள்ள மூன்றையும் ஒன்றாகத் தொகுத்துக் கட்டடஞ் செய்து, அதை **முதற் பதிப்பா**கவும் நான்கு முதல் ஆறு வரையுள்ள மூன்றையும் கட்டடஞ் செய்து **இரண்டாம் பதிப்பா**கவும் ஏழு முதல் ஒன்பது வரையுள்ள மூன்றையும் கட்டடஞ் செய்து **மூன்றும் பதிப்பா**கவும் தொகுத்துள்ளோம்.

தமிழுலக நன்மக்கள் இவைகளை வாங்கிக் கருவூலங்களில் வைத்துப் போற்றுவதுடன் கற்றும் கற்பித்தும் நாடு மொழி கலைகள் வளரத் துணைபுரிவதோடு எம்மையும் இன்னனபோன்ற அரிய பணிபுரிய ஊக்குவிப்பாகளென நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

பக்கம்

க. தமிழ்ப் புலவர் வரிசை
ஏழாம் புத்தகம் (கூச புலவர்கள்) 1—144

உ. தமிழ்ப் புலவர் வரிசை
எட்டாம் புத்தகம் (கூஉ ,,) 1—144

கூ. தமிழ்ப் புலவர் வரிசை
ஒன்பதாம் புத்தகம் (கூடு ,,) 1—140

கழக வெளியீடு: எஅஉ

தமிழ்ப் புலவர் வரிசை

ஏழாம் புத்தகம்

ஆசிரியர்:
திரு. சு. அ. இராமசாமிப்புலவர்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை 1.

First Edition: April, 1955.

THAMIZHP PULAVAR VARISAI-VII

[All Rights Reserved]

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., 1/140, BROADWAY, MADRAS-1.

Head Office:

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1. I Ed. C. 1200.

பதிப்புரை

முன்னேற்றத்தை விரும்பும் நாடுகள் எல்லாம், தத்தம் நாட்டுப் புலவர்கள் செய்தருளிய தாய்மொழி நூல்களை விரும்பிப் படித்தலும் படிப்பித்தலும் செய்கின்றன.

அத்துடன், அப் புலவர்கள் வரலாற்றைச் செம்மையுடன் உணர்ந்து அவர்தம் அறிவு, ஆண்மை, அன்பு, ஒழுக்கம், தந்நலமின்மை, தாய்மொழிப் பற்று, எல்லாருக்கும் உதவுதல், விடா உழைப்பு, அஞ்சாமை, வாய்மை, கடமை முதலிய நற்பண்புகளை மேற்கொண்டு நடந்து நற்பயன் பெறுகின்றன.

அம் முறையில் நம் நாட்டுப் புலவர்பெருமக்கள் வரலாறுகளையும், அவர்கள் செய்தருளிய நூல்களையும் மாணாக்கர் இளமையிலேயே கற்று அதன்படி ஒழுகுவது, நாட்டுக்கும், மொழிக்கும் செய்யும் நல்தொண்டாகும் எனக்கருதி **தமிழ்ப் புலவர் வரிசை**யில் இதுகாறும் ஆறுநூல்கள் வெளியிட்டுள்ளோம். உங்கள் கையில் மலரும் இந்நூல், இவ்வரிசையில் **ஏழாம் புத்தக**மாகும்

இதன்கண் **சிவசம்புப்புலவர்** முதல் **திரு. வி கலியாண சுந்தர முதலியார்** ஈறாக உள்ள புலவர் பெருமக்கள் வரலாறுகளும், ஆங்காங்கு அவ்வப் புலவர் பெருமக்கள் யாத்த பாடல்களும், உள்ளுறை நயங்களுடன் செவ்விய இனிய எளிய நடையில் எழுதப்பெற்றிருக்கின்றன.

இதனையும் முதல் ஆறுபுத்தகங்கள் போலவே, ஆசிரியர்களும், மாணாக்கர்களும், பொதுமக்களும் வாங்கிக் கற்றும் கற்பித்தும் புலவர் பெருமக்களுக்குச் செய்யும் கடப்பாட்டினைச் செய்து எங்களையும் ஊக்கு வார்களாக

இதனை எங்கள் வேண்டுகோளின்படி ஆக்கித்தந்த திரு. **சு. அ. இராமசாமிப்புலவர்** அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

		பக்கம்
க.	சிவசம்புப்புலவர்	1
உ.	அரசஞ்சண்முகனார்	2
ங.	பூவை கலியாணசுந்தரமுதலியார்	13
ச.	செல்வக்கேசவராய முதலியார்	23
ஞ.	தி. த. கனகசுந்தரம்பிள்ளை	28
சு	குமாரசாமிப்புலவர்	33
எ.	மணி. திருநாவுக்கரசுமுதலியார்	36
அ.	வ. உ. சிதம்பரம்பிள்ளை	44
கூ.	கா. நமசிவாய முதலியார்	53
கo.	சொக்கலிங்கச்செட்டியார்	61
கக.	ஞானியார் அடிகள்	66
கஉ.	உ. வே. சாமிநாத ஐயர்	76
கங.	செந்தில்நாயக அடிகள்	85
கச.	கந்தசாமிஅடிகள்	92
கஞ.	காஞ்சி நாகலிங்கமுனிவர்	95
கசு.	முத்துசசாமிக்கோனார்	99
கஎ.	வெ. ப. சுப்பிரமணிய முதலியார்	103
கஅ.	விபுலாநந்த அடிகள்	107
கக.	மறைமலை யடிகள்	112
உo.	செய்குத்தம்பிப் பாவலர்	121
உக.	தி. பொ. பழநியப்பபிள்ளை	124
உஉ.	நல்லசிவன்பிள்ளை	128
உங.	கா. ர. கோவிந்தராச முதலியார்	131
உச.	திரு. வி. கலியாணசுந்தர முதலியார்	136

தமிழ்ப் புலவர் வரிசை

[ஏழாம் புத்தகம்]

க. சிவசம்புப்புலவர்

பிறப்பும் கல்வியும்

சிவசம்புப் புலவர் என்பவர் யாழ்ப்பாணத்தில் உடுப்பிட்டி என்னும் ஊரில் 1852-ஆம் ஆண்டிற் பிறந்தார். சம்பந்தப்புலவர் சரவணமுத்துப் புலவர் என்பவர்களிடத்திலே திருவிளையாடல், கந்தபுராணம், பாரதம், இராமாயணம் முதலிய இலக்கியங்களையும், தொல்காப்பியம், நன்னூல், இலக்கண விளக்கம் முதலிய இலக்கண நூல்களையும் நன்கு கற்றுத் தேறினர். மாணவர் பலர்க்குக் கல்வி கற்பித்தார். யமகம், திரிபு முதலிய செய்யுட்கள் பாடுவதில் மிக வல்லவர்.

பாடலும் நன்கொடையும்

தமிழ்மொழியிடத்துப் பேரார்வங்கொண்டு விளங்கியவரும், பெருங் கொடையாளருமாகிய பாற்கர சேதுபதி மன்னர்மீது கல்லாடசாரக் கலித்துறை என்னும் நூலும் வேறு பல செய்யுட்களும் பாடிச் சென்று, அரங்கேற்றித் தக்கவாறு பரிசில் வழங்கப்பெற்றார்.

நூல்கள்

கந்தவனநாதர் பதிகம், வல்லிபுரநாதர் பதிகம், செந்தில் யமகவந்தாதி, திருவேரக யமகவந்தாதி, எட்டிகுடிப் பிரபந்தம், புலோலி நான்மணிமாலை முதலிய நூல்கள் இவரால் செய்யப்பெற்றுள்ளன இவருடைய செய்யுட்கள் மிக நயஞ் செறிந்தவைகளாக விளங்கும்.

"மணியாக வந்தண வனமுடி மாயன் மருகசுப்ர
மணியாக வந்த மறுத்தட வேரக வாசவெங்கண்
மணியாக வந்த குகனே பணிமலி மன்னன் தந்த
மணியாக வந்தரி மைந்தா தந்தாள்பத வாரிசமே"

என்பது இவரால் பாடப்பெற்ற திருவேரக யமகவந்தாதிப் பாடல்களில் ஒன்றாகும்.

இறுதி

இவர் அடிக்கடி தமிழ்நாடு போந்து முருகப்பெருமான் எழுந்தருளிய பல பதிகளையும் வணங்கிச் சென்றார். 1910-ஆம் ஆண்டில் தமது ஊரிலேயே காலமானார்.

உ. அரசஞ்சண்முகனார்

தோற்றம்

பழந்தமிழ்ப் பதியாகிய மதுரைமாநகருக்கு அண்மையில் உள்ள சோழவந்தான் என்னும் ஊரிலே, 1868-ஆம் ஆண்டு செப்டம்பர்த்திங்கள் 15-ஆம் நாள் அரசஞ்சண்முகனார் பிறந்தார். அரசஞ்சண்முகனாரின் தந்தையார் பெயர் அரசப்பபிள்ளை. தாயார் பெயர் பார்வதியம்மையார். அரசஞ்சண்முகனார்க்கு இடப்பெற்ற பிள்ளைப்பெயர் சண்முகம் என்பது. அந்நாளிலே சென்னையில் சண்முகம் பிள்ளை என்னும் பெயருடைய வேறொரு புலவர் விளங்கி

யிருந்தாராகலின் அவரில் நின்றுந் தம்மைப் பிரித்துக் காட்டுதற்குத் தந்தையார் பெயரின் ஒரு பகுதியையும் தம் மூடைய பெயரோடு சேர்த்துத் தம்மூடைய பெயரை அரசஞ் சண்முகனார் என நீட்டிக்கொண்டார். இப்பெயரே இன்று வரையிலும் நின்று விளங்குகிறது. சண்முகனாரின் குலம் சைவ வேளாளர் குலம். இத்திருக்குலத்தினர் நெல்லை மாவட்டத்தினின்று இங்கு வந்து குடியேறிப் பெருகியவர் என்ப.

கல்விப்பயிற்சி

சண்முகனாரின் குடும்பம் செல்வநிலையிற் சிறந்து விளங்கியது. ஆகவே, சண்முகனாரின் தந்தையார் தம் மகனுடைய கல்விப் பயிற்சியில் கருத்துச் செலுத்தவில்லை. அகவை ஏழு எட்டு ஆகும் வரையிலும் சண்முகனார் தம் மனம் போனவாறு துள்ளித் திரிந்து துடுக்குகள் செய்து கொண்டு வந்தார். பிறகு அரசப்பபிள்ளை தம்கடமையைக் கழித்தற் பொருட்டுத் தொடக்கப்பள்ளி ஒன்றிலே சேர்த்தார். சண்முகனார்க்கு அப்பள்ளிப் படிப்புப் பிடிக்கவில்லை. ஆகவே, உயிர் மெய்யெழுத்துக்களைக் கற்றுக் கொள்வதற்கு முன்னரே அப்பள்ளிப் படிப்பிற்குப் புள்ளி வைத்து விட்டு வீட்டிலே உட்கார்ந்துகொண்டார். அகவை பன்னிரண்டு ஆகியும் சண்முகனார் படிப்பிலே கருத்துச் செலுத்தவில்லை. சண்முகனாரின் பெற்றோர்களும் சண்முகனார் கல்விப் பயிற்சி பெறுதலை ஒரு பொருளாக மதிக்கவில்லை. செல்வம் இருக்கிறபடியால் மகன் சுகமாக இருப்பான் என்று அவர்கள் எண்ணிக்கொண்டார்கள். மக்களைச் சீருடன் வளர்க்காவிட்டால் அவர்கள் பிற்காலத்தில்

"அள்ளிக் கொடுக்கின்ற செம்பொன்னும் ஆடையும் ஆதரவாக் கொள்ளிக்கும் பட்ட கடனுக்கும் என்னைக் குறித்த தல்லால்

துள்ளித் திரிகின்ற காலத்தில் என்றன் துடுக்கடக்கிப்
பள்ளிக்கு வைத்திலை னேதந்தை யாகிய பாதகனே"

என்று கூறி இகழ்ந்தரைப்பார்கள் என்பதை அரசப்ப பிள்ளை அறியவில்லை.

அரசப்ப பிள்ளையின் குடும்பத்தினர்க்குரிய மடம் ஒன்று சோழவந்தானில் உண்டு. அந்த மடத்திற்குக் கிண்ணிமடம் என்று பெயர். அந்த மடத்திற்குச் சிவப் பிரகாச அடிகள் என்னும் பெரியவர் ஒருவர், மடத்திலை வராக வந்து அந்த மடத்திலே அமர்ந்தருளினர். அந்தப் பெரியார் இலக்கண இலக்கியங்களையும் மெய்யறிவு நூல் களையும் இனிது கற்றுத் தேறியவர். இறைவன்பால் மெய்யன்புடையவர். அப் பெரியார் வரவால் சோழவந் தான் புத்தழகு பெற்றுச் சிறந்தோங்கியது. அப் பெரியார் இடத்திலே அனைவரும் அன்பும் அச்சமும் கொண்டொழு கினர். சண்முகனரை அப் பெரியார் கண்டார். அண்மை யில் அழைத்தார். அறிவுத்திறனை ஆராயவெண்ணிப் பல கேள்விகளைக் கேட்டார். சண்முகனரோ ஆடு திருடிய கள் ளன்போல் விழித்தார். நாம் ஒழுங்காகப் படிக்காமல் இப் படி முழுமகனாக இருக்கிறோமே என்று உள்ளம் வருந்தி னர். சிவப்பிரகாச அடிகள், அரசப்ப பிள்ளையைப் பார்த்து, "இப்படித்தானை பிள்ளைகளை முழுமக்களாக வளர்ப்பது? செல்வம் ஒன்று இருந்தால் மட்டும் போதுமா? அச் செல் வத்தை மேன்மேலும் பெருக்குதற்கும் நல்வழியிற் செல விடுதற்கும் நல்லறிவு வேண்டாவா? அறிவற்றவன் கையில் அகப்படுஞ் செல்வம் பலருக்கும் அல்லலை உண்டாக்குமே," என்று இடித்துரைத்தார். தாமே சண்முகனர்க்குக் கல்வி கற்பிக்கத் தொடங்கினர்.

ஆண்டுகள் நான்கு சென்றன. சண்முகனர் புலவராக மாறிவிட்டார். பதினைரும் ஆண்டில் சண்முகனர் அரிய

செய்யுட்களைப் பாடும் பெரும் புலவராகத் திகழ்ந்தார். இந் நாளில் இவர் தம் தந்தையாரான அரசப்ப பிள்ளை இவ்வுலக வாழ்வைவிட் டகன்றார். குடும்பப்பொறுப்பு சண்முகனார் மீது விழுந்தது. எப்பொறுப்பையும் சண்முகனார் ஒரு பொருட்படுத்தவில்லை. கல்விக்கடலின் கரையைக் காணு தலே தம் பொறுப்பு என்று முழு உள்ளத்தையும் அதிற் செலுத்தினார். குடும்பப்பொருளைப் பாதுகாவா தொழி யவே அஃது அழியத் தொடங்கியது. சண்முகனார் அதை யும் ஒரு பொருளாக மதியாமல் கல்வியிலேயே தம் முழு உள்ளத்தையுஞ் செலுத்தி நின்றார்.

நூல்இயற்றல்

சண்முகனார் தமது பதினெட்டாவது அகவையில் 1886-ஆம் ஆண்டில் 'மாலைமாற்று மாலை' என்னும் ஒரு நூலை இயற்றித் தம் ஆசிரியராகிய சிவப்பிரகாச அடிகளிடம் காட்டினார். நூலின் அருமையையும் பெருமையையும் நன் கறிந்த அடிகளார் சண்முகனாரைப் பெரிதும் பாராட்டினார்.

நூல்களைக் கற்குந்தோறும் அறிவு மிகுதிப்படும் என் பதை உணர்ந்துகொண்ட சண்முகனார் அகநானூறு, புற நானூறு முதலிய நூல்களைத் தாமே ஆராய்ச்சி முறையில் ஆழ்ந்து கற்றார். இதனால் பிறருக்குத் தோன்றாத நுண் பொருள்கள் பல இவருக்குத் தோன்றலாயின. "தொட் டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குங், கற்றனைத் தூறும் அறிவு," என்பது பொய்யாமொழி யன்றே? நாளடைவில் இவ ருடைய ஆராய்ச்சித்திறன் பேரறிஞர்கள் போற்றுமாறும் போலியறிஞர்கள் பொறாமைப்படுமாறும் வளர்ந்தோங்கி யது. சண்முகனாருடைய புகழ், பல விடங்களினும் பரவத் தொடங்கியது.

ஆசிரியத்தொழில்

மதுரைச் சேதுபதி உயர்நிலைப்பள்ளிக்குத் தமிழாசிரியர் ஒருவர் தேவைப்பட்டார். சண்முகனாரின் புகழைக் கேள்வியுற்றிருந்தவர்கள் சண்முகனாரை அழைத்தனர். தமது இருபத்திரண்டாம் ஆண்டில், 1890-இல் சண்முகனார் தமிழாசிரியராக வேலை பார்க்கத் தொடங்கினார். மாணவர் பலர்க்குத் தமிழ்மொழியைப் போதிப்பது சண்முகனார்க்கு மிகுந்த களிப்பை விளைத்தது. செய்யுள்களை நன்கு ஆராய்ந்து பலவகைப்பட்ட பொருள்களை மாணவர்கட்குக் கூறி அவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் தமிழ்ப்பற்றையும் உண்டாக்கினார். பன்னிரண்டு ஆண்டுகள்வரை வேலை பார்த்தார். இக் காலத்தில் எண்ணற்ற நூல்களை ஆராய்ந்து பேரறிஞரானார். தொல்காப்பியம் திருக்குறள் முதலிய நூல்களுக்குப் புதுமையான பொருள்களைக் கூறிச் சொற்பொழிவுகள் செய்தார். சண்முகனாரின் நுண்பொருள் விளக்கத்தைப் பலர் போற்றினுஞ் சிலர் மறுத்துப் பழமையையே பாராட்டிச் சண்முகனாரைத தூற்றுதலும் செய்தனர். சண்முகனாரோ போற்றுதலையும் தூற்றுதலையும் ஒரு பொருட்படுத்தாமல், எதற்கும் அஞ்சாமல் தம கடமையை விடாப்பிடியாக மேற்கொண்டிருந்தார்.

நோய்

சண்முகனார் தமிழாசிரியராக வேலைபார்த்துக்கொண்டிருக்குங் காலத்தில் வயிற்றினுள் கட்டி ஒன்று புறப்பட்டது. அதனால் சண்முகனாருக்குப் பொறுக்கமுடியாத துன்பம் உண்டாயிற்று. பலவகையான மருந்துகளை உண்டும் நோய்தீரவில்லை. அல்லல் மிகுதிப்பட்டது வேற்றார் சென்றேனும் நோயை விலக்க எண்ணினார். பாண்டித்துரைத்தேவரவர்களிடம் நோயின் கொடுமையை நவன்றார். செந்தமிழைப் போற்றுவதிற் சீர்த்திமிக்கோங்கி

நின்ற தேவர் சண்முகனார்க்கு ஓராண்டளவும் ஓய்வு கொடுத்ததுடன் ஓய்வுக்காலத்திற்கும் ஊதியம் கொடுத்தார். மற்றும் மருத்துவச்செலவிற்கென நூறு வெண் பொற் காசுகளும் வழங்கினர். பாண்டித்துரைத்தேவரின் இச் செயல் சண்முகனார்க்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. தேவரின் வள்ளன்மையை வாயாரப் புகழ்ந்து மனமார வாழ்த்தினர்.

நோய்நீக்கம்

புதுக்கோட்டைக்கு அண்மையில் உள்ள ஆலங்குடி என்னும் ஊரில் அந்நாளில் தோச்சிபெற்ற மருத்துவர் ஒருவர் இருந்தார். அவருடைய பெயர் வேணுகோபால் நாயுடு. சண்முகனார் வேணுகோபால் நாயுடுவிடம் நோய் நீக்கத்தின் பொருட்டுச் சென்றார். வேணுகோபால் நாயுடு சண்முகனாரின் நோயின் தன்மையை ஆராய்ந்து பார்த்தார். தமது ஆற்றலுக்கு மேற்பட்ட தென்பதை அறிந்தார். தஞ்சையில் இருந்த தலைமை மருத்துவர், எச். எம். ஹக்கீம் என்பவரிடஞ் சென்று மருத்துவஞ்செய்துகொள்ளுமாறும் தம்மால் நீக்குவது இயலாதென்றும் கூறித் தாமுஞ் சிறிது பொருள் உதவி செய்து சண்முகனாரைத் தஞ்சைக் கனுப்பினர். தஞ்சை மருத்துவர் சண்முகனாருக்கு அறுவை மருத்துவஞ் செய்து நோயைப் போக்கிக் குணப்படுத்தினர். நன்றி மறப்பது நன்றன்றுகலின், சண்முகனார் ஹக்கீம் அவர்களின் பேருதவியை உயிருள்ள வரையில் மறவாது போற்றினர். தாம் எழுதி வெளிப்படுத்திய தொல்காப்பியப் பாயிர விருத்தியை ஹக்கீம் அவர்களின் நினைவுக்குறியாக வெளிப்படுத்தினர்.

தமிழ்ச்சங்கம்

ஈண்டிய புகழ்சேர் பாண்டித்துரையெனும் ஆண்டகையவர்களால், 1901-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள்

பதினான்காம்நாள் மதுரையிலே தமிழ்ச்சங்கம் என்னும் பெயருடன் சங்கம் ஒன்று ஏற்படுத்தப் பெற்றது. அச் சங்கத்தின் ஆதரவில் பதிப்பகம், பத்திரிகை, படிப்பகம், செந்தமிழ்க்கல்லூரி ஆகியவைகளும் ஏற்படுத்தப் பெற்றன. பதிப்பகத்தில் இருந்து செந்தமிழ் என்னும் பத்திரிகை ஒன்று வெளியிடத் தொடங்கியதோடு நூல்கள் பல பிழையற ஆராய்ந்து பதிப்பிக்கப்பட்டன. செந்தமிழ்க் கல்லூரியில் பிரவேச வகுப்பு, பால பண்டித வகுப்பு, பண்டித வகுப்பு என மூன்று வகுப்புக்கள் புலவர் படிப்புக்காக ஏற்படுத்தப்பட்டன. பாண்டித்துரையவர்களின் வேண்டுகோளின்படி சண்முகனார் செந்தமிழ்க்கல்லூரியில் ஆசிரியராக அமர்ந்து பணியாற்றினார். செந்தமிழ்த் திங்கள் தாளில் கட்டுரைகள் பல எழுதி வெளியிட்டார்.

திருவருள் நிகழ்ச்சி

சலியா உழைப்பினால் சண்முகனார் அடிக்கடி நோய் வாய்ப்பட்டார். ஒரு சமயத்தில் நோய் மிகுதியாக இருந்தது. எழுந்து நடமாடுதற்கும் முடியாதவராய்ப் படுக்கையிலேயே இருந்தார். எழுந்து காலைக்கடன் மாலைக்கடன் முதலியவை கட்குச் செல்லவும் முடியாது. அவ்வாறு செல்லவேண்டுமாயின் உதவிக்கு ஒருவர் கூடஇருந்து கைகொடுத்து அழைத்துச்செல்லவேண்டும். இவ்வாறிருக்கும்போது ஒருநாள் ஒரு பெரியவர் சண்முகனார்க்கு முன் தோன்றினார். தம்முடன் எழுந்து வருமாறும் அவ்வாறு வந்தால் நோய் தீர்க்கத்திற்கு மருந்து கொடுப்பதாகவும் கூறி அழைத்தார். நடக்க முடியாமல் இருந்த சண்முகனார் எவ்வாறோ எழுந்து நடந்து அந்தப் பெரியவரோடு சென்றுவிட்டார். அப் பெரியவர் சண்முகனாரை நாகமலைக்கு அழைத்துச்சென்றார். அங்கிருந்த ஒரு மூலிகையைச் சண்முகனார்க்குக்

காட்டி அதனைப் பறித்து உண்ணுமாறு உரைத்தார். சண்முகனரும் கீழே குனிந்து மூலிகையைப் பறித்தார். பிறகு, நிமிர்ந்து பெரியவரைப் பார்த்தால் அவர் காணப்படவில்லை. மறைந்து போனார். சண்முகனார் அப் பெரியவர் காட்டிய மூலிகையை உண்டார். உடலில் தென்பு உண்டாயிற்று. நன்றாக நடக்கும் ஆற்றலும் ஏற்பட்டது. நடந்து வீட்டை நோக்கி வந்துகொண்டிருந்தார் இவர் செய்தி இவ்வாறாக, வீட்டில் இருந்தவர்கள் சண்முகனாரைக் காணாமல் நான்கு பக்கங்களிலும் தேடத் தொடங்கினர். நோயாகப்படுத்திருந்த சண்முகனார் காணப்பெறவில்லை என்னுஞ் செய்தி எங்கும் பரவியது. தேடத் தொடங்கியவர்களிற் சிலர், நாகமலையில் இருந்து நடந்துவரும் சண்முகனாரைக் கண்டார்கள். அவர்கட்கு வியப்பும் திகைப்பும் அதிகமாயிற்று. அவர்கள் நிகழ்ந்ததை உசாவியறிந்து வியப்படைந்தனர். நிகழ்ச்சியை உணர்ந்த அனைவரும் இது தெய்வத் திருவருள் என்று கூறி மகிழ்ச்சி யடைந்தார்கள்.

ஆதீன நன்கொடை

சண்முகனாரின் பரந்த தமிழ்ப்புலமையைத் திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் அறிந்தார். ஆதீனத்தில் சிறப்பு ஒன்று நிகழ்ந்த சமயத்தில் சண்முகனாரை யழைத்துச் சொற்பொழிவுகள் செய்யச்செய்தார். சண்முகனாரின் அறிவாற்றல் ஆதீனத் தலைவருக்கு மகிழ்ச்சியை அளித்தது. பீதாம்பரப் பட்டொன்றையும் நூறு வெண்பொற் காசுகளையும் ஆதீனத்தலைவர் சண்முகனார்க்கு நன்கொடையாக வழங்கினார்.

ஆதீனத்தில் நன்கொடையைப் பெற்ற சண்முகனார் வேறு சிலருடன் குதிரைவண்டி ஒன்றில்ஏறிப் புகைவண்டிநிலையத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார்.

வழியிலே ஓர் ஏழைப்பெண் தக்க உடையில்லாமல் அரை குறையாக அரையைமூடிச் சென்றுகொண்டிருத்தலையும் அவள் தன் மானத்தை மறைத்தற்கு அடிக்கடி கிழிசற் புடவையை இழுத்து இழுத்துக் கலக்கமடைதலையுங் கண் டார். அவளுடைய அவலநிலைமை சண்முகனார்க்கு மன நெகிழ்ச்சியை உண்டாக்கியது. "வறியார்க்கொன்றீவதே யீகை" என்று எண்ணினர். தமக்கு ஆதீனத்தலைவர் வழங்கிய பீதாம்பரத்தை அப் பெண்ணிடம் கொடுத்து அணிந்துகொள்ளச் சொல்லியதுடன் சிறிது பணமும் கொடுத்துவிட்டுச் சென்றார். இந் நிகழ்ச்சி அந்த ஏழைப் பெண்ணைத் திக்குமுக்காடச செய்தது. அவள் செய் வகையறியாது திகைத்துநின்றாள். இந நிகழ்ச்சி ஆதீ னத் தலைவருக்கு எட்டியது. சண்முகனார் ஆதீனநன் கொடையை இழிவுபடுத்திவிட்டதாக எண்ணி உளளம் வருந்தினர். சண்முகனார் தம்மூர்போய்ச் சேர்ந்தவுடன் நண்பர் சிலரால் ஆதீனத்தலைவரின் மனவருத்தத்தை அறிந்தார். மீண்டும் திருவாவடுதுறைக்கு வந்து ஆதீனத் தலைவரைக் கண்டார். தாம பொன்னுடையை வழங்க நேர்ந்த காரணத்தைச் சொன்னர். ஆதீனத்தலைவர் வேறொரு பொன்னுடையை வழங்கி, "மதிப்புக்கு வழங் கும் நன்கொடைப்பொருளைப் பிறருக்கு வழங்குதல் கூடாது," என்று அறிவுரையும கூறி அனுபபினர.

உயிர்காத்தவர்

தமிழ்க்கடலில் நன்குநீந்தப் பழகிய சண்முகனர் தண்ணீரில் நீந்த அறியார். மதுரையில் உள்ள மாரியம் மன் தெப்பக்குளத்தில் ஒருநாள் இறங்கிய சண்முகனர் பாசியால் வழுக்குற்றுத் தண்ணீரில் விழுந்து விட்டார். உதவிக்குப் பக்கத்தில் எவரும் இலர். தண்ணீரில் மூழ்கு

வதும் எழுவதுமாகத் தத்தளித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது சுப்பிரமணிய முதலியார் என்னும் அன்பரொருவர் ஓடிச் சண்முகனார்க்குக கைகொடுத்துத் தூக்கி அவரைக் கரையேற்றினார். அது முதல அவர்கள் இருவர்களும் நண்பர்களாய் விளங்கினர். இந்த நண்பரின் பொருட்டுப் பாட்டொன்று பாடிச் சண்முகனார் ஒருநாள் மழைபெய்யச் செய்தார்.

மறுப்புகள்

சண்முகனாரின் புத்துரைகள் பலவற்றையுங் கண்ட சிற்றறிஞர்களை சிலர், சண்முகனாரின் கூற்றுக்களை மறுத்துப் பத்திரிகைகளில் எழுதத்தொடங்கினர். சண்முகனார் அவைகட்கெல்லாம் தக்கவாறு மறுமொழிகூறி அவர்களின் ஆட்டத்தை அடக்கினார். இலங்கைசென்று இரண்டு மூன்று ஆண்டுகள்வரை தங்கித் தமிழ்வளர்ச்சிக்காக அங்குப் பல சொற்பொழிவுகள் செய்தார். இவருடைய தமிழாற்றலை அறிந்த பலர், இவரிடம் பல நூல்களைப் பாடங்கேட்டு மகிழ்ந்தனர்.

இறுதி

அரசஞ சண்முகனார் தம் வாழ்நாள் முழுவதும் தமிழுயர்ச்சிக்கே உழைத்தார். பேரறிவைப் பெற்ற இவர் நிறைவாழ்வைப் பெறவில்லை: தமது நாற்பத்தேழாம் ஆண்டில், 1915-ஆம் ஆண்டு சனவரித திங்கள் 10-ஆம் நாள் தமது புகழுடம்பை உலகில் நிறுத்திப் பூதவுடலை மண்ணில் மறைத்தார்.

சமகாலப் புலவர்கள்

பரிதிமாற் கலைஞர், மயிலை சண்முகம் பிள்ளை, திருமலை சக்கையா முதலியவர்களும் அண்மையில் மறைந்த. உ. வே. சாமிநாதையர், மறைமலையடிகள், பண்டித மணி

மு. கதிரேசன் செட்டியார், கந்தசாமியார் முதலியோர் களும் இவர் காலத்திய புலவர்களாவர்.

இயற்றிய நூல்கள்

1. மாலைமாற்றுமாலை
2. இன்னிசை இருநூறு
3. மீனாட்சியம்மை சந்தத்திருவடிமாலை
4. திருவடிப்பத்து
5. சிதம்பர விநாயகர்மாலை
6. தொல்காப்பியச் சண்முகவிருத்தி
7. திருக்குறள் சண்முகவிருத்தி
8. திருவள்ளுவர் நேரிசை
9. ஆருபெயர் அன்மொழித்தொகை ஆராய்ச்சி
10. ஏகபாத நூற்றந்தாதி
11. முருகக்கடவுள் கலம்பகம்
12. இசைநுணுக்கச சிற்றுரை
13. நுண்பொருட்கோவை
14. மதுரைச் சிலேடை
15. நவமணிக் காரிகைநிகண்டு
16. பஞ்சதந்திர வெண்பா

ஆகிய இவைகள் அரசஞ்சண்முகனார் செய்த நூல்களாம். இவைகளில் சில நூல்கள் அச்சாகி வெளிவந்துள்ளன.

ஈ. பூவை கலியாணசுந்தர முதலியார்

பிறப்பு

தொண்டைநாட்டிலே சென்னையம்பதியை ஒட்டியுள்ள பறங்கிமலையிலே 1854-ஆம் ஆண்டு மேத் திங்கள் பத்தாம் நாள் கலியாண சுந்தர முதலியார் தோன்றினர். கலியாணசுந்தரரின் தந்தையார் பெயர் அண்ணாச்சாமி முதலியார். தாயார்பெயர் உண்ணாமுலையம்மை கலியாணசுந்தரர் பின்னாளில் சென்னையை ஒட்டியுள்ள பூவிருந்தவல்லிக்குக் குடியேறியமையின் அவருடைய பெயர் பூவை கலியாணசுந்தரர் என மாறி நின்றது. பூவை என்பது பூவிருந்தவல்லி என்பதன் மரூஉப் பெயர்.

கல்விப்பயிற்சி

கலியாணசுந்தரர் நுண்ணறிவுடையவராக விளங்கியமையின் மிக இளம்பருவத்தில் தானே நிகண்டு, அந்தாதி, கலம்பகம், பிள்ளைத்தமிழ் முதலிய நூல்களைக் கற்றுச் செய்யுள் பாடுந் திறமுடையவராக விளங்கினர். நாள்தோறும் திருமுருகாற்றுப்படையைக் கூறி முருகக்கடவுளை வழுத்தியபடியால் முருகக்கடவுளின் திருவருளும் கலியாணசுந்தரர்க்குக் கைகூடி நின்றது. பூங்காவனக்கவிராயர் என்பவரிடம் கலியாணசுந்தரர் பாடசாலையில் கல்வி கற்றுக் கொண்டிருந்தார். ஆசிரியர் இல்லாத சமயத்திலே ஒரு நாள் மாணவர்கள் குறும்புசெய்து விளையாடிக்கொண்டிருந்தனர். ஆனால், கலியாணசுந்தரர் மற்றவர்களோடு சேராமல் தம் பாடங்களைக் கருத்துடன் படித்துக்கொண்டிருந்தார். பாடசாலைக்கு வந்த பூங்காவனக்கவிராயர் மாணவர்களின் குறும்பைக்கண்டு சினங்கொண்டார். பிரம்பைக் கையில்எடுத்துக்கொண்டு மாணவர்களின்

தொடைகளில் நன்றுகச் சாடிவிட்டார். குறும்புசெய் யாமலிருந்த கலியாணசுந்தரரைச் சும்மா விடவில்லை. அவருடைய தொடைகளினுஞ் சில அடிகள் விழுந்தன. அவரும் விளையாடிக் குறும்பு செய்திருப்பார் என்னும் எண்ணத்துடன் தான் ஆசிரியர் கலியாணசுந்தரரையும் அடித்து விட்டார். இச் செயல் கலியாணசுந்தரருக்கு மிகுந்த மனவருத்தத்தைக் கொடுத்தது. உடனே அவர்,

"எந்தவிதக் குற்றமும்யான் இன்றுசெய் யாதிருக்க
எந்தன் தொடையதனில் என்சூடு—வந்ததெனப்
பூரணமாய்க் கல்விகற்ற பூங்கா வனக்கவியைக்
காரணநீ கேட்டிடுக கண்டு"

என்னும் வெண்பா ஒன்றை எழுதித் தம் தந்தையாரிடங் கொண்டுபோய்க் கொடுத்தார். கலியாணசுந்தரரின் தந்தையார் அண்ணுச்சாமிமுதலியார் நல்ல அறிஞர். வித்துவான் தாண்டவராயமுதலியாரிடம் கல்விகற்றுத் தேர்ந்த அறிஞர். அவர் பூங்காவனக்கவிராயரிடம் வந்தார். "கலியாணசுந்தரனே ஏன் அடித்தீர்கள்? அவன் யாது தவறு செய்தான்? அவன் எனக்கு எழுதிக்கொடுத்துள்ள இந்தப் பாட்டைப்பாருங்கள்," என்று கூறித் தம் மைந்தனின் பாடலையுங் கொடுத்தார். கலியாணசுந்தரர் குற்றமற்றவர் என்பது பூங்காவனக்கவிராயருக்கு அப் பொழுதுதான் விளங்கியது. அவர் இருவரிடமும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். ஆயினும், இந் நிகழ்ச்சிக் குப்பின் பூங்காவனக்கவிராயரிடம் தம் மகனை விட்டு வைக்க அண்ணுச்சாமிமுதலியார் விரும்பவில்லை. வேறொரு பாடசாலைக்கு அனுப்பிவிட்டார்.

குறுக்குவழியும் கோலடியும்

ஒருநாள் கலியாணசுந்தரரும் சில மாணவர்களும் பள்ளிக்கூடத்தில் இருந்து வீட்டிற்குத் திரும்பினர்.

தோட்டம் ஒன்றில் நுழைந்து குறுக்குவழியாக நடந்து செல்லவிரும்பித் தோட்டம் ஒன்றனுள் புகுந்தனர். அத் தோட்டம் ஈரமற்ற சூரனென்னும் வீரனொருவனுடைய மேற்பார்வையிலும் பாதுகாப்பிலும் இருந்தது. அவன் தோட்டத்தைக் கருத்துடன் காத்துக்கொண்டிருந்தான். மாணவர்கள் தோட்டத்திற்குள் புகுந்ததை அவன் கண் டான் செடிகொடிகளை மிதித்துத் துகைத்துப் போய்விடு வார்களே என்று எண்ணினான். கழி ஒன்றை ஒடித்துக் கொண்டு எல்லோரையும் விரட்டிவிரட்டியடித்தான். கலியாணசுந்தரருக்கும் அடி கிடைத்தது. தோட்டக்காரச் சூரனைத் தண்டிக்கவேண்டுமென்று எண்ணினார் முன்னு ளில் பலர் வசைபாடித் தம் எதிரிகளைத் தண்டித்திருக் கிறார்கள் என்னும் எண்ணம் கலியாணசுந்தரருக்கு உண்டாயிற்று. உடனே அவர், அண்மையில் கோயில் கொண்டிருந்த காளிதேவியை நோக்கி,

> "தோட்டக்கா ரசசூரன் தோன்றி வளாரடியைப்
> போட்டான் முதுகிற் பொறுக்கேன்நான்—தோட்டிதழ்சேர்
> தாராருங் காளியே தாரணியில் அன்னவனைப்
> பாராம லேயிருக்கப் பண்."

என்று வெண்பா ஒன்றைப் பாடினர். மறுநாள் தண்ணீர் இறைத்துக்கொண்டிருக்கும்போது தோட்டக்காரச் சூரன் ஏற்றத்தில் இருந்து தவறிக் கீழே விழுந்தான். அவனு டைய கால் ஒன்று ஒடிந்துபோய் விட்டது. அதுமுதல் அவன் நொண்டியானான்.

இராமலிங்கத்தம்பிரானிடம் கற்றல்

1869-ஆம் ஆண்டில் கலியாணசுந்தரர் சென்னை மாநகரையடைந்து பச்சையப்பன்பாடசாலையில் கல்வி கற்கத்தொடங்கினர். அந்நாளில் இராமலிங்கத்தம்பிரான்

ன்பவர் இலக்கிய இலக்கணங்களினும் சைவசித்தாந்த நூல்களினும் சிறந்த புலமையுடையவராகத் திகழ்ந்தார். கலியாணசுந்தரர் தம்பிரானிடஞ் சென்று தமக்குக் கல்வி கற்பிக்குமாறு வேண்டிக்கொண்டார். தம்பிரான் சுந்தரரை மாணவராக ஏற்றுக்கொண்டார். சைவசமய நூல்கள் பல வற்றையுங் கற்பித்தார்.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே

இராமலிங்கத்தம்பிரானிடங் கல்விகற்கத்தொடங் கியது முதல் கலியாணசுந்தரருக்குச் சைவப்பற்றும் பெரி யார் கூட்டுறவில் விருப்பமும் மிகுதிப்பட்டன. காஞ்சி மாநகருக்குச சென்று சிவதீக்கை பெற்றுக்கொண்டார். அந்நாளில் வடலூரில் இராமலிங்க அடிகள் சிவானுபூதிச் செல்வராக எழுந்தருளியிருந்தார். கலியாணசுந்தரர் வட லூருக்குச் சென்று இராமலிங்க அடிகளைக் கண்டு வணங் கினர். அடிகளாருடைய திருவருள் நோக்கத்தைப் பெற்றுத் திரும்பினர். திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் 1873-ஆம் ஆண்டில் சென்னைமாநகருக்குவந்து மயிலாப்பூரில் தங்கினர். மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் பெருமையைக்கேட்டு அவரைப் பார்க்கவேண்டும் என்று விரும்பியிருந்த கலியாணசுந்தரர் மயிலாப்பூரில் பிள்ளையவர்கள் தங்கியிருந்த வீட்டிற்குச் சென்றார். கூட்டம் வீட்டில் கும்மாளமிட்டிருந்தது. கலியாணசுந்தரரால் உள்ளே நுழையக்கூடமுடியவில்லை. நீண்ட நேரம் வெளியே காத்திருந்த கலியாணசுந்தரர்,

"சீர்பெருகுஞ் சிரபுரத்து மீனாட்சி
சுந்தரநற் செம்ம லேறே!
எர்பெருகு நின்வீட்டு வாயிலினில்
நிற்கின்றேன் எனைய ழைத்துப்

போபெருகுங் கல்விநலம் மேன்மேனும்
எனதனைகருப் பிறங்கி யோங்க
ஆர்பெருகு தினைஞெ யினைக்கூறி
அன்புடனே ஆட்கொள் வாயே''

என்னும் செய்யுளை எழுதி ஓரன்பரிடம கொடுத்துப் பிள்ளையவர்களிடம கொடுக்குமாறு வேண்டிக்கொண்டார். பாட்டைப்பெற்றுவர பிள்ளையவர்களிட்ம கொண்டுபோயக் கொடுத்தார. பாட்டைப்படித்த பிறகு சிவநாதரம பிள்ளை மகிழ்ச்சியடைந்து கலியாணசுந்தரரை உள்ளே அழைத்துப் பாராட்டினார

''கலியாண சுந்தரவென் கணமணியே நின்பால்
மலிவாகக் கலவி வளரும—பொலிவாகப்
பொறபுவியிற் கறேரா புகழச சிவஞான
விற்பனனுய வாழ்ந்திருக வே''

என்று ஒரு வாழ்த்துப்பாக கூறி மகிழ்ந்திருந்தார. 1875-ஆம ஆண்டில கலியாணசுந்தரர செங்கற்பட்டையடைந்து செங்நரதப பிள்ளை என்னும புலவரிடம இலக்கணக் கொத்து, இலக்கண விளக்கம, நன்னூல விருத்தி முதலிய நூல்களைப பாடங்கேட்டார அவரிடம அவதானம செய்யுமு பழகிக்கொண்டார.

அவதானஞ்செய்தல்

அவதானஞ செய்தலாவது ஒரு பேரவையில பல புலவர்கள, ஒரே காலத்தில பலவகைப பொருள்களை வைத்துப பலவகைப பாக்களில அபபொழுதே பாடிக் காட்டுமாறு கேட்பார்கள. இன்னும கல்வி காரணமாக எத்தகைய பொருளைப பற்றிப் புலவர்கள கேட்டாலும் அவர்கள எல்லோருக்கும பதிலுரைக்கவேண்டும் இந்த அவதானம அட்டாவதானம, தசாவதானம, சோடசாவதானம, சதாவதானம் என்று எண்ணிக்கையைப்

பொறுத்துப் பெயர்பெறுமம. கலியாணசுந்தரர் அட்டாவ தானி என்று புகழ் பெறவிரும்பினர். அவதானஞ்செய்ய முடிவு செய்தார். 1878-ஆம் ஆண்டில் திருக்கழுக்குன்றத் தில் தசாவதானி செகந்நாதப் பிள்ளையின் தலைமையிற் பேரவை ஒன்று கூடியது அங்குப் பெருந்திரளான மக்களும் அறிஞர்களும் கூடினர்கள் புலவர்களில் ஒரு வராகிய சுந்தரமுதலியார் என்பவர், கைக்கும் புத்தகத் திற்கும் ஒரு சிலேடை வெண்பாப் பாடவேண்டுமென்று கேட்டார். உடனே கலியாணசுந்தரர்,

"மூடித் திறததலினல் மொய்ரேகை யேயுறலால்
நாடி யெவருமே நண்ணுகையால்—கோடலினல்
விததகர்கள் நததுகிற வேதகிரி தணபதியில்
அததமது புததகமு மாம்."

என்று பாடினர். வேறொரு புலவர் எழுந்து, "பால் என்னுஞ்சொல பதது இடங்களில் வருமாறு ஒருவெண் பாப் பாடவேண்டுமென்று கேட்டார். அதற்கு,

"பறறுங கொடிக்கனும் பங்கயனுங காணவும்
பற்றே லுரிததவண்ணப் பாலேபால—மற்றப்பால்
மாட்டுப்பால் பூப்பால் மரப்பால் வனிதையாபால்
ஆட்டுப்பா லப்பாலிப் பால."

என்று பாடினர் வேறு பலரும பலவாறு கலியாண சுந்தரரின் திறமையை ஆராய்நதார்கள். பிறகு அப் பேரவையில் கலியாணசுநதரருக்கு அட்டாவதானம என் னும் சிறப்புப்பெயர் வழஙகப்பட்டதுடன் பலவகையான சிறப்புக்களும் செய்யப்பட்டன.

திருமணம்

1879-ஆம் ஆண்டில் கலியாணசுந்தரருக்குத் திருமணம் நடைபெற்றது. இரண்டு பெண்மக்களும் ஒர் ஆண்மகனும்

தோன்றினர். திருமணம ஆன மறு ஆண்டில் கலியாண சுந்தரரின் தந்தையார் விண்ணுலகடைந்தார். குடும்பப் பொறுப்புக் கலியாணசுந்தரரின் தலைமீது விழுந்தது. அலுவல் ஒன்றை மேற்கொண்டு அதனால் வரும் ஊதியத்தைக் கொண்டு குடும்பத்தை நடத்தினர். நாளடைவில் கலியாண சுந்தரர்க்கு மாணவர் கூட்டம அதிகப்பட்டுக்கொண்டே வந்தது கலியாணசுந்தரர் சிறிதும் முகங்கோணுமல் அவர் கள் எல்லோருக்கும் அவரவர் விரும்பும் நூல்களைப் பாடஞ்சொல்லி மகிழ்ச்சிப்படுத்தினர.

ஆசிரியரிடத்தன்பு

கலியாணசுந்தரர் தமக்கு நூல்கள் பலவற்றைக் கற்பித்த செகந்நாதபபிள்ளையிடம பேரன்பு காட்டினர். அனபாகள் தமக்கு அளித்த பரிசுகளையெலலாம செகநாதப் பிளளைக்கே வழங்கினர்

சொற்பொழிவுகள்

சைவசித்தாந்தத்திலே அழுத்தமான பற்றுக்கொண்ட கலியாணசுந்தரா சமயம் சேரும்போதெலலாம சைவ சமயச் சொற்பொழிவுகளைச்செய்து மக்கள உள்ளத் திலே கடவுளன்பையும நற்பண்பையும் வளர்த்தார். நடராசசபை என்னும் பெயருடன் சபையொன்று நிறுவிப் பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், கந்த புராணம முதலிய நூல்களையெல்லாம மக்கள் நன்குணர்ந்து கொள்ளுமாறு சொற்பொழிவுசெய்தார். "இறைவன் மக்களுடைய உள்ளத்திலே உறைகின்றன். மக்கள் அனைவரும் தீவினையை நீக்கி நல்வினையையே அணிகலனாகக் கொள்ளுதல் வேண்டும். கூற்றுவன் நமது உயிரைக் கவர்தற்குக் கள்ளன்போலவும், நிழல்போலவும நம்மைத் தொடர்ந்து நிற்கின்றன். இறைவன் திருவருளில்

ஒவ்வொருவரும் முழுநம்பிக்கை கொள்ளுதல் வேண்டும்,'' என்னும் கொள்கைகளை மக்கள் நன்குணர்ந்து கொள்ளுமாறு போதித்தார். பல பேரவைகளில் அவைத் தலைமை தாங்கிச் சொற்பொழிவுகள் செய்தார். சிவனடியார் திருகூட்டம் முதலியவைகளை ஏற்படுத்தித் தொண்டு செய்தார். சித்தாந்தம் முதலிய பத்திரிகைகளில் கட்டுரைகள் வரைந்தார்.

புதுமையான நிகழ்ச்சிகள்

கலியாண சுந்தரர் ஒரு நாள் சென்னைக் கந்தகோட்டத்திற்குச் சென்று திரும்பினர். ஆறுபிறையும் அழகுமையாக மதித்திருந்த அவருடைய திருநீற்றுச்சம்புடம் யாண்டோ தொலைந்து போயிற்று. அச் சம்புடம் காணுமற போனது அவருக்கு மிகுந்த மனவருத்தத்தை உண்டாக்கியது.

> ''பூதியிலுக காலயமாம் பொற்சம் புடந்தவறி
> வீதியினில் எங்கேயோ வீழ்ந்ததுநற்—சோதிமிகும
> கந்தகோட்டதமரும் காங்கேயா அக்கவலை
> சித்தையினில வாராமற செய்''

எனும் முருகனமீது ஒரு செய்யுள் பாடினார். இரண்டொரு நாள் சென்றபின மீண்டும கந்தகோட்டத்திற்குச் சென்றார். அப்போது கோயில் வாயிலில் ஒருவன இவருடைய திருநீற்றுச் சம்புடத்தைக் கையில்வைத்து விலை கூறிக் கொண்டிருந்தான். கலியாணசுந்தரர் அதனைக்கண்டு வியப்புறறார் அவனிடம உண்மையைக கூறிச் சிறிது பொருள கொடுத்தார் அவன் சம்புடத்தைக் கொடுத்து விட்டான். சம்புடம் மீண்டும திரும்பியது கலியாண சுந்தரருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது.

ஒரு நாள கலியாண சுந்தரர் திருவிறகோலம் என்னும ஊருக்குச் சென்றார். கோவிலுக்குச் சென்று இறைவனை

வணங்கி விட்டுப் புறப்பட்டார். வெள்ளிப்பூண் பிடித்த தமது கைத்தடியைக் கோயிலில் வைத்துவிட்டு மறந்து வெளியே வந்து விட்டார். பிறகு சென்று தேடிப்பார்த்தார். தடி அகப்படவில்லை. மனம் வருந்தியது.

"சுத்தராகருக்கோல்கொடுத்த சோதியே! கல்யாண
சுந்தரன்கோல் கொண்டதென்ன சூழ்ச்சியோ—விந்தைமிகும்
விறகோல மேவுந்து வீறுகழ லேப்பணிந்த
தறகோ பதிலசெயதாய சாறறு"

என்று பாடினார்.

ஒருசமயம் இவர் புறப்பட்டுச் சென்னைக்கு வந்து கொண்டிருந்தார். வழியில் ஒரு கூட்டம் வந்து கொண்டிருந்தது. கூட்டத்தில் இருந்த ஒருவன் தடியை வைத்துக் கொண்டிருந்தான். தடி தமதுடையதென்று கலியாண சுந்தரர் கூறினார். அவன் மறுமொழி யொன்றுஞ் சொல்லாமல் தடியைத் தந்து விட்டான். அப்போது கலியாண சுந்தரர்,

"கோலையுங் கேனெடுத்தாய கொணடுவந்திங் கேன்கொடுத்தாய்
வேலையிது தானே விளம்பிடுக—பாலநிகா
சொலலாதே விப்புகழுந் தொல்திரிபு ராந்தகனே
எல்லாநின் றன்விளையாட் டே"

என்று பாடினார். பிறகு காணுமறபோன மூகுக கண்ணுடி யொன்றும மியகுகத்தகுகவாறு மீண்டது. 1879-ஆம் ஆண்டில் கலியாண சுந்தரர் செங்கறபட்டிலிருந்து காட்டு வழியாகத் திருப்போரூர்க்குச் சென்று கொண்டிருந்தார். வழியில பாமபொன்று கலியாண சுந்தரரின் காலிற் கடித்து விட்டது. அப்போது முருகன் அருகுத் தோன்றித் திருவருள் புரிந்து கலியாண சுந்தரரைக் காபபாறறினான். மயிலம் புகைவண்டி நிலையத்தில் இருந்து மயிலம் கோவிலுக்குச் செல்லும்போது வழியிற் கள்வனிடம் பறி கொடுத்த பொருள்களும் மீண்டன.

இறுதி

கலியாணசுந்தரருடைய மக்கள் ஒருவர் பின் ஒருவராக இறைவன் திருவடி நீழலை யடைந்தனர். இறுதியில் அவருடைய மனைவியாரும் வீடுபேற்றினை யடைந்தார். கலியாண சுந்தரருடைய உள்ளம உலக வாழ்க்கையை அடியோடு வெறுத்தது எல்லாம் பொய்யென்னும் சோற்றுத்தை அடைந்தது அவர் துறவுபூண விரும்பினர். காஞ்சியில் இருந்த ஞானப்பிரகாசசுவாமிகள் எனபவரிடஞ்சென்று துறவறநிலையை மேற்கொண்டு தூய துறவியாக ஒழுகினர். சென்னையில் உள்ள அருணாசலேசுவர் திருக்கோயில் திருவிழாவில் கலியாணசுந்தராக்குச் சிறுவிபத்தொன்று ஏற்பட்டது அதன் பயனாக உடல்நலங் கெட்ட கலியாண சுந்தரர் 1918-ஆம் ஆண்டில் மார்கழித் திங்களில் விசாகநாளில் சிவபரமபொருளின் திருவடி நீழலை அடைந்தார் அவருடைய உடல் திருவொற்றியூரிலே அடக்கஞ செய்யப்பட்டது.

இயற்றிய நூல்கள்

1. திருப்பாசூர்ப் புராணவசனம்
2. திருவலிதாய புராணவசனம்
3 திருவேற்காட்டுப் புராணவசனம்
4. சேக்கிழார் வரலாறு
5 திருவொற்றியூர்ப் புராணவசனம்
6. காளத்திப் புராணவசனம்
7. சிந்தாந்த சாதனக்கட்டளை
8. சிந்தாந்த தசகாரியக் கட்டளை
9. திருவான்மியூர்ப் புராணம்
10. மாசிலாமணியீசர் பதிகம்
11 கற்பகவிநாயகர் பதிகம்
12. காமாட்சியம்மன் பதிகம்

மூதலிய நூல்கள் கலியாணசுந்தரரால் செய்யப்பெற்றன.

சு. செல்வக்கேசவராய முதலியார்

தோற்றம்

சென்னை மாநகர்க்கு அண்மையில் உள்ள திருமணம் என்னும் ஊரிலே செல்வகேசவராய முதலியார் 1864-ஆம் ஆண்டில் பிறந்தார். தந்தையார் பெயர் கேசவசுப்பராய முதலியார். தாயார் பெயர் பாக்கியம் அம்மையார். முதலியார் தோன்றிய குடி வேளாண்குடி.

கல்வி

செல்வக்கேசவர் கல்விக்கற்கத் தக்க பருவத்தை அடைந்தார். செல்வக்கேசவரின் தந்தையாராகிய கேசவ சுப்பராயர் நல்ல தமிழ்ப்புலவர். கேசவசுப்பராயர் தம் மைந்தனைப் பள்ளிக்கனுப்பியதோடு தாமும் வீட்டில் கல்வி கற்பித்துவந்தார். செல்வகேசவரின் கல்லூரிப படிப்புப் பச்சையப்பன் கல்லூரியில் தொடங்கியது. மெட்ரிகுலேஷன் தேர்வில் தேர்ந்து ஆங்கில நூல்களையும் இடைவிடாது தாமே கற்றார். இதனால் அவருடைய அறிவு விரிந்து பரந்தது. தமிழ் ஆங்கிலம் முதலிய பாடங்கள் எல்லாவற்றிலும் செல்வக்கேசவரே முதன்மையாக நின்று பி ஏ என்னும் பட்டத்தையும் பெற்றார். ஆங்கில நூல்களையும் தமிழ் நூல்களையும் நன்கு ஆராய்ச்சி செய்து இரண்டிற்கும் இடையே உள்ள ஏற்றத தாழ்வுகளையும் நன்குணர்ந்து கொண்டார் செல்வக்கேசவரின் உள்ளம் தமிழ்மொழியையே பெரிதும் பற்றியது. தமிழ்ப்புலமை யைக்கொண்டே எம். ஏ. தேர்வுக்குச் சென்றார். தமிழில் எம். ஏ. பட்டத்தை முதன் முதலாகப் பெற்றார்.

மணமும் மக்கட்பேறும்

செல்வக்கேசவர் இல்வாழ்க்கை இனிது நடத்தற் பொருட்டு வேதவல்லி என்னும் பெயரினையுடைய விளங் கிழையைத் திருமணம் புரிந்தார். மணத்தின்பேறு மக்கட்

பேறன்றே? செல்வக்கேசவருக்குச் செல்வப் புதல்வர்கள் மூவர் தோன்றினர்கள். செல்வக்கேசவர் தாம செந்தமிழிடத்தே கொண்டுள்ள அணியாக்காதலே உலகிற்குப் புலப்படுத்த வெண்ணிக தம் மகக்கட்குப் "பரிமேலழகா, நச்சினர்க்கினியர், சேனவரையா" எனறு பெயாகள இட்டார். பரிமேலழகா திருகுறளுக்கு உரையெழுதியவா, நச்சினர்க்கினியா தொலகாபபியம முதலிய பல நூலகடகு உரையெழுதியவா சேனவரையா தொலகாபபிய சொலலதிகாரதிறகு உரை யெழுதியவா. இவவாறு உரையாயாசிரியாகளின பெயர்களேத தம மகக்கட்குச செல்வக்கேசவர் இட்டதைக் கணட பலரும செலவக்கேசவரின் தமிழ்ப் பற்றைப் பெரிதும போற்றிக கொணடாடினாகள்.

ஆசிரியத்தொழில்

செல்வக்கேசவர் தாம் பிறந்த திருமணதகை விட்டுச் சென்னே பிரசிடென்சிலே குடியேறினா. பி ஏ., எம ஏ. முதலிய பட்டங்களேப் பெற்ற செல்வகேசவா வாழக்கையை இனிது நடதததறபொருட்டு ஓர் அலுவல் துறையில் புகவேணடியவரானர். செலவகேசவா அரசாஙக அலுவலேப பெறுதலே அவாதம கலலிமாட்சிக்குச சிறபபாகும் எனப பலரும வறபுறுதினா. ஆனல, செல்வக்கேசவரின் உள்ளம பெருமையையும புகழையும நாடவில்லே. தமிழ்ததாய்க்குத தக்க தொண்டு செய்யவேண்டும் என்றே அவருடைய உளளம் விருமபியது. பிறருகுப் போதித்தல தம அறிவு வளர்தற்குச சிறநத வழியாகும். இதனே நனகுணர்ந்த செல்வகேசவா ஆசிரியதொழிலே நாடினர். பச்சையபபன் கல்லூரியில் பேராசிரியா பதவி எளிதிற் கிடைததது.

அக்காலததில ஆஙகிலமொழியின் ஆட்சியால் தமிழ் மொழி வீழ்ச்சியடைநதிருந்தது. தமிழாசிரியர்கள் நன்கு

மதிக்கப்பெறுவதில்லை. பேராசிரியருக்குத் திங்கள் ஊதியமே அறுபது வெண்பொற்காசுகள் தான். ஆங்கிலத்தில் பி. ஏ, எம் ஏ. முதலிய பட்டங்களைப்பெற்ற செல்வக்கேசவரா ஊதியக் குறைவை ஒரு பொருளாகவே மதிக்கவில்லை. தமிழ்த்தொண்டு புரிதலையே தங் கடமையாகக் கொண்டார் செல்வக்கேசவர். செந்தமிழ்த் தொண்டு சிறந்ததாக இருந்தது. இதனைக் கருதியோ தலைவர் முதலியோர் எண்ணி மதித்தனரோ திங்களுக்கியம் இருநூற்றைறபது வெண்பொற்காசுகளாக ஏற்றமபெற்றது. செல்வக்கேசவர் தமிழவளாசிரியையே பெரிதும் குறிக்கோளாகக்கொண்டு மாணவர்கட்குக் கலவி போதித்தார். செல்வக்கேசவர் இனியமை ததுமபப் புரியும விரிவுரை மாணவர்களின உளளங்களைக் கவர்ந்ததனி குறுமபியற்றும மாணவர்களும செல்வக்கேசவரின் பாதத்தினைத் திறனுல் ஒழுங்கு நெறியில நினறனர். பன்மொழித் திறனையுஞ செல்வக்கேசவர் நம வருபபில போதித்தனர். ஒரு மொழி இரண்டு மொழிகளல்லாமல ஒவ்வொருவரும் பலமொழிகளைக் கறறுப பன்மொழிப்புலவர்களாக இலகவேண்டுமென்று மாணவர்கட்கு அறிவுரை கூறுவாராம். உயர்திரு தெ பொ மீனாட்சிசுந்தரமபிளளை எம். ஏ, பி. எல், உயர்திரு. ரா பி சேதுபபிளளை பி ஏ, பி. எல், முதலியோர் செல்வக்கேசவரிடம் கலவிகற்றவர்களில் சிலராவர். இப்பெரியார்கள் இன்று உயரிய நலனிலையிற் பெரும்புகழுடன் விளங்குதலைக் காணுகிறோம அல்லமோ? செல்வக்கேசவர் சொறபொழிவாறறுதலிலும் வல்லவர். அவருடைய சொற்பொழிவு திட்பநுட்பஞ் செறிந்தும், நகைச்சுவையோடும விளங்கும "சளசள" வென்று மீண்டநேரம் பேசும் வழக்கம் அவரிடம இல்லை.

நூல்கள் எழுதுதல்

செல்வக்கேசவருடைய காலத்திலே இப்பொழுது இருபதைந்து போல் எண்ணற்ற உரைநடை நூல்கள் இல்லை. சில உரைநடை நூல்களே இருந்தன. அந்நூல்களின் நடைகளும் முன்னேற்றம் அற்றவைகளாக இருந்தன. காலந்தோறும் உரைநடை வளர்ச்சிபெற்றுவந்ததான இன்றையநிலையை அடைந்துள்ளது. செல்வக்கேசவர் உரைநடை வளர்ச்சிக்குத் தம்மால் இயன்ற தொண்டுபுரிய வேண்டுமென்று எண்ணினார். புலவர்களாய் அந்நாளில் விளங்கியவர்கள் சமரசாரியாகச் செய்யுளழகை பொழிந்தார்களே யல்லாமல் உரைநடைமாரி பெய்யவில்லை. பெய்யும் ஆற்றலையும் அவர்கள் பெற்றிருக்கவில்லை. முதலில் செல்வக்கேசவர், "அகப்பர்" என்னும் உரைநடை நூல் ஒன்றை எழுதினார். அந்நூல் அறிஞர் பலருடைய பாராட்டுதலையும் பெற்றது. பின்னர், கமலநாடர், தமிழ், தமிழ்வியாசங்கள், வியாசமஞ்சரி, கண்ணகிகதை, அறிஞர் கதைகள், கலிங்கத்துப்பரணிஉரைநடை, திருவள்ளுவர், ராபின்சன்குரூசோ, மகாகோவிந்தரானடே முதலியவைகளை எழுதினார். இந்நூல்கள் ஒவ்வொன்றிலும் செல்வக்கேசவராயருடைய பெருமை புலமைதிறன் இனிது காணலாம்.

ஆராய்ச்சி

செல்வக்கேசவர் செந்தமிழ் ஆராய்ச்சியிலே பேரூக்கம காட்டினார். சங்கநூல்களை எழுதஎண்ணிக் கற்றார். தமிழ்நூல்களில் வடசொற்கள் எத்தனை விரவியுள்ளன என்று கணக்கெடுத்தார். திருக்குறளில் அதிகாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு வடசொற்கள் கலந்துள்ளன என்றார். கல்லாடத்தில் பாட்டுக்கு ஐந்து வீதமும், நாலடியாரில் ஐந்து பாடல்களுக்கு ஒரு சொல்

வீதமும் கலந்துள்ளன என்றார். மற்றும் பல நூல்களில் இவ்வாறே கணக்கெடுத்துக் காட்டினர். தமிழ்நூல்கள எல்லாவற்றையும் நன்கு ஆராய்ந்த செல்வக்கேசவா தமிழமொழியின் முதன்மையையும் பெருமையையும உலகிறகு நனகு எடுத்துக்காட்டினர். ஆசாரக்கோவை, பழமொழி, அறநெறிசசாரம, முதுமொழிக்காஞசி, அரிச சந்திரபுராணம, குசேலோபாகயானம் முதலிய நூல் களுக்த தாமே நன்கு ஆராயந்து அச்சிறபதிப்பித்து வெளியிட்டார்

இறுதி

தமிழ்வளர்சசியையே தலைசிறந்த பெரும் பணியாகக் கொண்ட செல்வக்கேசவர் இவ்வுலகில் பன்னெடுங்காலம் வாழவில்லை. 1864-ஆம ஆண்டிற பிறந்த இவர் 1921-ஆம் ஆணடு அக்டோபாதிங்கள இரண்டாமநாள் தமது ஐம்பதேழாவது அகவையிலே இவ்வுலகைவிட்டு மறைந தார். கேசவராயரின் மறைவு அவருடைய மாணவர் களின் உள்ளதைப் பெரிதும் கலகியது. பெர்து மக்களும் வருந்தினர். செல்வக்கேசவரின் பூதவுடல் மறையினும அவருடைய புகழுடல் நிலைபெற்று விளங்கு கின்றது.

ரு. தி. தூ. கனகசுந்தரம்பிள்ளை

பிறப்பு

தி. த. கனக சுந்தரம் பிள்ளை இலங்கை திருகோண மலையிலே 1863-ஆம ஆண்டு ஆவணித்திங்கள 24-ஆம நாள் பிறந்தார. தந்தையாபெயர் தம்பிமுத்துப்பிள்ளை. குலம் வேளாண்குலம்.

கல்வி

உரிய பருவத்தில் கனகசுந்தரனார பள்ளிக்கு அனுப்பப பெற்றார. கனகசுந்தரனர்க்குக கல்வியறிவு மிகவிரைவாக வளர்ந்தோங்கியது ஆசிரியாகளாக அமைந்த கதிரைவேற்பிள்ளை என்பவரும், கணேசபண்டிதர என்பவரும் போதனையாற்றல் மிக்காராய் விளங்கினர அவர்களிடம் இலக்கிய இலக்கணங்களை குன்றா ஊககத்துடன் கனகசுந்தரனர் கற்று, மிகச் சிறு அகவையிலேயே மறைசையந்தாதி முதலிய நூல்களுக்குப் பொருள் உரைத்தத் தகக ஆற்றலைப் பெற்றுவிட்டார் பதினைந்தாவது அகவையில் இளந்தமிழ்ப்புலவர் என்னும் பெயர் திருகோணமலையிலேயே கனகசுந்தரனர்க்கு உண்டாகி விட்டது.

ஆங்கிலம்

அகவை பதினேழு நிரம்பும் வரையில தாம் பிறந்த இலங்கைநாட்டிலேயே தமிழையும ஆங்கிலத்தையும் நனகு கற்ற கனகசுந்தரனர, தமது பதினெட்டாம் அகவையில் 1880-ஆம் ஆண்டில் சென்னையை அடைந்து கலவிகறக விரும்பினர். ஒரு வீட்டை வாடகைகக அமர்ந்திக்கொண்டு அதில் தனிமையாகத் தங்கினர. செங்கலவராயநாயகர் பாடசாலை, பச்சையபபன்கலலூரி, மாகாணக்கல்லூரி ஆகியவைகளிற சேர்ந்து கல்வி கறறார். தேர்வுகள யாவற்

றினும் இவரே முதல்வராக நின்றார். பி. ஏ. தேர்விலும் முதனமையராக விளங்கினர். இவ்வாறு தேர்வுகள் யாவற் றினுங் கனகசுந்தரனாரே முதன்மைபெற்றமையின் இவ ருடைய மதிப்பு உயாந்து விளங்கியது.

அலுவல் பார்த்தல்

கனகசுந்தரனார் பி ஏ பட்டம் பெற்றபின் சிறிது காலம் வேலையில்லாமற் பொழுது போக்கினார் பிறகு சிற் றூர் என்னும் ஓர் ஊரில் ஒரு பாடசாலையில் சிறிது காலம் தலைமையாசிரியராகப் பணியாற்றினார் பிறகு சென்னை சைதாப்பேட்டை ஆசிரியப்பயிற்சிக்கல்லூரியில் ஆங்கில ஆசிரியராகச்சிறிது காலம் இருந்தார் பின்னர் நாகை பாக்கத்தில் கலவிப்பிரிவு அலுவலகத்தில் கணக்காளர் வேலையில் அமாந்தார் இந்த வேலையுங் கனகசுந்தரனார்க்கு மன நிறைவை அளிக்கவில்லை. சிறிது காலம் இந்த வேலை யைப் பாாத்தார். பின்னர் அரசியலார் செயலகத்தில்[1] ஒரு வேலையைப பெற்றார். முன் பார்த்த பல வேலைகளை விட இவ்வேலை கனகசுந்தரனாரின் உள்ளத்திற்கு மிகவும் பிடித்திருந்தது இந்த வேலையை ஆர்வத்துடன் திறம் பெறச்செய்து மேலதிகாரிகளின் நன்மதிப்பையும் பெற்றார் பிறகு அந்த வேலையில் உயர்வுபெற்றுச் சிறப் படைந்தார் இப்பதிவரை அவ்வலுவலில் நன்குபாாத்து முடிவில் உதவி ஊதியமும பெறலுற்.

மணமும் மக்கட் பேறும்

கனகசுந்தரனார்க்கு முப்பத்திரண்டாம் ஆண்டில் திரு மணம இனிது நிகழ்ந்தது வாழ்க்கைத்துணையாக வாய்த்த மாதரசியின் பெயர் சுந்தரத்தம்மையார். இல்லற வாழ்வை இனிது நடத்தி நின்ற இவர்கட்கு இராசராசன்,

1. Secretariat.

இராசசேகரன், இராசேசுவரன், இராசமார்த்தாண்டன், என்னும் நான்கு ஆண்மக்களும் செல்வராயகி என்னும் பெண்மகள் ஒருத்தியும மக்கட்செல்வமாக மாநிலததில் தோணறினர் மக்கட்பேற்றினை இவ்வாறடைந்த கனக சுந்தரனர் பெருமகிழ்ச்சி யடைந்து மக்களைத் தக்கவாறு வளர்தததார்.

இளவல்

கனகசுந்தரம்பிள்ளைக்குச் சரவணமுத்துப்பிள்ளை என்னும பெயருடைய இளவல் ஒருவர் இருந்தார். அவருங் கல்வியறிவிற் சிறநத பி ஏ. பட்டம் பெற்றுச் சிறந்த நிலையை அடைநது திகழ்நதார் தத்தை விடுதூது, மோகனங்கி என்னும நூலகளை எழுதிய இவர் தமையன மாட்டுப பேரனபுடையவராயத திகழநதார தமையனர் கல்வியறிவுப பெருமையைய சென்ற விடமெல்லாம புகழந்துரைத்தத தமையனரைப் பெருமைக்குள்ளாக்கினர.

இன்பத்தில் வறுமை

இன்ப துன்பங்கள் இரண்டும் ஒன்றையொன்று பின்னி நிற்கின்றன என்பது ஆன்றோர் கொளகை. இன்பக் கடலில் திளைத்து நின்ற கனகசுந்தரனர் துன்பக்கடலில் வீழ்ந்து சுழல வேண்டிய நிலைமை யேறபட்டது. கனகசுந்தரனரின் ஆருயிர் அனைய இளவல் சரவணமுத்துப்பிள்ளை இளமைக்காலத்திலேயே இறைவன் திருவடிநீழலை யெய்தினர். இதனால் பெருந்தனபுற்றுக் கலங்கினர் இவர். ஆண்டுகள் சில மூடிவதன் முன்னரே வாழ்க்கைத் துணைவியாராகிய சுந்தரத்தம்மையாருங கணவனையும் மக்களையுங் கலங்கவிட்டு விண்புகுந்தனர். இதனாலுங் கனகசுந்தரனர் பெருந்துன்புற்றுக் கலங்கினர். ஆயினும் அவர் மறு

மணஞ் செய்துகொள்ளவில்லை மக்களை வளர்க்கும் பொறுப்பை மேற்கொண்டு காலந்தள்ளினார்.

கல்வியும் தொழிலும்

துன்பத்தை மறப்பதற்குக் கனகசுந்தரனார் கல்வியைத் தோழமைகொண்டார். அறிஞர் சிலரை உடனிருத்திக் கொண்டு தமிழ் நூல்களையும் இலக்கணத்தையும் மேலும் நன்றாக ஆராய்ந்தார். கனகசுந்தரனாரின் பெருமபுலமைத்திறத்தை உணர்ந்த கிறித்துவக்கல்லூரியின் தலைமையாசிரியர் அகஸ்தலூரியில் தமிழப்பேராசிரியராக அமர்த்து பணிபுரியுமாறு கனகசுந்தரனாரைக் கேட்டுக் கொண்டார். தமிழ்வளர்த்தற்கு தொண்டுபுரிதற்கு இது தக்கவழி என்றுணர்ந்த கனகசுந்தரனார் அப்பணியை மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டார். தமிழாசிரியத்தொழில் கனகசுந்தரனாருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. மாணவர் மனமகிழ்ந்து உளங்கொளுமாறு கலைச்செல்வத்தை வரையாது வாரிவாரி வழங்கினார். கனகசுந்தரனாரிடம் கற்ற மாணவர்கள் நல்ல தமிழ்ப்பயிற்சியுடையவர்களாயினர். கனகசுந்தரனாரின் தமிழ்த்திறத்தை உணர்ந்த பலர், இவரிடம் கல்விகற்கவேண்டும் என்று விரும்பினர். கல்விகற்கவேண்டும் என்னும் விருப்பத்துடன் தம்மிடம் வருவார்க்கெல்லாம் கனகசுந்தரனார் அவரவர் தகுதியை அறிந்து சங்கநூல்களையும், இலக்கண இலக்கியங்களையும் இனிது போதித்து அவர்களையெல்லாம் தமிழறிஞர்களாக்கினார். கனகசுந்தரனாரின் இல்லம் எப்பொழுதும் தமிழ் கற்பவர் கூட்டத்தால் நிறைந்திருந்ததோடு அங்குச் சென்று தமிழ் முழக்கம் எப்பொழுதும் முழங்கிக்கொண்டிருந்தது. சோமசுந்தர முதலியார், மணி திருநாவுக்கரசு முதலியார், மோசூர் கந்தசாமி முதலியார் பி. ஏ. வித்துவான் சுப்பிர

மணிய ஆச்சாரியார் முதலியோர் கனகசுந்தரனாரிடம் தமிழ் கற்ற மாணவர்களிற் சிலராவர்.

தமிழ் நூற்பணி

கனகசுந்தரனார் காலத்திலே நூல்களை அச்சிட்ட அறிஞர்களிற பெரும்பாலார் தாம் அச்சிடும் நூல்களைக் கனகசுந்தரனாரிடம காண்பித்து ஆராயச்செய்து அவருடைய உடன்பாட்டோடு வெளியிட்டனர். பல நூல்கள், "இந்நூல, திரு. க. கனகசுந்தரம பிள்ளையவர்களால் பார்வையிடப்பட்டது" எனனும குறிப்புடன் வெளியாயின. ஆறுமுகநாவலர் அவர்கள் நூல்களை பதிப்பிக்கும் போது பிழைதிருத்தலை செய்துகொடுத்தும் பேருதவி புரிந்தனர். கம்பராமாயணம் பால காண்டத்திற்கு உரை யொன்றும் எழுதி முடித்தார். வடமொழி தென்மொழி களில் வல்லவராகிய கனகசுந்தரம் குமாரசாமிபிள்ளை அவர்களோடு ஒன்றுபட்டு நன்னூல் விருத்தியுரை ஒன்றும் எழுதினார். தமிழ் நாவலர் சரிதை, ஈழமண்டலத் தேவாரம் முதலியன கனகசுந்தரனாரின் குறிப்புரையோடு வெளியாயின. இவர் வடமொழியினும் புலமைபெற்றி ருந்தமையால் வால்மீகி இராமாயணத்தில் சுந்தரகாண்டத் தைத் தமிழில் மொழிபெயர்த்தார். அந்நூல் 1911-ஆம் ஆண்டில் கலியாணராமஐயர் என்பவரால் வெளியிடப் பெற்றது.

இறுதி

ஈழநாட்டில் பிறந்து இந்நாட்டில் கல்வி கற்றுப் பெரும்புலவராக விளங்கித் தமிழ்த்தொண்டு செய்த இவ ருக்கு இறுதிகாலம் இவ்விடத்திலேயே உண்டாகியது. அறுபதாம் அகவையில் கனகசுந்தரனாரின் உடல், நோய் வாய்ப்பட்டுத் தளர்ச்சியடையத் தொடங்கியது. இவருக்கு

நோய் கண்டதும் மக்களும் மாணவர்களும் இவரைச் சூழ்ந்தனர். எவ்வாறேனும் பிணியைப் போக்கி மேலும் சில ஆண்டுகள் இம் மண்ணுலகிலே வாழச் செய்யவேண்டும் என்று எண்ணித் தக்க மருத்துவர்களைக் கொண்டு மருந்தளிக்கச் செய்தனர். விண்ணுட்டிற்கு விருந்தாளியாக நிற்கும் இவரை மண்ணுட்டு மருத்துவர் மருந்து யாது செய்ய முடியும்? தன்பால் பேரன்பு கொண்டோர் அனைவரும் வருந்தி ஓலமிடக் கனகசுந்தரனார் 1922-ஆம் ஆண்டு ஆனித் திங்களில் பருவுடல் நீத்துப் புகழுடலைப் பெற்றார்.

கூ. குமாரசாமிப்புலவர்

தோற்றம்

அ. குமாரசாமிப் புலவர், 1855-ஆம் ஆண்டு தைத் திங்கள் பதினெட்டாம் நாள், யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் அம்பலவாண பிள்ளை என்பவருக்கும் சிதம்பர அம்மையார் என்பவருக்கும் அருந்தவச் செல்வனாகத் தோன்றினர். புலவரின் குலம் சைவவேளாண் குலம். புலவரின் தந்தையாராகிய அம்பலவாணபிள்ளை சிவவழிபாட்டிலும் சைவத் திருமுறைகளை யோதுதலிலும் மிகுந்த பற்றுடையவர்.

கல்வி

குமாரசாமிப்புலவர் முதலில் மல்லாகம் ஆங்கில பாடசாலையில் கல்வி பயின்றார். பிறகு முருகேசபண்டிதர் என்பவரிடம் இலக்கண இலக்கியங்களைக் கற்றார். நாகநாத பண்டிதர் என்பவரிடம் வடமொழியைக் கற்றார். இலக்கிய இலக்கணங்களைத் தாமே ஆழ்ந்து கற்றார். செய்யுள் பாடுவதிலும், கட்டுரைகள் எழுதுவதிலும், சொற்பொழிவுகள் செய்வதிலும் வல்லுநரானார்.

ஆசிரியத்தொழில்

குமாரசாமிப்புலவரின் கல்வித்திறமையை சி. வை. தாமோதரம்பிள்ளை நன்குணர்ந்தார். அப்பொழுது ஏழாலையில் அவர் தொடங்கிய சைவவித்தியாசாலைக்குத் தலைமையாசிரியராகக் குமாரசாமிப் புலவரை அமர்த்தினர். குமாரசாமிப்புலவர் பல ஆண்டுகள் அவ் வேலையைத் திறமையுடன் பார்த்தார்.

திருமணம்

1892-ஆம் ஆண்டு குமாரசாமிப்புலவருக்குத் திருமணம் நடைபெற்றது. ஒரு பெண்ணும் இரண்டு ஆண்களும் மக்கட்பேறாகத் தோன்றினர். பெண்ணின்பெயர் விசாலாட்சி. ஆண்களின்பெயர் அம்பலவாணன், முத்துக்குமாரன் என்பன.

இந்தியாவுக்கு வருதல்

புலவர் இரண்டு மூன்று தடவை இந்தியாவுக்கு வந்து சிவப்பதிகளை வணங்கிச் சென்றார். ஒருமுறை திருவாவடுதுறை சென்று அவ்வாதீனத்தாராலும் பாராட்டப்பெற்றார். பாண்டித்துரைத்தேவர் முதலிய தமிழ்வாணர்களும் புலவரைப் புகழ்ந்து போற்றினர்.

ஏழாலை வித்தியாசாலையை விட்டபின், கு. கதிரைவேற்பிள்ளை என்பவர் தொகுத்த அகராதிக்குத் துணையாக இருந்து உதவிபுரிந்தார். பிறகு 1902-ஆம் ஆண்டு முதல் ஆறுமுகநாவலருடைய சைவப்பிரகாச வித்தியாசாலைக்குத் தலைமையாசிரியராக அமர்ந்திருந்து இறுதிவரை அப் பணியை நடத்தினர். பாண்டித்துரைத்தேவர் தாம் அமைத்த மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் புலவரையும் ஓர் உறுப்பினராக அமைத்துத் தமிழ்ச்சங்க அலுவல்களிலும் புலவரை ஈடுபடுத்தினர்.

இறுதி

வாணுள் முழுவதையும் தமிழுக்குப் பயன்படுத்திய புலவர் 1922-ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 25-ஆம் நாள் தமது அறுபத்தேழாம் அகவையிலே மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலக வாழ்வை அடைந்தார்.

இயற்றிய நூல்கள்

குமாரசாமிப்புலவரால் இயற்றப்பெற்ற நூல்கள் யாவும், தமிழ்க்கல்வியைப் பயில்வார்க்குத் துணையாக இருக்கும்வண்ணம் எழுதப்பெற்றவைகளாகும். புலவரால் இயற்றப்பெற்ற நூல்கள் :

1. கம்பராமாயணம் பாலகாண்ட அரும்பதவுரை
2. நீதிநெறிவிளக்கப் புத்துரை
3. தண்டியலங்காரப் புத்துரை
4. யாப்பருங்கலக்காரிகைப் புத்துரை
5. வினைப் பகுபதவிளக்கம்
6. சாணக்கிய நீதிவெண்பா
7. இலக்கியச்சொல்லகராதி
8. தமிழ்ப் புலவர் சரித்திரம்
9. இதோபதேசம்
10. சிசுபாலசரிதம்
11. இராமோதந்தம்
12. இரகுவமிச சரிதாமிர்தம்
13. சிவத்தோத்திரக் கவித்திரட்டு
14. மேகதூதக்காரிகை
15. எகவிருத்த பாரதாதி
16. மாவைப் பதிகம்
17. கலைசைச சிலேடைவெண்பா அரும்பதவுரை
18. இலக்கணசந்திரிகை.

என்பனவும் வேறு சில சிறிய செய்யுள் நூல்களுமாம்.

எ. மணி. திருநாவுக்கரசு முதலியார்

தோற்றம்

செங்கற்பட்டு மாவட்டத்திலே மணிமங்கலம் என்னும் ஊரிலே 1888-ஆம் ஆண்டிலே மணி திருநாவுக்கரசு முதலியார் தோன்றினர். முதலியாருடைய தந்தையார் பெயர் சுந்தர முதலியார். தாயார்பெயர் வேதவல்லி அம்மாள். குலம் சைவவேளாண் குலம். திருநாவுக்கரசுக்கு மூன்று நான்கு பெண்மக்கள் தோன்றினர். பின் ஒரு பெண்ணும் இரண்டு ஆண்மக்களும் தோன்றினர். ஆண்மக்களின் பெயர் திருஞானசம்பந்தன் கோடீஸ்வரன் என்பனவாம்.

கல்வி

திருநாவுக்கரசின் தந்தையார் சுந்தரமுதலியார் தெருப்பாடசாலை வைத்திருந்தார். திருநாவுக்கரசு தந்தையார் பாடசாலையிலேயே தமிழ்நூல்கள் படித்தார். சிறு பருவத்திலேயே திருநாவுக்கரசு கல்வியின் சுவையை நன்கு உணர்ந்துகொண்டார். பிறகு அவ்வூரில் இருந்த ஒரு 'மிஷின்' பாடசாலையில் கல்விகற்று வகுப்பில் முதல்வராகத் தேறினர். பிறகு செங்கற்பட்டிற்குச்சென்று உயர்தரப் பாடசாலையில் எட்டாவது வகுப்பு வரையில் ஆங்கிலமும் தமிழும் நன்கு கற்றிருந்த திருநாவுக்கரசு, பள்ளியில் மாணவர்கட்கு விளங்காத தமிழ்ச்செய்யுட்களையெல்லாம் விளக்கத் தொடங்கினர். இதனால் இவருக்கு இவர் படித்த வகுப்பு மாணவர்கள் தமிழாசிரியர் என்று பெயர் கொடுத்து விட்டனர். பிறகு திருநாவுக்கரசு சென்னைமாநகரஞ் சென்றார். அங்குள்ள தொண்டைமண்டல உயர்தரப் பள்ளியிற் சேர்ந்து பத்தாவது வகுப்பு வரையில் படித்தார். அப் பாடசாலையில் அப்போது தலைமைத்தமிழாசிரியராக

விளங்கிய சிவப்பிரகாச ஐயர் என்னும் பெரும்புலவரிடம் 'தமிழ்ப் புலவன்' என்னும் பட்டத்தைப் பெற்றார். பள்ளிக் கூடத்தை விட்ட பின்னும் திருநாவுக்கரசு பேரூக்கங் கொண்டு தமிழ்நூல்களைக் கற்கத் தொடங்கினார்.

திருமணம்

திருநாவுக்காசின் திருமணம் அவருடைய இளமைப் பருவத்திலேயே நிகழ்ந்துவிட்டது. தமிழ்நூல்களை ஊக்கத்துடன் கற்றுக்கொண்டிருந்த திருநாவுக்கரசின் குடும்பத்தில் வறுமைப்பிணி மிகுந்தது. திருநாவுக்கரசு ஏதேனும் அலுவலேமேற்கொண்டு பொருளீட்ட வேண்டுமென்று அவருடைய தாயார் எண்ணினார் எவ்வளவோ முயன்றும் ஒரு வேலையும் அகப்படவில்லை. ஆகவே, திருநாவுக்கரசர் மேலும் மேலும் புதிய நூல்கள் பலவற்றை வாங்கி அவைகளைப் பயின்றுகொண்டே யிருந்தார்.

அறிஞர்கள் கூட்டுறவு

அந்நாளில் பெத்தநாய்க்கன் பேட்டையில் பூவை கலியாணசுந்தர முதலியார் பெரும்புகழோடு விளங்கியிருந்தார். கலியாணசுந்தரரைப்பற்றி அறிந்துகொண்டிருந்த திருநாவுக்கரசு அவரிடம் சென்றுவரத் தொடங்கினார். கலியாணசுந்தரரின் அருங்குணங்கள் திருநாவுக்கரசின் உள்ளத்தைக் கவர்ந்தன. அவரிடம் அடிக்கடி சென்று பழகத் தொடங்கினார். நூல்களைப் பாடங் கேட்கவும் விரும்பினார். திருவிளையாடற்புராணம் முதல் சிவஞானபோதம் வரையில் பல நூல்களை அவரிடம் பாடங்கேட்டுப் பெருமகிழ்வடைந்தார். பாடங்கேட்குங் காலம் போக எஞ்சிய காலங்களிலும் கலியாணசுந்தரரிடமே தங்கி அவருடைய பணிகளைப் புரியலானார். கலியாணசுந்தரரோடு அடிக்கடி

சொற்பொழிவுகட்குச் சென்று வந்தபடியால், திருநாவுக்கரசும் சைவச்சொற்பொழிவுகள் செய்யலானார்.

மறைமலையடிகளின் புகழையும் அடிக்கடி கேள்விப்பட்ட திருநாவுக்கரசு அவரிடமும் போய்ப் பழகத் தொடங்கினர். மறைமலையடிகளின் மாண்பும் நாவுக்கரசின் உள்ளத்தைக் கவர்ந்தது. மறைமலையடிகள் எல்லா நூல்களினும் வல்லவர் என்பதை உணர்ந்த திருநாவுக்கரசு பட்டினப்பாலை முதலிய சங்கநூல்களை மறைமலையடிகளிடம் பாடங் கேட்கலானார். மறைமலையடிகளும் பூவை கலியாண சுந்தரரும் நாவுக்கரசிற்கு இரு கண்களாயினர். இருவருடைய கூட்டுறவாலும் திருநாவுக்கரசு பேரறிவும் உயர்பண்பும் பெற்றுப் புதுமனிதராக மாறிச் சிறந்து விளங்கலானார். இரு பேராசிரியர்களும் நாவுக்கரசை நண்பராக எண்ணினார்களே யல்லாமல் மாணவராக எண்ணவில்லை.

தாயார் மறைவு

தம் அறிவைப் பெருக்குவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்த நாவுக்கரசு தாயாரின் பேரவாவை முடிக்கவில்லை. பிள்ளை எத்தகைய அலுவலிலும் புகாமல் இப்படி வீணைகச் சுற்றுகிறதே; இது எப்படி முன்னுக்குவந்து குடும்பத்தை உயர்த்தப் போகிறது எனத் தாயார் மனம் வருந்தினர். அந்த மனவருத்தமே உடற்பிணியாக மாறியது. மண்ணுலகை விட்டுப் பிரியுங்காலமும் வந்தது. மகனை அண்மையில் அழைத்து மனம்நொந்தார். நாவுக்கரசு தாயாரைப் பார்த்து, "அம்மா நீ மனம் வருந்தாதே. நான் விரைவில் ஒரு வேலையை மேற்கொண்டு உடன்பிறந்தார் கட்கெல்லாம் உதவிசெய்து அவர்களையெல்லாம் முன்னுக்குக்கொண்டுவந்து விடுகிறேன்," என்று உறுதிமொழி கூறினர். இவ் வுறுதிமொழியைக் கேட்ட தாயார் மன

வமைதியுடன் காலமானார். திருநாவுக்கரசு தம் உடன்பிறந் தார்கள் உளம் வருந்தாமல் அவர்களைத் தேற்றினர். பதி னைரும் நாள் வீட்டிலே இரங்கற்கூட்டம் ஒன்றைக் கூட் டினர். தாயார்மீது "பிரிவாற்றுமை" என்று பாடி அச் சிட்டு வழங்கினர். தாயாரின் குணநலம் முதலியவைகளைக் குறித்துச் சிறந்த சொற்பொழிவுஒன்று நிகழ்த்தினர். மிக இளமைப்பருவத்தில் நாவுக்கரசு இயற்றிய செய்யுட்கள் ஒசை யின்பத்தையும், சொல்லழகையும், பொருளழகையும் பெற்றுத் திட்பமும் நுட்பமுஞ செறிந்து விளங்கின.

தமிழாசிரியர்

தாயை இழந்த நாவுக்கரசர் அலுவல் வேட்டையில் இறங்கினர். அவருடைய விருப்பத்திற்கேற்ற தமிழாசிரியர் வேலை உடனடியாக அகப்படவில்லை. பலவிடங்களில் வேலை தேடிய திருநாவுக்கரசு முடிவில் 'ஜீ. ஏ. நடேசன் புத்தக சாலை'யில் கணக்குப்பிள்ளைவேலை ஒன்றைப்பெற்று அதனை வெறுப்புடன் பார்த்து வந்தார். பிறகு அந்த அலு வலை விட்டுவிட்டு 'ஒ அண்டு கம்பெனி' அச்சுக்கூடத்தில் கணக்குப்பிள்ளைவேலை ஒன்றைப் பார்த்தார். அதுவும் பிடிக்காமல் பிறகு 'குமாரசாமி நாயுடு அச்சக'த்தில் பிழை திருத்தும்வேலை பார்த்தார். இந்த வேலையையும் விட்டு விட்டு நழுவுவதற்குச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தார். இந்தச் சமயத்தில் வேப்பேரி எஸ். பி. ஜி உயர்தரப் பாட சாலையில தமிழ்ஆசிரியர்வேலை ஒன்று காலியாயிற்று. அப்போது அப் பாடசாலையின் தலைமைத்தமிழாசிரியராக கா. நமச்சிவாய முதலியார் வேலைபார்த்துக்கொண்டி ருந்தார். நமச்சிவாய முதலியாருக்கும் திருநாவுக்கரசிற்கும் நெருங்கிய பழக்கம் உண்டு. நமச்சிவாயர், காலியான இடத் திற்குத் திருநாவுக்கரசைப் புதிய தமிழாசிரியராக ஏற்

படுத்தினர். இவ் வேலையைப் பெற்ற நாவுக்கரசு தமது நோக்கத்திற்கு ஏற்றவாறு வேலையைப்பெற்றமையின் களிப்பெண்ணுங் கடலில் ஆழ்ந்தார்.

திருநாவுக்கரசு தமிழாசிரியர்வேலையைப் பெற்ற காலத்தில் தமிழாசிரியர் வேலையின்நிலைமை மிகக் கீழ்த்தர மான நிலையில் இருந்தது. தமிழ்ப்புலவர்கட்குத் தக்க ஊதியம் இல்லை. ஆங்கில அரசாட்சியின் போக்கினால் தமி ழின் மதிப்பு அடியோடு சீரழிந்து நின்றது. தமிழாசிரியர் என்றால் மாணவர்களும் மற்றைய ஆசிரியர்களும் தாழ்வா கவே கருதினர்கள். குறைந்த ஊதியத்தைப்பெற்ற தமி ழாசிரியர்கள் நல்ல உடையணிந்து வகுப்புக்களில் கம்பீர மாகத் தோன்றுவதற்கு இயலவில்லை இதனால் மாணவர் கட்கு ஆசிரியரிடத்து நன்மதிப்பும் பணிவும் ஏற்படாது போயின. அவர்கள் தமிழாசிரியர்கள் வகுப்புக்குள் நுழைந்தவுடன் கும்மாளமிட்டுப் பாடம் நடத்தமுடியாத படி இடையூறு விளைத்துக்கொண்டிருப்பர். கா. நமச்சி வாயமுதலியார் இந்நிலைமையைப்போக்குவதற்கு எண்ணி னர். மதிப்பான உடைகளை யணிந்து வகுப்புக்களில் தோன்றியதுடன் ஆங்கில ஆசிரியர்களையும் தோற்கடிக் கும் வகையில் விரிவுரையை இனிமை ததும்ப ஆற்றவும் தொடங்கினர். இதனால் மாணவர்கள் கட்டுண்டு தமது குறும்புகளை விடலாயினர். திருநாவுக்கரசும் நமச்சிவா யரைப் போலவே பெருமிதத்துடனும் சதுரப்பாடாகவும் வகுப்புக்களில் தோன்றிப் பாடம்நடத்தத் தொடங்கவே மாணவர்கள் அமைதியுடன் நடந்துகொள்ளலாயினர். இவ்வாறு வேப்பேரி பாடசாலையில் திருநாவுக்கரசு சில காலம் வேலைபார்த்தார்.

கலிமகள் வருகையும் அலிமகள் அருளும்

திருநாவுக்கரசு வேப்பேரியில் வேலைபார்த்துக் கொண்டிருக்கும்போது அவருடைய அருமைத் திருமனைவி நவநீதம் விண்ணுலகம் புகுந்தார். உறவினர்கள் வழக்கம்போல் வருந்தினர். திருநாவுக்கரசரோ தமது வழக்கமான மனத்திண்மையுடன் இருந்தார். பல அன்பர்கள் இரங்கற்பாக்கள் பாடினர். திருநாவுக்கரசோ தம் மனைவி உயிருடன் இருக்கும்போதே அவருடைய குணநலன்களை வியந்து பாராட்டி அவர்மீது இருபத்தைந்து பாடல்கள் இயற்றி அவரிடமே படித்துக் காட்டிவிட்டார். இந்நிகழ்ச்சியை அறிந்தவர்கள் நாவுக்கரசர் தம்மனைவி இறந்து போகக்கூடும் என்று முன்னரே உணர்ந்திருந்தார் போலும் என்று எண்ணினர்கள். இந்நிலையில் திருநாவுக்கரசருக்கு முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளியில் தலைமைத் தமிழாசிரியர்வேலை கிடைத்தது சிலகாலஞ் சென்றபின் நாவுக்கரசு சரசுவதி என்னும் பெயருடைய ஒரு மங்கையை இரண்டாவது மனைவியாகத் திருமணம் புரிந்து கொண்டார். இரண்டாவது திருமணமாகிய பின் திருநாவுக்கரசின் பொருளாதார நிலைமை சீர்பெற்றது. பத்திரிகைகட்குக் கட்டுரையெழுதுதல், சொற்பொழிவாற்றல் முதலிய பல வழிகளால் பெரும்பொருள் வரத் தொடங்கியது இது முதல் நாவுக்கரசின் இல்வாழ்க்கை நல்வாழ்க்கையாக அமைந்தது.

கல்லூரியில் பேராசிரியர்

முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளியில் வேலையேற்ற திருநாவுக்கரசர் அவ்வேலையைத் திறமுடனேற்றினர். மாணவர்கள் நாவுக்கரசின் பேராற்றலை வியந்து பாராட்டினர்கள். நாவுக்கரசரின் புகழ் யாண்டும் பரவத்

தொடங்கியது எதிர்பாராதவாறு பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியர் வேலை கிடைத்தது. இதனால் நாவுக்கரசர் பெருமகிழ்ச்சியடைந்தார். பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் நாவுக்கரசரின் மணிமொழிகளையும் அறிவுத் திறமையையுங் கண்டு வியந்து போற்றினர்கள். தமிழ்ப் பாடத்தை வேமபென வெறுத்து நின்ற மாணவர்கள் இப் பொழுது அதனைக் கரும்பென விரும்பினர்கள். ஆசிரியர் எப்பொழுது வகுப்புக்கு வருவாரோ என்று ஏங்கி நின்றார்கள். நாவுக்கரசர் மாணவர்களிடத்தில் பேரன்புடையவர். ஒரு மாணவனுடைய உள்ளத்தையும் நோகச் செய்யார். மாணவர்கட்கு இனபூட்டுவதே நாவுக்கரசரின் கடமையாக இருந்தது. கல்லூரியில் பேராசிரியராக அமர்த்தப்பட்ட சில ஆண்டுகளில் பல்கலைக்கழகத் தேர்வாளராகவும் ஏற்படுத்தப்பட்டார். பல்கலைக் கழகத்தில புகுந்த நாவுக்கரசர் அங்குச் சில நற்செயல்களைப் புரியத்தொடங்கினர். தமிழிலும் வித்துவான், புலவன் முதலிய பட்டங்கள் தோன்ற வேண்டுமென்று விரும்பினர். அதற்காகப் பெருமுயற்சி செய்தார். நாவுக்கரசரின் முயற்சியோடு நமச்சிவாயருடைய முயற்சியும் சேரவே பலன் உண்டாகியது. கல்லூரிகளில் தமிழ்ப்புலவர்களும் பட்டம் பெறுவதற்கு வழியுண்டாகியது.

பொதுநலத்தொண்டு

நாவுக்கரசர் சொற்பொழிவாற்றுவதில் தேர்ச்சி பெற்றிருந்தார். பொதுமக்களின்பொருட்டுப் பல பேரவைகளிலும் சொற்பொழிவுகள் செய்து பொதுமக்களுடைய அறிவையும் பண்படுத்தினர். வெளியூர்கட்குச் சென்று சங்கங்களில் தலைமைதாங்கிச் சொற்பொழிவுகள் பல செய்தார். நாவுக்கரசருக்குச் சென்னைமாநகரிலே

மாணவர்கள் பலர் தோன்றினர்கள். எத்தகைய பயனை யுங்கருதாமல் எண்ணற்ற மாணவர்கட்குக் கல்வியைப் போதித்துத் தமிழ்த்தொண்டு செய்தார். பத்திரிகைகள் பொதுமக்களின் அறிவுவளர்ச்சிக்குப் பேருதவியாக இருக்கும் என்பது நாவுக்கரசர் கொள்கை. அந்நாளிலே பத்திரிகைகள் அதிகமில்லை. விரல்விட்டு எண்ணத்தக்க வாறு சில பத்திரிகைகளே நாட்டில் நடைபெற்றன. நாவுக்கரசர் திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரோடு கலந்துபேசிச், "செந்தமிழ்ச் செல்வி" என்னும் திங்கள் வெளியீட்டை வெளிப்படுத்தச் செய்தார். டாக்டர் மாசிலாமணி முதலியார் என்பவரைக் கொண்டு "தமிழரசு" என்னும் கிழமைவெளியீட்டை வெளிப்படுத்தச் செய்து, தாமே அதன் ஆசிரியராக அமைந்து நின்று பல கட்டுரைகள் எழுதினர்.

மறைவு

காலமெல்லாம் தமிழ்வளர்ச்சியில் உழைத்து நின்ற நாவுக்கரசர் தீண்டாமை விலகு முதலிய முன்னேற்றத் துறைகளிலும் முன்னணியில் நின்று தாமே நடைமுறையில் தீண்டாமையை விலக்கி அனைவரையுந் தீண்டிக்காட்டினர். 1931-ஆம் ஆண்டில் மேத்திங்களில் திருநாவுக்கரசருக்குத் திடீரென மார்புநோய் வந்தது. தமது நாற்பத்து மூன்று வது ஆண்டில் முடிந்துபோனர். நாவுக்கரசருடைய மறைவு தமிழ்த்தாய்க்கு ஈடுசெய்யமுடியாத ஒரு பெரிய பேரிழப்பாக முடிந்துவிட்டது. மறைமலையடிகள் தம் அருமை மாணவரை இழந்தது குறித்துப் பெரிதும் வருந் தினர். மற்றைய அறிஞர்களும் பிறரும் வருந்தினர்கள். நாவுக்கரசரின் உறவினரும் மனைவி மைந்தர்களும் இன்று நலத்துடன் வாழ்கின்றனர்.

இயற்றிய நூல்கள்

1. அறநெறி விளக்கம்
2. புலவர் கதை
3. திருக்கண்ணப்பன்
4. குமணன்
5. இராசராசன்
6. சண்பகவல்லி
7. பாமணிக்கோவை
8. உரைமணிக்கோவை
9. திருவருட்பாத் திரட்டு
10. பல்பொருட் கட்டுரை
11. செந்தமிழ வாசகங்கள்

முதலியன நாவுக்கரசரின் நூல்களாகும.

அ. வ. உ. சிதம்பரம்பிள்ளை

தோற்றம்

கப்பலோட்டிய தமிழன் என்று புகழ்பெற்ற வ. உ. சிதம்பரனார் 1872-ஆம் ஆண்டு செப்டம்பர்த்திங்கள் 5-ஆம் நாளன்று எட்டைய புரத்திலே பிறந்தார். சிதம்பரனாரின் தந்தையார்பெயர் உலகநாதபிள்ளை. தாயார் பெயர் பரமாயி அம்மையார். உலகநாதபிள்ளையின் மூன்னோர் ஒட்டப்பிடாரத்திலே வாழ்ந்திருந்தனர். உலகநாத பிள்ளை தொழில் முன்னேற்றங்காரணமாக எட்டைய புரத்திற்குக் குடியேறினர். சிதம்பரனார்க்கு உடன் பிறந்தார் அறுவர். சிதம்பரனர் தொடக்கப்படிப்பை எட்டையபுரத்தில் தொடங்கினர். கருத்துடன் படித்துத் தொடக்கக்கல்வியை விரைவில் முடித்தார். பிறகு தூத்துக்குடிக்குச் சென்று கால்டுவெல் பள்ளிநிலையத்தில்

சேர்ந்தார். தாய்மொழிப்பற்று சிதம்பரனுர்க்கு இயற்கை யாகவே அமைந்திருந்தது. சிதம்பரனுர் உயர்நிலைப்பள்ளிப் படிப்பை விரைவில் முடித்தார். ஒட்டப்பிடாரத்தில் தாலுகா அலுவலகத்தில் வேலை ஒன்று கிடைத்தது. சின்னுள் அவ்வேலையைப் பார்த்தார். அவர்மனம் அத் தொழிலில் பற்றுக்கொள்ளவில்லை. திரிசிரபுரஞ்சென்று சட்டக்கல்லூரியிற் சேர்ந்து வழக்கறிஞர் தொழிலுக்குப் படித்தார். அப்படிப்பில் தேர்ச்சிபெற்றூர். வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டார். பொய் வழக்குகளில் புகாமல் மெய்வழக்குகளில் மட்டும் சொற்போரிட்டு வெற்றிகண்ட சிதம்பரனுரின் புகழ் யாண்டும் பரவத்தொடங்கியது.

திருமணம்

சிதம்பரனுர்க்குத் திருமண அகவை வந்தது. திருச் செந்தூரில் இருந்த சுப்பிரமணியபிள்ளை என்பவரின் திருமகளான வள்ளியம்மைக்கும் சிதம்பரனுர்க்கும் திருமணம் இனிது நடைபெற்றது. வள்ளியம்மையார் தெள்ளிய அறிவு மிக்காராய்க், கொண்டான் குறிப்பறிந் தொழுகும் ஒண்டொடியாக அமைந்து நின்றூர். இல்லற வாழ்க்கை இனிது நடைபெற்றது. வள்ளியம்மையார் சிதம்பரனுரின் உள்ளம் முழுவதையுங் கவர்ந்து நின்றூர். தக்காங்கமைந்த வாழ்க்கைத்துணையினர் தாரணியில் நெடிது நாள் தங்குதல் அரிது. கூற்றுவன் அவர்களது கூட்டுறவைப் பிரித்து வேடிக்கை பார்க்கும் இயல்பினன். வள்ளியம்மையார் திடீரென்று இறைவன் திருவடிநீழலை எய்தினர். மனைவியார்பிரிவு சிதம்பரனுர்க்கு மனவருத் தத்தை அளித்தது. அம்மையார்மீது கையறுநிலைப் பாக் கள் பல பாடி உள்ளங்கலங்கினர்.

" என்னுடைய நேயர்களும் ஏழைபர தேசிகளும்
என்னுடைய வீடுவந்தால் எந்திழைதான்—தன்னுடைய

பெற்றோர்வந் தார்களெனப் பேணி உபசரிப்பாள்
கற்றோரும் உள்ளுவக்கக் கண்டு."

என்பது சிதம்பரனார் பாடிய கையறுநிலைப் பாக்களுள் ஒன்றாகும்.

மறுமணமும் நாட்டுத்தொண்டும்

மீனாட்சி என்ற பெண்ணைச் சிதம்பரனார் இரண்டாம் மனைவியாகத் திருமணம் புரிந்தார். இவ்வம்மையாரும் வள்ளியம்மையாரைப்போல் இன்குணங்கள் பலவும் இயைந்த ஏந்திழையாக இருந்தமையின் இல்வாழ்க்கை மேலும் இனிமையாகவே அமைந்தது. வழக்கறிஞராகத் தொழில் நடத்திய சிதம்பரனார் தமிழறிஞராகத் தமிழையும் நன்கு ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார். அந்நாளிலே ஆங்கிலேயர்கள் கட்டபொம்மனிடத்தில் காட்டிய கன்னெஞ்சச் செயல்கள் சிதம்பரனாரின் உள்ளத்தில் அடிக்கடி புகைந்து கொண்டிருந்தன. அச்செயல்களை எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் சிதம்பரனார் உள்ளம் புண்ணாகியது. நாட்டு விடுதலைக்கு உழைக்கவேண்டியது தமது கடமையென உள்ளத்தில் துணிந்தார்.

அந்நாளில் வங்காளப் பிரிவினைக்கிளர்ச்சி ஏற்பட்டது. வங்காளநாட்டை இரண்டாகப் பிரித்தமையின் அக்கிளர்ச்சி ஏற்பட்டது. வடநாட்டில் எழுந்த அக்கிளர்ச்சி தென்னாட்டிலும் பரவியது. தென்னாட்டுக் கிளர்ச்சியைச் சிதம்பரனார் முன்னின்று நடத்தினார். ஆங்காங்குக் கூட்டங் கூட்டிச் சொற்பொழிவுகள் செய்தார். வெளிநாட்டுப் பொருள்களை விலக்கவேண்டும் என்று மக்களை வேண்டிக் கொண்டார். வெளிநாட்டுப்பொருள்கள் பல தீக்கடவுளுக்கு உணவாயின. சிதம்பரனார் சென்னையை அடைந்தார். சி. சுப்பிரமணியபாரதியாருக்கும் அவருக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது.

சூரத் காங்கிரஸ்

1907-ஆம் ஆண்டில் சூரத் என்னும் ஊரில் காங்கிரசை நடத்தத் திட்டம் போடப்பட்டிருந்தது. மிதவாதிகள் தீவிரவாதிகள் என்று இரண்டு கட்சியினர் தம்முள் போட்டியிட்டனர். திலகர் தீவிரக்கட்சியின் தலைவராய்த் திகழ்ந்தார். இருகட்சியினருக்கும் கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டன. மிதவாதிகள் ராஷ்பிகாரி கோஷ் என்பவரைக் காங்கிரஸ் தலைவராக்க முயன்றனர். தீவிரவாதிகளோ லாலா லசபதிராய் என்பரைத் தலைவ ராக்க முயன்றனர். திலகர் சிதம்பரனாரிடம் நன்மதிப்புக் கொண்டிருந்தார். ஆகவே, சிதம்பரனார் பிரதிநிதிகள் பல ரோடு காங்கிரசுக்கு வரவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார். பாரதியாரைக் கலந்து எண்ணியபின் சிதம் பரனார் பிரதிநிதிகள் பலரோடு புறப்பட்டுச் சூரத்திற்குச் சென்றார். அங்கு இருகட்சியினரும் போராட்டத்தில் இறங் கினர். மிதவாதிகள் திலகரைத் தாக்க முயற்சித்தனர். சிதம்பரனார் தம் திருக்கூட்டத்தினரோடு ஒன்றுபட்டுத் திலகரைக் காத்தார். கூட்டங்குழப்பமாக முடிந்தது; எல்லோரும் தத்தம் ஊர்கட்குத் திரும்பினர்.

கப்பல் முயற்சி

தமிழ் நூல்களை ஆழ்ந்து பயின்ற சிதம்பரனார், தமிழர் கள் கப்பலோட்டிக் கடல்கடந்து வாணிபஞ்செய்து பொருளீட்டியவர்கள் என்பதை ஐயமறக்கண்டார். வெள்ளையர்கள் அத் தொழிலை கைப்பற்றிக் கொள்ளை கொள்ளையாகப் பொருளீட்டிக்கொண்டு போதல் முறை யற்றசெயல் என்று முடிவு செய்தார். தாம் கப்பல் ஓட்டுந் தொழிலை மேற்கொள்ளவேண்டும் என்று திட்டம் போட் டார். இத்திட்டத்தின் பயனாய், "சுதேசி ஸ்டீம் நாவி

கேஷன்'' என்னும் பெயருடன் கப்பல் கம்பெனி ஒன்றை இயக்க முடிவுசெய்தார். அதற்குப் பெரும்பொருள் வேண்டியதாக இருந்தது. பெருஞ்செல்வர் பலரிடஞ் சென்று தம் நோக்கத்தைக் கூறினர். பாண்டித்துரைத் தேவர் நூறுயிர ரூபாக்கள் கொடுக்க இசைந்தார். வேறு பலரும் பெருந்தொகை கொடுக்க முன்வந்தனர்.

பம்பாய்க்குச் சென்று கப்பல்கட்டும் பணியில் நாடு பட்டார். திலகரும் சிதம்பரனார் முயற்சிக்குப் பெருந் துணை புரிந்தார். இறுதியில் இரண்டு கப்பல்கள் சிதம்பர னாரால் கட்டி முடிக்கப்பட்டன. சிதம்பரனார் கப்பல்களு டன் தூத்துக்குடியை அடைந்தார். மக்கள் பேராரவா ரத்தோடு அவரை வரவேற்றனர். சிதம்பரனாருடைய கப் பல்கள் ஆங்கிலேயர்களுடைய கப்பல்களோடு போட்டி போட்டுக் கடலில் ஓடத்தொடங்கியது. இதனைக் கண்டு ஆங்கிலேயர்கள் அளவிடற்கரிய பொறுமை கொண்டனர். கப்பலோட்டும் போட்டியைச் சிதம்பரனார் கைவிட்டு விட் டால் பெருந்தொகை அளிப்பதாக மருட்டினர். சிதம்பர னாரோ எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை. ஆகவே, சிதம்பரனாருடைய கப்பல்களும் போட்டியிட்டன.

சிறைவாழ்க்கை

சிதம்பரனார் கப்பலோட்டிய தொழிலோடு அமைந் திருப்பின் அவர் வாழ்க்கை சிறப்படைந்திருக்கும். ஆனால், சிதம்பரனார் தமது முழுக்கருத்தையும் நாட்டுவிடுதலை யிலேயே செலுத்தினர். அடிக்கடி கூட்டங்கள் கூட்டி ஆங்கில அரசினருக்கு எதிராகச் சொற்பொழிவுகள் செய் தார். சிதம்பரனாருடைய வீரசொற்பொழிவுகள் மக் களைப் பலமாகத் தட்டியெழுப்பின. அதனால் நாட்டின் பல பாகங்களிலும் விடுதலை முழக்கம் வீறுகொண்டெழுந் தது. சிறைசென்று மீண்ட விடுதலைவீரர் ஒருவரைப்

போற்றுதற்கு நெல்லை மாவட்டம் எங்கணும் சிறந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆஷ் என்னும் பெயருடையவனும் ஆங்கிலேயனும் மாவட்டத்தலைவனுமான வெள்ளையன் ஒருவன், "சிதம்பரனாரும் சுப்பிரமணிய சிவாவும் கூட்டங்களில் கலந்துகொள்ளுதல் கூடாது," என்று தடைக் கட்டளை ஏற்படுத்தினான்.

மாவட்டத்தலைவனது கட்டளையைச் சிதம்பரனாரும், சிவாவும் ஒரு பொருளாக மதிக்கவில்லை. கட்டளையை மீறிக் கூட்டங்களில் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். ஆங்கிலேயர் புரியும் அட்டூழியங்கள் அக் கூட்டங்களிலே நன்றாக எடுத்துக் கூறப்பட்டன. இருவரையும் தூத்துக்குடியில் கைதியாக்கினால் பொதுமக்களால் தொல்லை யேற்படும் என்று எண்ணிய கலெக்டர் ஆஷ் துரை, இருவரையும் நெல்லைக்கு வருமாறு கட்டளை யிட்டான். இருவரும் அங்குச் சென்றனர். திருநெல்வேலி மாவட்டத்திற்குள் இருவரும் இருத்தல் கூடாது என்று கட்டளையிட்டான். இருவரும அக் கட்டளையை மீறித திருநெல்வேலிமாவட்டதில்தானே இருந்தார்கள். கட்டளையை மீறியதற்காக ஆஷ் துரை இருவரையும் கைதுசெய்தான். இதனால் பொதுமக்களிடையே கொந்தளிப்பு மிகுதியாயிற்று. பலவிடங்களிலும் பலவகையான அல்லல்கள் நேர்ந்தன. சுப்பிரமணிய சிவாமீதும், சிதம்பரனார்மீதும் பல குற்றங்கள் சாட்டப் பெற்று நீதிமன்றத்திலே வழக்கு நடந்தது. சிதம்பரனார்க்கு 40 ஆண்டுக் காவல் தண்டனையும் சிவாவுக்குப் பத்து ஆண்டுக் காவல் தண்டனையும் விதிக்கப்பட்டன. இம் முடிவு பொதுமக்களாலும் பத்திரிகைகளாலும் பலமாகக் கண்டனத்திற்குள்ளாயிற்று.

சிதம்பரனாரின் மனைவியார் இத்தண்டனையை அறிந்து உள்ளம் வருந்தினார். தண்டனையை மாற்றுமாறு,

உயர்தரநீதிமன்றத்திற்கு விண்ணப்பம் அனுப்பினர். நீதி பதிகள் வழக்கை மீண்டும் உசாவினர். சிதம்பரனு ருடைய தண்டனை ஆறாண்டுக்காலமாகக் குறைந்தது.

ஆங்கிலேயருடைய ஆட்சிக்காலத்தில், நாட்டு விடு தலைக்கு உழைத்த நாட்டுத்தொண்டர்கள் சிறையிலே ஈவி ரக்கமில்லாமல் பலவாறு துன்புறுத்தப்பட்டார்கள். உணவோ உண்ணுந்தரத்ததாக இராது கோலமோ பைத்தியக்காரக் கோலத்தினும் படுமோசமாக இருக்கும். சிதம்பரனுர்க்கு விதிக்கப்பட்ட தண்டனையைக்கேட்டு மக் கள் உள்ளங் குமுறினர். செய்வகையறியாது திகைத் திருந்தனர்.

சிறையில் தொல்லை

சிதம்பரனுருக்குச் சிறைக்கோட்டஞ் சென்றவுடன் கடுமையான வேலைகள் கொடுக்கப்பட்டன. முதற்கண் சணற் கயிறு சுற்றுகிற பொறி கொடுக்கப்பட்டது அப் பொறி யைச் சுற்றியபடியால் சிதம்பனுரின் கைத்தோல் நைந்து புண்ணுகியது பிறகு செக்கிழுக்கும் வேலை கொடுக்கப்பட் டது. நாட்டுமக்கள் இச் செய்தியை உணர்ந்தனர் அவர் கள் உள்ளங் குமுறியது. எந்தச்சமயத்திலும் விபரீத மான நிலைமை ஏற்படக்கூடும் என்னும் எண்ணம் அதி காரிகளுக்கு உண்டாகியது. அதன்பின் அந்நிலை ஒரு வாறு மாறியது. சிதம்பரனுர் தமக்கு ஏற்பட்ட துன்பங் களை ஒரு பொருளாக மதிக்கவில்லை எல்லாம் இறை யருட்செயலே என்று துணிந்து தெளிவுடனிருந்தார். ஐந்தாம் சார்ச் அரசருக்கு 1912-ஆம் ஆண்டில் முடிசூட்டு விழா நிகழ்ந்ததன் நினைவுக்குறியாகப் பல குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டனர். அச்சமயம் சிதம்பரனுர்க்கும் விடுதலை கிடைத்தது. விடுதலையாகி வெளிவந்த வீரர்

சிதம்பரனுரை வரவேற்பதற்குக் கூட ஆளில்லை. மக்கள் ஆங்கில அரசினரின் கொடுங்கோலாட்சிக்கு அஞ்சிப் பெட்டிப்பாம்பாக இருந்தனர். சுப்பிரமணிய சிவாவும் பாரதியாருமே சிதம்பரனுரை வரவேற்றுப் போற்றிய வர்கள்.

தமிழ் நூல்கள் இயற்றல்

விடுதலையாகி வெளிவந்த சிதம்பரனுர் சென்னையிற் சிலகாலம் தங்கினுர். நாட்டுத்தொண்டில் நலிந்துகின்ற அவருள்ளம் தமிழ்த்தொண்டில சென்றது. சில நூல் களை அச்சிடுவதற்குச் செப்பம்செய்தார். பிறமொழிச் சாபாக சில நூல்களை எழுதினுர் சிதம்பரனுரை வறுமை பற்றியது. இழந்துபோன வழக்கறிஞர் வேலையை வாலஸ் என்னும் வெள்ளைநீதிபதி வாங்கித் தந்தார். பிறகு சிதமபரனுர் வழகுகறிஞர் வேலையோடு தமிழ்த்தொண்டை யுஞ் செய்துகொண்டு தம காலத்தைப் போக்கினுர். சிதம்பரனுரால் அடியில் வரும நூலகள் இயற்றப்பட்டும் செப்பனிடப்பட்டும் வெளியிடப்பட்டன.

1. அகமேபுறம்
2. வலிமைகரு மார்க்கம்
3. மனம்போல வாழ்வு
4. மெய்யறிவு
5. மெய்யறம்
6. இன்னிலை
7. தொல்காப்பியம் பொருளதிகார உரை
8. ஷை எழுத்ததிகார உரை
9. திருக்குறள் மணக்குடவா உரை
10. முதல்மனவி வள்ளியம்மை வரலாறு
11. அரசியற் சொற்பொழிவுகள்

முதலியன. பாரதியார் பாடல்களிற் பெரும் பாலானவை தோன்றுதற்குச் சிதம்பரனுர் மூலகாரணராக இருந்தார்

எனல் மிகையாகாது. விடுதலைத் தொண்டனுக்கும் ஆங்கிலேயனுக்கும் உரையாடல்போற் செய்யப்பட்டுள்ள செய்யுட்கள் சிதம்பரனாரையும், ஆஷ் துரையையுமே குறிப்பிட்டுக் காட்டுவன என்று கூறலாம்.

முடிவுரை

பாரதத்தாயின் விடுதலையைக் காணும் பேறும் சிதம்பரனார்க்கு வாய்க்கவில்லை. 1936-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 18-ஆம் நாள் சிதம்பரனார் மண்ணுலக வாழ்வை நீத்தார். சிதம்பரனார் அருளே உடலாக அமையப்பெற்றவர். தமது துன்பத்தை அணுவும் பொருட்படுத்தார். பிறருடைய துன்பத்தைக் காணிலோ எரியின் இழுதாய் உருகுவர். இந்நாளில் தூத்துக்குடிக்கும், இலங்கைக்கும் வ. உ. சிதம்பரம் என்னும் பெயர் தாங்கிய கப்பல் ஒன்று ஓடிக்கொண்டிருக்கிறது. தூத்துக்குடியில் சிதம்பரனார் பெயரால் கல்லூரி யொன்றும் தோன்றியிருக்கிறது. தமிழ்நாடெங்கணும் வ. உ. சிதம்பரம் வாசகசாலை என்னும் பெயருடன் பல வாசகசாலைகள் தோன்றியுள்ளன. சிதம்பரனாரின் பெயரைக்கொண்ட தெருக்களும் பல உண்டாகியிருக்கின்றன. நாட்டுத்தொண்டராகவும், தமிழ்த் தொண்டராகவும் ஒருங்கே விளங்கிய பெருமை சிதம்பரனார் ஒருவருக்கே சிறப்பானதென்றுகூறல் சாலும். சிதம்பரனாரின் தொண்டை அவருடைய பகைவர்களும் மனமாரப் போற்றி வாயார வாழ்த்தியிருக்கின்றனர். என்றென்றும் சிதம்பரனார் திருப்பெயர் இக்கிலவுலகில் இனிது நிலைபெற்று விளங்குக.

கூ. கா. நமச்சிவாய முதலியார்

பிறப்புங் கல்விப் பேறும்

வடாற்காடுமாவட்டத்தைச் சேர்ந்த காவேரிப்பாக் கம் என்னும் ஊரிலே இராமசாமிமுதலியார் என்பவ ருக்கும் அகிலாண்டவல்லி அம்மையார் என்பவருக்கும் அருமைத் திருமைந்தனாகத் தோன்றினர் நமச்சிவாய முதலியார். முதலியார் பிறந்தது 1876-ஆம் ஆண்டு பிப்ரவரித்திங்கள் பத்தாம் நாள வெள்ளிக்கிழமையாகும்.

இராமசாமிமுதலியார் நற்குணமும் நல்லியல்பும் அமையப்பெற்றவர். அவர் தமது ஊராகிய காவேரிப்பாக் கத்திலே பாடசாலை ஒன்றை ஏற்படுத்தி மாணவர்கட்குக் கல்வி போதித்தார். ஏழ்மை நிலையினராதலின் பாட சாலையில் அகப்படும் சிறுஊதியத்தைக் கொண்டே வாழ்க்கையை நடத்தினர். நமச்சிவாயர் தம் தந்தையாரின் பாடசாலையிலேயே கல்விகற்கத் தொடங்கினர். நல்வழி, நன்னெறி, நீதிநெறி விளக்கம், விவேக சிந்தாமணி முதலிய நூல்களைத் தந்தையாரிடமே படித்தார். பதினைந்தாண்டு வரையில் தந்தையாரிடமே கல்விபயின்ற நமச்சிவாயர் பதினைரும் ஆண்டில் சென்னையை அடைந்து தண்டையார் பேட்டையிலே ஒரு தொடக்கப்பள்ளியின் முதல்வகுப்பு ஆசிரியராக வேலை பார்த்து அதனால் வரும் ஊதியத்தைக் கொண்டு காலங் கடத்தினர்.

மேலும் கல்விகற்றல்

சண்முகம்பிள்ளை என்னும் பெருந்தமிழ்ப் புலவர் ஒருவர் அந்நாளில் தொண்டைமண்டலம் துளுவவேளார் பாடசாலையில் தமிழாசிரியராக இருந்தார். அவருடைய புகழ் யாண்டும் பரவிநின்றது. சண்முகம்பிள்ளையின்

பெருமையைப் பற்றி அடிக்கடி கேள்வியுற்ற நமச்சிவாயர் சண்முகம்பிள்ளையிடங் கல்விகற்றுத் தாமுஞ் சிறப்படைய வேண்டும் என்று பேராவல்கொண்டார். சண்முகம் பிள்ளையைக் கண்டு தம் விருப்பத்தைக் கூறினர் சண்முகம்பிள்ளை நமச்சிவாயரைத் தம் மாணவராக ஏற்றுக் கொண்டார். நன்னாளொன்றிலே நமச்சிவாயருக்குப் பாடந் தொடங்கினர். நமச்சிவாயர் பன்னிரண்டு யாண்டுகள் சண்முகம் பிள்ளையிடம் இலக்கிய நூல்கள், இலக்கண நூல்கள், சங்க நூல்கள், காவியங்கள் முதலியவைகளை ஐயந்திரிபறக் கற்று அவைகளிலெல்லாம் வல்லவரானர். சண்முகம் பிள்ளைக்கு மக்கட்பேறின்மையால் நமச்சிவாயரையே தம் மகனாக எண்ணினர். தம் இறுதிக்கடனை நமச்சிவாயரே ஆற்றவேண்டுமென்றார். நமச்சிவாயர் அவ்வாறே சண்முகம்பிள்ளை காலமான பிறகு இறுதிக்கடன்களை ஆற்றிய தடன் சண்முகம்பிள்ளையின் மனைவியையும் தாயைக் காப்பாற்றுதல்போல் பேணிக் காப்பாற்றினர்.

ஆசிரியத்தொழில்

கல்வியை நன்குகற்றுத் தேறிய நமச்சிவாயருக்கு அந்நாளில் தமிழாசிரியர் வேலை எளிதாகக் கிடைக்கவில்லை. 1895-ஆம் ஆண்டில் சென்னை நீதிமன்றத்தில் ஒரு சிறிய அலுவலைப் பெற்று அதனை ஓராண்டு வரையில் மேற்கொண்டிருந்தார். நமச்சிவாயருடைய எண்ணம் தமிழாசிரியராக வேண்டுமென்பதுதான். முதலில் செயிண்ட்சேவியர் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியர் வேலை அகப்பட்டது. மாணவர்களின் மனம் மகிழுமாறு நமச்சிவாயர் தமிழ்ப் பாடங்களை நன்கு கற்பித்து மாணவர்களின் உள்ளங்களைக் கவர்ந்தார். மாணவர்களின் பொருட்டுச் சிறு இலக்கண நூல் ஒன்றை உரைநடையில் வெளியிட்டார். பிறகு நமச்சி

வாயர் இராயபுரத்தில் உள்ள நார்த்விக் மகளிர்பாடசாலையில் தமிழாசிரியராக அமர்ந்தார். அங்குச் சில ஆண்டுகள் சென்றபின், சிங்கிலர் கல்லூரியில் தமிழாசிரியரானர். அதன்பின் வேபபேரியில் எஸ். பி. ஜி. உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராக அமர்ந்து தொண்டாற்றினர். இந்தப் பள்ளியில இருக்கும்போதுதான் நமச்சிவாயர் பள்ளிமாணவர்கட் கேற்ற பாடப்புத்தகங்களை எழுதத் தொடங்கினர். அப் பாடப்புத்தகங்களால் நமச்சிவாயருக்குப் பெரும் புகழும் அரும்பொருளும் நிறையக் குவிந்தன. அதன் பிறகு நமச்சிவாயருடைய வாழ்க்கை சீருஞசிறப்பும உடையதாகத் திகழ்ந்தது.

திருமணம்

1906-ஆம் ஆண்டில் நமச்சிவாயருக்குத் திருமணம் நடந்தது. வாழ்க்கைத்துணைவியாக அமைந்த செல்வியின் பெயர் சுந்தரமமாள. சுந்தரம்மாள் கொண்டான் குறிப்பறிநதொழுகும் ஒண்டொடியாக மிளிர்ந்தார். விருந்தோமபுதல் வறியார்க்கீதல் முதலிய நற்செயல்கள் அம்மையாரிடஞ செம்மையாகச் சிறந்துநின்றன. நமச்சிவாயர் இல்லத்திற்கேகும் புலவர் பெருமக்களும நண்பர்களும் நல்விருந்துண்டு மகிழ்ந்தனர். நாளடைவில் நமச்சிவாயர் நன்மக்கட் பேற்றையும நன்கடைந்து மகிழ்ந்தார்.

மேரிராணி கல்லூரி

1914-ஆம் ஆண்டில் அரசியலார் மேரிராணியார் கல்லூரியை ஏற்படுத்தினர்கள். அக் கல்லூரிக்குத் தமிழாசிரியர் அகப்படுவது அருமையாக இருந்தது. புதிதாகத் தோன்றிய கல்லூரிக்கு எவரும் ஆசிரியராகச் செல்லத் துணியவில்லை. நமச்சிவாயர் அக் கல்லூரியின் தமிழாசிரியர்

வேலையை ஒப்புக்கொண்டு மாணவிகள் மனம் மகிழுமாறு தமிழ்ப்பாடங்களைக் கற்பித்தார்.

பிறசெயல்கள்

1917-ஆம் ஆண்டில் அரசியலார் நமச்சிவாயரைச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப்போர்டில் தலைமைத் தேர்வாளராக ஏற்படுத்தினர். பிறகு 1918-ஆம் ஆண்டில் தமிழ்க்கல்வி அரசாங்கச் சங்கத்தில் உறுப்பினராஞர். அப்போது அச் சங்கத்தின் தலைவராக இருந்த அனவரத விநாயகம்பிள்ளை இலங்கைக்குச்செல்ல நேரிட்டது. நமச்சிவாயரே அப்போது அத் தலைமைப்பதவியை ஏற்று 1920-ஆம் ஆண்டுமுதல் 1934-ஆம் ஆண்டு வரையில் அரும்பெருந் தொண்டாற்றிப் பேரும்புகழும பெற்ருர். சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் பட்டங்கள் பெரும் பாலும் வடமொழி படித்தவர்களுக்கே கொடுக்கப்பட்டன. அப் பட்டத்தை அடையவேண்டுமானல், தமிழோடு வட மொழியையேனும் அல்லது வேறுமொழிகளில் ஒன்றை யாகிலும் கற்கவேண்டும். புலவர் கல்விக்கு அஃதோர் இடையூருக இருந்தது. பலர் புலவர்பட்டத்தைப்பெறுதற்கு கனவில் கூட எண்ணுவதில்லை. நமச்சிவாயர் அச் சங்கத் தின் தலைவராக வந்ததும் மேற்கூறிய இடையூற்றைப் போக்கினர். தமிழ்மொழி ஒன்றிலேயே இலக்கண இலக்கிய நூல்களை நன்கு பயின்றவர்கட்குப் புலவர்பட்டம் கொடுக்க லாம் என்று கூறினர். அவர் கருத்தை அரசியலாரும் ஏற்றுக்கொண்டனர். இதன் பின்னரே தனித்தமிழ்ப் புலவர்தேர்வு தோன்றியது. தமிழ் அறிஞர்களும் மிகுதி யாகத் தோன்றுவாராயினர். இந்நாளில் யாண்டும் தமிழ்ப் புலவர்கள் மிகுந்திருப்பதற்கு நமச்சிவாயரின் நல் தொண்டேகாரணமாகும். நமச்சிவாயர் பிறகு மேரிராணி கல்லூரியைவிட்டு இராசதானிக் கல்லூரியில் ஆசிரியராஞர்

யாண்டுஞ் சிறந்து விளங்கி நற்பெயர் எடுத்தாற்போலவே, அக் கல்லூரியிலும் நற்பெயர் எடுத்தார்.

நூலாசிரியர்

மாணவர்களுக்கேற்ற தமிழ்ப்பாடப் புத்தகங்களை எழுதுவதில் நமச்சிவாயர் தேர்ச்சிபெற்றவராகத் திகழ்ந்தார். 1905-ஆம் ஆண்டு முதலே அவர் பாடப்புத்தகங்களை எழுதத் தொடங்கிவிட்டார். அவருடைய பாடப்புத்தகங்கள் மாகாணம் எங்கும் உள்ள பள்ளிகளிலெல்லாம் பாடமாக வைக்கப்பெற்று மாணவர்களுக்குக் கற்பிக்கப் பட்டன. நமச்சிவாயருடைய உரைநடை எளிய இனிய போக்கில் இளஞ்சிறார்கள் கற்பதற்கேற்ற முறையில் அமைந்திருந்தது. 1909-ஆம் ஆண்டில் பிருதிவிராசன் நாடகத்தை எழுதி வெளியிட்டார். 1910-ஆம ஆண்டில் கீசகன் நாடகம் வெளிவந்தது. இந் நாடகங்களை அறிஞர் கள் பலரும் பாராட்டினார்கள். இவைகள் பல அரங்கங் களில் நடிக்கப்பட்டன. இவர் எழுதிய பல நூல்கள் எஸ். எஸ். எல். சி, இண்டர்மீடியட், பி. ஏ முதலிய வகுப்புக் களுக்குப் பன்முறை பாடப்புத்தகமாக வைக்கப்பட்டன. மற்றும் தேசிங்குராசன், சனகன் என்னும் நூல்களையும் வெளியிட்டார்.

பத்திரிகாசிரியர்

நமச்சிவாயர் காலத்தில் பத்திரிகைகள் மிகச்சிலவே வெளிவந்தன. நமச்சிவாயர் பள்ளியாசிரியர்கட்குப் பயன் படும் வகையில் "நல்லாசிரியன்" என்னும் பத்திரிகையைப் பதினேந்து ஆண்டுகள் வரையில் நடத்தினர்.

பதிப்பாசிரியர்

'தமிழ்நூல்களை நல்லதாளில் உயர்ந்தமுறையில் ஆங்கிலவெளியீடுகளைப்போல வெளியிடவேண்டும்' என்

னும் அவர் நமச்சிவாயருக்கு மிகுதியாக இருந்தது. நீதி நூல்கள் பலவற்றையும் தொல்காப்பியப் பகுதிகள் சில வற்றையும் தஞ்சைவாணன்கோவை, தணிகைப்புராணம் ஆகியவைகளையும் அமமுறையிற் பதிப்பித்துத் தம் எண் ணத்தை நிறைவேற்றிக்கொண்டார்.

நமச்சிவாயரின் நல்லியல்புகள்

நமச்சிவாயரிடம் நல்லியல்புகள் பல குடிகொண்டிருந் தன. இளமைக்காலத்தில் வறுமையின் கொடுமையை நன்குணர்ந்தவராதலின் வறுமையுற்றுத் தம்பால் வந்த புலவர்கட்கும், பிறருக்கும் தம்மால் இயன்ற உதவியைச் செய்தார். பிறர்க்குதவி செய்வதற்கு முதலியார் எந்தக் காலத்தினும் பின்வாங்கியதில்லை. நமசிவாயரின் நூல் களைத் தம பள்ளியில் பாடப்புத்தகமாக வைக்கக்கூடாது என்று தடுத்துவிட்ட ஓராசிரியர் பிறகு நமச்சிவாயரிடம் ஒருதவியை நாடிச செல்லுமபடியாக நேரிட்டுவிட்டது. முன் பகைவராயிருந்த ஆசிரியர் தம் வீடுதேடிவந்து உதவியை எதிர்பார்த்தபோது நமச்சிவாயர் அந் நண்பரின் எண்ணத்தை நிறைவேற்றியனுப்பியதுடன் அவருக்கு நல் விருந்தும் செய்தார். "இன்னுசெய்தாரை ஒறுத்தல் அவர் நாண, நன்னயஞ செய்து விடல்," என்னும் தமிழ் மறையைக் கடைப்பிடித்தே நமச்சிவாயர் இவ்வாறு செய் தார் போலும். நமசிவாயரின் நல்லுதவியைப்பெற்ற அப் பகைநண்பர் நமச்சிவாயரின் பெருந்தன்மைக்கும் தமது சிறுசெயலுக்கும் உள்ளம் நாணி மனம் மிகவும் வருந்திச் சென்றார்.

நமச்சிவாயர் வறுமையால் வாடிய காலத்தில் நாள் தோறும் கடற்கரைச் சாலைவழியாகச் செல்வாராம். ஓர் இடம் அவருடைய உள்ளத்திற்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்ததாம். அப்போது அவர், "நாம் சிறிது கீற்றும்

மூங்கில் மரங்களும் வாங்கி இந்த இடத்தில் ஒரு கொட்டகையைப் போட்டுக்கொண்டிருந்தாலும் போதுமே. கடற்காற்றை வாங்கி எவ்வளவோ மகிழ்ச்சியை அடையலாமே,'' என்று வெளிப்படையாகவே கூறி ஏங்குவாராம். பிறகு செல்வவளம் அதிகரிக்கப்பெற்ற காலத்தில் நமச்சிவாயர் முன்பு தாம் பேரவாக்கொண்ட அதே இடத்தில் அழகிய மாளிகை ஒன்றை அமைத்து அதற்குக் 'கடலகம்' என்று பெயரிட்டு அவ்வீட்டிற் குடிபுகுந்து இன்பமடைந்தார். கோடை காலத்திற்சென்று தங்குதற்பொருட்டு நீலகிரியில் ஓர் அழகிய வீட்டை அமைத்து அதற்குக் 'குறிஞ்சி வீடு' என்று பெயரிட்டார். நீலகிரியில் தங்கியபோது அவ்விடத்திய மலைவளம் குறிஞ்சிநிலமக்களின் வரலாறு முதலியவைகளை ஆராய்ந்து சென்னையிற் சில சொற்பொழிவுகள் செய்தார்.

கருங்கல்லும் நாற்காலியும்

ஒரு நாள நமச்சிவாயரைப் பார்க்கச் சில நண்பர்கள் சென்றனர். நமச்சிவாயரின் கட்டளைப்படி எல்லோரும் நாற்காலிகளில் அமர்ந்தனர். ஓர் அன்பர் நமச்சிவாயருக்கு மூன்னல் நாற்காலியில் அமரத் துணியாமல் கீழே கருங்கல் தரையில் அமர்ந்தார். உடனே நமச்சிவாயர், ''நாற்காலியை விடக் கருங்கல் விலையேறப்பெற்றது. மலையிலிருந்து பெரு முயற்சியினல் வந்தது. ஆகவே, அதன் பெருமையை உணர்ந்துதான் அவர் தமக்கு மட்டும் விலையுயர்ந்த அரிய இருக்கையைத் தேடிக்கொண்டார் போலும்,'' என்று கூறினர் இதனைக்கேட்டு அங்கிருந்தவர்கள் யாவரும் மகிழ்ந்தனர்.

சிறப்பியல்பு

தமிழ் கற்றவர்களை வறுமைப்பேய் பற்றிக்கொள்வது வழக்கம். ஆனல், முதலியார் வறுமைப்பேயை விரட்டி

யடித்துவிட்டார். அவர் எழுதிய பாடப்புத்தகங்கள் அவருக்கு மிகுதியான செல்வச்சிறப்பை யளித்தபடியால் அழகிய மோட்டார்க்கார் வீடு வாசல் முதலியவைகளோ மனம்போற் பெற்றுச் சிறப்பான வாழ்க்கையை நடத்தினர். "நமச்சிவாயர் ஒருவராவது திருமகளின் அருளுக்குரியவராளுரே; அஃதை ஒன்றே போதும்," என்று தமிழறிஞர்கள் பெரிதும் மனமகிழ்ந்தனர். நமச்சிவாயர் தமிழ்த்தாய்க்குச் செய்த திருத்தொண்டுகளும் பல. அவரால் தமிழ்த்தாய் பல சிறப்புக்களைப்பெற்று இன்று உயர்ந்த நிலையில் விளங்குகிறாள் என்று கூறுவது மிகையாகாது.

இறுதி

1937-ஆம் ஆண்டில் நமச்சிவாயரை நோய் ஒன்று பற்றியது. அதனால் அவர் அவ்வாண்டில் தானே தமது அறுபத்தோராம் அகவையில், முருகன் திருவடி நீழலையடைந்தார். அவருடைய மனைவிமக்கள் இன்று நலமுடன் வாழ்கின்றனர்.

எழுதியனவும் பதிப்பித்தனவுமான நூல்கள்

1. கீசகன்
2. பிருதிவிராசன்
3. தேசிங்குராசன்
4. சனகன்
5. ஆத்திசூடி முதலியன
6. தொல் பொருள் இளம்பூரணம்
7. தணிகைப் புராணம்
8. தஞ்சைவாணன் கோவை
9. இறையனார் களவியல்
10. தணிகைத் தவப்பயன் மாலை

என்னும் இவைகளும் வேறு சிலவுமாம்.

கo. சொக்கலிங்கச் செட்டியார்

தோற்றம்

செட்டிமார்நாட்டிலே காரைக்குடியிலே கலி 4950-க்குச் சரியான ஸ ஆண்டு ஆடித்திங்கள் 23-ஆம் நாள் சொக்கலிங்கச் செட்டியார் பிறந்தார். செட்டியாரின் தந்தையார்பெயர இராமநாதச்செட்டியார். தாயார் பெயர் முத்துக்கருப்பியாச்சியார்.

கல்விப்பயிற்சி

சொக்கலிங்கம் என்று பெயரிடப்பெற்ற செட்டியார் குலவழக்கதிற்குத தக்கவாறு கல்விப்பயிறசிசெய்து வைகுகடபெற்றார். சின்னஞ் பள்ளியிற்கற்றுப் பள்ளிக் கல்விக்குப் புள்ளிவைத்தார் பிறகு தாமே இலக்கண இலக்கியங்களையும், புராணங்களையும், தேவாரம் திருவாசகம் முதலிய நூல்களையுங் கற்கத்தொடங்கினர். முற்பிறவியின் நல்வினையினால் நல்லோர் கூட்டுறவு செட்டியார்க்கு இயற்கையாகவே உண்டாயிற்று. தொழில்வளர்ச்சியை முன்னிட்டுச் செட்டியார் தமது பதினேழாம் ஆண்டிலே யாழ்ப்பாணம் சென்றார். அப்பொழுது அங்கு ஆறுமுக நாவலர் சிறந்த கல்விமானுகச் சீர்த்திபெற்றுத் திகழ்ந் தமையை அறிந்தார். அவருடைய பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு அவரிடம் பலநூல்களைப் பாடங்கேட்டார். நாவலர் அவர்கள் தாம் பாடஞ்சொன்னதோடன்றித் தம் மருகர் பொன்னம்பலம்பிள்ளையவர்களைக் கொண்டும் பல நூல்களைப் பாடஞ்சொல்வித்தார். செட்டியாரின் கல்வித் திறமையையும், ஊக்கத்தையுங் கண்ட நாவலர் இவரிடம் சிறப்பான உரிமை பாராட்டினர். நாவலர் அவர்களின் அன் புடைமையையும் பண்புடைமையையுங்கண்ட செட்டியார்

'ஆறுமுகநாவல குருத்துதி' என்னும் நூலால் நாவலரைப் புகழ்ந்துபாடினர்.

செட்டியார் இலங்கையைவிட்டு இந்தியாவுக்கு மீண்ட பின் மேலும் பல நூல்களைப் பயில விரும்பினர். தேவ கோட்டை என்னும் ஊரில் நாராயணன்செட்டியார் எனபவர், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர் களிடத்தில் கல்விகற்ற சிறப்புடையவராகவும் வன் தொண்டர் என்று புகழ்பெற்றவராகவும் விளங்கினர். வன்தொண்டருடைய கல்விமாட்சியை உணர்ந்த சொக்க லிங்கச் செட்டியார் மேற்படியாரிடமும பல நூல்களைக் கற்றார். வன்தொண்டர் மீது 'வன்றொண்ட குருத்துதி' என்னும் நூலினைப்பாடி வணங்கினர். மற்றும் மெய்யப்ப சுவாமிகள் என்னும் பெரியாரிடத்திலும் பல நூல்களைக் கற்றுணர்ந்தார்.

திருமணமும் திருப்பணிகளும்

செட்டியாருடைய பதினாறவது அகவையில் முதல் திருமணம் நடைபெற்றது. இருபத்தெட்டாவது அகவை யில் முதல்மனைவியார் காலமாகவே இருபத்தொன்பதாவது அகவையில் இரண்டாவது திருமணம் நடைபெற்றது. நாற்பத்துநான்காம் அகவையில் இரண்டாவது மனைவி யாரும் காலமாகவே அதன்பின் செட்டியார் தூய துறவற வாழ்க்கையை மேற்கொண்டொழுகினர்.

திருநல்லூர்ப்பெருமணம் என்னும் ஆச்சாபுரத்தில் தம் உறவினர்களைக் கொண்டு குருபூசைமடம் ஏற்படுத்தி அறுபத்துமூவர் குருபூசைகளையும் நடத்தச் செய்தார். மேலும் அங்குத் தேவார பாடசாலையை ஏற்படுத்தி அதில் மாணவர்கட்குத் தேவாரம் கற்பிக்கச் செய்ததுடன் சைவ

நூல்களையும் இலக்கண இலக்கியங்களையும் தாமே மாணவர் கட்குப் போதித்துக்கொண்டும் இருந்தார். திருஞான சம்பந்தர்மீது பிள்ளைத்தமிழ் பாடி அரங்கேற்றஞ் செய் தார். மேலும் நகரத்தார்களைக் கொண்டு, ஆகம பாடசாலை, வேத பாடசாலை, பசுமடம், பூம்பொழில், திருஞானசம் பந்தர் திருக்கோயில் திருவிழா மண்டபம் முதலிய திருப் பணிகளை இயற்றுவித்தார்.

மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலை

பிறகு செட்டியார் திருத்தில்லையை அடைந்து அங்கு தங்கிக் கூத்தப்பிரானை போற்றிகொண்டு காலங்கழிக்க எண்ணினார். பல அன்பர்களின் உதவியைக்கொண்டு மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலை என்னும் பெயருடன் வித்தியாசாலை ஒன்றை ஏற்படுத்தினர். சுக்க ஆசிரியர் களைக்கொண்டு மாணவர்கட்குச் சைவசித்தாந்த நூல்களை யும், இலக்கண இலக்கியங்களையும் போதிக்கச்செய்தார். தாமும் அங்கிருந்து கொண்டு மாணவர்கட்குப் பல நூல் களைப் போதித்தார். சிவபூசையிலும கூத்தப்பிரான் வழி பாட்டிலும் முழுக்கருத்தையுஞ் செலுத்தினர்.

சைவப்பற்று

செட்டியார் சைவத்திலே அழுத்தமான பற்றுடைய வர் சைவத்தின் பெருமையைப் பற்றியும் சைவசித்தாந் தத்தின் சிறப்பைப்பற்றியும் எண்ணற்ற சொற்பொழிவு களைச் செய்தார். காரைக்குடியில் தோன்றிய சிவநேசத் திருக்கூட்டம் செட்டியாருடைய தலைமையையும் சொற் பொழிவையும் நன்கு பெற்று வளர்ச்சி யடைந்தது. அளவு கடந்த சைவப்பற்றினால் வேதாந்தம் முதலிய பிற சமயங் களைச் செட்டியார் தாக்கி எழுதி வம்புக்குள்ளானதும்

உண்டு. செட்டியாருடைய சொற்பொழிவு கேட்பாருள் ளத்தே பசுமரத்தாணிபோல் பதியும் தன்மையுடையதாக வும் சைவச்சிறப்புடையதாகவும் விளங்கியது. பெரியபுரா ணம் முதலிய சைவநூல்களைப் பாடஞ் சொல்வதினும் அவைகளைப்பற்றிச் சொற்பொழிவு செய்வதினும் செட்டி யார் கைதேர்ந்தவர்.

இறுதி

செட்டியார் புதுப்பாடல்களை இயற்றும்விரைவு மனப்பாடஞ் செய்த பழம்பாடல்களைத் திருப்பிச் சொல் வது போல் இருக்கும். வாணாள் முழுவதினும படிப்பதினும் சிவபூசை செய்வதினும் நூலகள் இயற்றுவதினுமே காலத் தைச் செலவிட்ட செட்டியார் சிறிதும் பெரிதுமான பல நூல்களை இயற்றினர். மெய்கண்ட சித்தாந்த வித்தியா சாலையின் வளர்ச்சிகருதிக் காரையம்பதி சென்ற செட்டி யார் அவ்விடமே பிரமோதூத ஆண்டு கார்த்திகைத் திங் கள் 28-ஆம் நாள் தமது 74-ஆவது அகவையில் சிவபெரு மானுடைய திருவடி நீழலை யடைந்தார். செட்டியாருடைய பூதவுடல் அவருடைய கட்டளைப்படி தீக்கடவுளுக்கு இரை யாக்கப்பட்டது.

செட்டியார் இயற்றிய நூல்கள்

1. திருவுசாத்தானபுராணம்
2. திருவுசாத்தானபுராண வசனம்
3. திருப்புத்தூர்ப் புராணம்
4. பெருந்தோட்டத்து அத்தீசுரபுராணம்
5. சோழபுரபுராணம்
6. சித்தவடமான்மியம்
7. தில்லைவளாகமான்மியம்
8. திருக்கழுக்குன்றமான்மியம்
9. திருவாதவூரடிகள்புராண வசனம்

10. திருத்தொண்டர்புராணசார விளக்கம்
11. சிவசுந்தரசாயாரூப சிவமகிமா சங்கிரகம்
12. உண்மைநாயன்மார மகிமை
13. சேக்கிழார்புராணவசனம்
14. நம்பியாண்டார் சரித்திரம்
15. மெய்கண்ட சிவசரிதத்திரம்
16. மகுட தன வைசியமரபு விளககம்
17. சோமசுந்தரமாலை
18. சவுந்தரேசதயாநிதி மாலை
19. குமரநாயக மாலை
20. வீரசேகர மாமணிமாலை
21. சிற்சபேசர் விண்ணப்பமாலை
22 வடிவழகி நவமணிமாலை
23. கற்பக விநாயகர் பதிற்றுப்பதந்தாதி
24. திருவாரூர திரிபந்தாதி
25. திருவாலவாய யமகவநதாதி
26. பசுவந்தனை வெண்பாவந்தாதி
27. குன்றைச சிலேடை வெண்பா
28. ஞானசம்பநதர சிலேடை வெண்பா
29 சிவகாமசுந்தரர் சிலேடை வெண்பா
30. ஞானசம்பந்தர் போற்றிக்கலிவெண்பா
31. சிவகாமி பிள்ளைத்தமிழ்
32. திருஞானசம்பந்தர் பிள்ளைதமிழ
33. திருநாவுக்கரசர் பிள்ளைதமிழ
34. சுந்தரமூர்தி பிள்ளைதமிழ
35. மாணிக்கவாசகர பிள்ளைதமிழ்
36. மயின்மலைச சந்தவிருத்தம
37. மீனாட்சி சுந்தரேசர் திருவூசல்
38. பசுவந்தனைத் திருவூசல்
39. திருஞானசம்பநதர திருவூசல்
40. வள்ளிமணவாளர் திருவூசல்
41. சிவநாம வணக்கம்
42. சிவபக்த நாமாவளி
43. அருசசனைப்பத்து

44. தூர்வை யாசகப்படலம்
45. வேதாந்தத் தெளிவு
46. சிவஞானபோதார்த்த லெகுவசனம்
47. சைவசமய உண்மை
48. வேதசிவாகமங்கள்
49. மெய்ம்மைவிளக்கம்
50 முத்தலாயக மும்மணிக்கோவை
51 சாக்கை இரட்டைமணிமாலை

மற்றும் பல உரைநடை நூல்களும் பதிகங்களுஞ் சேர்ந்து 108 வரை உள்ளன. இவற்றிற் பெரும்பான்மையானவை செட்டியாரவர்களாலேயே நகரத்தார் பொருளுதவி கொண்டு பதிப்பித்து வெளியிடப்பெற்றுள்ளன

ஙக. ஞானியார் அடிகள்

தோற்றம்

ஞானியார் அடிகள் என்று பெயர்பெற்ற திருப்பாதிரிப்புலியூர் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் சோழ வளநாட்டிலே திருநாகேச்சுரம என்னுஞ் சிவப்பதியிலே 17-5-1875-க்குச் சரியான சீமுக ஆண்டு வைகாசித் திங்கள் நான்காமநாள் தோன்றினர். அடிகளின் தந்தையார்பெயர் அண்ணுமலையர். தாயார்பெயர் பார்வதியம்மையார். அடிகள் தோன்றிய குலம் வீரசைவ மரபு. அடிகளார் பழனி என்று பெயரிடப் பெற்று வளர்ந்தனர்.

புலிசையடைதல்

அண்ணுமலையரின் குடும்பத்தினர் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார்மடாலயத் தொடர்புடையவர்களாக இருந்தனர். அந் நாளில் நான்காந் தலைவராக எழுந்தருளியிருந்த சிவசண்முக பரசிவமெய்ஞ்ஞான சிவாசாரிய

அடிகள் என்பவர் தமக்கு உதவியாக அங்கே வந்து தங்கு மாறு அண்ணுமலையரை அழைத்தார். அண்ணுமலை ஐயர் ஆறு திங்களே நிரம்பப் பெற்ற தம் குழந்தை பழனி யுடனும் குடும்பத்துடனும புலிசையை அடைந்து அங்குத் தங்கினர்.

கல்வி

அடிகளார் குழவிப்பருவத்தைக் கடந்து கல்விகற்கத் தக்க பருவத்தை அடைந்தார். மடத்தலைவராகிய அடிக ளார், பழனியின் கல்வியில கருத்துச் செலுத்தினர். சென்ன கேசவலு நாயுடு என்பவரைக் கொண்டு முதலில் தெலுங்கு மொழியைக் கற்பித்தார். பிறகு தமிழ், ஆங்கிலம் முதலி யவைகளைப் பாடசாலையில் சேர்ந்து பயிலச்செய்தார். பழனி கல்வியிற் கண்ணுங் கருத்துமாக இருந்து தகுந்த வாறு பயின்றார். 1884-ஆம் ஆண்டில், செயின்ட் ஜோசப் பிராஞ்சு உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்தார். தெய்வசிகாமணி ஐயர் என்பவரிடம் தமிழ் பயின்றார். கோவிந்தாசாரியார் என்பவரிடம் வடமொழி கற்றார். ஆதீனத்தலைவராகிய அடிகளாரும் ஆதீனத்தொடர்பான நூல்களையும், வீரசைவ மரபுக்குரிய நூல்களையும் இடையிடையே போதித்தார்

1889-ஆம் ஆண்டில் பழனி, பிரீ மெட்ரிகுலேஷன் வகுப்பில் கல்விபயின்று கொண்டிருந்தார். அதுகாலை ஆதீனத் தலைவராகிய அடிகளார்க்கு உடல்நலம் குன்றியது. பழனிக்குத் துறவுநிலையை வழங்கி மடத்தலைவராக்கினர். அது முதல் பழனிக்கு, "சிவசண்முக மெய்ஞ்ஞான சிவா சாரிய அடிகள்" என்னும் பெயர் ஏற்பட்டது. ஆதீனத் தலைவராகிய அடிகளார் இறைவன் திருவடிநீழலை எய்தி னர். அதன்பின் அடிகளார் மடத்திலேயே தங்கிக் கல்வி பயின்றார். சி. மு. சாமிநாத ஐயர் என்பவர் தமிழாசிரிய

ராக அமர்ந்து இலக்கிய நூல்களையும் இலக்கண நூல்களையும் அடிகளார்க்கு நன்கு போதித்தார். ஐயர் பாடங்கற்பிக்கும் ஆற்றலிற் சிறந்தவராக விளங்கியபடியினால்தான் ஞானியார் அடிகளின் பெயர் திக்கெலாம் பரவியது.

பாட்டும் பயனும்

ஐயர் நாள்தோறும் ஒரு செய்யுளை எழுதி, அதனைச் சீர், தளை பிரிதது அலகிட்டு இலக்கணக் குறிப்பு முதலியன எழுதி வைக்குமாறு சொல்வது வழக்கம். ஒருநாள் மாலையில் ஐயர் வீடடிற்குச் செல்லுமபோது,

"நற்பா டலிபுரத்து நாதனே நாயினேன்
பொற்பாம் பினதடியைப் போற்றினேன்—தற்போது
வேண்டுஞ் செலவிற்கு வெண்பொறகா சுப்பத்து
ஈண்டு தருக விசைந்து"

என்னுஞ் செய்யுளைக் குறிப்புப்புத்தகத்தில் எழுதி வைத்துவிட்டுச் சென்றார். அடிகளார் வழக்கம்போல் அந்தக் குறிப்புப் புதகதகதை எடுத்துப் பார்த்தார செய்யுளைப் பதம்பிரிதது அலகிட்டு இலக்கணக்குறிப்பும் எழுதி வைத்தார் பாட்டின் கருத்து அடிகளாரின் உள்ளத்தில் பல எண்ணங்களை எழுப்பிற்று. பத்துரூபா நோட்டு ஒன்றையும் அதனோடு சோத்து வைத்தார்.

பாடஞ் சொல்லவநத ஐயர் குறிப்புப் புத்தகத்தை எடுத்துப் பார்ததார் பததுரூபா நோட்டையுங் கண்டார்; அடிகளாரைப பார்தது, "நோட்டு வைத்திருக்கிறீர்களை எதற்கு?" என்றார். அடிகளார், "பாட்டிற்கு நோட்டு வைதிருக்கிறேன்" என்றார "பாட்டின் கருத்தை நோக்கியா இப்படிச் செய்தீர்கள்? நான்பாட்டிற்கு (என் மனம் போனபடிக்கு) எழுதிவைத்து விட்டுப்போனேனே யல்லாமல் வேறொரு நோக்கமும் இல்லை," என்றார். அடிகளார்,

"நான் தங்கள் பாட்டிற்காகத்தான் பொருள் வைத்தேன்," என்றார். ஐயர் மகிழ்ச்சியோடு அந்த நோட்டை எடுத்துக் கொண்டார்.

அடிகளார தெலுங்குமொழியை நான்கு ஆண்டுகளும, ஆங்கிலததை ஏழு ஆண்டுகளும், வடமொழி தென் மொழியாகியவைகளைப் பதிணறுயாண்டுகளும் கற்றுத் தெளிந்தனர் என்ப. பேச்சுவழக்குத்தமிழ் அடிகளாருக்கு வெறுப்பை விளைவித்தது. தாமே திருத்தமாகப் பேசத் தொடங்கியதுடன் தம்மிடம் பழகுபவாகளையும் திருத்தமாகப பேசப் பழக்கினர். இதனால், அடிகளாரின் உரை அழகிய உரைநடையாக மாறியது.

அடிகளார் முயற்சியால் தமிழ்ச்சங்கம்

தமிழ்வளர்ச்சிக்கு ஏதேனும் தக்கவழி செய்ய வேண்டுமென்று அடிகளார எண்ணமிட்டுக் கொண்டிருந்தனர் 1899-ஆம் ஆண்டின் முடிவில் பாலவநததம பெருநிலகிழவரான பாண்டித்துரைத்தேவா சென்னைக்குப் போய்விட்டுத் திருமபினர். திருப்பாதிரிப்புலியூரில் இறங்கிச் சிவவழிபாடு செய்தார். ஞானியார் அடிகளின் கல்விப் பெருமை பாண்டித்துரைத்தேவர்க்கு எட்டியது. மடத்திற்குச் சென்று அடிகளாரைக் கண்டு உரையாடினர். அன்று மாலையில பாண்டிதுரைத்தேவர் தலைமையில் அடிகளார், "தமிழின் தற்காலநிலை" என்பதுபற்றிச் சொற்பொழிவு ஒன்று செய்தார். மதுரையிற் செல்வர்கள் பலர் ஒன்று சேர்ந்து தமிழ்ச்சங்கம் ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் தமிழ்வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கூறினர். பாண்டித்துரைததேவர் தமது முடிவுரையில் ஆவன செய்வதாக அறிவிததுச் சென்றார். அவர் தம் உடன்பிறந்தாராகிய பாஸ்கர சேதுபதியிடம் அடிகளாரின்

கல்விச் சிறப்பையும், நோக்கத்தையும் தெரியப்படுத்தினர். பாஸ்கர சேதுபதி திருவருணை சென்று திரும்பியபோது புலிசையில் இறங்கி அடிகளாரைக் கண்டு உரையாடினர். சேதுபதியவர்கள் தலைமையில் அடிகளார் அன்றும் ஒரு சொற்பொழிவு செய்தார். அடிகளார சொற்பொழிவு சேதுபதியைப் பெரிதும கவர்ந்தது. தமிழ்ச்சங்கம் ஒன்றை மதுரையில் ஏற்படுத்துவதாகச் சேதுபதி வாக்களித்துச் சென்றார்.

பின்னர், பாண்டித்துரைத்தேவர் அவர்களால் 1901-ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச்சங்கம் ஏற்படுத்தப் பட்டது. அதன உறுப்பாகச், "சேதுபதி கலாசாலை" என்னும் பெயருடன் கலாசாலை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. அதற்குச் சேதுபதி யரசர் பொருளுதவி புரிந்தார். அக் கலாசாலையில் பிரவேச வகுப்பு, பால பண்டித வகுப்பு, பண்டித வகுப்பு என்று மூன்று வகுப்புக்கள் அமைக்கப் பெற்றன. சங்கத்தில் இருந்து "செந்தமிழ்" என்னும பெயருடன் திங்கள் வெளியீடு ஒன்றும் தொடங்கப்பெற்றது.

செந்தமிழ்த் தொண்டு

அடிகளார் நாட்டிலே தமிழ்க்கல்வி சிறந்தோங்க வேண்டுமென்று பேராவல் கொண்டனர். தமது மடத்திலேயே "வாணிவிலாச சபை" என்னும் பெயருடன் கழகம் ஒன்றை 1903-ஆம் ஆண்டில் ஏற்படுத்தினர். பின்பு 1905-ஆம் ஆண்டில் சைவசித்தாந்த மகா சமாசத்தையும் தமது மடத்தின் ஆதரவிலேயே தொடங்கிவைத்தனர். சமாசம் செய்யவேண்டிய கடமைகளையும் தெளிவாக எடுத்துரைத்தார். அடிகளாரின் செந்தமிழ்ப்புலமையையும், சொல்லாற்றலையும் நன்குணர்ந்த பலர் அடிகளாரிடம் கல்வி கற்கத் தொடங்கினர். அடிகள், மாணவர்களின் தன்

மையை நன்குணர்ந்து அவர்கட்குப் பொருள்விளங்கத் தக்க முறையில் விரிவுரையாற்றித் தெளிவாகப் போதித்தனர். இதனால் அடிகளாரிடம் கல்வி கற்ற மாணவர்களுஞ் சிறப்படைந்து பேரும் புகழும் பெரிதும் விளங்கப் பெற்றனர். திருக்கோவலூரையடுத்த மணம்பூண்டி ம ரா குமாரசாமிப்பிள்ளை என்பவர் அடிகளாரின் மாணவர்களுள் தலைசிறந்தவராக விளங்கினர். அடிகளாரின் மாணவர்கள் பலரும் தததம் ஊர்களில் கழகம முதலியவைகளை ஏற்படுத்தித் தமிழ்த்தொண்டுபுரிதலை மேற்கொண்டனர். குமாரசாமிப்பிளளை அடிகளாரின் மடத்திலேயே "ஞானியார் மாணவர் கழகம்" எனப் பெயரிய கழகம் ஒன்றையும் அமைத்துச் சொற்பொழிவுகள், ஆண்டுவிழாக்கள் முதலியன நடத்தினர். அக்கழகத்தில் பலர் உறுபபினர்களாயினர்.

பணியாளின் மடமை

அடிகளாரின் பெருமை யாண்டும பரவியபடியால் பெருஞ் செல்வர்களும், அரசாங்க அலுவலாளர்களும் அடிகளாரின் அன்பர்களாயினர. எல்லோரும் அடிகளாரிடம் அடிமைகள் போலவே நடந்துகொள்வர. அடிகளார்க்கு அன்பராக ஓர் ரெட்டியார் இருந்தார். அவருக்கு உரிமையான பலாமரம் ஒன்றில் இருந்து ஒரு பெரிய பலாப் பழத்தை அடிகளாக்கு அனுப்ப எண்ணினர். ஓர் பணியாளிடம் கடிதமும் பலாப்பழமுங் கொடுத்து, "இந்தப் பலாப் பழத்தை அடிகளாரிடஞ் சேர்ப்பித்துவிட்டு வா," என்று சொல்லியனுப்பினர். அந்த ஆள் உலகநிலை தெரியாதவன். அவன் பலாப்பழத்தைத் தூக்கிக்கொண்டு மடத்திற்கு வந்து சேர்ந்தான். அடிகளாரிடம் கடிதத்தையும், பழத்தையுஞ் சேர்த்தான். பிறகு வாயாடத் தொடங்கினன். அவன்

அடிகளாரைப் பார்த்து, "என்னுங்க சாமி! இந்தப் பெரும் பண்ணியை என்னாலே தூக்கிக்கிட்டு வர முடியலிங்க," என்று கூறினான். அடிகளார், "பண்ணியா எந்தப் பண்ணியை?" என்று உசாவினார். பணியாள் பலாப்பழத்தைச் சுட்டிக் காட்டி, "இந்தப் பண்ணியைத தானுங்க சொல்லுறேன். இல்லாட்டா இம்மூட்டுக்கனம் இருக்குங்களா?" என்றான்.

பலாப்பழத்தைப் பன்றி என்று அந்த ஆள் கூறிய பிறகு அதனை ஏற்றுக்கொள்வதற்கு அடிகளாரின் மனம் ஒப்பவில்லை 'ரெட்டியார இததகைய மூடர்களையும் நம்மிடம் அனுப்புகிறார் அன்றோ? அவருக்கு அறிவுறுத்த வேண்டுமே,' என்று எண்ணினார் அந்த ஆளுக்கு உணவிடச் செய்தார். சிறிது பொருளும் கொடுத்தார். அவனைப் பார்த்து, "இந்தப் பழத்தைத திரும்ப நீயே தூக்கிக்கொண்டு போய் ரெட்டியாரிடம் சேர்த்துவிடு," என்று இயம்பினார். "ஏன் சாமி?" என்று கேட்டான் அந்த ஆள். அதற்குள் அடிகளார், "நீ கொண்டுவந்த பனறியைக் கடவுளுக்குப் படைப்பதற்குக் கண்ணப்ப நாயனார் போன்ற பக்குவமிலை இன்னும் எங்கட்கு ஏற்படவில்லை," என்று சொல்லித் திருப்பி விட்டார். ஆகவே, அவனே அந்தப் பலாப்பழத்தைத திரும்பவும் தூக்கிக்கொண்டுபோய் ரெட்டியாரிடஞ் சேர்த்து நடந்த செய்தியையும் கூறினான். ரெட்டியார் மறுநாள் வேறு இரண்டு மூன்று பலாப்பழங்களை வண்டியில் ஏற்றிக்கொண்டு அடிகளாரிடம் வந்தார். வேலையாள் மடமையால் கூறியவைகளைப பொறுத்தருளுமாறு வேண்டிக்கொண்டார். இந் நிகழ்ச்சியை அறிந்தவர்கள் அடிகளாரிடம் மிகு விழிப்புடன் நடந்துகொள்ளலாயினர்.

பட்டதாரியின் மடமை

நாட்டுக்கோட்டை செட்டியார் ஒருவருடைய முயற்சியால் அடிகளாரின் மேற்பார்வையில் "ஸ்ரீபாடலேசுரர் தரும பாடசாலை" என்னும் பெயருடன் பாடசாலை ஒன்று தொடங்கப்பட்டது. அப் பாடசாலையில் எம் ஏ., எல் டி. பயின்ற ஆசிரியர் ஒருவர் தலைமை ஆசிரியராக அமர்த்தப் பெற்றார். அவர் அடிகளாரிடம் வந்து திங்கள் ஊதியம் பெறுதலைச் சிறுமையாகத் தம மடமையால் எண்ணினர். அடிகளார் ஊரில் இல்லாத சமயத்தில் பாடசாலையை நடத்தும் செட்டியார்க்கு, "ஏராளமான பொருளை நீங்கள் இந்தப் பாடசாலையின் பொருட்டுச் செலவிடுகிறீர்கள். அவ்வாறாகவும் பாடசாலை, 'ஞானியார் பாடசாலை' என்று பெயர் விளங்குகிறது. ஞானியாரடிகளின் தொடர்பு இல்லாமல் நீங்கள் இந்தப் பாடசாலையை நடத்தினால், உங்கள் பெயர் விளங்கும் ஆகையினால் ஞானியாரடிகட்கு இப் பாடசாலையில் உள்ள தொடர்பை நீக்கி விடுவது நல்லது," என்று கடிதம் எழுதினார். இக் கடிதத்தைப் பார்த்த செட்டியார், "தமிழ்க்கலவி சிறப்படைய வேண்டுமென்றுதான் ஞானியார் அடிகளின் தலைமையில் பாடசாலையைத் தொடங்கினேம். அவர்களுடைய தொடர்பு இல்லாமல் பாடசாலையை நடத்த நாம் விரும்பவில்லை," என்று பதிலெழுதியதுடன் பொருள் அனுப்புதலையும் நிறுத்திக் கொண்டார். அடிகளார் ஊருக்குத் திரும்பி வருவதற்குள் அப் பாடசாலை நின்றுவிட்டது. ஊருக்குத் திரும்பிய அடிகள் பாடசாலை நின்றுவிட்டதைக் கண்டு உள்ளம் வருந்தினார்.

அறுபானுண்டு நிறைவு

அடிகளார் சிவிகையில் இவர்ந்து தென்னாடு முழுவதும் உள்ள பல சிவப்பதிகட்குஞ் சென்று இறைவழிபாடு

ஆற்றியதன்றி, ஒவ்வோர் ஊரிலும் சொற்பொழிவு நிகழ்த்தித் தமிழ்வளர்ச்சிக்குஞ் சமயவளர்ச்சிக்கும் பெருந்தொண்டு புரிந்தனர். சீமுக ஆண்டு வைகாசித் திங்கள் மூலநாளில் அடிகளார்க்கு அகவை அறுபது நிறைந்தது. அப் பெருநாளைத் திருநாளாகத் தமிழ்நாட்டு மக்கள் கொண்டாடினர். மகிபாலன்பட்டி பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் தலைமையில் மணி விழா அடிகளாரின் மடாலயத்தில் நடைபெற்றது. புலவர்கள் பலரும், அன்பர்களும் அவ்விழாவுக்குப் போந்து சிறப்பித்தனர். அடிகளார் தமது மணிவிழா நாளின் நினைவுக்குறியாகக் கலாசாலை ஒன்றையும் ஏற்படுத்தினர்.

பொன்விழா

அடிகளார் பட்டம் எய்தி ஐம்பது ஆண்டுகள் நிறைந்த பொன்விழாவுஞ் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. பொன்விழாவில் டி. கே. சிதம்பரநாத முதலியார், ரா. மு. வேங்கடசாமி நாட்டார், பண்டிதமணி கதிரேசச் செட்டியார் முதலிய அறிஞர்கள் கலந்து சொற்பொழிவாற்றினர்.

திருச்சிரபுரம் செல்லுதல்

1941-ஆம் ஆண்டில், சைவசித்தாந்த மகாசமாசத்தின் முப்பத்தாறும் ஆண்டு நிறைவு விழா திருச்சிரபுரத்தில் நடத்தப்பெற்றது. அதற்கு அடிகளார் சென்று தலைமை தாங்கினர். அறிஞர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். பின் திருச்சிரபுரம் சைவசித்தாந்தசபைக் கூட்டம் நடைபெற்றது. அடிகளார் அக் கூட்டத்திலும் தலைமை தாங்கிச் சொற்பொழிவு செய்தனர். அடிகளாரின் அன்பர்களில் ஒருவர் வீட்டில் திருமணம் நிகழ்வதாக இருந்தது. அதன் பொருட்டு அந்த அன்பர் அடிகளாரைச் சிறிது காலம் அவ்விடமே தங்குமாறு வேண்டிக்கொண்டார். அடிகளாரும் அதற்கு இணங்கினர்.

சில நாட்களில் பழநிக்குச் சென்று முருகப்பெரு மானை வணங்கிக்கொண்டு வந்துவிடலாம் என்று அடி கட்குத் தோன்றியது. உடனே அன்பர்கள் திருக்கூட்டத் துடன் பழநிக்குப் புறப்பட்டனர். அங்குச் சென்று சில நாட்கள் பழநியாண்டவனைப் போற்றிக்கொண்டு தங்கினர். அப்போது பழநிச் சைவசித்தாந்தசபையின் ஆண்டு விழாவும் அடிகளாரின் தலைமையில் சிறப்பாக நடைபெற் றது. 30-1-1942 வெள்ளிக்கிழமை அடிகளார் தண்ட பாணிப் பெருமானுக்குச் சிறப்பாகப் பூசனை நடைபெறச் செய்தனர். மலைமீது ஏறி முருகனை வழிபட்டனர்.

மறுநாள் அடிகளார் திரிசிரபுரத்திற்குப் புறப்படத் தொடங்கினர் அதிகாலை மூன்றுமணிக்குச் சிவிகையி லேறித் திருக்கூட்டத்துடன் ஆய்குடி என்னும் ஊரை அடைந்தனர். தைமாதக் குளிர் அடிகளாரின் உடலை மிகுதியாகத் தாக்கிற்று. ஓரிடத்தில் சிவிகையை நிறுத்தக் கட்டளையிட்டனர். அடிகளாரின் உடல் குளிரால் கிடு கிடென்று நடுங்கியது. ஆவி எந்தக் கணத்தில் அகலுமோ என்னும் ஐயம ஏற்பட்டுவிட்டது. அன்பர்கள் வருந்தி னர். பழநிக்கு ஆள் அனுப்பப்பட்டது. அடிகளார் வெந்நீரினால் முகம் முதலியவைகளைக் கழுவிக்கொண்டு சிவிகையில் அமர்ந்து, "சண்முகா" என்று திருநீறணிந் தனர். சிறிது வெந்நீரையும் உட்கொண்டார். பிறகு அடிகளாரின் நிலை எச்செயலும் அற்ற நிலையில் காணப்பட் டது. பழநியில் இருந்து ஆங்கில மருத்துவர் விரைந்து வந்தார். அடிகளாரின் உடல்நிலையை ஆராய்ந்து பார்த் தார். அடிகளார் வீடு பேறடைந்துவிட்டதாகத் தெரியப் படுத்தினர். அதனைக் கேட்டு அன்பர் திருக்கூட்டம் கலங் கிச் சோர்ந்தது. பிறகு அடிகளாரின் உடல் அங்கிருந்து மோட்டார்காரில் 1-2-1942-இல் திருப்பாதிரிப்புலியூரில்

உள்ள திருமடத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டது. பிறகு அங்கு அடிகளார் உடல் சமாதி செய்யப்பட்டது.

அடிகளார் தனிநூலாக எதுவுஞ் செய்யவில்லையாயினும் அடிகளாருடைய சொற்பொழிவுகள் பல புத்தகவடிவில் வெளியிடப்பட்டுள்ளன அடிகளார் தமிழ்வளர்ச்சிக்குச் செய்த தொண்டு பெரிதும் போற்றத்தக்கது.

கஉ. உ. வே. சாமிநாத ஐயர்

பிறப்பு

"சோழவளநாடு சோறுடைத்து" என்று புலவர் பெருமக்களால் புகழ்ந்து பாராட்டப்பெற்ற சோழநாட்டிலே, தஞ்சைமாவட்டத்திலே உத்தமதானபுரம் என்னுஞ் சிற்றூரிலே உ. வே. சாமிநாதையர் பிறந்தார். ஐயரின் தகதையார் பெயர் வேங்கடசுப்பையர் தாயார் பெயர் சரசுவதி வேங்கடசுப்பையர் இசைப்புலவராக இருந்ததுடன் தமிழ்ப்பயிற்சி உடையவராகவும் இருந்தார். அரியலூர் உடையார்பாளையம் முதலிய இடங்களில் பெருநிலக்கிழார்களுடைய இல்லங்களில் அவர் இசைப்புலவராக இருந்தார். ஓய்வுநேரங்களில் தம்மை நாடி வந்த மாணவர்கட்கு இசையையும், தமிழ்மொழியையும் கற்பித்தார். வேங்கடசுப்பையரின் மனைவி சரசுவதியம்மாள் பத்தாவுக்கேற்ற பதிவிரதையாக இலங்கினர். இசைப்புலமை, தமிழ்கற்பித்தல், புராணச்சொற்பொழிவு முதலியவைகளின் வருவாயே வேங்கடசுப்பையரின் வாழ்க்கைக்கு உறுதுணையாக அமைந்துநின்றது. இல் வாழ்க்கையை இருவரும் நடதிக்கொண்டிருந்தனர். 1885-ஆம் ஆண்டு பிப்ரவரித்திங்கள் பத்தொன்பதாம்

நாள் இவர்கட்கோர் ஆண்குழந்தை பிறந்தது. அக் குழந்தைக்கு வேங்கடராமன் என்று பெயரிட்டுக் களித்தனர் அப் பெயர் நாளடைவில் சாமிநாதன் என்று மாறி இறுதிவரையில் சாமிநாதன் என்பதே நிலைபெற்று விட்டது

கல்வி கற்றல்

சாமிநாதையர் தம்முடைய ஐந்தாம் அகவையில் திண்ணைப் பள்ளிக்கூடம ஒன்றில் சேர்க்கப்பட்டார். அப் பள்ளிக்கூடததில் உயிரெழுத்துமுதல் நிகண்டுவரையில் கற்றார் பிறகு தம் தந்தையாரிடத்தில் சதகம் அந்தாதி இசைப்பாடல் முதலியவைகளைக் கற்றார் அக் காலத்தில் நூல்களெல்லாம் ஓலைச்சுவடிகளாக இருந்தன. சாமிநாதையர் ஓலைச்சுவடியில் எழுத்தாணியால் எழுதுவதினும் வல்லவரானார். திண்ணைப் பள்ளிக்கூடப் படிப்பு முடிந்த பின்பு அரியலூர்ச் சடகோபஐயங்காரிடம் தமிழ் கற்கத் தொடங்கினார். அவரிடம் திருவரங்கத்தந்தாதி, திருவேங்கடமாலை, திருவேங்கடத்தந்தாதி முதலிய நூல்களைப் பாடங் கேட்டார். பிறகு செங்கணம் விருத்தாசல ரெட்டியார் என்பவரிடம சில நூல்களைப் பாடங்கேட்டார். அக் காலத்திய அறிஞர்களிற் பலர் சிற்சில நூல்களை மட்டும் பாடஞ்சொல்லக் கூடியவர்களாக இருந்தார்கள். எல்லா நூல்களையும் ஒருங்கு பாடஞ்சொல்லக் கூடியவர்களைக் காண்பது அரிது. யாரிடஞ் சென்றால் எல்லா நூல்களையும் ஒருங்கு கேட்கலாம் என்று சாமிநாதையர் எண்ணமிட்டுக் கொண்டிருந்தார். "திருவாவடுதுறை ஆதின வித்துவானாக விளங்கும் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை யவர்களிடஞ் சென்றால், நன்கு கல்வி கற்கலாம்," என்று சிலர் கூறினார்கள்; மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடஞ் சென்று பாடங்கேட்கத் தக்க சம

யம் எப்பொழுது வாய்க்கும் என்று எதிர்பார்த்துக்கொண் டிருந்தார்.

மகாவித்துவானிடம் கல்விகற்றல்

சாமிநாதையருக்கு அகவை பதினேழு நடந்துகொண் டிருந்தது. ஐயரின் தந்தை வேங்கடசுப்பையர் சாமிநாதை யரை மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களி டம் அழைத்துக்கொண்டு சென்றார். மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களைப் பார்த்து, "என் மைந்தனுக்குக் கல்வி கற்பித்து முன்னுக்குக் கொண்டுவரவேண்டும்," என்று வேண்டிக்கொண்டார். மீனாட்சிசுந்தரம பிள்ளையவர்கள் சாமிநாதையரைத் தம் மாணவராக ஏற்றுக்கொண்டார். ஐயர் பிள்ளையவர்களை நிழல்போலத் தொடர்ந்து நூல்கள் பலவற்றைப் பாடங்கேட்கலானார். ஆசிரியா இயற்றும் செய்யுட்களைப் பனையேட்டில் எழுதினார். ஐயருக்குஞ் செய்யுள் பாடும் ஆற்றல் அமைந்தது ஐயர் மகாவித்துவா னிடம் (பேரறிஞர்) ஆறாண்டுகள் கல்விகற்றார். கோபால கிருஷ்ண பாரதியார் என்பவரிடம் இசைப்பயிற்சியும் பெற் றார். பிள்ளையவர்கள் தாம் திருவாவடுதுறை செல்லும்போ தெல்லாம் சாமிநாதையரையும் உடனழைத்துச் சென்றார். இதனால் சாமிநாதையருக்குத் திருவாவடுதுறை ஆதீனப் பழக்கமும் உண்டாகியது.

ஆசிரியர்வேலை

மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் காலமான பின்பு திருவாவடுதுறை ஆதீனத்திலிவரிடம் சில ஆண்டுகள் கல்வி கற்றார். ஆதீனத்திற்குப் புதிதாக வந்து சேரும் தம் பிரான்கட்குப் பாடஞ் சொன்னார். கும்பகோணம் கல்லூ ரியில் வேலை பார்த்தவரும் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர் களின் மாணவர்களிற் சிறந்தவருமான தியாகராசச் செட்டி

யாருக்கும் சாமிநாதையருக்கும் நெருங்கிய நட்புரிமை இருந்தது. தியாகராசச் செட்டியார் தாம் கல்லூரி வேலையில் இருந்து விலகியபோது சாமிநாதையருக்கு அந்த வேலை கிடைக்குமாறு செய்தார்.

ஆசிரியத் தொழிலும் நூல் வெளியீடும்

கல்லூரியில் வேலை ஏற்றுக்கொண்ட ஐயர் மாணவர்களின் உளளங்களை எளிதில் கவர்ந்தார். ஐயர் பாடஞ் சொல்லிய முறை மாணவர்கட்கு மனநிறைவை யளித்தது. ஐயர் கல்லூரி வேலையில் இருக்கும்போது வீட்டிலும் பலர் பல நூல்களைப் பாடங்கேட்டனர். ஐயரின் தந்தை வேங்கடசுப்பையர் குடும்பக்காரியங்களை யெல்லாம் பார்த்துக் கொண்டபடியால் வீட்டிற்கு வேண்டிய பொருள்களை வாங்கிப்போடுதல் முதலிய குடும்ப வேலை எதுவும் ஐயருக்கு ஏற்படவில்லை ஐயர் பள்ளிக்குப் போவதும நூல்களைப் படிப்பதுமாகக் காலத்தைப் போக்கிக் கவலையற்றிருந்தார். ஐயருடைய நல்லியல்புகளைக் கேள்வியுற்ற தக்கார்கள் சிலர் ஐயருடன் நட்புக்கொண்டார்கள். அந்நாளில் கும்பகோணம் முனிசீபாக இருந்த சேலம் இராமசாமி முதலியார், சென்னைமாகாணக் கல்லூரியில் பேராசிரியராக இருந்த பூண்டி அரங்கநாத முதலியார் என்போர்கள் அத்தகைய தக்கார்களுட் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

சேலம் இராமசாமி முதலியார் ஐயரிடம் சீவகசிந்தாமணியைப் பாடங்கேட்க விரும்பினர். ஒரு புத்தகத்தைக் கொண்டு வந்தார். சாமிநாதையர் அந்தப் புதகத்தைப் படித்துப் பார்த்தார். பிழைகள் நிறைந்திருந்தன. அப்பிழைகளை யெல்லாம் முதலியாருக்குக் காட்டினர். அத்தகைய புத்தகத்தை வைத்துக்கொண்டு படிப்பது மிகுந்த இடர்ப்பாடாக இருக்குமென்றார். இதனைக் கேட்ட முதலி

யார், "தாங்கள இந்த நூலைத் திருத்தி அச்சுப் போடுங்கள். அச்சுப் போடுதற்காகுஞ் செலவை நான் கொடுக்கிறேன்," என்று கூறினர். அந்தப் புத்தகத்தைத் திருத்தத் தொடங்கிய ஐயருக்குப் பலவகையான ஐயங்கள் எழுந்தன. வேறு புத்தகங்களின் உதவியிலலாமல் இதனைத் திருத்துதல் அருமையென்று கண்டார். வேறு சீவகசிந்தாமணிப் பிரதிகள் எங்குளளன என்று பலவிடங்களிலும் தேடினர். பல பிரதிகள் ஒலைச்சுவடிகளாக அகப்பட்டன. ஒவ்வொரு பிரதியும் எழுதுவோரால் பலவாறு பிழையாக எழுதப் பெற்றிருந்தன. எல்லாச் சுவடிகளையும் ஒப்பிட்டு நோக்கவே சுத்தமான பிரதியை அமைப்பதற்கு வழி பிறந்து விட்டது. பிறகு சிந்தாமணியைச் செப்பஞ்செய்து 1887-ஆம் ஆண்டில் வெளியிட்டார். இதன் மூலம் ஐயருடைய புகழ் எங்கும் பரவத் தொடங்கியது.

பிறகு ஐயர் பத்துப்பாட்டு என்னும் நூலை அச்சிட்டு வெளியிட எண்ணினர். பல சுவடிகளைத் தேடிக்கண்டு பிடித்து ஆராய்ந்தார். அதனை ஒருவாறு ஒழுங்குசெய்து 1888-ஆம ஆண்டில் வெளிப்படுத்தினர். இது முதல் ஐயருடைய ஊக்கம் மேலும மவளர்ந்தது. நூல்களை வெளியிடுதலையே தமது குறிக்கோளாகக் கொண்டார். 1892-ஆம் ஆண்டில் சிலப்பதிகாரததைப் பல சுவடிகளை வைத்து ஒப்பு நோக்கிச் செப்பஞ்செய்து வெளியிட்டார். மேலுஞ் சில ஆண்டுகளில் புறநானூற்றை வெளியிட்டார். 1898-இல் மணிமேகலை வெளிவந்தது.

சென்னையை அடைதல்

1900-ம ஆண்டில் ஐயரின தந்தையார் மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலகஞ் சென்றார். பல நூல்களை வெளியிட்டுப் புகழ்பெற்ற ஐயரின் பெயர் யாண்டும் பரவி

நின்றது. அரசாங்கத்தினர் 1903-ஆம் ஆண்டில் ஐயரைச் சென்னை மாகாணக் கல்லூரிக்கு மாற்றினர்கள். இருபத்து மூன்று யாண்டுகள் குடந்தையில் வேலைபார்த்த ஐயர் சென்னையை அடைந்தார்.

ஐயரின் நூல் வெளியீட்டுப் பணிகட்குச் சென்னை தகுதியுடையதாக விருந்தது 1903-ஆம் ஆண்டில் ஐங்குறுநூறு என்னும் நூலை வெளிப்படுத்தினர். 1904-ஆம் ஆண்டில் பதிற்றுப்பத்தை வெளிப்படுத்தினர். 1918-இல் பரிபாடல் வெளியாகியது. ஐயர் திருவேட்டீசுரன் பேட்டையில் ஓர் இல்லத்தை அமைத்தார் அவ் வில்லத்திற்குத் தம் நண்பராகிய தியாகராசச் செட்டியாரின் பெயரையே இட்டுத் தியாகராச விலாசம் என்று குறிப்பிட்டார்.

சிறப்புஞ் செல்வமும்

சென்னை, அண்ணுமலைநகர், மைசூர், காசி, திருவனந்தபுரம் முதலிய இடங்களில் உள்ள பல்கலைக் கழகங்களின் தமிழ்க் குழுக்களில் ஐயர் உறுப்பினராக அமர்ந்து தமிழ்த் தொண்டுகள் செய்தார். சென்னைப் பல்கலைக் கழகத்தின் புலவர் தேர்வுக் குழுத்தலைவராகப் பல்லாண்டுகள் இருந்தார். அரசினர் ஐயரைப் பலவாறு பெருமைப்படுத்தினர். 1906-ஆம் ஆண்டில் 'மகாமகோபாத்தியாய' (பெரும்பேராசான்) என்னும் சிறப்புப்பெயரை வழங்கினர். ஆயிரம் வெண்பொற்காசுகளை நன்கொடையாக வழங்கினர். 'பாரததர்ம மகாமண்டலத்தார்' என்னும் அவையினர் 'திராவிட வித்யா பூஷணம்' என்ற பட்டப் பெயர் வழங்கினர். காஞ்சி காமகோடி பீடத்தலைவர் சங்கராச்சாரிய அடிகள் 'தாட்சிணாத்ய கலாநிதி' (தெற்கத்திய கலைச் செல்வன்) என்று பட்டம் வழங்கினர். சென்னைப் பல்கலைக் கழகம் 'டாக்டர்' (இலக்கியப் பேரறிஞர்) என்னும்

பட்டத்தை வழங்கியது. மதுரைத் தமிழ்ச்சங்கத்தார். ஐயாயிரம் வெண்பொற்காசுகள் கொண்ட பணமுடிப்பு ஒன்றினை வழங்கி மேன்மைப்படுத்தினர்.

1919-ஆம் ஆண்டில் ஐயர் மாகாணக் கல்லூரி அலுவலில் இருந்து விலகினர். பிறகு இராசா சர். அண்ணுமலைச் செட்டியாரின் வேண்டுகோட்படி அவருடைய கல்லூரியில் தமிழ்ப்பிரிவுத் தலைவராக மூன்றாண்டுகள் பணியாற்றினர்.

முடிவு

1935-ஆம் ஆண்டில் ஐயருக்கு அகவை எண்பது ஆகியது. ஐயரின் எண்பதாவது பிறந்தநாள் பலவிடங்களிலும் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. சென்னைப் பல்கலைக்கழகம் ஐயரின் தமிழ்த்தொண்டைப் பாராட்டித் தேநீர் விருந்தொன்றைக் கொடுத்தது. அப்போது திருப்பனந்தாள் காசி மடத்துத் தலைவர் அளித்த ஐயரின் படம் செனேட் மண்டபத்தில் திறந்துவைக்கப்பட்டது. அப்போது மூவாயிரம் வெண்பொற்காசுகள் கொண்ட பணமுடிப்பொன்றும் வழங்கப்பட்டது. மேலும், ஐயர் நூல் வெளியிடும் பணியில் தொழைந்து 1937-ஆம் ஆண்டில் குறுந்தொகை என்னும் நூலை வெளியிட்டார்

1942-ஆம் ஆண்டில் சென்னை நகர்மீது சப்பானியர் குண்டு வீசுவர் என்று மக்கள் அஞ்சினர். பெருஞ் செல்வர்கள் வெளியூர்கட்குச் சென்று தங்கினர். அச்சமயம் ஐயர் திருக்கழுக்குன்றத்தை யடைந்து திருவாவடுதுறை ஆதீனமடத்தில் தங்கியிருந்தார். இரண்டொரு நாட்கள் மட்டும் நோயாக இருந்த அவர் தமது எண்பத் தெட்டாம் அகவையில் இறைவன் திருவடி நீழலை எய்தினர்.

ஐயர் திரட்டிவைத்திருந்த எண்ணற்ற ஓலைச்சுவடிகள் அடையாறு என்னுமிடத்தில் உள்ள பிரமஞான

சபைக்குக் கொடுக்கப்பட்டன. அங்கு வெளி வராத நூல்கள் பலவற்றை வெளிப்படுத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஐயருடைய பூதவுடல் மறைந்தும் புகழுடல் நிலைபெற்று விளங்குகிறது. அவர் செய்துள்ள தமிழ்த் தொண்டின் பயனுய் அவர் பெயர் என்றென்றும் நிலைபெற்றுத் தமிழ்நாட்டில் விளங்குமென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை.

நூல்கள்

1 குறுந்தொகை உரை
2 பத்துப்பாட்டு உரை
3. ஐங்குறுநூறு உரை
4 பதிற்றுப்பத்து உரை
5. பரிபாடல் உரை
6 புறநானூறு உரை
7. சீவக சிந்தாமணி உரை
8. சிலப்பதிகாரம் உரை
9. மணிமேகலை உரை
10. தக்கயாகப்பரணி உரை
11. பாசவதைப்பரணி உரை
12. சங்கரலிங்க உரை
13. திருவாரூர்க்கோவை
14. சீகாழிக்கோவை
15. பழமலைக்கோவை
16. சிராமலைக்கோவை
17. கலைசைக்கோவை
18. சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள்
19. மீனுட்சிசுந்தரம் பிள்ளை பிரபந்தத் திரட்டு
20. திருமயிலைத் திரிபந்தாதி
21. திருஇலஞ்சி முருகன் உலா
22. திருக்கழுக்குன்ற உலா
23. மதுரைச் சொக்கநாதர் உலா
24. திருப்பூவணநாதர் உலா

25. திருக்காளத்தி நாதருலா
26. கடம்பர்கோவில் உலா
27. தேவை உலா
28. மான்விடு தூது
29. தமிழ்விடு தூது
30. அழகர் கிள்ளைவிடு தூது
31. வண்டுவிடு தூது
32. சிவசிவ வெண்பா
33. திருமலையாண்டவர் குறவஞ்சி
34. மகரநெடுங்குழைக்காதர் பாமாலை
35. தனியூர்ப் புராணம்
36. நன்னூல் மயிலைநாதா உரை
37. மதுரை மும்மணிக்கோவை
38. வலிவல மும்மணிக்கோவை
39. திருவாவடுதுறைக்கோவை

முதலிய நூல்களை அச்சிற் பதிப்பித்து வெளியிட்ட தோடு,

1. புதியதும் பழையதும்
2. தமிழ்நெறி விளக்கம்
3. நல்லுரைக்கோவை—நான்கு பாகம்
4. நினைவு மஞ்சரி—இரண்டு பாகம்
5. நான்கண்டதும் கேட்டதும்
6. சங்கத்தமிழும் பிற்காலமும்
7. தியாகராயச செட்டியார் வரலாறு
8. மீனாட்சிசுந்தரம் பிள்ளை வரலாறு
9. திருவள்ளுவரும் திருக்குறளும்
10. என் சரித்திரம்

முதலிய அரிய உரைநடைநூல்களையும் எழுதி வெளிப்படுத்தியுள்ளார்.

கஉ. செந்தில்நாயக அடிகள்

தோற்றம்

வண்ணச்சரபம் தண்டபாணி அடிகளின் திருமகனுகத் தோன்றியவர் செந்தில்நாயக அடிகளார். தோன்றிய காலம் ஆங்கிலம் 1884-க்குச் சரியான தாரணஆண்டு கார்த்திகைத்திங்கள் மூன்றும்நாள் விசாகவிண்மீன். தாயார் பெயர் சுந்தரத்தம்மையார் என்பது.

கல்விப்பயிற்சி

செந்தில்நாயகம், அறிவாற்றல்மிக்க அருளுடைப் பெரியாரின் அருமைத் திருமகனுகத் தோன்றியமையின் சீரிய கல்விப்பேற்றைச் சிறு பருவத்திலேயே பெற்றார். செந்தில்நாயகம் ஏழாண்டுச் சிறுவராக இருக்கும்போது தந்தையாராகிய தண்டபாணிஅடிகள் செந்தில்நாயகத்தைப் பார்த்து, "நீ உன்னுடைய ஒன்பதாவது அகவையில் என்னுடைய ஏட்டுச்சுவடியைப் படித்தல் வேண்டும். இன்றேல் உன்னை என்னிடத்திலிருந்து விரட்டி விடுவேன்," என்று அச்சுறுத்தினர். செந்தில்நாயகம் அடிகளார் கட்டளைப்படி ஒன்பதாவது அகவையில் ஏட்டுச்சுவடியைப் பார்த்துப் படிக்கத்தக்க அறிவாற்றலை யடைந்தார். அதில் பழங்கால முறைப்படி ஒற்றெழுத்துக்குமேலே புள்ளியும் ரகர எழுத்துக்குமேலே கோடும் அமைப்பது வழக்கமில்லை. அடிகளாரின் ஏட்டில் அம்முறைபற்றியே எழுதப் பட்டிருக்கும். பொருள் அறிந்தவரே படிக்க இயலும். திருவாமாத்தூர்ச் சிவபிரான்மீது அடிகளால் பாடப்பெற்ற திரிபந்தாதி, ஏகபாதத்தந்தாதி ஆகியவைகளில் நாள் தோறும் ஒவ்வொரு பாடல்வீதம் அடிகள் பாட்டும் பொருளும் கூறுவார். செந்தில்நாயகம் அவைகளைத் தம் கைப்பட ஏட்டில் எழுதிக்கொள்ளுவார். இவ்வாறே

இரண்டு நூல்களும் முடிந்தன. இவைகளைக் கற்றதோடு கற்ற நாள்களில் பள்ளிக்குஞ் சென்று கல்விபயின்றார். கடவுளர்களின் அருமறைகளை அடிகள் செந்தில்நாயகத் திற்கு உபதேசித் தருளியதுடன் தெய்வவழிபாடு செய்தல் தமது தெய்வவழிபாட்டிற்குத் தொண்டுசெய்தல் ஆகியவைகளிலும் பழக்கப்படுத்தினர்.

விளையாட்டு வினை

அடிகளார் மடாலயத்தின் தோட்டத்தில் கொத்த வரை பயிரிட்டிருந்தனர். அது நன்கு செழித்துத் தளதள வென்று வளர்ந்திருந்தது. ஒருநாள் மாலையில் தோட்டத் திற்குச் சென்ற செந்தில்நாயகம் சிறு கழி ஒன்றால் ஒரு கொத்தவரையை விளையாட்டாகத் தட்டினார். அது 'சடக்' கென்று ஒடிந்துவிட்டது. இவருக்கது விளையாட்டாக இருக்கவே எல்லாச்செடிகளையும் தட்டிவிட்டார். மறு நாள் தோட்டத்திற்குச் சென்ற அடிகள் கொத்தவரைச் செடிகளின் நிலைமையைக் கண்டு வயிறெரிந்தனர். யாரோ பொறுமை கொண்டு இவ்வாறு செய்துள்ளார்கள் என்று மூடிவுகட்டிய அடிகள் அன்பர் ஒருவரைக்கொண்டு துப்ப றியச் செய்தார். துப்பறியத் தொடங்கிய அன்பர் குழ்ச் சித் திறம் உடையவர். அவர் சிறுவராகிய செந்தில்நாயகத் தைத் தூக்கித் தோளில்வைத்துக்கொண்டு, "நம் தோட் டத்தில் போடப்பட்டிருக்கிற கொத்தவரைச்செடிகள் கொழுத்துவளர்ந்துள்ளன. அவைகளைப் பாதியளவில் முறித்துவிட்டால் நன்றாகக் காய்க்கு,"மென்றனர். உடனே செந்தில்நாயகம், "நான் நேற்றே எல்லாவற்றையும் முறித்து விட்டேன்," என்று கூறினார். இதனை அண்மை யில் இருந்து கேட்டுக்கொண்டிருந்த அடிகள், "உன்னு டைய வேலைதானா?" என்று கூறித் தண்டிக்கத் தொடங்கி இரண்டொரு பிரம்பம்பழங்கள் அளித்ததுடன்,

"கொத்த வரைச்செடியைக் கொண்டையள வாய்மூறிதத
கைததலமே என்சொல் கருதிக்கேள்—பத்தர்க்கு
அருள்புரியும் ஆனைமுகத தம்மானைக் கும்பிட்டு
இருள்வினைகள் செய்யா திரு"

என்னும் வெண்பா ஒன்றையும் இயற்றி அதனை மனப் பாடஞ்செய்து ஒப்புவிக்கக் கட்டளையிட்டனர். செந்தில் நாயகர் அறிவாற்றல் மிக்காராதலின் அதனை உடனே ஒப்பு வித்து விட்டனர்.

செய்யுள் இயற்றுதல்

திருவிழாக்காலங்களில் ஆமாத்தூர்ச் சிவபிரான் திரு வுலா வரும்போது அடிகள் புதுப்பாடல் இயற்றிப் பணிதல் உண்டு. அடிகள் ஒருநாள் செந்தில்நாயகத்தைப் பார்த்து, "விடைப்பரிமே லாமாத்தூர் வீதிவலம் வருவானே" என்ற சற்றடி ஒன்றைக்கொடுத்துப் பொருட்செறிவும் தொடர்பும் உடையதாகச் செய்யுளைப் பாடிமுடிக்கக் கட்டளையிட்ட னர். உடனே செந்தில்நாயகம்,

"அடைக்கலமே எனவுனைநான்
அடைந்திட்டேன் ஆதலினால்
தடைப்படுத்தா துன்னுடைய
தண்ணருட்பே ரீந்தருள்வாய்
சடைத்தலையிற் கங்கையுடன்
சந்திரக்கன் றணிந்ததொருவெள்
விடைப்பரிமே லாமாத்தூர்
வீதிவலம் வருவானே."

என்ற பாடலைச்செய்து முடித்தனர். இதனைக் கேட்டவர் கள் மிக வியப்படைந்தார்கள். "குலவித்தை கல்லாமல் பாகம்படும்," என்பர். அடிகள்குலம் கவிஞர்குலம் அன்றே?

ஒருநாள் பலபேர்கூடிப் பாடல்களைத் திருத்துதல் முதலிய வேலைகளை இரவில் செய்துகொண்டிருந்தனர்

இளைஞராகிய செந்தில்நாயகம், "தூக்கம் வருகின்றது" என்று கூறினர். அடிகளார் உடனே,

"சத்தி வடிவேற்கைச சண்முனைச் சந்ததமும்
நத்திஎழுத் தாறும் நவின்றிட்டேன் — பத்தியுடன்
ஆக்கம் பெருக்கி அருள்விளக்கும் மெஞ்ஞானத்
தூக்கம் வருகின்றது."

என்று ஒரு செய்யுளைப் பாடினர்.

படிப்புத்திறமை

பள்ளிமாணவர்களின் கல்விநிலையை ஆராய்ந்தறி தற்பொருட்டு ஆய்வாளர் (பள்ளிக்கூடங்களின் இன்ஸ் பெக்டர்) வந்தார். பள்ளிக்கூடத்துத் தேர்வுவேலையை முடித்துக்கொண்டு தண்டபாணி அடிகளைக் காணவந்தார். அடிகள் ஆய்வாளரைப் பார்த்துச், "செந்தில்நாயகம் தங் கள் கேள்விகட்குத் தக்க பதிலுரைத்தானா?" என்று உசா வினர். ஆய்வாளர் "ஆம்" என்று உரைத்தார். பிறகு அடி கள், "நமது போதனைத் திறனையும் பாருங்கள்," என்று உரைத்துத் தில்லைத் திருவாயிரம் என்னும் தமது நூலைச் செந்தில்நாயகத்திடம் கொடுத்துப் படிக்கச்சொன்னர். செந்தில்நாயகம சந்தத் திருப்புகழ் முதலிய பெருஞ் செய் யுட்களை இனியமுறையில் இசையுடன் படித்தார். ஆயவா ளர் செந்தில்நாயகத்தின் படிப்புத்திறமையைக் கேட்டு வியந்தார். "என்னுல்கூட இவ்வாறு படிக்கமுடியாது," என்று பாராட்டிக்கூறினர். இவ்வாறு செந்தில்நாயகத் தின் இளமைப்பருவம் கழிந்தது. தண்டபாணி அடிகள் காலமானர்.

ஆதினத்திற்கு அழைத்தல்

தந்தையார் காலமான பின்பு செந்தில்நாயகர், அடிக ளாரின் அடியவர் பலரின் துணையுடன் உறைந்திருந்தனர்.

அகவை இருபதாகியது. அந்நாளில் திருவாவடுதுறை ஆதீனத்தார், ஆதீனத்தின் சின்னப்பட்டத்திறகு ஒரு வரைத் தேடினர். சேந்தில்நாயகரின் அறிவாற்றல் முதலியவைகளைக் கேள்வியுற்று இவரை அழைத்துச்செல்ல முயன்றனர். தாயாராகிய சுந்தரத்தம்மையாருக்கு மகனை விட்டுப் பிரிவதற்குச் சிறிதும் விருப்பமில்லை. பிறந்த நாட் குறிப்பை ஆராய்ந்து நோக்கியபோது அக்குறிப்பும்,

"நாட்டில் ஒரு மடாதிபதி இவனே நாடும்
நங்குழந்தாய் செயிற்கெடுதி திண்ணம் திண்ணம்"

என்று மாறுபாடாகவே கூறிற்று. ஆகவே, ஆதீனத்தார் தமது முயற்சியைக் கைவிட்டனர். சேந்தில்நாயகர் தமது ஆதீன வளர்ச்சிக்கான செயல்களை மேற்கொண்டார்.

ஆலயத்தொண்டு

தண்டபாணியடிகளின் மாணவராகிய இராமாநந்த அடிகள் தம் குருமூர்த்திக்கு ஆலயம் முதலியவைகளை அமைக்க எண்ணினர். தம் அடியவர்களைப் பொருளுடன் அனுப்பினர். சேந்தில்நாயகர் உடனிருந்து ஆலயம் முதலியவைகளை இனிதுமுடித்தார் இராமாநந்த அடிக ளோடு தொடர்புகொண்டு நெருங்கிப் பழகியிருந்தார்.

நூல்கள் இயற்றல்

தண்டபாணி அடிகளைப் போலவே சேந்தில்நாயகரும் திருப்புகழ்ச் சந்தப்பாக்கள் முதலியவைகளை இயற்றுவதி லும் நூல்களைப் பாடுவதிலும் சிறந்து விளங்கினர். தண்ட பாணி அடிகளின் வரலாற்றை அவர் இயற்றிய குருபரத தத்துவ நூலின் துணையும் தமது கேள்வியும், அவரது நூலின் ஆதரவும் கொண்டு 440 செய்யுட்களில் பாடி அச்சிட்டு ஏழுநாள் வரை படித்தி அரங்கேற்றஞ் செய்தார். தண்ட பாணி யடிகளால் திருத்தொண்டத் தொகையைப்போல்

தொகுத்துச் சுட்டிப் பாடப்பெற்றிருந்த கௌமாரத் தொகையை விரித்துக் கௌமாரபுராணம் என்னும் பெயருடன் புராணமாகவும் பாடிமுடித்தார். தண்டபாணியடிகளால் இயற்றப்பெற்ற புலவர்புராணம், அருணகிரிநாதர்புராணம், திருச்செந்திற்கோவை, கௌமாரவிஜயம், வேலலங்காரம், மயிலலங்காரம், ஆறெழுத்தலங்காரம், முருகாநந்தலகரி முதலிய பல நூல்களே அன்பர்களின் உதவிகொண்டு அழகியமுறையில் பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார்.

குணநலன்கள்

செந்தில்நாயக அடிகள் சீரிய குணநலங்கள் அமையப் பெற்றவர். தந்தையும் குருவுமான தண்டபாணியடிகளின் கௌமார நூற்கருத்தையே பேசுவதும் அவர் வடிவையே எண்ணுவதும் அவரது திருகோயிலில் பூசனை முதலிய வழிபாடுகள் செய்வதுமே இவருக்குத் தொழிலாக இருந்தது இவர் எவரிடத்திலும் இனிமையும் எளிமையுமாகப் பழகும் பண்பினர். சினம் என்பதை இவரிடஞ் சிறிதும் காணமுடியாது. மிகுந்த மனவருத்தம் உள்ளத்தில் இருந்தால் ஓரளவுதான் வெளிப்படும். அதனையும் உடனே மாற்றி விடுவார். வெளிப்பகட்டை இவர் ஒரு சிறிதும் விரும்பமாட்டார். இவரை மூன்பின் அறியாதவர் பார்ப்பதற்கு வருவார்கள். "சுவாமிகள் எங்கே?" என்று இவரையே கேட்பார்கள், "உள்ளே இருக்கிறார்கள்" என்று செந்தில் நாயக அடிகள் பதிலுரைப்பார். வந்தவர்கள், "எப்போது பார்க்கலாம்?" என்று கேட்டால் பூசையின்போது "பார்க்கலாம்" என்பார். வந்தவர்கள் பூசைவரையில் இருப்பார்கள்; பிறகுதான் வந்தவர்கள் உண்மையை உணர்வார்கள்.

இறுதி

சென்தில்நாயக அடிகளாரின் தாயார் இறைவன் திரு வடிநீழலே யடையுங்காலம் நெருங்கியபோது, சென்தில் நாயகரை அழைத்து, "அப்பா நான் இறந்தபிறகு இரங் கற்பா பாடுவாயன்றோ? அதனை இப்போதே பாடு; நான் கேட்டுவிடுகிறேன். பிறகு கேட்க முடியாதன்றோ?" என்றார். சென்தில்நாயகர் அதற்கு இணங்கவில்லை. அடிக ளார் சித்திரபானு ஆண்டில் (1942) சித்திரைத்திங்கள் 19-ஆம் நாள் ஊனுடலை ஒழித்து முருகப்பெருமானின் திருவடிநீழலை அடைந்தார்.

சென்தில்நாயக அடிகள் இயற்றிய நூல்கள் :-

1. தண்டபாணி யடிகள் புராணம் (பாடல்)
2. தண்டபாணியடிகள் புராண உரைநடை
3. கௌமாரத் திருவந்தாதி
4. கௌமாரபுராணம்
5. அழகியநாதமாலை
6. முருகன் கட்டளைக்கலித்துறையந்தாதி
7. சித்திவிநாயகர் பதிகம்
8. திருப்புகழ்ப்பதிகம்
9. இராமாநந்த பிரதாபசிந்து
10. மயிலம் முருகக்கடவுள் நவரத்தினத் திருப்புகழ்
11. ஆமாத்தூர் முருகன்வண்ணமஞ்சரி
12. இராமாநந்தசுவாமிகள் வரலாறு

கச. கந்தசாமி அடிகள்

கொங்குநாட்டில் உள்ள கோயம்புத்தூரை யடுத்த கணபதியூர் என்னும் சிற்றூரிலே கங்காகுலம் என்னும் கவுண்டர்குலத்திலே கந்தசாமி அடிகள் ஆங்கிலம் 1892-க்குச் சரியான நந்தன ஆண்டு சித்திரைத்திங்கள் 8-ஆம் நாள் பூராடவிண்மீனிலே நிலவுலகில் தோன்றியருளினார். தந்தையார்பெயர் வேங்கடரமண கவுண்டர். தாயார்பெயர் குட்டியம்மையார். சிரவணபுரம் கௌமார மடாலயத்தை நிறுவிய உயர்திரு. இராமாநந்த அடிகள் என்னும் பெரியாரது உடன்பிறந்தார் மைந்தர் இவர்.

தக்க காலத்திலே கல்விப்பயிற்சி செய்விக்கப் பெற்றார். திண்ணைப்பள்ளி முதலியவைகளில் சின்னாள் கல்விபயின்றார். ஆங்கிலப் பாலபாடத்துடன் இவரது பாடசாலைக் கல்வி முடிந்துவிட்டது. பெற்றோரும் காலமாயினர். கந்தசாமியார் பள்ளியைவிட்டும் படிப்பை விட்டிலர் திருக்குறள், திருவிளையாடற்புராணம், திருத்தொண்டர்புராணம், தேவாரம் முதலியவைகளைக் கற்று அவைகளிலெல்லாம் வல்லவரானர். அடிக்கடி இராமாநந்த அடிகள்பாற் சென்று நெருங்கிப் பழகியமையின் துறவிகள் கூட்டுறவும் நன்னிலைக்கண் ஊக்கமும் ஏற்பட்டு வளர்ந்து வரலாயின.

கந்தசாமியார் துறவறத்தை மேற்கொள்ளத் துணிந்தார். தமது உடல் பொருள் ஆவி ஆகிய மூன்றையும் இராமாநந்த அடிகளுக்குக் காணிக்கையாகக் கொடுத்து அவருடைய திருவடிகளிலே அடியற்றமரம்போல் வீழ்ந்து வணங்கினர். இராமாநந்த அடிகள் கந்தசாமியாரின் உள்ளம் துறவுநிலையை மேற்கொண்டொழுகற்குப் பண்பட்டிருத்தலைக் கண்டார். கானவன் வலையிற்பட்டுக் கைதப்பியோடும் மான்போல் ஓடிவந்து தம்மை அடைந்த

கந்தசாமியாருக்கு வாழ்த்துரைகள் வழங்கினர். ஆறெழுத் தருமறையை அன்புடன் கூறி அருளுரை புகன்றார். அது முதல் கந்தசாமியார் தவவாழ்க்கையை மேற்கொண்டு பிறவிக்கடலைப் போக்கமுயன்றார்.

கந்தசாமியாரின் கல்விஅறிவு, ஒழுக்கம், புலமை முதலிய நல்லியல்புகளைக்கண்ட இராமாநந்தஅடிகள் இவரைப் பழநிப்பதிக்கு அழைத்துச்சென்று கல்லாடை வழங்கித் துறவுக்கோலத்தை அருளியதுடன் தமக்குப் பின் தமது கௌமாரமடாலயத்தைப் பாதுகாக்கும் தலைமைப் பதவியையும் வழங்கியருளினர்.

பின்னர்க் கந்தசாமியடிகள் சிறிது மலையாளமொழிப் பயிற்சியும் வடமொழிப்பயிற்சியும் பெற்றார். செய்யுள் செய்யும் ஆற்றல் கந்தசாமிஅடிகட்கு இயற்கையாகவே அமைந்திருந்தமையின் கணக்கற்ற தமிழ்ச்செய்யுட்களைப் பாடலானார். மலையாளமொழியில் இருந்த பக்தமாலா என்னும் நூலைத் தமிழில் மொழிபெயர்த்துப் பக்த மான்மியம் என்னும் பெயருடன் தமிழில் பாடிமுடித்தார். பிள்ளைத்தமிழ், கலம்பகம், அந்தாதி, கோவை முதலிய நூல்களையும் இயற்றினர்.

நூல் இயற்றும் காலம் போக எஞ்சிய காலங்களில் அன்பர்களுக்கு நல்லுரைவழங்கல், கல்விபோதித்தல் இறைவழிபாடுசெய்தல், மனத்தை ஒருவழிப்படுத்தித் தவம்புரிதல் முதலிய மேலான் செயல்களையே எந்நேர மூஞ் செய்ததே அன்றித் தமது தவப்பொழுதை ஒரு கண மாயினும் அவப்பொழுதாக்கார். அடிகள் அன்பையும் அருளையுமே உடலாகப் பெற்றவராய்த் திகழ்ந்து நின்றார். கந்தசாமிஅடிகளின் நல்லுரையால் பல அன்பர்கள் கொலை புலைதீர்ந்து நிலைபெற்ற நல்லறிவாளராயினர்.

கந்தசாமிஅடிகளாற் பாடப்பெற்ற பாடல்கள் பதினன்காயிரம். அவைகள் யாவும் பதிப்பாகி வெளிவந்து உலவுகின்றன. இயற்றிய நூல்களின் பெயர்கள்.

1. பக்தமான்மியம்
2. சங்கராச்சாரியார் வைபவம்
3. பேரூர்க்கலம்பகம்
4. பேரூர்க்கோவை
5. காரமடைத்தல புராணம்
6. அன்னியூர்த்தல புராணம்
7. கௌசைத் தலபுராணம்
8. பேரூர் பசசைநாயகிபிள்ளைத்தமிழ்
9. பேரூர் சாந்தலிங்கர்பிள்ளைத்தமிழ்
10. இராமாநந்தர் பிள்ளைத்தமிழ
11. சிரவை முருகன்பிள்ளைத்தமிழ்
12. பத்திராசலம் இராமர்பிள்ளைத்தமிழ
13. குருந்தமலை முருகன்பிள்ளைத்தமிழ்
14. திருவஞ்சைக்களம் பிரபந்தங்கள்
15. பழநிமலைப் பிரபந்தங்கள்
16. அவிநாசிப் பிரபந்தத்திரட்டு
17. மருதமலைப் பிரபந்தத்திரட்டு
18. இரத்தினசலப் பிரபந்தம்
19. வண்ணத்திரட்டு
20. திருப்புகழ்த் திரட்டு
21. முருகன் ஏகபாத அந்தாதி
22. விநாயகர் யமக அந்தாதி முதலியன.

கரு. காஞ்சி நாகலிங்கமுனிவர்

தோற்றம்

காஞ்சிமாநகர்க்கு அண்மையில் உள்ள ஏகனும் பேட்டை என்னுஞ் சிற்றூரில் நாகலிங்கமுனிவர் 1865-ஆம் ஆண்டு ஐப்பசிதிங்கள் ஆறும்நாள் தோன்றினர். முனிவரின் தந்தையார்பெயர் சரவணப்பெருமாள் முதலியார்; தாயார்பெயர் மனோன்மணி அம்மையார். குலம் செங்குந்த குலம்.

கல்வி

முனிவர், ஐந்தாவது அகவையில் பள்ளிக்கு அனுப்பப் பெற்றார். பள்ளிக்கல்வியை, கச்சபாலயதேசிகர் சீனிவாசமுதலியார் என்பவர்களிடங் கற்றார். பன்னிரண்டாம் அகவையில் குலத்தொழிலாகிய நெய்தல் தொழிலில் ஈடுபட்டு இரண்டோராண்டுகள் அத் தொழிலைப் புரிந்தார். முனிவர், சிறுவராயிருக்கும்போதே தந்தையார் காலமானார்.

சென்னையில் தமிழ்க்கல்வி

பிறகு, முனிவர்உறவினர் சார்பில் சென்னைக்குச் சென்றார். தமிழ்மொழியைக் கற்கவேண்டும் என்னும் அவா முனிவருக்குண்டாகியது. அந்நாளில் சென்னையிற் செந்தமிழ்ச்செல்வர்களாக விளங்கிய பூவை கலியாண சுந்தர முதலியார், மயிலை சண்முகம்பிள்ளை, இராயபுரம் சக்காராவ், திருவண்ணுமலை ஆதீனம் குன்றக்குடி ஆறுமுகத்தம்பிரான் முதலியவர்களிடம் இலக்கண இலக்கியங்களை நன்குபயின்றார். காஞ்சிபுரம் முத்துக் கச்சபேச்சுர சிவாச்சாரியாரிடம் சைவதீட்சை பெற்றார்.

சைவத்தொண்டு

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தைத் தொடங்கி வளர்ப்பதில் முனிவர் பெரும்பங்கு கொண்டார். சென்னை அருணாசலேசுரர் திருக்கோயில் மண்டபத்தில் அமைக்கப் பெற்று நடந்த மெய்கண்ட சந்தான சபையின் துணைத் தலைவராக அமர்ந்து பல ஆண்டுகள் பணிபுரிந்தார். இச் சபையின் ஆதரவில் தேவார பாடசாலை ஒன்றையும் நடத்தினர். மெய்கண்டான் கல்லூரி என்னும் பெயருடன் கல்லூரி ஒன்றை ஏற்படுத்திச் சைவசித்தாந்த நூல்களைப் பலருக்குங் கற்பித்தார். கோவிலில் நிகழ்ந்த பூசனை முதலியவைகளினும் முனிவர் பங்குகொண்டார்.

நூல்கள் வெளியிடுதல்

பதிப்பகம் ஒன்றை ஏற்படுத்திப் பல நூல்களை அச்சிற் பதிப்பித்து வெளியிடும் பணியை மேற்கொண்டார். இந்த அருஞ்செயலுக்குத் திருவாவடுதுறை ஆதீனத்தலைவர்களின் பேருதவியுங் கிடைத்தது. பாண்டித்துரைத் தேவர் அவர்களின் வேண்டுகோட்படி சிவஞானபோதச் சிற்றுரையை அழகிய பதிப்பாக வெளியிட்டார். சிவஞான போதம் உள்ளிட்ட சைவசித்தாந்த நூல்கள் பதினான்கினையும் உரையுடன் ஒரே தொகுதியாகத் திருவாவடுதுறை ஆதீன மரபின்படி மெய்கண்டசாத்திரம் என்னும் பெயரோடு வெளிப்படுத்தினர். இந்நூல் வெளியீட்டின் சிறப்பைப்பார்த்துத் திருவாவடுதுறை அம்பலவாண தேசிகர் முனிவருக்கு 'மெய்கண்ட சாத்திரப் பிரசாரகர்' என்னுஞ் சிறப்புப்பெயர் வழங்கினர். திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் என்னும் நூல்களைத் திருப்பனந்தாள் காசி மடத்தலைவர் காசிவாசி சொக்கலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்களுடைய துணையைக்கொண்டு தனியாகவும்

வெளிப்படுத்தினர். தாயுமானவர் பாடல், பன்னிரு திருமுறை, காஞ்சிப்புராணம், காஞ்சிக்கட்டளைக் கலித்துறைப் புராணம், திருப்புகழ், செங்குந்தர் பிரபந்தத்திரட்டு, தமிழ் அகராதி முதலிய நூல்களையுஞ் செவ்விய முறையில் அச்சிட்டு வெளிப்படுத்தினர்.

செங்குந்தமித்திரன்

தான் தோன்றிய செங்குந்த குலமக்களின் முன்னேற்றத்தின் பொருட்டு முனிவர் அரும்பெருந் தொண்டு செய்தார். ஆங்காங்கு சங்கங்கள் அமைக்கச்செய்தார். அவைகளின் விழாக்களில் தலைமைதாங்கிக் குலமுன்னேற்றத்திற்கான வழிகளையெல்லாங் கூறினர். செங்குந்தமித்திரன் என்னும் பத்திரிகையைத் தொடங்கித் தாமே சின்னாள் நடத்தினர். பிறகு தக்கார்களிடம் அப்பொறுப்பை ஒப்புவித்தார். 1927-இல் தொடங்கப் பெற்ற அப் பத்திரிகை இன்றுவரை நன்கு நடைபெற்று வருகிறது.

திருமணமும் மக்கட்பேறும்

தக்க காலத்தில் முனிவர்க்குத் திருமணம் நடைபெற்றது. குடும்பத்துடன் தென்னாட்டுச் சிவப்பதிகள் பலவற்றிற்கும் காசி முதலிய இடங்கட்கும் முனிவர் இறைவழிபாட்டுச் செலவாகச் சென்றார். தென்னாட்டுச்செலவின் போது திருவாவடுதுறை ஆதீனத்தாரும், இராமநாதபுரம் பாற்கரசேதுபதி மன்னரும் பிறரும் வழிச்செலவில் உதவிபுரிந்தனர். வடநாட்டிற்குச் சென்றபோது திருவாவடுதுறை ஆதீனத்தாரே பேருதவி புரிந்தார்கள். முனிவர்க்கு ஆண்மக்கள் இருவரும், பெண்மகள் ஒருத்தியும் தோன்றினர்.

நூல்கள் இயற்றல்

திருத்தணிகை வண்ணமஞ்சரி, தென்கடம்பன் துறை பதிற்றுப்பத்து, வடபழனி மயிலேறும்பெருமாள் மாலை, இரட்டைமணிமாலை, திருவாமாத்தூர் வண்ணங்கள், திருவெறும்பியூர்ப்புராணம் முதலியன முனிவரால் இயற்றப்பெற்ற நூல்கள்.

சிறப்புப்பெயர்கள்

காஞ்சிபுரம் ஞானப்பிரகாசஅடிகள்பால் துறவு பெற்றபின் நாகலிங்கமுதலியார் என்னும் பெயர் நாகலிங்கமுனிவர் என மாறியது. ஞானப்பிரகாச அடிகளால் கச்சியடிகள் என்ற பட்டமும், இலங்கைத் திரு. பொன்னம்பலம்பிள்ளையவர்களால் வித்தியாபிரசாரகர் என்ற பட்டமும் கொடுக்கப்பட்டன. வண்ணத்தின் இலக்கணங்களை முனிவர், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் என்னும் முருகதாசசுவாமிகளிடத்திற் பயின்று வண்ணம் பாடுவதில் வல்லவராக ஆனர். அப்பொழுது மேற்படி சுவாமிகளால் வண்ணக்களஞ்சியம் என்னும் சிறப்புப்பெயர் கொடுக்கப்பட்டது.

முத்துவிழா

1944-ஆம் ஆண்டு சூலைத்திங்கள் முதல்நாளில், சென்னை கோகலேமண்டபத்தில் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் தலைமையில் முத்துவிழாச் சிறப்பாக நடைபெற்றது.

இறுதி

1950-ஆம் ஆண்டு சூலைத்திங்கள் ஒன்பதாம் நாள் தமது எண்பத்தாறுவது அகவையில் முனிவர் இறைவன் திருவடிநீழலை எய்தினர்.

ஈசுர. முத்துச்சாமிக் கோனர்

பிறப்பு

முத்துச்சாமிக்கோனர் என்பவர், சேலம் மாவட்டத் திலே திருச்செங்கோடு என வழங்கும் திருக்கொடிமாடச் செங்குன்றூரிலே ஆயர்குலத்தில் 1858-ஆம் ஆண்டு ஆனித் திங்களிலே தோன்றினர்.

கல்வி

இளமைப்பருவத்தில் திண்ணைப்பள்ளியிற் சேர்ந்து கல்விகற்றார். பிறகு தெலுங்கு, வடமொழி ஆகிய மொழி களேயுந் தாய்மொழிகளாகத் தக்கார்பால் கற்றுத் தேறி னர். பாடல்களே மனப்பாடஞ்செய்யுந் திண்மை கோனு ருக்கு நன்கு அமைந்திருந்தது. எவரேனும் வெண்பாப் பாடினால் கோனர் அதனைக் கருத்துடன் கேட்டுக்கொண் டிருப்பார். பிறகு, "அன்புகூர்ந்து இந்தப் பாட்டை இன் னொரு தடவை இயம்புங்கள்," என்பார். இரண்டாவது முறையும் அப்பாட்டுக் கூறப்பெற்றபின் கோனர் அதனைத் திருத்தமுறக் கூறிவிடுவார். வெண்பாவை இருமுறை கேட்ட அளவில் கற்றுக்கொண்டு விடுதல் வேண்டும். அவ் வாறு கற்றுக்கொள்ளாதவனை மந்தமதியினன் என்று சான்றோர் சாற்றுவர். "வெண்பா இருகாலிற் கல்லானை...." என்பது ஔவையார் திருவாக்கு. கோனர் இசைப்பயிற் சியும் நன்கு பெற்றிருந்தார். நகைச்சுவை பொருந்தப் பேசும் ஆற்றலும் அமையப்பெற்றவர். இறைவழிபாடு மூத லியவைகளிற் கோனர் பெரும்பங்கு எடுத்துக்கொண்டு ஆடியும் பாடியும் மக்கட்கு மகிழ்ச்சி யளிப்பார்.

பாரதம், இராமாயணம், திருக்குறள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலிய இலக்கிய நூல்களேயும், நன்னூல், தொல்காப்பியம், அகப்பொருள், புறப்பொருள் முதலிய இலக்கண நூல்களேயும்; திருவிளையாடற்புராணம், கந்த

புராணம், மச்சபுராணம், கூர்மபுராணம், இலிங்கபுராணம் முதலிய புராணங்களையும் தக்காரிடத்திலே பாடங்கேட்டுப் புலமையிற் சிறந்தவரானார். சைவநூல்கள், சைவத் திருமுறைகள் ஆகியவற்றினும் நல்ல திறமை பெற்றார்.

கல்வித்தொண்டு

சித்தூர்ப் பெருநிலக்கிழார் ஒருவருடைய அரும் பொருட்டுணையால் 'விவேக திவாகரன்' என்னும் பதிப் பகத்தை ஏற்படுத்தினார். அப் பதிப்பகத்தில் இருந்து 'விவேக திவாகரன்,' 'கொங்குவேள்' என்னும் பத்திரிகைகளை வெளிப்படுத்தினார். மேலும் புத்தகங்கள் பலவற்றையும் அச்சிற் பதிப்பித்து வெளியிட்டார். கொங்குநாட்டு ஊர்த்தொகை, மங்கல வாழ்த்து, அர்த்தநாரீசுவரர்மாலை, வாழி, கருணைரமாலை, செங்கோட்டுமாலை, சிவமலைக் குறவஞ்சி, சிவமலைப்புராண உரை, அபிடேகமாலை, திருச்செங்கோட்டுப்புராணம், திருச்செங்கோட்டுக்கலம்பகம், திருச்செங்கோட்டுப்பிள்ளைத்தமிழ், அர்த்தநாரீசுவரர் பதிகம், மோளூர் பாம்பலங்கார வருக்கக்கோவை, கபிலை மலைக் குழந்தைக்குமரர் வருக்கக்கோவை, மல்லசமுத்திரம் சோழீசுவரர்மல்லிமாலை முதலிய பல நூல்களைத் தமது அச்சுக்கூடத்தில் பதிப்பித்து வெளியிட்டார்.

அறிஞர்க்குதவி

அந்நாளில் புலவர்கள் கொடையாளர்களைத் தேடி ஊரூராகச் செல்வர். அத்தகையோர் முத்துச்சாமிக் கோனர் அவர்களிடம் ஏகுவர். சிற்றுதவியாக இருப்பின் கோனர் தாமே அவ்வுதவியை முடித்தனுப்புவர். பெரும் புலவராய்ப் பேருதவியை நாடிச் செல்பவர்களைத் தக்க செல்வர்பால் அழைத்துச் சென்று அப் புலவரின் பெருமையைச் செல்வர்க்கறிவித்து நன்கொடை வழங்கச் செய்வார். அச்செல்வர்கள் கோனரிடம் பெருமதிப்பும், பேரன்பு

கொண்டவர்களாதலினும் கோனூர் மனங் கோணுவாறு நடந்துகொள்வர். மற்றும் விருந்தினர்ப் பேணுவதிற் கோனூர் பேராரவம் உடையவர். தம் இல்லத்திற்கு வரும் புலவர்க்கும் பிறர்க்குந் தக்காங்கு விருந்து நடத்திக் களிப் பிப்பார். விருந்தோம்புங் கடமை தமிழர்கட்குத் தனி யுரிமையெனின், தண்டமிழ்ப் பாவாணர்கட்குப் பெருங் கடமையும் உரிமைப்பண்பும் ஆகுமன்றே?

அட்டாவதானம்

கோனூர் காலத்தில் யாழ்ப்பாணம் மேலைப்புலோலி நா. கதிரைவேற்பிள்ளை செந்தமிழ்நாட்டிலே சொற் பொழிவுகளும் அட்டாவதானமுஞ் செய்துகொண்டிருந் தார். கோனூர் கதிரைவேற்பிள்ளையிடங் கற்று அவதான முஞ் செய்தற்குப் பழகிக்கொண்டார்.

செப்புப்பட்டயம்

செப்புப்பட்டயம், கல்லெழுத்து முதலியவை அகப் படும்போதெல்லாம் அவைகளை வாங்கித்தொகுத்து வைத்தார். அதனால் தமிழ்வேந்தர்கள் கடல்தாண்டிப் போர்செய்து நாடுபிடித்து ஆட்சிசெய்தனர் என்னுஞ் செய்திக்கு ஆதாரமும் இவர்பால் கிடைத்தது.

பொதுநலத்தொண்டு

திருச்செங்கோட்டில் ஒரு பெரிய வீட்டைப் பொதுப் பணிக்கு வழங்கினர். அவ் வீட்டில் ஒரு புத்தகசாலையை யும் அமைத்து நன்கொடையாக்கிப் பொதுமக்கள் பலரும் பயனடையச் செய்தார். அவ்வீட்டில் சைவசபை ஒன்றை யும் ஏற்படுத்தினர். அவ்வவையில் சைவ நண்மக்களாகிய காசிவாசி செந்திநாதையர், சோமசுந்தர நாயகர், சிந்தாந்த சரபம் பூவை கலியாணசுந்தர முதலியார், நல்லசாமிப் பிள்ளை முதலிய பேரறிஞர்களைக் கொண்டு ஆண்டுவிழா,

சொற்பொழிவுகள் முதலியன செய்வித்துப் பொதுமக்கள் சைவசமயத்தின் மேம்பாட்டையும் சிறப்பையும் அறிந்து நல்ல பயனடையுமாறு செய்தார். இதனால் அங்குச் சைவமணங் கமழ்ந்து விளங்கியது.

நூல்கள் இயற்றல்

திருச்செங்கோட்டுமான்மியம், திருப்பணிமாலை, மும்மணிக்கோவை, ஒருபா ஒருபஃது, அர்த்தசிவாம்பிகை நவகம், செங்கோட்டுவேலவர் பஞ்சாமிர்தம், சங்ககிரி சென்னகேசவப்பெருமாள் ஊஞ்சல், பழையகோட்டை சண்டிகேசுவரி பதிகம், கொங்குமண்டல சதகவுரை ஆகிய நூல்களை இயற்றியதுடன் அமர்நீதி நாயனார் வரலாறு, சண்டன் வரலாறு, புரந்தரதாசு வரலாறு, சக்குபாய் வரலாறு முதலிய வரலாறுகளை இசைப்பாட்டில் அமைத்தும் இசையரங்குகளில் நடத்தினார்.

சிறப்புறுதல்

கோனாரின் தமிழ்த்தொண்டுகளை யறிந்து மகிழ்ந்த சேதுபதி மன்னர் பெரும்பொருள் வழங்கியதுடன் பொன்னாடையும் போர்த்தினர். திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் அம்பலவாணதேசிகத் தம்பிரான் அடிகளும் கோனாரை யழைத்துப் பாராட்டிப் பொன்னாடை போர்த்தினர்.

இறுதி

கோனார் திருச்செங்கோட்டுத் திருக்கோயிலிலும் திருப்பணிகள் பல செய்து சிவத்தொண்டராகவும் திகழ்ந்தார். இவருக்கு அறுவராண்மக்களும் ஒரு பெண்மகளுந் தோன்றினர். கோனார் தமது எண்பத்தாறும் அகவையில் 2-11-1944-இல் இறைவன் திருவடிநீழலை எய்தினர்.

கள. வெ. ப. சுப்பிரமணியமுதலியார்

தோற்றமும் கல்வியும்

சுப்பிரமணிய முதலியார் 1857-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் பதினைந்தாம் நாள், திக்கெலாம் புகழும் திருநெல் வேலிக்கு அண்மையில் உள்ள வெள்ளக்கால் என்னும் ஊரிலே பிறந்தார். முதலியாருடைய தந்தையார் பெயர் பழனியப்பமுதலியார். பழனியப்பமுதலியார் திருநெல் வேலிநாட்டை ஆண்ட தளவாய்முதலியார் குடும்பத் துக்கு நெருங்கிய உறவினர். சுப்பிரமணியமுதலியார் அகவை ஐந்து ஆகும்வரை வெள்ளக்காலில் இருந்தார். பிறகு கல்விகற்றற்பொருட்டு நெல்லைக்குச் சென்றார். திண்ணைப்பள்ளிக்கூடம் ஒன்றிற் சேர்ந்து கல்விகற்கத் தொடங்கினர். அப் பள்ளியில் ஆசிரியராக அமர்ந்திருந்த அறிஞர் அழகிய சொக்கநாதபிள்ளை என்னும் பேரறிஞ ரின் சிறிய தந்தையார். அப் பள்ளியில் முதலியார் நான்கு ஆண்டுகள் படித்தார். பிறகு மிஷன் பள்ளிக்கூடத்திற் சேர்ந்து ஆங்கிலமுந் தமிழும் கற்கத் தொடங்கினர். அதன் பின் இந்து கலாசாலையிற் சேர்ந்தார். 1876-இல் மெட்ரி குலேஷன் தேர்வில் தேறினர். பிறகு சென்னையை அடைந்து கிறித்துவக் கல்லூரியிற் சேர்ந்து படிக்கத் தொடங்கினர். ஆயினும், உடல் நலம் இடந்தராதபடியால், அப் படிப்பை நிறுத்தினர்.

அப்பால் சென்னையில் ஏற்படுத்தப்பட்ட பயிர்த் தொழிற் கல்லூரியில் 1880-இல் சேர்ந்தார். அங்கு நான்காண்டுகள் படித்துப், "பயிர்த்தொழில் அறிஞர்" என்னும் பட்டம் பெற்றார்.

தொழிலும் திருமணமும்

பயிர்த்தொழிற் கல்விகற்கச் சென்றபோதே முதலி யாருக்குத் திருமணம் நடைபெற்றது. மணமகளின் பெயர்

வேலம்மாள் அண்ணி. அம் மாதரசி இரண்டு பெண்மக்களே ஈன்றபின் 1899-இல் காலமாகவே மறு ஆண்டில் முதலியார் மறுமணஞ் செய்துகொண்டார். இரண்டாவது மனைவியின் பெயர் வடிவம்மாள் அண்ணி. இந்த இரண்டாவது மனைவியிடம் இரண்டு ஆண்மக்களும் ஒரு பெண்ணுந் தோன்றினர்.

முதலியார் 1884 முதல் 1890 வரை கால்நடை மருத்துவப் பிரிவில் அலுவல் பார்த்தார். பிறகு சென்னை ரெவினியூபோர்டு அலுவலகத்தில் வேலைபார்த்தார். பிறகு மேன்மேலும் பதவிகளில் உயர்வுபெற்று 1915-ஆம் ஆண்டு வரை வேலைபார்த்தார்.

தமிழ்மொழிப் பயிற்சி

முதலியாருக்குத் தமிழ்மொழியினிடத்திலே இயற்கையாகவே ஆர்வம் நிரம்பியிருந்தது. அந்நாளில் அழகிய சொக்கநாதபிள்ளை என்னும் பெரும்புலவர் முத்துச் சாமிப்பிள்ளை என்னும் வள்ளலுடைய மாளிகையிலே தமிழ்வளர்க்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். முதலியார் தமக்குக் கிடைத்த ஓய்வு நேரத்தையெல்லாம் அழகிய சொக்கநாதபிள்ளையோடு தங்கியிருப்பதிலேயே செலவிட்டு வந்தார். அதனால் முதலியாருக்குத் தமிழ்ப்பயிற்சி வளர்ந்துகொண்டு வந்தது. மேலும் முதலியார் பாரதம், திருவிளையாடற் புராணம், குற்றாலத் தலபுராணம், கலிங்கத்துப்பரணி, நைடதம், நளவெண்பா, இராமாயணம் முதலிய நூல்களை அழகிய சொக்கநாதபிள்ளையிடமும் வேறு பல புலவர்களிடமும் பாடங்கேட்டுத் தமிழறிவைப் பெருக்கிக்கொண்டார். மேலும், உ. வே. சாமிநாதைய ரோடு முதலியார் நெருங்கிய நட்புக்கொண்டிருந்தார். ஐயர் வெளியிட்ட நூல்களை யெல்லாம் ஒன்று விடாமல்

வாங்கிப் படித்தார். மு. ரா. அருணாசலக் கவிராயர், பூண்டி அரங்கநாதமுதலியார் முதலியோரும் முதலியாருடைய தமிழ்ப் பயிற்சிக்கு உறுதுணையாக அமைந்து கின்றனர்.

நூல்கள் இயற்றல்

முதலியார் முதலில், 'கால் நடைக்காரர் புத்தகம்' 'இந்தியாவில் கால்நடைகளுக்குக் காண்கிற உயிராழிப்பு நோய்கள்' என்னும் ஆங்கில நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தார். இவைகளை அரசாங்கத்தார் வெளியிட்டனர். பிறகு ஆங்கிலப் புலவர் மில்ட்டன் என்பவர் எழுதிய சுவர்க்க நீக்கம் முதற்காண்டத்தைத் தமிழிற் செய்யுளாகப் பாடினர். ஹெர்பர்ட்ஸ் பென்ஸர் என்பவர் எழுதிய கல்வி விளக்கம் முதற்பகுதியை மொழிபெயர்த்தார். அகலிகையின் வரலாற்றை வெண்பா யாப்பினுல் 'அகலிகை வெண்பா' என்னும் பெயரோடு சுவைததும்பப் பாடினர். பச்சோந்தியைப் பற்றி நகைச்சுவை ததும்ப எழுதப்பட்ட ஆங்கிலப் பாடல் ஒன்றை ஒட்டித் தமிழில் பல செய்திகளைச் சேர்த்துக் கோம்பிவிருத்தம் என்னும் நூலைப் பாடினர். நெல்லியில் எழுந்தருளிய நெல்லையப்பர்மீது நெல்லைச் சிலேடை வெண்பா என்னும் அரிய நூலைப் பாடினர். இந் நூலைப் பல புலவர்களும் போற்றினர். 'சர்வ சன செபம்' என்னும் பெயருடன் முதலியாரால் பாடப்பெற்ற சிறிய நூல் எல்லா மக்களாலும் போற்றப்படுகிறது. முதலியார் தாம் அடிக்கடி இயற்றிய தனிப்பாடல்களையெல்லாம் மற்றைய புலவர்களைப்போல் வீணுக்காமல் ஒன்றுபடுத்தித் தலிக்கவித் திரட்டு என்னும் பெயருடன் வெளிப்படுத்தினர்.

கம்பராமாயணம் என்பது கடல்போற் பரந்த பெரிய நூல். அந் நூலை எல்லோரும் கற்றுணர்வது மிக அருமை. கம்பராமாயணத்தின் இன்சுவையை எல்லோரும் துகர

வேண்டும் என்று விரும்பிய முதலியார் கம்பராமாயணம் முழுவதையும் நன்காராய்ந்து, கதையின் தொடர்பு விடாமல் இனிய செய்யுட்களை மட்டும் திரட்டினார். அவைகட்கு விளக்கமான உரையும் கதைத்தொடர்பும் எழுதி முதலில் செந்தமிழ்த் திங்கள்வெளியீட்டின் வாயிலாக வெளியிட்டார். பிறகு புத்தகவடிவமாக வெளிப்படுத்தினர். 'கம்ப ராமாயணசாரம்' என்று பெயர் கொண்ட இந் நூல் எல்லோராலும் நன்கு போற்றப்படுகிறது.

உடல் நலம்

"முப்பதில் முறுக்கு, நாற்பதில் நடுக்கம், ஐம்பதில் அசைவு, அறுபதில் ஆட்டம், எழுபதில் ஏக்கம், எண்பதில் தூக்கம்," என்ற பழமொழி நமது நாட்டிலே உலவி வருவதை எல்லோரும் அறிந்திருக்கலாம். இக்காலத்திய மக்கள் ஐம்பதில் கிழவர்களாகி எமனுடைய சீட்டை எதிர்பார்க்கத் தொடங்கிவிடுகிறார்கள். முதலியார் மேற்கூறிய ஊழ் முறைக்குப் புறம்பாகத் தமது வாழ்க்கையை நடத்தினர். எண்பதாவது அகவையிலும் முதலியார் இணையற்ற இளமை மூடுக்குடன் இலங்கினர். முதலியாரைப் பார்த்த எவரும் அவர் மூதியவர் என்று கூறத் துணியவில்லை. தமிழ்நூல் ஆராய்ச்சியும் தொண்டும் முதலியாருக்கு இளமைநலத்தை வளர்த்தன என்றே கூறவேண்டும்.

இறுதி

எண்பதாண்டுகள்வரை தமிழ்த்தொண்டுசெய்து கொண்டு இளைஞராக விளங்கிய முதலியார் தமது 90-ஆம் வயதில், 1946-ஆம் ஆண்டு அக்டோபர்த்திங்கள் பன்னிரண்டாம்நாள் இவ்வுலக வாழ்வை நீத்து விண்ணகம் புகுந்தார். அவர் புகழ் நிலைநின்று நிலவுக.

கஅ. விபுலாநந்த அடிகள்

பிறப்பு

விபுலாநந்த அடிகள் ஈழநாட்டின்கண் உள்ள மட்டக்களப்பிலே 1892-ஆம் ஆண்டு மார்ச்சுத்திங்கள் இருபத்தேழாம் நாள் பிறந்தார். அடிகளின் தந்தையாரின் பெயர் சாமித்தம்பியார். தாயார் பெயர் கண்ணம்மையார். அடிகளாருக்கு இடப்பட்ட பிள்ளைப்பெயர் மயில்வாகனன்.

கல்விப்பயிற்சி

1898-ஆம் ஆண்டில் கல்விப்பயிற்சி தொடங்கப்பட்டது. கல்முனை என்னும் ஊரில் உள்ள ஆங்கிலப் பாடசாலை, மட்டக்களப்பில் உள்ள மெதொடிஸ்ட் மிஷன் நடத்தரப் பாடசாலை, செய்ன்ட் மிக்கேல் பாடசாலை ஆகியவைகளில் கல்விகற்றார். 1906-ஆம் ஆண்டில் கேம்ப்ரிட்ஜ் ஜூனியர் தேர்வில் தேறினார். 1908-இல் சீனியர் தேர்வில் வெற்றியடைந்தார். வைத்தியலிங்க தேசிகர் என்பவரிடம் முறையாகத் தமிழ்கற்றார். வடமொழியையும் நன்கு கற்றுத்தேறினார். அடிகளாரின் இளம்பருவத்திலேயே மும்மொழிப் புலமையும் உண்டாகி விட்டது. அடிகளார் இரவு பன்னிரண்டுமணிவரை படிப்பார். பிறகு காலை நான்கு மணிக்கே எழுந்து படிக்கத் தொடங்கிவிடுவார்.

ஆசிரியத்தொழில்

1909-ஆம் ஆண்டில் இருந்து 1911-ஆம் ஆண்டுவரை மட்டக்களப்பு செய்ன்ட் மிக்கேல் பாடசாலை, கல்முனை கதோலிக்க மிஷன் பாடசாலை ஆகியவைகளில் ஆசிரியத் தொழில் புரிந்தார். பிறகு கொழும்புநகர் ஆசிரியர் கல்லூரியில் ஆசிரியப்பயிற்சிபெற்று மீண்டும் மட்டக்களப்பு செய்ன்ட் மிக்கேல் கல்லூரியில் ஆசிரியத்தொழில் நடத்

தினர். 1915—16-ஆம் ஆண்டுகளில் அரசினர் டெக்னிகல் கல்லூரியில் விஞ்ஞானம்பயின்று தேர்ச்சியடைந்தார். பிறகு மதுரைத் தமிழ்ச்சங்கத் தேர்வில் தேறிப் பண்டிதப் பட்டம் பெற்றார். 1917-ஆம் ஆண்டில் கொழும்பு அரசினர் கல்லூரியில் வேதிநூல் உதவியாசிரியராக விளங்கினர். 1920-ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்து செய்ன்ட் பேட்ரிக்ஸ் கல்லூரியில் வேதிநூல் தலைமையாசிரியராக விளங்கினர். பி. எஸ்சி. தேர்வில் தேறினர். 1920-ஆம் ஆண்டு முதல் இரண்டாண்டுகள் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் தலைமை யாசிரியராக விளங்கினர்.

துறவு

1922-ஆம் ஆண்டில் அடிகள் துறவு பூண எண்ணினர். சென்னை மயிலாப்பூரில் உள்ள இராமகிருட்டிண மடத்திற் சேர்ந்தார். அப்போது மயில்வாகனன் என்னும் பெயர் மாறிப் பிரபோதசைதன்யர் என்னும் பெயர் வந்தது. இராம கிருஷ்ண விசயம், வேதாந்த கேசரி ஆகிய பத்திரிகைகளுக்கு ஆசிரியராக இருந்து பல அரிய கட்டுரைகள் எழுதினர். செந்தமிழ், தமிழ்ப்பொழில் முதலிய பல பத்திரிகைகட்குக் கட்டுரைகள் வழங்கினர். சென்னையிலும் வெளியூர்களிலும் உள்ள பல கழகங்களிலும் சங்கங்களிலுந் தலைமை தாங்கிச் சொற்பொழிவுகள் பல செய்தார். 1924-ஆம் ஆண்டில் கல்லாடை யணிந்து துறவுபூண்டு விபுலாநந்தர் என்னும் பெயர்பெற்றார்

பலதொண்டுகள்

1925-ஆம் ஆண்டில் காலி, நாவலப்பிட்டி, கண்டி, மாத்தளை, தொப்பித்தோட்டம், வதுளை முதலிய இடங்கட்குச் சென்று சொற்பொழிவுகள் செய்தார். காரைத்தீவு, ஆனைப்பந்தி, மண்டூர், ஆரப்பற்றை என்னும் ஊர்களில்

உள்ள பாடசாலைகளை நடத்தும் பொறுப்பை மேற்கொண்டார். இவ்வாண்டில் சூன் திங்களில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் உ. வே. சாமிநாதையருக்குப் பொற்கிழி யளித்துச் சிறப்புச்செய்தபோது ஈழநாட்டுப் புலவர்களின் ஆணையாளராக மதுரைக்குவந்து அவ்விழாவைப் பெருமைப்படுத்தினர். கொழும்பு, கண்டி, நாவலப்பிட்டி, அநுராதபுரம் முதலிய ஊர்களில் சமயவளர்ச்சிக்குத் தொண்டுசெய்தார். காரைத்தீவு சாரதாவித்தியாலயம், கல்லடியுப்போடை சிவானந்தவித்தியாலயம், திருக்கோணமலை, ஆங்கில கலாசாலைப் புதுக்கட்டிடம் முதலியவைகளுக்கு அடிப்படைக் கல் நாட்டினர். 1926-ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வைத்தியேசுவர் வித்தியாலயம், விவேகானந்த வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளை நடத்தும் பொறுப்பை மேற்கொண்டார். விவேகானந்த சபையார் வேண்டுகோளின்படி கொழும்பு நகரில் விவேகானந்த வித்தியாலயத்தைத் தொடங்கிவைத்தார். வைத்தியேசுவரர் வித்தியாலயத்தின் சார்பாகத் திக்கற்ற சிறுவர்களின் பொருட்டு மாணவர் இல்லம் ஒன்றை ஏற்படுத்தினர். 1927-ஆம் ஆண்டில் கண்டி சைவமகாசபைக்குத் தலைமைதாங்கி அரிய சொற்பொழிவு நிகழ்த்தினர். யாழ்ப்பாணம் மாணவர் மாநாட்டுக்குத் தலைமைதாங்கினர். இலங்கைக்குச் சென்ற மகாத்மா காந்தியை மாணவர் தலைவர் என்னும் முறையில் வரவேற்றார். மூன் பொறுப்பேற்ற பாடசாலைகளின் பொறுப்பைப் பிறரிடம் ஒப்புவித்து விட்டு 1928-ஆம் ஆண்டில், திருக்கோணமலை ஆங்கிலக்கலாசாலையை வளர்க்கும் நோக்கத்தோடு அப் பாடசாலையின் தலைமைப்பொறுப்பை யேற்றுக்கொண்டார். 1931-ஆம் ஆண்டில் செட்டிநாட்டரசர் அண்ணாமலைச் செட்டியார், அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்

பேராசிரியராக இருந்து பணியாற்றவேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்கச் சில ஆண்டுகள் அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தில் இருந்து பணிபுரிந்தார். சில காரணங்களை முன்னிட்டுப் பின் பல்கலைக்கழக அலுவலை விட்டு இலங்கையை அடைந்து அவ்விடமே தொண்டுகள் செய்துகொண்டிருந்தார்.

1939, 40, 41-ஆம் ஆண்டுகளில் இமயமலையில் உள்ள மாயாவதி என்னும் இடத்தில் தங்கியிருந்து இராமகிருட்டிணமடத்தின் பத்திரிகையாகிய 'பிரபுத்த பாரத' என்னும் ஆங்கிலவெளியீட்டை நடத்தினர். பிறகு 1943-இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக அமர்ந்து இறுதிவரையில் பணிபுரிந்தார்.

திருக்கைலாய யாத்திரை

1937-ஆம் ஆண்டில் அடிகள் இமயமலையைத் தாண்டித் திபேத்துக்குப் போய்த் திருக்கைலைமலையைக் கண்டு வழிபட்டு வந்ததுமன்றி அந்நாட்டின் பல விடங்களிலுமிருந்த பௌத்தப்பள்ளிகளையும் பார்த்தார். தமது திருக்கைலாய யாத்திரையைக் குறித்து இந்தியாவிலும், ஈழத்திலும் சொற்பொழிவுகள் பல செய்து இமயத்தின் சிறப்பையும் கயிலைவரைப் பெருமையையும் பலரும் உணர்ந்து கொள்ளுமாறு செய்தார்.

அறிஞர்கள் தொடர்பு

அறிஞர்களோடு கூட்டுறவு கொள்வதில் அடிகள் தனிச்சிறப்புடையவர்களாக விளங்கினர். தாம் துறவுக் கோலம் பூண்டவராயிருந்தும் கீழ்வீழ்ந்து தம்மை யாரும் வணங்குவதற்கு இணங்குவதில்லை. பெரியோர் சிறியோர் என்னும் வேறுபாடில்லாமல் எல்லோரையும் ஒரேபடியாக மதித்துப் பழகும் உண்பு அடிகளார்க்குத் தனிச்சிறப்பாக

விளங்கியது. சுன்னகம் குமாரசாமிப்புலவர், வட்டுக் கோட்டை அம்பலவாணகாவல பராசக்தி சுவாமிகள், டாக்டர் உ. வே. சாமிநாதையர், வெள்ளக்கால் ப. சுப்பிர மணிய முதலியார், ரா. இராகவ ஐயங்கார், பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், நாவலர் சோமசுந்தர பாரதி யார், தமிழவேள், த. வே. உமாமகேசுவரம்பிள்ளை, ராதா கிருஷ்ணன், சோழவந்தானூர்க் கந்தசாமியார் முதலிய அறிஞர்களிடம் நெருங்கிப்பழகிய அடிகள் இவர்களிடம் தனிப்பற்று வைத்திருந்தார்.

நூல்கள்

அடிகளார் மயில்வாகனன் என்னும் பெயருடன் இளை ஞரா யிருந்தபோதே கட்டுரைகள் எழுதும் பணியில் இறங்கினர். நூல்கள் எழுதுவதற்குக் கட்டுரைகள் தாம் முதற்படி. வங்கநாட்டுக்கவி ரவீந்திரநாத தாகூர் ஆங்கிலத்தில் இயற்றிய "கார்டனர்" என்னும் பாக்களைப் "பூஞ்சோலைக் காவலன்" என்னும் பெயருடன் தமிழில் மொழிபெயர்த்துச் செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளி யிட்டார். மேற்றிசைச் செல்வம், விஞ்ஞான தீபம், பொரு ணூற் சிறப்பு, சூரிய சந்திரோற்பத்தி, மலைகடல் உற்பத்தி என்னுங் கட்டுரைகளும் செந்தமிழில் வெளிவந்தன. இமயஞ் சேர்ந்த காக்கை, உள்ளங்கவர் கள்வன், நீரர மகளிர் இன்னிசைப்பாடல், பண்ணுந் திறனும், லகர வெழுத்து, உணவு, குழலும் யாழும், கண்ணகியார் வழக்குரை, எண்ணும் இசையும், பாலைத்திரிபு, சுருதிவீணை, இயலிசை நாடகம், கங்கையில் எழுதியிட்ட ஓலை முதலிய கட்டுரைகள் கரந்தைத் தமிழ்ப்பொழிலில் வெளிவந்தன. செந்தமிழில் வெளிவந்த மதங்க சூளாமணி நூல்வடிவாக வெளிவந்துலவுகிறது. வேறு சில கட்டுரைகளும் நூல் வடிவாக வெளிவந்திருப்பதாகத் தெரிகிறது. அடிகளார்

ஏறக்குறையப் பதினைந்தாண்டுகள் முயற்சிசெய்து எழுதி முடித்த "யாழ் நூல்" என்னும் இசைத்தமிழ் நூல் 5-6-1947-இல் தஞ்சைமாவட்டத்தில் உள்ள திருக்கொள்ளம்புதூரில் அரங்கேற்றஞ் செய்து வெளியிடப்பட்டது.

இறுதி

யாழ் நூல் அரங்கேற்றமானவுடன் ஈழநாடடைந்து தமது பல்கலைக்கழகவேலையை மேற்கொண்ட அடிகள், தமது ஐம்பத்தைந்தாவது அகவையிலே 1947-ஆம்ஆண்டு சூலைத்திங்கள் 19-ஆம் நாள் வீடுபேற்றினையடைந்தார்.

கசு. மறைமலையடிகள்

பிறப்பு

புனலுடைனப் புகழ்பெற்ற பொன்னிவள நன்னாட்டிலே, தஞ்சைமாவட்டத்தில் உள்ள நாகையை அடுத்த சிற்றூர் ஒனமிலே, மறைமலையடிகள் பிறந்தார். அடிகளாரின் தந்தையார்பெயர் சொக்கநாதபிள்ளை. தாயார் பெயர் சின்னம்மையார். இவர்களுடைய குலம் சோழியச் சைவவேளாளர் குலம். சொக்கநாத பிள்ளைக்கு மக்கட் பேறு நெடுங்காலம் உண்டாகவில்லை. கணவனும் மனைவியும் கழுக்குன்றை யடைந்து கழுகுதொழு வேதகிரிக் கண்ணுதலைத் தொழுது வழிபட்டனர். சின்னம்மையார் நோன்புகள் பலவற்றை மேற்கொண்டார். கண்ணுதற் கடவுள் திருவருளால் ஆண்குழந்தை ஒன்று தோன்றியது. கழுக்குன்றுக்கு, வேதகிரி (வேதாசலம்) என்றும் பெயருண்டு. கழுக்குன்றக் கடவுள் திருவருளால் தோன்றிய மகவுக்கு வேதாசலம் என்று பெயரிட்டு மகிழ்ந்தனர். பின்பு அடிகள் தனித்தமிழ்ப்பற்றுக் கொண்டபின் இப்

பெயரை மறைமலை என்று தமிழாக்கிக் கொண்டார். அடிகள் என்பது துறவுக்கோலம் பூண்டபின் உண்டாகிய சிறப்புப்பெயர்.

கல்வி

அடிகள் குழவிப்பருவமாக இருந்தபோதே தந்தையார் சொக்கநாதபிள்ளை காலமானார். "தந்தையொடு கல்விபோம்" என்னும் பெரியோர் மொழியை அடிகள் பொய்யாக்கி விட்டார் ஐயாண்டளவில் மையேடு கைப்பிடித்த அடிகளார், பள்ளிப்படிப்பு முடிந்த பின்னரும் குன்று ஊக்கததுடன் கல்வியைக் கறகலானார்.

அந்நாளில் நாராயணசாமிபபிள்ளை என்பவர் நற்றமிழ் அறிஞர் என்று நாகையில் புகழ்பெற்றிருந்தார். அந்த நாராயணசாமிபபிள்ளை மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளைக்குங் கல்விகற்பித்த சிறப்புடையவர். அவர் நாகையில் புத்தகக்கடை வைத்திருந்தார். அவருடைய கடையில் அந்நாளில வெளியாகியிருந்த எல்லாத் தமிழ் நூல்களுமே விற்பனைக்கு வாங்கி வைக்கப்பட்டிருந்தன. மாணவர்கள் தமக்கு வேண்டிய நூல்களை அவரிடம் விலைக்கு வாங்குவதுடன் பாடங்கேட்கத் தக்க நூல்களைப் பாடமுங் கேட்பார்கள். நாராயணசாமிப் பிள்ளை பெரும் புலவர் ஒருவரிடம் தொல்காப்பியம முதலிய இலக்கண நூல்களையும் சங்கநூல்களையும் பாடங்கேட்டவர். மதிநுட்பமுஞ சொல்லாற்றலும் நன்கு அமையப்பெற்றவர.

மறைமலையடிகள் நாராயணசாமிப்பிள்ளையின் பெருமையை உணர்ந்தார். பிள்ளையவர்களிடஞ் சென்று, "தமக்குக் கல்விகற்பித்து மூன்னுக்குக் கொண்டு வர வேண்டும்," என்று கூறிக் கீழேவிழுந்து வணங்கினர். நாராயணசாமிப் பிள்ளையவர்கள் மறைமலையின் வரலாற்றை

உசாவினர். தமிழ்க்கல்வியில் அவர் கொண்டிருக்கும் பற்றைக்கண்டு பெருவியப்புக்கொண்டார். தம்முடைய மாணவர்களுள் ஒருவராகச் சேர்த்துக்கொண்டு கல்வி கற்பிக்கத் தொடங்கினர். மற்றைய மாணவர்களைப்போல் படித்தோம் என்னும பெயருக்கில்லாமல் அடிகள் பிள்ளையவர்களிடங் கருத்தாகக் கல்வியைக் கற்றார். பெரும்பாலும் பிள்ளையவர்களுடனேயே தங்கியிருந்து அவருக்காக வேண்டிய வேலைகளையும் செய்வார். அடிகளாரின் மெய்யன்பு நாராயணசாமிப் பிள்ளையவர்கட்கு மிகுந்த உவகையை அளித்தது. அவர் பெரும்பற்றுக்கொண்டு தாம் கற்றறிந்த நூல்களை யெல்லாம அடிகளார்க்குக் கற்பித்தார். மறைமலையும் ஆசிரியரைப் போலக் கலைமலையாக மாறிவிட்டார். பிள்ளையவாகளிடம மறைமலை பாடஙகேட்டுக்கொண்டிருக்கும்போதே தாம வேறு சில மாணவர்கட்குப போதிக்குந் தொழிலை மேற்கொண்டார். இதனால் மறைமலையின் அறிவு மேன்மேலும வளர்நது சிறப்புறுவதாயிற்று. அடிகள் தமிழ்நூல்களைக் கற்றதோடு நின்றுவிடவில்லை. ஆங்கில நூல்களினும் பலவற்றைப் படித்துவந்தார். நாளடைவில் ஆங்கிலப்புலமையும் நன்கு அமைவதாயிற்று.

மணமும் மக்கட்பேறும்

மறைமலையின் பதினேழாம் அகவையில் அவருக்குத் திருமணம் நடைபெற்றது. மணமகளின் பெயர் சவுந்தரவல்லி. சவுந்தரவல்லி அம்மையார் அடிகளார்க்கு ஏற்ற வாழ்க்கைத் துணைவியாக அமைந்தார். மறு ஆண்டில் அடிகளார்க்குப் பெண்மகவு ஒன்று தோன்றியது. அப்போது அடிகளார் சிந்தாமணியைப் படித்துக் கொண்டிருந்தார். அக் குழந்தைக்குச் சிந்தாமணி என்றே பெயரிட்டார்.

மறுப்புக் கட்டுரைகள்

அந்நாளில் சோமசுந்தர நாயகர் என்பவர் புகழ் பெற்ற சைவசித்தாந்தியாகச் சென்னையிற் சிறந்து விளங்கினர். அவர் சொல்லாற்றலிற் சிறந்தவர். கேட்பார் உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் பதியுமாறு செய்திகளை அழுத்தந் திருத்தமாகக் கூறக்கூடியவர். அவர் நாகையில் இருந்த சைவசித்தாந்தப் பேரவை ஒன்றுக்குச் சொற்பொழிவுசெய்ய வந்தார். பல சொற்பொழிவுகள் செய்தார். மறைமலை அந்தச் சொற்பொழிவுகள் எல்லாவற்றையுங் கருத்துடன் கேட்டார். நாயகரின் தமிழன்பினையும் சமயப்பற்றையுங் கண்டு மகிழ்ச்சிகொண்டார். அவரிடமே சைவசித்தாந்த நூல்களைக் கற்றுணர்வது என்றும உள்ளதில் உறுதிசெய்துகொண்டார்.

அப்போது நாகையில் இருந்த வேதாந்தி ஒருவர் சோமசுந்தர நாயகரின் கொள்கைகள் சிலவற்றை மறுத்து ஒரு பத்திரிகையில் எழுதினர். மறைமலை, நாயகர் கருத்தையும கட்டுரையாளர் கருத்தையும ஒப்பிட்டுப் பார்த்தார். நாயகர் கருத்துச் சிறந்ததென்று முடிவுசெய்தார். 'முருகவேள்' என்னும் புனைபெயருடன் நாயகர் கருத்துக்கள் உயரியவை என்பதைப் பத்திரிகைக் கட்டுரை மூலம் தொடர்ந்து எழுதினர். இக்கட்டுரைத் தொடர்ச்சிகளைச் சென்னையில் இருந்த நாயகர் படித்தார். கட்டுரைகள் யாவும் நேர்மையான முறையில் வெளிவருதலைப் பாராட்டினர். "அவைகளை எழுதும் 'முருகவேள்' யாவர்?" என்று நாகைச் சைவசித்தாந்த சபையாருக்குக் கடிதம் எழுதிக் கேட்டார். அச் சபையினர் மறைமலையின் வரலாற்றை எழுதியனுப்பினர்கள். திங்கள் பல சென்றன. நாயகர் நாகைக்கு வந்தார். மறைமலையைக் கண்டு மகிழ்ச்சியுடன் பாராட்டினர். "சென்னையில் இருந்தால் சைவ

சித்தாந்த வளர்ச்சிக்கு நல்ல பணிபுரியலாம்," என்று கூறினர். மறைமலை சென்னைக்கு வருவதாக ஒப்புக்கொண்டார்.

சுந்தரம்பிள்ளையோடு தொடர்பு

திருவனந்தபுரம் அரசர் கல்லூரிப் பேராசிரியராக இருந்த சுந்தரம்பிள்ளை 'மனோன்மணீயம்' என்னும் நாடக நூலை எழுதி வெளியிட்டார். அந் நூல் நாகை நாராயண சாமிப் பிள்ளைக்கும் வந்தது. மறைமலை அந்நூலைப் படித்தார். அதனைப் பாராட்டிப் பிள்ளையவர்கட்கு எழுதினர். அதுமுதல் இருவருக்குந் தொடர்புண்டாயிற்று. சுந்தரம் பிள்ளை மறைமலையையும் தம் ஆசிரியர் நாராயணசாமிப் பிள்ளையையும் திருவனந்தபுரத்திற்கு அழைத்தார். இருவரும திருவனந்தபுரஞ் சென்று சுந்தரமபிள்ளையின் விருந்தினராகச் சிலகாலந் தங்கியிருந்து மீண்டனர்.

மறைமலையின் அறிவாற்றலை நன்குணர்ந்த சுந்தரம் பிள்ளை இவரைத் தகுதியான வேலையில் அமர்த்தவேண்டும் என்று விரும்பினர். ஆங்கிலப் பள்ளியொன்றில் தமிழாசிரியராக வேலை பார்ப்பதற்கு ஏற்பாடு செய்தார். அடிகள் அவ் வேலையை ஏற்றுச் சின்னாள் பார்த்தார். அந் நகரத்தின் தட்ப வெப்பம் அடிகளாரின் உடல்நலத்திற்கு ஏற்றதாக இல்லை. ஆகவே, அவ் வேலையை விட்டுவிட்டு நாகைக்குத் திரும்பினர். திருவனந்தபுரத்தில் இருந்தது இரண்டு மூன்று திங்களே யாயினும் அங்கு அரிய வேலைகள் பல செய்தார்.

சென்னையை அடைதல்

அடிகள் முதலிற் சென்னைக்குச்சென்று ஐந்தாறு திங்கள் ஒரு பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார். பிறகு, அவ்வேலையை விட்டுவிட்டு நாகைக்கு மீண்டார். அப்

போது சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் பரிதிமாற் கலைஞர் (வி. கோ. சூரியநாராயண சாத்திரியார்) பேராசிரியராக இருந்தார். அவர் நல்ல செந்தமிழ் அறிஞர். தமிழ் வரலாறு, ரூபாவதி, கலாவதி முதலிய நூல்களை எழுதியவர். பரிதிமாற் கலைஞருக்குத துணையாக மற்றுமொரு தமிழாசிரியர் அக் கல்லூரிக்குத் தேவைப்பட்டார். அப் பதவியைப் பலபேர் நாடினர். கல்லூரித் தலைவர் தக்கவரைத் தேர்ந்தெடுக்குமாறு பரிதிமாற் கலைஞரைக் கேட்டுக் கொண்டார். பரிதிமாற்கலைஞர் பலரை ஆராய்ந்து அடிகளாரைத் தேர்ந்தெடுத்தார். பரிதிமாற் கலைஞருக்கும் மறைமலைக்கும் நட்பு மிகுதிப்பட்டது. அடிகள் தனித் தமிழ் வேட்கையினராய்த் தம் பெயரையும் தமிழாக்கிக் கொண்டது பரிதிமாற் கலைஞருடைய கூட்டுறவினால்தான் என்பர். அடிகள் நன்முறையில் தமிழ்வகுப்பை நடத்தி மாணவர்களுடைய உள்ளங்களைக் கவர்ந்தார். அடிகளின் தமிழறிவும் சொற்றிறமும் யாண்டும் பரவத் தொடங்கின. சென்னையை அடைந்தபின் அடிகள் மேலும் பல நூல்களை நன்கு ஆராய்ந்து தம் தமிழறிவையும் ஆங்கில அறிவையும் மிகுதியாகப் பெருக்கிக் கொண்டார்.

செய்யுள் நூல் செய்தல்

அடிகள் சென்னையில் அரண்மனைக்காரன் தெருவில் குடியிருந்தார். அப்போது அடிகளார்க்கு வயிற்றுவலி உண்டாகியது. அடிகள் முருகப்பெருமான் மீது 'மும்மணிக் கோவை' என்னும் நூல் ஒன்றைப் பாடி அவ் வயிற்றுவலியைப் போக்கிக்கொண்டார்.

மாணவர்கள்

பரிதிமாற் கலைஞர் 1903-ஆம் ஆண்டில் காலமானார். அவர் காலமானது அடிகளார்க்கு மிகுந்த மன வருத்

தத்தை உண்டாக்கியது. மிகுந்த வெறுப்புடனே வேலை யைப் பார்த்து வந்தார். வேலையோடு வேலையாய் முல்லைப் பாட்டு ஆராய்ச்சி, பட்டினப்பாலை ஆராய்ச்சி முதலிய நூல் களை எழுதி வெளியிட்டார். அடிகளாரிடம் கல்லூரியிற் பயின்ற மாணவர்கள் போக இல்லத்தினும் பல மாணவர் கள் கல்விகற்றனர். ச. சோமசுந்தர பாரதியார், எஸ். வையாபுரி பிள்ளை, டி கே. சிதம்பரநாத முதலியார், சி. என். முத்துரங்க முதலியார், இளவழகனார், நாகை தண்ட பாணிப்பிள்ளை முதலியோர் அடிகளின் மாணவர்களிற் சிறந்தவர்களாவர்.

மக்கட்பேறு

அடிகளார்க்கு ஆண்மக்கள் நால்வரும் பெண்மக்கள் மூவரும் தோன்றினர். ஆண்மக்கள் பெயர்கள் திருஞான சமபந்தர், மாணிக்கவாசகர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி என்பன. அடிகள தம் மக்கட்கு இவ்வாறு பெயரிட்டமை கொண்டே அவர் சமயாசாரியர்களிடத்தில் எத்தகைய பற்றுக் கொண்டிருந்தார் என்பதை நாம் ஒருவாறு ஊகித் துக் கொள்ளலாம்.

அடிகள்

அடிகள் மனம் இல்லறத்தைத் துறந்து துறவறத்தை மேற்கொளள நாடியது. காவியுடையணிந்து பழுத்த துறவி யாக விளங்கினார் இதன் பிறகே அடிகளென்பது பெரு வழக்காகியது. சென்னைநகர வாழ்க்கை அடிகட்கு வெறுப்பைத் தந்தது. நண்பர்களைக் கலந்தெண்ணினார். சென்னையை ஒட்டியுள்ள பல்லாவரம் என்னும் பல்லவ புரத்தை வசிப்பதற்குத் தக்க இடமாகத் தேர்ந்தெடுத்தார். ஆங்கு அழகிய மாளிகை ஒன்றை அமைத்துக்கொண்டு அதில் தங்கினார்.

நூல்கள் எழுதுதல்

அடிகள் பல்லாவரத்தை அடைந்த பின்பு தமது முழு நேரத்தையும் நூலாராய்ச்சியினும் நூல்கள் எழுதுவதினுஞ் செலவிடத் தொடங்கினர் எழுதிய நூல்களைப் பிறரிடம் அளிக்காமல் சிறிய பதிப்பகம் ஒன்றை ஏற்படுத்தி அதில் தாமே பதிப்பித்து வெளியிட்டார். அடிகளின் நூல்களில் பெரும்பாலானவை பேராராய்ச்சி செய்து எழுதப் பெற்றவை. மாணிக்கவாசகர் வரலாறுங் காலஆராய்ச்சியும், மக்கள நூருண்டு உயிர்வாழ்தல் எப்படி? என்னும் நூல் இரண்டும மிகச் சிறப்புடையன. இந் நூல்களைப் படிப்போர அடிகளாரின் பரந்த பேரறிவையும் நுண்ணிய ஆராய்ச்சித் திறமையையும் ஒருவாறு உணாந்து கொள்ளலாம். அடிகளால்,

1. மாணிக்கவாசகர் வரலாறும காலஆராய்சசியும்
2. மக்கள் நூருண்டு உயிாவாழதல் எப்படி?
3. சைவசித்தாந்த ஞானபோதம்
4 முருகா மும்மணிக்கோவை
5. சிறுவாக்கான செந்தமிழ்
6. தமிழர் மதம்
7. தொலைவில் உணர்தல்
8 குமுதவல்லி
9. கோகிலாம்பாள் கடிதங்கள்
10. சாகுந்தல நாடக ஆராய்சசி
11. யோக நிதிரை
12. சிவஞானபோத ஆராய்சசி
13. திருக்குறள் ஆராயசசி
14. பட்டினப்பாலை ஆராய்சசி
15. முல்லைப்பாட்டு ஆராய்சசி
16. பழந்தமிழக் கொள்கையே சைவசமயம்
17. கடவுள்நிலைக்கு மாறான கொள்கைகள்
18 சிந்தனைக் கட்டுரைகள்

19. முற்கால பிற்காலத தமிழப்புலவர்
20. சாதி வேற்றுமையும் போலிச சைவரும்
21. சிறு தெய்வங்கட்கு உயிர்ப்பலி யிடலாமா?
22. திருக்கோயில் வழிபாடு
23. தமிழ்த்தாய்
24. சைவசமயப் பாதுகாப்பு
25. வேளாளா நாகரிகம்
26. பொருந்தும் உணவும் பொருந்தா உணவும்
27. சோமசுந்தரக் காஞ்சியாக்கம்
28. அம்பலவாணர் திருக்கூத்து
29. தமிழ்நாட்டவரும் மேல்நாட்டவரும்
30. சைவசமயத்தின் நெருக்கடியான நிலை
31. தென்புலத்தார் யார்?
32. கடவுளுக்கு அருளுருவம் உண்டு
33 இந்தி பொதுமொழியா?
34. சீர்திருத்தக குறிப்புகள்
35. அறிவுரைக் கொத்து

மூதலிய பல நூல்கள் தூயதமிழில் எழுதப்பெற்று நல்லமுறையில் பதிப்பிக்கப்பெற்று வெளியாகியுள்ளன.

இறுதி

"மக்கள் நூறுண்டு உயிர் வாழ்தல் எப்படி" என்னும் நூலை எழுதியதோடு அவ்வகையே தாமும் நடந்து நின்ற அடிகள தமது எழுபதாந்தாவது அகவையிலே 1950-ஆம் ஆண்டு செப்டம்பர்த்திங்கள் 15-ஆம் நாள் இறைவன் திருவடிநீழலை எய்தினர். அடிகளின் பிரிவு தமிழ் உலகத்திற்கு ஈடு செய்தற்கரிய பேரிழப்பாக முடிந்தது. அறிஞா பலரும் இரங்கற்பாக்கள் பாடித் தமது ஆற்றுமையைப் புலப்படுத்தினர்.

உ0. செய்குத்தம்பிப் பாவலர்

சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர் என்பவர் நாஞ் சில் நாட்டிலே நாகர்கோவிலேயடுத்த இலஞ்சகடை யென் னும் சிற்றூரிலே பிறந்தார். பாவலரின் சமயம் மகமதிய சமயம். பாவலரின் தந்தையார் பெயர் பக்கீர் மீரான்சாகிப் என்பது.

பாவலர் இளமைப்பருவத்தில் மிக விரைவாகப் பள் ளிக் கல்வியைப் பயின்று முடித்தார். பிறகு தமிழ்ப்புலவ ராக விளங்குமாறு தமிழ்க்கலவியை நன்கு கற்க எண்ணி னர். அவ்வூரில் சங்கர நாராயணப் புலவர் என்பவர் ஒருவர் சிறந்த கலவியறிவுடையவராக விளங்கியிருந்தார். அவரி டம் மாணவர் பலர் கல்விகற்றனர். பாவலரும் அந்தப் புலவரிடமே கல்விகற்க எண்ணினர். பாவலர் மிக வறிய குடும்பத்திலே பிறந்தவராதலின் ஏழ்மைநிலையிலே தன் புற்றூர்.

செய்குத்தம்பிப் பாவலரும் வேறு சிலரும் சங்கர நாராயணப் புலவரிடத்திலே கற்றலே விரும்பிச் சென்றனர். பாவலர் புலவரிடம் கருத்துடனும் ஒழுங்காகவும் படித்துக் கல்வியில் தேர்ச்சி பெற்றவரானர்.

அகவை பதினேந்து நிரம்புதற்கு முன்னரே செய்குத் தம்பிக்குக் கல்வியறிவு நிரம்பிவிட்டது. அவர் தம் பதினேழு மாண்டில் அழகிய செய்யுட்களே இயற்றலானர். அந்தாதி பிள்ளைத்தமிழ் முதலிய நூல்களோடு தம் மதக்கடவுள்மீது பாடினர். ஒருவர் பதினேழும் ஆண்டில் தானே நூல்கள் இயற்றத் தொடங்கிவிட்டார் என்றால், அது வியக்கத்தக்க செயலன்றே? அந் நாளிலேயே அவருக்குப் "பாவலர்" என்னும் பெயர் உண்டாகி விட்டது. பாவலர்க்குச் சொல் லாற்றலும் நன்கு அமைந்திருந்தது. அவையினர் மகிழும்

வண்ணம் கடல்மடை திறந்தாற்போல் சடசடவென்று பேசுவார். அவருடைய சொற்பொழிவைக் கேட்கத் தொடங்கியவர்கள் இடையிலே எழுந்து செல்லமாட்டார்கள்.

தம் சமயப் பெரியார் ஒருவர் இயற்றிய நூல் ஒன்றை அச்சிடுவதற்காகப் பாவலர் தமது பத்தொன்பதாம் ஆண்டிலே சென்னைக்குச் சென்றார். அங்குச் சில காலம் தங்கித் தாம் அச்சிடவந்த நூலை அச்சிட்டு முடித்தார். அப் பொழுது அங்கு இட்டா பார்த்தசாரதி நாயுடு என்பவர் பாவலருக்குப் பழக்கமானார். பாவலர் பார்த்தசாரதி நாயுடுவின் பதிப்பகத்திலே தங்கி நூல்களைப் பிழையற ஆராய்ந்து வெளியிடும்பணியில இறங்கினர். எண்ணற்ற நூல்கள் பிழையின்றி வெளிவந்தன. நபி நாயகத்தின் வரலாறுகூறும் சீறுப்புராணத்தையும் பிழையறப் பதிப்பித்து வெளியிட்டார். அந் நூலுக்குத் தக்க உரையும் பாவலரால் எழுதப் பட்டது.

இராமலிங்கஅடிகளின் திருவருட்பாப் பாடல்களுக்கு அப் பெயர் பொருந்தாது என்றும், இராமலிங்க அடிகளின் பாடல்கள் மருட்பாக்கள் என்றும் சிலர் கூறி வம்பிழுத்துத் திரிந்தனர். பாவலர் தாம் வேறொரு சமயத்தவர் என்பதையும் மறந்து, அந் நூற்போரிலே இறங்கி இராமலிங்க அடிகளின் பாடல்களே அருட்பா என்றல் எவ்வாற்றானும் பொருந்துமென்று பல சொற்பொழிவுகள் செய்தார். இதனால் அருட்பாக் கட்சியினருக்கு நன்மைகள் பல உண்டாயின.

பாவலர் அவதானம் செய்வதற்கும் பழகியிருந்தார். ஹூ0ஏ-ஆம் ஆண்டிலே சென்னை விக்டோரியா மண்டபத்தில் கண்ணபிரான்முதலியார் என்பவருடைய தலைமை

யிலே மிகக் கடினமான சதாவதானம் நடைபெற்றது. பாவலர் அந்தச் சதாவதானத்தைத் திறமையுடன் செய்து பல ருடைய பாராட்டுதலையும், வெகுமதிகளையும் பெற்றார். அப் பொழுது ஈற்றடி கொடுத்துச் செய்யுள் இயற்றுதலும் நடைபெற்றது.

"விராடனையே பெண்ணெனலா மே"
"மாமனுக்குக் கந்தன் மகன"

என்னும் ஈற்றடிகளுக்கு,

"உண்ணும் பொழுதும் உறங்கும் பொழுது மொன்றை
எண்ணும பொழுதும் எரிமுன்னுய்—மண்ணில்
வராடவனையே தெய்வம் மன்னனெனும சொற்ற
விராடனையே பெண்ணெனலா மே.

அண்டர் முறையால அலைகடலில் பள்ளி கொண்ட
கொண்டல் வண்ண மேனிக் குரிசிலாம—விண்டுபெற்ற
காமனுக்கு முற்றும் கருதும் படியமைந்த
மாமனுக்குக் கந்தன் மகன்."

என்னுஞ் செய்யுட்கள் அப்போது பாவலரால் இயற்றப் பட்டன. அது முதல பாவலருக்குச் சதாவதானி என்னுஞ் சிறப்புச் சொல்லும் பெயருக்குமுன் அமைந்தது.

பாவலர் கக்ஷ-ஆம் ஆண்டில் தாம் பிறந்த ஊருக்குச் சென்றார். அப்போது அவருக்குத் திருமணம் நடைபெற் றது. பின்னர் இரண்டு ஆண்டுகள் மட்டுஞ் சென்னையில் தங்கிய பாவலர் அதன் பிறகு ஊரையடைந்தார். ஊரினர் யாவரும் அவரை ஊரில் தங்கிவிடுமாறு வற்புறுத்தினர். நூல்கடை ஒன்றும வைத்துக்கொடுத்தனர். பாவலர் பலருக்கும் பாடஞ்சொல்லுந் தொழிலை மேற்கொண்டு பல புலவர்களை உண்டாக்கினர். ஷம்சுத்தாசின் கோவை, கல்வத்து நாயகம் அவர்கள் இன்னிசைப் பாமாலை, திரு நாகூர்த் திருவந்தாதி, திருக்கோட்டாற்றுப் பதிற்றுப்பத்

தந்தாதி முதலிய நூல்கள் பாவலரால் இயற்றப்பெற்றன தமிழ் பேசும் முஸ்லீம்கள் பாவலரின் சிறப்பால் பெருமிதத்தையும் பல நன்மைகளையும் அடைந்தனர். பாவலர் எழுபத்தெட்டு ஆண்டுகள வரை உயிர் வாழ்ந்திருந்து ககூடுo-ஆம் ஆண்டில் காலமானர்.

உக. தி. பொ. பழநியப்பபிள்ளை

தோற்றம்

தி. பொ. பழநியப்ப பிள்ளை 1893-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் இருபத்தொன்பதாம் நாள், பொன்னுச் சாமிப்பிள்ளை என்பவருக்கு மைந்தனாகப் பழநியம்பதியிலே பிறந்தார். பழநியப்ப பிள்ளையின் தாயார் பெயர் அரங்கம்மாள். பொன்னுச்சாமிப் பிள்ளை பழநியில் ரெவினியூ இலாகாவில் கணக்கராகத் தொண்டுபுரிந்துகொண்டிருந்தார்.

கல்வி

பழநியப்பர் முதற்கண் தொடக்கப்பள்ளியில் சேர்ந்து கல்விபயிலத தொடங்கினர். பிறகு ஆறுமுகமபிள்ளை என்னுந் தம் பாட்டனரிடம் தமிழ்நூல்களைக் கற்கத் தொடங்கினர். கொன்னக்கோல் மருதநாயகம் பிள்ளை என்பவரிடம் இசைக்கலை யறிவுஞ் சிறிதுபெற்றார். திண்டுக்கல் நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் மூன்றாம் பாரம் வரை பயின்றார். 1911-ஆம் ஆண்டில் இருந்து 1915-ஆம் ஆண்டு முடிவுவரை, திரிசிராப்பள்ளி நேஷனல் உயர்நிலைப்பள்ளியில் பள்ளியிறுதி வகுப்புவரை படித்தார். பின் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பயின்று மதுரைத் தமிழ்ச்சங்கத் தேர்வில் தேறிப் பொற்பதக்கம் பெற்றார்.

ஆசிரியத்தொழில்

1916-ஆம் ஆண்டு முதல் திருச்சி நேஷனல் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக வேலைபார்க்கத் தொடங்கினர். எஸ். பி. சி. கல்லூரியில் தொண்டுசெய்துகொண்டிருந்த பிச்சை இபுராகிம் புலவரிடம் மேலும் தமிழ்க்கல்வியை நன்கு கற்றதுடன் தாமாகவும பன்னூல்களை ஆராய்ச்சி செய்தார் நாளடைவில பழனியப்பர் தமிழறிவுநிரம்பப் பெற்று நல்ல புலவரானர்.

மணமும் மக்கட்பேறும்

1917-ஆம ஆண்டில் பழனியப்பருக்குத் திருமணம் நடைபெற்றது. மணமகள் பெயர் இராச மன்னரம்மாள். எதிர்கால நிகழ்ச்சி யுரைப்போர் (சோதிடர்) ஒருவர் பழனியப்பர் இருமணம பெறுவர் என்றெடுத்து இயம்பினர். ஆயினும, அஃது உண்மையாக முடியாமற் பொய்யாகப் போய்விட்டது. இராசமன்னர் அம்மாளிடம இரண்டு ஆண்மக்களும் மூன்று பெண்மக்களும் தோன்றினர்.

சமயநூற் பயிற்சி

பழனியப்பர் சைவசமயக் கொள்கை ஒன்றினை அறிந்ததோடு அமைவு கொள்ளவில்லை. பல சமயக்கொள்கைகளையும் உணர்ந்துகொள்ள எண்ணினர். வைணவம், வேதாந்தம், பௌத்தம், கிறித்துவம், மூகமதியம் ஆகிய சமயங்களின் நூல்களையும் ஆராய்ச்சி செய்து அவைகளின் தன்மையையும் உணர்ந்துகொண்டார். பல சமயஉணர்வின் பயனகப் பழனியப்பரின் உள்ளத்தில் சமாசக் கொள்கை குடிகொண்டது.

கல்வியில் முன்னேற்றம்

அரசினரால் ஒப்புக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகங்களில் பட்டம் பெறுதலைப் பழனியப்பர் நாடினர். 1932-ஆம்

ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழகப் புலவர்தேர்வில் முதல்வராகத் தேறித் திருப்பனந்தாள் காசி மடத்தாரின் வெண்பொற் காசுகள ஆயிரத்தையும பெற்றார். ஆங்கிலத்தில் பி. ஒ. எல். என்னும் பட்டத்தையும் பெற்றார்.

பல்கலைக்கழகத்தில் பணி

பழனியப்பர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1932-ஆம் ஆண்டுமுதல் 1941-ஆம் ஆண்டுவரை பணிபுரிந்தார். அந்நாளில், சோமசுந்தரபாரதியார், பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார், ரா. இராகவஐயங்கார், ந. மு. வேங்கடசாமி நாட்டார், சர்க்கரை இராமசாமிப் புலவா, சோழவந்தானாக் கந்தசாமியார் முதலியோர் பல்கலைக் கழகத்தில் பழனியப்பருடன் பணிபுரிந்தனர். பின்னர் 1941-ஆம ஆண்டில் திருப்பதி திருவேங்கடவன் கீழ்க்கலை ஆராய்ச்சித்துறைத் தமிழ்ததலைவராக அமர்ந்து பணியாற்றத் தொடங்கினர். அதுமுதல் பதிப்பாளராகவும் ஆராய்ச்சி அறிஞராகவும் விளங்கினர். திருவேங்கடத் தல புராணம், எம்பெருமானர் நெஞ்சுவிடுதூது, சேடமலைப் பதிற்றுப்பத்தந்தாதி, திருக்குறள காளிங்கர் பரிப்பெருமாள் உரை முதலியன பழனியப்பரின் பார்வையில் வெளிவந்தன.

மறுப்புரை

ஆராய்ச்சியில் தாம் கண்ட முடிபுகளை வெளிப்படுத்துவதற்குப் பழனியப்பர் சிறிதும் தயங்கமாட்டார். ஆராய்ச்சியுலகில் தலைசிறந்து நின்ற மறைமலையடிகள் பன்னெடுங்காலம் பேராராய்ச்சி செய்து மாணிக்கவாசகர் வரலாறுங்கால ஆராய்ச்சியும் என்னும் அரியநூலை எழுதி முடித்து வெளிப்படுத்தினர். பழனியப்பர் மேற்படி நூலில் மாணிக்கவாசகர் காலம் தவறு என மறுத்துத் தம் முடிபை வெளி

யிட்டார். மற்றும் திரு. வையாபுரிபிள்ளை, இராகவ ஐயங் கார் முதலியோருடைய முடிபுகள் சிலவற்றையும மறுத் தார்.

பண்பு

பழனியப்பர் சொல்நயமும் பொருள்நயமும் அமையப் பேசுவார். இவருடைய பேச்சில்இளமை நலம் இனிது சிறந்து விளங்கும். "எல்லார்க்கும் நன்றும் பணிதல்" என் பது திருவளளுவர் திருவாக்கு. பழனியப்பர் பேரறிஞராக இருந்தும் பணிவுடைமையைப் பெரிதும் மேற் கொண்டிருந் தார். "பணிவுடையன் இன்சொல்ல னுதல்" ஆகியன பழனி யப்பரிடம் இனிது அமைந்திருந்தன. இவர் இளமையி லேயே இசையறிவும் பெற்றிருந்தார். சித்திரகவி முதலிய வைகளைச் செய்வதினும் பழனியப்பர் வல்லவர். இவருடைய சித்திரகவிகள் உ. வே. சாமிநாதையருடைய பாராட்டுதலை யும் பெற்றுள்ளன. கல்வெட்டறிவு முதலிய ஆராய்ச்சி யறிவிலும் பழனியப்பர் தலைசிறந்து விளங்கினர்.

இறுதி

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்,
பெருமை உடைத்திவ வுலகு"

என்றார் திருவள்ளுவர். உடல்நலத்துடன் இருந்த பழனியப் பர் அறிஞர்உலகம் திடுக்கிட்டுத் திகைக்குமாறு தமது ஐம்பத்தெட்டாவது அகவையில் 1951-ஆம் ஆண்டு பிப்பிர வரித் திங்கள் முதல் நாள் திடீரென்று இவ்வுலக வாழ் வைத் துறந்து விண்ணுடு சென்றார். இவர்தம் பிரிவை யறிந்து கலையுலகம் முற்றும் நிலைகுலைந்து வருந்தியது.

---

௨௨. சு. நல்லசிவன்பிள்ளை

தோற்றம்

தென்பாண்டி நாட்டிலே திருநெல்வேலிக்கு அண்மையில் உளள சம்புலிங்கபுரம என்னுஞ் சிற்றூரிலே 1882-ஆம் ஆண்டு சூன்திங்கள் எட்டாம்நாள் நல்லசிவன் பிள்ளை பிறந்தார். தந்தையார்பெயர் சுபபிரமணியபிள்ளை. தாயார் பெயர் சண்முகததம்மையார். குலம் சைவவேளாண்குலம். நல்லசிவன்பிள்ளைக்கு உடன்பிறப்பாளர் இருவர் தோன்றிக் குழவிப் பருவத்திலேயே காலமாயினர்.

கல்வி

நல்லசிவன்பிள்ளையின் மாதுலர்களாகிய திருவண்ணாதக் கவிராயர் திரவிய சங்கரநாராயணக் கவிராயர் என்பவர்கள நல்ல புலவர்களாக விளஙகியிருந்தனர். அவர்கள் இருவரும தமமருகர் நல்லசிவனுருடைய கல்வியிற் கருத்துச் செலுததினர். போதிக்க வேண்டிய நூல்களேயெல்லாம் முறையாகக் கற்பிததனர். நாளடைவில் நல்லசிவனுர் நல்ல கல்வியறிவு பொருநதப்பெற்றார். நல்லொழுக்கம் பணிவுடைமை இன்னுரை முதலிய நற்பண்புகளும் நல்லசிவனுரிடத்தில் அமைந்தன.

ஆசிரியத்தொழில்

நல்லசிவனுர் தாம் பெற்ற கல்வியைப் பயன்படுத்தத் தக்க நிலையை அடைந்தனர் பதமநாப மங்கலம் கூட்டுடன்காடு, தெய்வச்சிலையாபுரம் என்னும் ஊர்களில் தமிழாசிரியராகத் தொழில் புரிந்தார். 1907-ஆம் ஆண்டில் தம் மாதுலர் மகளைத் திருமணம்புரிந்தார்.

தமிழ்ச்சங்கத்தில் பணி

நல்லசிவனுரின் நல்லியல்பும் அறிவுத்திறனும் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் தலைவராக அந்நாளில் விளங்கிய

இராசராசேசுவர சேதுபதி அவர்கட்குத் தெரிந்தன. சேது பதி அவர்கள் நல்லசிவனுரை அழைத்து அவருடைய அறி வாற்றலே ஆய்ந்து பார்த்து உளநிறைவு கொண்டார். தமிழ்ச் சங்கத்தின் எழுத்தாளர் வேலையில் சிறிது நாள் வைத்தார். பிறகு தமிழ்ச் சங்கத்தில் கல்வி கற்கும் மாண வர்சட்குப் போதிக்கும் பணியில் இருத்தினர். நல்லசிவனுர் தங்கடமையைச் செவ்வையாக ஆற்றி நற்பெயர் எடுத்தார். நல்லசிவனுரிடத்தில் எல்லோரும் நன்மதிப்புக் கொண்ட னர். நல்லசிவனுர் அங்கு பணியாற்றியபோது அருணுசலக் கவிராயர், சேற்றூர் சுப்பிரபணியக் கவிராயர் முதலிய நல் லறிஞர்களும் அங்கு நூல் ஆய்வாளர்களாக இருந்தனர்.

நல்லசிவன் பிள்ளை செய்யுள் இயற்றுவதில் சிறந்து விளங்கினர். இவருடைய பாடல்கள் கேட்பவர்கட்கு இன் பூட்டும் வகையில் எளிய முறையிலும் ஒசைநயத்துடனும் விளங்கின. இதனுல் தமிழ்ச்சங்கத்தில் செய்யுள்கள் இயற் றும் வேலைகள் ஏற்பட்டால் அவ்வேலைகள் யாவும் நல்லசிவ னுரிடமே வந்து சேரும். அம்முறையில் நல்லசிவனுர், சங்க ஆண்டுவிழா வரவேற்புப்பாக்கள் வாழ்த்துப்பாக்கள் முதலியவைகளே இயற்றும் வேலையையும் மேற் கொண்டி ருந்தார். நல்லசிவனுரிடம் சாற்றுக்கவி பெறுதலைப் புலவர் கள் பலர் சிறந்த செயலாக எண்ணினர். உ. வே. சாமி நாதையர், பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் முதலி யோர் நல்லசிவனுரிடம் சாற்றுக்கவிகள் பெற்றுள்ளனர். தக்க நூலாக இருப்பின் எளிதாகவே சிறப்புப் பாயிரங் களே வழங்கி விடுவார். சங்கத்தில் கல்வி பயின்ற மாணவர் கள் நல்லசிவனுரைப் பெரிதும் போற்றிக் கொண்டாடினர்.

நூல் இயற்றல்

உ. வே. சாமிநாதையர் திருப்பனந்தாள் காசி மடத் துப் பத்தொன்பதாவது தலைவர் சாமிநாதத்தம்பிரான்

அவர்களை ஒருமுறை காணச்சென்று கண்டு மகிழ்ந்து உரையாடிக்கொண்டிருந்தார். அப்போது கோவை முதலிய நூல்களைப்பற்றிப் பேச்சு நிகழ்ந்தது. தம்பிரான் அவர்கள் ஐயர் அவர்களைப் பார்த்து, "மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் சைவ வேளாண் மரபினருள் புலமை வாய்ந்த தக்கார் எவரேனும் இருப்பின் அவரைக்கொண்டு நமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய மதுரைச் சொக்கநாதக்கடவுள் மீது வருக்கக் கோவை ஒன்று இயற்றச் செய்யுங்கள். அதற்கு உரிய பரிசு வழங்குவதோடு அந்நூலை மடத்து வெளியீடாக வெளியிடச் செய்கிறோம்" என்று கூறினர். சாமிநாத ஐயரவர்கள் இந்த நல்ல செய்தியை நல்லசிவனார் அவர்களிடம் சாற்றினர்.

நல்லசிவனார் "மதுரைச் சொக்கநாதர் வருக்கக் கோவை" என்னும் பெயருடன் கோவையைப் பாடி முடித்துத் தாமே நேரிற் சென்று கண்டு கோவையைக் கொடுத்தார். அடிகளார் கோவையை ஆராய்ந்து பார்த்துத் தக்க நன்கொடை வழங்கினர். பிறகு அக்கோவை இப்போது இருபதாவது பட்டத்தில் எழுந்தருளியுள்ள உயர்திரு. அருணந்தி அடிகள் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இறுதி

நீண்டகாலம் ஆசிரியத் தொழில் புரிந்து பல புலவர்கள் தோற்றத்துக்குத் தொண்டாற்றி நின்ற நல்லசிவனார் சிலநாள் நோய்வாய்ப்பட்டிருந்து தமது எழுபதாவது அகவையில் பாளையங்கோட்டையில் 1952-ஆம் ஆண்டு மார்ச்சுத்திங்கள் இருப்பத்தாறும் நாள் இறைவன் திருவடி நீழலை எய்தினர். இவர்க்கு மகப்பேறு இல்லை. வளர்ப்புமகன் ஒருவனை எடுத்து அவனையே மகனுகக் கொண்டார்.

உங. கா. ர. கோவிந்தராச முதலியார்

தோற்றம்

கா. ர. கோவிந்தராச முதலியார் காஞ்சிமாநகரிலே 1874-ஆம் ஆண்டு அக்டோபர்த்திங்கள் முப்பத்தொன் ரும் நாள் தோன்றினர். தந்தையார்பெயர் அரங்கசாமி முதலியார். தாயார்பெயர் கமலாம்பாள். கோவிந்தராச ரோடு உடன்பிறந்தார் இருவருந் தோன்றினர். ஒருவர் ஆண், ஒருவர் பெண்.

கல்வி

கோவிந்தராசரின் இளமைப் பருவத்திலேயே தந்தை யார் காலமானர். கோவிந்தராசர் முதலில் செங்கல்வராயர் இலவசப் பள்ளியிற் சேர்ந்து கல்வி பயின்றார், கோவிந்த ராசருக்குத் தமிழ் கற்கவேண்டும் என்னும் எண்ணம் இயற்கையாகவே அமைந்திருந்தது. முதற்கண் பசுபதி நாயகர் என்பவரிடம் திருவேங்கடமாலை முதலிய நூல் களைப் பாடங் கேட்டார். பிறகு இலக்கணத்தை நன்கு கற்கவேண்டும் என்று விரும்பினர். அந்நாளில் அப்பன் செட்டியார் என்பவர் ஒப்பில்லாத இலக்கண அறிஞராய் இலங்கினர். அவரிடஞ்சென்று தமது விருப்பத்தைத் தெரியப்படுத்தினர். அப்பன் செட்டியார் ஒப்புக்கொண்ட உளத்தினராய் நன்னூலைக் கற்பித்தார். பிறகு காஞ்சிபுரம் பேரறிஞர் இராமசாமிநாயுடு என்பவரிடம் தஞ்சை வாணன் கோவை, நாற்கவிராசநம்பி அகப்பொருள், திருக் குறள், கம்பராமாயணம் முதலிய பெருநூல்களைப் பயின் றார். அந்நாளில் இவருடன் கா. நமச்சிவாய முதலியாரும் ஒன்றாகக் கல்வி கற்றார். பல நூல்களைப் பலரிடங் கற் றும் கோவிந்தராசருடைய கல்வியவாச் சிறிதுங் குறைய வில்லை. கோ. வடிவேலுச் செட்டியார் என்பவர் வேதாந்த

நூற் பயிற்சியிலும், இலக்கிய இலக்கண ஆராய்ச்சியிலும், தருக்க நூலிலும் மிக வல்லுநராக, தியாலாசிகல் உயர் நிலைப்பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராக விளங்கியிருந் தார். அவரிடமுஞ் சில நூல்களைக் கற்கவேண்டும் என்று எண்ணினர். அவரை யடுத்து தம் வேணவாவை விளம்பி னர். செட்டியார் கோவிந்தராசரை மாணவராக ஏற்றுக் கொண்டு நன்னூல் இராமாநுசக் கவிராயர் விருத்தியுரை, தண்டியலங்காரம், புறப்பொருள் வெண்பாமாலை, நன்னூல் மயிலைநாதர் உரை முதலிய இலக்கண நூல்களைப் போதித் தார்.

பிறகு கோவிந்தராசர் தொல்காப்பியத்தைக் கற்க எண்ணினர். அதனைத் தாமே படித்தார். ஆழ்ந்து பன் முறை படித்தமையின் பொருள் கோவிந்தராருக்கு நன்கு விளங்கியது. விளங்காமல் நின்ற ஐயப்பாடுகளை அப் போது முதுபெரும் புலவராக இருந்த த. கனகசுந்தரம் பிள்ளை அவர்களிடம் கேட்டுப் போக்கிக்கொண்டார்.

திருமணம்

கோவிந்தராசரின் இருபத்தேழாம் அகவையில் திரு மணம் நடைபெற்றது. வாழ்க்கைத்துணைவியாக வாய்த்த மாதுநல்லாரின் பெயர் சீவரத்தினம். கோவிந்தராசருக்கு ரீண்டநாள் மக்கட்பேறு வாய்க்கவில்லை. பின்னர் பெண் மகவு தோன்றியது. அம் மகவுக்குக் கிருட்டிணவேணி என்று பெயரிட்டு மகிழ்ந்தனர்.

ஆசிரியத் தொழில்

கோவிந்தராசர் முதற்கண் சிறுவள்ளூர் துணை உயர் வுப் பள்ளியில் ஆசிரியராக அமர்ந்தார். பிறகு முத்தி யாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியரானர். கோவிந்தராசர் சிறந்த தமிழ்ப்புலவராயும் எத்தகைய

கடினமான செய்யுட்களையும் எளிதாக விளக்கும் ஆற்றலுடையவராகவும், மாணவாகளை உள்ளன்போடு விரும்பும் பண்புடையவராகவும் இருந்தமையின் இவருடைய புகழ் விரைந்து எங்கும் பரவியது. 1910-ஆம் ஆண்டில் சென்னை பச்சையப்பன் பள்ளியில் துணைத தமிழாசிரியராக அமர்ந்தார். பன்னிரண்டு ஆண்டுகள் வரை துணைத் தமிழாசிரியராக அப்பள்ளியில் தொழிலாற்றிய கோவிந்தராசர் 1922 முதல் 1936 வரை, அஃதாவது வேலையிலிருந்து விலகும் வரையில் தலைமைத் தமிழாசிரியராகவே இருந்தார். கோவிந்தராசர் தம் கடமையைப் புரிவதில சிறிதும் நழுவார். பள்ளிக்குக் குறித்த காலத்தில் செல்வார். ஒரு நாளாயினும் வீணாக விடுமுறை எடுக்கமாட்டார். மாணவர்களைக் கடுமொழி பேசிக் கண்டிக்காமல் இன்னுரை பேசியே கண்டித்துத் திருத்திவிடுவார். மாணவர்கள் இவர்பால நன்மதிப்புக்கொண்டு பெருமைப்படுத்தினர்.

செய்யுள் பாடுதல்

செய்யுள் செய்யுந் திறமை கோவிந்தராசருக்கு இயற்கையாகவே அமைந்திருந்தது. இவர் அவ்வப்போது இயற்றிய தனிநிலைச் செய்யுட்கள் பல. அவைகள் யாவும் சொற்சுவையும், பொருட்சுவையும், திட்பநுட்பச் செறிவும் அணி நலன்களும் அமையப் பெற்றன.

நூல் வேலை

கோவிந்தராசர் பள்ளியில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர்ப் பாடஞ் சொல்லுதல் நூல்எழுதுதல் முதலிய பணிகளை மேற்கொண்டார். இவர்பால் தனிப்பட்ட முறையிற் பலர் கல்விகற்றுச் சிறப்படைந்தனர். யாப்பருங்கலக் காரிகை, நன்னூல் இராமானுசக் கவிராயர் விருத்தியுரை, இறையனர் அகப்பொருள் உரை, வீரசோழியம் பழைய

வுரை, நாற்கவிராசநம்பி அகப்பொருள் பழைய உரை, நேமிநாதம், தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தி, தொல் காப்பிய எழுத்ததிகாரம் இளம்பூரணர் உரை முதலிய நூல் கள் பலவற்றையும் தெளிந்த குறிப்புரைகளுடன் சிறந்த முறையில் பதிப்பிப்பதற்குக் கோவிந்தராசர் பெருந்துணை புரிந்தார்.

அரங்கசாமிப் பாட்டியல், அரிசமய தீபம், இனிது நாற்பது, இன்ன நாற்பது, கார் நாற்பது, சரசுவதியந்தாதி, பன்னிரு பாட்டியல் முதலிய நூல்களுக்கு உரை எழுதி யுள்ளார். மேலும் இவர், ஆழ்வார்கள் உயிர்வருக்கமாலை, சரசுவதி ஒரு பா ஒருபஃது, சரசுவதி வெண்பாப்பத்து, சரசுவதி கலிவிருத்தப்பத்து, சரசுவதி வஞ்சிவிருத்தப் பத்து, சரசுவதி சந்திரகலாமாலை, திருவேங்கடப் பதிற்றுப் பத்தந்தாதி, திருமகள் வெண்பாப்பத்து, திருமகள் கலித் துறைப் பத்து, நம் பாடுவார் சரிதம், மாறன் பஞ்சரத்தி னம் முதலிய செய்யுள் நூல்களை இனிமை ததும்பப் பாடி யுள்ளார்.

உரைநடை நூல்கள்

கோவலன் சரிதை, சங்க நூல், இந்திய வீரர், ஆழ் வார் வரலாறு, ஆழ்வார் வழிக்குரவர் வரலாறு, கண்ணன் வரலாறு, திருப்பாவை ஆராய்ச்சி முதலியன கோவிந்தராசரால் எழுதப்பட்ட உரைநடை நூல்களாம். கோவிந்தராசர் தமது இளமைப்பருவத்திலேயே "அம்பி காபதியும் அரசிளங் குமரியும்" என்னும் நாடகநூலை எழுதிப் பெரும்புகழ் பெற்றார். மேலும் கோவிந்தராசர் ஆராய்ச்சியிலும் வல்லவர். மூல்லைப்பாட்டை நன்கு ஆராய்ச்சி செய்து ஒரு புத்துரை எழுதியிருக்கிறார்.

பாராட்டு

கோவிந்தராசர் செய்த தமிழ்த்தொண்டுகளைப் பாராட்டி அவரைப் போற்றுவதற்கு 22—5—1949-இல் சென்னையில் ஒரு பெருங்கூட்டம் கூடியது. அக்கூட்டத்தில் பலர் கோவிந்தராசரைப் பாராட்டிப் பேசினர். அப்பொழுது பொற்கிழி ஒன்றும் அவருக்கு வழங்கப் பெற்றது.

பண்பு

கோவிந்தராசர், "பாடமேறினும் ஏடு கையிடேல்" என்னும் பழமொழியில் மிகுந்த பற்றுடையவர். எந்தச் சமயத்தினும் எந்த இடத்தினும் கையில் ஏதேனும் ஒரு நூலை வைத்துக்கொண்டுதான் இருப்பர். அந்நூலும் பெரும்பாலும் இலக்கண நூலாகவே இருக்கும். இவர் நன்னூலை ஆறுமுறை தாம் பாடங் கேட்டதாகவும் பன்னிரண்டு முறை பிறருக்குப் பாடஞ் சொல்லியிருப்பதாகவும் அடிக்கடி கூறுவார்.

இறுதி

கோவிந்தராசர் இறுதிக்காலம் வரையினும் தமிழ்த் தொண்டிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்து 1952-ஆம் ஆண்டு சூலைத் திங்களில் சில நாள் நோய்வாய்ப்பட்டிருந்து தமது எழுபத்தெட்டாவது அகவையில் வைகுண்டபதவியடைந்தார்.

உ.சு. திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

தோற்றம்

தமிழ்த்தென்றலாக விளங்கிய பெரியார், திரு. வி. கலியாணசுந்தர முதலியார் 1883-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் இருபத்தாறும் நாள் சென்னைக்கு அண்மையில் உள்ள துள்ளம் என்னும் சிற்றூரிலே பிறந்தார். திரு வி. க. அவர்களின் தந்தையார்பெயர் விருதாசல முதலியார். தாயார்பெயர் சின்னம்மாள். குலம் வேளாண்குலம். விருத்தாசல முதலியார் தற்காலிகமான வேலை ஒன்றை மூன்னிட்டுத் துள்ளத்திற்குச் சென்றார். பிறகு அங்குச் சில ஆண்டுகள் தங்கியிருந்தார். அப்போது மூன்று ஆண் மக்களும் ஒரு பெண்மகளுந் தோன்றினர். ஓர் ஆண் குழந்தை காலமாகிவிட்டது. ஏனைய இருவருமே திரு. வி. உலகநாத முதலியாரும் திரு. வி கலியாணசுந்தர முதலி யாருமே ஆவர். முதலியாரின் முன்னோர்கள் திருவாரூரில் வாழ்ந்திருந்தனர். அதன் அறிகுறியாகவே முதலியார் தம் பெயருக்கு முன்னால் திரு என்பதையுஞ் சேர்த்து வழங்க லானார்.

கல்வி

உலகநாதரும் கலியாணசுந்தரரும் தொடக்கத்தில் தம் தந்தையிடமே கல்வி பயின்றனர். சில ஆண்டுகள் சென்றபின் விருத்தாசல முதலியார் சென்னைமாநகர் சென்று இராயப்பேட்டையில் தங்கினர். அப்போது மக்கள் இருவரையும் இராயப்பேட்டையில் இருந்த பள்ளிக்கூடத் தில் சேர்த்தார். பிறகு 1894-ஆம் ஆண்டில் இருவரும் வெஸ்லியில் நான்காவது வகுப்பிற் சேர்க்கப்பட்டனர். உலகநாதர் மூன்றாம் பாரம்வரை படித்துவிட்டுப் பள்ளிப் படிப்பை நிறுத்திவிட்டார். கலியாணசுந்தரர் தொடர்ந்து

படித்தார். ஒருநாள் சிற்றுண்டி விடுதியில் உழுந்துவடை ஒன்றைத் தின்றார் அவர் அப்பொழுது பத்தியம் உள்ள மருந்து ஒன்றை நோய்நீக்கத்தின் பொருட்டுத் தொடர்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தார் அந்நிலையில் உண்ணப் பட்ட உழுந்துவடை அபதியப் பொருளாகி நீமையைச் செய்யத் தொடங்கிவிட்டது. ஒரு காலும் கையும் முடங்கி விட்டன. அதனால் வெளியே புறப்பட முடியாமல் வீட்டி லேயே தங்கிவிட்டார் மடங்கிய காலுங் கையும் ஒழுங்காவ தற்கு ஓராண்டு ஆகிவிட்டது அடுத்தபடியாக இரண்டு ஆண்டுகள் பலவகையான குடும்பத் தொல்லைகளால் படிக்க முடியாமற் போய்விட்டன.

பிறகு கலியாணசுந்தரர் 1898-ஆம் ஆண்டில் மீண்டும் பள்ளிக்குச் சென்றார். 1904 வரை தொடர்ச்சியாகப் படித் தார். பள்ளிப்படிப்பில் திரு. வி க. முதன்மையாக விளங் கினர். இவருடைய திறமையைக் கண்ட பள்ளியதிகாரிகள் இவர் சம்பளமின்றிப் படிப்பதற்கு ஏற்பாடு செய்தனர். திரு. வி. க. ஆறும் பாரம படித்துக் கொண்டிருந்தபோது யாழ்ப்பாணம் நா. கதிரைவேற் பிள்ளை தமிழாசிரியராக இருந்தார். அவருடன் இவருக்கு நெருங்கிய தொடர்பு ஏற் பட்டது. அதனால் திரு. வி.க. வுக்குத் தமிழ்ப்பற்று மிகுதி யாயிற்று தமிழ் நூல்களைப் பாடங்கேட்பதிற் கருத்துச் செலுத்தினர். இந்நாளில் இராமலிங்க அடிகளின் அருட்பா வழக்கு முதலிய விவகாரங்கள் ஏற்பட்டன. அதில் திரு. வி. க. வும் கலந்தார். மெட்ரிகுலேசன் தேர்வுக்குச் செல் லாமலே திரு. வி. க.வின் பள்ளிப் படிப்பு முடிவு பெற்றது.

தமிழ் கற்றல்

திரு. வி. க., கதிரைவேற் பிள்ளையிடம் தமிழ்நூல் களைக் கற்கத் தொடங்கிச் சில நூல்களைப் பாடங் கேட்

டார். அச் சமயத்தில் கதிரைவேற் பிள்ளை லேகிரிக்குச் சென்று அங்கு இறந்து போனார். பிறகு திரு வி. க. மயிலை தணிகாசல முதலியார் என்பவரிடம் பல நூல்களைப் பாடங் கேட்டார். அவரிடம் வடமொழியுங் கற்றார். பிறகு சமயப்பெரியார் சிலரோடு பழகி அவ்வச் சமய உண்மைகளையும் உணர்ந்து கொண்டார். ம. சிங்காரவேலுச் செட்டியார் என்பவரிடம் டார்வின் கொள்கைகளை உணர்ந்து கொண்டார். மூகமதிய சமய நூல்கள் சிலவற்றைக் கற்று அச் சமயத்தைப்பற்றியும் அறிந்துகொண்டார். இப்படிப் பலரிடம் கல்வி கற்றதோடு பல சமயக் கொள்கைகளையும் உணர்ந்து கொண்டபடியால் திரு. வி. க பேரறிவாளராகப் பிறங்கினார்.

பலவகைப் பணிகள்

1906-இல் திரு. வி. க. ஸ்பென்சர் கம்பெனியில் சேர்ந்து வேலை பார்த்தார். அங்கு இரண்டாண்டுகள் வேலை பார்த்தார். பிறகு ஆயிரம்விளக்கில் உள்ள வெஸ்லியன் பள்ளியில் முதல்பார ஆசிரியராக ஐந்தாறு ஆண்டுகள் வேலைபார்த்தார். அதன்பின் இராயப்பேட்டையில் உள்ள வெஸ்லி கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

1917-ஆம் ஆண்டில் நாடெங்கும் தன்னுரிமைக் கிளர்ச்சி மிகுதிப்பட்டது. அப்போது அன்னிபெசன்ட், அருண்டேல், வாடியா ஆகிய மூவரும் கைதிகளாயினர். அதைக் குறித்து நாட்டில் பெருங்கிளர்ச்சி யேற்பட்டது. நீதிக்கட்சி தன்னுரிமைக் கட்சி என்று இரண்டு கட்சிகள் பலமாகப் போட்டியிட்டு வேலை செய்தன. நீதிக்கட்சி தன்னுரிமைக்கட்சியை ஒடுக்க முயன்றது. அப்பொழுது வெளிவந்த திராவிடன் என்ற பத்திரிகையில் சமயப்

போராட்டம் தலைவிரித்தாடியது. திரு. வி க. தன்னுரிமைக் கட்சியுடன் சேர்ந்து இந்துசமயத்தைத் தாக்கும் கட்சியை ஒழித்துக்கட்ட எண்ணினர். எனவே தன்னுரிமைக் கட்சியிற் சேர்ந்துகொண்டு சுறுசுறுப்புடன் வேலை செய்தார்.

1917-ஆம் ஆண்டில் தேசபக்தன் பத்திரிகையின் ஆசிரியராக அமர்ந்து நல்ல தொண்டு செய்தார். இனிய உரைநடையில் எழுதினர். திரு. வி. க. வின் உரைநடை எல்லோருக்கும் மகிழ்ச்சியை அளித்தது. திரு. வி. க. தேசபக்தனில் எழுதிய தலையங்கங்கள் தமிழ்நாட்டு மக்களை யெல்லாந் தட்டி யெழுப்பின. பிறகு பத்திரிகையின் பொறுப்பாளர்கட்கும் திரு. வி. க. வுக்கும் ஏற்பட்ட கருத்துவேற்றுமை காரணமாகத் தேசபக்தன் ஆசிரியத் தொழிலில் இருந்து விலகினர்.

நவசக்தி

பிறகு திரு. வி. க. நவசக்தி என்னும் கிழமை வெளியீட்டைத் தொடங்கி அப் பத்திரிகை மூலமாக நல்ல தொண்டு செய்தார். ஏறக்குறைய இருபது ஆண்டுகள் வரை நவசக்தி நாட்டுமக்கட்கு நல்ல தொண்டு செய்தது.

அரசியலில் தொண்டு

திரு. வி. க. நான்காம்பாரம் படித்துக் கொண்டிருக்கும்போதே நாட்டு விடுதலையில் ஊக்கங் கொண்டார். சுரேந்திரநாதர், விபினசந்திரர் முதலியோருடைய பேச்சுக்கள் திரு. வி. க. வின் ஊக்கத்துக்கு ஆக்கமளித்தன. 1917-இல் தன்னுரிமைப் போரில் பெரும் பங்குகொண்டு உழைத்தார். 1921-இல் நடந்த காந்தியடிகளின் ஒத்துழையாமைப் போரைத் தென்னாட்டில் முன்னின்று நடத்தி

னர். மாவாட்ட மாநாடுகளில் தலைமைதாங்கி அவைகளைச் சிறப்புற நடத்தினர். 1925-இல் காஞ்சிபுரத்தில் மாகாண மாநாடு திரு. வி. க. வின் தலைமையில் கூடியது. இம் மாநாட்டில்தான் பெரியார் ஈ வெ. ரா. திரு வி. க. வுடன் கருத்து வேற்றுமை கொண்டு பிரிந்தார். சில ஆண்டுகள் இருவருக்குமிடையே சொற்போர் நிகழ்ந்தது அந்நாளில் திரு. வி. க , டாக்டர் பி. வரதராஜலு நாயுடு, ஈ. வே. ரா. ஆகிய மூவரும் ஒன்றாக வேலைசெய்தவர்கள். சில காரணங் களை முன்னிட்டுத் தன்னுரிமைக்கட்சியின் பெரும் பொறுப்புக்களில் இருந்து விலகினர் திரு வி. க.

தொழிலாளருக்குத் தொண்டு

திரு. வி. க. தொழிலாளர் உலகத்துக்குச் செய்த தொண்டுகளை என்றும் மறக்க முடியாது. தொழிலாளர் சங்கம் இந்தியாவில் முதன்முதலாகச் சென்னையில்தான் தோன்றியது. இதனை முயற்சிசெய்து அமைத்தவர்களில் திரு. வி. க. வும் ஒருவர். தொழிலாளர்கள் முதலாளிக ளிடமிருந்து பெறும் பெரும் ஊதியத்திற்கும் பிற நன்மை கட்கும் திரு. வி. க. தான் மூலகாரணர். தொழிலாளர் சங் கத்திற்கு இருபத்தைந்து ஆண்டுகள்வரை தொண்டுசெய் தார். தொழிலாளர் சங்கத்தலைவராக இருந்த வாடியா என்பவர் அப் பதவியில் இருந்துநீங்கிச் சென்றபின், திரு. வி. க. தலைமைப் பதவியை ஏற்றார். உடனே பக்கிங் காம் கர்னடிக் மில்லில் கதவடைப்பு நடந்தது. பிறகு வேலைநிறுத்தம் ஏற்பட்டு ஆறுநாட்கள் வரை நீடித்தது. அக் காலத்தில் சென்னை யெங்கும் துப்பாக்கிப் பிரயோகம், தடியடி, வெடிவீச்சு முதலியன நிகழ்ந்தன. எங்கும் கலக மாக இருந்தது. அந்நாளில் சென்னைக் கவர்னராக இருந்த லார்டு வில்லிங்டன், திரு. வி. க., சர்க்கரைச் செட்டியார்,

ஈ. எல். ஐயர் என்னும் மூவரையும் நாடு கடத்த வேண்டு மென்று எண்ணினர். அந்நாளில் நீதிக்கட்சியின் அமைச் சர் குழு ஆட்சியில் இருந்தது. இவர்கள் நாடு கடத்தப்பட் டால் தங்களுக்குத் தொல்லையுண்டாகுமென்று உணர்ந்து நீதிக்கட்சி அமைச்சர்கள் நாடுகடத்தாதபடி தடுத்துவிட் டனர்.

திருமணம்

திரு. வி. க. அவர்களின் திருமணம் 1912-இல் நிகழ்ந் தது. வாழ்க்கைத்துணைவியாக வாய்த்த மாதரசியின் பெயர் கமலாம்பிகை. திரு. வி. க. ஆறாண்டுகளே அம்மாத ரசியோடு இல்லறம் நடத்தினர். ஆண்மகவொன்றும் பெண் மகவொன்றும தோன்றி விரைவில் மறைந்தன. அம்மை யாரும் இறைவன் திருவடி நீழலையெய்தினர். அத்துடன் இல்லற வாழ்வு முடிந்தது. பிறகு திரு. வி. க. மறுமணஞ் செய்துகொள்ள இணங்கவில்லை. மாதரார் நிலையை உயர்த் துதற்குத் தம்மாலான தொண்டுகளை யெல்லாஞ் செய்தார்.

நூல்கள் எழுதுதல்

பத்திரிகைத் தொழிலில் இருந்து ஓய்வு பெற்றபின் திரு வி. க. நூல்கள் எழுதுவதிலே தமது சிந்தையைச் செலுத்தினர் பெரிய புராணம் என்னும் திருத்தொண் டர் புராணத்திற்கு அரும்பதவுரை, உரை நடை முதலியன எழுதிப் பகுதி பகுதியாகத் திங்கள் தோறும் வெளிப்படுத் தினர். காந்தியடிகளின் கொள்கை தொண்டு நோக்கம் முதலியவைகளைக் குறித்து, 'மனித வாழ்க்கையும் காந்தி யடிகளும்' என்னும் நூலை எழுதினர். திருக்குறளில் முதல் பத்து அதிகாரங்கட்கு விரிவுரை யெழுதி வெளிப் படுத்தினர். பெண்குலத்தின் பெருமையை உயர்த்து தற்காகப், 'பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்

துணை' என்னும் நூலை எழுதினர். தாம் பத்திரிகை முதலியவைகளில் எழுதிய கட்டுரைகளை யெல்லாம் ஒன்று படுத்தித், 'தமிழ்ச் சோலை' என்னும் பெயருடன் வெளிப் படுத்தினர். பேரவைகள் பலவற்றினும் தலைமை தாங்கிச் செய்த சொற்பொழிவுகளைத் 'தமிழ்த் தென்றல்' என்னும் நூலாகத் தொகுத்தார். அடிக்கடி உள்ளத்தில் தோன்றிய கருத்துக்களை யெல்லாம் தனித்தனி நூல் வடிவாக வெளி யிட்டார். பாடல்களாகவுஞ் சிறு நூல்கள் அமைந்து விளங்குகின்றன.

எழுதிய நூல்கள்

1. தமிழ்ச் சோலை அல்லது கட்டுரைத்திரட்டு
2. தமிழ்த்தென்றல் அல்லது தலைமைப்பொழிவு
3. திருக்குறள் விரிவுரை
4. மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்
5. பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை
6. இந்தியாவும் விடுதலையும்
7. பரம்பொருள் அல்லது வாழ்க்கைவழி
8. உள்ளொளி
9. நாயன்மார் வரலாறு
10. இருமையும் ஒருமையும்
11. முருகன் அல்லது அழகு
12. சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து
13. இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்
14. என் கடன் பணி செய்து கிடப்பதே
15. சைவத்தின் சமரசம்
16. சைவத்திறவு
17. சமரச சன்மார்க்கம்
18. தமிழ்நாடும் நம்மாழ்வாரும்
19. இமயமலை அல்லது தியானம்
20. ஆலமும் அமுதமும்
21. கடவுள்காட்சியும் தாயுமானாரும்

22. உரிமை வேட்கை அல்லது நாட்டுப்பாடல்
23. தமிழ் நூல்களில் பௌத்தம்
24. முருகன் அருள்வேட்டல்
25. திருமால் அருள்வேட்டல்
26. சிறித்துவின் அருள்வேட்டல்
27. சிறித்து மொழிக்குறள்
28. நாயன்மார் திறம்
29. நினைப்பவர் மனம்
30. சித்தமார்க்கம்
31. பொதுமை வேட்டல்
32. சிவனருள் வேட்டல்
33. புதுமை வேட்டல்
34. இருளில் ஒளி
35. சமரச தீபம்
36. சைவசமய சாரம்
37. முதுமை உளறல்
38. படுக்கையில் பிதற்றல்

முதலிய நூல்களைத் திரு. வி. க. எழுதி வெளியிட்ட துடன் நாடெங்கும் உள்ள சங்கங்களிலெல்லாம் சொற் பொழிவாற்றியும் தமிழ்வளர்ச்சிக்குப் பெருந்தொண்டு செய்தார்.

இறுதி

அளவு கடந்து கண்ணைப் பயன்படுத்திய படியாலும் முதுமை நெருக்காலும் திரு. வி. க. வின் கண்பார்வை மங்கியது. ஆயினும் பிறர் உதவி கொண்டு அவைகட்குச் சென்று தலைமை தாங்கிப் பேருரைகள் பல நிகழ்த்திச் சிறப்பாக்கி வந்தார். உள்ளத்தெழும் கருத்தைப் பிறரைக் கொண்டு எழுதவுஞ் செய்தார். இறுதிநாளில் இரண் டொரு நாட்கள் யாதுஞ் செய்ய முடியாத நிலையில் இருந்து 1953-ஆம் ஆண்டு செப்டம்பர்த்திங்கள் பதினேழாம்நாள்

இறைவன் திருவடி நீழலை எய்தினர். அஞ்ஞான்று திரு. வி. க வுக்கு. அகவை எழுபது. தமிழ்ப் பெரியாரின் பிரிவு குறித்துச் சென்னைமாநகரமே துன்பத்தில் ஆழ்ந்து இரங்கியது. அறிஞரும் பிறரும் திரு. வி க. வின் உடலைக் கண்டு தமது இறுதி வணக்கத்தைச் செலுத்தினர்.

திரு. வி. க. அவர்களின் பருவுடல் மறைந்ததன்றி, அவர்தம் தண்ணுடற் கூறுகளாகிய கருத்தோவியங்கள் நம்மிடையே நின்று நிலவுகின்றன. அவைகளே நமக்கு ஈத்துச்சென்ற செல்வங்கள். அச் செல்வங்கள் நமக்குத் துணை புரிவன; வழியென்றும் குழியென்றும் நாம் மயங்கா வண்ணம் நம்மை நல்வழியில் ஈர்த்துச் செல்வன. அவைகளே அவர் எழுதியாக்கிய நறுந்தமிழ் நூல்கள் என்று கூறவேண்டுவதில்லை; அந் நூல்களில் தமிழுருவைக் காணலாம்; அன்பைக் காணலாம்; அழகைக் காணலாம்; இன்பத்தைக் காணலாம்; இறையைக் காணலாம்; அவர்தம் பாவும் நடையும் சுவைத் தீந்தமிழின் நறுந்தேறல்கள்; அவைகளை உண்டு வற்றுத இன்ப மாண்பில் திளைப்போமாக.

வாழ்க திரு. வி. க. வளர்க அவர் புகழ்!

கழக வெளியீடு: எஅஎ

தமிழ்ப்புலவர் வரிசை

[எட்டாம் புத்தகம்]

ஆசிரியர்:
திரு. சு. அ. இராமசாமிப் புலவர்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: Aug., 1955

THAMIZHP PULAVAR VARISAI - VIII

[All Rights Reserved]

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., I/140, BROADWAY, MADRAS-1.

Head Office:

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1. C. 1200.

பதிப்புரை

முன்னேற்றத்தை விரும்பும் நாடுகள் எல்லாம், தத்தம் நாட்டுப் புலவர்கள் செய்தருளிய தாய்மொழி நூல்களை விரும்பிப் படித்தலும் படிப்பித்தலும் செய்கின்றன.

அத்துடன், அப் புலவர்கள் வரலாற்றைச் செம்மையுடன் உணர்ந்து அவாதம் அறிவு, ஆண்மை, அன்பு, ஒழுக்கம், தன்னலமின்மை, தாய்மொழிப் பற்று, எல்லாருக்கும் உதவுதல், விடா உழைப்பு, அஞ்சாமை, வாய்மை, கடமை முதலிய நற்பண்புகளை மேற்கொண்டு நடந்து நற்பயன் பெறுகின்றன.

அம் முறையில் நம் நாட்டுப் புலவர் பெருமக்கள் வரலாறுகளையும், அவர்கள் செய்தருளிய நூல்களையும் மாணாக்கர் இளமையிலேயே கற்று அதன்படி ஒழுகுவது, நாட்டுக்கும், மொழிக்கும் செய்யும் நல்தொண்டாகும் எனக்கருதி தமிழ்ப் புலவர் வரிசையில் இதுகாறும் ஏழு நூல்கள் வெளியிட்டுள்ளோம். உங்கள் கையில் மலரும் இந்நூல், இவ்வரிசையில் எட்டாம் புத்தகமாகும்.

இதன்கண் வடமலையப்ப பிள்ளையன் முதல் வித்துவான் தாண்டவராய முதலியார் ஈறாக உள்ள புலவர் பெருமக்கள் வரலாறுகளும், ஆங்காங்கு அவ்வப் புலவர் பெருமக்கள் யாத்த பாடல்களும், உள்ளுறை நயங்களுடன் செவ்விய இனிய எளிய நடையில் எழுதப்பெற்றிருக்கின்றன.

இதனை எங்கள் வேண்டுகோளின்படி ஆக்கித்தந்த திரு. சு. அ. இராமசாமிப்புலவர் அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

இதனையும் முதல் ஏழு புத்தகங்கள் போலவே, ஆசிரியர்களும், மாணாக்கர்களும், பொதுமக்களும் வாங்கிக் கற்றும் கற்பித்தும் புலவர் பெருமக்களுக்குச் செய்யும் கடப்பாட்டினைச் செய்து எங்களையும் ஊக்குவார்களாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

		பக்கம்
க.	வடமலையப்ப பிள்ளையன் ...	1
உ.	பலபட்டடைச சொக்கநாதப் புலவர் ...	8
ங.	திரிகூடராசப்பன் கவிராயர் ...	12
ச.	சிவக்கொழுந்து தேசிகர் ...	16
ஞ.	நாராயண தீட்சிதர் ...	20
ஞ.	மாவைச சின்னகருட்டிப் புலவர் ...	25
எ.	குழந்தைக் கவிராயர் ...	29
அ.	திருமயிலை சண்முகம் பிள்ளை ...	33
கூ.	ந. ச. பொன்னம்பலம் பிள்ளை ...	39
கo.	சபாபதி நாவலர் ...	42
கக.	சோமசுந்தர நாயகர் ...	47
கஉ.	பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் ...	51
கங.	வெண்பாப்புலி வேலுச்சாமிப் பிள்ளை ...	56
கச.	சுவாமிநாத பண்டிதர் ...	60
கஞ.	மாணிக்க நாயக்கர் ...	63
கஞ.	பூரணலிங்கம் பிள்ளை ...	69
கஎ.	பண்டிதமணி கதிரேசச செட்டியார் ...	75
கஅ.	கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை ...	84
ககூ.	சாத்தூர் கந்தசாமி முதலியார் ...	89
உo.	இரசிகமணி சிதம்பரநாத முதலியார் ...	94
உக.	சேலை சகதேவ முதலியார் ...	97
உஉ.	துடிசைகிழார் சிதம்பரனார் ...	99
உங.	கல்கி, கிருட்டிணமூர்த்தி ...	102
உச.	மலேன்மணி அம்மையார் ...	106
உஞ.	நாகை நீலாம்பிகை அம்மையார் ...	111
உஞ.	இராசேசுவரி அம்மையார் ...	119
உஎ.	வேதநாயக சாத்திரியார் ...	122
உஅ.	சரவணப்பெருமாட் கவிராயர் ...	131
உகூ.	பம்மல் விசயரங்க முதலியார் ...	132
ஙo.	திருத்தணிகைக் கந்தப்பையர் ...	134
ஙக.	புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார் ...	138
ஙஉ.	வித்துவான் தாண்டவராய முதலியார் ...	142

தமிழ்ப் புலவர் வரிசை

[எட்டாம் புத்தகம்]

க. வடமலையப்ப பிள்ளையன்

தோற்றம்

புரவலர்களினுஞ் சிலர் புலவர்களாக இருந்து நூல் செய்திருக்கின்றனர். அரசராக இருந்த அதிவீரராமபாண்டியர் தமிழ்நூல்களைக் கற்று அறிஞராகி நைடதம் முதலிய நூல்களைச் செய்திருக்கிறார். குலசேகரபாண்டியர் என்னும் அரசர் இலிங்கபுராணம் பாடியிருக்கிறார். வடமலையப்பபிள்ளையன் மச்சபுராணம் திருநீற்றுத்தலபுராணம் முதலியவைகளைப் பாடியிருக்கிறார். இந்த வடமலையப்பபிள்ளையன் பிறந்தநாடு பாண்டிநாடு எனச் சிலரும் சோழநாடு எனச் சிலரும் கருதுகின்றனர். இவருடைய உண்மை வரலாறு நன்கு அறியக்கூடாமலிருக்கிறது. ஆயினும் நூல் வழக்காற்றிலுள்ளபடி இவ்வரலாற்றை முடிப்பாம்.

வடமலையப்ப பிள்ளையன் குழந்தைப் பருவமாயிருக்கும்போதே பெற்றோர் காலமாயினர். வடமலையப்பருடைய சிற்றப்பனே வடமலையப்பரை வளர்க்கும் பொறுப்பை மேற்கொண்டான். வடமலையப்பர் உலகிற் சிறந்து விளங்குதற்கான வழிகள் யாவற்றிற்கும் அவன் மூட்டுக்கட்டை கொடுத்தான். கல்விப் பயிற்சியில் வடமலையப்பரை விடுதற்கு மனமற்றவனுகினுன். கைத்

தோட்டத்திற்குத் தண்ணீர் இறைக்கப் பழக்கினன். அத் தொழிலிலும் வடமலையப்பரை மிகவும் வருத்தினன். சிற் றப்பன் பாதுகாப்பில் இருத்தலை வெறுத்த வடமலையப்பர் எவருக்குந் தெரியாவாறு ஊரைவிட்டு வெளியேறினர்.

வியத்தகு நிகழ்ச்சி

வடமலையப்பர் வைகைக் கரையோரமாய் நடந்து மது ரைக்கு அண்மையாக வந்து சேர்ந்தார். வைகைக் கரை யில் ஓரிடத்தில் படுத்து உறங்கிவிட்டார். இரவு முழுதும் நடந்து விடியற்காலையில் உறங்கத் தொடங்கினாராகலின் அயர்ந்து உறங்கிவிட்டார். கதிரவன் சுடர் யாண்டும் பரவி யது. வடமலையப்பரின் முகத்தில் கதிரவன் கதிர் நன்கு வீசியது. அப்பொழுது ஒரு கரும் பாம்பு வடமலையப்ப ருக்கு அண்மையில் வந்து மண்டலமிட்டது. படத்தையும் நன்கு விரித்தது. கதிரவன் சுடர் வடமலையப்பர் மீது படாதபடி படத்தை அவருடைய தலைக்கு மேலே உயர்த்தி யது. இந்நிகழ்ச்சியின்போது வடமலையப்பர் பன்னிரண்டு ஆண்டு நிரம்பப்பெற்ற சிறுவராயிருந்தார்.

வைணவ முனிவர்

அந்நாளில் மதுரையை ஆண்டுவந்த நாயக்கருக்கு ஆசிரியராகிய வைணவ முனிவர் காலைக்கடன் கழித்தற் பொருட்டும் நீராடற் பொருட்டும் வைகையாற்றின் கரைக்கு வந்தார். இவர் வடமலையப்பராகிய சிறுவர் உறங்கிக்கொண்டிருத்தலையும் பாம்பு படமெடுத்துப் பாது காத்திருத்தலையும் கண்டார். அவருக்கு மிகுந்த வியப்பும் திகைப்பும் உண்டாயின. "இந்தச் சிறுவன் பிற்காலத் தில் பெருமைபெற்றுப் பிறங்குவான். இவன் தலைக்கு மேல் வெண்கொற்றக் குடை நிழற்றும்" என்று எண்ணி னர். ஆயினும் பாம்பைப்பற்றிய அச்சம் அவரையும் விட

வில்லை. மிகவும் நடு நடுங்கினர். பாம்பு நீங்கும்பொருட்டு ஆரவாரஞ் செய்தார். பாம்பு போய்விட்டது. வடமலையப்பரும் துயில் ஒழிந்தார். வைணவ முனிவர் வடமலையப்பருடைய வரலாற்றைக் கேட்டார். அவரைத் தமது திருமடத்திற்கு அழைத்துக்கொண்டு திரும்பினர். வடமலையப்பர் அந்த முனிவருடன் இருந்து அவருடைய குற்றேவலைப் புரிந்தார். முனிவர் வடமலையப்பர் திடமான கல்விப் பயிற்சி பெறுதற்கு ஆகவேண்டியவைகளையெல்லாம் செய்தார்.

அரசராகிய நாயக்கருக்கு மடத்திலிருந்து கொண்டு போகவேண்டியவைகளைக் கொண்டுபோதற்கும் அங்கிருந்து வாங்கிவர வேண்டியவைகளை வாங்கி வருதற்கும் வடமலையப்பரே இடை நின்றார். இதனால் அரசரைக் கண்டு பழகுதற்கும் வடமலையப்பருக்கு இடம் வாய்த்தது. ஆண்டுகள் பல சென்றன. வடமலையப்பர் திடமான ஆளாக வளர்ந்து அறிவிலும் ஆற்றலிலுஞ் சிறந்து விளங்கினர்.

சிற்றரசர்கள் தொல்லை

அந்நாளில் திருநெல்வேலியினும் அதனைச் சார்ந்த இடங்களினும் இருந்த சிற்றரசர்கள் மதுரை நாயக்க அரசருக்கு உட்பட்டுக் கப்பங் கட்டுபவர்களாக இருந்தார்கள். அவர்கள் தங்கள் கப்பங்களை ஒழுங்காகக் கட்டாமல் தில்லுமல்லுச் செய்தார்கள். இறைப்பொருளை வாங்கச் செல்லும் படைவீரர்களை வழியில் ஆள்வைத்துக் கொன்று விட்டு ஏமாற்றி வந்தார்கள். இச்செயல்களை வடமலையப்பர் கேள்விப்பட்டார். தாம் அவர்களை அடக்கித் திறைப் பொருளை வாங்கிவந்து தருவதாக நாயக்கரிடம் நவின்றார். நாயக்கர் வடமலையப்பரின் ஆசிரியரைக் கலந்து எண்ணிய பின் வடமலையப்பர் கூறியதற்கு இணங்கினர்.

சூழ்ச்சியுங் கொலையும்

வடமலையப்பன் தமது ஆற்றலை வெளிப்படுத்துவதற்குக் காலம் வாய்த்ததை எண்ணி மகிழ்ந்தார். சிற்றரசர்களின் நாட்டிற்குப் போவதற்குச் செய்யவேண்டிய ஏற்பாடுகளையெல்லாஞ் செய்தார். போர்வீரர்களோடு சென்றால் வழக்கப்படி வடமலையப்பரும் கொலையுண்டு மாண்டொழிதல் திண்ணம். இதனை வடமலையப்பர் நன்குணர்வார். ஆகவே இரத்தின வணிகனைப்போலச் செல்லவேண்டும் என்று முடிவு செய்தார். அவ்வணிகத்திற்குரிய ஒன்பான்வகை மணிகளினும் (நவரத்தினங்கள்) போதுமான அளவு எடுத்துக்கொண்டு தந்தச்சிவிகை ஒன்றிற் புறப்பட்டார். படைகளாகப் பலபேர் சூழ்ந்து சென்றார்கள். வணிகர்களைக் கொலைபுரிதல் எந்த நாட்டினும் வழக்கமில்லை. எனவே வடமலையப்பர் உடலுக்கு ஊறு ஒன்றும் நேரவில்லை. இவர் சென்றவிடங்களிலெல்லாம் இவருக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. ஒவ்வொரு சிற்றரசர் மாளிகையினும் தங்கி அவர்கட்கெல்லாம் நண்பரானார். இறுதியில் தாம் வடநாட்டிற்குச் செல்லப்போவதாக அவர்களுக்குத் தெரியப்படுத்தினர். மூக்கூடல் என்னும் ஊரில் தங்கித் தமக்கோர் அரண்மனையையும் அமைத்துக்கொண்டார். தம் படைகளையெல்லாம் அங்கே தங்கியிருக்கும்படி செய்தார். மணிவணிகர் வடநாட்டிற்குச் செல்லப் போவதாக அறிந்த சிற்றரசர்கள் வருந்தினர்கள். வடமலையப்பர் தாம் அவர்கட்கு விருந்து ஒன்று செய்ய விரும்புவதாக ஒரு கடிதம் எழுதினர். அந்தச் சிற்றரசர்கள் விருந்துக்கு வருவதாகத் தெரியப்படுத்தினர்கள். நண்பர் இல்லத்திற்குச் செல்லும்போது படைகளோடு செல்லுதல் தக்கது அன்று என்று எண்ணினர்கள். தம்மோடு சிலரைத் துணையாக அழைத்துக்கொண்டு வந்து சேர்ந்தார்கள்.

விருந்து சமைத்தற்பொருட்டு நூற்றுக்கணக்கான மடைத் தொழிலாளர்கள் அமைக்கப்பட்டிருந்தனர். சிற்றரசர்களுள் கம்பளத்தார், நாயக்கர், மறவர் முதலான வகுப்பு வேறுபாடுகள் இருந்தமையால் அவர்கள் எல்லோரையும் ஒரு வரிசையில் வைத்தல் இயலாததாயிற்று. அது வடமலையப்பருக்கு மிகுந்த நன்மையாயிற்று. ஒவ்வோர் அரசரும் ஒவ்வொரு தனியறையில் வைக்கப்பட்டனர். அவர்களோடு வந்த ஆட்கள் வெளியே நிறுத்தப்பட்டனர். உணவு படைத்தற்குப் பலர் அமர்த்தப்பட்டிருந்தனர். தண்ணீர் கொண்டு செல்பவர் ஏனத்துள் ஒரு கத்தியையுங் கொண்டு செல்லவேண்டும் என்பது வடமலையப்பர் கட்டளை. இவ்வளவு ஏற்பாடுகளும் மறைமுகமாக நடந்தபடியால் சிற்றரசர்கட்கோ அவர்களுடன் சென்றவர்களுக்கோ ஒன்றுந் தெரியாது. அவர்கள் நல்விருந்து சாப்பிடப் போவதாகவே இறுதிவரையில் எண்ணிக் கொண்டிருந்தனர். தண்ணீர் கொண்டுபோகிற ஆட்கள் உள்ளே சென்றதும் மறைத்துவைக்கப்பட்டிருக்கும் கத்திகளை எடுத்து ஒவ்வொருவரும் ஒவ்வொருவரை வேலை முடித்துவிட வேண்டுமென்பதும் கட்டளை. புறத்தேயுஞ் சில வீரர்கள் சிற்றரசர்கட்குக் காவலாளிகளைப்போல அமைந்து நின்றனர். திட்டப்படி அரசர்கள் எல்லோரும் ஒரே கணத்தில் வேலைதீர்க்கப்பட்டார்கள். இவ்வாறு வழங்கும் வரலாறு பொய்யோ மெய்யோ நாம் அறியோம். மதுரைநாயக்கரால் திருநெல்வேலி ஆட்சிக்கு நேரடியாக அனுப்பப்பெற்றவரென வேறு வரலாறுகள் கூறும். எது எப்படியாயினும் வடமலையப்பர் நெல்லையில் அல்லது மூக்கூடலில் இருந்து ஆட்சிபுரிந்ததுமட்டும் தேற்றம். கல்வியறிவிற் சிறந்து புலவராக விளங்கிய ஒருவர் மேற்கண்டவாறு சூழ்ச்சியாகக் கொலைத்தொழில் புரிந்திருப்

பாரா என்பது ஆராய்ச்சிக்குரியதாகும். மேற்படி கொலைக்குக் கழுவாயாகத் திருநெல்வேலியைச் சார்ந்த ஊர்களில் உள்ள சிவன் கோயில்கள் எல்லாவற்றினும் வடமலையப்பர் பெயரால் நண்பகற்போதுக் கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவாம்.

மச்சபுராணம் பாடல்

வடமலையப்பர் நெல்லையில் ஆட்சி தொடங்கியதும் தமிழ்ப்புலவர்கள் பலரையும் தம்முடன் வைத்திருந்தார். எல்லோரும் சேர்ந்து தமிழ் ஆராய்ச்சி செய்து காலங் கழித்தனர். பின்னர் வடமலையப்பர் கி. பி. 1706, 1707-ஆம் ஆண்டுகளில் மச்சபுராணத்தைப் பாடி முடித்து அரங் கேற்றஞ் செய்தார். அப்புராணஞ் சொற்சுவையிலுஞ் பொருட்சுவையிலும் சிறந்து விளங்குகிறது. பாடலின் தொகை ஐயாயிரமாகும்.

மானிலெடும் அம்பரசு தரித்த லானும்
வடுக்கண்ணி அகலாத மெய்யி லனும்
ஊனமிலா உம்பர்மலர் தூவி ஆர்ப்ப
ஒருகாலில் நின்றூடும் உண்மை யானும்
தேனிதழி குழைதோலின் உடையி லெடும்
சீறரவும் அம்புலியும் சேர்த லானும்
நானிலத்தோர் உம்பர்புகழ்ந் தேத்த லானும்
நம்பனையே போலுமால் நைமிசா ரண்யம்.

என்பது நைமிசாரணியச் சிறப்புரைக்கும் பாடலில் ஒன்றாகும்.

புலவர்ப் போற்றல்

வடமலையப்பர் தாம் அறிஞராக அமைந்தமையின் புலவர்களைப் போற்றிக் காப்பதில் தலைமைபெற்று நின்றார். புலவர்கள் பலர் வடமலையப்பரைச் சூழ்ந்திருந்ததன்றிப் பலர் தனிப்பாடல்களைப் பாடிக்கொண்டு சென்றுந் தக்க

வாறு பரிசில்பெற்று மீண்டனர். நாராயண தீட்சிதர் என்பவரும் வேறு சிலரும் கீழ் அதிகாரிகளால் தொல்லைப் படுத்தப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். செய்தியை உணர்ந்த வடமலையப்பர் விரைந்து சென்று அவர்களைச் சிறைமீக்கிப் போற்றியதுடன் அவ்வாறு செய்த கொடிய அதிகாரியை நன்கு ஒறுத்து நாட்டைவிட்டும் விரட்டினர்.

முருகக் கடவுள்

"வடமலையப்பர் அரசுபுரிந்திருந்த காலத்தில் மேலை நாட்டு மிலேச்சர்கள் இந்நாட்டில் மதவெறிகொண்டு வெறிச்செயல்கள் பல புரிந்தனர். திருச்செந்திலம்பதிக் கோயிலுட் புகுந்து அணிகலன்கள் நிதிகள் முதலியவை களைக் கவர்ந்ததோடமையாது முருகக்கடவுளையுந் தூக்கிச் சென்றனர். அக்கடவுளின் மாயையினால் சுழல்காற்றுப் படகினை மோதியடித்தது. அவர்கள் மணங்கலங்கித் திருவுருவைக் கடலில் வீழ்த்திவிட்டுத் தம்வழியே சென்றனர். பிறகு முருகக்கடவுள் வடமலையப்பர் கனவில் தோன்றி நிகழ்ந்ததை அறிவித்தார். தாம் கடலில் கிடக்கும் இடத்தையும் குறிப்பித்துத் தம்மை யெடுத்துப் போய்க் கோயிலில் அமைக்குமாறும் பணித்தார். வடமலை யப்பர் மனமகிழ்ந்து கட்டளைப்படியே சென்று கடலில் இருந்து எடுத்துவந்து கோயிலில் அமைத்து முறைப் படியே குடமுழுக்கும் செய்தார்" என்றும் ஒரு வரலாறு கூறுப.

இறுதி

வடமலையப்பர் பெரும்புகழோடு அரசுசெய்திருந்தா ராயினும் அவருக்கு மக்கட்பேறு இல்லை. அதன் பொருட்டுப் பல தானதருமங்களைச் செய்துபார்த்தார். யாதுசெய்தும் மகப்பேறு உண்டாகவில்லை. ஒருவாறு

மனந்தேறினர். தம் உடன் பிறந்தாளுடைய மகனை வளர்ப்பாக எடுத்து வளர்த்தார். மகனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளையெல்லாம் அவனுக்குச் செய்தார். தங்கருத்து முழுவதையும் இறைவனுடைய அடிகளில் செலுத்தி மேலுலகஞ் சென்றார். அவருடைய வளர்ப்பு மகன் வடமலையப்பரால் எல்லா நலங்களையும் ஒருங்கே பெற்றவனுகையால் மதுரைமன்னனுல் வடமலையப்பரைப் போல் சிற்றரசாக ஏற்படுத்தப்பட்டு அரசாட்சியை மேற் கொண்டிருந்தான். வடமலையப்பர் சைவ வைணவ சமயங் களிடத்தில் ஒரே தன்மையான போக்குடையவர். அரசாட்சியில் பல அலுவல்கட்கிடையே பெரிய நூலைப் பாடி முடித்த அவருடைய முயற்சி போற்றத்தக்கதாகும்.

உ. பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்

தோற்றம்

பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் சற்றேறக் குறைய இருநூற்றைம்பது யாண்டுகளுக்கு முன்னர் மதுரையிலே வாழ்ந்திருந்தார். இவருடைய வழிமுறை யினர், பலபட்டடைக் கணக்கு என்னும் பெயருடைய அலுவலில் மதுரையை ஆண்ட அரசர்களிடம் அமர்ந் திருந்தனர். அதனுல் பலபட்டடை என்னுஞ் சொல் இவர்களுடைய பெயருக்கு முன்னுல் அமைவதாயிற்று. சொக்கநாதப் புலவர் என்னும் பெயருடையவர்கள் மற்றும் சிலர் இருந்தாராகலான் ஒவ்வொருவரும் தத்தம் பெயருக்கு முன்னுல் அடைமொழி ஒன்றைச் சேர்த்து வழங்கலாயினர். அழகிய சொக்கநாதப் புலவர் என்பவரும் இவ்வாறே அழகிய என்னும் அடைமொழியைச் சேர்த்து

வழங்கினர். பலபட்டடைச் சொக்கநாதப் புலவருடைய தந்தையார் பெயர் பலபட்டடைச் சொக்கலிங்கப் புலவர்.

வாழ்க்கை

சொக்கநாதப் புலவர் ஓர் ஊரில் ஒரிடத்தில் தங்கியிருந்து ஓர் அலுவலே மேற்கொண்டு வாழ்க்கை நடத்தியவரல்லர். அந்நாளில் இருந்த வள்ளல்கள் பலரையும் பாடிப் பரிசில்பெற்றுப் பரிசில் பொருள்களோக்கொண்டே வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தார். இவர் அவ்வக் காலங்களில் பாடிய எண்ணற்ற தனிப்பாடல்களில் இறந் தொழிந்தனபோக எஞ்சியன தனிப்பாடலில் இடம் பெற் றுள்ளன. மதுரைப்பதியில் எழுந்தருளிய கடவுள் மீது 'மதுரை மும்மணிக்கோவை' என்னும் ஒருநூல் பாடினர். திண்டுக்கல்லில் எழுந்தருளியுள்ள சிவபெருமான்மீது 'பத்மகிரிநாதர் தென்றல்விடுதூது' என்று ஒருநூல் இயற் றினர். இராமேசுரத்தலத்தில் எழுந்தருளிய கடவுள்மீது தேவையுலா என்றோர் உலாச்செய்தார். அந்நாளில் கன்னி வாடியில் இருந்த பெருநிலக்கிழாராகிய நரசிங்க நாயகர் என்பவர்மேல் வளமடல் ஒன்று பாடினர். திருமாலிருஞ் சோலைமலை அழகர்மீது கிள்ளைவிடுதூது ஒன்றுசெய்தார்.

புலவர் பகை

சொக்கநாதப்புலவர் காலத்தில் சுப்பிரதீபக் கவிராயர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் திருமங்கலந் தாலுக்கா வில் கம்மாளர் குலத்திற் பிறந்தவர். சிற்றின்பச் செய்யுள் பாடுவதில் மிக வல்லவர். நாமகூளப்பநாயகன் காதல் விறலிவிடுதூது முதலியன இயற்றியவர். இவருக்கும் சொக்கநாதப் புலவருக்கும் எப்படியோ பகை மூண்டு விட்டது. சொக்கநாதப்புலவர் சண்பகவல்லார்ச் சிவபெரு மான்மீது வண்டுவிடுதூது என்னும் தூது நூலைப் பாடி அரங்கேற்றஞ்செய்யத் தொடங்கினர். உடனே சுப்பிரதீபக்

கவிராயர் "சண்பக மலரில் வண்டு படியாது. ஆகவே நீவிர் இந்தப் பதிக் கடவுள்மீது வண்டுவிடுதூது பாடியது வழுவாம். இந்நூல் பொருந்தக்கூடியது அன்று" என்று கூறி மறுக்கத்தொடங்கினர். வேறுசிலரும் சுப்பிரதீபக் கவிராயரின் சார்பாக இருந்துகொண்டு அவர்பக்கமே பேசினர். புலவர், "சண்பகமலரில் வண்டு படிதலும் உண்டு. நான் அதனை உங்கட்குக் காட்டுவேன். நாளைக்குப் பொழிலுக்கு எல்லோரும் வருவீர்களாக" என்றுகூறி அரங்கேற்றத்தை நிறுத்திவிட்டார். அன்று இரவு முழுவதும் புலவர் கலிமகளைப் போற்றி வணங்கினர். "தேவி! எனது மொழியில் நீ இருந்து அருள்புரிவது உண்மையானால், நாளை ஒருநாளைக்கு மட்டும் சண்பகமலரில் வண்டு படியுமாறு செய்தருளல் வேண்டும். அவ்வாறு செய்யாதொழியில் என் பெருமைக்கே யன்றி, நின் பெருமைக்கும் இழுக்குண்டாதல் திண்ணம்" என்று கூறிப் போற்றினர். மறுநாள் சுப்பிரதீபக் கவிராயரையும் மற்றும் பலரையும் அழைத்துக் கொண்டு பொழிலுக்குச் சென்றார். சண்பக மலரில் கலிமகளின் திருவருளால் வண்டுகள் வந்து அமர்ந்திருந்தன. அதனை எல்லோருக்குங் காட்டினர். பிறகு வண்டுவிடு தூதின் அரங்கேற்றம் நடைபெற்றது.

விஞ்சைக் கோவை

மற்றும் சொக்கநாதப் புலவர் சேது மன்னரின் அமைச்சராக அமர்ந்திருந்த தெய்வகன்னி என்பவர் மேல் கோவை ஒன்று பாடி அரங்கேற்றினர்.

"கொல்லாத மானென்றும் ஈசன்னகம் மான்இக் குவலயத்தில்
வெல்லாத யானைவெள் ளானையொன் றேமெய்ப் புனமகளார்
இல்லாத வீரம் இவரதன் றேவினி யாதவன்பால்
கல்லாத முத்து ரகுநாதன் விஞ்சையிற் காவலனே."

"எத்திக்கும் போற்றும் ரகுநாதன்
விஞ்சைக் கிருநிதியாய்
வர்த்திக்கு மந்திரி மால்தெய்வ
கன்னி வரையிடத்தே
மூத்திக்கை யால்தொட்டுக் கட்டிக்
கொண்டாளம் மொழிக்குமொழி
தித்திக்கு நெஞ்சுக்கும் நாவுக்குங்
கண்ணுக்குந் தித்திக்குமே."

என்பன அக்கோவையின் இரண்டு செய்யுட்கள். இக் கோவை அரங்கேற்றஞ் செய்யப்பட்ட எட்டாவது நாளில் தெய்வகன்னி இறந்துவிட்டார். சுப்பிரதீபக் கவிராயர், கோவை நூலில் உள்ள ஆநந்தக் குற்றம் காரணமாகவே தெய்வகன்னி இறந்துபோயிருக்க வேண்டும் என்று எண் ணியவராய்ப் பல பட்டடைச் சொக்கநாதப் புலவரைப் பல வாறு இகழ்ந்துரைத்தார். மேலும்,

"தேவைரகு நாதன்மெசசும் தெய்வகன்னி மீதினிலே
கோவையென்று பில்லிவைத்துக் கொன்றுயே—பாவியுன்றன்
இட்டடைச்சொல் லார்பொறுப்பார் எண்டா மடையபல
பட்டடைசொக் காமுழுவம் பா."

என்று வெண்பா ஒன்றினாலும் இகழ்ந்து பாடினார். இவர் இவ்வாறு இகழ்ந்து பாடியதை அறிந்த சொக்கநாதப் புலவர் சுப்பிரதீபக் கவிராயரை இகழ்ந்து பாடுவதற்குச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தார். ஒருவரை ஒருவர் இகழ்வது வழக்கமாகிவிட்டது.

மிதியடி

ஒருநாள் சுப்பிரதீபக் கவிராயர் மிதியடிக் கட்டை மீது ஏறி நடந்துகொண்டிருந்தார். அதனைக் கண்ட பல பட்டடைச் சொக்கநாதப் புலவர், கம்மாளனுக்கு மிதியடி யில்லாமல் சரிப்படவில்லையோ என்று எண்ணியவராய்;

"சாணுருங் கள்ளைக் குடியார்கள் ஈழுவர் தாழுந்தொடார்
கோணுமல் பாத குறடுசெய் வார்கதன் கூலியல்லால்
நாணுமல் ஏறி நடப்பதுண் டோஇந்த நானிலத்தில்
வீணு அடாசுப்ர தீபாஅஞ் ஞான விளக்கொளியே."

என்று இகழ்ந்து பாடினர். இவருடைய தனிப் பாடல்கள் அருமையும் பெருமையும் அமையப் பெற்றவை.

"கான்றெண்டன் இட்ட கனங்குழ
லாளைஎன் கண்மணியைத்
தேன்தொண்டை வாய்சசியைத்
தென்கூடல் வாழ்சிறு பெண்பிள்ளையை
யான்தெண்டன் இட்ட பொழுதே
இயமன் எனக்குமடி
யேன்தெண்டன் இட்டவின் ணப்பமென்
ரோலை எழுதுவனே."

என்பது தனிப்பாடல் திரட்டுப் பாட்டுகளில் ஒன்றாகும். இவர் சைவ சமயத்தினராயினும் வைணவம் முதலியவற்றிடத்தில் சிறிதும் வெறுப்பற்ற பொது நோக்காளராவர்.

ங. திரிகூடராசப்பன் கவிராயர்

தோற்றம்

தென் பாண்டி நாட்டிலே சிறந்து விளங்குவது திருக்குற்றாலம். அத் திருக்குற்றாலத்திற்கு அண்மையில் அமைந்த மேலகரம் என்னும் சிற்றூரிலே ஏறக்குறைய இருநூறு யாண்டுகளுக்கு முன்னர் திரிகூடராசப்பன் கவிராயர் பிறந்தார். கவிராசர் தோன்றிய குலம் வைசிய வேளாள குலம். திரிகூடராசர், திரிகூட நாதர் என்பன திருக்குற்றாலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளிய சிவபெருமானுடைய திருப்பெயர்கள். திருவாவடுதுறை ஆதீனத்தில் எழுந்தருளியிருந்த சுப்பிரமணிய ஞானதேசிக

சுவாமிகள் அவர்கள் கவிராயரது வழிமுறையில் தோன்றியவர்களே.

கல்வி முதலியன

கவிராயர் மிக இளமைக் காலத்திலேயே கற்க வேண்டிய இலக்கண இலக்கிய நூல்களையெல்லாம் தக்கார்பால் ஐயந்திரிபறக் கற்று முத்தமிழ்ப் புலவராக விளங்கினர். இவருடைய குலத்தினர் திருக்குற்றால நாதரையே வழிபடு தெய்வமாகவும் குலதெய்வமாகவுங் கொண்டவர்கள். கவிராயர் பெரும்பாலும் திருக்குற்றாலத்திலேயே தங்கி இறைவழிபாடு செய்தலையும் இறைவன்மீது நூல்கள் இயற்றுதலையும் தமது கடமையாகக் கொண்டார்.

இவர் இயற்றிய நூல்கள்

1 திருக்குற்றாலக் குறவஞ்சி
2. திருக்குற்றாலத் தலபுராணம்
3. திருக்குற்றால மாலை
4. திருக்குற்றாலச் சிலேடை வெண்பா
5. திருக்குற்றால யமகவந்தாதி
6. திருக்குற்றால உலா
7. திருக்குற்றால ஊடல்
8. திருக்குற்றாலப் பரம்பொருண்மாலை
9. திருக்குற்றாலக் கோவை
10. திருக்குற்றாலக் குழல்வாய்மொழி கலிப்பா
11. திருக்குற்றாலக் கோமள மாலை
12. திருக்குற்றால வெண்பாவந்தாதி
13. திருக்குற்றாலப் பிள்ளைதமிழ்
14. திருக்குற்றால நன்னகர் வெண்பா.

என்னும் பதினான்கு நூல்களைக் கவிராயர் திருக்குற்றாலத்திற்குப் பாடினர். பிற சிவப்பதிகள் மீதோ அல்லது மனிதர்கள் மீதோ இவர் செய்யுள் பாடியதாகத் தெரிய

வில்லை. இவரது காலத்தில் பாண்டி நாட்டை ஆட்சி புரிந் திருந்த விசயரெங்க சொக்கலிங்க நாயக்கர் கவிராயரின் பெருமையை நன்குணர்ந்தார். திருக்குற்றாலக் குறவஞ்சி யைக் குறும்பலாவீசர் திருக்கோயிலில் அரங்கேற்றுவித் தார். கவிராயருக்குச் சிறப்புக்கள் யாவற்றையும் முதன் மையாகச் செய்து திருக்குற்றால நாதர் கோயிற் புலவர் என்று சிறப்புப் பெயர் வழங்கினர். நன்செய் நிலங்கள் பலவற்றை நன்கொடையாக வழங்கித் தாமிரத் தகட்டில் உறுதிமொழிச் சீட்டும் எழுதித்தந்தார். அந்நிலங்கள் உள்ளவிடம் இப்பொழுது குறவஞ்சி மேடு என்னும் பெய ருடன் வழங்குகிறது. கவிராயருக்குக் கிடைத்த சிறப்புப் பெயர் நன்செய் நிலம் முதலியவைகளைக் கவிராயருடைய வழிமுறையினர் இன்றும் உரிமையாக வைத்திருக்கின்ற னர்.

சமகாலத்திய அறிஞர்கள்

திரிகூட ராசப்பன் கவிராயருடைய காலத்தில் பழுத்த தமிழ்ப் புலமை வாய்ந்த அறிஞர்கள் பலர் இருந்தனர். அவர்களுள் தலைசிறந்தவர் பாவநாசத் தலத்தில் எழுந்தரு ளிய உலகம்மையின் திருவருள் கைவரப் பெற்ற நமசிவாயக் கவிராயர். மெய்ஞ்ஞானச் செல்வராகிய தாயுமான அடிக ளாரும் இக்காலத்தினரே என்பது அறிஞர்கள் சிலர் முடிவு.

பாநயங்கள்

திரிகூட ராசப்பன் கவிராயருடைய நூல்கள் யாவுமே சொல்லணிகளும் பொருளணிகளும் நிரம்பிக் கற்பவர்கட் குக் கழிபேருவகை யளிப்பனவாக விளங்குகின்றன. திருக் குற்றாலக் குறவஞ்சியில் முருகக் கடவுள் வணக்கம் பாடும் போது,

"பன்னிருகை வேல்வாங்கப் பதினெருவர்
படைதாங்கப் பத்துத் திக்கும்
நன்னவவீ ரரும்புகழ மலைகளேட்டும்
கடலேழும் நாடி யாடிப்
பொன்னின்முடி ஆறேந்தி அஞ்சுதலை
எனக் கொழித்துப் புயநால் ழன்றுய்த்
தன்னிருதாள் தருமீ ருவன் குற்றாலக்
குறவஞ்சித தமிழ் தந்தானே"

என்னுஞ் செய்யுளைப் பாடும்போது பன்னிரண்டு முதல் ஒன்று வரை எண்ணமையப் பாடியிருப்பது எண்ணி மகிழ்தற்குரியது.

"அந்தாதுந் துபிமுழங்கு நன்னகர்க்குற்
றாலலிங்கா அருளைப் பாடி,
வந்தகுற வஞ்சிதன்னை வசந்தவல்லி
கண்டுமனம் மகிழ்சசி கொண்டு,
சந்தமுகை துவளும்இடைத் தவளநகைப்
பவள இதழ்த் தைய லேஉன்,
சொந்தமலை எந்தமலை அந்தமலை
வளம் எனக்குச சொல்லென் றாளே."

"நீங்கக் காண்பது சேர்ந்தவர் பாவம்
நெருங்கக காண்பது கன்னலிற் செந்நெல்,
தூங்கக் காண்பது மாம்பழக் கொத்து
சுழலக் காண்பது பூந்தயிர் மத்து
வீங்கக் காண்பது மங்கையர் கொங்கை
வெடிக்கக் காண்பது கொல்லையின் முல்லை
ஏங்கக் காண்பது மகுல பேரிகை
ஈச ராரிய நாடெங்கள் நாடே."

என்பன போன்ற பாடல்களும் பாடிக் களித்தற்குரியன. இக்குறவஞ்சி எல்லோராலும் போற்றிக் கற்கப் பெறுகிறது. குறவஞ்சிகளில் திருக்குற்றாலக் குறவஞ்சிதான் தலைசிறந்ததென்பது அறிஞர்கள் துணிபு.

ச. சிவக்கொழுந்து தேசிகர்

தோற்றம்

சோழவள நாட்டிலே திருக்குடந்தையை ஒட்டியுள்ள தும், காவிரியின் வடகரையில் அமைந்ததும், ஏரண்ட புரம் என நூல்களில் வழங்கப்பெறுவதும், தேவாரம் பெற்றதும், கோடி லிங்கங்களைக் கண்டு போற்றிய பலனைக் கொடுக்கக்கூடிய சிவலிங்கம் அமையப்பெற்றுள்ளதும், கொட்டையூர் எனத் தற்காலத்தில் வழங்கப்பெறுவது மாகிய சிவப்பதியிலே, ஏறக்குறைய நூற்றைம்பது ஆண்டு கட்கு முன்னர் சிவக்கொழுந்து தேசிகர் பிறந்தார். சிவக் கொழுந்து தேசிகரின் தகப்பனார் பெயர் தண்டபாணி தேசிகர். இவருடைய மரபு வழிவழிச் சைவாசாரிய மரபு. சிவக்கொழுந்து என்பது கொட்டையூருக்குத் தென்பால் உள்ள திருச்சத்திமுற்றத்தில் கோயில்கொண்டெழுந் தருளியுள்ள சிவபெருமானுடைய திருப்பெயர்.

கல்வி

இவர் ஐயாண்டளவில் பள்ளிக்கு அனுப்பப்பெற்றுக் கல்விப் பயிற்சியைத் தொடங்கிவைக்கப் பெற்றார். பள்ளிக் கல்வி முடிந்ததும் வேறு பலரிடம் கல்வி கற்றார். இலக் கண விளக்க நூலாசிரியராகிய வைத்தியநாத தேசிகருடைய வழிமுறையில் தோன்றியவரும் தமிழ்ப்புலமை நிரம்பப் பெற்றவரும் ஆகிய ஒரு பெரியாரிடத்திலே பல இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றுத் தேறியமையால் இவருடைய சிறப்பு மிகவும் பெருமைபெற்றதாயிற்று.

வாழ்க்கை

இவருடைய உலக வாழ்க்கைக்குப் போதிய நிலங்களும் வீடுவாசல் தோட்டந்துரவுகளும் கொட்டையூரில் இவருக்கு

இருந்தன. ஆகவே இவர் காவிரியில் நீராடுவதும் சிவபூசை சிவ வழிபாடு முதலியன செய்வதும், பாடங்கேட்க விரும் பிய மாணவர்கட்குப் பாடஞ்சொல்லுவதும் ஆகிய செயல் களே மேற்கொண்டு மனநிறைவோடு வாழ்க்கையை நடத் திக்கொண்டிருந்தார்.

அரண்மனையில் அலுவல்

அந்நாளில் தஞ்சையில் சரபோசி மன்னர் இருந்தார். அவர் புதிதாக ஒரு நூல்நிலையத்தை அமைத்துப் பல மொழிகளில் உள்ள பலவகை நூல்களை அதில் தொகுத் துப் பல புலவர்களைப் பலவிடங்களில் இருந்தும் அழைத் தார். அந்நூல் நிலையத்தில் இருந்து நூலாராய்ச்சி செய்தல் நூலெழுதுதல் முதலிய அலுவல்களைப் பார்க்கும்படி ஏற் பாடு செய்தார். அம்மன்னர் சிவக்கொழுந்து தேசிகருடைய முததமிழ்ப்புலமையைப் பலராலும் கேள்வியுற்றார். இவரை யும தம்முடைய அரண்மனைக்கு அழைத்து நூலாராய்ச் சிக் குழுவிற் சேர்ததுக்கொண்டார். அங்கமர்ந்து தேசிகர் பல அரிய வேலைகளைச் செய்தார்.

சென்னையில் வேலை

அந்நாளில் சென்னை அரசாங்கத்தார் ஒரு கல்விச் சங்கம் அமைததுப் பல புலவர்களை ஒன்று சேர்த்துப் பல நூல்களை இயற்றுவித்தும், பழைய நூல்களை ஆராய்ந்து பதிப்பித்தும், பலருக்குப் பாடஞ்சொல்லச் செய்தும் பல வேலைகள் செய்தார்கள். அந்தக் கல்விச் சங்கத்தில் விதுவான் தாண்டவராய முதலியார் தலைமைத் தமிழ் ஆசிரியராக அமர்ந்திருந்தார். அவருடன் இருந்து உதவி செய்தற்கு ஒரு தமிழ்ப்புலவரைத் தேடினார்கள். சிவக் கொழுந்து தேசிகரின் அறிவாற்றல் அவர்களுக்கு எட்டி யது. சிவக்கொழுந்து தேசிகரைச் சென்னைக்கு அனுப்பி

வைக்கவேண்டுமென்று சரபோசி மன்னரைக் கேட்டுக் கொண்டார்கள். மன்னரும் தேசிகரைச் சென்னைக்கு அனுப்பிவைத்தார். தாண்டவராய முதலியாரோடு சில காலம் அமர்ந்து தண்டமிழ்த்தொண்டு செய்திருந்தார். அக் காலத்தில்தான் திருவாசகம முதன்முறையாகத் தேசிகரால் அச்சிற் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டதெனத் தெரிகிறது.

மனைவி மக்கள்

தேசிகருக்கு மனைவியர் இருவர். ஆண்மக்கள் இருவர். பெண் மக்கள் ஐவர். திருப்பனந்தாள் காசி மடத்தின் தலைவராக அமர்ந்திருந்து காலஞ்சென்ற காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் சிவக்கொழுந்து தேசிகரின் வழிமுறையினரேயாவர்.

இறுதி

சிவக்கொழுந்து தேசிகர் தொண்ணூறாண்டுகள்வரை மண்ணுலகில் வாழ்ந்து பிறகு பொன்னுடைந்தார்.

நூல்கள்

1. சரபேந்திரர் வைத்திய முறைகள்
2. சரபேந்திரர் சன்னிரோக சிகிசசைகள்
3. சரபேந்திரர் வைத்தியம்
4. கோடீச்சுரக் கோவை
5. தஞ்சைப்பெருவுடையார் உலா
6. சரபேந்திரர் பூபால குறவஞ்சி நாடகம்
7. திருவிடைமருதூர்ப் புராணம்
8. ஆசசாபுரத் தலபுராணம்
9. கொட்டையூர் உலா.

முதலியன சிவக்கொழுந்து தேசிகரால் இயற்றப்பெற்ற அரிய நூல்களாம். இவருடைய பாடல்கள் இனிய எளிய நடையில் அமைந்தவை. சொல்லணி முதலியவைகளை

அழகுபெற அமைப்பதில் இவர் மிகவும் வல்லவர். கோடீச்சுரக்கோவை ஆழ்ந்த கருத்துடன் இயற்றப்பெற்ற அருமையான கோவை. ஒவ்வொரு பாடலும் ஆழ்ந்து எண்ணி அமைதியாகப் பாடப்பெற்றவை.

"செல்வி வளர்திருக் கோடீச்சு ரேசர் செழுங்கிரிமேல்
சொல்விற லுற்ற அறமுதல் நான்கும் தொகுஇயற்றும்
பல்வித மான புகழ்நல்கும் வேந்தர் பரவச்செய்யும்
கல்வி அழகே அழகாம் எவருக்குங் காரிகையே."

என்பது கோடீச்சுரக் கோவையின் 421 ஆவது பாடல்.

"காவென்றும் கீயென்றும் குக்கூ என்றும்
ககவென்றும் கிகியென்றும் கக்கோ என்றும்
கூவிக்கொண் டிருந்த வெல்லாஞ் சும்மா இங்கே
குந்தியிரு நாங்கள்போய் வருவோம் என்று
போவது பார் உனை நாப்புக் காட்டி நீஇப்
போதுபக்கி பிடித்தகினிப் போதும் உன்றன்
ஆவியன்ன சிங்கிதனைத் தேடு சிங்கா
அண்ணல்சர போசிதஞ்சை அணுகித் தானே."

என்பது சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகத்தில் அறுபதாவது பாடல். தேசிகருடைய செய்யுட்களெல்லாம் இவ்வாறே சொன்னயமும் பொருணயமுஞ் செறியப்பெற்றனவாய் விளங்குகின்றன. இவருடைய நூல்களில் கோடீச்சுரக்கோவை, தஞ்சைப் பெருவுடையார் உலா, சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம் ஆகிய நூல்கள் நல்ல முறையில் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்துலாவுகின்றன.

நு. நாராயண தீட்சிதர்

பிறப்பு

நாராயண தீட்சிதர் என்பவர் இற்றைக்கு ஏறக்குறைய முந்நூற்றைம்பது யாண்டுகட்கு முன்னே பாண்டி நாட்டில் தென்திருப்பேரை என்னும் ஊரில் பிறந்தார். அவர் வைணவர் குடியில் பிள்ளைமங்கலத்தார் என்ற குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருடைய தாய்தந்தையர் பெயர் முதலியன அறியக்கூடவில்லை.

கல்வியறிவு முதலியன

நாராயண தீட்சிதர் தம் தந்தையாரிடமும் வேறு சில புலவர்களிடமும் தமிழ்நூல் நன்கு கற்றார். கல்வியறிவிற்குப் பயன் கடவுளுடைய திருவடிகளைப் போற்றுதலேயாம். இதனை நன்கு உள்ளத்தில் பதித்த நாராயண தீட்சிதர் அவ்வூரில் எழுந்தருளிய மகரநெடுங்குழைக்காதர் என்னும் திருமாலிடத்திலே பெருமால்கொண்டார். அப் பெருமானைப் போற்றுதலேயே தமது கடமையாகக் கொண்டார். நமமாழ்வாரிடத்தில் அளவற்ற அன்புடையவர். தென்திருப்பேரைக்கு அண்மையில் உள்ள ஆழ்வார் திருநகரிக்கு நாள்தோறும் சென்று அங்கே எழுந்தருளியிருக்கும் நம்மாழ்வாரையும் போற்றி வணங்கித் துதித்து வருவார். நம்மாழ்வார் தாசரென்றும் சிலர் நாராயண தீட்சிதரை நவின்று வந்தார்கள். தீட்சிதருக்கு நிலம் வீடு வாசல் முதலியன இருந்தன. அவைகளை வைத்துக்கொண்டு அவர் கடவுளைப் போற்றுவதும் கல்வி கற்பதுமாகக் காலங் கழித்துக்கொண்டிருந்தார்.

சிறையில் அடைபடுதல்

ஓர் ஆண்டில் மழை நன்றாகப் பொழியவில்லை. ஆகவே பயிர்கள் நன்றாக விளையவில்லை. தீட்சிதராலும் அவருடைய கூட்டத்தார் சிலராலும் அரசிறையை அளிக்கமுடிய

வில்லை. அந்த நாளிலே அவ்வரியை வாங்குவதற்கென்று வடமலையப்ப பிள்ளையன் என்னும் சிற்றரசர், ஓர் அதிகாரியை நியமித்திருந்தார். இந்த வடமலையப்ப பிள்ளையன் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றவர். தமிழ் அறிவு நிரம்பப் பெற்றவர். அவரைப் பிள்ளையன் என்றே பெரும் பாலும் வழங்குவார்கள். அவர் கார்காத்த வேளாளர் குலத்தில் தோன்றியவர். கடவுளன்பும் நிரம்பப் பெற்றவர். அவர் மச்சபுராணம், நீடூர்த் தலபுராணம் முதலிய நூல்களைச் செய்தவர். தமிழ் அறிஞர்களிடத்தில் வடமலையப்பபிள்ளையனுக்கு மிகுந்த அன்பு உண்டு. அவருடைய ஆதரவில் பல தமிழறிஞர்கள் தமிழாராய்ச்சி செய்து இன்புற்று வாழ்ந்திருந்தார்கள். வடமலையப்பபிள்ளையனால் வரி வாங்குவதற்கு ஏற்படுத்தப்பட்டிருந்த அதிகாரி, அதிகக் காரமாக இருபபான். "தேனுக்கு மணியங் கொடுத்தால் நாளுக்குப் பலமுறை கொட்டும" என்னும் பழமொழிக்குத் தகுதி வாய்ந்தவன். மிகக் கொடிய மனம் உடையவன். தம்மைக் கண்டவர்கள் எல்லோரும நடுநடுங்குமாறு செயல்கள் புரிவதில் வல்லவன். கடவுளன்பு தமிழ்ப் பற்று முதலியவைகளைக் கனவிலும் அறியாதவன். நாராயண தீட்சிதரிடமும அவரைச் சேர்ந்த மற்றவர்களிடத்திலும் வரியை வாங்குவதற்குக் கடுமையான முறைமைகளையெல்லாம் கையாண்டான். தீட்சிதரிடத்திலும பிறரிடத்திலும் எவ்வளவோ முயற்சித்தும் வரியை வாங்க முடியவில்லை. அவர்கள், "விளைவு நன்றாக இல்லையென்றும் மறு ஆண்டில் சேர்த்துச் செலுத்திவிடுவதாகவும் கெஞ்சிக் கேட்டுப்பார்த்தார்கள். அந்த அலுவலாளன் இவர்களுடைய வேண்டுகோளுக்குச் சிறிதும் இணங்கவில்லை. வரி செலுத்தாதவர்களைத திருநெல்வேலிக்குக் கொண்டு போய்ச் சிறையில் அடைத்துவிட்டான்.

சிறையில் கடவுளைப் பாடுதல்

சிறைப்பட்ட தீட்சிதரும் பிறரும் தமது தீவினையை எண்ணி எண்ணி வருந்தினர். தீட்சிதர் தாம் தமது கடவுளைப் போற்ற முடியாமற்போனது குறித்துப் பெரிதும் மனங் கவன்றார். இந்தக் கொடியவன் நமது உடலைத்தான் சிறையில் இட்டானேயல்லாமல் உள்ளத்தைச் சிறையில் இடவில்லையே! அக்கடவுள்மீது பூமாலையினும் சிறந்த பாமாலை புனைந்து வணங்குவோம். பாட்டிற்கிரங்கும் பரமன் நமது கேட்டினை ஒட்டாதிரான் என்று உள்ளத்தில் துணிந்தார். மகர நெடுங்குழைக்காதர்மேல் பாமாலை ஒன்று பாடத் தொடங்கினர். பாடிய பாடல்களையே திரும்பத் திரும்பக் கூறிப் போற்றினர். அவருடன் இருந்த வேறு தமிழ்அறிஞர்களும் பாட்டுப் பாடுவதில் நாட்டங்கொண்டு வாட்டம் போக்கினர்.

நாராயண தீட்சிதர்,

"கன்றுக்(கு) இரங்கிய கற்றாவைப் போலக் கருணையுடன்
என்றைக்(கு) இரங்குவ ரோவறி யேன்எழு பாருமுய்யக்
குன்றைக் கவிகை எனத்தரித் தோர்குழைக் காதரைநாம்
சென்றெப் பொழுது தொழுவதும் பாவங்கள் தீர்வதுமே."

என்று தொடங்கி அறுபது பாடல்கள்வரை பாடினர். அந்தோ நாம் இவ்வாறு சிறையில் அகப்பட்டுக்கொண்டு துன்பப்படுதலை வடமலையப்ப பிள்ளையனிடம் சென்று செப்புவாரும் இல்லையே. தமிழறிஞராகிய அவர் நாம் சிறைப்பட்டு வருந்துஞ் செய்தியை அறிந்தால் வெளியே விட்டுவிடுமாறு கட்டளையிட்டாலும் இடக்கூடுமே என்று எண்ணினர். அதனை ஒரு செய்யுளில் அமைத்து,

"வள்வார் முரசதிர் கோமான் வடமலை அப்பன்முன்னே
வின்வாரும் இல்லை இனி எங்கள் காரியம் வெண்டயிர்பால்
கள்வா! அருட்கடைக் கண்பார் கருணைக் களிறழைத்த
புள்வாக னா! அன்பர் வாழ்வேதென் பேரைப் புராதனனே."

என்று பாடினர். இந்தப் பாட்டை ஒருமுறை இருமுறை அல்ல, பலமுறை பாடினர். ஒருநாள் இந்தப் பாட்டைத் தீட்சிதர் பாடிக்கொண்டிருக்கும்போது சிறைக்காவலன் கேட்டான். "இந்தப் பாட்டில் நம்முடைய அரசர் பெயர் வருகிறதே. இங்கிருப்பவர்கள் தமிழ்ப்புலவர்களாக இருப் பார்கள் போல் தெரிகிறதே. நம்முடைய அரசர் தமிழ்ப் புலவர்கள் இடத்தில் பேரன்புடையவராயிற்றே. இங்கிருப் பவர்கள் புலவர்கள் என்னுஞ் செய்தி அரசருக்குத் தெரிந் தால் நமக்குக்கூட ஏதேனும் தொல்லை யேற்படக்கூடும். நாம் இப்பொழுதே சென்று அரசரிடத்தில் தெரியப்படுத்தி விடுவோம்," என்று முடிவு செய்தான்.

விடுதலை

முடிவு செய்த காவலன் விரைந்து வடமலையப்ப பிள்ளையனிடஞ் சென்றான். "அரசே! சிறையில் சில பேர் அடைபட்டிருக்கிறார்கள். அவர்களிற் புலவர்களும் இருப்பார்கள் போல் தெரிகிறது. அவர்கள் தமிழ்ப்பாடல் களை அடிக்கடி பாடுகிறார்கள். அந்தப் பாடல்களில் தங்க ளுடைய பெயரும் வருகிறது," என்று சொல்லி முடித் தான்.

வடமலையப்பர் திடீரென்று இருக்கையை விட்டு எழுந் தார். குதிரையைக் கொண்டுவரச் சொன்னார். குதிரை வந்தது. அதன்மீது ஏறிக்கொண்டு சிறைவாசலை அடைந் தார். சிறைக்கதவுகள் விரைவாகத் திறக்கப்பட்டன. நாராயண தீட்சிதர் முதலியவர்களுடைய வரலாறுகளை யெல்லாம் கேட்டார். தமிழறிஞராகிய அவருடைய உள் ளம் உருகியது. நாமும் தமிழறிஞராக இருக்கிறோம். இருந்தும் தமிழ்ப்புலவர்கள் இவ்வாறு வருந்துமாறு விட்டு விட்டோமே என்று வருந்தினர். வண்டிகளைக் கொண்டு

வரச்செய்து அரண்மனைக்கு அழைத்துச் சென்றார். அங்கு தமிழறிஞர்கட்கு நல்ல சிறப்பு நடந்தது. "இதைத் தவறு எனக்குத் தெரியாமல் நிகழ்ந்துவிட்டது. பிழை பொறுத்தருளவேண்டும," என்று அறிஞர்கள் அனைவரிடமும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். தமிழறிஞர்கள் தரவேண்டிய வரிகளையெல்லாம தள்ளிவிட்டார் அவர்கள் எந்த நாளுமே வரி கொடுக்கவேண்டியது இல்லை என்று கூறி அவர்களுடைய நிலங்களையெல்லாம வரியில்லா நிலங்களாகச் செய்துவிட்டார். தீட்சிதர் காம பாடிய மாலையை முற்றிலும பாடி முடிக்கச் செய்தார தீட்சிதரும் அம்மாலையைப பாடி முடித்து, "மகர நெடுங்குழைக்காதா பாமாலை" என்று பெயரிட்டு வடமலையப்பபிள்ளையன் முன்னே அரங்கேற்றஞ செய்தார் இவரால் செயயபபட்ட வேறு சில சிறு நூல்கள் மறைந்தபோயின சிறையிலடைத்த அதிகாரி வேலையிலிருந்து விரட்டப்பட்டுப் பல தொலலைகட்கு உள்ளானான்.

இறுதி

தீட்சிதர் நாளதோறும் குழைக்காதரை வணங்கிப் போற்றும வழக்கமுடையவர. காம வருவதற்குச் சிறிது போது தாழ்ததாலும காத்திருக்குமாறு பூசகரிடம் சொலலி ஏறபாடு செயதிருந்தார். ஒருநாள நெடுநேரமாகியும நாராயண தீட்சிதர் கோவிலுககு வரவில்லை. பூசகர் ஒருவரோடு பேசிக்கொண்டு நின்றார. அப்போது நாராயண தீட்சிதர் உள்ளே போவதுபோல் தெரிந்தது பேசிக் கொணடிருநதவரைப் பார்த்து, "சிறிதுபோது இருங்கள தீட்சிதருக்கு வழிபாட்டுப்பொருள (பிரசாதம) வழஙகிவிட்டு வருகிறேன்" என்று கூறிவிட்டு உள்ளே சென்றார். உள்ளே தீட்சிதர் காணப்படவில்லை. தேடிப்பார்த்தும பய

னில்லை. வெளியே வந்து உசாவியபோது அன்று அவர் வைகுண்டபதவியடைந்தார் என்று தெரியவந்தது. அந்தச் செய்தியை எல்லோருக்குந் தெரியப்படுத்தினர். கேட்டவர்கள், "தீட்சிதர் நல்ல அருளாளராகையால் மகர நெடுங்குழைக்காதர் மலரடியை அடைந்தார்" என்று பேசிக்கொண்டார்கள்.

கூ. மாவைச் சின்னக்குட்டிப் புலவர்

தோற்றம்

தண்டிகைக் கனகராயன்பள்ளு என்னும பள்ளு நூலைப பாடிய மாவைச் சின்னக்குட்டிப்புலவர் என்பவர் ஏறக்குறைய இருநூறு யாண்டுகட்குமுன்னா யாழ்ப் பாணம் மாவிட்டபுரத்தில் பிறந்தார்

கல்வி

அந்நாளில் திருமறைக்காட்டைச் சோந்த கணபதிக் குருக்கள் என்பவர் ஐந்திலக்கணங்களையும் கற்று அவை களில் வல்லவராக விளங்கி மாணவர் பலருக்குக கல்வி கற்பித்தார் அவருடைய மாணவா ஒருவா இடதது சின்னகுட்டிப்புலவர் கல்விகற்றுப் பெருமைபுலவரானார்.

கனகநாயக முதலியார்

அக்காலத்தில் கனகநாயக முதலியார் என்பவர் தெல்லிப்பழையில் கல்விச்செல்வத்திலும் பொருட்செல்வத் திலும் சிறந்தவராய் அரசாங்க அலுவலிலே அமர்ந் திருந்தார். சின்னக்குட்டிப்புலவர், அந்தக் கனகநாயக முதலியாரின் இல்லத்துப் புலவராக விளங்கினர். கனக நாயக முதலியார்க்கு நண்பராக அமர்ந்த புலவர் முதலியா ருடைய மகனுக்குக் கல்வி கற்பித்தல், முதலியாருக்குத்

தக்க சமயங்களில் துணைபுரிதல் முதலிய உதவிகளைச் செய்துகொண்டு முதலியாரின் ஆருயிர் நண்பராக விளங்கினர். கனகநாயகமுதலியாரின்மீது பள்ளு என்னும் ஒருவகை நூலைப்பாடி அரங்கேற்றினர். வயலில் வேலை செய்யும் பள்ளர்கள் ஒவ்வொரு வேலையையும் செய்யும் பொழுது பாடுவதற்காக இயற்றப்படுவது பள்ளுநூல். சின்னக்குட்டிப்புலவர் பாடிய நூல் தண்டிகைக் கனகராயன் பள்ளு என்னும் பெயருடன் வழங்குகின்றது.

மகன் திருமணம்

கனகநாயக முதலியார் அரசாங்க அலுவலில் ஈடுபட்டிருந்தாராகலின், கனகநாயக முதலியாருடைய மகன் கந்தப்பன் திருமணத்திற்குப் புலவரே பெண்பேசித் திருமண ஏற்பாடுகளையுஞ் செய்தார். கனகநாயகமுதலியார் அரசிறை வருமானங்களை முடிவுகட்டிய வகையில் கணக்கில் மாறுபாடு காணப்பட்டது. அக்காலத்து வழக்கப்படி முதலியார் கொழும்புத் தலைநகருக்கு வந்து கணக்கைச் சரியாகக் காட்டவேண்டும் என்று கட்டளை பிறந்தது. அவ்வாறே கனகநாயக முதலியார் கொழும்புக்குச் சென்றார். அவர் திரும்பி வருவதற்குள் திருமணத்திற்குக் குறிப்பிட்ட நன்னாள் கடந்துவிடும்போல் தெரிந்தது. குறிப்பிட்ட நாளில் திருமணத்தை முடித்துவிடவேண்டும் என்று புலவர் விரும்பினர். தந்தையார் மீண்டபிறகே திருமணத்தை நடத்தவேண்டுமென்பது முதலியாருடைய மகன் கந்தப்பனின் எண்ணமாக இருந்தது. திருமணம் விரைவில் நிறைவேறுவதுதான் தக்கது என்று புலவர் கந்தப்பனுக்குப் பலவாறு அறிவுரைகள் பகர்ந்து திருமணத்தைச் சிறப்பாக நடத்தி முடித்தார். தந்தையில்லாத கவலை மணமகனுக்குத் தோன்றாதிருக்கவேண்டும் என்று புலவர் எண்ணினர்.

தெல்லிப்பழையில் மணமகன் இல்லத்தில் இருந்து கவாலியில் உள்ள மணமகள் வீட்டையடையும் வரையினும் புலவர் ஓயாமற் பாமாரி பொழிந்துகொண்டே சென்றார்.

திருமணம் முடிந்த சிலநாட்களில் கனகராயக முதலியார் அரசிறை வருமானக் கணக்குகளையெல்லாம் ஒழுங்காகக் காட்டிவிட்டு ஊருக்கு வந்துசேர்ந்தார். மகனுடைய திருமணம் நடந்தேறிய மகிழ்ச்சியை அரசிறை வருமானக்கணக்கில் நேர்ந்த பிழை கெடுத்துவிட்டது. அதனால் முதலியார் தமக்கு இழிவு நேர்ந்துவிட்டதே. நாம் நம்முடைய மகன் திருமணத்திற்குக்கூட இருக்க முடியாமல் போய்விட்டதே என்று எண்ணிஎண்ணி ஏங்கினார். அந்த ஏக்கமே அவருக்கு நோயை உண்டாக்கியது. சின்னக்குட்டிப்புலவர் கனகராயக முதலியாரைத் தெளிவிக்க முயன்றும் முதலியார் தெளிவுபெறவில்லை. ஓராண்டுவரை நோயாக இருந்து பிறகு காலமானார். அவர் காலமாகும்போது புலவரைப் பார்த்துத் தம் மகளையும் குடும்பத்தையும் பாதுகாக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டார். தம் மகளைப் பார்த்துப் புலவருடைய மனங் கோணுமல் நடந்து இறுதிவரை அவரைக் கைவிடாமல் ஆதரிக்கவேண்டும் என்று கட்டளையிட்டார்

புலவர் பாதுகாப்பு

பிறகு புலவர் கந்தப்பனுக்கு வேண்டிய அறிவுரைகளைக் கூறி அவனை நன்னெறியில் இயக்கினார். கந்தப்பன்மீதும் பல பாடல்கள் பாடினார். கனகராயக முதலியாரின் பெருமையை யாண்டுங் கூறுவதே சின்னக்குட்டிப் புலவருக்குப் பெரிய வேலையாக இருந்தது.

ஒருமுறை பலர் கூடியிருந்த இடத்தில் புலவர் கனகராயக முதலியாரைப் புகழ்ந்து பேசினார். அங்கிருந்த

வேறொரு புலவர், "கந்தப்பனுக்கு அரசாங்க அலுவலில்லை" என்று குற்றம் சொன்னார்: உடனே சின்னக் குட்டிப் புலவர், "வேளாம் அரசே அரசு மற்ற வெல்லாம் இன்றுதோன்றி நாளை அழியுமபூ அரசு என்று உலகத்தார் கூறும் பழமொழியை நீர் அறியீரோ" என்று கூறி அவருடைய வாயை அடக்கினர் இறுதிவரை சின்னக்குட்டிப்புலவர் கந்தப்பனுக்கு உறுதுணையாக அமைந்து நின்று பிறகு காலமானர் புலவரின் வழிமுறையினர் கனகராயன முதலியாரின் வழிமுறையினரிடம் இன்றும் அன்புடையவர்களாக இருக்கின்றனர்.

பள்ளு

சின்னக்குட்டிப்புலவர் தமது பள்ளு நூலை 1789-ஆம் ஆண்டுக்குச் சற்று முன்பின்னாகப் பாடி அரங்கேற்றியிருக்கலாம் என்று அந நூலைப்பற்றி ஆராய்ச்சி செய்தவர்கள் எண்ணுகின்றனர். பள்ளு நூலின் பாடல்களைப் பாடும் வழக்கம இந்தியாவில் பல ஆண்டுகட்கு முன்னரே மறைந்துவிட்டது. யாழ்ப்பாணத்தில் பள்ளுப்பாட்டை இன்றும வயலில் வேலைசெய்யும் ஆட்கள் பாடுகின்றனர் என்று தெரிகிறது. இந்தப் பள்ளுதவிரக், கதிரை மலைப் பள்ளு, பருத்திநாயகர் பள்ளு, முகுகூடறபள்ளு முதலிய வேறு பள்ளு நூல்களும் உள்ளன. தண்டிகைக் கனகராயன்பள்ளு கனகராயன முதலியாரின் பெருமை இடையிடையே அமையப் பாடப்பெற்றது.

காளமுட்டப் பள்ளன் விழுந்து மூர்ச்சித்துக் கத்தல்

சிந்து

பாரியர் காவிக் கண்ணியான் தண்டிகைக்
கனகராயகன் காரை வயலில்
மூரியேற்றில் நுகம்வைத்துப் பூட்டி
முடுகச சால்லிட் டுழுகின்ற நேரம்

நீரில் நின்றிள வாளை குதிக்க
நிகரில்லா வெள்ளை காளை வெருண்டு
வீரியப் பள்ளன்மேல் சீறிப் பாய
விளகுசெய்யில் விழுந்தான்காண் ஆண்டே.

பள்ளியர்புலம்பப் பள்ளன் எழுந்திருத்தல்

சிந்து

எங்கள்குலத் தவப்பயனே என்இரண்டு கண்மணியே
உங்கள்இளைக் கொருமருந்தே ஓவியமே தீவியமே
குங்குமப்பூ மேனியெகும் குழைவுறவே நீகிடந்தாய்
பங்கயப்பூ நிகர்முகதைப் பார்ப்பவரார் காப்பவரார்?

குறைந்தமதித் தமியேற்குக் கூறுதுணை வேறுமுண்டோ
புறம்படவே கண்டகளுப் பொய்யாகப் போசசிலேயே
மறந்தவறு மனமுடைய வாழவேநீ எழுந்திரென்னச
சிறந்தபுனல் தெளிந்திடவே தெளிந்துபள்ளன் எழுந்தனனே.

என்பன தண்டிகைக் கனகராயன் பளளுப்பாடல்களிற் சிலவாம்.

எ குழந்தைக் கவிராயர்

தோற்றம்

குழந்தைக் கவிராயர் என்பவா சிவகங்கை நாட்டைச் சேர்நத மிதிலைப்பட்டி எனனும் ஊரில வழிவழியாகத் தமிழ்ப்புலமை வாய்நத குடுமபததில தோன்றியவா இவ ருடைய தந்தையார் பெயா மங்கைபாகக் கவிராயர். அந்த மங்கைபாகக் கவிராயர் நததம பெருநிலக்கிழவராகிய முடிலிங்க நாயகர் புதலவர் சொக்கலிங்க நாயகர்மீது வருக் கக்கோவை ஒன்று பாடிப் பூசாரிப்பட்டி எண்ணும ஊரை நன்கொடையாகப் பெற்றவர்.

கல்வியறிவு நூல் முதலியன

குழந்தைக் கவிராயர் நன்முகக் கல்விகற்றுச் சிறப்படைந்திருந்தார். இவருடைய முன்னோரும் பின்னோரும் பாடியுள்ள நூல்கள் பல. அவர்கள் தங்கள் காலத்தே வாழ்ந்திருந்த சிற்றரசர்களைப் பாடி அவர்களால் சிற்றார் முதலியன இறையிலி நிலங்களாக அளிக்கப்பட்டு வாழ்ந்திருந்தனர். குழந்தைக் கவிராயர் பல செல்வர்களாலும் பெருநிலக் கிழவர்களாலும் நன்கு ஆதரிக்கப்பட்டு வாழ்ந்திருந்தார். சிவகங்கை சமத்தானத்தில் இருந்த தாண்டவராய பிள்ளை என்பவர்மீது மான்விடு தூது என்னும் நூலைப் பாடி அவரால் பலவகையான சிறப்புக்களைப் பெற்றார். இவர் பாடிய வேறு நூல்களும் தனிப்பாடல்களும் உள்ளன.

நெல் நன்கொடை

குழந்தைக் கவிராயரால் மான்விடு தூதையும் வேறு பல தனிப்பாடல்களையும் பெற்ற தாண்டவராய பிள்ளை இவருக்கு ஆயிரக்கலம் நெல் நன்கொடை வழங்குமாறு தம் கீழுள்ள ஏவலருக்குக் கட்டளையிட்டனர். அந்த ஏவலர்கள் அந்தக் கட்டளையை நிறைவேற்றற்கு முயலாமல் காலங்கடத்தினர்கள். அப்பொழுது கவிராயர்,

"அருள்விசய ரகுநாதப் பெரியவுடை யாத்தேவர்
அவாகள் தந்த
நிருபமுந்தாண் டவராய சாமிசொன்ன உத்தரவும்
நிலையா என்றல்
திருவனுடைப் பட்டமும்போய்ப் பஞ்சகருத்
தாக்களுடைத் தொழிலு மாறி
இருசுடரும் ஒளிமழுங்கி எழுபுவியும் இருளுறைந்த
என்ன லாமே."

என்னுஞ் செய்யுளைப் பாடினர். தம் கட்டளை போற்றி மதிக்கப்படாமையைக் கண்ட தாண்டவராய பிள்ளை

மீண்டுங் கடுமையான கட்டளை பிறப்பித்தார். உடனே கவிராயருக்கு நெல் அளக்கப்பட்டது. "சாமி வரங் கொடுத்தும் பூசாரி இடங்கொடுக்கவில்லை" என்னும் பழமொழி நெல் அளப்பதற்குத் தில்லுமல்லுச் செய்தவர் கள் செயலில் நன்கு பொருந்திவிட்டது. தமக்குப் பல வாறு பேருதவி செய்து மான்விடு தூது என்னும் நூலை யும் பெற்ற தாண்டவராய பிள்ளை இறந்தபோது இக் கவிராயர் மனம் வருந்தி,

"கருணை கரமுல்லைத் தாண்டவ ராயகங் காகுலனே
இருணீடு நீவந் திராநாடி நீவந் திருந்தசபை
பொருணீடு நாவலர் வித்யாப்ர சங்கம் பொருந்துமையோ
தருணை தருணம் அறிந்தே உதவுந் தயாநிதியே"

என்னும் பாடலைப்பாடி வருந்தி இரங்கினர்.

செய்யுளின் சிறப்பு

குழந்தைக் கவிராயர் பேரறிஞராக விளங்கியதற்கு ஏற்ப அவருடைய பாடல்களும் பலித ஆற்றலில் சிறந்து விளங்கின. குழந்தைக் கவிராயர் ஒரு நாள் நத்தம் பெரு நிலக்கிழாரிடம சென்றுவிட்டுத் தம் பல்லக்கில் ஏறிச் சிங்கம்பிடாரி [சிங்கம் புணரி என்று இந்நாளில் செப்பு கின்றனர்] என்னும் ஊர்வழியாக வந்துகொண்டிருந்தனர். அந்தணப்பெண்கள் சிலர் அடுத்த ஊருக்குச் செல்ல எண்ணினர். கவிராயருடைய பல்லக்குத் துணையோடு போய்விடலாம் என்று எண்ணிப் பல்லக்கைத் தொடர்ந்து வந்தனர். பல்லக்குச் சிறிது முந்தியது. அந்தச் சமயத் தில் கள்ளர்கள் சிலர் அந்தணப் பெண்களை வழிமறித்துத் துன்பப்படுத்தி அவர்களுடைய நகைகள் தாலி முதலியவை களைக் கைப்பற்றிக்கொண்டனர். துன்பம் அடைந்த அந்தப் பெண்கள் கவிராயரிடம் வந்து தமக்குற்ற அல்லலைத் தெரி

வித்தனர். அதனைக்கேட்டு மனம் வருந்திய கவிராயர், அவ்வூரில் உள்ள ஐயனார்மீது,

" அண்டர்தொழுஞ் சிங்கையிற்சே வகராயா
கேட்டாயோ ஐயோ உன்றன்
வண்டுவிழி மலர்மாதர் பூரணபுட்
கலைதாலி வாங்கி ஞரோ
விண்டுலவு கள்ளர்கள்வந் தென்பிறகே
தொடர்ந்துவந்த மேலாம் சாதிப்
பெண்டுகளே அணிகவர விட்டாயே
கெட்டாயே பேர்பட் டாயே."

என்னுஞ் செய்யுளைப் பாடினர். ஐயனருடைய அருளால் அந்தக் கள்ளர்களுக்குக் கண்பார்வை தெரியாமல்போய் விட்டது. ஆகவே, அவர்கள் மிகுந்த அச்சமடைந்தனர். உடனே அவ்வூரிலுள்ள அதிகாரியிடம் தட்டுத் தடுமாறிச் சென்று நிகழ்ந்ததைக் கூறித் தாங்கள் பறித்த தாலி முதலியவைகளைக் கொடுத்துத் தாங்கள் செய்த பிழையைப் பொறுக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டனர். அதிகாரியும் அணிகலன்களை உரியவர்களிடம் கொடுத்து அந்தக் கள்ளர்களின் குற்றத்தையும் மன்னித்தார். குழந்தைக்கவிராயர் மிகுந்த சிறப்போடு நெடுநாளிருந்து காலமானர்.

அ. திருமயிலை சண்முகம்பிள்ளை

தோற்றம்

பிறகாலத்தில் திருமயிலையில் வாழ்ந்திருந்தமையின் திருமயிலை சண்முகம் பிள்ளை என்று பெயரடைந்த சண்முகம் பிள்ளை 1858 ஆம் ஆண்டு சென்னைக் குயப்பேட்டையிற் பிறந்தார். சண்முகம் பிள்ளையின் தந்தையார்க்கு மனைவியர் இருவர். அவர்களுள் மூதத மனைவியாா வயிற்றில் தோன்றியவர் சண்முகம் பிள்ளை. சண்முகம் பிள்ளையின் தந்தையார் வைணவ சமயத்தினர். ஆயினும் சைவத்தினிடமோ பிற சமயங்களிடமோ சிறிதுமவெறுப்பற்றவர். ஆகவேதான் தம் மகனுக்குச் சண்முகம் என்று பெயர் இட்டனர்.

கல்வியறிவு

பள்ளிக் கல்வியை சண்முகம் பிள்ளை முயற்சியாகக் கற்றார். சிறித்துவக் கல்லூரியிலும் சிறிது நாள் கல்வி பயின்றார். இவருடைய நோக்கம் தமிழ் கற்றுச் சிறப்படையவேண்டும் என்னும் போக்குடையதாக இருந்தது. அந்நாளில் புரசையில் அட்டாவதானி சபாபதி முதலியார் என்பவர் சிறந்த தமிழ் அறிஞராக விளங்கினர். சண்முகம் பிள்ளை சபாபதி முதலியாரைத் தமிழாசிரியராகக் கொண்டு தமிழ்க்கல்வியை வரன்முறையாகக் கற்றுத் தெளிந்து பிறருக்குக் கல்வி புகட்டத்தக்க ஆற்றலையும் அடைந்தார். அந்நாளில் தமிழ் படித்துணாந்தவர்கள் தக்கார் வாயினல் தமிழ்ப்புலவர் என்று கூறப்பெற்றமையொன்றினனே தமிழ்ப்புலவர்களாகத் திகழ்வது இயற்கை. இவ்வாறு தமிழ்ப்புலவராகிய சண்முகம் பிள்ளை தமது கல்வியை மேலும் பெருக்கிக்கொள்ள விரும்பினர். கோம

ளேசுரன் பேட்டையில் அந்நாளில் இராசகோபால பிள்ளை என்பவர் கம்பராமாயணம் இலக்கணம் முதலிய நூல்களில் வல்லவராகத் திகழ்ந்திருந்தார். சண்முகம் பிள்ளை இராச கோபால பிள்ளையிடம் இராமாயணம நன்னூல் முதலிய நூல்களைப் பாடங்கேட்கத் தொடங்கினர்

இராசகோபால பிள்ளை கடுமையான வைணவ மனப் பான்மை கொண்டவர். சைவ சமயத்தினிடத்தும் சிவ பரம்பொருளினிடத்தும் அளவற்ற வெறுப்புடையவர். கோமளேசுரன் பேட்டை என்னும் பெயரில் 'ஈசுவர' என் னும் ஒலி இருப்பதற்காக அந்தப் பேட்டையின் பெயரைக் கோமளபுரம் என்று மாற்றிவிட்டார். மேலும் தமமிடம் படிக்க வருபவர்களின் பெயரிலும் வைணவ மாற்றங்கள் சேர்ப்பார். வைத்தியநாத முதலியார் என்பவரை வாசு தேவ முதலியாராக மாற்றினர். நடராச முதலியாரை நாராயண முதலியாராகச் செய்தார். சண்முகம் பிள்ளை யின் பெயரோடு சீனிவாச என்பதனையுஞ் சேர்த்துச் சீனிவாச சண்முகம்பிள்ளை என்று மாற்றினர். தாம் அச்சிட்ட வில்லிபாரதத்தில் இருந்த சிவபரமான பல பாடல்களை நீக்கிவிட்டு அச்சிட்டார். இவ்வாறு இராச கோபாலபிள்ளை அச்சிட்டமையால்தான் ஆறுமுக நாவலர் பாரதத்தை உள்ளபடியே தாம் அச்சிட்டு வெளிப்படுத்தி னர். சண்முகம்பிள்ளை இராசகோபால பிள்ளையிடம் கம்ப ராமாயணம் நன்னூல் ஆகிய இரண்டையுங் கற்றுக் கொண்டார்.

ஆசிரியத் தொழில்

சண்முகம்பிள்ளை இலக்கண இலக்கிய நூற்பயிற்சியில் வல்லவரானதும் தமிழாசிரியத் தொழில் அவரைத் தேடிக் கொண்டு வந்தது. தொண்டமண்டலம் துளுவவேளாளர்

உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியரானார். மாணவர்கட்குக் கல்வி போதிக்கும் ஆற்றல் சண்முகம்பிள்ளைக்கு நன்கு அமைந்திருந்தது. அக்காலத்தில் அபபன் செட்டியார் என்னும் பெயருடைய மற்றொரு தமிழ்ப்புலவரும் சண்முகம்பிள்ளையோடு தமிழாசிரியராகப் பணிபுரிந்துகொண்டிருந்தார். சண்முகம்பிளளை அமைதியான பொறுமைக் குணம் உடையவர். அப்பன் செட்டியாரோ சண்முகம் பிள்ளைக்கு நேர்மாறானவர். அளவு கடந்த சினம் உடையவர். நினைத்த பொழுதெல்லாம் மாணவர் மீது சீறிவிழுவார். சண்முகம் பிள்ளைக்கு மக்கட்பேறில்லை. அதனல் ஊரார் மக்களையெல்லாம தம் மக்களாகவே எண்ணி எல்லாப் பிள்ளைகள்மீதும் அன்பு செலுததினர். பிற ஆசிரியர்கள் மாணவர்களை அடிப்பதைக் கண்டால் சண்முகம்பிள்ளை அந்த ஆசிரியர்களைக் கண்டிக்கத் தொடங்கிவிடுவார். ஒருநாள் அப்பன் செட்டியார் சரவணன் என்னும் ஒரு மாணவனை அடித்துவிட்டார். அடியுண்ட சரவணன் அழுது கொண்டு நின்றான். அப்பன் செட்டியார் மீது சண்முகம் பிள்ளைக்கு அளவு கடந்த சினம் உண்டாகிவிட்டது. அவர் அப்பன் செட்டியாரைப் பார்த்து, "நீர் ஏன் அந்த மாணவனை அடித்தீர்? தலைமையாசிரியரிடம் சொல்லி உமக்குச் சரியான சூடு கொடுக்கச் சொல்லுகிறேன் சிறிது பொறும்" என்று கூறிவிட்டுத் தலைமையாசிரியருடைய அறையை நோக்கிச் சென்றார். அப்பன் செட்டியார் சண்முகம்பிள்ளை செல்லும் வழியை மறித்துக் கொண்டு, "இனிமேல் எந்த மாணவனையும் அடிக்கவில்லை. தலைமையாசிரியரிடம் வெடிவைக்க வேண்டாம்," என்று வேண்டிக் கொண்டார். சண்முகம்பிள்ளையும் அப்பன் செட்டியார் வேண்டுகோளுக்கிணங்கித் தலைமையாசிரியரிடம் சொல்லாமல் நிறுத்திக் கொண்டார்.

கா. ரா. நமசிவாய முதலியார்

சண்முகம்பிள்ளையின் வீட்டில் எப்பொழுதும் மாணவர் பலர் கூடியிருப்பார்கள். ஒவ்வொருவரும் தத்தமக்குத் தோன்றிய இரண்டொரு நூல்களைப் பாடங்கேட்டுவிட்டு ஒய்ந்துவிடுவார்கள். கா. ரா. நமசிவாய முதலியார் அந்நாளில் இளைஞராக விளங்கினர். சண்முகம்பிள்ளையின் புலமையைப் பலராலும் கேள்விப்பட்ட நமசிவாய முதலியார் தமக்குக் கலவி கற்பிக்க வேண்டுமென்று சண்முகம் பிள்ளையை வேண்டிக்கொண்டார். சண்முகம்பிள்ளையும் அதற்கு இணங்கி ஐந்திலக்கணங்களையும் இலக்கியங்களையும் நமசிவாயருகருக்குக் கற்பித்தார். நமசிவாயர் மற்றைய மாணவர்களைபபோல சின்னாள் பாடங் கேட்டுவிட்டு நின்று விடவில்லை. பன்னிரண்டு யாண்டுகள் வரை பாடங் கேட்டார். நல்ல தமிழ்ப் புலவர் ஒருவரிடம் ஒரு மாணவன் பன்னிரண்டு யாண்டுகள் வரை பாடங் கேட்டான் என்றால் அவன் அடையும் அறிவுத திறமைக்கு ஓர் எல்லையும் உரைக்க இயலுமோ? நமசிவாயர் தாம் கல்வி கற்றுச் சிறப்படைதற்குக் காரணமாக இருந்த ஆசிரியரைப் பிற்காலதத்தில் மறந்துவிடவில்லை. ஆசிரியரின் மனைவியைத் தம் தாயைப்போல் பாதுகாத்து ஆவனசெய்தார்.

நூலாசிரியர்

சண்முகம்பிள்ளை தமிழாசிரியராகப் பணிபுரிந்ததுடன் நின்றுவிடவில்லை. தமது பெயர் நிலத்தில் நிலைதது நிற்குமாறு நூல்களுமை செய்தார். இராமாயணம் உரை பற்றதாக விளங்கிய அந்நாளில் அயோத்தியா காண்டத்திற்கு ஓர் அரிய உரை இயற்றினர். மணிமேகலை மூலத்தை மட்டும் நன்கு ஆராய்ந்து அச்சிற் பதிப்பித்து வெளியிட்டார். நன்னூல் விருத்தியுரை, தஞ்சைவாணன் கோவை

யுரை, மச்சபுராணம் என்னும் நூல்களையும் பதிப்பித்து வெளியிட்டார். கம்பராமாயண அயோத்தியா காண்ட உரையையே யன்றிப் பொன் வண்ணத் தந்தாதியுரை, திருக்கைலாய ஞானவுலாவுரை, திருவாரூர் மும்மணிக்கோவையுரை என்பனவும் இவரால் எழுதி வெளியிடப்பட்டன.

இயற்கை

சண்முகம்பிள்ளை அமைதிப்பண்பு மிகுதியும் அமையப் பெற்றவர். வெளிப் பகட்டு முதலிய தீய குணங்கள் இல்லாதவர். மாணவர்கட்குக் கல்வி போதிப்பதினும் நூல்கள் இயற்றுவதினும் இவர் பேராற்றல் படைத்திருந்தாராயினும் சொல்லாற்றல் - அஃதாவது அவைகளிலே பலருக்கு அறிவுரை கூறும் ஆற்றல் இவரிடம் அமையவில்லை. இவரது புகழைக் கேள்வியுற்று வரச்செய்து பார்த்தார் திருவகந்தபுரம் சுந்தரம்பிள்ளை. அவையில் எதுவுஞ் சொல்ல முடியாத இவருடைய நிலைமை அவருக்கு மிகுந்த வியப்பை அளித்தது. அயோத்தியா காண்டத்தில் இவருக்கு ஈடுபாடு மிகுதியும் உண்டு. அக் காண்டத்தை இவர் படிக்கும்போது உள்ளம் உருகிக் கண்ணீர் விடுவாராம். பின்னாளில் இவர் திருமயிலையை அடுத்த செந்தோம் கல்லூரியில் ஆசிரியராக அமர்ந்து திருமயிலையையே தமது இருப்பிடமாக இறுதிவரை கொண்டிருந்தார்.

இவர் காலமானபோது கா. ரா. நமசிவாய முதலியார் பாடிய இரங்கற்பாக்களில் ஒன்று,

“அரிந்தமன்சீர் எடுத்துரைக்கும் காப்பியத்தின்
அரிவரிதாய் அகத்தில் உற்ற,
விரிந்தபொருள் எவ்வெவரும் இறும்பூது
கொளப்புகலும் மேதக் கோயே,

பரிந்தமனத் தன்னையினும் இனிதாகப்
பன்னூலும் படிற னேற்குத்,
தெரிந்திடசசொற் றெனையாண்ட சண்முகற்
பெயர்க்குரிய சீரி யோயே."

என்பதாம். இவரால் இயற்றப் பெற்றனவும் பதிப்பிக்கப் பட்டனவுமான நூல்கள் பின்வருபவைகளாம்:

1. வடதிருமுல்லைப் பதிற்றுப்பத் தந்தாதி
2. திருப்போரூர் ஆண்டவன் பதிற்றுப்பத் தந்தாதி
3. சென்னை விநாயகர் பதிற்றுப்பத் தந்தாதி
4. கூவம் திரிபுரசுந்தரி பதிற்றுப்பத் தந்தாதி
5. கழுகாசல சதகம்
6. வேதகிரீசர் வண்ணம்
7. சந்தானகுரவர் நான்மணிமாலை
8. பழனி மும்மணிகோவை
9. கந்தகோட்ட மாலை
10. விநாயகர் இரட்டைமணிமாலை
11. திருத்தணிகைமாலை
12. இராச ராசேசுவரிமாலை
13. வடிவுடையம்மைமாலை
14. மாசிலாமணிமாலை
15. சென்னைக் கந்தர்மாலை
16. கந்தரநுபூதி உரை
17. பிச்சாடன நவமணிமாலையுரை
18. கம்பராமாயணம் அயோத்தியா காண்டம் உரை
19. திருமுல்லைவாயிற் புராணம்
20. சிற்றிலக்கண விளக்கவிடை
21. கந்தபுராண வசனம்
22. மணிமேகலை மூலம்
23. நன்னூல் விருத்தியுரை
24. தஞ்சை வாணன் கோவையுரை
25. மச்சபுராணம்
26. திருமயிலைக் கலம்பகம்

27. திருமயிலை உலா
28. சிற்றம்பல நாடிகள் சாத்திரக்கொத்து
29. கந்தசாமி தோத்திரம்
30. மாணிக்கவாசக சுவாமிகள் மாலை
31. கபாலீசர் பஞ்சரத்தினம்
32. திருத்தொண்டர் கீர்த்தனம்
33. கற்பகவல்லிமாலை
34. நவமணிமாலை
35. உயிர்வருக்கக் கோவை
36 புவனும்பிகை சோடசயாகோத்தவமாலை
37. விண்ணப்பமாலை
38. சவுந்தரநாயகி மாலை
39 ஆளுடைய அரசு தோத்திரமாலை
40. பொன்வண்ணத் தந்தாதியுரை
41. திருக்கைலாய ஞானவுலாவுரை
42. திருவாரூர் மும்மணிக்கோவையுரை

கூ. ந. ச. பொன்னம்பலம்பிள்ளை

தோற்றம்

யாழ்ப்பாணத்து நல்லூரிலே ஆங்கிலம் 1836-ஆம் ஆண்டுக்குச சரியான தமிழ் ஏவிளமபியாண்டு சித்திரைத் திங்கள் இருபத்துநாணகாம் நாள் ந. ச. பொன்னம்பல பிளளை பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் சர வணமுத்துச் செட்டியார். குலம் கார்காத்த வேளாளர் குலம. பொன்னம்பலம்பிளளை சிறுவராக இருக்கும் போதே அவருடைய தந்தையார் காலமானார். அக்காலத் திலே அரசாங்க அலுவலும் அதிகாரச் சீர்த்தியும் பெருந் தகைமையும வாய்ந்தவர்களாக இருந்த இவருடைய மாமன்மார்களால் இவர் செவ்விய முறையில் நன்றாக

வளர்க்கப்பட்டார். செந்தமிழ் நாட்டிலே சிறுஞ்சிறப்பும் வாய்ந்த ஆறுமுக நாவலர் இவருடைய மாமன்மார்களுள் ஒருவராவர்.

கல்விப் பயிற்சி

இவர் தம்முடைய ஐந்தாம் ஆண்டிலே கல்விப் பயிற்சிக்குப் பள்ளிக்கு அனுப்பப்பெற்றார். இளம் பருவத்திலேயே இவர் ஊக்கமாகக் கல்வியைக் கற்கத் தொடங்கினர். நுண்ணுணர்வும் திண்மையாக அமையப் பெற்றிருந்தார். பள்ளிப்படிப்பு முடிவுபெற்றபின் நல்லூரிற் கல்வியறிவிற் சிறந்து விளங்கிய கார்த்திகேய உபாத்தியாயர் என்பவரிடம் நல்வழி, நன்னெறி, வாக்குண்டாம் முதலிய அறநெறி நூல்களையும் நிகண்டு இலக்கணம் முதலியவைகளையும் படித்தார். தம் மாமனாராகிய ஆறுமுக நாவலரிடம், நன்னூற் காண்டிகையுரை, விருத்தியுரை, திருக்குறள் பரிமேலழகர் உரை, திருவிளையாடற் புராணம், கந்தபுராணம், பாரதம், இராமாயணம், தொல்காப்பிய நச்சினார்க்கினியர் உரை, சேனாவரையர் உரை, இளம்பூரணர் உரை, இலக்கணக்கொத்து, இலக்கண விளக்கச் சூறாவளி முதலிய இலக்கிய இலக்கணங்களையும் மற்றும் பல சங்க நூல்களையும் ஐயமும் மாறுபாடும் இன்றி ஒழுங்குபெறக் கற்றார்.

சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணத்துத் திருக்கோயில்களில் புராணச் சொற்பொழிவுகள் பல இவரால் நன்முறையில் இயற்றப்பெற்றன. இச்சொற்பொழிவுகளைக் கேட்டவர்கள் பொருந்திய சிவப்பற்றும் திருந்திய ஒழுக்கமும் உடையவர்களாக மாறினர். புராணச் சொற்பொழிவுகளைத் திறமையாக நடத்துவதில் இவர் சீரும் சிறப்பும் உடையவராக விளங்கி

னர். இவருடைய சொற்பொழிவை இவருடைய ஆசிரியரும் மாமனரும் ஆகிய ஆறுமுக நாவலரே பாராட்டியும் பேசினர்.

மாணவர்கள்

இவருடைய கல்விச் சிறப்பை உணர்ந்து பலர் இவரிடம கல்விகற்கத் தொடங்கினர். அவ்வாறு கற்றவர்களுள் பலர் பிற்காலத்தில் பெரும் புலவர்களாகவும், நூலாசிரியர்களாகவும், உரையாசிரியர்களாகவும் போதகாசிரியர்களாகவும் விளங்கிச் சிறப்படைந்தனர். அம்மாணவர்களுள் ம. க. வேற்பிள்ளை என்பவர் சிறந்த உரையாசிரியராகத் திகழ்ந்தார். அவரால் புலியூரந்தாதி, திருவாதவூரடிகள் புராணம், அபிராமியந்தாதி என்னும் நூல்கள் உரையெழுதப்பெற்றன. மற்றும் இவர் சிதம்பரத்தில் உள்ள ஆறுமுக நாவலர் கல்லூரியில் இருபத்துமூன்று ஆண்டுகள் ஆசிரியராக அமர்ந்து தமிழ்த்தொண்டு புரிந்தார். இன்னும் மாரிமுத்து உபாத்தியாயர், சிவசங்கர ஐயர், பொன்னுத்துரை ஐயர், ச. பொன்னம்பல பிள்ளை, த. கைலாச பிள்ளை, சோமாஃச் கந்தபிள்ளை, சி. சுவாமிநாத பண்டிதர், சி. சிவகுருநாத பிள்ளை, சு. சபாரத்தின முதலியார், சி. கணேசபண்டிதர், புலோலி, வ. குமாரசாமிப் புலவர், ம. தியாகராசர், கோ. வைத்தியலிங்கபிள்ளை, திருவாவடுதுறை ஆதீனம் பொன்னு ஒதுவார், சுப்பிரமணிய ஒதுவார், காரைக்குடி சொக்கலிங்கச் செட்டியார், பழனி, குமாரசாமித் தம்பிரான் முதலிய பலர் கல்வி கற்றுச் சிறப்படைந்தனர். ஈற்றிணைக்கு உரையெழுதிய பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், பொன்னம்பலபிள்ளையவர்கள் திருமறைக்காட்டில் தங்கியிருந்தபோது சிலப்பதிகாரம் முதலிய சில நூல்களைப் படித்துணர்ந்தனர்.

உரை

இப்புலவர் பிரான் நூல்கள் இயற்றியதாகத் தெரிய வில்லை குன்றுதோறுடலில் ஒன்றுகிய குன்றக்குடியின் பெருமையைக் கூறுவதாகிய மயூரகிரிப் புராணமும், வில்லி புத்தூரார் பாரதத்தில் ஆதிபருவமும இவரால் உரையெழு தப்பெற்றன.

இறுதி

வில்லிபாரதம் முழுவதற்கும் உரையெழுதவேண்டும் என்னும் நோக்கத்துடனே ஆதிபருவ உரையை எழுதி முடித்த இவர் பிற்பகுதிகட்கு எழுதி முடிக்காமலே ஏவிளம்பியாண்டு மார்கழித்திங்கள் ஐந்தாம் நாள் (18-12-1897) தமது அறுபத்தொன்றுவது அகவையில் இறைவன் திருவடி நீழலை எய்தினர்.

---

60. சபாபதி நாவலர்

தோற்றம்

யாழ்ப்பாணம் வடகோவையிலே சைவ வேளாளர் மர பிலே சாலிவாகனசகம் 1766-ல் சபாபதிநாவலர் பிறந்தார். தந்தையார் பெயர் சுயம்புநாதபிள்ளை. தாயார் பெயர் தெய்வயானை.

கல்வி

சபாபதியார் தக்க காலத்திலே கல்விப் பயிற்சிக்குப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்டார். தொடக்கத்தில் அந்தண ஆசிரியர் ஒருவர் இவருக்குக் கல்வி கற்பித்தார். பிறகு தென்மொழி வடமொழி இரண்டினுஞ் சிறந்து விளங்கிய நீர்வேலி சிவசங்கரபண்டிதர் என்பவரிடம் அவ் விரு மொழிகளையும் கற்றார். ஆங்கிலத்தையுங் கற்றுணர்ந் தார்.

அருளுரை பெறல்

சபாபதிநாவலர் கல்வியில் சிறந்த நிலைமையை எய்திய தும் ஆறுமுக நாவலர் விருப்பப்படி சிதம்பரம் சைவப்பிர காச வித்தியாசாலையில் சிறிதுநாள் தலைமைத் தமிழ் ஆசிரிய ராக அமர்ந்திருந்தார். பிறகு திருவாவடுதுறையை அடைந்து அவ்வாதீனத்தில் பதினாறுவது ஆசிரியராக எழுந்தருளி யிருந்த சுப்பிரமணிய தேசிக அடிகளாரிடம் அருளுரை பெற்று அவர்கள் முன்னிலையில் பன்னிரண்டு யாண்டுகள் அறிவு நூல்களையெல்லாம் முறைமையாகக் கற்றுணர்ந்தார். இலக்கிய இலக்கணங்களினும் வேதாந்த சித்தாந்த நூல் களினும் சிறந்த புலமையுடையவராகத திகழ்ந்தார்.

நாவலர்

சபாபதியார் அவையோர் உளங்கொளத் தக்கவாறு ஈனமுறையிற் சொல்லும் ஆற்றல்மிக்காராக விளங்குந் திறனறிந்து, சுப்பிரமணிய தேசிகஅடிகளார் சபாபதி யார்க்கு நாவலர் என்னும் சிறப்புப் பெயரை வழங்கியரு ளினார்.

சிவஞானபோதம்

சிவஞானபோதமாபாடியம் என்னும் சைவசித்தாந்த மெய்ஞ்ஞான நூல், சைவசமயத்திற்கோர் முடிமணியாய்த் திகழ்வது. அம்மாபாடிய நூலினை அவ்வாதீனத்தார்கள் தகுந்த பக்குவிகளைக் கண்டுணர்ந்தே படிக்கக் கொடுப்பது வழக்கம். தேசிகரவர்கள் சபாபதி நாவலரிடம கொண் டிருந்த நன்மதிப்பால் அந்நூலை நாவலர்க்கு நல்கிக் கற் றுணரச் செய்தார்கள்.

சொற்பொழிவுகள்

நாவலருடைய பேரறிவுஞ் சொலலாற்றலும் தமிழ் நாடெங்கணும் பரவியது. அங்கங்கு உள்ளவர்கள் நாவ

லரையழைத்துச் சொற்பொழிவுகள் செய்யுமாறு செய்தனர். நாவலர் சைவசமய வளர்ச்சியின் பொருட்டுப் பல சொற்பொழிவுகள் செய்து சைவசமயப் பெருமையை எல்லோரும் நன்குணர்ந்து கொள்ளுமாறு செய்தார். இராமநாதபுரம் சேதுபதி மன்னர், மதுரையாதீனத் தலைவர், திருவாவடுதுறைச் சுப்பிரமணியதேசிக சுவாமிகள், அம்பலவாண தேசிக சுவாமிகள், சூரியனார் கோயில் ஆதீனம் முத்துக்குமார தேசிக சுவாமிகள் முதலியோர் நாவலருடைய சமயத்தொண்டை மிகவும் வியந்து பாராட்டிப் போற்றினர்கள்

நூல்கள் இயற்றல்

நாவலர் சமயத்தொண்டு புரிந்ததோடு அமையாமல் நூல்களெழுதிக் கலித்தொண்டு புரிவதினும் ஈடுபட்டார். கசுஅ-செய்யுட்கள் கொண்ட ஏசுமத நிராகரணம் என்னும் நூலை எழுதிக் கிறித்துமதக் கொள்கைகளுக்குத் தடையாக முட்டுக்கட்டை போட்டார்.

அகூஙூ - செய்யுட்கள்கொண்ட சிதம்பர சபாநாத புராணம் என்னும் புராணத்தைப்பாடி 1885-ஆம் ஆண்டில் வெளியிட்டார். இந்நூல் 'ஏமசபாநாத மான்மியம்' என்னும் வடநூலின் மொழிபெயர்ப்பாகும்.

அப்பயதீட்சிதர் என்பார் இயற்றிய சிவகர்ணமிர்தம் என்னும் வடமொழி நூலினைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார். மேலும் மேற்படி தீட்சிதரால் இயற்றப் பெற்ற பாரத தாற்பரிய சங்கிரகம், இராமாயண தாற்பரிய சங்கிரகம் என்னும் வடமொழி நூல்களையுந் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

இவரால் இயற்றப்பெற்ற நூல்கள்

1. ஏசுமத நிராகரணம்
2. சிவகர்ணமிர்தம்

3. பாரத தாற்பரிய சங்கிரகம்
4. இராமாயண தாற்பரிய சங்கிரகம்
5. சதுர்வேத தாற்பரிய சங்கிரகம்
6. சிதம்பர சபாநாத புராணம்
7. திருசிற்றம்பல யமகவந்தாதி
8. திருவிடைமருதூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி
9. மாவையநதாதி
10. இலக்கண விளக்கப் பதிப்புரை மறுப்பு
11. வைதீக காவிய தூடண மறுப்பு
12 நல்லூசை சுப்பிரமணியக கடவுள் பதிகம்
13. திராவிடப் பிரகாசிகை

என்பன. இந்நூல்களுள் 'திராவிடப் பிரகாசிகை' என்னும் நூல் எல்லோராலும போற்றப்பெற்றுச் சிறந்து விளங்குகின்றது.

நாவலரும் காவலரும்

நாவலரிடத்திலே சேதுகாவலர் மிகுந்த மதிப்புப் பாராட்டினார். நாவலர் சிதம்பரஞ் சென்றூர் அங்கு சென்ற பாஸ்கர சேதுபதிமன்னர் சபாபதிநாவலரைக் கண்டு உரையாடினர். அவரைத் தம்முடன் இராமநாத புரத்திற்கு அழைத்துச்சென்று அரண்மனையில தங்கச் செய்தார்: சேதுநாட்டில் சிலகாலந் தங்கியிருந்து சமயத் தொண்டு செய்யவேண்டும் என்று வேண்டிக்கொண்டார். நாவலர் அதற்கு இணங்கிச் சிலகாலம் அங்கே தங்கியிருந்தார். பிறகு காவலரோடு திருஉத்தரகோச மங்கைக்குச் சென்றூர். இருவரும இறைவழிபாடு இயற்றினர்கள். பிறகு காவலர் தலைமையில் நாவலர் "வேதநெறி தழைத்தோங்க" என்னும் பெரியபுராணச் செய்யுளின் பகுதியை அடிப்படையாகக்கொண்டு மிகச்சிறந்த ஒரு பெரிய சொற்பொழிவு செய்தார். அதன்பிறகு சேதுவேந்தரோடு பல சிவப்பதிகட்கு இறைவழிபாட்டின் பொருட்டுச் சென்றூர்.

திருச்செந்தூருக்குச் செல்லும் வழியில் தூத்துக்குடியில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். அதன்பிறகு திருச்செந்தூர், திருக்குற்றாலம் ஆகிய இடங்கட்குஞ் சென்று சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். பிறகு அரசரும் புலவரும் இராமநாதபுரம அடைந்தனர். சேதுவேந்தர் நாவலர்க்கு மூவாயிரம் வெண்பொற்காசுகள் நன்கொடை வழங்கியதுடன் வேண்டியபோது உதவிசெய்வதாகவும் உரைத்தார். நாவலர் சேதுவேந்தரிடம் உடன்பாடு பெற்றுச் சென்னையை அடைந்தார்.

ஞானுமிர்தம்

சென்னையை அடைந்த சபாபதி நாவலர் அச்சகம் ஒன்றை ஏற்படுத்தினர். அவ்வச்சுக்கூடத்தில் இருந்து ஞானுமிர்தம் என்னும் சிறந்த பத்திரிகையை வெளிப்படுத்தினர். அப்பத்திரிகை எல்லோரானும் புகழ்ந்தோதும்படியாக விளங்கிற்று.

சென்னையிற் சொற்பொழிவு

நாவலர் சென்னையில் தங்கியிருந்தபோது திருமயிலை, திருவொற்றியூர், கந்தசாமிகோயில் முதலிய இடங்களில் சைவசமயச் சொற்பொழிவுகள் பலசெய்து சைவசமயத்தின் தனிச்சிறப்பை எல்லோரும உணருமாறு செய்தார்.

நாவலரின் மாணவர்கள்

நாவலரிடத்தில் பல மாணவர்கள் கல்விகற்றுச் சிறப்படைந்தனர். அவர்களுள் சிதம்பரம் அ. சோமசுந்தர முதலியார், விழுப்புரம். இராமசாமிப்பிள்ளை, மாகறல் - கார்த்திகேய முதலியார், மயிலை - சு சிங்காரவேலு முதலியார், மாவை - விசுவநாதபிள்ளை, சிதம்பரம் - சிவராமச் செட்டியார், திருமயிலை - பாலசுந்தர முதலியார், சுழிபுரம்-

சிவப்பிரகாச பண்டிதர் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

மறைவு

1903-ஆம் ஆண்டில் நாவலர் சிதம்பரத்தில் தங்கியிருந்தார். அப்போதுஞ் சைவசமயச் சொற்பொழிவுகள் பல செய்தார். பிறகு திருத்தில்லையில் தானே 1903-ஆம் ஆண்டில் தமது ஐம்பத்தெட்டாவது அகவையில் கூத்தப் பிரானுடைய இணையடித்தாமரைமலர்களை எய்தினர்.

---

௪௪. சோமசுந்தர நாயகர்

தோற்றம்

1846-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் ஆறும்நாள் ஞாயிற்றுக்கிழமையிலே, சென்னை சூளையிலே வைணவக் குடும்பம் ஒன்றிலே சோமசுந்தர நாயகர் பிறந்தார் நாயகருக்கு இடப்பெற்ற பிள்ளைப்பெயர் அரங்கசாமி என்பர்.

கல்விப் பயிற்சி

அரங்கசாமியின் உறவினர் ஒருவர் சைவசமயப் பற்றுடன் வேதாந்தப் பற்றுடையவராகவும் அச்சுதானந்தர் என்னும் பெயருடையவராகவும் இருந்தார். அவர் அரங்கசாமி என்னும் பெயரைச் சோமசுந்தரம் என மாற்றி அமைத்தார். கல்விப்பயிற்சி முதலியவைகளைத் தொடங்கி வைத்துத் தென்மொழி வடமொழிகளைக் கற்பித்தார். பிறகு பள்ளியில் சேர்ந்து ஆங்கிலமும் தெலுங்கும் பயின்றார். இராசதானிக் கல்லூரியில் புகுமுக வகுப்பு வரையிற் பயின்றார். நான்கு மொழிகளை நன்கு கற்

முணர்ந்த நாயகர்க்கு நல்ல அலுவல் ஒன்று அகப்பட்டது. அதனை மேற்கொண்டு வாழ்க்கையை நடத்திக்கொண் டிருந்தார்.

சமய ஆராய்ச்சி

அச்சுதாநந்தர் வேதாந்தத்தில் பற்றுடையவராக இருந்தார். ஆகவே தம மாணவராகிய சோமசுந்தர நாயகர்க்கும் வேதாந்தத்தையே கற்பிக்கத்தொடங்கினர். நாயகரோ ஆசிரியர்க்கு மிஞ்சிய மாணவராக இருந்தார். வேதாந்த சித்தாந்த முடிவுகளின் உயர்வு தாழ்வுகளைச் சீர்தூக்கிப்பார்த்தார். வேதாந்தத்தைவிடச் சித்தாந்தமே நாயகருடைய மனத்திற்குப் பிடித்திருந்தது ஆகவே அவர் தம் ஆசிரியராகிய அச்சுதாநந்தரிடம் கேள்விகள் பலவற்றைக் கேட்கத்தொடங்கினர். அச்சுதாநந்தர் அவை கட்கெல்லாம் தக்கவாறு மறுமொழி கூறுமற்போகவே அவருக்குச் சித்தாந்தத்தைப்பற்றிக் கூறத்தொடங்கினர். அப்போது நாயகர்க்கு அகவை இருபது. நண்பர் ஒருவரால் கொடுக்கப்பெற்ற மெய்கண்டசாத்திரம் முழுவதையும் தாமே படித்துணர்ந்தார். தம் ஆசிரியருக்குச் சித்தாந் தத்தில் பற்றுண்டாகுமாறு பல செய்திகளை எடுத்துச் சொன்னர்.

வேதாந்தி சித்தாந்தியாதல்

சோமசுந்தர நாயகராகிய தம் மாணவரின் உரை களைக் கேட்ட அச்சுதாநந்தருக்கு உள்ளம் மாறியது. சைவசித்தாந்தத்தைப் பின்பற்றவேண்டும் என்னும் எண்ணம் உண்டாகியது. அவர் காஞ்சியை அடைந்தார். ஆதிசைவரிடம் ஆசாரிய அபிடேகம் பெற்று ஏகாம்பர சிவயோகியார் என்று தீட்சைப்பெயர் பெற்றார்.

நாயகர் சமயத்தொண்டு

சோமசுந்தர நாயகருடைய உள்ளம் சமயத்தொண்டில் அழுத்தமாகப் பற்றியது. தாம் பார்த்துக்கொண்டிருந்த அலுவலே ஒரு பொருளாக மதியாமல் அதனை 1881-ஆம் ஆண்டில் விட்டுவிட்டுச் சைவத்திற்கும் தமிழுக்கும் உழைக்கத்தொடங்கினர்.

சைவ நூல்களைத் தக்கார் வாயிலாகப் பாடங்கேட்டு அவைகளிற் சிறந்த புலமைநிலை கைவரப்பெற்றார். சமய வளர்ச்சிக்கும் மொழி வளர்ச்சிக்கும் நூல்கள் எழுதுவதையும் நாயகர் தமது கடமையாகக்கொண்டார். முப்பதது மூன்று ஆண்டுகள் வரை நாயகர் நூலாசிரியராக இருந்து நூறு நூல்கட்குமேல் எழுதி வெளிப்படுத்தினர் சைவ சித்தாந்தக் கருத்துக்களைத் தமிழில் உரைநடையாக முதன் முதலில் எழுதி வெளிப்படுத்தியவர் நாயகர்தாம். இவர் தமக்கென ஒருவகையான உரைநடையை ஏற்படுத்திக் கொண்டு அநடையில் எழுதிவந்தார். மக்களும் நாயகருடைய உரைநடையைப் போற்றிப் படித்தனர்.

சொற்பொழிவுகள்

நாயகர் நூலாசிரியராக இருந்ததோடலலாமல் சிறந்த சொற்பொழிவாளராகவும் இலங்கினர். தமிழ் நாட்டு மக்களைத் தமது சொற்பொழிவு முழக்கத்தால் தட்டி எழுப்பினர். நாயகருடைய சொற்பொழிவைக் கேட்டவர்கள் உளளங்களித்துப் போற்றினர். தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு பெரிய நகரிலும் நாயகருடைய சொற்பொழிவு நிகழ்ந்தது. சைவ சித்தாந்தத்தின் பெருமையும் சிறப்பும் நாயகருடைய சொற்பொழிவால் மிகுதிப்பட்டு விளங்கின. நாயகர் சொற்பொழிவு செய்யுமிடத்தில் ஆயிரக் கணக்கான மக்கள் ஒருங்கு திரண்டு ஒருமை மனதுடன் சொற்பொழிவைக் கேட்டுக்கொண்டிருப்பார்கள்.

மாணவர்கள்

நாயகர் தம்மையடுத்துப் பாடங்கேட்க விரும்பிய மாணவர்கட்குச் சமய நூல்களையும் இலக்கண இலக்கிய நூல்களையும் நன்கு போதித்து அவர்கள்தம் அவாவையும் நிறைவேற்றினர். அவ்வாறு கற்றுத் தேர்ந்து சிறந்தவர்கள் பலர். தமிழ்மலையாக விளங்கியிருந்த மறைமலையடிகளாரும் நாயகரிடம் கல்வி பயின்றவராவர்.

நன்மதிப்பு

நாளடைவில் நாயகரின் சைவத்தொண்டின் சிறப்புத் தமிழ் நாட்டு அறிஞர்கள் எல்லோருடைய உள்ளத்திலும் உவகையூட்டியது. ஆதீனத் தலைவர்கள், அரசர்கள், பெருநிலக்கிழார்கள், செல்வர்கள் முதலாயினோர் நாயகருக்கு வேண்டிய நல்லுதவிகள் பலவற்றையும் புரிந்தனர். சேதுபதி மன்னர் 'வைதிக சைவ சித்தாந்த சண்டமாருதம்" என்னும் பட்டப்பெயர் வழங்கிச் சிறப்புச் செய்தார். திருவாவடுதுறை ஆதீனத் தலைவர், 'பரசமய கோளரி' என்னுஞ் சிறப்புப் பெயர் தந்து வாழ்த்துரை கூறினர்.

இறுதி

சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கத் தொண்டு செய்து நின்ற நாயகரின் உடல்நலம் 1898 - ஆம் ஆண்டு முதல் குன்றத் தொடங்கியது. ஆயினும் நாயகர் தமது உடல் நலக்குறைவைப் பொருட்படுத்தாமல் இறுதிவரை சமயத்தொண்டு செய்துகொண்டேயிருந்தார். முடிவுகாலம் நெருங்கியபோது தம் மகனைத் தேவார திருவாசகங்களை ஓதச்செய்து கேட்டுக்கொண்டிருந்தார். 1901 ஆம் ஆண்டு பிப்ரவரி இருபத்திரண்டாம் நாள் வெள்ளிக்கிழமை மாலை நான்கு மணிக்குச் சிவராச யோகத்தில் அமர்ந்து அன்று மாலை ஆறு மணிக்கு இறைவன் திருவடி நீழலை எய்தினர்.

1. வேதபாஷிய சமாச கண்டனம்
2. சிவாதிக்கிய ரத்நாவளி
3. சைவ சூளாமணி
4. பரதத்துவப்பிரகாசிகை
5. பிரமதத்துவ நிரூபணம்
6. அர்ச்சா தீபம்
7. ஆதி சைவப் பிரபாவம்
8. சித்தாந்த ரத்நாகரம்
9. சித்தாந்த ஞானபோதம்
10. மெய்கண்ட சிவதூடண நிக்கிரகம்
11. ஆசார்ய பிரபாவம்

என்பன நாயகர் எழுதிய நூல்களில் சிலவாம்.

கூ. பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்

தோற்றம்

இலட்சுமி நாராயண அவதானிகள் என்னும் இயற் பெயருடைய நாராயணசாமி ஐயர் தஞ்சைமாவட்டம் திருத் துறைப்பூண்டிச் சிறு கூற்றத்தில் உள்ள பின்னத்தூரில், அந்தணர் குலத்தில் கௌண்டின்னிய கோத்திரத்தில் ஆங் கிலம் 1862-ஆம் ஆண்டுக்குச் சரியான தமிழ்த் துந்துபி யாண்டு ஆவணித திங்கள் இருபத்தொன்பதாம் நாள் பிறந் தார். இவருடைய தந்தையார் பெயர் வேங்கடகிருட்டிண அவதானிகள் எனவும் அப்பாசாமி ஐயர் எனவும் வழங் கியது. தாயார் பெயர் சீதாலட்சுமி அம்மாள். நாராயண சாமி ஐயருடைய தந்தையார் மருத்துவ நூலிற் சிறந்த பயிற்சியுடையவர் அறத்திற்கு மருத்துவஞ் செய்பவர். பொறுமைக்குணம் உள்ளவர். நல்லவர்களைப் போற்றுவதில் கருத்துள்ளவர். அப்பாசாமி ஐயர் தமது குடும்பப் பொருள்களைப் பாதுகாத்துப் பெருக்குவதில் தமது கருத்

தைச் செலுத்தி ஊக்கங்காட்டவில்லை. இளமைக் காலத் திலேயே விதவைகளாகி வந்திருந்த அப்பாசாமி ஐயரு டைய உடன்பிறந்தார்கள் இருவர் குடும்பப் பொறுப்பை மேற்கொண்டு கண்ணுங் கருத்துமாகச் செயலாற்றினர். அவ்வம்மையார்களுள் ஒருவர் பெயர் உருக்குமணியம் மாள். மற்றொருவர் பெயர் சேஷியம்மாள்.

உடன் பிறந்தவர்கள்

நாராயணசாமி ஐயருக்கு உடன்பிறந்தவர்கள் ஏழு பேர். அவர்களில் ஆண்கள் நான்குபேர். பெண்கள் மூன்றுபேர். ஆண்களுள் நாராயணசாமி ஐயரே மூத்தவர். பிள்ளைகளெல்லோரையும் அன்புடன் வளர்க்கும் பொறுப்பை அதனை சேஷியம்மாளே மேற்கொண்டனர்.

கல்வி

நாராயணசாமி ஐயர் பள்ளிக் கல்வியை உரிய காலத் தில் ஒழுங்காகக் கற்றார். பிறகு வடமொழியைச் சிறிது கற்றுக்கொண்டு மறையோதுதலையும் மேற்கொண்டார். பின்னத்தூரில் பள்ளிக்கூடம் வைத்திருந்த கிருட்டிணபுரம் முத்துராம பாரதியார் என்பவரிடம் தமிழ் படித்தார் அக்காலத்தில் ஒருநாள் ஐயர் மன்னார்குடிக்குச் சென்றார். அப்பொழுது ஆங்கிருந்த நாராயணசாமிப்பிள்ளை என்னும் தமிழ்பபுலவர் இராமாயணச் செய்யுட்கள் சிலவற்றிற்குப் பொருள் விரித்துரைத்தார். நாராயணசாமிப் பிள்ளையின் விரிவுரையைக் கேட்ட நாராயணசாமி ஐயருக்குத் தமிழி டத்திலே பற்று மிகுதிப்பட்டது. தாம் இராமாயணம் முழுவதையுங் கற்றுணரவேண்டும் என்று பேரவாக் கொண்டார். இந்நிகழ்ச்சிதான் இவருடைய தமிழ்ப் பயிற்சிக்குக் காரணமாக இருந்தது. கம்பராமாயணத்தில் சுந்தரகாண்டத்தை முதலில் வாங்கிப்படித்தார். பாடல்

களை மனப்பாடஞ்செய்யும் ஆற்றல் இவருக்கு மிகுதியாக இருந்தது. எதைப் படித்தபோதினும் அதனை கெட்டருச் செய்துவிடுவது ஐயருக்கு வழக்கம்.

படிக்காதே

ஐயர் தமிழ்மொழியைக் கற்கவேண்டும் என்னும் பேரவாவினால் எப்பொழுதும் நூலுங் கையுமாகவே இருந்தார். ஐயர் கையில் எப்பொழுதும் நூல்களை வைத்துப் படித்துக்கொண்டிருந்தது அத்தை சேஷியம்மாளுக்குப் பிடிக்கவில்லை. பையன் வீணாக ஏட்டைக் கட்டிக்கொண்டு அழுகிறானே. சோம்பேறியாகக் கெட்டுப்போனாலும் போவான் என அத்தையார் எண்ணினர். அவ்வத்தை கல்வியறிவு சிறிதும இல்லாதவர் வேறு என்ன எண்ணந் தோன்றும்? அத்தை மருகனைப் பார்த்துத், "தம்பி எப்பொழுது பார்த்தாலும் ஏடுங் கையுமாக இருக்கிறாயே! இதனால் யாது பயன்? குடும்பத் தொழில்களைப் பார்க்க வேண்டாமா? ஆகையால் வீணாகப் படிததுக் காலததைப் போக்காதே" என்று அறிவுரைகள் வழங்கினர். அன்பு மிக்க அததையின் கட்டளை என்றாலே பிள்ளைகளுக்கெல்லாம் அச்சம். அவர்கள் அததைக்குக் கீழ்ப்படிந்து போவார்கள். அதனால் நாராயணசாமி ஐயர் அத்தைக்குத் தெரியாமல் வயல் வரப்புகளுக்குச் சென்று கருவேல மரங்களுக்குக் கீழ் அமர்ந்து படிக்கும் வழக்கத்தை மேற்கொண்டார்.

பொன்னம்பலபிள்ளை

ஐயர், இவ்வாறு சுல்வி கற்றுக் கவிபாடும் ஆற்றலிற் சிறந்து விளங்கினர். பல நூல்களைத் தாமே கற்றபடியினால் அவைகளிற் பல ஐயங்கள் உண்டாயின. ஐயத்தை அகற்றிக்கொள்வதற்குத் தக்க காலத்தை எதிர்நோக்கி

யிருந்தார். யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரின் மருகரும் "வித்வ சிரோமணி" என்னுஞ் சிறப்புப் பெயர் பெற்றவரு மாகிய பொன்னம்பல பிள்ளை என்பவர் அந்நாளில் சிறந்த தமிழ் அறிஞராக விளங்கினர். அவர் சிறிது காலந் திரு மறைக்காட்டில் வந்து தங்கியிருந்தார். நாராயணசாமி ஐயர் அவரிடஞ் சென்றார். தம்மை அறிமுகஞ் செய்து கொண்டார். அவரால் தம்முடைய ஐயங்களைப் போக்கிக் கொண்டார் மேலும் அவரிடம் ஐம்பெருங் காப்பியங் களுள் ஒன்றாகிய சிலப்பதிகாரத்தையும் பாடங் கேட்டார்.

நூல்கள் இயற்றல்

ஐயர், நீலகண்டேசுரக் கோவை என்னும் பெயருடன் கோவை ஒன்று பாடி, மன்னார்குடியில் பொன்னம்பல பிள் ளையின் முன்னிலையில் அரங்கேற்றினர். மேலும் அவர் விரும்பியவாறு வடமொழியில் காளிதாசர் இயற்றிய பிர கசன நாடகதத்தைத் தமிழில் மொழிபெயர்த்தார். ஐயர், தமிழ்நாட்டின் பழைய வரலாறுகளை ஆராய்வதில் மிகுந்த விருப்பம் உள்ளவர். கோயில்களிலும் பிறவிடங்களிலும் வெட்டியுள்ள பழைய கல்வெட்டுக்களைப் படித்தறியும் ஆற் றல் அமைந்தவர். தமிழ்ப்புலவர்களின் வரலாறுகளை நன்கு அறிந்தவர். அவர்கள் அவ்வச்சமயங்களிற் பாடிய செய்யுட்களை மனத்தமைத்து வேண்டியபோது எடுத் துரைக்க வல்லவர். தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் இவருக்குச் சிறந்த பயிற்சியுண்டு. அதிற் காட்டிய மேற் கோள்களுக்கெல்லாம் அகரவரிசை ஒன்றை இவர் எழுதி வைத்திருந்தார்.

இவரால் இயற்றப்பட்ட நூல்கள்:

1. நீலகண்டேசுரக் கோவை.
2. பிரகசன நாடகம்.

3. இடும்பாவன புராணம்.
4. இறையனாரகப்பொருள்.
5. சிவபுராணம்.
6. களப்பாள் புராணம்.
7. அரதைக் கோவை
8. வீரகாவியம்.
9. சிவகீதை.
10. நரிவிருத்தம்.
11 மாணிக்கவாசகர்சரித்திரம்.
12 இயன்மொழி வாழ்த்து.
13. தென்திருவாலவாயுலா.
14. தென்திருவாலவாய்க் கலம்பகம்.
15. பழையது விடுதூது.
16. மருதப்பாட்டு.
17. செருப்பு விடுதூது.
18. தமிழ்நாயகமாலை
19. இராமாயண அகவல்.
20. நற்றிணையுரை.

முதலியன

நற்றிணையுரை

சங்க நூல்களை உரையோடு வெளியிடுவதற்கு உ. வே. சாமிநாதையரைப் போல் நாராயணசாமி ஐயரும் பெரு முயற்சி செய்தார் குறுந்தொகையை நன்முக ஆராய்ச்சி செய்தார். நற்றிணைக்கு உரையெழுதி முடித்து அச்சிட் டார். அகநானூற்றுக்கு உரையெழுதிக்கொண்டிருந்தார்.

இறுதி

நற்றிணை உரை அச்சாகிக்கொண்டிருந்தபோது ஐய ருக்கிருந்த நீரிழிவு நோய் மிகுதிப்பட்டது. இறப்பதற் குள் நற்றிணை உரைப்புத்தகத்தைக் கண்ணுற் பார்த்து விட்டுச் சாகவேண்டுமென்பது ஐயருடைய கடைசி விருப்பமாக இருந்தது. ஆயினும் அவ்விருப்பம் நிறை

வேறஷில்லை. 1899-ஆம் ஆண்டுமுதல் ஐயர் இறக்கும் வரை கும்பகோணம் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராக இருந்தார். நீரிழிவு நோய் மிகுதிப்பட்டு வருத்தியதால் 1914-ஆம் ஆண்டு சூலைத்திங்கள் 30-ஆம் நாளுக்குச் சரியான தமிழ் ஆனந்த ஆண்டு ஆடிதிங்கள் பதினைந்தாம் நாள் வியாழக்கிழமை தமது பிறபபிடமாகிய பின்னத்தூரிலே காலமானர். இவருக்கு இரண்டு பெண்மக்கள் மட்டும் பிறந்தனர்.

கஉ. வெண்பாப்புலி வேலுச்சாமிப் பிள்ளை

தோற்றம்

பெரும்புலவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம், உ. வே. சாமிநாத ஐயரோடு ஒருங்கு கற்றவராகிய வேலுச்சாமிப் பிள்ளை என்பவர், 1854-ஆம் ஆண்டிலே சிதம்பரத்திற்கு வடகிழக்கில் ஐந்துகல் தொலைவில் உள்ள தில்லைவிடங்கன் என்னும் ஊரிலே, சைவவேளாண் மரபிலே பிறந்தார். புலியூர் வெண்பா முதலிய நூல்கள் இயற்றியவராகிய தில்லைவிடங்கன் மாரிமுத்துப் பிள்ளை என்பவருடைய வழிமுறையிலே தோன்றிய சுப்பிரமணிய பிள்ளை என்பவர் வேலுச்சாமிப் பிள்ளையின் தந்தையாராவர், தாயார் பெயர் சுந்தரம்மாள் என்பது.

கல்வி

வேலுச்சாமிப் பிள்ளை தமது இளம்பருவத்தில் பள்ளியிற் சிறிது கல்விகற்றார். பிறகு தம் நிலங்களில் பயிர்த்தொழில் வேலைகளைப் பார்க்கத் தொடங்கினர். பிறகு இவருடைய தகப்பனர் இவரைச் சென்னை மாநகருக்கு அனுப்பி ஆங்கிலம் படிக்கச்செய்தார். மில்லர் கல்

லூரியில் ஆங்கிலமும், அங்கு தமிழ்ப்பேராசிரியராக இருந்த இவருடைய உறவினராகிய சின்னச்சாமிப் பிள்ளை என்பவரிடம் தமிழும் கற்றார். மேலும் அப்பொழுது அங்கிருந்த அட்டாவதானம் சபாபதி முதலியார் என்பவரிடமும் தமிழ் நூல்களைப் பாடங்கேட்டார். இரண்டு மூன்று ஆண்டுகட்குப் பிறகு சென்னையிலிருந்து தமது ஊருக்கு வந்தார்

மீனுட்சிசுந்தரம் பிள்ளையிடம் கற்றல்

வேலுச்சாமியின் உள்ளம் மேன்மேலும் கற்றலில் விழைந்தது. நன்றாகக் கல்விகற்றுத் தாமும் தம்முடைய முன்னோர்களைப்போல் விளங்கவேண்டும் என்று எண்ணினார். தகுந்த ஆசிரியர் அகப்படாமல் திண்டாடினார். தமது திண்டாட்டத்தை அட்டாவதானம் சபாபதி முதலியாருக்குத் தெரியப்படுத்தினார் அவர் பெரும்புலவர் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கட்கு உதவிக் கடிதம் ஒன்று எழுதியனுப்பி "பெரும்புலவர் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் சென்றால் நன்றாகக் கல்விகற்கலாம்" என்று தெரியப்படுத்தினார். வேலுச்சாமிப் பிள்ளை எவருக்குந் தெரியாமல் புறப்பட்டுத் திருவாவடுதுறையை அடைந்து அட்டாவதானம் சபாபதி முதலியாருடைய உதவிக் கடிதத்தைக் கொடுத்தார். பெரும்புலவர் வேலுச்சாமியைத் தம்முடைய மாணவராக ஏற்று நாலைந்தாண்டுகள் கல்வி கற்பித்தார். வேலுச்சாமிப் பிள்ளை கருத்துடன் கற்ற படியினால் கல்விவளம்பெருகியது.

வெண்பாப்புலி

வேலுச்சாமி நாளடைவில் செய்யுள் செய்யும் ஆற்றலையும் அடைந்தார். வெண்பாப் பாடுவது சிறிது தொல்லையான வேலை. மாமுன்னிரை காய்முன் விளமுன்னேர்

என்னும் இலக்கணத்தைக் கருத்துடன் கடைப்பிடித்து வெண்பாவைப் பாடுதல்வேண்டும். இன்றேல் வெண்பாவின் தலை தட்டிப்போகும். இதனைக் கருதியே, "எல்லோர்க்கும் வெண்பாப்புலி" என்ற பாட்டும் ஏற்பட்டிருக்கிறது. இத்தகைய வெண்பா வேலுச்சாமிக்கு விரைவாகவும் எளிதாகவும் பாடுமாறு அமைந்தது. வேலுச்சாமி விரைவாக எளிதாக வெண்பாப்பாடுதலைப் பெரும் புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை கண்டு வியந்து மகிழ்ந்தார். வேலுச்சாமிக்கு "வெண்பாப்புலி" என்று சிறப்புப் பெயர் வழங்கினர். அச்சொல் அவருடைய பெயருக்குமுன்னால் அமைந்து வழங்குவதாயிற்று.

தேசிகர்பால் தீக்கை

பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை காலமான பிறகு வெண்பாப்புலி வருந்தினர். திருமிகு சுப்பிரமணிய தேசிகர்பால் சிலநூல்களைப் பயின்றார். பிறகு அப்பெரியாரிடமே தீக்கைபெற்றுக் கொண்டு தமது ஊருக்குத் திரும்பினர்.

தமிழாசிரியர்

வெண்பாப்புலி தமது ஊரைவிட்டுச் சென்னைக்குச் சென்றார். அங்குப் பல பெரிய இடங்களில் பாடஞ்சொல்லுந் தலை மேற்கொண்டிருந்தார். பிறகு காஞ்சிபுரத்தை அடைந்து பச்சையப்பன் உயர்தரப்பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராக அமர்ந்தார் அங்குப் பள்ளிவேலையோடு நூல் இயற்றுதல் முதலிய பிறவேலையையும் மேற்கொண்டிருந்தார்.

புராணம் பாடுதல்

திருக்கச்சூர் ஆலக்கோயில் என்பது தொண்டை நாட்டில் தேவாரம் பெற்ற முப்பத்திரண்டு சிவப்பதிகளில்

ஒன்று. அச்சிவப்பதிப் பூசகர் ஒருநாள் வெண்பாப்புலியைக் கண்டு அப்பதிக்குப் புராணம் இல்லாக்குறையைப் போக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டார். வெண்பாப் புலியார் பெருமபுலவரிடம் இருந்த காலையில் அப்புலவர்பிரான் பாடிய பல புராணங்களைத் தமது கையால் எழுதும் பேறுபெற்றவர். இப்போது தாமே புராணம் பாட நேர்ந்தமைக்கு மகிழ்ந்து அச்சிவப்பதியின் வரலாறுகளை நன்கு ஆராய்ந்து, 'திருக்கச்சூர் ஆலக்கோயில் புராணம்' என்னும் பெயருடன் புராணம் ஒன்றுபாடி முடித்தார். அப்புராணத்தின் அரங்கேற்றம் உருத்திரோற்காரி யாண்டு சித்திரைத் திங்கள் பதினேழாம் நாள் மிகச் சிறப்பாக நடை பெற்றது.

இறுதி

வேலுச்சாமி மேலும் பல நூல்கள் செய்தார். இறுதியில் அட்சய ஆண்டு சித்திரைத் திங்கள் இருபத்தொன்பதாம்நாள் இறைவன்திருவடி நீழலை எய்தினார்

இவர் இயற்றிய நூல்கள்

1. கந்த புராண வெண்பா [5665-வெண்பா].
2. திருவேட்டக்குடிப் புராணம்
3. தில்லைவிடங்கன் புராணம்
4. திருக்கசசூர் ஆலக்கோயில் புராணம்
5. தேவார சிவதல வெண்பா.
6. தேவார வைப்புத்தலக் கட்டளைக் கலித்துறை.
7. திருத்தில்லை நிரோட்டக யமக வந்தாதி முதலியன.

கச. சுவாமிநாத பண்டிதர்

தோற்றம்

தம்பையா பிள்ளை என்று பிள்ளைப் பெயர்பெற்ற சுவாமிநாத பண்டிதர் யாழ்ப்பாணத்து வண்ணார் பண்ணையிலே சின்னத்தம்பிப் பிள்ளை என்பவரின் திருமகனாகத் தோன்றினார்.

கல்வி நலம்

இளமையிற் பள்ளிக் கல்வியை ஒழுங்காகக் கற்றார். பிறகு தமிழ்நூல்களைப் படித்துப் புலவராக எண்ணினார். ஆறுமுக நாவலருடைய மருகரும் மாணவரும் பெரும்புலவரும் ஆகிய பொன்னம்பலம் பிள்ளையிடம் இலக்கிய இலக்கணங்களை யெல்லாம் வரன்முறையாகக் கற்று, அவைகளில் நல்ல தேர்ச்சியடைந்து அறிஞரானார்.

சமயத்தொண்டும் தமிழ்த்தொண்டும்

சைவ சமயததைப் பாதுகாப்பதினும் தமிழ் மொழியை வளர்ப்பதினும் தமது கருத்தைச் செலுத்திக் காலம் முழுவதையும் அவைகட்கே செலவிட்டார். சைவத் தொண்டிற்கும் தமிழ்த்தொண்டிற்கும் தக்க இடம் இந்தியா என்பதை உணர்ந்த அறிஞர் இந்தியாவிற்கு வந்து தமது திருத்தொண்டைத் தொடங்கினார்.

நூல்கள் வெளியிடுதல்

1905-ஆம் ஆண்டில் சென்னையில் சைவவித்தியானுபாலன அச்சுக்கூடம் என்னும் பெயருடன் அச்சுக்கூடம் ஒன்றை ஏற்படுத்தினார். அவ்வச்சுக்கூடத்தில் சிவஞான போதமாபாடியம், திருக்கோவையார் உண்மை, தேவார அடங்கன்முறை, திருவிளையாடற் புராணம், குமரகுருபரர் பிரபந்தம், சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தம் முதலிய

சைவ நூல்களை அழகிய முறையில் திருத்தமான பதிப்புக் களாகப் பெரும்பொருள் செலவிட்டு அச்சிற்பதிப்பித்துக் குறைந்த விலைக்குக் கொடுத்து நற்புகழும் நல்வினையும் ஈட்டினார். மற்றும் பல நூல்களை அச்சிட்டு வெளி யிட்டார்.

சென்றிநாதையர் தேடிவைத்திருந்த நூல்களையெல் லாம் இவர் பெரும்பொருள் கொடுத்து வாங்கித் தொகுத்து வைத்திருந்தார். ஒவ்வொன்றாக அரிய சைவ நூல்களை வெளிப்படுத்த எண்ணியிருந்தார். சிவஞான சித்தியாருக்கு வெள்ளியம்பலத் தம்பிரான் எழுதிய ஞான வரணப்பேருரையை அச்சிடுவதற்கு ஆராய்ச்சி செய்து வைத்திருந்தார். சிவஞானபோத மாபாடியம் இரண்டாம் பதிப்புக்குப் பல அரிய குறிப்புகள் எழுதிவைத்திருந்தார். பொருட்குறைவால் இவைகளையெல்லாம் அவர் உடனுக் குடன் நிறைவேற்றவில்லை. இவர் முதன்முதலாக அச் சிட்டு வெளியிட்டது திருவாதவூரடிகள் புராணம் என்ப.

சைவத்தொண்டு

சைவசமய வளர்ச்சிக்குத் தம்மால் இயன்றவழிகளி லெல்லாம் உழைத்தலை இவர் கடமையாகக் கொண்டிருந் தார். சைவசித்தாந்த சமாசக்கூட்டங்கட்குத் தலைமை தாங்கி அரிய சொற்பொழிவுகள் செய்து சைவசமயப் பெருமையை எல்லோரும் இனிதுணருமாறு செய்தார். கும்பகோணம் மகாமக காலங்களில் சைவப் பெருங்கூட் டங்கள் கூட்டி நடத்தினர். பெருங்கூட்டஞ்சேரும அத்த கைய சமயங்களில் சைவக்கூட்டங்களைக் கூட்டி நடத்தினல் எல்லோரும் எளிதில் பயன்பெறுவர். சமய வளர்ச்சிக்குந் தக்க வாய்ப்பாகும் என்று இவர் அறிந்திருந்தபடியினல் தான் சிறப்பான விழாக்காலங்களில் சமயத்தொண்டாற்

றுதல் சிறந்தது என்று அதனை மேற்கொண்டார். சைவ நூல்கள் பலவற்றையும் இலக்கண இலக்கியங்களையும் தம்மை யடுத்த மாணவர்கட்குப் போதித்தார். திருச்செந் தூரிலே சுப்பிரமணிய வித்தியாசாலை என்னும் பெயருடன் வித்தியா சாலை ஒன்று ஏற்படுத்திப் பொருள் உதவி செய்தார்.

குணநலன்முதலியன

இவர் தங்நலம் குறித்துச் சிறிதும் உழைத்தவரல்லர். ஆறுமுகநாவலரைப்போல் தாமும் கலியறம் சைவபரிபால னம் முதலியவைகளை நடத்துதல்வேண்டும் என்னும் எண் ணத்தோடு நாவலரைப்போல் குடும்பத்தொடர்பில்லாமல் செயல்களில் ஈடுபட்டிருந்தார். நாவலரைப்போல் இவரும் சைவசமய இழிப்புரை முதலியவைகளைப் பொறுக்க மாட்டார். சைவாசார ஒழுக்கத்தில் சிறிதும் தளரமாட் டார். பிற்காலத்தில் சிதம்பரத்தைத் தமது இருப்பிட மாகக்கொண்டு அவ்விடமே உறைந்திருந்தார். திருவண்ண மலைத் திருக்கார்த்திகை விளக்கு வழிபாடு, தில்லைக்கூத்தப் பிரான் திருக்கூத்து முதலியவைகளை வழக்கமாகக் கண்டு போற்றும் முறையை உறுதியாக மேற்கொண்டிருந்தார். தருமபுர ஆதீனத்தாரால் வெளியிடப்பெற்ற நூல்கள் பல இவருடைய பார்வையின்கீழ் வெளிப்படுத்தப்பட்டன. தருமபுர ஆதீனத்தலைவரவர்கள் இவருக்கு 'வித்வத்சிரோ மணி' என்னும் பட்டம் அளித்துச் சிறப்புச் செய்தார்கள். இவர் சைவமுந் தமிழுந் தழைத்தினிதோங்கத் தொண்டு செய்திருந்து இறைவன் திருவடி நீழலை அடைந்தார்.

கரு. மாணிக்க நாயக்கர்

தோற்றம்

சேலம் பாகற்பட்டியில், 1871-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 25-ஆம் நாள் வெள்ளிக்கிழமை, மாணிக்க நாயக்கர் தோன்றினர். தந்தையாருடைய பெயர் வேங்கட சாமி நாயக்கர்

கல்வி

மாணிக்க நாயக்கர் தமது இளமைக்காலந்தொட்டே நுண்ணறிவு மிக்கவராகவும் நினைவாற்றல் மிகுதியாக அமையப்பெற்றவராகவும் விளங்கினர். தாம் மூன்று வயதுக் குழந்தையாக இருந்த பொழுது நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளைப் பிற் காலத்தில் கூறினர். நாயக்கர் ஏழாவது ஆண்டிலே பள்ளியிற் சேர்க்கப் பெற்றுக் கல்விகற்கத் தொடங்கினர். பன்னிரண்டாம் ஆண்டில் சேலத்தில் ஒரு பள்ளிக் கூடத்தில் சேர்ந்தார். பதினென்காவது அகவையிலேயே நாயக்கர் செய்யுள் பாடத் தொடங்கினர். நாயக்கருடைய பிறந்தநாட் குறிப்பைக் கணித்தவர்கள், அக்குறிப்புப் பெரிய குறைபாடு உடையதெனக் கூறினர்கள் அக் கூற்றில் ஐயங்கொண்ட நாயக்கர் தாமே சோதிடங்கற்றுச் சோதிட நூலில் வல்லவரானர். தமது பிறந்தநாட் குறிப்பைத் தாமே கணித்து ஆராய்ந்து பார்த்துச் சோதிடர்கள் கூற்றுப் பொய்யெனக் கண்டதுடன், தமது பிறந்தநாட் பலனைத் தமது ஐம்பத்தொன்பதாவது அகவை முடியும் காலம்வரை எழுதிவைத்தார். அவர் எழுதிவைத்தவாறே நிகழ்ச்சிகள் நிகழ்ந்தமை வியக்கத் தக்கதாக இருந்தது.

கல்லூரி நிகழ்ச்சி

சேலம் கல்லூரியில் நாயக்கர் எப். ஏ. என்னும் பட்டம் பெற்றார். அக் கல்லூரியில் கல்வி பயிலுங் காலத்

தில் உடற்கூறுநூலை (Physiology) மிகவும் விரும்பிக் கற்றார் ஒரு நாள் உடற்கூறு நூலாசிரியர் நரம்புகளைப் பற்றி வகுப்பில் உரையாடிக்கொண்டிருந்தார். அப் பொழுது நாயக்கர் ஆசிரியரை இடைமறித்து, "ஐயனே, தாங்கள் கூறுவது நன்றாக விளங்கவில்லை, அருள்செய்து பொருளைக் கண்ணிற்கு நேரே கருவிகள் மூலமாகச் செய்து காட்டி விளக்குதல் வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார். ஆசிரியர் தாமே நன்கு விளங்கப் பெறாத நிலையில் உரைத்துக்கொண்டிருந்தாராதலின் அவருடைய பாடு திண்டாட்டமாகி விட்டது. ஆகவே அவர் நாயக் கரைக் கடிந்துரைத்தார். நாயக்கர் ஆசிரியர் கூறிய செய்தி களை நன்கு உணர்ந்துகொள்ள எண்ணினர். ஹக்ஸ்லியின் உடற் கூறுநூல் என்னும் நூலில் கண்டபடி மரத்துண்டு களின் உதவிகொண்டு நாயக்கர் தாம் குறித்துக்கேட்ட நரம்புப் பொருளைக் கண்கூடாகச் செய்து பார்த்துத் தெரிந்துகொண்டார். ஆசிரியருக்கும் விளக்கிக் காட்ட வேண்டும் என்று எண்ணினர். மறுநாட்காலை ஆசிரி யருக்குஞ் செய்து காட்டினர். ஆசிரியர் பார்த்து மிகுந்த வியப்படைந்தார். தலைமையாசிரியரிடம் போய் நாயக்கர் ஆராய்ச்சிச் செயலைப் புகழ்ந்து கூறினர். தலைமையா சிரியர் நேராகவந்து பார்த்து மனமகிழ்ந்தார். பொறி யியற் கல்லூரியிற் சேர்ந்து கல்விகற்றற்குரிய அறிவு நலம் அவரிடம் செறிந்திருக்கிற தென்று மகிழ்ந்து, அக் கல் லூரியிற் சேர்ந்து கல்விபயிலுமாறு கூறியதோடமையாமல் அந்தக் கல்லூரித் தலைவர்க்கும் தாமே இதைக் குறித்து எழுதி ஆகவேண்டியவைகளைச் செய்தார். ஆகவே நாயக்கர் மருத்துவ நூற்பயிற்சி பெறத் தாம் கொண்டிருந்த எண்ணத்தை யொழித்துப் பொறியியற் கல்லூரியிற் சேர்ந்தார்.

பதின்மூன்று பரிசுகளும் பதக்கமும்

அவ்வாண்டு பொறியியற் கல்லூரியில் சேர்ந்த எப். ஏ. பட்டம்பெற்ற மாணவர்கள் இருவரில் நாயக்கர் ஒருவர். மற்றவர்கள் எல்லோரும். எம். ஏ. பட்டம் பெற்றவர்களாகவும் பி. ஏ. பட்டம் பெற்றவர்களாகவும் இருந்தனர் ஆயினும் அவ்வாண்டு நடந்த போட்டித தேர்வில் நாயக்கர் முதன்மையாளராகத தேறிப் பதின்மூன்று பரிசுகளும் ஒரு பொற்பதக்கமும் பெற்றார். இத்தேர்வினால் 1896-ஆம் ஆண்டில் அரசாங்கதத்தில் உதவிப் பொறியாளர் அலுவல்ல பெற்றார்.

கல்லூரியில் குறும்பு

சிறுவயதில் இருந்த குறும்புத்தனங்கள் சில நாயக்கரைப் பிற் காலத்திலும் தொடரத் தொடங்கின. நினைத்த போது இருமலை வரவழைத்துக்கொண்டு ஓயாமல் இருமும் ஒருவகை ஆற்றலை நாயக்கர் பெற்றிருந்தார வகுபபில் அவ்வாறு இருமி அடிக்கடி அவர விடுமுறை பெற்றுக கொண்டிருந்தார். இந்தத் தீய பழக்கத்தைத தம் கல்லூரி நண்பர்கள் பலருக்கும் கற்றுக்கொடுதது விட்டார். ஆகவே மாணவர் தாம் விடுமுறை பெறவேண்டுமெ என்று எண்ணிய பொழுதெல்லாம் இருமி இருமி விடுமுறை பெறதெதொடங்கினர். ஆசிரியர்கள் இவ்விருமல் தொதது நோயாக இருத்தல்கூடும் என்று அஞ்சினர். பிறகு உண்மை வெளிப்பட்டது. கல்லூரித தலைவர நாயக்கர்மீது மிகுந்த சினங்கொண்டார். குறிப்பிட்ட சில நாட்களில் கல்லூரிக்கு வரக்கூடாதென்று கட்டளையிட்டு ஒறுக்கத் தொடங்கினர். கல்லூரி மாணவர்கள் எல்லோரும் கல்லூரித் தலைவரின் இச் செய்கையைக் கண்டித்துக் கல்லூரிக்குச் செல்லாமல் நின்று விட்டனர். ஆகவே கல்லூரித்

தலைவர் தாம் ஏற்படுத்திய தண்டனையை நிறுத்தி நாயக்கரையும் மற்றவர்களையும் பிழைபொறுத்து மன்னித்து விட்டார்.

காட்சியில் சூழ்ச்சி

மருத்துவக் கல்லூரியில் கண்காட்சி ஒன்று அந்நாளில் நடைபெற்றது. அக் காட்சிக்கு மருத்துவர்களும் மருத்துவக் கல்லூரி மாணவர்களுமே செல்லலாம் என்று கட்டுப்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் நாயக்கர் சூழ்ச்சியொன்று செய்து தாமும் தம் நண்பர்கள் பலரும அக் காட்சிக்குச் செல்ல இடம் பெற்றார்.

சில ஆற்றல்கள்

பகலில் கதிரவன் நிலையைக் கொண்டும், இரவில் விண்மீன்களின் நிலையைக் கொண்டும் ஒருவிநாடி கூடத் தவறில்லாதபடி நாழிகையைக் கணக்குச் செய்து சரியாகக் கூறுவதில் நாயக்கர் தேர்ச்சி பெற்றிருந்தார். அல்லாமலும் உற்றுநோக்கும் உயரிய ஆற்றலும் நாயக்கரிடம் நன்கு அமைந்திருந்தது. ஆடு, மாடு, குதிரை முதலியவைகளின் நரம்பு அசைவுகளைக்கொண்டே அவைகள கத்தப்போவது ஓடப்போவது கீர்விடப்போவது முதலியவைகளைக் கூறி விடுவார்.

அலுவல்

தாம் ஏற்றுக்கொண்ட அரசாங்க அலுவலை நாயக்கர் கல்ல திறமையுடனும் ஊக்கத்துடனும் கண்டிப்புடனும் செய்துவந்தார். பொறியியல் துறையில் நாயக்கர் மிகக் கெட்டிக்காரர் என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் பட்ட உண்மை. அவர் அத்துறையில் புதிதாகக் கண்டு பிடித்த செய்திகள் அறுபதுக்கு மேற்பட்டன. அவைகளில் சில, வேறெந்நாட்டுப் பொறியியற் புலமையாளர்

களுங் கண்டு பிடித்தவைகளைவிட மிகச் சிறந்தவை என்று பலராலுங் கொண்டாடப்பட்டன.

நாயக்கருடைய "கால்க்யூலோகிராப்" என்னும் சுருக்கு வழிக்கணக்குமுறை டாக்டர். டப்ள்யூசி, அன்வின், ஜே. எம். காம்பியன், எம் கார்னட் முதலிய பல மேனாட்டறிஞர்களாலும் மிகுதியாகப் புகழ்ந்து பாராட்டத்தக்க சிறப்புடையதாயிற்று. கணக்கில் ஏற்படும் சிக்கலான வழிகளை அதன்மூலம மிகவும் விரைவில் தீர்த்துவிட முடிந்தது

மேட்டூர்த் தேக்கத் திட்டத்தைப் பற்றிய கருத்தை முதன்முதலாகச் சென்னை அரசாங்கத்தார் மனதில் பதியச் செயதவர் நாயக்கர்தாம். அரசாங்கத்தின் தலைமைப் பொறியாளர் அலுவலைப் பெறத் தகுதியுடையவராக இருந்த நாயக்கர் அந்நாள் ஆட்சியாளரின் குறுகிய நோக்கத்தால் அவ்வேலைக்குக் கீழான வேலையில் இருந்தே ஓய்வு பெற நேரிட்டுவிட்டது.

1896-ஆம் ஆண்டில் நீலகிரி உதவிப்பொறியாளராக இருந்தார். 1906-1907-ல் எக்ஸீக்யூடிவ் எஞ்சினீயரானார். 1912-இல் இங்கிலாந்து சென்று "கால்க்யுலோகிராப்" என்னும் புதுமுறையைக் கண்டு பிடித்தார். 1915-இல் சென்னை எஞ்சினியரிங் கல்லூரியில் சிவில் எஞ்சினியரிங் பேராசிரியராக ஏற்படுத்தப் பெற்றார். 1919-இல் மறுபடியும் பொதுமராமத்து இலாகாவில் சேர்ந்து சூப்பரின் டெண்டிங் எஞ்சினியரானார். அவ்வளவோடு அவா அலுவலும் அலுவல் உயர்வும் முடிந்தன.

இளமையில் வறுமை

நாயக்கர் உயர்ந்த பெருங்குடியிற் பிறந்தாரேனும் இளமைக் காலத்தில் அக்குடி வறுமையுடையதாக இருந்

தது. பாகற்பட்டிப் பெருநிலக் கிழார் நாயக்கரின் வறுமையையும் திறமையையும் பார்த்தார். நாயக்கருக்கு அவருடைய பதினோராம் அகவையில் ஆங்கில அகரவரிசை நூல் ஒன்று வாங்கிப் பரிசளித்தார். முனிசாமி நாயுடு என்பவர் துறவுபூண்டு தமது அலுவலையும் துறந்திருந்தார். அவர் நாயக்கரை மேலும படிக்கவைப்பதற்காகவே மீண்டும் வேலையேற்று அவர்க்கு உதவி புரிந்தார். அவ்விருவருடைய உதவியையும் நாயக்கர் இறுதிவரை பெரிதும் போற்றினர். கல்லூரி மாணவர்களிற் பலர் அக்காலத்தில் தமமாலான உதவிகளைப் புரிந்தனர். கல்லூரிப் படிப்பிற்கான நூல்களைக்கூட நாயக்கரால் வாங்க முடியவில்லை. மற்றைய மாணவர்களின் நூல்களை வாங்கித் தம் கையால் எழுதிப் படித்தார்.

ஆராய்ச்சி

தமிழ்க்கல்வியிலும் ஆராய்ச்சியிலும் நாயக்கர் நுண்ணுணர்வு மிக்காராக விளங்கியிருந்தார். தமிழ் அரிச்சுவடியின் ஒப்பில்லா அமைப்பும், அஃது உலகமொழிகள் எல்லாவற்றிறகும அடிப்படையாய் இருக்கக்கூடிய ஆற்றல் பெற்ற தென்பதும் நாயக்கருடைய சிறந்த ஆராய்ச்சியினால்தான் முதன்முதல் வெளியாயின. தமிழ்மொழி நூல் இலக்கணத்தை ஆராய்ச்சி வல்லுநர் எல்லோரும் ஒப்புக்கொள்ளுமாறு முதன்முதல் வகுத்துக்கூறி மொழிப் பெருமையைக் காட்டியவர் நாயக்காதாம். நாயக்கர் தொல்காப்பியத்தையும திருக்குறளையும் எழுத்தெண்ணிக் கறறிருநதார்.

ஓடுக்கம்

நாயக்கர் வேலையில் இருந்து ஒய்வுபெற்ற பிறகு உடல் நலத்தை முன்னிட்டு நீலகிரிக்குன்னூரிலே தங்கியிருந்தார்.

அடிக்கடி குருதிக்கொதிப்பினால் தொல்லைப்பட்டார். 1931-ஆம் ஆண்டு டிசம்பர்த்திங்கள் 30-ஆம் நாள் வெள்ளிக்கிழமை தமது அறுபதாவது அகவையில் நான்கு பெண்மக்களும் ஓர் ஆண்மகனும் பிற உறவினர்களும் வருந்த இவ்வுலக வாழ்வைத் துறந்தார்.

---

௬௬. பூரணலிங்கம் பிள்ளை

தோற்றம்

திக்கெலாம் புகழுந் திருநெல்வேலிக்கு அண்மையில் உள்ள மூங்கீப்பள்ளம் என்னும் ஊரிலே, 1866-ஆம் ஆண்டு மேத் திங்கள 24-ஆம் நாள் பூரணலிங்கம் பிள்ளை தோன்றினர். இவருடைய தந்தையார் பெயர் சிவசுப்பிரமணிய பிள்ளை. தாயார் பெயர் வள்ளியம்மையார். இவர் தோன்றிய குலம் சைவ வேளாளர் குலம்.

கல்வி

பூரணலிங்கனர் ஐயாண்டளவிலே மையேடு கைப்பிடிக்கத் தொடங்கினர். திண்ணைப்பள்ளிக் கூடத்தில் பூரணலிங்கனர்க்குப போதிக்கத் தொடங்கிய ஆசிரியர் பெயர் செலவப்பெருமாள என்பது. அந்தச் செல்வப் பெருமாள் தாம் பூரணலிங்கனரின் தந்தையாராகிய சிவசுப்பிரமணிய பிள்ளைக்கும் கல்வி போதித்தவர். அறுபதாண்டு அகவையை அவர் அப்பொழுது எட்டிப்பிடித்திருந்தார். அகவைக்குத்தக்க அறிவு முதிர்ச்சியும் நல்லொழுக்கமும் அவரிடத்தில் குடிகொண்டிருந்தன. அவரிடம் பூரணலிங்கனர் அரிச்சுவடி தொடங்கி வீடணன் பத்தி என்னும் நூல் வரை கற்றுத்தேறினர்.

பூரணலிங்கனர்க்கு அகவை பத்து நிரம்பியபோது மேலைப்பாளையம் என்னுமிடத்தில் இருந்த பள்ளிக்கூடத்

திற்கு அனுப்பப் பெற்றார். அப்பொழுது அங்கிருந்த ஆசிரியர் சுந்தரம்பிள்ளை என்பவர் இவருக்கு இலக்கணம் கற்பித்தார். முத்துச்சாமிப் பிள்ளை என்பவர் திருக்குறளை நன்றாகப் போதித்தார். ஓராண்டு அங்கே கற்ற பூரணலிங்கனார் மறு ஆண்டு தருவை என்னும் இடத்தில் இருந்த பள்ளிக்கூடத்தில் சேர்ந்து ஆங்கிலம் கற்கத்தொடங்கினார். அங்கே இவருக்கு ஆசிரியராக அமைந்தவர் பெயர் செல்லம் பிள்ளை. பிறகு பூரணலிங்கனார் சிந்துபூந்துறையை அடைந்து ஆங்கிலமும் தமிழும் கற்கத் தொடங்கினார். பூரணலிங்கனார் எவ்வகைப் பாடங்களையும் ஊக்கத்தோடு கற்று முதன் மாணாக்கராக விளங்கினார். பூரணலிங்கனார் விரைவாகவும் அழகாகவும் எழுதுவதிற் சிறந்து விளங்கினார். அதனால் இவர் மூன்றாவது வகுப்புப் படித்துக் கொண்டிருந்தபோது கையெழுத்துப் போட்டியில் இவருக்கு முதற்பரிசு கிடைத்தது. சில ஆண்டுகள் கல்வி கற்று மெட்ரிகுலேஷன் தேர்விலும் வெற்றிபெற்றார். சில காரணங்களால் பூரணலிங்கனார் மேலே படிக்க வியலாமல் தடையேற்பட்டது. பரமக்குடிக்குச் சென்று நீதி மன்றம் ஒன்றிலே எழுத்தாளராகப் பணிபுரியத் தொடங்கினார். அப்பொழுது இவருக்கு அகவை பதினாறுதான். அவ்வேலையை மூன்று திங்கள் பார்த்தார். அந்நாளில் திருநெல்வேலியில் இந்துக்கல்லூரியின் தலைவராக இருந்த "விங்கிளோர்" என்ற பேராசிரியர் இவரிடம்கொண்டிருந்த அன்பினால் கல்லூரியிற் சேர்ந்து படிக்குமாறு வற்புறுத்தி யழைத்தார். ஆகவே பூரண லிங்கனார் அலுவலைவிட்டுக் கல்லூரியிற் சேர்ந்தார். கல்லூரியின் நூல்நிலையத்தில் இருந்த ஆங்கிலச் சுவடிகள் பலவற்றை ஆழ்ந்து கற்றார். அப்போது அங்குத் தமிழாசிரியராக இருந்த சபாபதிப்

பிள்ளை என்பவரிடம் தமிழ் நூல்களையுங் கற்றுத் தமிழ் அறிவினையும் வளர்த்தார்.

பி. ஏ. பட்டம்

நெல்லையில் எப். ஏ. தேர்வில் வெற்றிபெற்ற பூரண லிங்கனார் சென்னையை அடைந்து கிறித்தவக் கல்லூரியிலே கல்வி கற்கத் தொடங்கினார். சென்னையில் பூரண லிங்கனாரோடு திருநெல்வேலியைச் சேர்ந்தவர்களான காந்திமதி நாத பிள்ளை, (கா. சுப்பிரமணிய பிள்ளையின் தந்தையார்) இராச வல்லிபுரம் சுப்பிரமணிய பிள்ளை, பெருங்குளம் உத்தண்டராம பிள்ளை முதலியோர் கல்வி கற்றனர். பூரண லிங்கனார் பி. ஏ. தேர்வில் இரண்டாம் வகுப்பில் வெற்றி பெற்றார்.

ஆசிரியத் தொழில்

பூரணலிங்கனார் முதற்கண் மாவட்ட உதவித் தலைவரின் அலுவலகத்தில் எழுத்தாளராக அமர்ந்து சில தினங்கள் வேலை பார்த்தார். பிறகு பாளையங்கோட்டை இந்து உயர் நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராக அமர்ந்து அப் பள்ளியை முன்னுக்குக் கொண்டு வந்தார்.

திருமணம்

பூரணலிங்கனாரின் பெற்றோர்கள் தம் மகனுக்குத் திருமணஞ் செய்துவைக்க எண்ணினார்கள். ஒத்த அறிவும் ஒத்த குணநலனும் உள்ள ஒண்டொடியைத் தேடினார்கள். கல்வியறிவின்மையின் சில காரிகையரும், அழகின்மையின் பல அரிவையர்களும், செந்நிறமற்றிருந்தமையின் சில சேயிழையாரும், அணிகலன்கள் அற்றிருந்தமையின் சில அழகிகளும் ஒதுக்கப்பட்டார்கள். தாயம்மாள் என்னும் பெயருடைய தையல், வாழ்க்கைத் துணைவியராக அமைந்தார்.

ஈரோட்டில் வேலை

பூரணலிங்கனார் ஈரோடு சென்று உயர்நிலைப் பள்ளி ஒன்றில் தலைமையாசிரியராக அமர்ந்தார். இடைவிடாது உழைத்து அப்பள்ளியை முன்னுக்குக் கொண்டு வந்தார்.

எட்டையபுரத்தில் வேலை

அந நாளில் எட்டையபுரத்தில் குறுநில மன்னராக அமர்ந்திருந்தவர் மறுவுலகஞ் சென்றார். அவருடைய மகன் இளஞனாக இருந்தபடியால் ஆட்சியை ஆங்கில அரசினர் தமது மேற்பார்வையில் எடுத்துக் கொண்டனர். அரசிளங்குமரனுக்கு நல்ல ஆசிரியர் ஒருவர் தேவைப் பட்டார். பூரணலிங்கனார் அரசிளங்குமரனுக்குத் தக்க ஆசிரியர் என்று நெல்லை மாவட்டத் தலைவர் நினைத்தார். ஆசிரியராக எட்டையபுரத்திற்கு ஏகுமாறு கட்டளை யனுப்பினர். பூரணலிங்கனார் எட்டையபுரத்தையடைந்து அரசிளங்குமரனுக்கு ஆசிரியராக அமர்ந்தார். பூரணலிங்கனார் கட்டுப்பாடும் கண்டிப்பும் உடையவர். சிறுவன் செல்வ நிலையினன் ஆயிற்றே என்று சிறிதும் பாராமல் ஒழுங்கு முறையுடன் நடந்து கொண்டார். எழுதும்படி கூறிய ஒன்றை எழுதாமல் இளவரசன் ஒருநாள் தவறு செய்தான். இவர் அவனைப் பிரம்பினால் அடித்துக் கண்டித்தார். இதனைக் கண்ட வேலைக்காரர்கள் இதனை ஒரு தவறாக எண்ணி அரசியாரிடஞ் சென்று, "ஆசிரியர் நம் சின்ன இராசாவை அடிக்கிறார்" என்று கோளுரை கூறினர்கள். அவ் வரசியார் அப் பணியாளர்களைக் கண்டித்து அவர் கட்கு அறிவுரைகள் கூறினர். சென்னையிற் குறுநில மன்னர்களின் சிறுவர்கட்குப் பள்ளி ஒன்று தொடங்கப்பெற்றது. குறுநில மன்னர்களின் சிறுவர்கள் அனைவரும் அங்குச் சென்று கல்வி பயில வேண்டும் என்று அரசினர் கட்டளையிட்டனர்.

சென்னையிற்பணி

1894-ஆம் ஆண்டில் பூரணலிங்கனார் சென்னைக்குக் குடியேறினர். டாக்டர் மில்லர் என்பவர் இவரைத் தம் கல்லூரியில் ஆசிரியராக அமர்த்தினர். அக்காலையிற் சென்னையில் தாமசன் கம்பெனி உரிமையாளராக இருந்த கந்தசாமி முதலியார் என்பவருக்கும் இவருக்கும் நெருங்கிய நட்பு உண்டாயிற்று. இருவரும் ஒருவருக்கொருவர் பேருதவி புரிந்து கொண்டனர். மில்லருடைய கல்லூரியிலே பூரணலிங்கனார் நான்கு யாண்டுகள் பணியாற்றினர். சட்ட நூல்களையும் பூரணலிங்கனார் நன்கு கற்றுத் தேறினர். ஆனால் தேர்வுக்குச் செல்லவில்லை.

பரிதிமாற் கலைஞர் கூட்டுறவு

பூரணலிங்கனார் கிறித்தவக் கல்லூரியில் வேலை பார்க்கும்போது அங்குப் பரிதிமாற் கலைஞர் என்னும் சூரியநாராயண சாத்திரியார் தமிழ்ப் பேராசிரியராக இருந்தார். இருவரும் ஆருயிர் நண்பர்களாயினர். பரிதிமாற் கலைஞர் தனித் தமிழிடத்தே தணியாக் காதல் கொண்டவர். அதனால் தம பெயரையும் தமிழ்ப்படுததிக் கொண்டவர் இவர்கள இருவரும கடற்கரையில் அமர்ந்து தமிழ் மொழியைப்பற்றி நாடோறுஞ சொற்போர வழியாக ஆராய்ச்சி செய்தனர். இதன் பயனகப் பரிதிமாற் கலைஞர் 'தமிழ்மொழி வரலாறு' என்னும் தமிழ்நூலினை எழுதினர் பூரணலிங்கனரோ 'தமிழ்இலக்கிய வரலாறு' என்னும ஆங்கில நூலை எழுதினர். பாடப் புத்தகங்களும் பல பூரணலிங்கனரால் எழுதப் பெற்றன. பாடப் புத்தகங்களால் பூரணலிங்கனருக்குத் தக்கவாறு பொருள் வருவாய் ஏற்பட்டது.

கோவையில் தொண்டு

1900 முதல் 1904 வரை பூரணலிங்கனர் கோயம்புத்தூரில் செயின்ட் மைக்கேல் கல்லூரியில் ஆங்கிலப் பேரா

சிரியராக அமர்ந்து பணியாற்றினர். இவருடைய சலியா உழைப்பினல் அக் கல்லூரி சிறந்து விளங்கியது. அங்குச் சில ஆண்டுகள் சென்றபின் தம் ஊராகிய மூன்றீர்ப் பள்ளத்தை அடைந்து தங்கினர்.

பலவிடங்களில் தொண்டு

இவர் ஊரில் தங்கியிருந்தபோது நெல்லை இந்துக் கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராக அமர்த்தப்பெற்றார். பின் நெல்லையில் இவர் தாமே ஒரு சிறிய கல்லூரியைத் தொடங்கி நடத்தினர். மூன்று பிள்ளைகளோடு தொடங்கப்பட்ட அக் கல்லூரியில் நாளடைவில் ஐந்நூறு பிள்ளைகள் வரை சேர்ந்து கல்வி கற்கலாயினர். அக் கல்லூரியின் பெயர் "கெமிசுக் கல்லூரி" என்று கூறப்பட்டது. பிறகு பூரணலிங்கனர் சென்னையை அடைந்து அங்கும் சில காலந் தங்கினர். பிறகு அமெரிக்கன் கல்லூரி, திருச்சி எஸ். பி. ஜி. கல்லூரி ஆகியவைகளில் தொழில் புரிந்தார்.

இறுதி

அகவை முதிர்ந்தமையின் இவர் ஆசிரியத் தொழிலில் இருந்து ஓய்வு பெற்றுப் பல பொதுநலச் செயல்களில் ஈடுபட்டுத் தொண்டாற்றினர். இப்படிப் பலவாறு தொண்டியற்றிக்கொண்டிருந்த பூரணலிங்கனர் தமது எண்பத்தோராவது அகவையில் 1947-ஆம் ஆண்டு சூன் திங்கள் 16-ஆம் நாள் மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலக வாழ்வைப் பெற்றார்.

எழுதிய நூல்கள்

1. ஒளவைக் குறள்
2. செய்யுட் கோவை
3. விவேக விளக்கம்
4. இராயர் அப்பாசி கதைகள்

5. வாசகத் திரட்டு
6. இரு சிறு கதைகள்
7. கதையும் கற்பனையும்
8. வீர மணி மாலை
9. தமிழ்க் கட்டுரைகள்
10. பன்னிரு பெண்மணிகள்
11. மருத்துவன் மகள்
12. தப்பிலி
13. ஐரோப்பியப் போர்.

முதலியன பூரணலிங்கனாரால் எழுதப்பெற்ற தமிழ் நூல்கள். இவைகளேயன்றி ஆங்கில நூல்களும் பல இவரால் எழுதப்பெற்று விளங்குகின்றன.

கள. பண்டிதமணி கதிரேசச் செட்டியார்

தோற்றம்

மகாமகோபாத்தியாய முதுபெரும் புலவர் பண்டித மணி கதிரேசச் செட்டியார், தனவணிக நாட்டிலே மகிபாலன் பட்டி என்னுஞ் சிற்றூரிலே, 1881-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் பதினாறும் நாள் வெள்ளிக்கிழமை இவ்வுலகில் தோன்றினர். பண்டித மணியின் தந்தையார் பெயர் முத்துக்கருப்பன் செட்டியார். தாயார் பெயர் சிகப்பி ஆச்சி. முத்துக்கருப்பன் செட்டியார் சமூநாட்டிலே எழுந்தருளிய கதிர்காமக் கடவுண்மீது முதிர்பெருங் காதல் கொண்டவர். அதனால் தம் மைந்தனுக்குக் கதிரேசன் என்று பெயர் வழங்கினர்.

கல்வி

அவ்வூரிலே இருந்த சிறு பள்ளிக்கூடம் ஒன்றிலே கதிரேசனார் கல்வி கற்கத்தொடங்கினர். எண்ணையும்

எழுத்தையும் இனிது கற்றார். பெருக்கல் வாய்பாடு எண்சுவடி முதலிய கணித நூல்களையும் உலகநீதி, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நறுந்தொகை, நல்வழி, நன்னெறி முதலிய நீதிநூல்களையும் சிற்றிலக்கியங்கள் பலவற்றையும் இரண்டு மூன்று ஆண்டுகளில் இனிது கற்றுத் தேறினர். பிறகு பள்ளியைவிட்டு இல்லத்திருந்தவாறே பல நூல்களையும் தாமே கற்கத்தொடங்கினர் இவ்வுலகிலே மக்களாய்ப் பிறந்தவர்கட்கு இறைவன் ஏதேனும் ஒரு சிறு குறையை அளிப்பின் அஃது அவாகளுடைய நன்மைக்கென்றே நாம திண்ணமாக உணர்தல்வேண்டும். கதிரேசனார்க்குக் கால் ஒன்று சிறிது ஊனமாக அமைந்திருந்தது. அதனால் அவா தடி ஒன்றின் உதவியால் சிறிது தொல்லைப்பட்டே நடக்க இயலும் அதனால் கதிரேசனார் மற்றைய தனவணிக இளைஞர்களைப்போல் ஊர் சுற்றல் வீண்களியாட்டங்களில் பொழுதுபோக்கல் முதலிய செயல்களில் ஈடுபடாதவரானார். பிற்காலத்தில் பண்டிதமணி, "இக்கால் ஊனமே என்னைக் கலைமகளின் பேரருளுக்கு உரியவனாக்கியது. இன்றேல் யானும் பிற தனவைசியர்களைப்போல அழிதன்மாலையவாகிய பொருளீட்டுதலிலே புகுந்து வீண்பொழுது போக்கியிருப்பேன் ஆகவே யான் இக்கால் ஊனத்திற்கு நன்றி செலுத்துகிறேன்" என்று கூறினார் கதிரேசனார் படித்த பல நூல்களினும ஏற்பட்ட ஐயங்களையெல்லாம் தக்க அறிஞர்கள்பால் கேட்டுத் தெரிந்து போக்கிக்கொண்டார்.

அக் காலத்திலே சோழவந்தான் என்னும் ஊரிற் பெரும் புலவராகச் சிறந்து விளங்கிய அரசஞ்சண்முகனாருடைய நட்புக் கதிரேசனார்க்கு ஏற்பட்டது. அரசஞ்சண்முகனார் இலக்கியப் புலமையிலும் இலக்கணப் புலமையிலும் தங்கிகரில்லாத் தனிப்பெருஞ் சிறப்புடன் விளங்

கினர். கதிரேசனுர் அரசஞ் சண்முகனரிடம் தொல்காப் பியச் சொல்லதிகாரச் சேனுவரையம் முதலிய இலக்கண நூல்களைக் கற்றுத் தக்கவாறு இலக்கணப் புலமையையும் எய்தினர்.

இருமொழிப் புலவர்

வடமொழியினையுங் கற்று அம்மொழிச் சிறப்பினையும அறியவேண்டுமென்று கதிரேசனுர் எண்ணினுர். தருவை நாராயண சாத்திரியார் என்பவர் வடமொழிப் புலமை மிக்காராய் அந்நாளில் இலங்கினர் கதிரேசனுர் சாத்திரி யாருடைய துணையைக்கொண்டு வடமொழியையுங் கற்கத் தொடங்கினுர ஐந்தாறு ஆண்டுகளில் வடமொழியில் உள்ள காவியங்கள், நாடகங்கள், இலக்கியங்கள், இலக் கணங்கள் முதலியவைகளையும் நன்கு பயின்று தேறினுர. இவ்வாறு இருமொழிகளையும் அவர் நன்கு கற்றுத் தேறிய படியால் கதிரேசனுருக்கு 'இருமொழிப் புலவர்' என்னும் பெயர் உண்டாயிற்று.

சமய நூற்பயிற்சி

தென்மொழியையும் வடமொழியையுங் திடமாகக் கற்றுதேறிய கதிரேசனுர், சைவசமயப் பெருநூல்க ளாகிய சிவஞானபோதம் சிவஞானசித்தியார் முதலிய நூல்களையுங் கற்றுணர விரும்பினுர். அக் காலத்திலே காரைக்குடியிலே சொக்கலிங்கச் செட்டியார் என்பவர் சமய நூலறிவிலே சிறந்து விளங்கினுர். அவரையடுத்து இரண்டு ஆண்டுகள சமயநூல்கள் பலவற்றையும் ஒதி யுணர்ந்தார். இவ்வாறு பல ஆண்டுகள் கதிரேசனுர் விடா முயற்சியுடன் கல்விபயின்றமையால், தென்மொழி, வட மொழி, சமயநூல் ஆகியவைகளிலே தேர்ச்சிபெற்று நல்ல புலவரானுர்.

பொதுநலப்பணி

கதிரேசனாரின் புகழ், சிறிது சிறிதாகத் தனவணிக நாட்டில் பரவத்தொடங்கியது. தனவைசியச் செல்வர்கள் கதிரேசனாரின் பெருமையை அறியலானார்கள். கதிரேசனார் பொதுநலத் தொண்டில் செல்வர்களின் உள்ளத்தைத் திருப்ப எண்ணினார். மேலைச்சிவபுரி என்னும் ஊரில் கழகம் ஒன்றினை அமைத்து அதன் ஆதரவில் கலைக் கூடம் ஒன்றினையும் நிறுவினால் பெரியவர்கள் உள்ளம் பண்படுவதற்கும் இளைஞர்கள் கல்விகற்றற்கும் தகுதியாக இருக்கும் என்று எண்ணினார். தமது எண்ணத்தைத் தம்பால் அன்புடையவரும் பெருஞ் செல்வரும் ஆகிய, வ. பழ. சா. பழநியப்ப செட்டியார் என்பவரிடத்திலே தெரியப்படுத்தினர். அச்செட்டியார் கதிரேசனாரின் எண்ணத்தைப் பெரிதும் போற்றினர். 1909-ஆம் ஆண்டில் "சன்மார்க்க சபை" என்னும் பெயருடன் கழகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதன் சார்பாகப் புலவர் கல்விக்குக் கலைக்கழகம் ஒன்றும் அமைக்கப்பட்டது மேலைச் சிவபுரியில் தோன்றிய அச்சபை நாளிதுவரையிற் சிறந்தோங்கி வருவதுடன் நாட்டிற்குப் புலவர்கள் பலரையும் நல்கிவருகின்றது. அக் கலைக் கழகம் "கணேசர் செந்தமிழ்க்கலாசாலை" என்று அழைக்கப்பெறுகிறது. கலாசாலையின் புத்தகசாலை "தொல்காப்பியனார் புத்தகசாலை" என்று அழைக்கப் பெறுகிறது.

நூல்கள் இயற்றல்

கதிரேசனார் தமது இளமைக் காலத்திலே, "சுந்தர விநாயகர் பதிகம்" "வீரவிநாயகர் மாலை" "பதிற்றுப்பத்தந்தாதி" முதலிய நூல்களைப் பாடினார். கதிரேசனாருடைய பாடல்கள் பொருள் நுட்பமுந்திட்பமும் அமைந்து விளங்

கின. தம் வடமொழிப் புலமையை வீணுக்காமல் "மிருச்ச கடிகம்" என்னும் வடமொழி நாடகத்தைத் தமிழிலே, "மண்ணியல் சிறுதேர்" என்னும் பெயருடன் மொழி பெயர்த்தார். மேலும் "சுக்கிரநீதி" "சுலோசனை" "உத யணசரிதம்" "பிரதாபருத்திரீயம்" "மாலதீமாதவம்" என்னும் நூல்களையும் தமிழில் மொழிபெயர்த்தார். கதி ரேசனுருடைய மொழிபெயர்ப்பு, முதல்நூல் கருத்துக்குச் சிறிதும் மாறுபடாது தக்கமுறையில் அமைந்து பிற இருமொழிப் புலவர்களின் பாராட்டுரைகளையும் பெற்றுச் சிறந்து விளங்குகின்றது.

பண்டிதமணி

கதிரேசனுருடைய அறிவும் புகழும் தமிழ்நாடெங்கும் பரவியது. கதிரேசனுரால் நிறுவப்பட்ட சன்மார்க்க சபையும் வளர்ந்தோங்கிச் சிறப்புற்றுவந்தது. அச் சபையின் ஆண்டு விழாக்கள் தமிழ்நாட்டில் தலைசிறந்து விளங்கிய புலவர் பெருமக்களின் தலைமையின்கீழ் நடை பெற்றன. அவ்விழாக்களின் சொற்பொழிவுகளைக் கேட் டற்குப் பலவிடங்களினும் இருந்து மக்கள்வந்து குழுமிப் பெரும் பயன் அடைந்தனர். ஒர் ஆண்டு விழாவில் உ. வே. சாமிநாதையர் தலைமைதாங்கினர். கதிரேசனரின் அறிவுந் தமிழ்த்தொண்டும் அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித் தன. ஐயரவர்கள் கதிரேசனுரைப பலப்படப் புகழ்ந்து "பண்டிதமணி" என்னுஞ் சிறப்புப் பெயரை அவருக்கு வழங்கினர். அந்நிகழ்ச்சி தனவணிகச் செல்வர் அனை வர்க்கும் மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. அதுமுதல் கதிரேசனர் என்னும் பெயர், பெரும்பாலும் மறைந்து "பண்டிதமணி" என்னும் பெயரே யாண்டும் வழங்கத் தொடங்கியது.

திருமணமும் மக்கட்பேறும்

பண்டிதமணி அவர்கள் கல்விப் பேறடைதலேயே நீண்டநாள் அவாவி நின்றமையின் அகவை முப்பது ஆகும்வரையில் திருமணஞ்செய்து கொள்ளவில்லை. அதன் பின்னரே 1912-ஆம் ஆண்டில் திருமணம் நடைபெற்றது. வாழ்க்கைத் துணைவியாக அமைந்த ஆச்சியின் பெயர் மீனாட்சி. பண்டிதமணி மீனாட்சியாச்சியோடு இல்லறவாழ்க் கையைத் தக்காங்கு நடத்தி மிக்கோங்கு புகழினராய் விளங்கினர் மீனாட்சி ஆச்சியார் விருந்தினர்ப் பேணும் பெருந்திருவினராக அமைந்து நின்றார். புலவர் பெருமக் கட்கும் பிறருக்கும பண்டித மணியாரின் இல்லம் தாயக மாகத் தலைசிறந்து நின்றது. நாளடைவில் பண்டிதமணி யவர்கட்கு, சுப்பிரமணியன், கனகசபாபதி, மாணிக்க வாசகன், தியாகராசன், எண்ணும ஆண்மக்கள் நால்வரும், மங்கையர்க்கரசி, மீனாட்சி, சகுந்தலை என்னும் பெண் மக்கள் மூவரும் மக்கட்செல்வமாகத் தோன்றினர்.

சொற்பொழிவுகள்

பண்டிதமணி சொல்லாற்றலில் வல்லவராக விளங்கி னர். இவருடைய சொற்பொழிவுகள் கேட்டார்ப் பிணிக்குந் தகையவாகவும் பெருஞ் செவிச் செல்வமாகவும விளங்கின. தமிழ் நாடெங்கணும் உள்ள பொதுநலக் கழகக் குழு வினர் பண்டிதமணியை அழைத்து இவருடைய தலை மையிலே ஆண்டுவிழா முதலியவைகளை நடத்தினர். பண்டிதமணி தம்மால் தோற்றுவிக்கப் பெற்ற மேலைச் சிவபுரி சன்மார்க்க சபையைக் கண்ணுங் கருத்துமாகப் போற்றி வளர்த்தார். தஞ்சைக் கரந்தையில் தோன்றிய, "கரந்தைத் தமிழ்ச் சங்க"த்தினும பெரும்பங்குகொண்டு அதனையும் நன்கு வளர்த்துக் காப்பாற்றினர்.

ஆசிரியத்தொழில்

பண்டித மணியின் பெரும்புலமை நலத்தை நன் குணர்ந்த செட்டி நாட்டரசர் அண்ணுமலைச் செட்டியார் பண்டித மணியினிடம் பேரன்பு கொண்டிருந்தார். தமது அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் அமர்ந்து தமிழ்த் தொண்டு புரியுமாறு வேண்டிக்கொண்டார். தாங் கற்ற கல்வியை எவ்வெவ்வழியில் போற்றலாம் என்று நாட்டங் கொண்டிருந்த பண்டிதமணி அண்ணுமலையரசர் வேண்டு கோளுக்கு இணங்கி 1934-ஆம் ஆண்டு முதல் 1937-ஆம் ஆண்டுவரையிலும் விரிவுரையாளராக அமர்ந்து பணியாற் றினர். பின்னர்ப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேராசிரிய ராகவும் அமர்ந்து தொண்டு புரிந்தார். ஆங்கிலமொழி வல்லுநர்க்கு மட்டும் அளிக்கப்பட்ட அப்பதவி ஆங்கில மொழிப் பயிற்சியற்ற பண்டிதமணிக்கும் அளிக்கப் பட்டது பலருக்கும் மகிழ்ச்சியை அளித்தது. பண்டித மணி தமது கடமையைச் செவ்வனே ஆற்றி அறிஞர் பலருடைய பாராட்டுதலையும் பெற்றார்.

பலவகைப் பதவிகள்

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் பாடக் குழுவி லும் தேர்வுக்குழுவிலும் உறுப்பினராகவும் தலைவராகவும் அமர்ந்திருந்தார். இராமேச்சுரம் வடமொழிக் கல்லூரியிலே மந்திரக்குழு உறுப்பினராக இருந்தார். மதுரைத் தமிழ்ச் சங்கத்திலே ஓர் உறுப்பினராக விளங்கினர். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பாடக்குழுவிலும் தேர்வுக்குழுவிலும் தலைவராக இருந்தார். திருவிதாங்கூர்ப் பல்கலைக் கழகத் தின் பாடக் குழுவின் உறுப்பினராகவும் தலைவராகவும் இருந்தார். யாழ்ப்பாணத்தில் உள்ள கீழ்நாட்டுக் கல்வி நிலையம் என்னும் கல்லூரியில் தேர்வாளராக இருந்தார். எண்ணற்ற கழகங்களிலும் பேரவைகளிலும் தலைவராக

இருந்து தொண்டாற்றினர். குறுந்தொகை மாநாடு இவருடைய தலைமையிலே நடைபெற்றது.

மகாமகோபாத்தியாயர்

பண்டிதமணியின் தொண்டுகளை அரசியலார் அறிந்தனர். பட்டம் அளித்துச் சிறப்பிக்கவேண்டும் என்று முடிவு செய்தனர். 1941-ஆம் ஆண்டு, மன்னர் பிறந்த நாட்கொண்டாட்டம் நிகழ்ந்தபோது "மகாமகோபாத்தியாயர்" (பெரும்பேராசான்) என்னுஞ் சிறப்புப் பெயரை வழங்கிப் போற்றினர்.

திருவாசக உரை

திருவாசகம் என்னும் பெருநூலுக்கு உரையியற்றும் ஆற்றல், வடமொழி தென்மொழிப் புலமை மிக்காராகவும் சமயநூற் பயிற்சியில் வல்லாராகவும் உள்ளாருக்கே இயைபக்கூடிய ஒன்றாகும். பண்டிதமணியின் பேராற்றலை உணர்ந்த பலர் திருவாசகத்திற்கு விரிவுரை இயற்ற வேண்டும் என்று வேண்டிக்கொண்டனர். பண்டிதமணி அவர்கள் ஆசிரியத்தொழிலில் இருந்து ஓய்வுபெற்று நூலாராய்ச்சித் துறையில் இறங்கியபின், திருவாசகத்திற்கு உரையியற்றும் பணியை மேற்கொண்டார். மறைமலையடிகளால் முன்னரே உரையியற்றப்பட்ட முதல் நான்கு திருப்பாடல்களை விட்டுத் திருச்சதகம் என்னும் பகுதிப்பாடல் நூற்றிற்கும் ஓர் விரிவுரையைத் தக்க முறையில் எழுதிக் "கதிர்மணி விளக்கம்" என்னும் பெயர் கொடுத்து வெளிப்படுத்தினர். அவ்வுரையைக் கண்ணுற்ற அறிஞர்கள் பண்டிதமணியின் பேரறிவைப் பெரிதும் வியந்து கொண்டாடினர். பிறகு "கீத்தல் விண்ணப்பம்" "திருவெம்பாவை" என்னும் இரண்டு பகுதிகட்கும் உரையெழுதி வெளிப்படுத்தினர். நான்காவதாகத்

திருவம்மானைப் பகுதியில் மூன்று பாடல்கள் உரையெழுதப் பெற்றன. பிறகு தளர்ச்சி மிகுதியானபடியாலும் பல நூல்களை ஆராய்தற்கு இயலாமையாலும் அவ்வளவில் நிறுத்திவிட்டனர்.

ஒடுக்கம்

இறுதிவரையிலும் உடல்நலத்துடனேயே விளங்கியிருந்த பண்டிதமணியவர்கள் தமது எழுபத்து மூன்றாவது ஆண்டிலே 1953-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் இருபத்து நான்காம்நாள் சிவபெருமான் திருவடி நீழலைச் சேர்ந்தார்.

எழுதிய நூல்கள்

1. சுந்தர விநாயகர் பதிகம்
2. வீர விநாயகர் மாலை
3. பதிற்றுப்பத் தந்தாதி
4. மண்ணியற் சிறுதேர்
5. சுக்கிரநீதி
6. சுலோசனை
7. உதயண சரிதம்
8. பிரதாபருத்திரீயம்
9. மாலதீ மாதவம்
10. உரைநடைக் கோவை
11. திருவாசகம்: திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை உரை

மூதலியன பண்டிதமணி யவர்களால் எழுதப்பெற்ற நூல்களாம். உரைநடைக் கோவை என்பது பத்திரிகைகளில் எழுதிய கட்டுரைத் தொகுதியாகும்.

கஅ. கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

தோற்றம்

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் நாஞ்சில் நாட்டிலே தேரூரிலே 1876-ஆம் ஆண்டு ஆடித்திங்கள் பதினன்காம் நாள் பிறந்தார். பிள்ளையவர்களின் தந்தை யார் பெயர் சிவதாணுப் பிள்ளை. தாயார் பெயர் ஆதி லட்சுமியம்மையார். குலம் வேளாண் குலம். கவிமணி யின் தந்தையார் தமிழ்ப்புலமை நிரம்பப்பெற்றவர். கடவுண்மாட் டன்பும் நல்லொழுக்கமும் பொருந்தப் பெற்றவர்.

கல்வி

கவிமணி உள்ளூர்ப் பள்ளியில் தொடக்கக் கல்வியைக் கற்றார். கவிமணியின் பாட்டனரும் புலவராக விளங்கி னர். அவர் காரியந்நாதி என்னும் அந்தாதி பாடியவர். தம் பேரனின் கல்வியில் அவருக்கு மிகுந்த கருத்துண் டாயிற்று. இராப்பகல் தம்முடன் வைத்துக்கொண்டு ஏதாவது போதித்துக்கொண்டேயிருப்பார். தாம் புதி தாக இயற்றும் பாட்டையும் பேரனிடம் படித்துக் காட்டு வது அவருக்கு வழக்கம். இதனால் செய்யுளைப் புதிதாக இயற்றவேண்டும் என்னும் அவா, கவிமணி இளைஞராக இருக்கும்போதே உண்டாகிவிட்டது. கவிமணி பள்ளிப் படிப்பை முறைமையாகக் கற்றுவந்தார். எப். ஏ. வரையில் கற்றபின் பள்ளிப் படிப்பு முடிந்தது.

அந்நாளில் சாந்தலிங்கத் தம்பிரான் என்னும் துறவி யொருவர் தேரூரில் உள்ள திருவாவடுதுறை ஆதீன மடத் தில் இருந்தார். அவர் கல்வியறிவு மிக்கவர். அவரிடம் கவிமணி தமிழ்நூல்களைக் கற்கத்தொடங்கினார். இலக்கண

இலக்கியங்களை நன்கு கற்றுணர்ந்தார். மதுரையில் அந் நாளில் இருந்த சா. போற்றிக்கண்ணு என்பவன் சாந்த லிங்கத் தம்பிரானுக்கு ஒரு தவறு செய்துவிட்டான். அதனைச் சினங்கொண்ட தம்பிரான் அந்தப் போற்றிக் கண்ணுமீது வசையொன்று பாடக் கட்டளையிட்டார். ஆசிரியர் கட்டளைப்படியே கவிமணி பாடினார். சில நாட் களில் போற்றிக்கண்ணு கூற்றுவன் உலகம் போனான். சாந்தலிங்கத் தம்பிரான் கவிமணியின் வாக்குப் பலித்த தைக் கண்டு மனமகிழ்ந்தார்.

திருமணம்

பள்ளிப் படிப்பு முடிந்தவுடன், கவிமணி ஒரு பெண் மணியைத் திருமணம் புரிந்தார். அம் மாதரசியின் பெயர் உமையம்மை. அவ்வம்மையார் கற்பிற் சிறந்த காரிகை யாய், விருந்தெதிர்கொள்ளும் விளங்கிழையாய்க் கொண் டான் குறிப்பறியும் ஒண்டொடியாய் மனைவாழ்க்கைக் கேற்ற மாண்புடன் அமைந்து நின்றார்.

ஆசிரியத் தொண்டு

முதன்முதலில் கவிமணி கோட்டாறு என்னும் ஊரில் ஆசிரியத் தொழில் பார்க்கத் தொடங்கினார். பிறகு நாகர்கோயிலில் சிலகாலம் இருந்தார். மாணவர்களின் உள்ளத்தைக் கவரும் ஆற்றலும், சொல்லாற்றலும் கவிமணி யிடம் இயற்கையாக அமைந்திருந்தன. நாளடைவில் கவிமணி ஒரு நல்ல ஆசிரியர் என்னுஞ் செய்தி நாடெங் கும் பரவியது. இவருடைய பேராற்றலைக் கண்டும் கேட்டும் அறிந்த திருவிதாங்கூர் அரசினர் இவரை, "மகாராசா பெண்கள் கலாசாலையில்" தமிழ்ப் பேராசிரியராக அமர்த் தினார்கள். கவிமணி அப்பணியை 1895-ஆம் ஆண்டில் ஏற்று 1931-ஆம் ஆண்டுவரை முப்பத்தாறுண்டுகள் திறம் பெற ஆற்றினார்.

அஞ்சாமையும் ஆராய்ச்சியும்

மூடப் பழக்கவழக்கங்களில் கவிமணிக்கு மிகுந்த வெறுப்புண்டு. பாரதியார், "வஞ்சனைப் பேய்களென்பார் அந்த மரத்திலென்பார் இந்தக் குளத்திலென்பார்; இவர், அஞ்சி யஞ்சிச்சாவார் இவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே" என்று பாடியது எப்பொழுதும் நினைவில் இருக்கும். நாகர் கோவிலில் ஒரிடத்தில் ஒரு நடுகல் இருந்தது. அந்த இடம் எப்பொழுதும் கெட்ட நாற்றம் உடையதாக இருக்கும். அந்த இடத்தைப்பற்றிக் கதைகள் பலவற்றை மக்கள் கூறிக்கொண்டனர். அந்த நடுகல்லை இசக்கியம்மன் என்று எண்ணி அஞ்சி வழிபட்டனர். அக்கல்லுக்குத் தெய்வ வழிபாடும் நடைபெற்றது. மக்கள் பகல் நேரத்தில்கூட அந்த இடத்தில் அச்சத்துடன்தான் செல்வார்கள். அக்கல்லைப்பற்றிக் கவிமணி கேள்விப்பட்டார். உடனே அந்த இடத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். கெட்ட நாற்றத்தையும் ஒரு பொருட்படுத்தாமல் அக்கல்லை ஆராய்ந்து பார்க்கத்தொடங்கினர். அக்கல்மீது மக்கள் ஊற்றிய எண்ணெய்க் கசடு முதலிய அழுக்குகளையெல்லாம் அகற்றத்தொடங்கினர். அவ்வழியே சென்றவர்கள், "அக்கல்லில் இசக்கியம்மன் எழுந்தருளியுள்ளாள்" என்றும் "ஏதேனும் தீமை செய்வாள்" என்றும் அச்சுறுத்தினர். ஆனால் கவிமணி, அவர்கள் கூற்றைப் பொருட்படுத்தாமல் கல்லை நன்கு சுத்தப்படுத்திப் பார்த்தார். அஃதோர் கல் வெட்டென்று தெரியவந்தது. அதற்குப் படியெடுத்து எங்கும் வெளிப்படுத்தினர். மேலும் கவிமணி பல கல் வெட்டுக்களை ஆராய்ச்சி செய்து ஆங்கிலத்தில் பல கட்டுரைகள் எழுதினர். பிறகு அக்கட்டுரைகளைத் திரட்டிக் காந்தளூர்ச்சாலை என்னும் பெயருடன் நூலாக வெளிப்படுத்தினர்.

செய்யுள் செய்தல்

பள்ளியில் படித்துக்கொண்டிருக்கும்போதே கவிமணி செய்யுள் பாடத் தொடங்கிவிட்டார். இலக்கிய இலக்கணங்களை நன்கு கற்ற பின்பு செய்யுள்கள் சிறப்பெற்று விட்டன. அடிக்கடி தனிநிலை இசைச்செய்யுட்கள் பல வற்றை இயற்றிப் பத்திரிகைகளின் மூலமாக வெளிப்படுத்தினர். இவருடைய பாட்டை வெளிப்படுத்தாத பத்திரிகைகளே இல்லை எனலாம். பிறகு 1938-இல் இவருடைய பாடல்கள் பல ஒன்றாகத் திரட்டப்பட்டு, மலரும் மாலையும் என்னும் பெயருடன் வெளியாகியது.

பாரதியாருடைய பாட்டிலே வீராவேசம் நிறைந்திருக்கும். கவிமணியின் பாட்டிலோ அமைதியும் இனிமையும் அமைந்திருக்கும். கவிமணி பாரதியையும் மனமார,

> "பாட்டுக் கொருபுலவன் பாரதியடா—அவன்
> பாட்டைப் பண்ணோடொருவன் பாடினனடா
> கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனேயடா—அந்தக
> கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாயடா.

என்னும் பாட்டால் பாராட்டியுள்ளார்.

பட்டமும் பரிசும்

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார் 1940-ஆம் ஆண்டில் சென்னையில் நிகழ்த்திய ஆண்டுவிழாவின்போது "கவிமணி" என்னுஞ் சிறப்புப்பெயர் அளித்தனர். 1950-ஆம் ஆண்டில் ஆர். கே. சண்முகஞ் செட்டியார் தலைமையில் பல அன்பர்கள் கவிமணியின் இல்லத்திற்குச் சென்று சிறப்புக்கள் பலசெய்து பொன்னாடை போர்த்திப் பாராட்டினர். 1943-ஆம் ஆண்டில் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் ராசா சர் அண்ணாமலை செட்டியார் தலைமையில் ஆத்தன் குடியில் பேரவை ஒன்று கூட்டிப் பாராட்டிச் சிறப்புக்கள்

செய்தனர். அப்போது அண்ணுமலை அரசர் வெண் பொற்கலங்கள் பல பரிசளித்தார். 1950-ஆம் ஆண்டில் திருவாவடுதுறை ஆதீனத்தலைவர் அம்பலவாண தேசிகத் தம்பிரான் சுவாமிகள் பொன்னுடை போர்த்திப் பாராட்டினர். 1952-ஆம் ஆண்டில் தேரூரில் தேரூர்ப் பெருமக்கள் 'கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை நினைவு நிலையம்' என்னும் மண்டபம் கட்டித் தம் செய்ந்நன்றியைக் கவிமணி உடனுடன் இருக்கும்போதே தெரியப்படுத்திக் கொண்டார்கள்.

பொதுப்பணி

மூதுமைக்காலத்தில்கூட கவிமணியவர்கள் ஓய்வாக இருக்கவில்லை. வீட்டில் இருந்துகொண்டே சுற்றுப்புறம் உள்ள ஊர்களில் வாழும் மக்கட்குத் தம்மாலான தொண்டு களைச் செய்து அவர்களுடைய முன்னேற்றத்திற்குப் பெரிதும் பாடுபட்டார்.

கவிமணியவர்கட்கு இருந்த இருமல் நோய் பன்னாள் அவரை வருத்தி நின்றது. பின்னர்க் கவிமணி,

> "பண்டிதரும் கைவிட்டார் பத்தியமுந் தீர்ந்ததுயான்
> உண்டமருந் தால்குணமோ ஒன்றுமில்லை—அணடர்
> அமரா வதிகாத்த அண்ணலே செந்தில்
> குமரா எனையாண்டு கொள்"

என்னுஞ் செய்யுளை முருகப்பெருமான்மீது பாடி அந் நோயைத் தீர்த்துக்கொண்டார்.

இறுதி

காலமெல்லாம் பலவகைத் தொண்டுகளில் ஈடுபட்ட கவிமணி தமது எழுபத்தெட்டாம் அகவையில் (26-9-1954) புரட்டாசித் திங்கள் 14-ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

நூல்கள்

1. ஆசிய சோதி
2. மலரும் மாலையும்
3. நாஞ்சில் நாட்டு மருமக்கள் மான்மியம்
4. உமர்கய்யாம் பாடல்
5. தேவியின் கீர்த்தனங்கள்

முதலியன கவிமணியின் நூல்களாம். கவிமணியின் பாடலைக் குறித்து நாமக்கல் கவிஞர்,

"தேசிக விநாயகத்தின் கவிப்பெருமை
தினமும் கேட்பதுஎன் செவிப்பெருமை
ஆசிய சோதியெனும் புத்தர்போதம்
அழகுதமிழில் சொன்னன் அதுபோதும்"

எனப் பாராட்டிப் பாடியுள்ளார்.

கஎ. சாத்தூர் கந்தசாமி முதலியார்

தோற்றம்

இராமநாதபுரம் மாவட்டத்திலே சாத்தூருக்கு அண்மையில் உள்ள தூங்காரெட்டிப்பட்டி என்னுஞ் சிற்றூரிலே கந்தசாமி முதலியார் தோன்றினார் முதலியார் தோன்றிய காலம் ஆங்கிலம் 1892-இல் ஏப்ரல் திங்கள் பதினொன்காம் நாள் ஆகும். முதலியாரின் தந்தையார் பெயர் சுப்பிரமணிய முதலியார். தாயார் பெயர் சுப்பம்மையார். குலம் சைவவேளாண் குலம். முதலியாருடைய முன்னோர்கள் முந்நூறு யாண்டுகட்கு முன்னர்த் தென்னார்க்காடு மாவட்டத்தில் இருந்து வந்து குடியேறியவர்கள் என்பர்.

கல்வி

முதலியார் முதன்முதலில் தம்மூரில் திண்ணைப்பள்ளியில் கல்விகற்கத் தொடங்கினார். பிறகு திருமங்கலம் போர்டு பாடசாலையில் சிறிதுநாள் பயின்றார். அதன்பின்

சாத்தூர் ஏ. வி. பாடசாலையில் சில ஆண்டுகள் கற்றார். அப்பால் மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளி, பசுமலை அமெரிக்கன் கலாசாலை, திருச்சிராப்பள்ளி எஸ். பி. ஜி. கல்லூரி ஆகியவைகளில் கல்வி கற்று 1917-இல் பி. ஏ, பட்டம் பெற்றார். முதலியார் கல்வி கற்ற காலத்தில் நல்ல குற்றாலலிங்கம் பிள்ளை, சோமசுந்தர பாரதியார், வேங்கட சாமி நாட்டார் முதலியோர் தமிழாசிரியர்களாக இருந்தனர். முதலியாருக்குத் தமிழ்மொழியினிடத்திலே பற்று மிகுதியாக இருந்தது. தமிழாசிரியர்களோடு நெருங்கிய உறவு கொண்டார். தாம் விரும்பிய சில நூல்களைத் தனியாகப் பாடங்கேட்டார். இதனால் தமிழறிவு வளரத் தொடங்கியது. நாட்டார் சொற்பொழிவு செய்யச் செல்லுமிடங்கட்கெல்லாம் உடன்செல்வார். அதனால் சொற்பொழிவு செய்யும் ஆற்றலும் உண்டாகியது. கல்லூரியில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும்போதே செய்யுட்கள் இயற்றிப் பரிசுபெற்றார். முதலியாரின் தமிழ் ஆற்றல் நாட்டாருக்கு நன்மதிப்பைத் தந்தது. நாட்டார் தாம் வகுப்பு கட்குச் செல்ல முடியாத நாட்களில் பாடம் நடத்துமாறு முதலியாரிடம் பொறுப்பளித்துச் செல்வார். அவ்வமயங்களில் முதலியார் தமிழ் வகுப்பைத் திறமையாக நடத்திப் புகழ்பெற்றார். 1917-18-ஆம் ஆண்டுகளில் சிவகாசி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகவும் பணிபுரிந்தார்.

வழக்கறிஞர்

முதலியார் உள்ளம் வழக்கறிஞர் தொழிலை நாடியது. 1919-ஆம் ஆண்டில் சட்டப்படிப்பில் தேறிச் சாத்தூரில் வழக்கறிஞர் தொழிலை நடத்தத் தொடங்கினர். முதலியாரின் உள்ளம் நேர்மையையே நாடிநின்றது. எவ்வளவு பெருந்தொகை கிடைப்பதாக இருப்பினும் பொய்வழக்கை

ஏற்றுக்கொள்ளமாட்டார். மெய்வழக்கென்று நன்கு உணர்ந்த பின்னரே வாதிக்க ஒருப்படுவார். வழக்குரைப் பதில் இணையற்றவர். வழக்கின் விவரங்களையெல்லாம் நன்கு உணர்ந்துகொண்ட பிறகுதான் வழக்கை நடத்தத் தொடங்குவார். பதற்றமாக உரையாடமாட்டார். ஒவ் வொரு மொழியையும் நன்கு எண்ணியே பேசுவார். அளவாகப் பேசுவாரே தவிர, மிகுதியாகவோ குறை வாகவோ பேசமாட்டார். செய்தியை விளக்குவதற்குப் போதிய மொழிகளை ஆராய்ந்து கொள்வார். இதனால் நீதிமன்றத் தலைவர்களும் வழக்காளர்களும் பிற வழக்கறி ஞர்களும் இவரிடத்தில் பெருமதிப்புடன் நடந்துகொண் டனர். 'முதலியார் ஒரு நல்ல வழக்கறிஞர்' என்னும் பெயர் உண்டாகியது.

சித்தாந்தமும் திருக்குறளும்

சைவசித்தாந்த நூல்களை முதலியார் தக்கார்களிடம் நன்கு கற்றுணர்ந்து அதிலே நல்ல புலமையும் தெளிவும் பெற்றார். திருக்குறளிடத்திலே முதலியாருக்குப் பேரன் புண்டு. திருக்குறளுக்குப் பலபேர் எழுதிய உரைகளையும் நன்கு ஆராய்ந்தார். பல குறள்களுக்கு அரிய புத்துரையும் கூறினர். முதலியாருடைய திருக்குறளாராய்ச்சித் திறன் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் வெளியிடப் பட்டுள்ள திருக்குறள் பரிமேலழகர் உரைப்பதிப்பின் முன்னுரையால் நன்கு விளங்கும். முதலியாருடைய சொற்பொழிவுகளும் உரையாடல்களும் கட்டுரைகளும், சைவசித்தாந்தக் கருத்துக்களையும் திருக்குறட் கருத்துக் களையும் தம்மகத்தே கொண்டனவாக விளங்கும். முதலி யாருடைய பெருஞ்சீர்த்திக்கு இந்நூற் கருத்துக்களே காரணமாக அமைந்தன.

காசியில் க்ஷேத்தொண்டு

திருப்பனந்தாள் திருமடத்தினர் காசிமாநகரில் சைவசித்தாந்தக் கட்டளை ஒன்று ஏற்படுத்தியுள்ளனர். அக்கட்டளையாவது :—காசியில் பல்கலைக் கழகம் ஒன்று உள்ளது. அக்கழகத்திற்கு ஆண்டாண்டுதோறுஞ் சைவ சித்தாந்தப் பேரறிஞர் ஒருவரை அனுப்பி அந்நாட்டு மாணவர்கட்குச் சைவசித்தாந்த முடிபுகளை விளக்க வேண்டும் என்பதேயாம். அப்பணிக்குச் செல்லத் தக்கார் ஆங்கிலத்தில் கலைமுதுவர் (எம்.ஏ) என்னும் பட்டம் பெற் றிருத்தல்வேண்டும். சைவசித்தாந்தத்திலும் தமிழிலும் பெரும் புலமையாளராக இருத்தல் வேண்டும் என்பதே யாகும். அவ்வாறே ஆண்டுதோறுந் தக்கார் ஒருவர் சென்று சொற்பொழிவு செய்து வருகின்றனர். முதலி யாரும் ஓராண்டு சென்று ஆங்கிலத்தில் சைவசித்தாந்த விரிவுரைகள் ஆற்றித் தம் புலமையையும் பெருமையையும் புலப்படுத்தி வந்தார்.

பொதுநலப்பணி

முதலியார், மக்களின் பொதுநலத்திற்காகவும் அரும் பெருஞ் செயல்களைச் செய்துவந்தார். சிலகாலம் நீதிக் கட்சியில் உறுப்பினராயிருந்தார். பிறகு எக்கட்சியிலும் ஒட்டாமல் எல்லாக்கட்சிகளையும் பற்றிநின்று அருந் தொண்டு புரிந்தார். அறிஞர்களாக விளங்குவோர் ஒரு கட்சிக்குரியராயின் பிற கட்சியினர் ஏமாற்றத்தையடைய நேரிடும். அறிவுடைமை எல்லோருக்கும் பொதுவுடைமை. ஆகவே முதலியார் தக்கநிலையில் நின்று பணிபுரிந்தார். நாட்டின் விடுதலையிலும் ஈடுபட்டார். சாதி ஒழிப்பிலும் ஈடுபட்டார். சமயவளர்ப்பிலும் ஈடுபட்டார். ஒன்றுக் கொன்று மாறுபாடுகொண்டு மோதாத வகையில் பணி யாற்றினர்.

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழாராய்ச்சிக் குழுவின் பார்வையாளராகப் பலமுறை தொண்டுசெய்தார். இராசாசர் அண்ணுமலைச் செட்டியார், முதலியாரிடத்திலே பெருமதிப்புக் கொண்டிருந்தார். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் இயக்குநர் கூட்டத்திலும் உறுப்பினராக இருந்து பணிசெய்துள்ளார். சாத்தூரில் தமிழ்ச் சங்கம் ஒன்றை ஏற்படுத்தி அதன் செயலாளராகவும் உறுப்பினராகவும் இருந்து பல்லாண்டுகள் பணிபுரிந்தார். சென்னைச் சைவசித்தாந்த மகாசமாசத்தின் தலைவராக இருந்தும் பணிபுரிந்தார். தூத்துக்குடி சைவசித்தாந்த சபைக்குப் பன்முறை தலைமை பூண்டுள்ளார்.

தென்னிந்திய சைவசித்தாந்த சங்கச்சார்பில் 27-4-52 முதல் 20-5-52-வரை திருநெல்வேலி சிந்துபூந்துறை மடத்தில் சிவஞானபோதச் சிற்றுரைச் சித்தாந்த வகுப்புச் சிறப்புற நடந்தபோது அதன் பேராசிரியராய் அமர்ந்து அறுபதின்மர்க்குச் சைவசித்தாந்த ஞான போதஞ் செய்தார்.

ஒடுக்கம்

முதலியார் தமது ஆராய்ச்சிப்பேருரைகளை நூல் வடிவில் வெளியிட எண்ணியிருந்தார். சிலகாலமாக நோய்வாய்ப்பட்ட அவர் 1954-ஆம் ஆண்டு சூன் திங்கள் இருபத்தேழாம் நாள் இறைவன் திருவடிநீழலை அடைந்தார். முதலியாரின் அரிய ஆராய்ச்சி நூல்கள் இனி வெளிவந்து மக்கட்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உ0. இரசிகமணி சிதம்பரநாத முதலியார்

தோற்றமுங் கல்வியும்

தென்காசிக்கு அண்மையில் உள்ள களங்காடு என்னும் ஊரிலே, தீர்த்தாரப்ப முதலியார் என்பவருடைய திருமகனாக, டி. கே. சிதம்பரநாத முதலியார் 1882-ஆம் ஆண்டில் பிறந்தார். முறையாகத் தமிழ்க் கல்வியையும் ஆங்கிலக்கல்வியையும் கற்றார். ஆங்கிலத்தில் பி. ஏ. பி. எல். என்னும் பட்டமும் பெற்றார். இந்துமததாபனப் போர்டில் ஆணையாளராக இருந்து அருந்தொண்டுகள் பல புரிந்தார்.

சிதம்பரநாதர் ஆங்கிலக் கல்வியறிவைப் பெற்றிருந்தும் அம்மொழியில் மோகங்கொண்டு தாய்மொழியாந் தமிழ்மொழியை மறந்துவிடவில்லை. தமிழ்நூல்களைக் கற்பதிலே பேரூக்கம் காட்டினார். கம்பருடைய இராமகாதை சிதம்பரநாதர்க்குப் பெருமகிழ்ச்சியை அளித்தது. அந்தக் காதைக்கடலிலே திளைத்துக் களித்தார். "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் குறிக்கோளினராய் அரிய இராமாயணப் பாடல்களுக்கு விளக்கவுரை அரும்பதவுரை முதலியவைகளைக் கல்வியறிவு மிகுதியாகப் பெறுதோறுங் கற்றுக்களிக்குமாறு, கல்கி என்னுங் கிழமைத்தாளில், "கம்பர்தருங்காட்சி" எனப் பெயரிட்டு நெடுங்காலம் எழுதினார். அக்கிழமைத்தாளைப் படிப்பவரின் தொகை பல ஆயிரமாதலின் இராமாயணநூலின் அருமை பெருமைகளைப் பல்லாயிரம் மக்கள் கற்று மகிழ்தற்கு நல்ல வாய்ப்பு ஏற்பட்டது. கலைவிருந்தேயன்றி உணவு விருந்தளிப்பதிலும் டி. கே. சி. புகழ்பெற்றவராக விளங்கினர்.

குற்றாலத் தமிழ்

டி. கே. சி. பின்னாளில் திருக்குற்றாலத்தில் தங்கியிருந்தார். அறிஞர்களும் செல்வரும் பொதுவான அறிவு படைத்தவர்களும் டி. கே சியின் இருப்பிடத்தை நாடிச் சென்றனர். அனைவரும் டி. கே. சியின் உரையாடலை விரும்பியே சென்றனர். தம் இனிய சுவைமிக்க மொழியால் டி. கே. சி. இராமாயணப்பாக்களை உரைத்து உரைத்து மகிழ்வளித்தனர். கேட்டவர்கள், "இது குற்றாலத்தமிழ் மிக நன்றாக இருக்கின்றது" என்று போற்றிப் புகழ்ந்தனர். இதனை உளங்கொண்டே திரு. ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள், "தமிழ்க்குலத்தின் பண்பாட்டிற்கு ஓர் எடுத்துக்காட்டு வேண்டுமானால், டி. கே. சி. என்று ஒருதலையாகக் கூறலாம். விருந்தளித்தல் என்பது அவர்களிடம் ஒருகலையாக விளங்கிற்று. குற்றாலத்தில் அவர்களைக்காண நற்றமிழ் அறிஞர்கள் வருவார்கள்; பெருஞ்செல்வர்கள் வருவார்கள்; மந்திரிகள்—அதிகாரிகள் வருவார்கள்; பிற நாட்டு நல்லறிஞர்களும் வருவார்கள்; இவர்கள் எல்லோரையும் நல்விருந்தாலும் சொல்விருந்தாலும் மகிழ்விக்குஞ் சிறப்பு, டி. கே. சி. அவர்களிடம் நிகரற்ற முறையில் அமைந்திருந்தது. நண்பர்களுக்குக் குற்றாலம் ஆவியகன்ற கூடுபோலவே தோன்றும்; மலையிருந்தென்ன! மந்தமாருதம் இருந்தென்ன! அருவிதான் இருந்தென்ன! அறிவுக்களஞ்சியத்தை இழந்து விட்டோம்" என்று வானெலியில் கூறினர். மக்களுக்கு விளங்கும்படியான வகையில் தெளிவாகப் பேசுவதிலும் எழுதுவதிலும் டி. கே. சி. மிக வல்லவர். இவைதான் இவருக்கு என்றும் அழியாப் புகழைத் தந்தன.

புதுமை மோகம்

டி. கே. சிக்குப் புதுமையில் மோகம் உண்டு. இம் மோகம் அவருக்குப் பல பகைவர்களை உண்டாக்கிற்று. ஆயினும் அதைக் குறித்து டி. கே. சி. சிறிதும் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. இலக்கணம் இருந்தாலுஞ்சரி இறந்தாலுஞ்சரி மக்கள் எளியமுறையில் செய்திகளை உணர்ந்துகொள்ளவேண்டும் என்பதே அவர் கொள்கை. இக்கொள்கையைக் கடைப்பிடித்தே கல்+குடம் - கல்க் குடம், பால்+கடல் - பால்க்கடல், நாள்+சிறந்தது - நாள்ச் சிறந்தது என்பனபோல் பல இலக்கணங்களை மாற்றியெழு தினார். ஆனால், இதற்கு ஆதரவு கிடைக்கவில்லை.

தமிழ்த்தொண்டு

1924-ஆம் ஆண்டில் திருநெல்வேலியில் இலக்கியச் சங்கம் ஒன்றை ஏற்படுத்தினார். அதன்வாயிலாக அரிய செய்யுட்கள் பலவற்றைப் பொருள்நயங்களோடு அன்பர் கட்குக் கற்பித்தார். கம்பரிடத்திலே டி. கே. சிக்கு அந்த நாளிலேயே காதல் உண்டு. அதன்பயனைத் தோன் றியதுதான் கம்பர் யார்? என்னும் நூல். மற்றும் டி. கே. சி, இதயஒலி முத்தொள்ளாயிரஉரை என்னும் நூல்களையும் எழுதிவெளியிட்டார்.

இறுதி

திருக்குற்றால வாழ்வையும் கம்பராமாயணச் சுவை யையும் இனிது நுகர்ந்து கொண்டிருந்த டி. கே. சி. இவை களைவிட்டு விண்ணுலகத்திற்குச் செல்லக்கூட விருப்ப மற்றவராக இருந்தார். தம்மைச் சிறுமைப் படுத்துவா ரையும் பெருமைப்படுத்துவாரையும் ஒரே நோக்குடன் நோக்கும் இப்பெரியாரை, விருந்தோம்புவதில் அளவு

கடந்த ஆர்வமுடைய இச் சிரியரை; விண்ணவர்கள் தமக்கு நல்விருந்தாக்க எண்ணினர். 1954-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் பதினேழாம்நாள் விண்ணகஞ் சென்றார். மண்ணவர் பலவாறு வருந்தித் துன்புற்றனர். அவர் தந்த கம்பர்தருங் காட்சியே அவர்கள் உள்ளத்திற்குத் தெளிவை யுண்டாக்கியது.

உக. சேலை சகதேவ முதலியார்

தோற்றம்

சேலை என்பது சென்னை திருவள்ளூருக்கு அண்மையில் உள்ள ஒரு சிற்றூர். அவ்வூரிலே சகதேவர் ஆயிரத்து எண்ணூற்று எழுபத்து நான்காம் ஆண்டிலே பிறந்தார். சகதேவரின் தந்தையார் பெயர் சிங்கார முதலியார். சகதேவருக்கு உடன்பிறந்தார் இருவர் மூன்னும் பின்னுமாகத் தோன்றினர்.

கல்வி

சகதேவர் திருவள்ளூர் வெஸ்லி மிஷன் உயர்நிலைப் பள்ளியில் கல்விகற்று மெட்ரிக்குலேஷன் தேர்வில் தேர்ச்சி பெற்றார். சகதேவருக்குத் தமிழார்வம் மிகுதியாக இருந்தது. ஆகவே தக்கார்பால் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேறியதுடன் தாமேயும் பல நூல்களை இடைவிடாது ஒதியுணர்ந்தனர். இதனால் இவருக்குத் தமிழ்ப் பயிற்சி மிகுதியாயிற்று.

ஆசிரியத் தொண்டு

இவர் கல்விபயின்ற வெஸ்லிமிஷன் உயர்நிலைப் பள்ளி அதிகாரிகள் சகதேவரின் தமிழ்ப் புலமையை உணர்ந்து அப் பள்ளியில்தானே தமிழாசிரியராக ஏற்படுத்தினர்.

பள்ளி அதிகாரிகளும் மாணவர்களும் மன நிறைவுகொள்ளும் வகையில் தம் பணியினைப் புரிந்தனர். சகதேவரின் தமிழ்ப் புலமையை உணர்ந்து அந்நாளில் சுக்காடு என்னும் ஊரில் இருந்த கிறித்துவ போதகாசிரியர்களும் இவரிடம் ஒய்வு நேரங்களில் தமிழ் கற்றனர்.

மணமும் மக்கட்பேறும்

சகதேவருக்கு இருமுறை திருமணம் நிகழ்ந்தது. பெண்மக்கள் மூவரும் ஆண்மக்கள் ஐவருந்தோன்றினர்.

தமிழ்த்தொண்டு

சகதேவர் மாணவர்கட்குப் பன்னெடுநாள் போதித்த பண்புடையாராகலின் பாடப் புத்தகங்கள் எவ்வாறிருப்பின் மாணவர்கள் கற்றற்கு எளிதாக இருக்கும் என்னும் இயல்பை நன்குணர்ந்தவர். ஆகவே, மணி. திருநாவுக்கரசு முதலியார் தாம் பாடப் புத்தகம் எழுதியபோது சகதேவரின் துணையையும் நாடிப் பெற்றார். சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழக வெளியீடுகளான கழகத் தமிழ்ப்பாட வரிசையில் ஆறு புத்தகங்கள் அமைத்துக்கொடுத்தார். கழகத் தமிழ்ப்பாடத்திரட்டு, ஒன்று, இரண்டு புத்தகங்களைத் தொகுத்துக் கொடுத்தார். மற்றும் நல்லொழுக்கப் பாடம், வாஸ்கோடகாமா, பேசாதார் பேச்சு முதலிய நூல்களையும் எழுதிக் கொடுத்தார்.

இறுதி

சகதேவர் இறுதிக்காலம் வரையில் தமிழ்த்தொண்டைத் தளராது செய்துகொண்டிருந்தார். இவர் சிறந்த ஒழுக்கம் உடையவர். நற்பண்புகள் பலவும் நண்ணப் பெற்றவர். பொறுமையும் அமைதியும் பொருந்தப் பெற்றவர். வேறுபல நூல்கள் இயற்றவேண்டும் என்னும்

விழைவு மிக்கவராக இருந்தார். ஆயினும் முதுமை அதற்கு இடங்கொடுக்கவில்லை. சின்னாள் உடல்நலங் குன்றியிருந்து 1953-ஆம் ஆண்டு சூலைத்திங்கள் இருபத்தெட்டாம் நாள் தமது எழுபத்தொன்பதாம் அகவையிலே இறைவன் திருவடி நீழலையெய்தினர்.

உஉ. துடிசைகிழார் சிதம்பரனர்

தோற்றம்

துடிசைகிழார் அ. சிதம்பரனர், கோயமுத்தூரில் சிறந்து வாழ்ந்துவரும் வேளாண் குடியில், அர்த்தநாரீசுவர முதலியார் என்பவருடைய அருமைத் திருமகனாகத் தோன்றினர். நீண்டவளர்ந்த தோற்றம் உடையவர். செந்தமிழையும் ஆங்கிலத்தையும் நன்குகற்றுக் கல்வியறிவிலே சிறந்து விளங்கினர்.

வேலை

துடிசைகிழார், போலீசு இலாகா என்னும் ஊர்காவல் துறையில் அலுவல் பார்க்கத்தொடங்கினர். நாட்டிற்கும் மக்கட்கும் நன்மை பயக்கத்தக்கவகையில் தந்நலங் கருதாது திறமையுடன் செயலாற்றினர். இவர் திறமையுடன் தொழிலாற்றியபடியால் தம் அலுவலில் உயர்ந்து கொண்டேபோய் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னும் உயரிய பதவியையும் அடைந்தார்.

பணி

மனிதயாக்கையைப் பெற்றுள்ளவன் மனது வைத்தால், எங்கிருந்தாலும் என்னவேலை செய்தாலும் ஒய்வு நேரங்களில் தான் வேறொரு வேலையைச் செய்து சிறப்படையலாம். உ. வே. சாமிநாதையர் குடந்தையிலும்

சென்னையிலும் தமிழாசிரியராகத் தொழிலாற்றிக்கொண்டிருந்தார். அவர் பள்ளியைவிட்டு வீட்டிற்கு வந்தவுடன் ஓய்வை மேற்கொண்டு வீணுகப் பொழுதைப் போக்குவதில்லை. நூலாராய்ச்சியில் ஈடுபட்டார். கரையானுக்கு இரையாகிவந்த அரும்பெரும் நூல்கள்பலவற்றை ஆராய்ந்து அச்சிட்டு வெளிப்படுத்திச் செந்தமிழ் உலகிற்குச் சிறந்த தொண்டு புரிந்தார். சி. வை தாமோதரம் பிள்ளையும் இவ்வாறே தமிழ்ப்பணியில் ஈடுபட்டு வேலைசெய்தார். வேறு பலரும் இவ்வாறு செய்தனர். தொடிசைகிழார் தாமும் தமிழ்ப் பணியில் ஈடுபட்டார். இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றுத்தேறினர். நூலாராய்ச்சியில் பெரிதும் ஈடுபட்டுப் பல புதுச்செய்திகளைக் கண்டுபிடித்தார். தமது உரிமை ஊராகிய தொடியலூரைப் பற்றிய செய்திகளை ஆராய்ந்தறிந்து தொடிசைப் புராணம் என்னும் செய்யுள் நூலை இயற்றினர். சிவபூசையிலும் இறைவழிபாட்டிலும் பேரூக்கங்காட்டினர். 'சிவபூசை விளக்கம்' என்னும் நூலைச்செய்தார். தமிழ் மொழியின் சிறப்புக்களை நன்கு ஆராய்ந்து எழுதி, "கழகத் தமிழ் விளைவிடை" என்னும் பெயருடன் நூலாக வெளிப்படுத்தினர்.

ஆராய்ச்சி

தமது ஆராய்ச்சித் திறமையைக்கொண்டு சேர மன்னர்களுடைய காலம் வரலாறு முதலியவைகளை ஆராய்ந்து "சேரர்வரலாறு" என்னும் பேருடைய நூலாக வெளிப்படுத்தினர். இவ்வாறே முதல் இடை கடை என்னும் மூச்சங்கங்களைப் பற்றியும் ஆராய்ச்சிசெய்து "தமிழ்ச் சங்கங்களின் வரலாறு" என்னும் பெயருடன் நூலாக வெளிப்படுத்தினர்.

இறுதி

அலுவல் துறையில் உதவி ஊதியம் பெற்று ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டுத் தமிழ்த் தொண்டை மேற்கொண்டிருந்த இப்பெரியார் எதிர்பாராத நிலையில் திடீரென்று 1954-ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் முப்பதாம் நாள் கோயமுத்தூரில் தமது இல்லத்தில் இறைவன் திருவடி நீழலை எய்தினர்.

இவர் இயற்றிய நூல்கள்

1. தடிசைப் புராணம்
2. உருத்திராக்க விளக்கம்.
3. விபூதி விளக்கம்
4. ஆனந்து
5. திருமந்திரம் குறிப்புரை
6. கழகத் தமிழ் விளு விடை
7. ஷை 2
8. கழகச சைவ விளுவிடை 1
9. ஷை 2
10. அகத்தியர் வரலாறு
11. சேரர் வரலாறு
12. தமிழ்ச சங்கங்களின் வரலாறு
13. சிவபூசை விளக்கம்

என்பனவாம்.

உங. கல்கி, கிருட்டிணமூர்த்தி

தோற்றம்

கல்கி என்று மறுபெயர் பூண்ட ரா. கிருட்டின மூர்த்தி 1899-ஆம் ஆண்டில், மாயூரத்திற்கு அண்மையில் உள்ள புத்தமங்கலத்தில் பிறந்தார்.

கல்வி

தொடக்கப் பள்ளியில் சிலகாலம் கல்விகற்றார். பிறகு மாயூரம் நகராண்மைப் பள்ளியில் படித்தார். அதன்பிறகு திருசிரபுரத்தில் கல்லூரிப் படிப்பைத் தொடங்கினார். இடைநிலைவகுப்பு வரையில் (இண்டர்மீடியட்) கற்றார். 1921-ஆம் ஆண்டில் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து கல்லூரிப் படிப்பைக் கைவிட்டார்.

கலைத்தொண்டு

இராசகோபாலாச்சாரியார் இராமசாமி நாயக்கர் ஆகியவர்களின் தலைமையில் காங்கிரசுக் காரியாலயத்தில் தொண்டுசெய்தார். கிருட்டின மூர்த்தியின் உள்ளம் கலைப்பணியிலே சென்றது. திரு. வி. க. நடத்திய நவசக்தியில் உதவியாசிரியராக அமர்ந்து பணிபுரிந்தார். இராசகோபாலாச்சாரியாரால் திருச்செங்கோட்டில் தொடங்கப்பெற்ற ஆசிரமத்தில் பணிபுரிந்தார். கட்குடியைத் தொலைத்தற் பொருட்டுத் தொடங்கப்பெற்ற "விமோசனம்" என்னும் பெயருடைய வெளியீட்டிற்கு ஓராண்டுவரை ஆசிரியராக அமர்ந்து அவ்வெளியீட்டைச் சீருஞ்சிறப்புந் திகழ வெளியிட்டார்.

ஆனந்த விகடன்

இன்று தமிழ் நாட்டில் மட்டுமல்லாமல் தமிழ் படிக்கத் தெரிந்த எல்லா இடங்களிலும் ஆனந்தவிகடன் என்

னும் கிழமைவெளியீட்டை நாம் பார்க்கலாம். அந்த வெளியீட்டின் மூலம் கல்கி செய்துள்ள நற்றமிழ்த் தொண்டு அளவற்றது. ஓர் இருபது ஆண்டுகளுக்கு முன் வரைகூடத் தமிழ்மக்கள் நகைச் சுவையின் பெருமையை நன்குணர்ந்து கொள்ளவில்லை நகைச் சுவையை நன்கு நுகரமுடியாத அல்லது நுகர அறியாத சிற்றறிவாளர்கள் நகைச் சுவையைக், 'குறும்பு' என்றுகூறி நகைச்சுவை ததும்பச் சொல்லாடுபவர்களைக் குறும்பர்கள் என்றும் குறைகூறி இழித்துரைத்து வந்தனர். இத்தகைய மனப் பான்மை முக்காற்பாகம்வரை தமிழ் நாட்டைவிட்டு நீங்கு தற்கு நல்லவேலை செய்தவர் கல்கி. நகைச்சுவை மூலமாக எச்செயலையும் எளிதில் செய்துமுடிக்கலாம் என்னும் சூழ்ச்சித்திறனைத் தமிழ் நாட்டிற்கு விளக்கமாகக் காட் டியவர் கல்கி. நாட்டு விடுதலைக்கான நாட்டுப்பற்றை ஆனந்த விகடன் வழியாகக் கல்கி நன்கு வளர்த்தார். இந்த நகைச்சுவை வழியே தமிழ்த்தொண்டும் நன்குவளர்ந்து சிறப்படைந்தது. இவ்வழியில் கல்கி செய்துள்ள தமிழ்த் தொண்டை அவரிடம் வெறுப்புக்கொண்ட பகைவர்கள் கூடப்போற்றுவார்கள் என்பதற்குச் சிறிதும் ஐயமின்று. இந்தப் பணியிலால் ஆனந்தவிகடன் தாளைத் தொடங்கியவர் களும் நல்ல ஊதியம் பெற்றுச் சிறப்படைந்தனர்.

கல்கி

ஆனந்தவிகடன் தாளின் உரிமையாளராகிய வாசன் என்பவரோடு இடையே நேர்ந்த சிறுமாறுபாட்டினால் கல்கி ஆனந்தவிகடன் பத்திரிகையில் இருந்து விலகி னார். "கல்கி" என்னும் தமது புனைபெயரோடு கிழமை இதழ் ஒன்றைத் தொடங்கினார். கல்கியாருடைய கைவளம் அவ்விதழும் விரைவாக வளர்ந்து தமிழ்நாடெங்கும் பரவியது. கல்கியார் தமக்கே உரிமையான தனிப்போக்கில்

அப்பத்திரிகையையும் நடத்தி நாளொருமேனியும் பொழு தொருவண்ணமுமாகச் சிறப்படைந்து வந்தார்.

பாரதியிடம் பற்று

நாட்டு விடுதலைக்காகப் படாததொல்லைகளையெல்லாம் பட்டுப் பாட்டினால் நாட்டுக்கு விடுதலை தேடியவர் சுப்பிர மணிய பாரதியார். பாரதியாரைப்பற்றி அறியாத தமிழ் மக்கள் இன்றைய உலகில் எவரும் இரார். நாட்டுவிடுதலைக் காக உயிரைத் துரும்பென மதித்து வேலைசெய்தவர் அவர். அந்தப் பாரதியாரிடம் கல்கி மிகுந்த பற்றுக்கொண்டார். அவர் பிறந்த இடமாகிய எட்டைய புரத்திலே மண்டபம் ஒன்றை அமைத்தார். பாரதியாருடைய குடும்பத்தா ருக்கும் பல உதவிகள் செய்தார்.

பலவகைத் தொண்டு

எழுத்தாளர் சங்கத்தின் தலைவராக அமர்ந்து எழுத் தாளர்கள் சிறப்புறுதற்கு வழிதேடினார். கம்பர் கழகத் தின் தலைவராய் அமர்ந்து அரும்பணி புரிந்தார். நாட்டு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறைசென்றார். திரு. வி. க. அவர்கட்கு நினைவுமண்டபம் ஒன்று அமைப்பதற்கும் வேலைசெய்தார். நாட்டில் தலைசிறந்து விளங்கும் பெரிய மனிதர்கள் பலர் உதவியை நாடித் தம்மையடையும் போதெல்லாம் அவர்கட்கு உதவி புரிந் தார் கல்கி. தமிழறிந்த மக்கள் கல்கியிடத்திலே தனி மதிப்புவைத்திருந்தபடியால் பெருந்தலைவர்களும் கல்கியின் உதவியை நாடும்படியான நிலைமை ஏற்பட்டிருந்தது.

இறுதி

கல்கி இராப்பகல் எழுத்து வேலையில் ஈடுபட்டிருந்தார். அதனால் அவருடைய உடல்நலம் கேடடைந்திருந்தது. சின்னாள் சென்னைப் பெரிய மருத்துவசாலையில் நோய்

நீக்கத்தின் பொருட்டு மருந்துண்டு சிறிது உடல்நலம் பெற்று இல்லந் திரும்பினர். எவரும் எதிர்பாராதவகையில் 5-12-1954-ல், தமது ஐம்பத்தைந்தாவது அகவையில் திடீரென்று வானகஞ்சென்றார். "நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும், பெருமை உடைத்திவ்வுலகு" என்பது பொய்யாமொழி அன்றே?

எழுதிய நூல்கள்

கல்கி இலக்கண இலக்கியத்தொடர்பான நூல்களோக் கற்று அவ்வரிசையில் நூல்களை எழுதவில்லை யெனினும் அவர் எழுதிய,

1. சாரதையின் தந்திரம்
2. கள்வனின் காதலி
3. மோகினித் தீவு
4. பார்த்திபன் கனவு
5. சோலைமலை இளவரசி
6. சிவகாமியின் சபதம்
7. மகுடபதி
8. அலையோசை

முதலிய பெருங் கதைநூல்கள் தமிழறிந்த எல்லா மக்களாலும் பெரிதும் பாராட்டிப் படிக்கப்பெறுகின்றன.

உ.வே. மனோன்மணி அம்மையார்

தோற்றம்

சென்னைக் குன்றத்தூருக்கு அண்மையில் உள்ள மண்ணிவாக்கம் என்னும் சிற்றூரிலே மனோன்மணி அம்மையார் 1863-ஆம் ஆண்டு பிறந்தார். அம்மையாரின் தந்தையார் பெயர் முருகேச முதலியார். தாயார் பெயர் அலர்மேல் அம்மையார். அம்மையாரோடு பிறந்த ஆண் மக்கள் மூவர்.

கல்வி

மனோன்மணி அம்மையாரின் தந்தையாரான முருகேச முதலியார் தமிழ்நூல்கள் பலவற்றைப் படித்து எடுத்த தமிழ்நூல்களைப் படிக்கத்தக்க அறிவாளியாக விளங்கினர். மற்றும் அவர் மருத்துவ நூல்களையுங் கற்று மருத்துவத்தொழிலும் அறிந்திருந்தார். முருகேச முதலியார் தம் மக்களுக்குத்தாமே கல்விகற்பித்தார். ஆண் மக்களைவிட மனோன்மணி அம்மையார் தம் தந்தையாரிடம் கருத்தாகக் கல்விகற்றார். தொடக்கப் பள்ளியிலும் அம்மையார் சிறிதுகாலம் கல்விகற்றபின் மீண்டுந் தம் தந்தையாரிடமே அந்தாதி, கலம்பகம், பிள்ளைத்தமிழ் முதலிய சிறுநூல்களைப் பாடங்கேட்டார். அகவை பதினைந்து நிரம்பியபின் பெரிய புராணம் திருவிளையாடற் புராணம் முதலிய புராணங்களையும் பாடங்கேட்டார். சமயநூல் பலவற்றைத் தாமாகப் படித்தறிந்தார். அம்மையார் எப்பொழுதும் ஏடுங்கையுமாகவே இருந்து கல்வி கற்றார்.

திருமணம்

நாளடைவில் மனோன்மணி அம்மையார் அறிவிற் சிறந்து விளங்கினர். அகவை ஈரொன்பது நிறையப்

பெற்ற அம்மையார், நல்ல ஒழுக்கமும் ஓரளவு கல்வியறிவும் நல்ல உடல்வன்மையும் போதிய வருமானமும் உடைய ஓர் இளைஞனைத் தாமே தேர்ந்தெடுத்துத் திருமணம் புரிந்து கொண்டார். இல்லறவாழ்க்கை இனிது நடை பெற்றது. அம்மையாரின் கணவனும் அம்மையார் போக் கைப் பற்றித் தமிழ் நூல்களைப் படித்தறிந்தான். ஒத்த மனமுடைய மணமக்கள் உலகத்தில் மீடித்து வாழ்தல் அருமை. எலியும் பூனையும்போல் போரிட்டுக்கொண்டு இல்லறம் நடத்துபவர்கள் மீடித்து நிலைத்து நிற்பார்கள். மனோன்மணியம்மையாரின் கணவன் ஏழாண்டுகட்குப் பிறகு விண்ணகஞ்சென்றான். அம்மையார் இருபத்தைந் தாவது ஆண்டிலேயே கைம்மையாகும்படியாக நேரிட்டு விட்டது.

மருத்துவப் பயிற்சி

மணாளனை இழந்த மனோன்மணி அம்மையார் மருத் துவம் பயின்று மக்கட்குத் தொண்டுசெய்து காலங்கழிக்க எண்ணினார். தம் தந்தையிடம் முன்னரே சிறிது மருத் துவம் பயின்றிருந்தபடியினாலேயே அம்மையாருடைய உள்ளம் இவ்வாறு செம்மையான வழியிற்சென்றது. தம் எண்ணத்தைத் தந்தையார்க்குணர்த்தினர். அவரும் மகளின் எண்ணத்திற்கு இணங்கினர். அந் நாளிலே சென்னைமாநகரிலே தஞ்சாவூர் சுப்பிரமணிய பண்டிதர் என்பவர் சிறந்த மருத்துவராக விளங்கினர். அவருடைய பெயர் பலவிடங்களினும் பரவிச் சிர்த்திபெற்றிருந்தது. மூருகேச முதலியார் தம் குடும்பத்தோடு சென்னைக்குக் குடி பெயர்ந்தார். சுப்பிரமணிய பண்டிதரைக் கண்டு தம் மகளுடைய எண்ணத்தைக் கூறினர். மனோன்மணி அம் மையாருடைய தமிழறிவையும் அறிவாற்றலையும் நன் குணர்ந்த சுப்பிரமணிய பண்டிதர் அம்மையாருக்கு மருத்

துவத் தொழில் கற்பிக்க இணங்கினர். அன்றுமுதல் அம்மையார் பண்டிதருடைய மாணவியாகி ஏறக்குறைய நான்கு யாண்டுகள் மருத்துவப் பயிற்சி பெற்றார். பெண்கள் மருத்துவத்திலும் குழந்தைகள் மருத்துவத்திலும் அம்மையார் நன்கு தேர்ச்சிபெற்றுத் திகழ்ந்தார்.

இல்லத்தில் மருத்துவசாலை

அம்மையார் தமது இல்லத்திலேயே மருத்துவத் தொழிலைத் தொடங்கினர். அம்மையார் இல்லம் சென்னையில் கொண்டித்தோப்புப் பகுதியில் அமைந்திருந்தது. அப்பகுதியில் இருந்த பெண்களும் குழந்தைகளும் அம்மையாரிடம் மருத்துவஞ்செய்துகொள்ளலாயினர். மருத்துவஞ்செய்துகொள்ள வருபவர்களிடம் அம்மையார் வற்புறுத்திக் காசு வாங்குவதில்லை. அவர்களே விரும்பிப் பலகையின்மீது வைத்துச் செல்லுந்தொகையை எடுத்துக் கொள்வார். நோய்தீர்க்குந் திறமையில் சிறந்திருந்தமையாலும் பொருளில் கண்டிப்பு இன்மையாலும் நோயாளர்களிடம் அன்போடும் அருளோடும் நடந்துகொண்டமையாலும் சென்னைமாநகரின் எம்மருங்கும் அம்மையார் பெயர் பரவியது.

பூவை கலியாணசுந்தரர் நட்பு

அந் நாளில் சென்னையில் பூவை கலியாணசுந்தர முதலியாரும் வாழ்ந்திருந்தார். அம்மையாரும் சுந்தரரும் ஒருவரைப்பற்றி ஒருவர் உணர்ந்திருந்தார்கள். ஒரு சமயத்தில் கலியாண சுந்தரரின் மனைவியார் நோயுற்றார். கலியாணசுந்தரர் தம்மனைவியை மனைன்மணி அம்மையாரிடம் முதன்முறையாக அழைத்துக்கொண்டு வந்தார். அந்நாள்முதல் இருவருக்கும் பழக்கம் மிகுதியாகிவந்தது. அமமையார் சுந்தரரை ஆசிரியராகக்கொண்டு மேலும்

இலக்கண இலக்கியங்களைக் கற்று நன்முகச் செய்யுள் இயற்றும் ஆற்றலைப் பெற்றார். அரும்பொருள் எவரிடம் அமைந்திருப்பினும் அவரிடம் இருந்து அதனைப் பணிவுடன் பெறுவது இழுக்காகமாட்டாது. அறிந்தவர் உயர்ந்தவர்; அறியாதவர் தாழ்ந்தவர். இந்நிலை எல்லோருக்கும் பொருந்துவதேயாகும். அம்மையாருடைய மருத்துவ நூற்பயிற்சி கலியாண சுந்தரருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. தம் இல்லத்தில் உள்ளவர்கள் அளவுக் கேனும் மருத்துவஞ்செய்துகொள்ளலாம் என்னும் எண்ணத்துடன் அம்மையாரிடம் சுந்தரர் மருத்துவநூல்கள் சிலவற்றைக் கற்பிக்குமாறு கேட்டுக்கொண்டார். அம்மையாரும் அதற்கு இணங்கி மருத்துவநூல்கள் சிலவற்றைக் கற்பித்தார்.

நூல்கள் இயற்றல்

அம்மையார் மருத்துவத்தொண்டோடு மன நிறைவு பெற்றுவிடவில்லை. மாதர்களின் நன்மையின் பொருட்டும் முன்னேற்றத்தை முன்னிட்டும் மாதர் கல்விச் சங்கம் முதலியவைகளை ஏற்படுத்தி அதன்வாயிலாகவும் அருந்தொண்டாற்றினார். ஓய்வுநேரங்களிலெல்லாம் இறைவன்மேல் புகழ்நூல்கள் இயற்றல், மருத்துவநூல்கள் செய்தல் முதலியவைகளில் ஈடுபட்டார். நண்பர்கள் அறிஞர்கள் முதலானவர்கட்கு அம்மையார் செய்யுளாகவே கடிதம் எழுதுதலும் உண்டு. அம்மையார் மருத்துவத்துறையில் மட்டுமன்றித் தமிழ்த்துறையிலும் வல்லவரென்னும் செய்தி அம்மையார் பாடிய நூல்களால் 1891-ஆம் ஆண்டில் யாண்டும் பரவத்தொடங்கியது.

அறிஞர்கள் பாராட்டு

அமமையாருடைய நூல்களைப் பாராட்டி அக்காலத்தில் இருந்த புலவர் பெருமக்கள் சாற்றுக்கவிகள்

பாடிச் சிறப்புச் செய்தனர். அவ்வாறு செய்தவர்களில் சிறந்தவர்கள்; வண்ணச் சரபம் தண்டபாணி அடிகள், திருவாவடுதுறை ஆதீனம் சுப்பிரமணியத் தம்பிரான், பேராசிரியர் சுந்தரம்பிள்ளை எம்.ஏ. (மனோன்மணீய ஆசிரியர்), யாழ்ப்பாணம் சரவணமுத்துப் பிள்ளை, வெண்பாப் புலி வேலுச்சாமிப்பிள்ளை, திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளை, தசாவதானம் பேறை செகநாதப் பிள்ளை, கந்தசாமிப் புலவர், சோடசாவதானம் சுப்பராய செட்டியார், பூவை கலியாணசுந்தர முதலியார் முதலியோராவர்.

அம்மையார் தம்முடைய பெயரால் மருத்துவநூல் ஒன்றைச் செய்தார். மருத்துவக் கலைஞர்களும் பிறரும் அந்நூலைப் பாராட்டிப் போற்றியதுடன் அம்மையார்க்கு 'ஆயுர்வேதரத்நாகரம்' என்னும் பட்டத்தையும் வழங்கிப் பெருமைப்படுத்தினர்.

இறுதி

அம்மையார் தமது நாற்பத்தைந்தாம் அகவையில் 1908-ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வை நீத்து இறைவன் திருவடிநீழலை அடைந்தார்.

அம்மையார் ஆக்கிய நூல்கள்

1. மனோன்மணீயம்
2. சென்னைக் கந்தசாமி பதிகம்
3. பூவைச் சிங்கார சதகம்
4. பொன்னியம்மன் பதிகம்
5. பழநிப் பாமாலை
6. பழநி இரங்கல் விருத்தப்பதிகம்
7. திருவாமாத்தூர்ப் பஞ்சரத்நம்
8. ஆனைக்கா அகிலாண்ட நாயகி அந்தாதி
9. திருமயிலைக் கற்பகவல்லியந்தாதி

10. பழநிச் சந்நிதிமுறை
11. பழநிவெண்பாப்பதிகம்
12. திருக்கழுக்குன்றம் திரிபுரசுந்தரிமாலை
13. கொடியிடை நாயகி அந்தாதி
14. பழநிசிங்கார மாலை.

முதலியன.

உரு. நாகை நீலாம்பிகை அம்மையார்

தோற்றம்

தனித்தமிழ் இயக்கங்கண்ட தமிழ்ப் பெருமாட்டியாகிய நீலாம்பிகை அம்மையார், மறைமலை அடிகளாரின் அருந்தவச் செல்வியாக 1903-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் ஆறும் நாள் நாகபட்டினத்திலே பிறந்தார். நீலாம்பிகையம்மையாரின் தாயார் பெயர் சவுந்தரவல்லியம்மையார். மறைமலையடிகளார் பிறகு சென்னையை இருப்பிடமாகக்கொண்டு அங்குச்சென்று தங்கியமையின் அம்மையாருடைய கல்விப் பயிற்சி முதலியன சென்னையில் நிகழ்ந்தது. அம்மையாருடன் பிறந்தவர்கள் ஆண்மக்கள் நால்வர் பெண்மக்கள் இருவர்.

கல்விப் பயிற்சி

மறைமலை அடிகளார் 1911-ஆம் ஆண்டிலே சென்னையை அடுத்துள்ள பல்லாவரத்திற்குக் குடியேறினர். அம்மையார் சென்னையிலும் பல்லாவரத்திலும் தொடக்கப் பள்ளிகளில் ஐந்தாம் வகுப்புவரையில் கல்விபயின்றார். பிறகு அடிகளாரே தம் அருமைத் திருமகட்கு நன்னூல் நளவெண்பா, ஆறுமுக நாவலரின் பெரியபுராண உரை நடை, தண்டியலங்காரம், யாப்பருங்கலக்காரிகை, நைடதம்,

வில்லிபாரதம், புறநானூறு முதலிய நூல்களைக் கற்பித்தார். கட்டுரைகளை எழுதிக்கொடுத்து அவைகளை மனப்பாடஞ் செய்து அவைகளிற் சொற்பொழிவாகச் செய்தற்கும் பழக்கினர்.

தனித்தமிழ் வேட்டல்

அம்மையார் கல்வியறிவிலும் குணநலத்திலுஞ் சிறந்து தந்தையாருடன் இனிதுறைந் திருந்தார். ஒரு நாள் தந்தையும் மகளும் வீட்டுத்தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தார்கள். அப்போது இராமலிங்க அடிகளாரின்,

“ பெற்ற தாய்தனை மகமறந் தாலும்
பிள்ளை யைப்பெறுந் தாய்மறந் தாலும்
உற்ற தேகத்தை உயிர்மறந் தாலும்
உயிரை மேவிய உடல்மறந் தாலும்
கற்ற நெஞ்சங் கலைமறந் தாலும்
கண்கள் நின்றிமைப் பதுமறந் தாலும்
நற்ற வத்தவர் உள்ளிருந் தோங்கும்என்
நமச்சி வாயத்தை நான்மற வேனே.”

என்னும் அருட்பாப்பாடலை அடிகளார் இனிமையாகப் பாடினர். பிறகு தம் அருமைத் திருமகளைப் பார்த்து, “நீலா இப்பாட்டில் உள்ள ‘தேகம்’ என்னும் வடசொல்லுக்குப் பதிலாக ‘யாக்கை’ என்னும் தமிழ்ச்சொல் ஆளப்பட்டிருந்தால் இப்பாடலின் சொல்லோசை இன்னும் மிகுந்த இனிமையாக இருக்குமன்றே? வடசொற்களும் ஏனைய அயன்மொழிச் சொற்களும் தமிழிற் கலப்பதால், தமிழ்மொழியின் இனிமை குறைவுபடுவதுடன் தமிழ்ச் சொற்கள் பலவும் நாளடைவில் மறைய அயல்மொழிச் சொற்கள் மிகுதியாக வந்து தமிழில் நிலைபெற்று விடுகின்றன. இதனால் காலஞ்செல்லச் செல்லத் தமிழ்ச் சொற்கள் மறைந்து குறைந்து இறந்து ஒழிகின்றன. இவ்வாறே

நிகழ்ந்துகொண்டிருந்தால் நாளடைவில் தமிழ்மொழியும இறந்துபோன மொழிகளில் ஒன்றாகிவிடுமன்றே'' என்று இயம்பினர்.

அடிகளாரின் அறிவுரையைக் கேட்ட அம்மையார், ''அவ்வாறுயின் இனிமேல் நாம் தனித்தமிழில் பேசவும எழுதவும் உறுதிகொள்ளுதல் வேண்டும்'' என்று உணர்ச்சி ததும்ப உரைத்தார். அன்றுமுதல் அம்மையார் பேசும் போதும் எழுதும்போதும தனித்தமிழையே கையாளத தொடங்கினர் தனித்தமிழ்ச் சொல் ஆராய்ச்சியில் ஈடு பட்டார். தம் தந்தையாரையும தனித்தமிழ் வழங்குமாறு கேட்டுக்கொண்டார் அருமை மகளாரின் வேண்டுகோட் கிணங்கித்தான் அடிகளாரா தம் பெயர் முதலியவைகளைத் தமிழிலே மாற்றியமைத்துத் தாமும் தனித்தமிழில் பேச வும் எழுதவுந தொடங்கினர்.

மேலுங் கல்விப் பயிற்சி

அம்மையார் தமிழிற் கலந்துள்ள வடசொற்களைத் தெரிந்துகொள்வதற்கு வடமொழிப் பயிற்சி இன்றியமை யாதது என்று அறிந்தார். அதன்பொருட்டுத் தந்தையா ரிடமே வடமொழி கற்கத்தொடங்கி அதனை ஓரளவு கற்று றிந்து கொண்டார். மேலும் ஆங்கிலங்கற்க விரும்பி 1918-க்குப்பின் சென்னை லேடி வில்லிங்டன் கல்லூரியிற் சேர்ந்து இரண்டு ஆண்டுகள் ஆங்கிலம் பயின்றார். அதில் சிறப்பாகத் தேறினர்.

திருவரங்கர் வருகை

திருநெல்வேலியை அடுத்த பாளையங்கோட்டையில் சைவ வேளாளர் மரபில் 1890-ஆம் ஆண்டில் தோன்றிய திருவரங்கனார் 1914, 15, 16, 17-ஆண்டுகளில் கொழும்பு நகரில் அறவல் பார்த்துக்கொண்டிருந்தார். மறைமலை

யடிகளாரின் புகழ், இலங்கையிலும் பரவியிருந்தது. அரங்கனுர் அடிகளாரைக் கொழும்புக் கழைத்துப் பல சொற்பொழிவுகளை நிகழ்த்தச் செய்தார். அதன்பொருட்டுப் பெரும்பொருளும் திரட்டித் தந்தார். இவ்வாற்றினல் மறைமலையடிகளார்க்கும் திருவரங்கனுர்க்கும் பழக்கம் ஏற்பட்டிருந்தது. அரங்கனுரின் பேருதவியையுஞ் சீரிய குணநலத்தையும் நன்கு மதித்த அடிகளார் அரங்கனுர்க்குத் தக்கவாறு கைம்மாறு செய்யவேண்டும் என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தார்.

1918-ஆம் ஆண்டில் திருவரங்கனுர் அடிகளார் விருப்பப்படி பல்லாவரத்திற்குச் சென்றார். திருவரங்கனுர்க்கு அடிகளால் நல்வரவேற்பு நடந்தது. அரங்கனுர் நீலாம்பிகை அம்மையாரைக் கண்டார். அம்மையாரின் அறிவு, அன்பு, அழகு, அடக்கம் முதலிய குணநலன்கள் அரங்கனுரின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டன. அம்மையாரும் அரங்கனுர்மீது அன்புகொண்டார். இருவருடைய காதற்குறிகளையுங்கண்ட அடிகளார் தாம் அதற்குத் தடையேற்படுத்தவில்லை. உடன்பாடாக இருந்து அரங்கனுர்க்குத் தம்மகளைத் திருமணஞ் செய்துதர உடன்பட்டனர்.

இடையே தடை

திருவரங்கனுர்க்கும் மறைமலையடிகளார்க்கும் ஒரு சிறு தகராறு ஏற்பட்டு அது முற்றியது. இதனல் திருமணமுந் தடையாயிற்று. அரங்கனுர் திருநெல்வேலி சென்று சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் என்னும் பெயருடன் கழகம் ஒன்றுதொடங்கி நூல்கள் பலவற்றை வெளிப்படுத்துந் திருப்பணியை மேற்கொண்டிருந்தார்.

நீலாம்பிகையாரோ லேடி வில்லிங்டன் கல்லூரியிற் சேர்ந்து ஆங்குள்ள பெண்பாலார் விடுதியில் தங்கியிருந்தனர்.

நோய்

அம்மையார் இரண்டாண்டுகள் மேற்படி கல்லூரியில் தங்கியிருந்தார். இளைப்பிருமல் நோய் அம்மையாரைச் செம்மையாய்ப் பற்றியது. அதனால் தொல்லையடைந்த அம்மையார் பல்லாவரத்தை யடைந்தார். நோய் கடுமை யாயிற்று. அடிகளார் உள்ளம் வருந்தினர். தேர்ச்சி பெற்ற மருத்துவர்கள் பலர் அம்மையாரின் நோயை அகற்றத் தம்மாலான முயற்சிகளெல்லாஞ் செய்தனர். ஆனால், அந்நோய் அம்மையாரை விட்டு அடியோடு அகன் றொழியாமல் அடுத்தடுத்துத் தோன்றி அல்லல் விளைவித் துக்கொண்டிருந்தது.

தமிழாசிரியர்

அந் நாளில் பல்லாவரத்தில் கல்லூரி ஒன்று தோன் றியது. அம்மையார் அப் பள்ளியில் தமிழாசிரியராக அமர்ந்து இரண்டு ஆண்டுகள் அலுவல் பார்த்தார். பிறகு சென்னை இராயபுரத்தில் ஸார்த்விக் மகளிர் கல்லூரியில் தமிழாசிரியராக அமர்ந்து 1928-ஆம் ஆண்டுவரையில் அலுவல் பார்த்தார்.

திருமணம்

அரங்கனுக்கும் அம்மையார்க்கும் காதல் ஏற்பட்டுப் பத்தாண்டுகள வரைநீண்டு நின்றது. அடிகளார், "காதலர் இருவருந் திருமணம்புரிந்து கொள்ளட்டும். நான் திரு மணம் நடக்கும் இடத்திற்கு வரமுடியாது" என்றனர். அரங்கனரும் அம்மையாரும் அடிகளார் இல்லாமல் திரு மணம்புரிந்துகொள்ளவிரும்பவில்லை. பின்னர் கா. சுப் பிரமணிய பிள்ளை எம். ஏ. எம். எல் திருவரங்கனருடன்

பல்லாவரம் வந்து "அம்மையார் அரங்கனார் திருமணத்தை முன்னின்று நடத்தித்தரவேண்டும்" என்று வேண்டிக் கொண்டனர். இருவருடைய காதல் உறுதியையும் பத்தாண்டுகள் பார்த்த அடிகளார் மனம் இசைந்தார். சென்னை திருமயிலை கபாலீசுவரர் கோயிலில் திருமணம் 2-9-1927-இல் இனிது நிகழ்ந்தது. அப்போது பா. வே. மாணிக்க நாயக்கர், கா. சுப்பிரமணிய பிள்ளை, திரு. வி. கலியாணசுந்தர முதலியார், கா. நமச்சிவாய முதலியார், மணி. திருநாவுக்கரசு முதலியார், ச. சச்சிதானந்தம் பிள்ளை முதலிய புலவர் பெருமக்கள் ஒருங்கு கூடியிருந்து வாழ்த்துரை கூறினர். மறுநாள் மறைமலையடிகளாரின் பல்லாவரப் பொதுநிலைக் கழகமாளிகையில் மணமக்களுக்கு விருந்து நடைபெற்றது. அவ்விருந்துக்கும் முற்கூறிய புலவர் பெருமக்கள் வந்து சிறப்புச் செய்தனர்.

இல்வாழ்வும் மக்கட்பேறும்

அரங்கனாரும் நீலாம்பிகையம்மையாரும் தகுதி வாய்ந்த வாழ்க்கைத் துணைவர்களாக விளங்கினார்கள். திருமணம் முடிந்த பிறகு அம்மையார் தமிழாசிரியர் வேலையை விட்டுவிட்டுப் பாளையங்கோட்டையில் உள்ள தம் கணவனார் இல்லத்தில் 1928-ஆம் ஆண்டுமுதல் இல்லற வாழ்க்கையை மேற்கொண்டார். அம்மையார்க்கு எட்டுப் பெண்மக்களும் மூன்று ஆண்மக்களுந் தோன்றினர். மக்கட் செல்வப்பேற்றால் அம்மையார் உள்ளம் பெருங் களிப்படைந்தது. மக்களை மாண்புடன் போற்றி வளர்த்தனர்.

நோய்தீர்க்கமும் மெலிவும்

1920-இல் அம்மையாரைப் பற்றிய இளைப்பிருமல் நோய் 1930-ஆம் ஆண்டுவரை அம்மையாரை வருத்தியது.

திருவரங்கனாரும் பெருஞ்செலவுகள் செய்து மருத்துவங்கள் செய்வித்தார். இறுதியில் பிச்சாண்டியா பிள்ளை என்னும் தமிழ் மருத்துவ அரிய மருந்துகள் பலவற்றை அம்மையார்க்குச் செய்துகொடுத்தனர். அம்மருந்துகளால் அம்மையாரைப் பற்றியிருந்த நோய் தொலைந்தது. அம்மையார் அதனால் உள்ளங் களித்தார். தாம் எழுதிய நூலொன்றைப் பிச்சாண்டியா பிள்ளையின் நினைவு வெளியீடாக அச்சிற்பதிப்பித்து வெளியிட்டதுமன்றித் தம பெண்குழந்தைகளில் ஒன்றுக்குப், 'பிச்சம்மை' என்று பெயரிட்டும் தமது நன்றியறிவுடைமையைப் புலப்படுத்தினர். நன்றிமறப்பது நன்றன்று என்பது தமிழ்மறை அன்றோ? அம்மையாரைப் பற்றிய நோய் ஒழிந்ததாயினும் மக்களைப்பேணல் கண்விழித்து இரவிற்படித்தல் நூல்கள் எழுதுதல் முதலிய அலுவல்களால் அம்மையாரின் உடல்நலம் குன்றிக்கொண்டே வந்தது. அரங்கனார் அம்மையார் உடல்நலத்தில் நாட்டஞ் செலுத்திக் கவலையில் ஆழ்ந்திருந்தார்.

தனித்தமிழ்ப் பணி

அம்மையாரின் தனித்தமிழ்த தொண்டு நாடோறும் வளர்ந்துகொண்டு வந்தது. ஒரு சிலர் தனித்தமிழ்க் கொள்கையில் வெறுப்புக்கொண்டு பிதற்றிவந்தனராயினும் அவர்தம் கூற்று நிலைபெறவில்லை. 1925-ஆம ஆண்டில் தனித்தமிழ்க் கட்டுரைகள் என்னும நூலை அம்மையார் வெளியிட்டனர். அந்நூலால் தனித்தமிழ்க் கொள்கை வளர்ச்சி பெற்றது.

நூல்கள் எழுதுதல்

அம்மையார் இளமைமுதற்கொண்டே இடைவிடாது நூல்களைப் படித்துப் பழகியவராதலின் அவரால் நூல்க

கூடப் படிக்காமல் இருக்கமுடியாது. பகலில் ஒய்வில்லாமற் போயினும் இரவிலேனும் படிப்பர். நோயடைந்துள்ள காலததில் அந்நோயையும் பொருட்படுத்தாமல் படித்தல், நூல்கள் எழுதுதல் முதலிய செயல்களைப் புரிவர். அமமையார் பணிகட்கு அரசகளும் தம்மாலியன்ற உதவிகளைப் புரிந்தனர். அம்மையாருடைய நூல்கள் பெரும்பாலும் மாதர் முன்னேற்றங்கருதி எழுதப்பட்டவைகளாக விளங்கின. அம்மையாரால் எழுதப்பட்ட நூல்கள் தனித்தமிழ் இயக்கத்தில் வெறுப்புக்கொண்டவாகட்குக்கூட இனபம பயக்கததக்கவைகளாக விளகின.

மற்றுந் துன்பங்கள்

1943-ஆம ஆண்டில் மற்றோர் நோய் அம்மையாரைப் பீடித்தது. அந்நோயின் பெயர பெரும்பாடு என்பது. இந்நோய் அம்மையாரைக் கடுமையாகத தாக்கியதால் அம்மையாரின் உடல்நிலை மேலுஞ் சீர்கேடடைந்தது. 1944-ஆம் ஆண்டில் திருநெல்வேலிமாவட்டதது டோணாவூரில் அம்மையார்க்கு அறுவை மருத்துவம் நடைபெற்றது. அம்மையார் சிறிது நலமடைந்து இல்லந்திரும்பினர். திடீரென்று திருவரங்கனர் 28-4-1944-இல் இறைவன் திருவடி நீழலை எய்தினர். அம்மையார அல்லலுக்கு அளவில்லை. பெரிதும் வருந்திச் சோர்ந்தனர்.

அம்மையார் முடிவு

திருவரங்கனர் மறைவுக்குப்பின் அம்மையார் உயிரற்ற உடலைப்போல் வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்தார். 10-10-1945-ல் காய்ச்சல்நோய் கண்டது. அது கணத்திற்குக்கணம் மிகுதிப்பட்டது. அம்மையார் தாம் இனி இறைவன் திருவடிநீழலை எய்துதல் உறுதியென்று அறிந்தார். தம் மக்களைப் பாதுகாக்குமாறு உற்றார் உறவி

னர்களே வேண்டிக்கொண்டார். நல்ல நினைவுடனும் கூத்தப் பிரான் திருக்காட்சியுடனும் இறைவன் திருவடிநீழலை அடைந்தார்.

அம்மையார் இயற்றியநூல்கள்

1. தனித்தமிழ்க் கட்டுரைகள்
2. மூப்பெண்மணிகள் வரலாறு
3. எளிசபெத் பிரை
4. தமிழ்நாடும் தமிழ்மொழியும் முன்னேறுவதெப்படி ?
5. ஆராய்ந்தெடுத்த அறுநூறு பழமொழிகளும் (ஆங்கிலப் பழமொழிகளும்)
6. வடசொல்தமிழ் அகரவரிசை
7. ஜோன் வரலாறு
8. பிளாரன்ஸ் நைட்டிங்கேல்
9. அருஞ்செயன் மூவா
10. மேனாட்டுப் பெண்மணிகள்
11. ஷை இரண்டாம் பகுதி
12. பழந்தமிழ் மாதர்
13. நால்வர் வரலாறு

உசூ. இராசேசுவரி அம்மையார்

தோற்றம்

ஈ. த. இராசேசுவரி அம்மையார் 1906-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 18-ஆம்நாள் ஈ. ந. தணிகாசல முதலியாரின் இரண்டாவது மகளாகப் பிறந்தார்.

கல்வி

தமிழ்க்கல்வியையும் ஆங்கிலக்கல்வியையும் முறைமையாகப் பயின்றார். ஆங்கிலத்தில் எம். ஏ. பட்டம் பெற்றார். வெல்லிங்டன் பெருமாட்டி ஆசிரியப பயிற்சிக் கல்லூரியில் பி. டி. பட்டம் பெற்றார்.

தொண்டு

1932-ஆம் ஆண்டில் மேரி அரசியார் கல்லூரியில் விஞ்ஞானத துணைச் சொற்பொழிவாளராக அமர்ந்து அப்பணியைத் திறம்பெறச் செய்தார். 1946-ஆம் ஆண்டில் வெல்லிங்டன் பெருமாட்டி ஆசிரியப பயிற்சிக் கல்லூரியில் விஞஞானச் சொற்பொழிவாளராக வேலைபார்க்கத தொடங்கினர். 1953-ஆம ஆண்டில் மேரி அரசியார் கல்லூரியில் பௌதிகத் துறைத்தலைவராகப் பணிபுரிந்தார்.

நூல்கள்

அம்மையார் போதனைப்பணியோடு நூலெழுதும் பணியிலும் புகுந்து பலநூல்கள் எழுதினர். சூரியன் என்பது அமமையார் எழுதிய முதலாவது விஞ்ஞான நூலாகும். இந்நூல் தமிழ்வளர்ச்சிக் கழகத்தின் பாராட்டுப் பெற்றது. இது பி ஏ. பட்டப் படிப்பிற்குப் பாடப் புத்தகமாகப் பன்முறை தென்னாட்டுப் பல்கலைக் கழகங்களில் அமைக்கப் பெற்றது. அம்மையாரின் வானக்குமிழி என்னும் மற்றொரு நூலும பி. ஏ. வகுப்புப்பாடப் புத்தகமாக நிலவியது. ஆசிரியக் கல்லூரியில் அமமையார் இருந்தபோது, சூழவியுள்ளம் என்னும பெயருடன நூல் ஒன்று எழுதிவெளியிட்டார். அந்நூல் சென்னைமாநில அரசியலாரின் பரிசையும சென்னைப் பல்கலைக் கழகத்தாரின் பரிசையும் பெற்றது. ஐன்ஸ்டைன் கண்ட காட்சி என்னும் அரியநூலும் அம்மையாரால் எழுதப் பெற்றது. பரமாணுப் புராணம் என்பது அம்மையார் இயற்றிய மற்றொரு விஞ்ஞான நூல். இந்நூல் அணுவின் ஆற்றலையும் அதனை அறியவந்த மக்களின் வரலாற்றையும் விளக்குகின்றது. இந்நூலைத் தருமபுர ஆதீனத்தார் வெளியிட்டு, விஞ்ஞானச் செல்வி என்னுஞ் சிறப்புப் பெயரையும் வழங்கினர்.

பொதுநலத் தொண்டு

அம்மையார் சொல்லாற்றல் நன்கு அமையப் பெற்றவர். எந்தப் பொருளைப்பற்றிப் பேசத்தொடங்கினும் அந்தப்பொருளை நன்கு விளக்கிக் கேட்பவர்கள் எளிதாக உணர்ந்து கொள்ளுமாறு பேசுதலில் வல்லவர். சென்னை மாநகரத்தின்கண் உள்ள பொதுச்சபைகள், கழகங்கள் முதலியவற்றில் அம்மையார் சொற்பொழிவு ஆற்றாத இடங்களே இல்லை. அம்மையார் விஞ்ஞானத்துறையில் விளங்கிய புகழாளராயினும் அஞ்ஞானம் போக்கும் சைவ சமயத்துறையிலும் உறைப்பாக நின்று பணிகள் பல புரிந்தனர் சைவசித்தாந்த மகாசமாசத்தில் அம்மையார் ஆற்றிய சொற்பொழிவுகளை அனைவரும் வியந்து கொண்டாடினர்.

சிந்தாதிரிப் பேட்டை நடுதரப்பள்ளிச் சங்கத்தின் துணைத்தலைவராக அம்மையார் அமைந்து நின்று நல்ல தொண்டு புரிந்தனர். சிந்தாதிரிப் பேட்டை உயர்நிலைப் பள்ளியைத் திறம்பெற நடத்துதற்கும் அம்மையார் செம்மையாக உதவிபுரிந்தனர். சங்ககாலத்துப் பெண்மணிகளைப்போல அம்மையார் இந்தக் காலத்தில் இலங்கிநின்று சீரும் சிறப்பும் பெற்றனர். அம்மையார் ஆங்கிலத்துறையோடு தமிழ்த்துறையிலும் ஆர்வம்மிகக்கொண்டு சிறந்து விளங்கினர்.

இறுதி

யாதொன்று சிறப்புடையதாக விளங்குகிறதோ அஃது இறுதிவரையில் நிலைபெற்றிருப்பதில்லை. உலகத்தில் கண்கூடாக இதனை எல்லோரும் அறியலாம். பேரறிவு பொருந்திய அறிஞர்கள் பெரும்பாலும் இளமையிலேயே மூடிந்து போவார்கள். இம்முறையில் அம்மையாரும்

1-3-55-ஆம்நாள் செவ்வாய்க்கிழமை இரவு, தமது நாற்பத் தெட்டாவது அகவையில் இவ்வுலகவாழ்வைத் துறந்து இறைவன் திருவடிப் பேற்றை எய்தினர்.

உஎ. வேதநாயக சாத்திரியார்

தோற்றம்

கிறித்துவ சமயத்தினராகிய வேதநாயக சாதசிரியார 1774-ஆம ஆண்டு புரட்டாசித் திங்கள் 7-ஆம் நாள் திருநெலவேலியிற் பிறந்தார். தந்தையார் பெயர் தேவ சகாயம் பிள்ளை. தாயார் பெயர் ஞானப்பூ அமமாள்.

கல்வி

வேதநாயகம் ஐந்தாம் அகவையை அடைந்தவுடன் தேவசகாயம் பிள்ளை இலக்கணப் புலவர் ஒருவரைக் கொண்டு தம் மகனுக்குக் கல்விப் பயிற்சியைத் தொடங்கினர். வேதநாயகத்தின் தாயார் மறு ஆண்டில் காலமானர். வேதநாயகம் குழந்தைப் பருவத்திலேயே தம் தாயை இழந்தபடியால் இவரும் இவருடன் பிறந்த பெண்மக்கள் இருவரும் மதுரைக்கடுத்த ஆணைக்குளத்தில் அவர்கு ளுடைய பாட்டனர் வீட்டில் வளர்ந்தார்கள். பாட்டனர் வேதநாயகத்தினுடைய படிப்பைக் குறித்துக் கருத்துச் செலுத்தவில்லை. அவருக்கு மாடுகள் இருந்தபடியால் மாடு மேய்க்கிற வேலைக்காரர்களுடன் சேர்ந்து வேதநாயகமும் மாடுமேய்த்துக்கொண்டு திரிந்தார். பிறகு வேதநாயகத் தின் தகதையாரான தேவசகாயம் பிள்ளை புளியங்குடி என்னும் ஊரில் இருந்த ஓர் இந்து ஆசிரியரிடத்திலே இவரைப் படிக்கவைத்தார். அப்போது வேதநாயகத் திற்கு அகவை ஒன்பது. பிறகு தேவசகாயம் மறுமணஞ்

செய்துகொண்டு தம் மகனைத் தம்முடன் அழைத்துச் சென்றார். திருநெல்வேலியில் ஒரு பள்ளிக்கூடத்தில் படிக்கவைத்தார்.

கிணற்றில் மூழ்கல்

ஒருநாள் வேதநாயகம் தம்முடைய பள்ளித் தோழர் கள் சிலருடன் சேர்ந்துகொண்டு வெள்ளத்தால் அழிந்த வெள்ளரித் தோட்டம் ஒன்றுக்குள் நுழைந்தார். தண்ணீ ருக்குள் கிடந்த வெள்ளரிக்கொடியில் இருந்த எல்லோரும் காய்களைத் தேடித் தேடிப் பறித்துக்கொண்டிருந்தார்கள். ஓரிடத்தில் கிணறு ஒன்று இருந்தது. வெள்ளப்பெருக்கால் அது மறைபட்டிருந்தது. அக் கிணற்றுக்குள் வேதநாயகம் வீழ்ந்து மூழ்கிப்போனார். இவருடன் சென்ற பையன்கள் யாவரும் அஞ்சி ஓடிப்போய்விட்டார்கள். வேதநாயகம் இரண்டு மூன்று முறை தண்ணீரில் மூழ்கி எழுந்தார். மூன்றும் முறை மேலெழுந்தபோது கிணற்றின் விளிம்பைப் பிடித்துக்கொண்டு தபபிப் பிழைத்தார். இச் செய்தியை வெகுநாள்வரை தந்தைக்குச் சொல்வதற்கு அஞ்சியிருந் தார். பிறகு தந்தையார் இந்தச் செய்தியைக் கேட்ட போது இறைவன் திருவருளை எண்ணிப் போற்றினர். மாடு மேய்ப்பவர்களோடுகூடி விளையாடப் பழகிய இவர் பிறகு கல்வி கற்கத் தொடங்கியபோது ஒழுங்காகக் கற்காமல் குறும்புகள் செய்து திரிந்தார். இதனைக் கண்ட தந்தை வருந்தினர். தந்தையின் வருத்தத்தைக் கண்ட இவர் பிறகு தந்தையின் வருத்தத்தை மாற்றுவதற்காகவே கல்வி கற்கத்தொடங்கினர். தம் மகன் நன்றாகப் பாடம் படித்து ஒப்புவித்தலைக்கண்ட தந்தையார் மைந்தனுக்குத் தின்பண்டங்களும் காசுகளும் கொடுத்து ஊக்கம் உண்டாக் கினர். இந்தச் சூழ்ச்சி வேதநாயகம் கல்வி கற்பதற்கு மிகுந்த உதவியாக இருந்தது.

சுவார்ச்சு ஐயர்

அந்நாளில் சுவார்ச்சு ஐயர் என்னும பெயருடைய கிறிதவர் ஒருவா தஞ்சையில் இருந்தார். அவர் ஓர் அலுவலை முன்னிட்டு நெல்லைக்குச் சென்றூர். அங்கு வேதநாயகத்தைக் கண்டார். இவனுக்குக் கல்வி கற்பித்தால் சமய போதகனைச் செய்யலாம் என்று எண்ணினர். தேவசகாயதின் உடன்பாடுபெறறு வேதநாயகத்தைத் தஞ்சைக்கு அழைததுவந்தார். வேறுசில மாணவர்களோடு சேர்த்துக் கல்வி கற்கச்செய்தார். மேலுந் தரங்கம்பாடிக்கு அனுப்பி அங்கிருந்த உயர்நிலைப் பளளியிலும் கல்வி கற்கச் செய்தார்.

சாத்திரி

பிறகு சுவார்ச்சு ஐயர் கிறித்தவ வேதநூலை வேதநாயகத்தினிடம் கொடுததுப படிக்கச்சொன்னர். வேதநாயகம் தரங்கம்பாடியில் இருந்து இலக்கண இலக்கியங்களையும கற்றுச் செய்யுள பாடும் திறமையையும் அடைந்தார். அவர் இயற்றிய செய்யுள கிறித்தவ வேத சாததிரக் கொள்கைகள் நிறைந்து சிறநது விளங்கியபடியால் சாத்திரியார் எனனுஞ் சிறபபுப பெயர் அளிக்கப்பெற்றூர். அது முதல் அவருடைய பெயா வேதநாயக சாத்திரியார் என்று வழங்கத் தொடங்கியது.

வேதநாயகம் நூல்கள் இயற்றுதல்

வேதநாயகம் செய்யுள வடிவமான பல நூல்களை இயற்றததொடங்கினர். இவருடைய பாடல்கள் சொற் சுவை பொருட்சுவை நிறைநது இனிய முறையில் அமைந்தன. நூல் ஆசிரியராக அமர்ந்து நூல்கள இயற்றியதோடமையாமல் போதகாசிரியராக அமாந்து கல்வி கற்பிக்கும் தொழிலையும் இவர் மேற்கொண்டார். இதனல் இவருடைய

புகழ் யாண்டும் பரவிச் சிறப்படைந்தது. சென்னை முதலிய இடங்கட்குஞ் சென்று தம் நூல்களை அரங் கேற்றஞ் செய்து சிறப்படைந்தார். இவருடைய பாடல்கள் இனியவைகளாகவும் எளியவைகளாகவும் அமைந்தபடி யாலும் இவருக்கு முன் யாரும் இத்தகைய பாடலகளை இயற்றாதபடியாலும இவருடைய பாடல்களுக்குச் சிறப்பு மிகுதிப்படுவதாயிற்று

(1) சித்திரைசெய் தெள்ளமிர்தே !
நேசமுறும் பைங்கிளியே !
சித்திரப்பூங காவனத்தில்
சென்றுவருங கோகிலமே !

(2) கோகிலமே ! தாராவே !
கூவும புறுவினமே !
பாகுதனி லேசமைந்த
பஞ்சா முதத்தேனே !

(3) தேனே ! ரசமே !!
திகட்டாத செங்கரும்பே !
மானே!யென் கண்ணே !!
வயிரமணிப் பெட்டகமே!

(4) பெட்டகமே ! பொற்பணியே !!
பேழையே ! என்னுசைக்
கட்டழகே ! மாற்றுயர்ந்த
கட்டித் திரவியமே !!

(5) கட்டிமுத்தே ! சிவரத்நக்
கண்ணே ! எனதுயிரே !
வட்டமிட்டு ஆடும்
மயிலே ! மயில்பேடே !

(6) பேடே ! இளங்கொடியே !!
பின்னைக் கலிதீர்த்து
வீடே உலாவி
விளையாடும் கல்லனமே !

(7) அன்னமே! சோபனமே!
ஆதனமே! மாதனமே!
சொன்னமே! மின்னே!
துலங்கவரும் பாக்கியமே!

(8) பாக்கியமே! கூத்தாடும்
பாவையே! பங்கயமே!!
தீர்க்க மிகும்ஞான
தீபமே! கண்வளராய்.

(9) கண்ணுறங்கும் இன்னரசே!
கர்த்தர் இரக்கம் வைத்துப்
புண்ணியமாய்த் தந்தருளப்
பூத்தவளர் கற்பகமே!

என்பன இவருடைய திருச்சபைத் தாலாட்டின் பகுதி களாகும்.

சரபோசி மன்னரும் சாத்திரியாரும்

வேதநாயக சாத்திரியார் தஞ்சையில் விளங்கியிருந்த போது, அஃதாவது 1829-ஆம் ஆண்டின் முற்பட்ட பிற் பட்ட காலங்களிலே சரபோசி மன்னர் தஞ்சையில் இருந் தார். வேதநாயக சாத்திரியார் சரபோசி மன்னர்மீது வாழ்த்துப்பாடல்கள் பாடிக்கொண்டு போய் அவரைக் கண்டார். அரசர் சாத்திரியாருக்குச் சிறப்புக்கள் செய் தார். தமக்கு அண்மையில் உட்காரவைத்துச் சால்வை போர்த்தினர். வெள்ளிநிலையங்கி தைதைக் கொடுத்தார். திங்கள் ஊதியமும் ஏற்பாடு செய்துவைத்தார். சாத்திரி யார் திங்களுக்கு இரண்டுமுறை மன்னரைக் கண்டு தாம் இயற்றிய பாடல்களை அவருக்குப் படித்துக்காட்டுவது வழக்கம். அரசரின் வழிமுறை வரலாற்றைப் பாடலாக வும் இயற்றினர். இவர் அரசரைக் காணுஞ் சமயங்களில்

இருவருக்கும் உரையாடல் நடக்கும். சாத்திரியார் எதற்கும் அஞ்சாமல் அரசரோடு எதிர்நியாயங்கொடுத்துப் பேசுவார். அரசர் இவர் கூறுகிற நியாயங்களைக் கேட்டு மகிழ்ச்சியடைவார். ஒருநாள் அரசர் சாத்திரியாரைப் பார்த்து, "நீர் பேசுகிறதைப் பார்த்தால் நம்மை மடக்கி விடுவீர்போல இருக்கிறதே" என்றார்.

மாறுபாடு

ஒருமுறை சாத்திரியார், "நோவாவின் கப்பல் பாட்டு" என்னும் நூலை இயற்றி அரசருடைய அவையிலே அரங்கேற்றஞ் செய்தார். அதற்காக அரசர் நூறு வராகன் நன்கொடை வழங்கினார். அப்பொழுது அரசர் சாத்திரியாரைப்பார்த்து, "நீர் ஊதியம் வாங்குகிறீர்; விழிப்பாக இரும். எவரையும் உம்முடைய சமயத்திற்கு இழுத்துக்கொள்ளாதேயும்," என்று கூறினார். சாத்திரியார் அரசரைப் பார்த்து, "நான் ஞானஸ்நானம் (அறிவு முழுக்கு) கொடுக்கிறவன் அல்லன். அதற்காகக் குருக்கள் இருக்கிறார்கள். நான் அறிவு மட்டுஞ் சொல்லுகிறவன்," என்றார். பிறகு ஒருநாள் அரசர் சாத்திரியாரைப்பார்த்து, "நம்முடைய கடவுளாகிய பிரகதீசுரன் மேலே சில செய்யுள்கள் பாடும்" என்று கூறினார். சாத்திரியாரோ இந்துசமயக் கடவுளின்மீது பாடமுடியாது என்றார். இதுமுதல் அரசருக்கும் சாத்திரியாருக்கும் மனமாறுபாடு ஏற்பட்டது. ஆயினும் அது விரைவில் நீங்கிவிட்டது. அரசர் சாத்திரியாரை அவருடைய விருப்பம்போல் நடக்குமாறு கூறிவிட்டார். பிறகு சாத்திரியார் அரசர் இறக்கும் வரை (1832) அவருடைய உதவிபெற்றிருந்தார். சரபோசி மன்னர் இறந்த பிறகு சாத்திரியாருக்கு அரண்மனை உதவி நின்றுவிட்டது.

நிலம் வேண்டாம்

ஒருநாள் சரபோசி மன்னர் வேதநாயக சாத்திரி யாரைப் பார்த்து, "உமக்குச் சிறிது நிலம் நன்கொடை யாகக் கொடுக்கிறேன். அதை வைத்துக்கொண்டு நீர் எப்பொழுதும் நலத்துடன் உமது தொண்டைத் தடை யில்லாமல் செய்துகொண்டிருக்கலாம," என்று கூறினர். அதற்குச் சாத்திரியார், "தாங்கள் கொடுப்பது மகிழ்ச்சியா யிருந்தாலும் அதனால் ஏற்படக்கூடிய தீமைகள் பல. சாப்பாட்டிற்காக நிலமிருப்பதால், ஆண்டவனை நோக்கி வேண்டுதல் மறந்துபோகும். இந்த நிலங்களின் பொருட் டுப் பிளைகள் பிற்காலத்தில் ஒருவரோடொருவர் போரிட்டுப் பகைவர்களாவார்கள். இதனால் வம்பு தும்பு களுமே வழக்குகளும் ஏற்படும். ஆண்டவரைப் போற்று கிற ஊழியம் நின்றுபோகும. மேலும் இதனால் பல தீமை கள் உண்டாகும்," என்று கூறி அரசருடைய தானத்தை மறுத்துவிட்டார்.

வியத்தகு நிகழ்ச்சி

சாத்திரியார் தம் மாணவர்களோடு பல ஊர்களில் சுற்றுப்பயணஞ் செய்துகொண்டிருந்தார். ஒருநாள் இரவு இந்து சமயத்தினரின் அறச்சாலை ஒன்றில் சாத்திரியார் தங்கவேண்டியதாக ஏற்பட்டது. "இந்த உணவுச் சாலை யில் இந்து சமயத்தினருக்கு மட்டுந்தான் உணவு கிடைக் கும். கிறித்தவர்களுக்குப் போடுவதில்லை," என்று அறச்சாலைச் செயலாளர் அறிவித்தார். சாத்திரியார், "சரி" என்று கூறிவிட்டுப் பட்டினியாகப்படுத்துக் கொண்டார் பிறகு அறச்சாலைச் செயலாளர் சாப்பிடு வதற்கு உட்கார்ந்தார். அவருடைய வலதுகை இயங்கா மல் மரக்கட்டைபோல் இருந்தது. செயலாளர் அச்சங்

கொண்டார். கை என்ன காரணத்தினால் இவ்வாறாயது என்று அறிதற்கு மருத்துவர்களையும், கோடங்கிக்காரர்களையும், மந்திரவாதிகளையும் அழைத்து உசாவினர். ஒரு கோடங்கி, "யாரோ ஒரு தேவபத்தன் இந்த அறச்சாலையில் வந்து இறங்கியிருக்கிறான். அவனைத் தகுந்தபடி கனப்படுத்தாதபடியினால் இந்தத் தொல்லை வந்திருக்கிறது," என்று கூறினான். உடனே சாத்திரியாரையும் அவருடைய மாணவர்களையும் எழுப்பி உணவிட்டுப் போற்றினர். அதன்பிறகு அறச்சாலைச் செயலாளரின் கை, வழக்கம் போல இயங்கியது. இத்தகைய புதுமை நிகழ்ச்சிகள் பல சாத்திரியாரிடத்திலே காணப்பட்டன.

திருமணம்

சாத்திரியாருக்கு மூன்றுமுறை திருமணம் நடைபெற்றது. சில ஆண்மக்களும் பெண்மக்களும் பிறந்தார்கள்.

இறுதி

சாத்திரியார் பலருடைய உதவியையும் பெற்றுச் சிறப்புடன் வாழ்ந்திருந்தார். இலங்கை முதலிய இடங்களுக்குஞ் சென்று சமயத்தொண்டு செய்தார். தமிழ்ப் புலவராகவும் கிறித்துவசமயப் பாவாணராகவும் அமைந்து நின்ற இவருடைய புகழ் எங்கும் பரவியிருந்தது. இவர் 1864-ஆம் ஆண்டு சனவரித்திங்கள் 24-ஆம் நாள் தமது தொண்ணூறுவது அகவையில் இவ்வுலக வாழ்வைத் துறந்தார்.

இவர் இயற்றிய நூல்கள்

1. பெத்லகேம் குறவஞ்சி
2. ஞானக்கும்மி
3. பரமரீதிப் புராணம்

4. காலவித்தியாசமாலை
5. ஞான ஏத்தப்பாட்டு
6. மூன்னுரை
7. மெய்யறிவு
8. ஞானவழி
9. பராபரன் மாலை
10. ஆதியானந்தம்
11. அறிவானந்தம்
12. வத்து நிர்ணயம்
13 சைதன்யத் திறவுகோல்
14. பேரின்பக்காதல்
15. திருச்சபைத் தாலாட்டு
16. பிரலாப ஒப்பாரி
17. நோவாவின் கப்பல் பாட்டு
18. செபமாலை
19. ஞானபத கீர்த்தனங்கள்
20. தியானப்புலம்பல்
21. ஆரணதிந்தம்
22. ஞானவுலா
23. ஞான அந்தாதி
24. சாத்திரக்கும்மி
25. குருட்டு வழி
26. விதி விலக்கு
27. கடைசி நியாயத்தீர்ப்பு
28. பத கீர்த்தனை

இவை முதலிய ஐம்பதுக்கு மேற்பட்ட நூல்களை இவரியற்றியுள்ளார்.

உஅ. சரவணப்பெருமாட் கவிராயர்

தோற்றம்

அட்டாவதானம் சரவணப்பெருமாட் கவிராயருடைய பெயரனுகிய இவர், பாண்டிநாட்டிலே பரமக்குடி எனு இப் பொழுது வழங்கும் பரம்பக்குடிக்குத் தென்பக்கத்தில் உள்ள முதுகுளத்தூரில் வேளாளர் குலத்திலே ஏறக் குறைய நூற்றைம்பது யாண்டுகளுக்கு முன்பு பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் அருணசலக் கவிராயர்.

கல்வி

இவர் உரிய காலத்திலே கல்வி கற்றுப் புலமை நிரம் பப் பெற்றூர் அவதானஞ் செய்தலினுஞ் சிறந்து விளங் கினர். பிறகு இராமநாதபுரம் அரசருடைய அவையில் தாமும் ஒரு புலவராக அமர்ந்து புகழுடன் விளங்கினர். கற்பனை, சிலேடை, யமகம், திரிபு முதலிய பாடல்களையும் சந்தப்பாடல்களையும் மிகு விரைவாகவும் மதுரமாகவும் பாடுந்திறமை இவருக்கு வியக்கத்தக்கவாறு அமைந் திருந்தது.

தனிப்பாடல்கள்

இவர் பற்பல சமயங்களில் ஆங்காங்குச் சென்று பெரு நிலக்கிழவர்கள்மீதும் செல்வர்கள்மீதும் அருமை மிக்க செய்யுட்கள் பலவற்றைப் பாடினர். அவர்கள் இவருடைய புலமையைப் புகழ்ந்து தக்கவாறு நன்கொடைகள் வழங் கிப் போற்றினர். இவர் இயற்றிய தனிப்பாடல்கள் தனிச் செய்யுட் சிந்தாமணியிற் சேர்க்கப்பெற்றுள்ளன.

இயற்றிய நூல்கள்

1. மதுரைச்சிலேடை வெண்பா
2. திருச்சுழியல் ஒருமுத்தந்தாதி

3. கழுகுமலை ஒழுத்தந்தாதி
4. மகர வந்தாதி
5. பனசைத் திரிபந்தாதி
6. கயற்கண்ணி மாலை
7. புவனேந்திரன் அம்மானை
8. கந்தவருக்கச சந்தவெண்பா

என்பன இவரால் இயற்றப்பெற்ற நூல்கள்.

"கும்பனுக்குஞ் சங்கரனுக் குங்குருவே பிள்ளைமதிக்
கும்பனுக்குஞ் சங்குவரிக் குங்குயிலுக்—கும்பயங்தேன்
தென்றலுக்கும் ஐங்கணைச்சிலம்பனுக்கும் என்செயச்சொல்
என்றலுக்கும் மங்கைநித்த மே." [1]

என்பது அவருடைய கந்தவருக்கச் சந்த வெண்பாவில் ஒரு பாட்டு.

இறுதி

இப்புலவர் ஏறக்குறைய அறுபது ஆண்டுகட்குமுன்பு காலமானர்.

உசு. பம்மல் விசயரங்க முதலியார்

தோற்றமும் கல்வியும்

பம்மல் விசயரங்கமுதலியார் 1830-ஆம் ஆண்டு மார்ச் சுத் திங்கள் முதல்நாள் பிறந்தார். இளமையில் பச்சையப்ப முதலியார் தொடக்கப்பள்ளியிற் கல்வி கற்கத்தொடங்கினர். பிறகு இப்பொழுது இராசதானிக்கல்லூரி எனவழங்கிவரும் பள்ளி, உயர்நிலைப்பள்ளியாக இருந்த காலத்தில் அதில் கற்றார். திறலோர் தேர்ச்சியில் இவர் இரண்டாவதாகத் தேறினமையின் அரசியலாருடைய பொன் மோதிரம் ஒன்றைப் பரிசாகப் பெற்றார்.

---

1. கும்பன் - அகத்தியமுனிவர். பனுக்கும் - தெளிக்கும். உவரி - கடல். சிலம்பன் - காமன். அலுக்கும் - சலிப்பான்.

நூல்

1851-ஆம் ஆண்டில் இராபர்ட்சன் என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய அமெரிகக நாட்டு வரலாற்றைச் சிரிய நடையில் மொழிபெயர்த்தார். இதன்பொருட்டுப் பச்சையப்ப முதலியாருடைய பரிசினைப் பெற்றார். இந்நூல் 1852-ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டு வெளியாயிற்று.

பணி

அரசினர் கலாசாலையில் தமிழாசிரியராகச் சிலகாலந் தொண்டு புரிந்தார். பின் பள்ளிக்கூடங்களின் துணைக் கண்காணிப்பாளராகத் திண்டுக்கல், மதுரை முதலிய ஊர்களில் பணிபுரிந்தார். அதன்பின் 1890-ஆம் ஆண்டுவரையிலும் சென்னையில் பணியாற்றினார். அகவை அறுபது நிறைந்த அவ்வாண்டில் வேலையில் இருந்து ஒய்வுபெற்று உதவி ஊதியம் பெற்றார்.

நூல்கள் வெளியிடல்

பள்ளிக்கு வேண்டிய தமிழ்நூல்களைச் செவ்விய முறையில் பதிப்பித்தார். மூன்றும் பாடப்புத்தகம் ஒன்றும் இவரால் அச்சிடப்பட்டது. தமிழ்நூல்கள் பல வெளிவருவதற்கு அறிஞர் சிலருக்கு இவர் துணைபுரிந்தார்.

பல துறைகளிற் பணி

சென்னைப் பல்கலைக்கழக உறுப்பினராக அமர்த்தப் பெற்றுப் பணிபுரிந்தார். சென்னையில் விசயநகர மன்னர் ஏற்படுத்திய நான்கு பெண்பாடசாலைகட்கு ஊதியமில்லாப் பணிபுரிந்தார். ஆசிரியன்மார் தேர்விற்காக ஏற்படுத்திய குழுவுக்கு அமைச்சராக இருந்தார். காஞ்சி ஏகாம்பரநாதர் கோவில், சென்னை ஏகாம்பரநாதர் கோவில், திருவேட்டீச்சுரர் கோவில் முதலியவைகளுக்குத் தருமத்

தலைவராக இருந்தார். தொண்டைமண்டலம் துளுவ வேளாளர் பள்ளியிலும் தொண்டுசெய்தார்.

இறுதி

நற்செயல்கள் பலவற்றில் ஈடுபட்டிருந்த இவர், 1895-ஆம் ஆண்டில் இறைவன் திருவடி நீழலை எய்தினர்.

ஈ.o. திருத்தணிகைக் கந்தப்பையர்

தோற்றம் முதலியன

கந்தப்பையர் வீரசைவ மரபினர். இவர் திருத்தணிகையில் தோன்றித் தக்கார்களிடம் கல்வி கற்றுப் பெரும்புலவராக விளங்கியிருந்தார். முருகக் கடவுளை வழிபடுவதும் அவர்மீது பாக்கள் இயற்றுவதுமே இவருக்கு நிலைபெற்ற தொழிலாக இருந்தன. திருமணம் முடிந்து பல ஆண்டுகளாகியும் மக்கட்பேறு உண்டாகவில்லை. மக்கட்பேற்றை மிகுதியும் விரும்பிய இவர் தம்முடைய மனைவியின் தங்கையை இரண்டாம் மனைவியாகத் திருமணம் புரிந்தார். இருவரிடமும் நீண்டநாள் மக்கட்பேறு உண்டாகவில்லை.

மனைவியர் உரையாடல்

ஒருநாள் மங்கையர் இருவரும் தண்ணீர் எடுத்தற்குக் குளத்தை நாடிச் சென்றுகொண்டிருந்தனர். அப்போது திருவேங்கடமலை அவர்களுக்குக் காட்சியளித்தது. இருவரும் உரையாடிக்கொண்டு சென்றனர். ஒரு மாது "நமக்கு இதுவரையில் மக்கட்பேறு உண்டாகுமாறு முருகன் திருவருள் புரிந்திலன். இனிமேல் நமக்கு மக்கட்பேறு உண்டாயின் அதோ தெரிகிற திருவேங்கடமலையா

னுடைய பெயரைத்தான் அவர்கட்கு வைக்கவேண்டும்," என்றனர். மற்றொரு மாது தன்னுடைய உடன் பிறந்தவள் பேச்சை ஆதரித்து "அப்படியேதான் செய்யவேண்டும்," என்றனர்.

மக்கட்பேறு

ஆண்டுகள் சில சென்றன. மங்கையர் இருவரும் ஒரே காலத்தில் கருக்கொண்டனர். ஒருநாள் முன்பின்னாக மக்களைப் பெற்றனர். இரண்டு குழந்தைகளும் ஆண் குழந்தைகளே. கந்தப்பையர் பெரும மகிழ்ச்சியடைந்தார். மைந்தர்க்குச் செய்யவேண்டிய சிறப்புக்களை யெல்லாம் செய்தார். பிறகு பெயரிடத் தொடங்கினர். ஒரு குழந்தைக்கு விசாகன் என்றும், மற்றொரு குழந்தைக்குச் சரவணன் என்றும் பெயர் வைக்கலானார்

பெருமாள்

மாதர்கள் இருவரும் திடுக்கிட்டனர் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டனர். பிறகு தாம் உரையாடிக் கொண்ட செய்தியைத் தம கணவருக்குக் கூறினர் இதனைக் கேட்ட கந்தப்பையர் சிறிதும கவலையடையவில்லை. "அப்படியா? மிகநல்லது" என்று கூறிவிட்டு விசாகப் பெருமாள் என்றும் சரவணப்பெருமாள் என்றும் பெயரை மீட்டிவிட்டனர். கூடியிருந்தவர்கள கந்தப்பையரின் அறிவு மாட்சியைக் கண்டு வியந்தனர். இவர்கள் இருவரும் ஒரு நாள் ஏற்றதாழ்வைக் கொண்டே அண்ணன் தம்பிகள் என்று அழைக்கப்பட்டனர். இருவரும் கல்வியை நன்கு கற்றுப் பல நூல்கள் எழுதி மிகுந்த சிறப்புடன் உலகில் விளங்கியிருந்தார்கள். கந்தப்பையர் நூல்கள் யாவும் முருகக்கடவுள் மீது பாடப்பெற்ற புகழ் நூல்களேயாம்.

இவர் இயற்றிய நூல்கள்

1. திருத்தணிகைப் பிள்ளைத்தமிழ்
2. ஐங்கரமாலை
3. தயாநிதிமாலை
4. வேலாயுத சதகம்
5. திருத்தணிகை யந்தாதி
6. திருத்தணிகைக கலம்பகம்
7. மயிற்பத்து
8. சேவற்பத்து
9. வேற்பத்து
10. சீர்பாதப்பத்து
11. திருத்தணிகையுலா
12. மலைப்பத்து

என்பன. இந்நூல்கள் யாவும் ஒன்றுபடுத்தப் பெற்றுத் திருத்தணிகைச் சந்நிதிமுறை என்னும் பெயருடன் அச்சிட்டு வெளிப்படுத்தப் பெற்றிருக்கின்றன. பாடல்கள் சொன்னயமும் பொருள்நயமும் அமைந்து விளங்குகின்றன.

"கண்ணனும் கனகநிற வண்ணனும் திருநுதல்
கண்ணனும் ஒருங்குறைதல்போல்
கருமலை இடத்துறச செம்மலை வலத்துறக்
கவினும்வெண் மலையிடையதாய்ப்
பண்ணமரு நந்திநதி புடைசூழ இடையிடைப்
பைஞ்சுனை வயங்கமீசசெல்
பயோதரம் வயாநலி வுறக்கொடிகள் தாக்கல்பல
பாவையர் மருத்துவஞ்செய்(து)
உண்ணிலவு நீர்மக வுயிர்த்திட விலாப்புறத்
தொண்கரத் தால்வருடல்போல்
ஓங்குமுடி மேலூன்று வெள்ளிவீ முன்னமழை
ஒழுகுநீ ருவியழிதல்
தண்ணிலவு கல்லாத மாலையணி மாண்புநிகர்
தணிகைநா யகன்வருகவே

தடாமலப் பிணியெனை அடாதுசிற் சுகமருள்
சடானனக் குருவருகவே ”

என்பது தணிகைப் பிள்ளைத்தமிழில் ஒரு செய்யுள்.

காதலாய் ஒருமயிலிற் களித்தேறுந்
தணிகைவரைக் கந்தன் யார்க்கும்
காதனே எனததெளிந்த அருணகிரி
நாதனுமுன் நவின்ற பாவை
ஓதுவார் திருப்புகழென் றுலகினுள்ளோர்
அதற்குநிகர் உண்டோ மற்றைச
சாதலார் விண்ணவர்கள் தம்புகழைத்
திருப்புகழாய்ச் சாற்றி டாரே.

அறுமு கத்தனில் ஒருமு கத்தனை
அடியனேற்குற வாக்கிடீர்
அம்ப சும்பனி ரண்டி லொன்றிலென்
ஆண வங்கெட நோக்கிடீர்
வெறிகொள் பணிரு கையி லொன்றிலென்
வெம்ப வக்கடல் தடுத்திடீர
விளங்கும் ஆறுசெவ வாயில் ஒன்றினில்
வீடு சேர்மொழி கொடுத்திடீர்
செறியும் ஆறிரு செவியில் ஒன்றிலென்
செய்தி யாவையுங் கேட்டிடீர
செய்ய மார்பமோர் ஆறில் ஒன்றில்என்
செந்த மிழத்தொடை பூட்டிடீர்
தறுகண் வேடாகள் உதவு மின்கொடி
தனமும் அன்பாகள் மனமுநீள்
தணிகை யங்கிரி மூடியு நண்பு
தழைததசெங்கல்வ ராயரே.

என்பன கலம்பகப் பாடல்கள்.

ங.க. புரசை அட்டாவதானம்
சபாபதி முதலியார்

தோற்றம்

சென்னைப் புரசையிலே சபாபதி முதலியார் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் வெண்ணெய்க்கார இரிசப்ப முதலியார். தாயார் பெயர் முனியாத்தையம்மாள்.

கல்வி

சபாபதி முதலியார் அந்நாளில் புரசையில் தெருப் பள்ளிக்கூடம் வைத்துக்கொண்டிருந்த புதுவை அச்சுத உபாத்தியாயர் என்பவரிடத்தில் கல்வி கற்கத் தொடங்கினார். முதலில் சிறு இலக்கிய நூல்களையும் இலக்கண விளக்கவிடை முதலியவைகளையும் கற்றார். இடையிடையே அவதானஞ் செய்யவும் பழகினார். பின்னர் அரசினர் பாட சாலையில் ஆங்கிலமும் தமிழும் கற்றுத் தேர்வுகளில் தேறிப் பரிசு பெற்றார். வித்துவான் தாண்டவராய முதலியாரிடத்தில் தமிழ் நூல்களைப் பாடங்கேட்டார். தாண்டவராய முதலியார் நீதிமன்றத் தலைவராக வேறு ஊர்களுக்குச் சென்றபின் காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியாரிடம் பல நூல்களைக் கற்றார். கல்வி கற்றுக்கொண்டிருக்கும்போதே சென்னை அரசாங்கக் கணக்குப் பிரிவுக்காரியாலயத்திலும் தங்கசாலையிலும் 116 ரூபா திங்கள் ஊதியத்தில் அலுவல் பார்க்கத் தொடங்கினார். சென்னையில் இருந்து தங்கசாலை எடுபட்டபின் கைப்பொருளைக்கொண்டு வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தார். பிறகு காஞ்சிபுரம் சரவணதேசிகர், மழவை மகாலிங்கையர், திருத்தணிகை விசாகப்பெருமாள் ஐயர், கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், புதுவை நயனப்ப முதலியார் ஆகியவர்களிடத்தே ஐந்திலக்கணங்களையும் இலக்கிய நூல்களையும் புராணங்களையும் நன்கு பயின்றார்.

அட்டாவதானம்

இவர் தகுந்த அகவையை அடைந்தபோது அட்டாவதானம் பழகுவதற்கு எண்ணினர். தமக்கு இளமையில் கல்வி போதித்த புதுவை அச்சுத உபாத்தியாயரிடத்திலே அட்டாவதானங் கற்றார். புரசை கங்காதரேசுரர் கோயிலிலும், மயிலாப்பூரிலும், செங்கற்பட்டிலும், புதுவையிலும், திரிசிரபுரம் தாயுமானவர் கோயிலிலும், மதுரை திருஞானசம்பந்தராதீனத்திலும், திருப்போரூரிலும, காஞ்சி ஏகாம்பரநாதர் கோயிலிலும் புலவர்கள் பலரும் வியக்குமாறு அட்டாவதானம் செய்தார்.

செய்யுள் செய்யுந் திறன்

நால்வகைப் பாக்களையும் மிக விரைவாகப் பாடும் ஆற்றலை இவர் மிக நன்றாகப் பெற்றிருந்தார். திருப்போரூர்ப் புராணத்தைச் சிததிரக் கவிகளும் சொன்னயம பொருணயங்களும நன்கு அமையுமாறு பாடிய தம் ஆசிரியராகிய காஞ்சிபுரம மகாவித்துவான் சபாபதி முதலியாருடைய தலைமையில் திருப்போரூரில் அரங்கேற்றஞ் செய்தார். காலததையும இடததையும் நோக்கிய தனிப்பாக்களையும் இவர் இயற்றியிருக்கிறார். இவர் வைதிருந்த வெள்ளித் தூள் பரணையை ஒருவர் களவாடிவிட்டார். அப்போது முதலியார்,

"அள்ளிதழ் பணிதன்பர் வினையனைத்தும்
ஒழிகுமுரு கையா! செந்தேன்,
துள்ளித்தூள் பரிமளகூடா பொழில்தணிகா
சலக்குகனே! தொல்லைக் கான்மேல்
தள்ளிதழ்தூள் பததாலே பெண்ணைக்கு
மால்மருகா தமியேன் வைத்த
வெள்ளித்தூள் பரணைவிட்டுப் போனவிதம்
இன்னதென்று விளம்பு வாயே"

என்று பாடினர். பரணையைக் களவு செய்தவர் மறுநாள் பக்குவமாக இவருடைய வீட்டிலே கொண்டுவந்து சேர்த்துவிட்டார்.

மழையைத் தடுத்தல்

ஒர் ஆண்டில் சென்னையில் இராப்பகல் பத்துநாள் ஓயாமல் பெருமழை பொழிந்தது. அதனால் வீடு முதலிய வைகள் இடிந்து விழுந்து பலவகையான தொல்லைகள் ஏற் பட்டன. மழையின் கொடுமையைப் பார்த்த முதலியார்,

"மழையேநீ இன்னுமிந்த வாறுகப் பெய்தால்
அழையே எவர்க்குமல் லாமல்—பழசான
கட்டிடங்கள் எல்லாம் கலகலத்துப் போய்விடுமால்
மட்டடங்கி மேல்வருடம் வா"

என்னும் வெண்பா ஒன்றைப் பாடினர். மழையும் நின்று விட்டது.

ஆசிரியரும் நூலாசிரியரும்

இவர் மாணவர் பலருக்குக் கல்வி போதித்து அவர்கள் அனைவரையும் புலவர்களாக்கினர். பல நூல்களை எழுதித் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு அரிய தொண்டு செய்தார். உரையற்ற பல நூல்களுக்கு உரையெழுதினர். திருப் புகழ்ச் சுவாமிகள் முருகதாச சுவாமிகள் என்று புகழ் பெற்ற தண்டபாணியடிகளால் இயற்றப்பட்ட சென்னை நூல்கள் சில இவருடைய தலைமையில் கூடிய அவையில் அரங்கேற்றஞ் செய்யப்பட்டன.

இவரால் இயற்றப்பட்ட நூல்கள்

1. திருப்போரூர்ப் புராணம்
2. ,, கலம்பகம்
3. ,, அலங்கார பஞ்சகம்

4. திருப்போரூர் யமகவந்தாதி
5 ,, பதிற்றுப்பத்தந்தாதி
6. ,, வெண்பாமாலை
7. ,, திரிபந்தாதி
8. ,, நான்மணிமாலை
9. ,, இருசொல் யமக மாலை
10. ,, சதகம்
11. ,, பிரணவாசல சதகம்
12. ,, பிரணவாசல வெண்பா மாலை
13. ,, சிதம்பரசுவாமிகள் வரலாறு
14. ,, சிதம்பரசுவாமிகள் பதிற்றுப்பத்தந்தாதி
15. திருப்போரூர்ப் புராண உரைநடை
16. திருத்தணிகை இரட்டைச்சொல் யமக மாலை
17. புரசை பதிற்றுப்பத்தந்தாதி
18. புரசை வெண்பா மாலை
19. புரசை இரட்டைச்சொல் யமகமாலை (உரையுடன்)
20. திருப்போரூர்க குறவஞ்சி
21. திருவொற்றியூர் வடிவுடையம்மை பதிற்றுப்பத்தந்தாதி
22. வடிவுடையம்மை தோத்திரச சந்த மாலை
23. பழநி வெண்பா மாலை
24. அருணை வெண்பா மாலை
25. மயிலை வெண்பா மாலை
26. காஞ்சி வெண்பா மாலை
27. காஞ்சி குமரகோட்டக் கலம்பகம்
28. சென்னைக் கந்தசாமி வெண்பா மாலை
29. சென்னைக் கந்தசாமி புராணம்
30. திருத்தணிகையாற்றுப்படை உரை
31. கந்தரநுபூதி விருத்தியுரை
32. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் உரை

முதலியன இவருடைய நூல்களாம்.

ஈஉ. வித்துவான் தாண்டவராய முதலியார்

தோற்றம்

வித்துவான் தாண்டவராய முதலியார், இப்போது செங்கற்பட்டு மாவட்டத்திலே வில்லியம்பாக்கம் என வழங்கும் வில்லி நல்லூரிலே பிறந்தார். இவர் பிறந்த ஆண்டு திங்கள முதலியன புலப்படவில்லை. இவருடைய தந்தையார் பெயர் கந்தசாமி முதலியார். குலம் சைவ வேளாளர் குலம்.

கல்வி

தாண்டவராயருடைய இளமைப் பருவத்திலேயே தந்தையார் மறைந்து போனார். பிறகு பொன் விளைந்த களத்தூரிலே இருந்த தம் அம்மான் குமாரசாமி உபாத்தியாயரிடத்திலே வளர்ந்தார். அவரிடத்திலேதான் நெடுங் கணக்கு, எண்சுவடி முதலியவைகளைக் கற்றார். தமிழ் மொழியை நன்றாகக் கற்றுணர வேண்டும் என்னும் ஆர்வம் மிகுதிப்படவே உழலூர் வேலப்ப தேசிகர் என்பவரிடம் இலக்கண இலக்கியங்களை நன்கு பயின்றார். இவ் வேலப்ப தேசிகர் அந்தகக்கவி வீரராகவ முதலியார் வழி முறையைச் சேர்ந்தவர்.

சென்னையைச் சேர்தல்

பிறகு தாண்டவராயர் சென்னையை அடைந்து, புதுவை விசுவநாத பிள்ளை, கூனிமேடு வித்துவான் இராமானுச முதலியார் ஆகியவர்களிடம் இலக்கியங்களைப் பயின்றார். மேலும் தொல்காப்பியம், வரதப்ப முதலியார், சிகாழி அருணாசலக் கவிராயர் வழிமுறையைச் சேர்ந்த சிகாழி வடிகநாதத் தம்பிரான் ஆகியவர்களிடம் இலக்கணம் கற்றார். இவ்வாறு பல அறிஞர்களிடம் தமிழ் நூல்களைப் பயின்று புலமை நிரம்பப்பெற்றதோடமையாமல்,

வடமொழி, தெலுங்கு, கன்னடம், உருது, மகாராட்டிரம், ஆங்கிலம் முதலிய பிறமொழிகளையும் பயின்றார்.

ஆசிரியத் தொழில்

தாண்டவராயருடைய புலமைத் திறத்தைப்பற்றிக் கேள்வியுற்ற அரசாங்கதினர் இவரைச் சென்னை அரசாங்கக் கல்லூரியில் தமிழ்ப் புலவராக ஏற்படுத்தினர்கள். இவரோடு தமிழ்ப் புலவராக இருந்தவர் கொட்டையூர் சிவக் கொழுந்து தேசிகர்.

நீதிமன்றத் தலைவர்

சில காலஞ் சென்றபின் அரசாங்கக் கல்லூரி எடுபட்டது. 1843-ஆம் ஆண்டில் செங்கற்பட்டு மாவட்ட நீதி மன்றத் தலைவராக இவர் ஏற்படுத்தப்பட்டார்.

நூல்கள் எழுதி வெளியிடல்

தாண்டவராய முதலியார் தம் அலுவல்களுக்கிடையே நூல்கள் எழுதுவதினும் தமது கருத்தைச் செலுத்தினர். இவரது காலத்தில் பஞ்சதந்திரக்கதை தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுச் செய்யுளாக வழங்கிக்கொண்டிருந்தது. ஆயினும் அதனைக் கற்பவரும் கேட்பவரும் அரியராயினர். ஆகவே இவர் தாம் பஞ்சதந்திரக்கதையை உரைநடையில் எழுதி எல்லோரும் படித்துணருமாறு வெளியிட வேண்டும் என்று எண்ணினர். மகாராட்டிர மொழியில் இருந்து இனிய அமைப்பில் மொழிபெயர்த்தார். முதல் நான்கு பகுதிகளை எளியநடையில் எழுதியவர் ஐந்தாவது பகுதியைச் சிறிது கடுமையான நடையில் அமைத்து மாணவர்கள் உரைநடையில் சிறிது சிறிதாக முன்னேறிப் புலவர் நடையையும் பின்பற்றுதற்கு வழிகாட்டியிருக்கிறார். இப் பஞ்சதந்திரக் கதையை அல்லாமல் கதாமஞ்சரி என்னும்

நூலும் இவரால் எழுதப்பெற்றிருக்கிறது. இலக்கண விளக்கவிடை என்னும் நூலை மாணவர்களின் பொருட்டு எழுதி வெளியிட்டார். திவாகரம், சூடாமணி நிகண்டு என்னும் நூல்களைத் திருத்திச் சுத்தப் பதிப்பாக அச்சிட்டார். புரசைப் பொன்னம்பல அடிகள் என்பவர் விவிலிய நூலைக் கண்டித்து எழுதிய வேதவிகற்பம் என்னும் நூலை மறுத்து வேதவிகற்ப திக்காரம் என்னும் கண்டன நூலைப் பாதிரியார்களுடைய வேண்டுகோளின்படி எழுதினார். இந்நூல் வேறொருவர் பெயரால் வெளியிடப்பட்டது.

இவர் இயற்றிய நூல்கள்

1. பஞ்சதந்திர வசனம்
2. கதாமஞ்சரி
3. திருத்தணிகை மாலை
4. திருப்போரூர்ப் பதிகம்
5. இலக்கண விளக்கவிடை
6. வேதவிகற்பதிக்காரம்

இறுதி

சீரிய முறையில் செந்தமிழ்த் தொண்டு செய்திருந்த இவர், 1850-ஆம் ஆண்டிலே இவ்வுலகைவிட்டு மறைந்தார்.

கழக வெளியீடு: எசுo

தமிழ்ப் புலவர் வரிசை

[ஒன்பதாம் புத்தகம்]

ஆசிரியர்:
திரு. சு. அ. இராமசாமிப் புலவர்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: Aug., 1955.

THAMIZHP PULAVAR VARISAI - IX

[All Rights Reserved]

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
I/140, BROADWAY, MADRAS-1.

Head Office:

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1. C. 1200.

பதிப்புரை

முன்னேற்றத்தை விரும்பும் நாடுகள் எல்லாம், தத்தம் நாட்டுப் புலவர்கள் செய்தருளிய தாய்மொழி நூல்களை விரும்பிப் படித்தலும் படிப்பித்தலும் செய்கின்றன.

அதுடன், அப் புலவர்கள் வரலாற்றைச் சென்மையுடன் உணர்ந்து அவர்தம் அறிவு, ஆண்மை, அன்பு, ஒழுக்கம், தன்னலமின்மை, தாய்மொழிப் பற்று, எல்லாருக்கும் உதவுதல், விடா உழைப்பு, அஞ்சாமை, வாய்மை, கடமை முதலிய நற்பண்புகளை மேற்கொண்டு நடத்தி நற்பயன் பெறுகின்றனர்.

அம்முறையில் நம்நாட்டுப் புலவர் பெருமக்கள் வரலாறுகளையும், அவர்கள் செய்தருளிய நூல்களையும் மாணாக்கர் இளமையிலேயே கற்று அதன்படி ஒழுகுவது, நாட்டுக்கும், மொழிக்கும் செய்யும் நல்தொண்டாகும் எனக்கருதி **தமிழ்ப் புலவர் வரிசையில்** இதுகாறும் **எட்டு** நூல்கள் வெளியிட்டுள்ளோம். உங்கள் கையில் மலரும் இந்நூல், இவ்வரிசையில் **ஒன்பதாம் புத்தகமாகும்.**

இதன்கண் **சேலம் தமராசாமி முதலியார்** முதல் **இராசம் அய்யர்** ஈறாக நமது புலவர் பெருமக்கள் வரலாறுகளும், அவர்களது அவ்வப் புலவர் பெருமக்கள் பாடிய பாடல்களும், உள்ளுறை நயங்களுடன் செவ்விய இனிய எளிய நடையில் எழுதப்பெற்றிருக்கின்றன.

இதனை எங்கள் வேண்டுகோளின்படி **ஆக்கித்தந்த திரு. சு. அ. இராமசாமிப் புலவர்** அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

இதனையும் முதல் எட்டுப் புத்தகங்கள் போலவே ஆசிரியர்களும், மாணாக்கர்களும், பொதுமக்களும் வாங்கிக் கற்றும் கற்பித்தும் புலவர் பெருமக்களுக்குச் செய்யும் கடப்பாட்டினைச் செய்து எங்களையும் ஊக்குவார்களாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

		பக்கம்
க.	சேலம் குமாரசாமி முதலியார் ...	1
உ.	ஈசானிய மடம் இராமலிங்க அடிகள் ...	3
ங.	வ. த. சுப்பிரமணிய பிள்ளை ...	5
ச.	தஞ்சை. ஆபிரகாம் பண்டிதர் ...	10
ஞ.	ஜே எம். நல்லசாமிப் பிள்ளை ...	19
ட.	குல. சபாரத்தின முதலியார் ...	24
ண.	நாகை. தண்டபாணிப் பிள்ளை ...	28
அ.	வ. வே. சுப்பிரமணிய ஐயர் ...	32
கூ.	சே. கிருட்டிணமாசசாரியார் ...	39
கo.	ம. ரா. குமாரசாமிப் பிள்ளை ...	42
கக.	சரவணபவானந்தம பிள்ளை ...	45
கஉ.	விருதை சிவஞானயோகிகள் ...	49
கங.	இருகலம். ஆதிமூல முதலியார் ..	56
கச.	பேரம்பலப் புலவர ...	60
கஞ.	வண்ணை. செல்லையா ...	64
கட.	சீர்காழி. முத்துத தாண்டவராய பிள்ளை ...	67
கண.	ச. க. கோவிந்தசாமிப் பிள்ளை ...	70
கஅ.	கு. சோமசுந்தர தேசிகர ...	73
கக.	வல்லை சண்முகசுந்தர முதலியார ...	76
உo.	வ. சு. சண்முகம் பிள்ளை ...	80
உக	காழி. சிவ கண்ணுசசாமிப் பிள்ளை ...	83
உஉ.	ந. பலராம ஐயர் ...	86
உங.	சலசலோசனர ...	89
உச.	பண்டித வேங்கடசாமி நாட்டார் ...	92
உஞ.	ச. த. சற்குணர் ...	100
உட.	கா. சுப்பிரமணிய பிள்ளை ...	102
உண.	மோசூர். கந்தசாமி முதலியார ...	112
உஅ.	புதுமைப்பித்தன் ...	115
உக.	முத்துக்குமாரத் தம்பிரான் ...	120
ஙo	சேலம். இராமசாமிக் கவுண்டர் ...	122
ஙக.	புகழ். முத்துசசாமிப் பிள்ளை ...	127
ஙஉ.	ப. சிதம்பரம் பிள்ளை ...	129
ஙங.	திருக்குறள் அவதானி சுப்பிரமணிய தாசு ...	132
ஙச.	நவநீதகிருட்டிண பாரதியார் ...	134
ஙஞ.	இராசம அய்யர் ...	137

தமிழ்ப் புலவர் வரிசை

[ஒன்பதாம் புத்தகம்]

க. சேலம் குமாரசாமி முதலியார்

பிறப்பு

குமாரசாமி முதலியார் என்பவர் தொண்டை நாட்டிலே சென்னையை ஒட்டியுள்ள குன்றத்தூரைப் பிறப்பிடமாகக் கொண்ட அருணாசல முதலியார் என்பவருடைய மகனாகத் தோன்றினார். தாயார் பெயர் மீனாட்சியம்மாள். குமாரசாமி முதலியார் பிறந்த காலம் சாலிவாகன சகம் 1725-ல், துன்மதி ஆண்டு சித்திரைத் திங்கள். அருணாசல முதலியார் அரசியல் அலுவலில் முன்னிட்டுச் சேலத்தில் இருந்ததால், அவருக்கும அவருடைய மகனுக்கும் சேலம் என்னும் அடைமொழி சேர்ந்தது.

கல்வி

குமாரசாமி முதலியார் ஐந்தாம் அகவையில் அதற்ப உபாத்தியாயர் என்பவரிடத்தில் கல்வி கற்கத் தொடங்கினார். இவர் நுண்ணுணர்வு உடையவராக இருந்தமையின் வெகு எளிதாக இலக்கண இலக்கியங்களைக் கற்றுக் கொண்டார். சுந்தரம் ஐயர், இராமகிருட்டிண ஐயர் என்பவர்களிடம் இசைப் பயிற்சியுங் கற்றுக் கொண்டார். மேற்கூறிய இருவரும் நல்ல இசைப் புலவர்களாக இருந்தமையின் குமாரசாமி முதலியாருக்கு இசைப்பாட்டுப் பாடும் ஆற்றலும் உண்டாயிற்று.

அலுவல்

குமாரசாமி முதலியார் முதலில் அரசாங்க அலுவலகத்தில் எழுத்தாளராஞர். பிறகு சேலம் மாவட்டத்தில் உள்ள ஆத்தூரில் சவுக்கைதார் என்னும் வேலை பார்க்கத் தொடங்கினர். பிறகு பல ஊர்களுக்கு மாற்றப்பட்டார். இவர் இசைப்பாட்டுப் பாடுவதில் சிறந்தவராக இருந்தமையின் வழிபாட்டுக்குச் செல்லும் பதிகளில் எழுந்தருளியுள்ள கடவுளர்கள் மீதெல்லாம் இசைப்பாட்டுப் பாடிக் கொண்டிருந்தார். இவரால் இயற்றப்பட்ட இசைப்பாடல்கள் பல. இவர் கந்தபுராண முழுவதையும் இசைப்பாட்டாகப் பாடிப் பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார்.

இயற்றிய இசைநூல்கள்

1. கந்த புராணக் கீர்த்தனை
2. சுவாமிமலை சுவாமிநாத சுவாமி பதம்
3. சுப்பிரமணியர் லாலி
4. சுப்பிரமணியர் பதிகம்
5. தர்ம சம்வர்த்தனி கீர்த்தனை
6. அறம் வளர்த்த நாயகி கீர்த்தனம்
7. தண்டாயுதக் கடவுள் பஞ்சரத்தின மாலை
8. பழனி மும்மணி மாலை
9. இரட்டை விநாயகர் கீர்த்தனை
10. மூல விநாயகர் கீர்த்தனை
11. மீனாட்சி கீர்த்தனை
12. சோமசுந்தரக் கடவுள் பதம்
13. திருப்பரங்குன்றம் முருகர் பதம்
14. தண்டாயுதபாணி கலித்துறைப் பதிகம்
15. தண்டாயுதபாணி ஒருபா ஒரு பஃது
16. பெரியநாயகியம்மன் கும்மி
17. பழனியாண்டவர் சதகம்
18. பழனியாண்டவர் வண்ணம்

முதலியன இவரால் இயற்றப்பெற்றன. இவரால் இயற்றப்பெற்ற கந்தபுராணக் கீர்த்தனை சென்னைமா நகரில் காஞ்சிபுரம் சபாபதி முதலியார், அட்டாவதானம் சபாபதி முதலியார், திருத்தணிகைக் கந்தப்பையர் முதலிய பேரறிஞர்கள் கூடிய அவையிலே அரங்கேற்றஞ் செய்யப்பட்டது. இவருடைய கீர்த்தனை கந்தபுராணம் முழுவதற்கும் இயற்றப்பட்டபடியாலும் இதற்குப் பிறகு நயமான இசைப்பாடல்கள் பல எழுந்தமையாலும் வழக்காறற்று மறைந்தொழியும் நிலையில் இருக்கிறது. இவர் காலமான ஆண்டு முதலிய விவரங்கள் புலனாகவில்லை.

உ. ஈசானியமடம் இராமலிங்க அடிகள்

துறவி

துறவியாக வாழ்ந்திருந்த இப்பெரியார் தில்லை ஈசானிய மடத்திலே தங்கித் தமிழ்தொண்டு செய்திருந்தார். வீரசைவக் கொள்கையுடையவர். புராணங்கள், இலக்கண இலக்கியங்கள், சங்க நூல்கள் ஆகியவைகளைத் தக்காரிடம் நன்றாகக் கற்றறிந்தார். தம்மை யடுத்தவர்கட்கு அவர்கள் விரும்பும் நூல்களைக் கற்பித்தார். பாடஞ் சொல்லும் ஆற்றலும், சொற்பொழிவு செய்யும் ஆற்றலும், பழந்தமிழ் நூல்கட்கு உரையெழுதும் ஆற்றலும் இவரிடம் இயற்கையாக அமைந்திருந்தன.

மாணவர்கள்

இவருடைய மாணவர்களும் இவரைப்போலவே உரையெழுதும் ஆற்றல், சொற்பொழிவு செய்யும் ஆற்றல் முதலியவைகளை நன்கு பெற்றிருந்தனர். மாணவர்களில் மிகச் சிறந்து விளங்கியவர்கள் சே. சூரப்பாயுடு,

க வ. திருவேங்கட நாயுடு முதலியோராவர். இவர்களில் க. வ. திருவேங்கடநாயுடு சோணசைல மாலைக்கு அரிய விருத்தியுரை ஒன்றை எழுதி வெளிப்படுத்தினர்.

கச்சிக்கலம்பகத்திற்குதவி

பூண்டி அரங்கநாத முதலியார் செல்வியில் இருந்த போது இராமலிங்க அடிகளார்க்கும் முதலியார்க்கும் பழக்கம் ஏற்பட்டது. இருவரும அடிக்கடி ஒருவரையொருவர் கண்டு உரையாடி மகிழ்தல் இயல்பு. அரங்கநாதமுதலியார் பாடிய கச்சிக்கலம்பகத்திற்கு அடிகளார் இன்றியமையாத துணையாக இருந்தார்

உரையாசிரியர்

நால்வர் நான்மணிமாலைக்கு அரிய விரிவுரை ஒன்று மிகச் சிறந்த முறையில் எழுதினர். பழமலையநாதர்க்கும் உரையொன்று செய்தார். பெரியபுராணத்திற்கு ஆறுமுகத் தம்பிரான் உரையெழுதியபோது உடனிருந்து தக்க உதவிசெய்து அவ்வுரையை முற்றுப்பெறச் செய்தார்

பதிப்பாசிரியர்

பழைய நூல்களை இறந்துபடா வண்ணம் பாதுகாப்பதில் அடிகள் மிகுந்த கருத்தைச் செலுத்தினர். ஓலைச் சுவடிகள் பலவற்றை ஆராய்ந்து அச்சுக்குத் தகுதியாமாறு தாளில் எழுதி ஒழுங்கு படுத்தினர். செல்வர் சிலருடைய உதவியைக்கொண்டு,

1. குமரகுருபரர் பிரபந்தத் திரட்டு
2. சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தத்திரட்டு
3. திருவிளையாடற் புராண மூலம்
4. சீகாளத்திப் புராணம்
5. வசவபுராணம்
6. திருக்கூவப்புராணம்

7. வாயு சங்கிதை
8. சிவராததிரி கற்ப முதலியன
9. தோத்திரப் பிரபந்தத்திரட்டு
10. முருகேசா முதுநெறி வெண்பா
11. நால்வர் நானமணிமாலையுரை
12. பழமலையந்தாதியுரை

ஆகிய நூல்களைப் பிழையற நல்லமுறையில் வெளிப் படுததி அரிய தமிழ்த்தொண்டு செய்தார் பூண்டி அரங்க நாதமுதலியார், காயாறு ஞானசுந்தர ஐயர், பாலையம் சோமசுந்தரம் செட்டியார் என்பவர்கள இவருடைய தமிழ்தொண்டிற்குத் தக்கவாறு உதவி செய்தார்கள்.

இறுதி

1906-ஆம் ஆண்டில் சென்னையில் தங்கிச் சில நூல் களை அச்சிட்டுக்கொண்டும் விரைவாத நோய்க்கு அயுவை மருத்துவஞ் செய்துகொண்டும் இருநதபோது, 55-ஆம் அகவையில் திடீரென்று காலமானர்.

---

5. சுப்பிரமணியபிள்ளை

தோற்றம்

தொண்டை நாட்டிலே செங்கற்பட்டிலே 1846-ஆம் ஆண்டு டிசம்பர் 11-ஆம் நாள் (கலி 4947 பராபவ ஆண்டு கார்த்திகைத் திங்கள 28-ஆம் நாள்) சுப்பிரமணிய பிள்ளை பிறந்தார். தந்தையார் பெயர் தணிகாசலம் பிள்ளை. தாயார் பெயர் இலகுமியம்மாள.

கல்வி கற்றல்

இளமைப்பருவத்தில் வீட்டு உபாதியாயரிடம் தமிழுந் தெலுங்கும் படித்தார். பிறகு மிஷன் பள்ளியிற்

சேர்ந்து படித்தார். படிக்கிற காலத்தில் காலை நான்கு மணிக்கே எழுந்து பாடங்களைப் படிப்பது இவருடைய வழக்கம். இவருடைய குடும்பம் வறுமையுடையதாக இருந்தபடியால், இவர் தமது இளமைப் பருவத்திலேயே ஆறு ரூபா ஊதியத்தில் பள்ளிக்கூட உபாத்தியாயராக வேலைபார்க்கத் தொடங்கினார். அவ்வூதியமே குடும்பத்தை நடத்துவதற்குப் பயன்பட்டது.

1864-ஆம் ஆண்டில் சென்னைக் கிறித்தவப்பள்ளி ஆசிரியர் மில்லர் துரை செங்கற்பட்டுப் பள்ளிக்கூட சோதனைக்கு வந்தபோது சுப்பிரமணியபிள்ளை தமது கல்வி விருப்பத்தையும், குடும்ப வறுமையையும் துரையிடம் கூறினார். "சென்னைக்கு வந்தால் மெட்ரிகுலேஷன் படிப்பதற்கு உதவிசெய்கிறேன்" என்று துரை கூறினார். ஆயினும் இவர் தாய் தந்தையரைவிட்டுப் பிரிந்து எப்படிச் சென்னைக்குப்போவது என்று அஞ்சி அந்த ஆறு ரூபா அலுவலிலேயே மேலும் சில காலம் இருந்தார்.

சென்னையில் கல்வி கற்றல்

1865-ஆம் ஆண்டில் சென்னைக்குச்சென்று கல்வி கற்றற்கு உதவிப்பொருள் அளிக்கும் ஆராய்ச்சியொன்றில் தேர்வு எழுதி அதில் வெற்றிபெற்றார். அதனால் இவருக்கு எட்டு வெண்பொற்காசுகள் ஒவ்வொரு திங்களும் உதவித் தொகையாகக் கிடைத்தது. அதைக்கொண்டு இவர் சென்னையில் தங்கிக் கல்விகற்றார். பலதொல்லைகளுக்கிடையே படித்து 1867-ஆம் ஆண்டில் எப். ஏ., தேர்வில் தேறினார்.

ஆசிரியத் தொழில்

மேலும் கல்வி கற்றுக்கொண்டிருந்தால் தம்மூடைய தாய்தந்தையர்க்குத் தொல்லையேற்படும் என்று கருதிய

இவர் நாற்பது ரூபா ஊதியத்தில் ஆசிரியராக வேலை பார்க்கத்தொடங்கினர். அவ்வேலை இவருக்கு விருப்ப மில்லாதிருந்தபடியால் அதே பள்ளியில் கணக்கப்பிள்ளை யாக மாறினர்.

திருமணம்

காஞ்சிபுரத்தில் இவருக்குத் திருமணம் நடைபெற்றது. மணிவியாக வாய்த்த மங்கை வள்ளியமமாள் என்னும் பெயருடையவர். சுப்பிரமணிய பிள்ளையைப் போலவே இம்மாதும் முருகப்பெருமானிடத்தில் சிறந்த கடவுளன்புகொண்டிருந்தார்.

பல ஊர்களில் வேலை

இவருக்குச் சென்னை வாழ்வு பொருந்தவில்லை. வெளியூர்களில் இருக்கவேண்டும் என்பதே இவருடைய நோக்கமாக இருந்தது. பலவிடங்களிலும் வேலைக்கு விண்ணப்பம் போட்டிருந்தார். 1870-ஆம் ஆண்டில் மஞ்சக்குப்பம் மாவட்ட நீதிமன்றத்திலே எழுத்தாளராக வேலை கிடைத்தது. அவ் வேலையை மேற்கொண்ட இவர், ஒவ்வொரு கார்த்திகைநாளிலும் முருகப்பெருமானுக்கு ஒருபலம் கற்பூரம் கொளுத்தி ஒளிவழிபாடு செய்யவேண்டுமென்று உறுதிகொண்டு அவ்வாறே இறுதிநாள் வரையில் செய்தார்.

முனிசீப்

முனிசீப் வேலையை அடைதற்பொருட்டு அதற்குரிய நூல்களைப் படித்து அத் தேர்வில் வெற்றியடைந்தார். எழுத்தாளர் வேலையில் தலைவராக (ஹெட்கிளார்க்) நூறு வெண்பொற்காசு ஊதியத்தில் வேலைபார்த்துக்கொண்டிருந்த இவர் முனிசீப்வேலை கொடுக்கவேண்டுமென்று உயர்நீதிமன்றத்திற்கு எழுதினர். ஆயினும் உடனே கிடைக்கவில்லை. எட்டு ஆண்டுகள் முயற்சி செய்த பிறகு

பல இடங்களில் முனிசீப் வேலையைத் தற்காலிகமாகப் பார்த்தார். அதன்பின் 1888-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் முனிசிப்வேலை கிடைத்தது. முதலில் அவவேலையை நாமக்கல்லில பார்க்கத்தொடங்கினர். திங்கள் ஊதியம் ரூபா இருநூறு கிடைத்தது. ஆறுரூபா ஊதியத்தில் ஆசிரியராக அல்லற்பட்ட இவர் தமது விடாமுயற்சியாலும் உழைப்பாலும இவ்வாறு உயர்நிலையை அடைந்தார். கும்பகோணம், திருத்தருப்பூண்டி, மதுரை, மாணமதுரை ஆகிய இடங்களுக்கு மாற்றபபட்டு வேலைபார்த்தார்.

நூல்கள் வெளியிடல்

நூல்களை எழுதுவதிலும் வெளியிடுவதிலும் இவ ருடைய மனம் மிகுதியாக ஊக்கங்கொண்டிருந்தது. முருகன்மீது பேரன்பு பொருந்தியிருந்த இவர் அருணகிரி நாதர் இயற்றிய திருப்புகழ்ப பாடல்களைத தொகுத்துச் சுத்தமான பதிப்பாக வெளியிடவேண்டுமெ என்று பெரு முயற்சி செய்தார் புதுப் பாடலகள கிடைக்கக்கூடும் என்று பலவிடங்களிலும் தேடினர். ஆயிரம் பாடல்களை யாவது தொகுத்து ஒரு நூலாக வெளியிடுவதற்கு முயற்சி செய்தார். இவர் முனிசிப்பாக வேலைபார்த்த இடங்களி லெல்லாம திருப்புகழ் ஏடு தேடும் வேலையையும் மேற் கொண்டிருந்தார். பிரமோத்திரகாண்டத்தை உரைநடை யாக எழுதி 1879-ஆம் ஆண்டிலே முதன் முதலாக வெளி யிட்டார். திருத்தருப்பூண்டியில் வேலைபார்த்தபோது அவ் வூர்ப் புராணத்தை எழுதிக் கோயிற்செலவில் வெளிப் படுத்தினர். மாணமதுரையில் இருந்தபோது அவ்வூர்த் தலபுராணத்தை உரைநடையாக எழுதி வெளிப்படுத்தினர்.

முருகக்கடவுள்மீது அன்பு

இவரும் இவருடைய வழிமுறையினரும் முருகப் பெருமானையே குடும்பக் கடவுளாகவும் குலதெய்வமாகவும்

வழிபட்டொழுகினர்கள். இவர் நாள்தோறும் முருகக் கடவுள்மீது பாடலகள் இயறறுவது வழக்கம்.

"மண்ணுசை என்கின்ற மாயையில் வீழ்ந்து மதிமயங்கி
எண்ணு தனேமறந தேயிருந தேனினி யாகிலுமென்
அண்ணுஉன் தன்பொன னடிகமல மம்வந் தடையுமவண்ணம்
தண்ணரு ளருள்புரி யாய்தணி காசல சண்முகனே."

"மாதர்கள் மோகந் தன்னில் மயங்கியே வீழ்ந்தி டாமல்,
போதநன் னெறியைப் பற்றிப் புண்ணியந் தனேயே செய்துன்,
பாதமே கதியென் றெண்ணிப் பத்தியாய்ப் பணியும் நல்ல
சாதகம் வருவதென்றே தணிகைமா மலேயு ளானே."

என்பன இவர் இயற்றிய பாடல்களில் இரண்டு. அடிக்கடி தணிகைசென்று வழிபடுதலேயும் இவர் தமது கடமையாகக் கொண்டிருந்தார். இவருடைய பெருமுயற்சியால் திருப்புகழ் ஆபிரத்து இருநூறு பாடல்களவரை சுத்தப் பதிப்பாகவும இரண்டுமூன்று பகுதிகளாகவும் வெளிவந்தன.

வேலேயில் இருந்து விடுதலே

1901-ஆம் ஆண்டில் வேலேயில இருந்து விடுதலே பெற்றார். பிறகு சென்னேயில் லிங்கச்செட்டித் தெருவில் வசிததிருநதார். அடிக்கடி காஞ்சிக்கும் தணிகைக்கும் சென்று இறைவழிபாடு செய்தார். வேலேபார்த்திருந்த இடங்களேச் சுற்றியுள்ள சிவப்பதிகட்கெலலாம் சென்று சிவபெருமானே வழிபாடு செய்வது இவருக்கு இயல்பு. இவ்வாறு முந்நூறு சிவப்பதிகள்வரை போற்றி வழிபட்டார்.

எழுதியனவும் வெளியிட்டனவும்

இவரால் எழுதப்பட்ட உரைநடை நூல்களும் பதிப்பிக்கப்பட்ட நூல்களும் பல. அவற்றுள் சில வருமாறு :—

1. பிரமோத்தரகாண்டம் உரைநடை
2. திருத்தருப்பூண்டித் தலபுராணம் உரைநடை
3. மாஞ்மதுரைத் தலபுராணம் உரைநடை
4. சிவத்தலமஞ்சரி
5. திருநீர்த் தலபுராணம் உரைநடை
6. திருப்புகழ் மூன்று பகுதிகள்.

முருகக்கடவுள்மீது இவர் இயற்றிய தனிப்பாடல்கள் பல.

பழக்கவழக்கம்

ஒவ்வொருநாளும் அன்றைய நிகழ்ச்சிகளைக் குறிப் பெழுதிவைக்கும் பழக்கத்தை இவர் மேற்கொண்டிருந்தார். இப்பழக்கத்தை இவர் தம் வாழ்ள்முழுதும் மேற்கொண் டிருந்தபடியால் பிற்றைநாளில் இவருடைய வரலாற்றுக் குறிப்புக்களுக்கு அது சிறந்த வழியாயிற்று.

இறுதி

முருகக்கடவுளிடத்துப் பேரன்புகொண்டு இடை விடாது உழைத்துநின்ற இவர், 1909-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் பதினேழாம் நாள், தமது அறுபத்து மூன்றும் அகவையில் முருகன் திருவடிநீழலை அடைந்தார்.

ச. ஆபிரகாம் பண்டிதர்

தோற்றம்

திருநெல்வேலி மாவட்டத்திலே உள்ள சாம்பூர் வடகரை என்னும் சிற்றூரில் 1859-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் இரண்டாம் நாள் ஆபிரகாம் பண்டிதர் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் முத்துச்சாமி. முத்துச் சாமி அன்பு அருள் அடக்கம் வாய்மை முதலிய நற்குணங் கள் யாவும் அமையப் பெற்றவர்.

கல்வி கற்றல்

ஆபிரகாம் ஐந்தாம் அகவையை அடைந்ததும் சுரண்டை என்னும் ஊரில் இருந்த பள்ளிக்குச் சென்று கல்விகற்கலானார். பள்ளிக்கல்வியை ஊக்கமாய்க் கற்றுத் தேர்வுகளில் முதன்மையாகத் தேறினார். ஓவியம் தீட்டுதற்கும் இசைபாடுதற்கும் இளமையிலேயே பழகிக்கொண்டார். 1874-ஆம் ஆண்டில் திண்டுக்கல்லை அடைந்து ஆசிரியப பயிற்சிப் பள்ளியிற் சேர்ந்தார். அக் காலத்தில் புகைவண்டி போக்குவரத்து இல்லை. ஆகவே மிகச் சேய்மையில் உள்ள இடங்கட்குச் சென்று கல்விகற்பது மிகவுந் தொல்லையாக இருந்தது.

பலவகைப் பயிற்சி

இவர் ஆசிரியப் பயிற்சிக்குக் கல்விகற்ற நாளையில் அறிஞர பலருடைய நல்லுறவைப் பெற்றார். இலக்கண இலக்கியங்களையும் சமயநூல்களையும் கற்றார். மருத்துவர்களோடு நட்புக்கொண்டு அவர்களுடன் இருந்து மருத்துவங் கற்றார். தம் நண்பராக இருந்த சோதிடம் கந்த சாமிப் பிள்ளை என்பவரிடம் கோள்நூல்களைக் கற்றார். இசையாசிரியர் பிடில் சடையாண்டிப் பத்தர் என்பவரிடம் இசை பயின்றார். தம் பள்ளித்தலைவரான யார்கஐயர் (Rev. York) என்பவரோடு புகைப்படம பிடித்து அக்கலையினுந் தமது அறிவைப் பெருக்கிக்கொண்டார். தாம் மேற்கொண்டுள்ள சமயத்திற்கு ஏற்றவாறு கிறித்தவ மறையினை ஆராய்ந்து காலமாலை வேளைகளில் தமது சமயக் கடவுளைப் போற்றுவார். கெட்டுப்போன பொருள்களைச் சீர்படுத்தும் (ரிபேர்செய்யும்) தொழிலும் கற்றுக் கொண்டார்.

ஆசிரியர்

ஆபிரகாம் பண்டிதருடைய அறிவுமாட்சியைக் கண்ட யார்க்ஐயர் இவரை அப் பள்ளியிலேயே ஓர் ஆசிரியராக அமர்த்தினர். இவர் அப்பணியை 1876-ஆம ஆண்டில் ஏற்றுக்கொண்டு பார்க்கத்தொடங்கினர். அக் காலத்திய ஆசிரியர்கள் கோலொடிய மாணவரைச்சாடி அவர்தம் மடமையை அகற்றுவதே முறைமையாக இருந்தது. ஆபிரகாம் தாம் அம்முறையை மேற்கொள்ளாது நன்முறைகளே மேற்கொண்டு மாணவாகளைத் தம்வழிப்படுத்தி அவர்களுடைய அறியாமையைப் போக்கினர்.

கருணைந்தர் காட்சி

யாணமலைப்பட்டி என்னும் ஊரைச்சேர்ந்த இரு மாணவர்கள் ஆபிரகாம் பண்டிதரிடம் கல்விகற்றுக் கொண்டிருந்தனர். அந்த மாணவர்களின் தந்தையார் பெயர் பொன்னம்பலனர். பொன்னமபலனர் ஆபிரகாம் பண்டிதரின் அரியகுணங்களைப் பற்றிக் கேள்விப்பட்டார். அவரை அவருடைய வீட்டிற்குபபோய்ப் பாததார். அது முதல் ஆபிரகாம் பண்டிதரும் பொன்னமபலனரும் அரிய நண்பர்களாயினர் பொன்னம்பலனருடைய ஊருக்குச் சென்ற ஆபிரகாம் பண்டிதர், அண்மையில் இருந்த சுருளி மலையைப்பற்றி உசாவியறிநதார். அதில் பெரியவர் ஒருவர் இருக்கிறார் என்னுஞ்செய்தி தெரிந்தது. தம் நண்பரான பொன்னம்பலனரையும் அழைத்துக்கொண்டு ஒருநாள் ஆபிரகாம சுருளிமலைக்குச் சென்றார். இருவரும் மலையடிவாரத்தில் ஓரிடத்தில் இளைப்பாறியிருந்தனர்.

அச் சமயத்தில் காவியுடை அணிந்த துறவி யொருவர் இவர்கட்கு முன்னுல்தோன்றினர். "உங்களில் ஆபிரகாம் என்பவர் யாவர் ?" என்று கேட்டார். அந்தக் காட்

டில் தம்மை முன்பின் அறியாத துறவி ஒருவர் தமது பெயரைக் கூறக்கேட்டவுடன் ஆபிரகாம திடுக்கிட்டுப் போனர். உள்ளம்பதற, நாக்குழற, "ஐயனே! ஆபிரகாம் என்னும் பெயருடையவன் அடியனேன்தான்" என்றார். இதனைக்கேட்ட துறவி புன்முறுவல்கொண்டார். "எம் முடைய குருநாதன் நமது அழைத்துக்கொண்டு வரு மாறு அடியேனுக்குக் கட்டளையிட்டுள்ளார். ஆதலின் என்பின்னே வருவீராக" என்றார் இம்மொழிகளைக் கேட்ட ஆபிரகாம் தம் நண்பர் 'பொன்னம்பலனாரை அவ் விடமே இருக்குமாறு பணித்துவிட்டுத தாம் அத்துறவி யின் பினனே சென்றார். இருவரும் மலைமீது ஏறி மலையின் உச்சியை அடைந்தனர். ஆங்கோர துறவி சந்தனமரத்தின் நீழலிலே பாங்குடன அமர்ந்திருத்தலைக் கண்டார். ஆபிர காம், உடனே அவரது அடிகளில தமதுமுடிபட வீழ்ந்து வணங்கினர். பலவாறு போற்றிப் புகழ்ந்தார். அங் கெழுந்தருளியிருந்த பெரியாருடைய பெயர் கருணானந்தர் என்பது. அவர் ஆபிரகாம் பண்டிதருக்கு வாழ்த்துரைகள் கூறினர். "அன்பனே! உன்னுடைய வரவால் மிகுந்த மகிழ்ச்சி கொண்டோம். நீ இங்குவந்து எமமைப் பார்க்க விரும்பியதின் நோக்கம் யாது?" என்று உசாவினர்

கருணானந்தரைப் பார்த்து ஆபிரகாம் "ஐயனே, அடி யேன் தங்களைக் காணுமுன் கொண்டிருந்த நோக்கம் வேறு. இப்பொழுது கொளளும் நோக்கம் வேறு. இப் போது தங்களைக் கண்டபின் அதனைமுற்றும் ஒழித்தேன். இனிமேல் அடியேன் தங்கள் திருவடிகளைப் பிரியா திருத் தல்வேண்டும் என்னும் விருப்பம் மிகுதியாகின்றது. தாங் கள் இதற்கு அன்புகூர்ந்து உடன்பாடுதந்தருள வேண்டிக் கொள்ளுகிறேன்," என்று சொல்லிவணங்கினர்.

கருணைனந்தர் அறிவுரை

ஆபிரகாமின் வேண்டுகோளைக் கேட்ட கருணைனந்த முனிவர் புன்னகை பூத்தார். சில அருள் உரைகளைக் கூறலானார். "அன்பனே! தம்மை ஒருபொருளாக மதித்துகொண்டு தம்மைச் சார்ந்தபொருள்களையெல்லாம் தம்முடையதென விரும்பித் திரிபவர்கள் துறவி என்று பேர்வைத்துக்கொண்டு நீட்டலையும் மழித்தலையுஞ் செய்து திரிதல் துறவன்று; மனத்துறவே மாண்புமிக்க துறவாகும்" என்றுரைத்து மனத்துறவின் தன்மையையும் அதனை அடையும் முறையினையும் அது நிலைபெறுதற்குரிய வழியினையும் நன்றாக உணர்தியருளினார். மேலும் ஆபிரகாமைப் பார்த்து, "பிள்ளாய்! நீ மருத்துவ வேட்கை மிகுதியும் உடையவனாக இருக்கிறாய். மூப்பினிகளையும் நீக்கவல்ல அரிய மருந்துகளைச் செய்யும் முறையினை நினக்குக் கூறுகிறேம். நீ அவைகளைச் செய்து உலகினரின் பிணியைத் தீர்ப்பாயாக," என்றுகூறி அரிய மருந்துகள் பலசெய்யவேண்டிய முறைகளைக் கூறினார். மருந்துப்பொருள்கள் ஒவ்வொன்றிற்கும் உரிய நட்புப் பகையினையும், ஒற்றுமை வேற்றுமைகளையும், மருத்துவத்திற்கு உதவும் பலவகையான மூலிகைகளையும் கூறினார். மருத்துவத்திற்கு வேண்டிய முறைகளையெல்லாம் கூறிய பின் வாழ்த்துரை வழங்கி ஆபிரகாமை அனுப்பிவைத்தார். ஆபிரகாம் நண்பர் இருந்த இடஞ்சென்று நிகழ்ந்ததைக் கூறி அவரோடு ஊரையடைந்தார். மேலும் மூன்றுமுறை கருணைனந்தர் இருக்குமிடஞ்சென்று அரியவேண்டியவைகளையெல்லாம் நன்கறிந்துகொண்டார்.

கருணைனந்தர் மருந்துகள்

பிறகு ஆபிரகாம் தம் இருப்பிடமாகிய திண்டுக்கல்லை யடைந்தார். கருணைனந்தர் திருவாய் மலர்ந்தருளிய முறைப்

படி மருந்துகளைச் செய்து தாம் உண்டு அவற்றின் பயன் களை நடைமுறையில் கண்டார். அவைகள் நல்ல பயன ளித்தலைக் கண்டு உளம்மிக மகிழ்ந்தார். அந்த மருந் துகளுக்குக், "கருணானந்தர் சஞ்சீவி மருந்துகள்" என்று பெயர் ரிட்டார். நோயாளிகள் பலருக்குங்கொடுத்து உதவி செய்தார். மருந்தை அருந்திய எல்லோரும் நோய்நீங்கி நலம்பெற்றனர். மருந்தைப் பற்றிப் புகழ்ந்து பலருக்குங் கூறினர். இதனால் கருணானந்தருடைய மருந்துகள் யாண் டும் பரவிச் சீர்த்தி பெற்றன. அதனால் இவர் அவ்விடத் தில் சிறந்த மருத்துவராகவும் விளங்கினர். மேலும் இசை, கோணூல், ஆருடம், ஒளி, ஒவியம் முதலிய பிறகலைகளினும் தேர்ச்சிபெற்று விளங்கினர்.

தாய்தந்தையார் காண்டல்

சாம்பூர் வடகரையில் இருந்த இவருடைய பெற்றோர் கள், தம்மகனர் தம் சமயத்தைத் திறந்து வேறு சமயத் தைத் தழுவி அச் சமயதலைவர்களிலே ஈடுபட்டுத் திகழ் கிறார் என்று உணர்ந்து வருந்தினர்கள். திண்டுக்கல்லை யடைந்து தம் அருமை மகனைக் கண்டார்கள். தம் கான் முளையின் அறிவுப் பெருக்கையும், மருத்துவத்திறமை யையும் இறைவழிபாட்டு நேர்மையையுங் கண்டு உள்ளங் களித்தார்கள். இவருடன் இரண்டொரு திங்கள் தங்கி யிருந்துவிட்டுப் பிறகு தம்மூர் சென்றார்கள்.

திருமணம்

27-12-1882-ல் இவருக்குத் திருமணம் நடைபெற் றது. நாஞ்சாங்குளம் என்னும் ஊரில் இருந்த வேதக் கண் புனிதர் என்ற பெயருடையவரின் அருமைத் திரும களும், அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, விருந்தோம்பல் முதலிய நற்குணங்கள் அமையப்பெற்றவளும், எட்டாம்

வகுப்புவரை படித்து ஆசிரியப் பயிற்சியை முடித்தவளும் ஞானவடிவு பொன்னம்மாள் என்ற பெயருடையவளு மாகிய நங்கையே ஆபிரகாம் பண்டிதரின் வாழ்க்கைத் துணையாக அமைந்தனள். மணம முடிந்தபின் இவர் தம் மனைவியோடு திண்டுக்கல்லை அடைந்தார்

தஞ்சையில் வேலை

திருமணமாகித் திண்டுக்கல்லை யடைந்து சின்னஞ் சிறுவகுப்பு ஆசிரியராக வேலை பார்த்து வந்தார். பொருண்முட்டுபாட்டினால் இவர் வேலை பார்த்த பள்ளிமூடப்பெற்றது. இவர் உள்ளங் கலங்கினர். ஆனால், மிகுவிரைவில் தஞ்சையில் இருந்த ஒரு பெண் பள்ளிக்குக் கணவன் மனைவி இருவராகிய ஆசிரியர்களாக அமர்த்தப் பெற்று மகிழ்வடைந்தனர். சில ஆண்டுகள் இவ்வேலையை மேற்கொண்டிருந்தார்.

மருத்துவத் தொழில்

1890-ஆம் ஆண்டில் தமது ஆசிரியத் தொழிலை விட்டார். தஞ்சை மிஷன்தெருவில் உள்ள ஒரு சிறு வீட்டை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு அதில் குடிபுகுந்தார். கருணைனந்தர் திருவாய் மலர்ந்தருளிய முறைப்படி மருந்துகளைச் செய்து எடுத்துக்கொண்டு பல ஊர்களுக்குஞ் சென்று நோயாளிகளுக்கு மருத்துவஞ்செய்து அவர்களைக் குணப்படுத்தினார். ஆங்காங்கிருந்தவர்களுடைய நட்பினையும் பெற்றார். அக் காலத்தில் இவருக்கு உதவி செய்தவர்கள திருப்பாதிரிப் புலியூர் திருக்கோவலூர் ஆதீனத்தலைவர் உயர்திரு சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய ஞானியார், நாகை. அருட்டிரு ஜகக்ஞான வொளிவு ஐயரவர்கள், ஊ. சு. கிருட்டிணசாமி ஐயர், சென்னை வழக்கறிஞர் சோசப் சத்தியநாதன், சேலம் பா. தானியேல் முதலிய பலராவர். இவர் பலமுறை குடும்பச்

செலவிற்குக் கூடப்போதிய வருவாய் இல்லாமல் மிகுந்த தொல்லைப்பட்டார். இவருக்கு மக்களும் பலர் தோன்றினமையின் குடும்பம் விரிவடைந்தது மூவாண்டுகள் வறுமைத் தொல்லை மூடுகிவாட்டியது.

நல்வாழ்வு

இன்பமும் துன்பமும் மாறிமாறி வருதலைப்போலச் செல்வமும் வறுமையும மாறிமாறி வருதலும் உண்டு. ஆபிரகாம் கடவுள் திருவருளையே உறுதியாய் நம்பித் தொழிலினைப் புரிந்து நின்றார். இறைவனுடைய அருள் நோக்கம இவர்மேல் வீழ்ந்தது. இவருடைய மருந்துகள் தமிழகம முழுவதும் பரவியதல்லாமல் வடநாடுகளிலும், பர்மா, மலேயா, சைகோன், கொழும்பு, மடகாஸ்கர் முதலிய பிறநாடுகளிலும் பரவின. இதனால் இவருக்குப் பொருள வருவாய் மிகுதியாயிறறு. 1893-ஆம் ஆண்டில் ஒரு நல்ல வீட்டைத் தமக்கு உரிமையாக வாங்கினர். இச சமயம் மைசூர, பூனை, பமபாய் முதலிய இடங்களில் கட்டிக்காய்ச்சல் என்னும் கொடிய நோய் தலைவிரித் தாடியது. அதனைப் போக்குதற்கு அப்பொழுது நன் மருந்து எந்நாட்டினும இல்லாதிருந்தது. இவர்தம்முடைய நுண்ணறிவால் ஓர் அரிய மருந்தைக் கண்டறிந்து அதை அந்நாடுகட்கு அனுப்பி நோயுற்றவர்களைக் குணப் படுத்தினர். இதனால் இவருடைய வருவாய் மிகுதிப் பட்டது, சீர்த்தியும் பரவியது. இதன்பிறகு தோட்டம், தரவு, நிலபுலம் முதலியவைகளையும் தமக்கு உரிமையாக வாங்கினர். தம் உறவினர் பலரையும் வரவழைத்து அவர் கட்கும் உதவிசெய்தார். இவருடைய முதன்மனைவி 15-12-1911-ல் மறைந்தபடியினால் 5-2-1912-ல் மறுமணம் செய்து கொண்டார்.

நூல்வெளியிடல்

இவர் மருத்துவத் தொழிலோடு அமைதியுற்றிராமல் பிற கலைகளையும் நன்றாகக் கற்றுணர்ந்தார். "கருணாமிருத சாகரத்தாட்டு" என்னும் இசைப்பாநூலை 1907-ஆம் ஆண்டில் அச்சிட்டு வெளியிட்டார். தமிழிசையைப் புதுப்பித்தற்கு அடிகோலியவர்களில் இவரே முதல்வராவார். பின்னர் 1917-ஆம் ஆண்டில் "கருணாமிர்தசாகரம்" என்னும் பெயருடைய அரியநூல் ஒன்றை வெளியிட்டார். பிறகு இதனுடைய இரண்டாம் பாகத்தையும் வெளியிட்டார்.

இசை மாநாடு

1912-ஆம் ஆண்டு மேத்திங்கள் 27-ஆம் நாளில் இந்நாட்டின் பலபாகங்களினுமிருந்து இசைப் புலவர், இசை யறிஞர், இசையன்பர், இசைப்புரவலர், இயற்றமிழ்ப் புலவர் ஆகிய பல அறிஞர்களையும் ஒன்றுசேர்த்து இசை மாநாடு ஒன்றினைத் தம்பொருட் செலவில் நடத்தினார். மேலும் பல இசைமாநாடுகளை நடத்தினார். 1916-ஆம் ஆண்டு மார்ச்சுத்திங்கள் 20-ஆம்நாள் பரோடாவில் நடைபெற்ற அகில இந்திய இசைமாநாட்டிற்கு அழைக்கப் பெற்று அங்குச்சென்று, இன்னிசைக் கலைக்குத் தாயகமாய்த் தொன்றுதொட்டு விளங்குவது தென்தமிழ்நாடே என்று வலியுறுத்திக் கூறினார்.

இறுதி

மருத்துவக்கலைக்கும் தமிழிசைக்கும் பெருந்தொண்டு செய்து சிறந்து விளங்கிய இவர் 1919-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் முப்பத்தொன்றும்நாள் தமது அறுபதாம் அகவையில் பூதவுடலை நீத்துப் புகழுடலை நண்ணினார்.

ரு. நல்லசாமிப் பிள்ளை

தோற்றமும் கல்வியும்

1864-ஆம் ஆண்டு நவம்பர் 24-ஆம்நாள் திரிசிரபுரத்திலே நல்லசாமிப் பிள்ளை பிறந்தார். தந்தையார் பெயர் மாணிக்கம் பிள்ளை; தாயார் பெயர் செல்லத்தம்மையார். மாணிக்கம் பிள்ளை சிறிய வருவாயில் அரசாங்க அலுவலில் அமர்ந்திருந்தார். நல்லசாமிப்பிள்ளை இளமைப் பருவத்தில் தமிழறிஞர் ஒருவரிடம் பொதுக் கல்வியையும், ஒதுவார் ஒருவரிடம் தமிழ்மறையையும், பாடசாலை ஒன்றில் ஆங்கிலத்தையும் பயின்றார். தமது பதினேந்தாவது அகவையில் மெட்டிரிக்குலேஷன் தேர்வில் முதல்வகுப்பில் தேறினர். பிறகு எப். ஏ. வகுப்பிலும் தேறினர்.

சென்னையில் கல்வி

நல்லசாமியின் கல்வியார்வத்தைக் கண்டு, அவருடைய தமையன்மார்களான சுப்பராயப் பிள்ளையும் மதுர நாயகம் பிள்ளையும் நல்லசாமியைச் சென்னைக்கு அனுப்பிக் கல்வி பயிலச் செய்தனர். நல்லசாமி சென்னையை அடைந்து இராசதானிக் கல்லூரியிற் சேர்ந்தார். தத்துவசாத்திரத்தைத் தமது பாடமாகத் தெரிந்தெடுத்துக் கொண்டு கல்விபயின்றார். 19-ஆம் அகவையில் பி. ஏ. பட்டம் பெற்றார். சட்டக்கல்வியையும் பயின்று பி. எல் பட்டத்தையும் பெற்றார். 1887-ஆம் ஆண்டில் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞரானார்.

முன்சீப்புவேலை

வழக்கறிஞர் தொழிலில் இவர் மிகச் சிறந்து விளங்கிய படியால் ஐந்தரை ஆண்டுக்குள் மாவட்ட முன்சீப்பாக 1893-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பெற்றார். வட ஆர்க்காடு

மாவட்டம் திருப்பத்தூரிலே வேலையை ஏற்றுக்கொண்ட இவர் அவ்வேலையோடு சமயப்பணிகட்கான வேலையையுஞ் செய்யத்தொடங்கினர். சிவஞானபோதத்தை ஆங்கிலத்திலே மொழிபெயர்த்து 1894-ஆம் ஆண்டில் வெளியிட்டார். 1897-ஆம் ஆண்டில திருவருட்பயனை என்னும நூல் வெளிவந்தது. இவருடைய ஆதரவில், "உண்மை விளக்கம," "சித்தாந்ததீபிகை" என்னும் பெயர்களுடன் இரண்டு திங்கள் வெளியீடுகளும வெளியிடப்பெற்றன. மேலும் இவர், சித்தூர், நந்தியால, சேலம், இராசமகேந்திரவரம், குண்டூர், திருப்பாதிரிப்புலியூர் ஆகிய இடங்கட்கு மாற்றப் பெற்று அவவவ்விடங்கட்குச் சென்று வேலை பார்த்த போதும் நூல்கள் பலவற்றை எழுதி வெளிப்படுத்தினர். மாவட்ட முன்சீப்பாக இவர் இருபது ஆண்டுகள் வேலை பார்த்தார். இவருடைய நீதிமன்றத்திலே அறநெறிதான் முதன்மையான நோக்கமாக இருந்தது அரசாங்க வழக்குகளாக இருந்தாலும் இவர் முறைமாறுமலே தீர்ப்புகள செய்தார். இவருடைய தீர்ப்புகள் மேல் நீதிமன்றத்திற்குப் போவது மிகவும் அருமை; அப்படிப்போனாலும் இவருடைய தீர்ப்புக்களே உறுதிசெய்யப்படும வழக்காளியையும் எதிர்வழக்காளியையும ஒற்றுமைப் படுத்துவதிலேயே இவர் தமமுடைய கருத்தைச் செலுத்துவார.

சமயப்பணி

நல்லசாமிப் பிள்ளை சமயப்பணியைப் பெரிதாக நாடியிருந்தபடியால், அரசியல் அலுவலை ஒருபொருளாக மதியாது நீத்துவிட்டுச் சமயப்பணியில் இறங்கினர். அவைகளில் சொற்பொழிவாற்றுதல், ஆங்கிலதாள்களுக்குச் சமயக்கட்டுரைகள் எழுதுதல் முதலியவைகளை மிகுதியாக மேற்கொண்டார். சமயத்துறையில் இவருக்கு நண்பர்க

ளாக அமைந்தவர்கள், மறைமலையடிகள், அட்டாவதானம் பூவை கலியாணசுந்தர முதலியார், காஞ்சிவாசி செந்திநாதையர், தூத்துக்குடி சிவகுருநாத பிள்ளை, பொ. முத்தைய பிள்ளை, திருப்பாதிரிப்புலியூர் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய அடிகள், காஞ்சி நாகலிங்க முதலியார், திரு. வி. கலியாணசுந்தர முதலியார், ச. சச்சிதானந்தம் பிள்ளை, கி. குப்புசசாமி முதலியார் முதலியோராவர். மறைமலையடிகள் இளமை முதற்கொண்டே நல்லசாமிப் பிள்ளையுடனேயே உண்டு உடுத்து உறைந்த நெருங்கிய நட்பினராவர். இருவரும் பல சிவபபதிகட்குச் சென்று இறைவழிபாடு செய்வது வழக்கம ஆங்கிலக்கட்டுரைகளேயன்றித் தமிழில் சமயககட்டுரைகள எழுதுவதிலும் இவர் சிறந்து விளங்கினர். செந்தமிழ், சித்தாநததீபிகை, சித்தாந்தம் முதலிய பத்திரிகைகளில் தமிழ்க் கட்டுரைகள் வெளியாயின.

சொற்பொழிவுகள்

இவா பல பேரவைகளில் தலைமைதாங்கிச் சொற்பொழிவுகள் செய்திருக்கிறார். மதுரைத் தமிழ்ச்சங்க ஆண்டு விழாவில் இருமுறை தலைமைதாங்கிச் சொற்பொழிவாற்றினர். சைவசித்தாந்த மகாசமாசத்தில் மூன்று ஆண்டுகள தலைமையேற்றார். பாளையநகோட்டை, சங்கரிதர்க்கம, திருச்சிராப்பளளி, தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ள சைவசபைகளிலும் தலைமைதாங்கிச் சொற்பொழிவுகள நிகழ்த்தினர். 1907-ஆம் ஆண்டில் கல்கத்தாவிலும், 1911-ஆம் ஆண்டில் அலகாபாத்திலும் நடந்த சர்வசமயப் பெருங்கூட்டங்களில் ஆகம அத்துவித சைவத்திற்கு ஆணையாளராகச் சென்று விரிவுரையாற்றினர். தமிழ்நாட்டில் சைவசபைகள் பல தோன்றுவதற்குக் காரணமாக இருந்தார்.

விவேகானந்தர்

சிகாகோ சென்று திரும்பிவந்த விவேகாநந்த அடிகளை ஒருமுறை சென்னையிற் கண்டு உரையாடினர். அப் பொழுது சைவசித்தாந்த மெய்ப்பொருளை அவரிடம தெளி வாக விளக்கிக்கூறினர். இவருடைய உரையைக் கேட்ட விவேகாநந்த அடிகள், "இவ்வரிய மெய்ப்பொருள் தென் னிந்தியாவில் இருக்கிற செய்தி தமக்குத் தெரியாது," என்றுகூறிச் சிதாந்த உண்மைகளைப் பெரிதும் பாராட் டிக் கூறினர். அன்னிபெசண்ட் அம்மையார் போன்ற அறிஞர்களுடனும தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டுச் சித் தாந்தக் கொள்கைகளைப் பரப்பினர்.

நூல் உரிமை

பிள்ளையவர்களின் நூற்பெருமையை உணர்ந்த தருமையாதீனதத்தார் நூலகளின் உரிமையைத் தாம் பெற்று அந்நூல்களை வெளியிட்டு வருகிறார்கள். முதற் கண் சிவஞானபோதம் சிவஞான சித்தியார் முதலியவை களை அசசிட்டு வெளிப்படுத்தியுள்ளார்கள். எஞ்சியவை களையும் நாளடைவில் வெளியிடுவார்கள்

குடும்பவாழ்க்கை

இவர் தமது இருபதாவது அகவையில் இலட்சுமி எண்ணும மாதைத் திருமணம் புரிந்து இல்லறவாழ்கையை மேற்கொண்டார். அவ்வம்மையார் தம் கணவன குறிப் பறிந்து தமது இல்லறவாழ்க்கையை எல்லாவகையினும் சிறப்புற நடத்தினர். இவர் வழக்கறிஞராக இருந்தபோதும் நீதிமன்றத்தலைவராகத் திகழ்ந்தபோதும் உறவினர்களையும் விருந்தினர்களையும் நன்குபேணி, "இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி, வேளாண்மை செய்தற்பொருட்டு" என்னும் தமிழ்மறையைப் பின்பற்றினர். எப்பொழுதும்

இவருடைய இல்லத்தில் விருந்தினர் பலர் இருந்து கொண்டே இருந்தனர். இவர் இல்லறத்தில் இல்லறத்தா ராக இருந்தபோதினும் அதிற் சிறிதும் பற்றுவைக்காமல் துறவியைப் போன்றே வாழ்க்கையை நடத்திக்கொண் டிருந்தார்.

இவருடைய பண்புநலம்

இவர் தாம் கற்றும்கேட்டும் இருந்த நுண்ணிய பொருள்களைத் திறமையாக யாவருக்கும விரித்துரைக்கும் சொல்லாற்றலை நன்முகப் பெற்றிருந்தார். மறந்துகூடச் சிவனை மறவார் எப்பொழுதும் தேவார திருவாசகப் பாடல்களைப் பாடிக்கொண்டே யிருப்பார். மெய்ம்மறந்து சிவபூசை செய்வார். வாழ்க்கையை ஆடம்பரமாக நடத் தாது எளியமுறையிலேயே நடத்தினார்.

மகனறிவு தந்தையறிவு

"மகனறிவு தந்தையறிவு" என்பர் பெரியோர். இவரு டைய அருமை மகனுகத்தோன்றிய இராமநாதன் என்ப வரும் தந்தையின் வழிநின்று தாமும சைவப்பணிகளை மேற்கொண்டார். அச்சகம் ஒன்றை ஏற்படுத்தித் தந்தை யாரின் நூல்களை அச்சிற்பதிப்பித்து வெளியிட்டார். ஆனல், அவர் மிகுவிரைவிலேயே இறைவன் திருவடிநீழலை எய்திவிட்டார்.

இறுதி

இறுதிக் காலத்தில் நல்லசாமிப் பிள்ளை மதுரையை அடைந்து மீண்டும் வழக்கறிஞர் தொழிலை மேற்கொண் டார். நோய்கள் சில இவரைப் பீடித்தன. 1920-ஆம் ஆண்டில் தமது ஐம்பத்தாறும் அகவையில் இறைவன் திருவடிநீழலை எய்தினர்.

மொழிபெயர்த்த நூல்கள்

1. உண்மைநெறி விளக்கம்
2. சிவஞான போதம்
3. சிவஞான சித்தியார்
4 திருவுந்தியார்
5. உண்மை விளக்கம்
6. விஞவெண்பா
7. கொடிகவி
8. திருவருட் பயன்
9. இருபா இருபஃது
10. சிவபக்த விலாசம்

என்பன இவருடைய நூலகள். இவைகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்ககபபட்டன.

கூ. சபாரத்தின முதலியார்

பிறப்பு

ஈழமண்டலததைச் சேர்ந்த யாழ்ப்பாணத்திலே கொக்குவில் என்னுஞ் சிற்றூரிலே வேளாளர் குலத்திலே 1858-ஆம் ஆண்டில் (காலயுக்தி) ஆண்டு சித்திரைத் திங்கள் மூன்றும் நாள் சபாரத்தின முதலியார் பிறந்தார். தந்தையார் பெயர் சபாபதிப்பிள்ளை. தாயார் பெயர் ஆச்சிமுத்து அம்மையார்.

கல்விப்பயிற்சி

இவர் உரிய காலத்திலே கல்விப் பயிற்சி செய்விக்கப் பெற்றார். அக்காலத்திலே புகழ்பெற்ற தமிழ் அறிஞராக விளங்கிய கொக்குவில் சுயம்புநாதர் என்பவரிடத்தில் முதன்முதலாகத் தமிழ்க்கல்வியைக் கற்கத்தொடங்கினர். நடுத்தரக் கல்லூரியில் ஆங்கிலக் கல்வியைக் கற்றார்.

ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமானிடமும் இவர் சில காலம் தமிழ்க்கல்வி கற்றார். அப்போது இவருடனிருந்து கற்ற வர்களுள் முதன்மையானவர் யாழ்ப்பாண சைவப் பிரகாச விதியாசாலையின் தலைவராக விளங்கிய த. கைலாச பிள்ளை அவர்களாவர். நாவலர் பெருந்தகையாரின் அருட் பார்வையாற்றல் இவருக்குச் சமயப்பற்று இளமையில் வேரூன்றியது; நாளடைவில் இவர் சமயததின் பால் கொண்ட பற்றின்காரணமாக அது வளர்ந்தது. நாவலரவர் களைப் போலவே இவரும தம்முடைய பதினென்பதாம் வயதமுதற்கொண்டே சமயத்தொண்டுகளில் ஈடுபட்டார்.

சமயத்தொண்டு

இவர் காலததில சார்ல்ஸ் பிராட்லாப்[1] என்னும் கிறிததவ ததத்துவஞானி ஒருவரிருந்தார். இவர் புகழ்பெற்ற பண்டிதர். எனினும ஊழ்வலியினால், "கண்டதே காட்சி; கொண்டதே கோலம்; எல்லாம் இயற்கை அமைப்பே," என்னும் 'நீரீச்சுரவா'தக் கொள்கையைத் தழுவி, அதைப் பரப்பும் நோக்கத்துடன் பல நூல்களெழுதி வெளி யிட்டார். இவர் கொளகை சில தமிழ் இதழ்கள் வாயிலா கவும் பரவத்தொடங்கியபோது, சைவசமயத்திற்கும், தமிழ் நாட்டிற்கும் இதனால் கேடுவிளைவதைக்கண்ட முதலியார் அதனைக் காலத்துக் கேற்றவாறு தருக்க முறையில் மறுத்துப் பல கடிதங்கள், யாழ்ப்பாணத்தில் அப்பொழுது வெளிவந்தகொண்டிருந்த உதயபானு என் னும் ஒரு தமிழிதழ் வாயிலாக வெளியிட்டனர். இதன் பயனாக 'நீரீச்சுரவாதம்' தமிழ் நாட்டிலிருந்து நீங்கிற்று. அவ்வமயம் இவர் எழுதிய மதிப்புரைகளே, ஈச்சுரநிச்சயம் என்னும் பெயர் தாங்கிய நூலாக 1896-ல் வெளி வந்தது.

1. Charles Bradlaugh.

அலுவல்

1878-ஆம் ஆண்டில் அரசாங்க அலுவலில் அமர்ந்தார். முதன்முதலில் எழுத்தாளராக வேலை பார்க்கத் தொடங்கியவர் தம்முடைய ஊக்கத்தினாலே உயர் பதவிக்கு வந்தார். முலலைத்தீவு, கொழும்பு, கண்டி முதலிய இடங்களில் அலுவல் பார்த்தார். "யாழ்ப் பாணக்கச்சேரி முதலியார்" என்னும் அலுவலைச் சில காலம் பார்த்தார். பிறகு பத்து ஆண்டுகள் யாழ்ப் பாணத்து உதவி பிசுக்கல் என்னும் வேலையைப் பார்த்தார்.

திருமணமும் மக்கட் பேறும்

1889-ஆம் ஆண்டில் கனகம்மாள் என்னும் பெண் மணியைத் திருமணஞ் செய்துகொண்டார். அப்பெண் மணியினிடம நவரத்தினம் என்னும் ஓராண்மகனும் பரஞானம் என்னும் பெண்மகளுந்தோன்றினர். முதல் மனைவி காலமாக, இரண்டாவது திருமணஞ் செய்துகொண் டார். அம்மனைவியினிடத்தில் ஒரு பெண்மகவுதோன்றி யது.

பட்டம் பெறுதல்

அரசாங்கத்தினர் இவரிடம் தாம் கொண்டிருந்த நன் மதிப்புக்கு அறிகுறியாக 1905-ஆம் ஆண்டில் இவருக்கு முதலியார் என்னுஞ் சிறப்புப் பெயரை வழங்கினர். பிறகு 1917-ஆம் ஆண்டில் சமாதான நீதிபதி என்னும் கௌரவ வேலையைக்கொடுத்தனர். இறுதியில் 1919-ஆம் ஆண்டில் "இராசவாசல் முதலியா" என்னும் சிறப்புப் பெயரையும் வழங்கினர்.

சிவப்பதி யாத்திரை

1922-ம் ஆண்டில் சிவவழிபாடு செய்யும் பொருட்டுப் பல சிவப்பதிகளுக்குச் சென்றார்.

இறுதி

காசிப்பயணம் முதலியவைகளை முடித்துக்கொண்டு திரும்பிய இவர் உறவினர் சாக்காட்டால் நேர்ந்த துன்பத்தால் நோயடைந்து 1922-ஆம் ஆண்டு நவம்பர் 15-ஆம் நாள் இவ்வுலக வாழ்வைத் துறந்தார்.

இவர் இயற்றிய நூல்கள்

அலுவலில் இருந்த காலத்திலேயே இவர் நூல்கள் எழுதும் வேலையிலும் ஆங்கிலப் பத்திரிகைகள் தமிழ்ப் பத்திரிகைகள் ஆகியவற்றில் கட்டுரை எழுதும் வேலையிலும ஈடுபட்டார.

1. சிவான்ம போதம்
2. ஈசுர நிசயம்
3 இந்துமதத்தின் முக்கியாம்சங்கள்
4. பிரபஞ்சவிசாரம்
5. திருஞானசம்பந்தர் வரலாறு (ஆங்கிலம்)
6. திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு
7. மறு பிறப்புண்மை
8 பண்டைத் தமிழர்களின் சமயக்கொள்கை
9 சைவோத்தரம்
10. சரவணபவமாலை
11. நல்லை நான்மணிமாலை
12. கொக்குவில் சிதம்பரவிநாயகர் இரட்டைமணி மாலை
13. கொக்குவில் சிவசுப்பிரமணியர் மும்மணிக்கோவை

என்பன இவரால் எழுதப்பெற்றவை.

———

எ. நாகை. தண்டபாணிப் பிள்ளை

தோற்றம்

"சோழவளநாடு சோறுடைத்து" என்று ஆன்றோர்களால் புகழ்ந்தோதப்பெற்ற சோழவளநாட்டிலே, நாகபட்டினத்திலே, 1891-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் இரண்டாம் நாள் தண்டபாணிப் பிள்ளை பிறந்தார். தண்டபாணிப் பிள்ளையின் தந்தையார் பெயர் சொக்கலிங்கம் பிள்ளை. தாயார் பெயர் சுந்தரத்தம்மையார்.

கல்வி

நாகையில் கிறித்தவ சமயத்தினரால் நடத்தப்பட்டு வந்த வெஸ்லியன் மிஷன் கல்லூரியிற் கல்வி பயின்றார். இளம்பருவத்தில் இருந்தே கல்வி கற்றலில் கருத்துடையவராக இருந்தமையின் பள்ளித் தேர்வுகளில் ஒழுங்காகத் தேறி மெட்ரிக்குலேஷன் வகுப்பை யடைந்தார். இந்நாளில் இவருடைய கல்வி நாட்டம் பல துறைகளில் சிதறியது. ஆங்கில ஆசிரியர்கள் எழுதிய புதுக் கதைகளைப் படிப்பதினும், தாமும் அவ்வாறு கதைகள் எழுதுவதினும், தமிழ் இலக்கியங்களைப் படித்து இன்புறுவதினும மருத்துச் செலுத்தினார். இதன்பயனாக மெட்ரிக்குலேஷன் தேர்வில் தேறுமாற் போனார். இவர் தவறியதைக கண்டு இவருடைய மாமனார் இவரைக் கடிந்துகொண்டார். அந்தணச் சிறுவன் ஒருவன் தண்டபாணியின் மாமனாரிடத்தில் சம்பள உதவி பெற்றுப் படித்துக்கொண்டிருந்தான். அவன் தேர்வில் தேறிவிட்டான். இதனைத் தண்டபாணியின் மாமனார் அவனைச சுட்டிக் காட்டினார். "நம்மிடம் உதவிபெற்றுப் படித்த ஒருவன் தேர்வில் வெற்றி பெறுவதும் நீ தவறுவதும் இழுக்கன்றோ?" என்று கூறி இடித்துரைத்தார். அப்போது தண்டபாணி ஆண்டு பதினாறு கூட நிரம்பப்பெறாத இளைஞராக இருந்தார். ஆயினும்

தன்மான உணர்ச்சி அவருக்கு மிகுதியாக இருந்தது. அதனால் மனம் வருந்தினார்.

அயல்நாடடைதல்

தண்டபாணி நாட்டைவிட்டே வெளியேறுவதென்று முடிவு செய்தார். இரங்கூனில் இருந்த தம் மைத்துனரைப் பார்க்க விரும்புவதாகக் கூறி விடைபெற்றுக்கொண்டு இரங்கூன் சென்றார். தண்டபாணிக்கு ஏற்ற தொழில் அங்கு அகப்படவில்லை. சின்னாள் அங்கிருந்துவிட்டுப் பிறகு பினாங்கிற்குச் சென்றார். அங்கு இவருடைய ஆங்கில அறிவை ஓர் ஐரோப்பிய பாடசாலைத் தலைவர் கண்டார். தம பள்ளியிலே ஓர் ஆசிரியராக அமர்த்திக் கொண்டார். பினாங்கில் ஆசிரியத் தொழிலை மேற்கொண்ட தண்டபாணி நீண்ட ஒரு விடுமுறைக் காலத்திலே நாகைக்குத் திரும்பினார்.

திருமணமும் சென்னை வாழ்வும்

தண்டபாணிக்கு 1911-ஆம் ஆண்டில் திருமணம் நடைபெற்றது. அதன்பிறகு வெளிநாட்டிற்குப் புறப்படவில்லை. தமது முயற்சியால் பொருள் தேடி வாழ்க்கையை நடத்த விரும்பினார். நாகையை விட்டுச் சென்னையை அடைந்தார், தமக்கு ஏற்ற தொழிலைத் தேடினார். குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ உரிமையாளர் சயராம் நாயுடு, ஆனந்த போதினி உரிமையாளர் நா. முனிசாமி முதலியார் ஆகியோர் அவ்வப்பொழுது இவருக்கு உதவி புரிந்தனர். அந் நாளில் இவர் புதுக் கதைகள் பலவற்றை எழுதி வருவாய்க்கு வழியேற்படுத்திக்கொண்டார்.

பவானந்தர் கழகம்

தண்டபாணி முன்னரே மறைமலையடிகளை அறிந்திருந்தார். ஆகவே மறைமலையடிகளை யடுத்து நூல்கள் பலவற்

றைப் பாடங் கேட்கலானார். இந் நிலையில் புலவர் பெரு மக்களின் நட்பும் தமிழ்நூற் பயிற்சியில் ஆர்வமும் இவருக் குண்டாயிற்று. மறைமலையடிகள்பால் சில நூல்களைக் கற்றவளவில்தானே நல்ல புலமையடையப் பெற்றார். அந் நாளில் சென்னை ஊர்காவல்துறைத் துணை ஆணையாளராக (டிபுடி கமிஷனர் ஆப் போலீஸ்) இருந்த சரவண பவானந்தம் பிள்ளையவர்கள் தம் பெயரால் கழகம் ஒன்று நிறுவித் தண்டமிழ் மொழியில் உள்ள பண்டைத் தமிழ் நூல்கள் பலவற்றை வெளிப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார். இத் தகைய சமயத்தில் சரவணபவானந்தர் தண்டபாணிப்பிள்ளை யவர்களைக் கண்டார். இவருடைய தமிழ்நூற் புலமையை யும் ஆங்கிலநூற் பயிற்சியையும் உணர்ந்தார். தமமிடமே வேலைக்கு அமர்த்திக்கொண்டார். அதுமுதல் பிள்ளையவர் கள் பவானந்தர் கழகத்தில் ஆசிரியராக இருந்துகொண்டு, யாப்பருங்கல விருத்தி, தொல்காப்பிய பொருளதிகாரம், இறையனார் அகப்பொருள், நன்னூல் உரை, திருவாசகம் திருக்கோவையார் முதலிய நூல்கள் வெளிவருதற்கு ஆவன செய்தார்.

கதைகள் எழுதுதல்

பவானந்தர் கழக வருவாய் பிள்ளையவர்களுடைய செலவுக்குப் போதியதாக இல்லை. ஆகவே வேறு முயற் சிகளாலும பொருள்தேட வேண்டியது இன்றியமையாத தாயிற்று. கற்பனையாகக் கதைகள் எழுதுவதினும் ஆங் கிலக் கதைகளைத் தமிழ் நாட்டிற்கு ஏற்ற வகையில் அமைப் பதினும் இவர் முன்னரே தேர்ந்திருந்தார். ஆகவே அத் திறமையையும் இவர் இப்பொழுது பயன்படுத்தினர்.

உரையாசிரியர்

இவர் பவானந்தர் கழகத்தில் வேலை பார்த்துக்கொண் டிருந்தபோது, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக

அமைச்சர் திருவரங்கனர், திருக்கருவை பதிற்றுப்பத் தந்தாதிக்கு உரை ஒன்று எழுதுமாறு கேட்டுக்கொண் டார். இவர் அவ்வாறே சிறந்த உரை ஒன்று எழுதிக் கொடுத்தார். அவ்வுரை திரு வி. கலியாணசுந்தர முதலி யார் முதலிய அறிஞர்களால் புகழ்ந்து போற்றப்பெற்றது.

பிறகு திருக்குறளுக்கு விளக்கவுரை ஒன்று எழுது மாறு திருவரங்கனர் கேட்டுக்கொண்டார். அதற்கு இணங்கி இவர் திருக்குறளுக்கு விளக்கவுரை எழுதத் தொடங்கினர். இவ்வுரை அறத்துப்பால் முழுவதற்கும் எழுதப்பட்டது.

இறுதி

பொருட்பாலுக்கு இவர் உரை வகுத்துக்கொண் டிருந்தபோது உடல்நோய், மனநோய், வறுமைநோய் முதலியன இவரைப் பற்றின. அவைகளிலிருந்து இவர் மீளாமலே தமது மூப்பத்தொன்றும் அகவையில் 1922-ஆம் ஆண்டு சூன் திங்கள் முதல் நாள் இறைவன் திருவடி நீழலை எய்தினர்.

இயற்றிய நூல்கள்

1. திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி உரை
2. திருக்குறள் அறத்துப்பால் விருத்தி உரை
3. சதாநந்தர்
4. ஏகம்பஞ்சதகம்
5. கலாசுந்தரி
6. மாயாவதி
7. கௌதமபுத்தர்

முதலியன இவர் இயற்றிய நூல்கள்.

பண்பு நலம்

"அறிவோர்க்கழகு கற்றுணர்ந்தடங்கல்" என்பது பெரியோர் மொழி. தண்டபாணிப் பிள்ளை இதற்கோர்

எடுத்துக்காட்டாக அமைந்து நின்றார். உளத் தூய்மையும் தங்கலங் கருதாத் தன்மையும் இவருக்குச் சிறப்பாக அமைந்து நின்றன. சாதி சமய வேறுபாடுகளை இவரிடம் காண்பது அரிது. பணக்காரர்களிடப் பண்பாளர்களையே இவர் பெரிதும் விரும்புவார். இவர் தமது வருவாயின் பெரும் பகுதியைப் புதுநூல்கள் வாங்குதற்குச் செலவு செய்தார். இவருடைய வறுமைக்கு இதுவும் ஒரு காரணம் ஆயிற்று.

அ. சுப்பிரமணிய ஐயர்

தோற்றம்

நாட்டு விடுதலைக்காக உழைத்த தமிழறிஞர்களில் வ. வே சுப்பிரமணிய ஐயரும் ஒருவர். சுப்பிரமணிய ஐயர் திருச்சி என வழங்கும திரிசிரபுரத்தை ஒட்டியுள்ள வரகநேரி என்னுஞ் சிறநாரிலே 1881-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் இரண்டாம் நாள் பிறந்தார். ஐயருடைய தந்தையார் பெயர் வேங்கடேச ஐயர். தாயார் பெயர் காமாட்சி அம்மையார். ஐயருக்கு இடப்பெற்ற பிள்ளைப்பெயர் வேங்கட சுப்பிரமணியன் என்பது.

கல்விப்பயிற்சி

ஐயருடைய தந்தையாராகிய வேங்கடேச ஐயர். ஆங்கிலம் கற்றவர். ஐரோப்பிய முறையில் பழக்க வழக்கங்களை மேற்கொண்டிருந்தவர். தமமுடைய மகனுக்கு முதலில் தாமே கல்விப் பயிற்சியைத தொடங்கித் தமிழ மொழியைக் கற்பித்தார். பிறகு கிறித்துவ மதப் பள்ளிக்கு அனுப்பி ஆங்கிலக்கல்வி கற்க ஏற்பாடு செய்தார். இலத்தீன் மொழியையும் அய்யர் ஆங்கில

மொழியோடு கற்றார். ஐயருக்குக் கல்வியில் தளராத ஊக்கமும் ஏக்கமும் இருந்தபடியால் மிக இளமபருவத்திலேயே, அஃதாவது 1893-ஆம் ஆண்டிலேயே மெட்ரிகுலேஷன்தேர்வில் மாகாணத்தில் ஐந்தாவதாகத் தேர்ச்சி பெற்றார் பிறகு கல்லூரியிற் சேர்ந்து படித்தார். 1899-ஆம் ஆண்டில் பி ஏ. கல்வி கற்றுத்தேறினார். பினனர் 1901, 1902-ஆண்டுகளில் சட்டக் கல்லூரியில் படித்து வழக்கறிஞரானார். முதன்முதலாகத் திருசிரபுரத்தில் வேலையும் பார்த்துப் பொருளீட்டத்தொடங்கினார். ஆங்கில நூல்களைக் கற்றதோடு ஐயர் மனநிறைவு கொள்ளாமல கம்பராமாயணம திருகுறள் முதலிய தமிழ் நூல்களையுங்கற்றுத் தமிழின்பத்தையும நுகர்ந்தார்

பிறகு ஐயர் இரங்கூன் சென்று அங்கு சில காலந் தங்கித்தொழிலில் புரிந்தார். ஐயருக்கு அதற்கு முன்னரே திருமணமாகிப் பெண் குழந்தை ஒன்றும் இருந்தது. இரங்கூனில் இருந்த ஐயர் பாரிஸ்டர் பட்டம பெற எண்ணினார். தம்முடைய மனைவியையும் மகளையும் உறவினர் சார்பில் இரங்கூனிலேயே விட்டுவிட்டுப புறப்பட்டு இலண்டன் நகருக்குச் சென்றார்.

இலண்டனில் வாழ்க்கை

இலண்டனில் இந்திய விடுதி ஒன்றில் ஐயர் தங்கினார். அங்கிருந்து கல்வி கற்றார். அப்பொழுது அங்கே விநாயக சவர்க்கார், டாக்டர் செளந்தரராசன், நிரஞ்சன பாவலர் முதலியோர் இருந்தனர். சவர்க்கார் வட நாட்டிலே நாசிக் என்னும் ஊரிலே தோன்றியவர்; மராட்டியர். ஆங்கிலத்திலும் மராட்டி மொழியிலும் அறிஞர். விறுவிறுப்பான சொற்பொழிவாளர். நாட்டுத்தொண்டையே

தமது கடமையாகக்கொண்டவர். இந்து சமயக்கொள் கைக்காகத் தமது உயிரையும் விடக்கூடியவர். இத்தகைய அவர் அங்கே பாரிஸ்டர் பட்டத்திற்காகப் படித்துக் கொண்டிருந்தார். ஐயர் சவர்க்காரோடு சேர்ந்தவுடன் சவர்க்காருடைய நாட்டுப் பற்று ஐயரையும் பற்றிக் கொண்டது. ஐயரும் பெரும் புரட்சி வீரராக மாறி விட்டார். இந்தியாவில் இருந்து இங்கிலாந்திற்குக் கல்வி கற்க வருபவர்கட்கு நாட்டுப பறறை உண்டாக்குவதே அவர்களுடைய முதன்மையான வேலையாக இருந்தது.

அங்கு கூடியிருந்த வீரர்கள் வெறும் வாய் வீச்சு வீரர்களாக இருக்கவில்லை. வலுக்கட்டாயமாகப போர் புரிந்து நாட்டைக் கைப்பற்றவேண்டும் என்பதே அவர் களுடைய கொள்கையாக இருந்தது. காந்தியடிகளாரின் அறப்போரில் கத்தியின்றி ரத்தமின்றிச் செய்யும் பொறுமைப் போரில் அவர்களுக்குச் சிறிதும் நம்பிக்கை யில்லை. ஆகவே அவாகள் துப்பாக்கி சுடுதல் முதலிய படைக்கலப் பயிற்சிகள செய்து விடுதலைப் போருக்குத் தங்களை ஒழுங்குபடுதிகொண்டிருந்தார்கள்.

நாட்டுப் பற்று முறுகுதல்

நாட்டுப்பற்று ஐயருக்கு நாளுளும் முறுகிக் கொண்டே இருந்தது. ஆங்கிலேயருடைய அடிமைப் பிடியில் இருநது பாரதநாட்டை விடுவித்தற்கு எத்தகைய போராட்டத்தையும் மேறகொள்ளலாம் என்பதே ஐயர், சவர்க்கார் முதலியோருடைய உறுதியான முடிவாக இருந் தது. அந்நாளில் அங்கு வந்த பாரதத்தாயின் அருந்தவ மக்களான காந்தியடிகள், கோபாலகிருட்டின கோகலே, இராமச்சந்திரதத்தர், விபின சந்திரபாலர், லாலாஜி, முதலியோரைப் பார்த்து அவர்கட்கும் தங்களுடைய

கொள்கையைப் போதிக்க முயன்றனர் ஐயரும் சவர்க்காரும். ஆனால் அவர்களோ இவர்களுடைய துடிதுடிப்புக்கு இடங்கொடுக்காமல் மறுமொழி கூறியனுப்பினர்.

விடுதலை வீரர்கள் சிதறுதல்

சவர்க்கார், ஐயர் ஆகியோருடைய கூட்டத்தில் எல்லோருக்குமே வலுக்கட்டாயத்தில் மிகுந்த நமபிக்கை யாகையால் இவர்களை எப்பொழுதும் அரசினர் கடுமை யாகக் கண்காணித்துக்கொண்டிருந்தனர். நாளடைவில் கண்காணிப்பும் தொல்லையும் மிகுதிப்படவே விடுதலை வீரர்கள் மூலைக்கொருவராகப் பிரியலாயினர். இங்கிலையில இவர்களின் கூட்டத்தைச் சேர்ந்த மதனலால் டிங்கரா என்பவன் இதுவரையில் வாய்ப்பேச்சால் எல்லாம் செய்து கொண்டிருந்தோம்; இனிமேல் செய்கையில் இறங்க வேண்டும் என்று முடிவு செய்தான். இந்தியச் சிற்றரசு நாடுகளில் வேலை பார்த்தவனும் பிறகு இலண்டனை அடைந்து இந்திய அமைச்சருக்கு இந்திய அரசியல் செயலாளராக இருப்பவனும் ஆகிய சர். கன்ஸன் வைலி என்பவனைச் சுட்டுக்கொலை புரிந்து விட்டான். இந்தியா விலும இரண்டொரு கொலைகள விழுந்தன. விடுதலை வீரர்களைப் பிடித்துத தண்டிப்பதற்கு அரசினர் பலமாக வேலை செய்தனர். விநாயக சவர்க்கார் பல தொல்லைகளை யடைந்தார். ஐயர் பாரிஸ் முதலிய இடங்கட்குத் தப்பிச் சென்று பிறகு புதுச்சேரி வந்து சேர்ந்தார்.

புதுவையில் வாழ்வு

அப்போது புதுச்சேரியில் நாட்டு விடுதலையில் நோக்கங்கொண்டுழைத்த பெரியார்களாகிய அரவிந்தர், சுப்பிரமணிய பாரதியார் முதலியோர் தங்கியிருந்தனர். ஐயர் அங்கு சிலகாலம் தங்கியிருந்தார். அப்போது நூல்

கள் எழுதுதல் கதைகள் எழுதுதல் முதலிய வேலைகளைச் செய்தார். திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அங்கு வந்தவுடன் ஐயர் தம் மனைவியையும் அங்கு அழைத்துக்கொண்டார். அந்நாளில் புதுச்சேரியிலும் ஆங்கில அரசினரின் ஒற்றர்கள் தொல்லை மிகுதியாக இருந்தது. அத்தொல்லைகளையெல்லாம் ஐயர் ஒரு பொருளாக மதிக்கவில்லை. வழக்கமபோலவே தமது காரியங்களைப் பார்த்துகொண்டிருந்தார்.

பழியோரிடம் பாவியோரிடம்

அந்நாளில் வாஞ்சி என்பவன், ஆஷ் என்னும் பெயருடைய நெல்லைமாவட்ட முதல்வனை மணியாச்சியில் புகைவண்டியில் சுட்டுக்கொன்று விட்டான். ஆஷ் வெளைக்காரன் அவனுடையகொலைக்கு ஐயரே மூலகாரணம் என்று இந்திய அரசாங்கத்தினர் எண்ணினர். ஐயரைப் புதுச்சேரியிலிருந்து பிடித்து வந்து தண்டித்துவிட வேண்டும் என்று மிக முயன்றனர். ஆனால், அம்முயற்சி பலிக்கவில்லை.

வெளியேறுதல்

1914-ஆம் ஆண்டில் ஐரோப்பியப் போர் தொடங்கியது. அது 1919-ஆம் ஆண்டில் முடிந்தது. உடன் படிக்கை ஒன்று நடந்தது. 1920-ல் இந்திய அரசியல் குற்றவாளிகள் மன்னிப்புப்பெற்றனர். புதுவையில் இருந்த விடுதலை வீரர்கள் வெளிப்படத்தொடங்கினர். சுப்பிரமணிய பாரதியார் சென்னையை அடைந்தார். ஐயர் காசி முதலிய வடநாடுகளுக்குப் பயணம் புறப்பட்டார். நாசிக், பஞ்சவடி, சபர்மதி, பூனை, வடமதுரை, அயோத்தி, அரித்துவாரம், பிரயாகை கயா முதலிய இடங்களுக்குச்

சென்னை. பலவிடங்களிலும் இருந்த குருகுலங்களைப் பார்வையிட்டார்.

தேசபக்தன் ஆசிரியர்

1917-ஆம் ஆண்டில் தேசபக்தன் என்னும் பத்திரிகை தொடங்கப்பெற்றது. திரு. வி கலியாணசுந்தர முதலியார் அதனுடைய ஆசிரியராக அமர்ந்து அருந்தொண்டாற்றினர். அதனால் அப்பத்திரிகை சிறந்து விளங்கியது. 1920-ஆம் ஆண்டில் திரு. வி. க. அப்பத்திரிகையின் ஆசிரியர் வேலையைவிட்டு விலகினர். அப்பொழுது ஐயர் அந்தப் பத்திரிகையின் ஆசிரியத்தொழிலை மேற்கொண்டு சிலகாலம் பார்த்து வந்தார்.

குருகுலம்

வடநாட்டுப் பயணத்தின்போது பலவிடங்களிலும் குருகுலங்களைப் பார்த்த ஐயர் தமிழ் நாட்டிலும் ஒரு குருகுலத்தை ஏற்படுத்த எண்ணினர். அதன்பொருட்டு இடம பொருள் முதலியவைகளை நாடியிருந்தார். தாமிரவருணியாற்றிற்குத் தெற்கே மூன்றுகல் தொலைவில் சேரமாதேவி என்னும் ஊர் அமைந்துள்ளது. அவ்வூரின் எல்லையில் முப்பது ஏக்கர் பரப்புள்ள இடம் ஒன்றை அன்பர்களின் உதவியைக்கொண்டு வாங்கி அந்த இடத்திலே குருகுலத்தை அமைத்தார். குருகுலம் நல்ல முறையில் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அக்குருகுலத்திற்கு மிகுதியான பொருளும் அமைதற்கு ஏற்பாடுகள் செய்யப்பெற்றன. சிறிய செயல் ஒன்றினால் குருகுல வளர்ச்சி தடைபட்டது. பல அன்பர்கள் குருகுலத்திற்குப் பகைவர்களாகித் தொல்லை கொடுக்கலாயினர். போர் பத்திரிகைப் போராக எழுந்தபடியால் செய்தி நாடு முழுவதும் பரவிவிட்டது. குருகுலத்தில் பணிபுரிந்

திருந்த சுத்தானந்த பாரதியார் முதலியோர் வேற்றிடஞ் சென்றுவிட்டனர். இங்கிலீயில் ஐயர் குருகுலத்தை விடாப்பிடியாக நடத்திக்கொண்டிருந்தார்.

இறுதி

ஐயருடைய மூதற்பெண் இறந்தபோனாள். பிறகு சுபத்திரா என்னும் பெண்ணும் கிருட்டிணமூர்த்தி என்னும் ஆணுந் தோன்றினர். 1925-ஆம் ஆண்டில் குருகுல மாணவர்கள் பாபநாசம் நீர்வீழ்ச்சியைப் பார்க்கச்சென்றனர். ஐயருடைய மகள் சுபத்திரா அப்போது மங்கைப் பருவத்தினளாக இருந்தாள். அவளும் பாபநாச நீர்வீழ்ச்சியைப் பார்க்கவேண்டும் என்று வற்புறுத்தியதால் ஐயர் அவளை நீர்வீழ்ச்சிக்கு அழைத்துக்கொண்டு சென்றார்.

மாணவர்கள் இயற்கையழகைக் கண்டுகளித்தனர். அருவியில் ஓராடி இன்புற்றனர். மாணவர்கள் அருவியின் இருபக்கங்களுக்கும் ஒருவர் கையை ஒருவர் பற்றியவாறு நடந்து சென்றனர். வழுக்கும் பாறைகளில் அவர்கள் அங்கும் இங்கும் போய்வந்து கொண்டிருந்தனர் சுபத்திரா தானும் அருவியைக் கடந்துசெல்லவேண்டும் என்றாள். அஃது ஆபத்தாக முடியுமென்று கூறிச் செல்லப்படாது என்று கண்டித்தார் ஐயர். "ஊழிற்பெருவலி யாவுள?" என்னும் பொய்யில் புலவர் பொன்மொழி வீணாகுமா? போய்த்தான் தீரவேண்டும் என்றாள் மகள். ஐயர் மகளுடைய கையைப்பிடித்து அழைத்துக்கொண்டு சென்றார். இடையே ஒரு பாறையில் நிறுத்தினர். கால் வழுக்கிற்று. அருவியின் திறந்தவாயில் அம்மங்கை, "அப்பா!" என்னும் அலறலுடன் வீழ்ந்தாள். ஐயர், "அம்மா!" என்று அலறிக்கொண்டு அவளைத் தாவிப்பிடிக்க முயன்றார். மறுகணமே அவரும் அருவியில் அடித்துச்செல்லப்பட்டார். இவ்வாறு

தந்தையும் மகனும் அவ்வருவிக்கு இரையாயினர். 1881-ஆம் ஆண்டில் தோன்றிய ஐயர் 1925-ஆம் ஆண்டில் தமது நாற்பத்து நான்காம் அகவையில் இவ்வாறு இயற்கை எய்தினர்.

ஐயர் எழுதிய நூல்கள்.

1. மங்கையர்க்கரசியின் காதல்
2. கமலவிசயம்
3. காங்கேயன்
4. குளத்தங்கரை அரசமரம்
5. அழேன்முக்கேன்
6. சந்திரகுப்த சக்ரவர்த்தி
7. புக்கா வாஷிங்டன்
8. தன்னம்பிகை
9. எதிரொலியாள்
10. இராமாயண ஆராய்சசி (ஆங்கிலம்)
11. திருக்குறள் (அரியபெரிய ஆங்கில மொழிபெயர்ப்பு)

கம்பராமாயணம் பாலகாண்டத்தைச் சொற்பிரிவு செய்து ஐயர் சீரிய முறையில் பதிப்பித்து வெளியிட்டார். குருகுலத்தில் இருந்து பாலபாரதி என்னும் பத்திரிகையையும் வெளிப்படுத்தினர்.

கூ. கிருட்டிணமாச்சாரியர்

பிறப்பு

தொண்டை நாட்டிற் சிறந்த சிவப்பதியாக விளங்குவதும், "பாவிகள் காணக் கழுகுநூற் பறம்பு" என்ற பெரியோர்களாற் புகழ்ந்தோதப்பெற்றதுமாகிய திருக்கழுக்குன்றத்திற்கு மூன்றுகல் தொலைவில் உள்ள ஓரகடம் என்னும் சிற்றூரில் 1863-ஆம் ஆண்டிற்பிறந்தார் சே. கிருட்டிணமாச்சாரியார். இவருடைய தந்தையார் பெயர் இராம ஐயங்கார்.

கல்வி

திருட்டிணமாச்சாரியார் இளமைப்பருவத்தில் முதலாவதாகத் தம் தந்தையாரிடத்தில் கல்விகற்கத் தொடங்கினார். பிறகு திருக்கழுக்குன்றத்தில் பள்ளி ஆசிரியராக இருந்த மாடபூசி கோவிந்தாச்சாரியர் என்பவரிடம் சில ஆண்டுகள் தமிழ்மொழி இலகக்ண இலக்கியங்களைக் கற்றார். அதே சமயத்தில் தந்தையாரிடம் தமது வைணவ சமயத்துகுரிய நூல்களையும் கற்றுணர்ந்தார். பிறகு சென்னையை அடைந்து அரசாங்கக் கல்லூரியில் தமிழ்ப் புலவராக இருந்த புன்னைமாடபூசி சீனிவாசாசாரியார் என்பவரிடம் மேலும் பல இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தார்.

உரைகள் வெளியிடல்

இவர் கற்று நூலாராய்ச்சிகள் செய்துகொண்டிருக்கும் போது வை. மு. சடகோபராமாநுசாசாரியருடைய நட்பு இவருக்கு ஏற்பட்டது. இருவரும் கலந்து எண்ணினர். 1890-ஆம் ஆண்டுமுதல் சென்னைப் பல்கலைக்கழகத தேர்வுகளுக்குரிய பாடப்புத்தகங்களுக்கு உரையெழுதி வெளியிடத தொடங்கினர். மாணவர்கள அவ்வுரையை விரும்பி வாங்கிக் கற்றுப் பெரும்பயனடைந்தனர். அதுமுதல் பாடப்புத்தகங்கட்கு உரையெழுதி வெளியிடும் வேலையை முப்பது ஆண்டுகளுக்குமேல் நீடித்து நடத்திப் புகழ் பெற்றனர்.

ஆசிரியத்தொழில்

1893-ஆம் ஆண்டில் சென்னை இராயப்பேட்டை உவெஸ்லி கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராக வேலை பார்க்கத் தொடங்கி அவ்வேலையை 1916-ஆம் ஆண்டுவரை சீர்த்தியுடன் பார்த்துவந்தார். 1910-ஆம் ஆண்டில்

வை. மு. சடகோபராமானுசாசாரியர் காலஞ்சென்றமையின் அவருடைய உடன்பிறந்தார் வை. மு. கோபால கிருட்டிணமாச்சாரியாரைத துணைகொண்டு 1923-ஆம் ஆண்டுவரை உரையெழுதுந்துறையில் வேலை செய்தார்.

நன்னூற்காண்டிகையுரை

1896-ஆம் ஆண்டில் இவரும் வை. மு. சடகோப ராமானுசாசாரியருமாகச் சேர்ந்து நன்னூலுக்குப் புதிய காண்டிகை உரையொன்று மாணவர்களுக்கு நன்கு விளங்கத்தக்கவாறு எளிய முறையில் எழுதி வெளியிட் டனர். அவ்வுரை அரசியலாரால் ஒப்புக்கொள்ளப்பட்டுக் கல்விச் சாலைகளினும் பாடப்புத்தகமாக ஏற்படுத்தப் பட்டது. அவ்வுரை சிறந்து பதினேழாம பதிப்பு வரை வந்திருக்கின்றது.

வேறு நூல்கள் வெளியிடுதல்

இவர் சமய நூல்களேயும நன்கு ஆராய்ந்து திருத்த மான பதிப்புக்களாக வெளியிட்டார். மேலும் அட்டப் பிரபந்தம், திருக்குறள், நாலடியார், கம்பராமாயணம் வில்லிபாரதம் ஆகிய நூல்கட்கும் சிறந்த உரையெழுதி வெளிப்படுத்தினர். இவருடைய உரை எல்லோருடைய பாராட்டுதலேயும் பெற்றுச் சிறந்து விளங்குகிறது.

இறுதி

கல்வியறிவினாலாகிய பயன் பிறர்க்கு உதவி செய்த லென்னும் உண்மையினை நன்குணர்ந்து, அதற்குத்தக்க வாறு அரிய தமிழ்த்தொண்டு செய்திருந்த இவர், தம் மூடைய அறுபத்துமூன்றாம அகவையில் 1926-ஆம ஆண்டு சித்திரைத் திங்களில் வைகுண்ட பதவிபெற்றார்.

கo. குமாரசாமிப் பிள்ளை

தோற்றம்

திருக்கோவலூர்க்கு அண்மையில் உள்ள மணம் பூண்டியில், பார்க்கவ குலத்தில் தெய்விகன்மரபில் மெய்ப் பொருள நாயனார் வழியில் ம. ரா. குமாரசாமியார் தோன் றினர். தந்தையார் பெயர் இராமசாமிப் பிள்ளை. இராமசாமிப் பிள்ளை திருக்கோவலூரில் புகழ்பெற்ற வழக்கறிஞர்.

கல்வி

குமாரசாமியார் இளமையில் ஆங்கிலப்பளளியில் கல்வி பயின்றார். குமாரசாமியாரை நன்னெறியில் திருப் பியவர் இராமலிங்க அடிகளாரின் அடித்தொண்டராக விளங்கிய கந்தசாமிப் பிள்ளை என்னும் பெரியார். முதலில் குமாரசாமியார் தாமே தமிழ் நூல்களைக் கற்று ஆராயத் தொடங்கினர். திருப்பாதிரிப்புலியூரில் திருக்கோவலூர் ஆதீனத்தில் எழுந்தருளியிருந்த ஞானியாரடிகள் போற்றினர் என்பதை உணர்ந்தார். அவரை ஆசிரியராகக்கொண்டு தமிழ் நூல்களை நன்கு கற்றார். ஞானியாரடிகளிடம் கல்வி கற்பவர்கள் சீர்த்தியுடன் சிறந்து திகழ்தல் இயல்பு. அப்பேறு குமாரசாமியார்க்குக் கிட்டியது. குமாரசாமியார் நல்ல அறிவாளியானர்.

தொண்டு

குமாரசாமியார் தண்டமிழ்த்தொண்டு செய்தலைத் தமது தலையாய கடமையாகக்கொண்டார். இளமையிலேயே இவருக்குத்தொண்டு வேட்கை உண்டாகிவிட்டது. மணம் பூண்டியில் தொண்டாற்றத்தொடங்கினர். " மணம்பூண்டி பாலபக்த சனசபை" "பிரம்மஞான சங்கம்" முதலிய சங்கங்கள் குமாரசாமியாரால் ஏற்படுத்தப்பட்டன. பால

பக்த சனசபை இறைவழிபாடு கடவுட்பக்தி முதலிய கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டு விளங்கியது. பிரம்மஞான சங்கம் மெய்யறிவுத்துறையில் வேலை செய்தது இவைகளை யன்றிப் பார்க்கவ குல முன்னேற்றத்தைக் கருதிப், "பார்க்கவ குல சங்கம்" என்னும் சங்கமும் குமாரசாமியாரால் அமைக்கபபெற்றது. இவ்வாறு தமது ஊரில் சங்கங்கள் அமைத்துத் தொண்டு செய்ததோடு குமாரசாமியார் அமைந்துவிடவில்லை குமாரசாமியாரின் சொற்பொழிவைப் பெறுத சங்கங்களோ கழகங்களோ அவைகளோ தமிழ் நாட்டில் இல்லை.

சொற்பொழிவு

குமாரசாமியாருடைய சொற்பொழிவு மிகவும் வியக்கத்தக்கது. இவருடைய சொற்பொழிவு எதுகைமோனை நயங்களும் நகைச்சுவையும சொல்லடுக்குகளும அமையப் பெற்றுச் சிறந்து விளங்கும கடன்மடை திறந்தாற் போல் தங்குதடையின்றிப் பேசுவார். எல்லோரும் சொற்பொழிவாளரையே பாரத்துக்கொண்டிருப்பார்கள். கால் மணி அரைமணியோடு தமது சொற்பொழிவை நிறுத்தமாட்டார். நீண்டநேரம், அஃதாவது இரண்டு மூன்று மணிநேரம் பேசுவார். இரண்டு மூன்றுமணி நேரமும் அவருக்கு இரண்டு மூன்று நிமிடங்களாகத் தெரியும். சொற்பொழிவைக் கேட்டுக்கொண்டிருப்பவர்களுக்கும் நேரங்கழிவதுதெரியாது. சொற்பொழிவு நடந்துகொண்டிருக்கையில் பத்திரிகைபடித்தல், உரையாடல், எழுந்து வெளியேபோதல் அல்லது கூட்டத்தைவிட்டு அடியோடு சென்று விடுதல் இன்னேரன்ன செயல்கள் இவருடைய சொற்பொழிவு நடந்துகொண்டிருக்கும் பொழுது நிகழமாட்டா. கூட்டம் கலைந்துவிடா திருக்கவேண்டி இவரு

டைய சொற்பொழிவை இறுதியில்தான் சங்கத்தினர்கள் குறிப்பிட்டிருப்பார்கள்.

பண்பு நலம்

குமாரசாமியார் குணநலம் உடையவர். அவருடைய இயற்கைத் தன்மை குழந்தைகளின் இயற்கைத் தன்மையைப்போல விளங்கும். அவர் எப்பொழுதும் மலர்ந்த முகத்துடன் இருப்பார். கடுகடுத்த முகத்துடன் இருத்தல் கடுஞ்சொற் கூறுதல் முதலியவைகளை இவரிடம் காண்பது அருமை. இவர் எல்லோரிடமும எளிதாகப் பழகும் இனியசீர்மை அமையப் பெற்றவர். இவரோடு ஒருமுறை பழகி உரையாடியவர் மேன்மேலும் பழகி உரையாடதலை விரும்புவா. இவருடைய பண்புநலம் ஞானியாரடிகட்கு மிகவும் பிடித்திருந்தது. பல சமயங்களில் ஞானியாரடிகளுடன் சென்று அவர்கட்கு ஆவனபுரிந்தார். குமாரசாமியாருடைய வாழ்நாள்கள் யாவும் சொற்பொழிவிலேயே கழிந்தன இவருடைய செவியுணவை மாந்துதற்கு மக்கள் கொண்டிருந்த பேரவா வியக்கத்தக்கது.

பொது நோக்கு

கண்மணி நீறு முதலியவைகளைக் குமாரசாமியார் அணிந்து சைவப்பழம்போல் கண்ணுக்குக் காட்சியளிப்பினும், அவருடைய கொள்கை பல சமயத்தினர்க்கும் ஏற்பப் பொதுநோக்குடையதாக விளங்கும். சாதிவேறுபாடு சமயவேறுபாடு முதலியவைகளை இவர் எந்நாளும் பின்பற்றியதில்லை. மற்றவர்களைப்போல் தீண்டத்தகாதவர்களை வெறுத்தொதுக்கியதில்லை. காந்தியடிகளுடைய கொள்கையிலும் இவருக்குச் சிறந்த பற்று அமைந்திருந்தது.

இறுதி

இவர் உடலை ஒருபொருட்படுத்தாமல், அழைக்கு மிடங்கள் எல்லாவற்றிற்கும் தட்டாமற் சென்று பெருஞ்

சொற்பொழிவு செய்தலையே தமது கடமையாகக்கொண் டிருந்தார். காற்பதாவது அகவை முதற்கொண்டே குமார சாமியாரை நோய் பற்றிக்கொண்டது. நோயினல் வருந்தி யிருந்த காலத்திலும் இவர் தமது சொற்பொழிவைக் குறைத்துக்கொண்டாரல்லர். கற்றவர் சுவையினை முற்ற வும் உணர்ந்த காலன் 1929-ஆம ஆண்டு ஏப்ரல் திங்களில் நாற்பதெட்டாம அகவையில இவரை, உண்டு மகிழ்ந் தனன். இவருடைய பிரிவு அறிஞர்கள் அனைவருக்கும் மிகுந்த கலகததையளிததது.

ஙக. சரவணபவானந்தம் பிள்ளை

பிறப்பு

சென்னைமாநகரிலே வேளாண்குடியிலே சரவணபவா னந்தம் பிள்ளை பிறந்தார். தநதையார் பெயர முத்துச் சாமிப் பிள்ளை, தாயார பெயர் சந்திரமதி.

கல்வியும் அலுவலும்

கற்கவேண்டிய கல்வியை நன்முகக் கற்று விளங்கிய இவர், இங்கிலாந்திற்குச் சென்று பாரிஸ்டர் பட்டப்படிப் புப் படிக்க எண்ணினர். ஒழுக்கமும் பழையபழக்க வழக் கமுமே உயிரென மதித்த இவருடைய தாயார் இங்கிலாந் திற்குச் சென்றல் குலச்சிறப்புக் கெடும் என்று நினைத்து மேல்நாடு செல்லக்கூடாதெனத் தடுத்தார் தாய்சொல் தட்டாதசரவணபவானந்தர் மேனுடுசெல்லும் எண்ணத்தை அடியோடுவிட்டொழித்தார். நகரக் காவல்படைத்தலைவர (போலீஸ் கமிஷனர்) நகரக்காவல் படையில் விசாரணைச் செயலாளராக ஏற்படுத்தினர். பவானந்தர் அந்தவேலை யினைத் திறமையாகப் பார்த்துப் புகழ்பெற்றார். கொலை,

கொள்ளை, பொய்க் கையெழுத்து, மோசம் முதலிய சிக்கலான வழக்குகளைக் கண்டுபிடித்துத் தம்முடைய நுண்ணறிவால் உண்மையை ஆராய்ந்து அறிந்து வெளிப்படுத்தினர். இதனால் இவருடைய மேலதிகாரிகளும் நீதிமன்றத் தலைவர்களும் இவரைப்பாராட்டினர்கள்.

சட்ட அறிவு

இவர் சட்டநூல்களைக் கற்றுத் தேர்வு எழுதித் தேறுதவராக இருந்தும் சட்டநூல்களைத் தாமே கற்றுணர்ந்து, சிரிய சட்டநூற் பேரறிஞராகச் சிறந்து விளங்கினர். எப். எல். பி எல் சட்டப்பரீட்சைகளுக்குரிய மூப்பதுநூல்களை ஆராய்ந்தெழுதிப பதிப்பித்தார்.

1904-ஆம் ஆண்டு முதல், 1912-ஆம் ஆண்டுவரையில் சென்னை நகரக் குறறச்செய்தி விசாரணை வகுப்புத் தலைவராக அமர்ந்து அரசாங்கத்திற்கு அரியபணி புரிந்தார்.

மெய் காப்பாளர்

வேல்ஸ இளவரசர் 1906-ஆம் ஆண்டு சனவரித திங்களில் சென்னைக்குவந்தபோது, அவருக்கு மெய்காப்பாளராக இருக்கும் பொறுப்பை இவா ஏற்றுத திறமையாகச் செயலாற்றினர். இவரது செயலில் மனநிறைவுகொண்ட இளவரசர் விருதுப்பதக்கம் ஒன்றைத தம்முடைய கையினாலேயே இவருக் கணிந்தார. இவா நகரக்காவல் படையில் மூப்பதைந்தாண்டுகள் வரையில் பணிபுரிந்ததை அரசாங்கத்தினரும் பாராட்டினர்கள்.

பவானந்தர் கழகம்

நகரக் காவற்படை அலுவலிற் சேர்ந்து வேலைபார்த்த இவர் தமது காலமெல்லாவற்றையும் அவ்வலுவலிலேயே செலவிட்டுவிடவில்லை. உலகில் தமது புகழை நிலைநாட்டிச் செல்வதற்கான அரும்பெரும் பணிகளினும் கருத்துச்

செலுத்தினர். அச்சிடப்பெறுமலிருந்த இலக்கண இலக்கிய நூல்களை அச்சிற்பதிப்பித்து வெளியிட எண்ணினர். தமது பெயரால் "பவானந்தர் கழகம்" என்னும் கழகம ஒன்றை ஏற்படுத்தினர். தகுந்த நூல்களைத் தேடித தொகுத்தார். அறிவுசால் புலவர்களைக் கொண்டு ஆராய்ந்து பதிப்பிதது வெளியிட்டார். இதன் பொருட்டு இவர ஓலைச் சுவடிகளையும் அச்சான பழைய புததகப் பிரதிகளையும முப்பதாண்டுக ளாகத் தொகுததார். தமிழ் மொழியினிடத்தும தமிழ ரிடத்தும் இவருக்கிருந்த அன்புப் பெருக்கை அளவிட் டுரைக்க முடியாது.

கலைத்தொண்டு

தமிழ் இலக்கணங்களில் பழமை வாய்ந்தனவும் சிறந தனவுமான தொல்காப்பியப் பொருளதிகாரம், யாப்பருங கல விருத்தியுரை, இறையனர் அகப்பொருள் உரை, பேரகத்தியத்திரட்டு, இராமாநுசகவிராயர், சங்கர நமச்சி வாயப் புலவர், சிவஞான முனிவர் முதலிய உரையாசிரியர் களின் உரைகளைத் தழுவி எழுதப்பெற்ற நன்னூல் காண் டிகை உரை முதலியவைகளைத் தம பொருளைக்கொண்டு வெளியிட்டிருக்கின்றார். இவரால் இயற்றப்பெற்ற நாடகங் களும் மொழிபெயர்ப்பு நூல்களும் பல. இவரால் இயற் றப்பட்ட நாடகங்கள் இலண்டன்மாநகரத்தில் ஐந்தாம் சார்ச் அரசரின் முன்பு நடிததுக்காட்டப்பெறும் பெருமை யினையும பெற்றது. மேற்கூறப்பட்ட நூல்களைத தவிரத் திருவாசகம் திருக்கோவையார் முதலிய வேறுபல நூல் களும் இவரால் பதிப்பித்து வெளியிடப்பட்டுள்ளன.

பல்வேறு துறைகளில் பணி

சென்னைப் பல்கலைக் கழகத்தின் திராவிட வாசக சங்கத்திற்குத் தலைவராகவும், மேற்படி பல்கலைக்கழக

அதிகாரிகளால் ஏற்படுத்தப்பெற்ற திராவிடச் சொற் றொடர் ஆக்கச் சங்கத்தின் அங்கத்தினராகவும் இருந்தார். தென்னிந்திய ஆராய்ச்சிக் கழகத்தின் உதவித் தலைவராக இருந்தார். இவர் இயற்றிய நூல்களில் பல பல்கலைக் கழகச் சார்பில் நடைபெறும் கல்லூரிகளின் மாணவர் களுக்கும், உயர்தரப்பாடசாலைகளிற் பயிலும் மாணவர் களுக்கும் பன்முறை பாடப்புத்தகங்களாக அமைக்கப் பட்டன. இவர் தலைவராகவும் அங்கத்தினராகவும் அமர்ந்து தொண்டாற்றிய கலைக்கழகங்களும் அவைகளும் பல வாகும்

நன்கொடை

இவர் அரசாங்கத்தாரால் பெற்ற பட்டங்களும் பரிசு களும் பல. 1889-ஆம் ஆண்டில் அலுவலிற்சேர்ந்த இவர் படிப்படியாக உயர்ந்து, 1909-ஆம் ஆண்டில் போலீஸ் அவிஸ்டெண்டு கமிஷனர் பதவியையும், 1918-ஆம் ஆண் டில் டெபுடி கமிஷனர் பதவியையும் அடைந்தார். இவர் அரசாங்கத்திற்குச் செய்த தொண்டுகளுக்காக 1922-ஆம் ஆண்டில் சாகிர் ஒன்று வழங்கப்பட்டது.

இறுதி

இவர் குடும்ப வாழ்க்கையிற் புகாமல் தனித்த வாழ்க் கையையே மேற்கொண்டிருந்தார். சிறந்த கலையுணர்வும் இனிய குணமும், வணங்கிய வாக்கும் நுணங்கிய கேள்வி யும இவரிடம் அமைந்திருந்தன. இவர் தாம் தேடிய பொருளையெல்லாம் தமது கழகத்திற்கே உரிமைப்படுத்தி நூல் வெளியீடுகட்குப் பயன்படுத்தினர். இவ்வாறு சிறந்து விளங்கிய இவர், 1932-ஆம் ஆண்டு மே மதியில் இருபதாம் நாளில் இறைவன் திருவடி நீழலை எய்தினர்.

42. விருதை சிவஞான யோகிகள்

தோற்றம்

கொங்கு நாட்டில் உள்ள அவிநாசி என்னும் சிவப் பதியிலே 1840-ஆம் ஆண்டில சிவஞானயோகிகள் பிறந்தார். சிவஞானயோகியாரின் தந்தையார் பெயர் இராமசாமிப் பிள்ளை. தாயார் பெயர் கிருட்டிணம்மையார்

கல்வி

சிவஞானம் என்பது பிள்ளைப பருவத்தில் இடப் பட்ட பெயர் யோகி எனபது பிற்காலதில் யோக நிலைமையில தேர்ச்சி பெற்றமையால் உண்டான சிறபபுப பெயர் சிவஞானதிறகு அகவை மூன்று நிரம்பிய காலத்தில் தநதையார் திடீரென்று விண்ணுலகம் சென்றார் மேலும இரண்டோர் ஆண்டுகள் சென்றன. "தந்தையார் போயினர் தாயரும் போயினர்" என்ற தற்கேற்பத தாயாரும விண்ணுலகம் சென்றார். சிவஞானம தம்முடைய மாமன்மாரகளின் ஆதரவில் வளர்நதார். "தந்தையொடு கல்விபோம" என்பது பெரியார வாக்கு சிவஞானதிற்குத தநதையோடு கலவி போய்விடவில்லை. மாமன்மார்கள மனம வைதது பள்ளியிற் சேர்த்துக் கல்வி கறகச் செயதனர். சிவஞானம் மிகுந்த ஊக்கத் துடன் படிக்கத்தொடங்கிச் சிறிது ஆங்கிலமும் தமிழும் கற்றுக்கொண்டார். அகவை ஈரெட்டு நிரம்பியது. பிறகு சிவஞானத்தின் இளையமாமனார் ஒருவர் நீலகிரி மலைமேல் உள்ள குன்னூரிலே வாழ்ந்திருந்தார். அவர் சிவஞானத்தை அங்கு அழைத்துக்கொண்டுபோய் மேலும் நன்றாகக் கல்வி கறகச் செய்தார். சிவஞானம் இயற்கையிலேயே நுண் ணுர்ணவு பொருந்தியவராக இருந்தார். அதனல் கல்வி யறிவு மிக எளிதாகவே பொருந்தியது. அவ்வூரில் இவர்

கண்ட மலேவளக் காட்சிகள் இவருடைய அறிவிலே கிளர்ச்சியை உண்டாக்கியது.

பெரியார் தொர்டபு

பல்லடம் என்ற ஊரில் சிவஞானத்தின் வேறொரு மாமனார் வாழ்ந்திருந்தார். சிவஞானம் அவ்வூருக்குச் சென்று அங்குச் சில திங்கள தங்கநேர்ந்தது. அவ்வூரிலே அருளானந்த அடிகள எனனும பெயருடைய பெரியார் ஒருவர் எழுந்தருளியிருந்தார். அவர் அருட்டிறம் அமையப்பெற்றவர் அவருடைய புகழ் அவ்வூரிலே சிறந்து விளங்கியது. சிவஞானம் அப்பெரியாரைக் கண்டு வணங்கிப் போற்றினா அவரிடம் அடிக்கூடி சென்று அருளுரைகள் பெற்றார்.

அலுவலும் மருத்துவப் பயிற்சியும்

வாழ்க்கையை நடதது தற்கு ஏதேனும் ஓர் அலுவலை மேற்கொள்ளுதல் நலம் என்று எண்ணினர் வெல்லிங்டன் என்னும் ஊரையடைந்து ஒரு பெரும் வணிகரிடத்திலே வேலைக்கு அமர்ந்தா. அநநாளில் சச்சிதானந்த அடிகள் என்னும் பெரியார் ஒருவருடைய நட்பு இவருக்கு ஏற்பட்டது. சச்சிதானந்த அடிகள் சித்த மருத்துவத்திலே சிறந்த புலமை பெற்றவராகத் திகழ்ந்தார். சிவஞானம் அந்தப் பெரியாரிடம் மருத்துவக் கலையை நன்கு கற்றுத் தேறினர். அப்பெரியாரைப் புகழ்ந்து,

"கசசிருக்கும் தோளுடையார் காதல்வலைப்
பட்டேனைக் கழிக்கா தாண்ட
சசிருக்கும் களத்தானே நல்லோர்கள்
தமைப்பணியும நலம்ஒன் றில்லாப்
பிசசிருக்கும் உளத்தனைனைச் சித்தமுறை
பலபயிற்றிப் பெரிய பட்சம்
வச்சிருக்கும் குணக்குன்றே அருள்சசி
தானந்த மருத்வ தேவே."

என்னுஞ் செய்யுளொன்றைப் பாடிப் போற்றினர். மேலும் அப்பெரியாரிடம் யோகப் பயிற்சியும் பெற்று யோகஞ் செய்யவும் தொடங்கினர். அதுமுதல் இவருடைய பெயர் சிவஞானயோகி என வழங்கியது.

நன்னெறியை நாடல்

இவர் அடிக்கடி பெரியோர்களுடைய கூட்டுறவை மேற்கொண்டிருந்தபடியால் இவருடைய உள்ளம் நன்னெறியை நாடத் தொடங்கியது. தாம் பார்த்து வந்த வேலையை உதறினர். உடுமலைப் பேட்டை வட்டத்தில் உள்ள மடத்துக்குளம் என்னும் ஊரையடைந்தார். சிவபூசை தேவார திருவாசகம் ஓதல் முதலிய செயல்களை மேற்கொண்டிருந்தார்.

கவிச்சிங்கத்திடங் கல்வி கற்றல்

பிறகு மடத்துக்குளத்தை விட்டு பழநியம்பதியை அடைந்தார். அந்நாளில் பழநியில் மாம்பழக் கவிச்சிங்க நாவலர் தங்கியிருந்தார். அவர் புறக்கண் பார்வையை இழந்தவராயினும் அகக்கண் பார்வையை அனைவரும் வியக்குமாறு பெற்றவர். பெரும் புலவர். ஒருமுறை கேட்டதை மறுமுறை அப்படியே கூறக்கூடிய ஆற்றல் அமையப் பெற்றவர். அவருடைய பெருமையை நன்கு அறிந்த சேதுபதி மன்னர் அவருக்குக் கவிச்சிங்க நாவலர் என்று சிறப்புப் பெயர் கொடுத்துப் பெருமைப்படுத்தினர். கவிச்சிங்க நாவலருடைய பெருமையை நன்குணர்ந்த சிவஞானயோகி அவரிடம் இலக்கண இலக்கியங்களையும் சங்க நூல்களையும் நன்கு கற்றுத் தேறினர். பிறகு பல சிவப் பதிகட்குச் சென்று இறைவழிபாடு செய்து விருதுப் பட்டியை அடைந்து அங்குத் தங்கினர். அங்கு ஒரு மருத்துவ சாலையை அமைத்து மக்களுக்கு மருத்துவஞ் செய்து நோய் தீர்க்கும் செயலை மேற்கொண்டிருந்தார்.

திருப்பணி

அவ்வூரில் இருந்த சிவன் கோயில் பழுதடைந்திருந்தது இவர் அக் கோயிலுக்குத் திருப்பணிகள் செய்ய எண்ணினர். பலரிடமும் பொருள் திரட்டினர். திருப்பணிக்குப் பொருள திரட்ட இவர் ஒரு புதுமையான வழியை மேற்கொண்டார். மண் கலயங்கள் இரண்டாயிரஞ் செய்வித்தார். கோவிலுக்குக் கும்பிட வருபவர்கள் வீடுகளிலெல்லாம் வீட்டிற்கு ஒவ்வொரு கலயம் கொடுத்தார். சமையலுக்கு அரிசி எடுக்கும்போது நாள்தோறும் ஒவ்வொரு பிடி அரிசியைக் கலயத்தில் போட்டுக் கலயத்தை நிரப்பித தம்மிடம் தருமாறு ஏற்பாடு செய்தார். இதனால் திங்கள்தோறும ஐம்பது ரூபா முதல் இருநூறு ரூபாய் வரை பொருள் சேர்ந்தது. இதனைக் கொண்டு திருமதில், கோபுரம, மலர்ப்பொழில் முதலியன அமைத்துத் திருப்பணி செய்தார்.

மழைபொழியப் பாடல்

அடிக்கடி மழை பெய்யாமையால் பயிர்கள் வாடிக் காய்ந்தன. குடி தண்ணீரும் அகப்படாமல் மக்கள் அல்லலுற்றனர். ஒருநாள் சிவஞான யோகிகள் அறுமுகக் கடவுள திருமுன் வழிபாடு செய்து கொண்டிருந்தனர். வழிபாட்டிற்கு வந்த அன்பர்கள் சிலர் சிவஞான யோகிகளைப் பார்த்து, "மழையில்லாக் கொடுமையைப் போக்கியருளும் படி முருகப் பெருமானை வேண்டுங்கள்" என்று கேட்டுக் கொண்டனர். இவரும் முருகனை வேண்டியதுடன் பாக்கள் சிலவற்றையும் பாடினர். எல்லோரும் இறும்பூதடையுமாறு விரைவிலே நல்ல மழை பொழிந்தது. அன்பர்கள் சிவஞான யோகிகளின் பெருமையைப் போற்றிப் புகழ்ந்தனர்.

அறிவுமிக்க ஆன்

அக் கோவிலிலே ஒர் ஆன் (பசு) இருந்தது. அது தெய்வத் திருவருளால் நல்லறிவு பெற்று விளங்கியது. அது கோவிலின் உட்சுற்றைப் பலதடவை சுற்றிவரும். கோயிலுக்குள்ளேயே தங்கியிருக்கும. சில சமயங்களில் வெளியே போய்த் தோட்டங்களில் புல்மேயும். புல்லைத் தவிர வேறு எந்த உணவுப் பயிரையும் பூஞ்செடியையும் முகந்துகூடப் பார்க்கமாட்டாது. ஆகவே அந்த ஆவை எந்தத தோட்டக்காரரும வெருட்டுவதில்லை. பலா அந்த ஆவைக் கும்பிட்டு வாழைப்பழம முதலியவைகளைக் கொடுப்பார்கள. திருவாதிரைநாள அன்று கோவில்காரர் கள் அந்த ஆவை அழைத்துவந்து ஆ வழிபாடு செய்வார் கள். இந்த ஆவானது ஒருநாள் யோகிகள் வைத்துக் காப்பாற்றிவரும் பூம்பொழிலுக்குட் சென்று புல்மேய்ந்து கொண்டிருந்தது. யோகிகள, ஆ பூம்பொழிலை மேய்ந்து அழித்துவிடுமே என்று எண்ணிக் கடுஞ்சினங் கொண் டார். "உனக்கு மேய வேறிடம் அகப்படவில்லையா? பூம் பொழிலை நாசமாக்கிவிட்டுப் போதற்கா இங்கு வந்து புகுந்திருக்கின்றனை. போ வெளியே" என்று சுடுமொழி கள் சில சொன்னார். உடனே அந்த ஆ பூம்பொழிலை விட்டு வெளியே போய்விட்டது. பிறகு அஃது அப் பொழிலை எட்டியே பார்ப்பதில்லை கோவிலுக்குள் வழக் கம்போல் வந்து தங்குவதும் இல்லை. ஆதிரைநாளில் ஆவைக் கோவிலுக்குள் கொண்டுசென்று வழிபட முயன் றனர் எவ்வளவோ முயற்சிசெய்தும் ஆவைக் கோயிலுக் குள் கொண்டுசெல்ல முடியவில்லை. இச் செய்தியைக் கோயிற்கணக்கர் யோகிகட்குத் தெரிவித்தார். அப்போது தான் யோகிகட்கு உண்மை புலனுயிற்று. நாம் அன்று இதனை வைதபடியினுலேதான் அஃது இவ்வாறு மனங்

கலங்கி உளந்திரிந்து வருந்தி நிற்கிறது என்று உணர்ந்தார். உடனே இறைவன் திருமுன்பு சென்று, "பெருமானே என் னுடைய குற்றத்தை மன்னித்துத் திருவருள் புரிதல் வேண்டும். நான் அந்த ஆவின் மெய்யுணர்வினை உணர்ந்து கொள்ளாதபடியினால் தவறுதலாக ஏதோ கூறிவிட்டேன். அது நானேமுதல் பூம்பொழிலுக்குட்சென்று மேயுமாறு திருவருள் புரிதல்வேண்டும் என்று வேண்டிக்கொண்டார். இறைவன் திருவருளால் அவ் ஆ மறுநாள் பூமபொழிலுக் குச் சென்று புல் மேய்ந்ததுடன் வழக்கம்போல் கோவிலுக் குள்ளும் சென்று தங்கியது.

பலஊர்ப் பயணம்

பிறகு யோகியார் பல ஊர்களுக்குச் சென்றார். ஒவ் வோர் ஊரிலும இறைவனுக்குப் பாமாலை பாடினர். செட்டிநாடு சென்று திருப்பணிக்குப் பொருள் திரட்டினர். அப்பொருளைக்கொண்டு திருப்பணிகள் பலசெய்தார்.

வடமொழி கற்று நூல் இயற்றல்

பிறகு எட்டையாபுரம் சென்றார். அப்பொழுது அவ் வூரிலே குருநாதக் கவிஞர் என்னும் பெயருடைய வட மொழிப் புலவர் ஒருவர் வாழ்ந்திருந்தார். யோகியார் குருநாதக் கவிஞரை வடமொழியாசிரியராகக்கொண்டு வட மொழி நூல்களை நன்கு கற்றார். அவருடைய உதவியைக் கொண்டு பதஞ்சலி யோகசூத்திரம் பிரம சூத்திரம் ஆகிய வடமொழி நூல்களைத் தமிழிலே மொழி பெயர்த்தார்.

சித்தாந்தம் கற்றல்

அவர் பல சிவப்பதிகளினும் இறைவழிபாடுசெய்து பாமாலைகள் பாடிக்கொண்டு சென்னையை அடைந்தார். அப்பொழுது அங்கே சைவசித்தாந்த சண்டமாருதமாகச்

சோமசுந்தர நாயகர் என்பவர் விளங்கியிருந்தார். அவடைய பெருமையை நன்கு உணர்ந்த யோகியார் நாயகரை ஆசிரியராகக்கொண்டு சைவசித்தாந்த நூல்கள் பலவற்றைக் கற்றுதேறினர்.

பாரதிப் பட்டம்

பாரதியார் என்றால் தேசியகவி சுப்பிரமணிய பாரதியார் என்று எல்லோருமே நன்கு உணர்வர். ஆனால் பாரதியாருக்கு அப் பட்டப்பெயர் எவரால் கொடுக்கப்பட்டதென்பது பெரும்பாலார்க்குத தெரியாது. சுப்பிரமணிய ஐயருடைய பாடலகளைக்கேட்டு மகிழ்ந்த சிவஞான யோகிகள்தாம் பாரதியா என்னும் சிறப்புப் பெயரை வழங்கினர்

கோவிற்பட்டியில் இறுதி

இறுதியில் யோகிகள் கோவில்பட்டியை அடைந்து ஆண்டே நிலையாகத் தங்கினர். சித்த வைதியசாலை, திருவிடர் கழகம் முதலியவைகளை அமைத்துக்கொண்டு மக்களுக்கு நன்மைகள பல செய்தார் அவ்வூரிலேயே எண்பத்து நான்காவது அகவையில் இறைவன் திருவடி நீழலை எய்தினர்.

இயற்றிய நூல்கள்

1 செப்பறை வெண்பா
2. நெல்லையந்தாதிமாலை
3. திருசெந்திற்சிலேடை வெண்பா
4. பதஞ்சலி யோகசூத்திர மொழிபெயர்ப்பு
5. பிரமசூத்திர மொழிபெயர்ப்பு
6. தமிழ்மொழியும் சிவநெறியும்
7. தமிழர் தொன்மை
8. வேதாகம உண்மை
9. கீதாமிர்த மஞ்சரி

10. சிவகான விளக்கம்
11. சுவேதாசுவதர உபநிடத மொழிபெயர்ப்பு
12. தமிழும் மருத்துவமும்
13. தமிழக வொழுக்கம் என்னும் மக்கட் சட்டம்
14. கோயில்பட்டிப் புராணம்
15. தேவோபாசனதீபம்

முதலியன. இவர் இயற்றிய நூல்கள், பதிகங்கள் முதலியவை களை ஒன்றுதிரட்டி புத்தகமாக யோகிகளே வெளியிட்டுள் ளார்.

கஉ. இருக்கம். ஆதிமூல முதலியார்

பிறப்பு

சென்னை இராயப்பேட்டையில் 1866 ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் இருபத்தெட்டாம நாள் இருக்கம் ஆதிமூல முதலியார் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் கனகசபை முதலியார். தயார் பெயர் சொக்கம் மாள்.

கல்விப்பயிற்சி

இவர் முதலில் தெலுங்குப் பாடசாலையில் கல்வி பயிலத் தொடங்கினர். பிறகு இவருடைய தகதை இவ நுக்குத் தமிழ்ப் பாடப் புத்தகம் முதலியவைகளைக் கற்பிக் கத்தொடங்கினர். பிறகு ஆதிமூலம் தாமே தமிழ் இலக் கண இலக்கியங்களைக் கற்றுச் சிறந்த தமிழ்ப் பயிற்சி உடையவராகத் திகழ்ந்தார். இவருடைய தமிழறிவைப் பள்ளிக்கூடத் தலைமையாசிரியர் பார்த்து வியப்படைந்தார். தமிழ்ப்புலவர் பள்ளிக்கு வராத நாட்களில் இவரையே தமிழ்ப் பாடங்களை நடத்துமாறும் செய்தார். அத்த கைய சமயங்களில் ஆதிமூலனர் தமிழின் அருமை

பெருமைகளை மாணவர்களுக்கு எடுத்துக்கூறி அவர்களைத் தம் வழிப்படுத்துவார்.

தமிழுந்தெலுங்கும்

ஆதிமூலனுர் தமிழையே பெரிதும விரும்புதலைப் பள்ளியின் தலைமையாசிரியர் அறிந்தார். அவர் ஒருநாள் ஆதிமூலனுர் வகுப்பு மாணவர்களைப் பார்த்துத் "தமிழ் சிறந்ததா? தெலுங்கு சிறந்ததா?" என்று விளையாட்டாகக் கேட்டார். அப்பொழுது தெலுங்கு மாணவன் ஒருவன் விரைவாக எழுந்து "தெலுங்கு தேட்ட அரவம் அத் வானம்" (தெலுங்கு தெளிவு தமிழ் மோசம்) என்று கூறினன். இதனைக் கேட்ட மற்றைத் தெலுங்கு மாணவர்கள் மகிழ்ச்சியடைந்து கலகலவென்று நகைத்தார்கள். உடனே ஆதிமூலனுர் எழுந்து, "தமிழ் தங்கம் வடுகுவல்லக்காடு" என்றார். இதனைக் கேட்டுத் தமிழ் மாணவர்கள் யாவரும் மகிழ்ந்து நகைத்தார்கள்.

வைணவத் தமிழாசிரியர்

ஆதிமூலனுருடைய பள்ளியில் ஐயங்கார் ஒருவர் தமிழாசிரியராக இருந்தார் அவர் எப்பொழுதும் சைவ சமயக் கடவுளரைத் தாழ்வாகப்பேசி இழிவு படுத்திக் கொண்டேயிருப்பார். ஒருநாள் ஆதிமூலனுர் அந்த ஐயங் காரப் புலவரைப் பார்த்து, "எவ்வளவு நூல்களைக் கற்றிருந் தாலும் மெய்யறிவு தோன்றுமல் பிறசமயக் கடவுளரை வைது கொண்டிருப்பவர்கள் அறிவற்றவர்களே யாவர் கள். சைவமும் வைணவமும் இந்து சமயத்தின் இருகண் கள் சைவர்கள் திருமாலைக் குறித்துத் தாழ்வாகப் பேசு வதில்லை. தங்கள் பிள்ளைகளுக்கு நாராயணன், கோவிந் தன், இராமசாமி, கோபாலன் இவ்வாறெல்லாம் வைணவ சமயப் பெயரை வைக்கிறார்கள். ஆனல், எந்த வைண

வரும் சைவசமயப் பேர்களைத் தங்கள் குழந்தைகளுக்கு வைப்பதில்லை. சைவர்கள் பெருமாள் கோயிலுக்குப் போய்க் கடவுளை வழிபடுவதைப்போல் வைணவர்கள் சிவன் கோயிலுக்குப்போய் இறைவனை வழிபடுவதில்லை. இதிலிருந்து சைவர்கள் அறிவு தெளியப் பெறாதவர்கள் என்பது நன்கு விளங்குகிறது'' என்று அவ் வைணவப் புலவருக்கு அறிவுரை கூறினர். அதிலிருந்து அப்புலவர் சைவ சமயக் கடவுளை இகழ்ந்து பேசுவதை நிறுத்திவிட்டார்

பொதுநலப் பணிகள்

இவர் சபைகள பலவற்றை அமைத்து அவைகளில சைவசமய வளர்ச்சிக்கான சொற்பொழிவுகளை நிழ்த்தினர். திருமயிலையில் ஆண்டுதோறும் நிகழும் திருவிழாவில் பேரவைகள் கூட்டிச சொற்பொழிவுகள் செய்தார். அறுபத்துமூன்று நாயன்மார்களும் தெருவில் எழுந்தருளுதற்கு விமானங்கள் செய்ய எண்ணினர். அதன் பொருட்டுப் பலரிடம் இருந்தும பொருள் திரட்டி விமானங்கள் செய்வித்தார்.

ஒற்றியூரில்பணி

இவரும் இவருடைய நண்பர்கள் பலரும் திருவொற்றியூருக்குச் சென்று மண்வெட்டி கட்டப்பாறை முதலியவைகளைத் தங்கள் கையிலெடுத்துத், தெரு, திருக்கோயில், பூம்பொழில் முதலியவைகளில் திருநாவுக்கரசரைப்போலத் திருத்தொண்டுகள் பல செய்தார்கள்

சிவனடியார் திருக்கூட்டம்

ஆதிமூலனாரும் அவருடைய நண்பர்கள் பலரும் ஒன்று சேர்ந்து, சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்'' எனப் பெயரிய திருக்கூட்டம் ஒன்றை அமைத்தார்கள். எல்

லோரும் ஒருங்குகூடிப் பல சிவப்பதிகட்குஞ் சென்று இறை வழிபாடு செய்தல், சைவசமயச் சொற்பொழிவுகள் செய்தல் முதலியவைகளைச் செய்தார்கள். இதனால் ஆங்காங் கிருந்த மக்கள் சைவசமயப் பெருமையை உணர்ந்து கடவுள் வழிபாடு முதலியவைகளிலே ஈடுபட்டு நன்னெறிப் பட்டார்கள்

கலைத்தொண்டு

ஆதிமூலனார் சைவசமய வளர்ச்சிக்குப பத்திரிகை ஒன்றைத தொடங்கவேண்டுமெ என்று எண்ணினார். "சைவம்" என்னும பெயருடைய திங்கள் வெளியீடு ஒன்றைத் தாமே ஆசிரியராக இருந்து நடத்தினார். காரைக்குடி சொகசுலிங்கையா, சிவபாத சுந்தரம்பிள்ளை, சூளை சோமசுந்தர நாயகர், தஞ்சை கே. எஸ். சீனிவாசபிள்ளை, ஆ. ஈ. சுந்தரமூர்த்திபபிள்ளை, த. கைலாசபிள்ளை முதலிய பேரறிஞர்கள் இப்பத்திரிகையில் சைவசமயத்தைப் பற்றிக் கட்டுரைகள பல எழுதினார்கள். ஆதிமூலனாரும அவ்வப்போது சிறந்த கட்டுரைகள் எழுதி வெளிப்படுத்தினார்

தொண்டு

ஆதிமூலனார் சிவனடியார் திருக்கூட்டத்தை ஊர் ஊராக நடத்திச் சென்றதைப்போல் இவருக்கு முன்பு யாருஞ் செய்ததில்லை. இவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றியே இக்காலத்தில் திருக்கூட்டங்கள் ஏற்பட்டுச் சிவப்பதி வழிபாட்டிற்குச் செல்லுகின்றன. திருக்கூட்டத்தினர் ஒதி உணர்ந்து இறைவனை வழிபடும் பொருட்டுப் பன்னிரு திருமுறைகளிலிருந்தும் அரிய பாடல்கள் பலவற்றைத் திரட்டி ஒன்றுபடுத்திப் "பன்னிரு திருமுறைத் திரட்டு" என்னும் பெயருடன் வெளிப்படுத்தினார். இதற்குப் பின்னரே பலரும் திருமுறைத்திரட்டுகள் திரட்டி

வெளியிடும் பணிகளில் ஈடுபட்டனர். இவருடைய திருக் கூட்டத்திலே, கயப்பாக்கம்-சதாசிவச்செட்டியார், சுக்காடு இராசரத்தினமுதலியார், காட்டேரி வேங்கடாசலமுதலியார் முதலிய பல அன்பர்கள் இருந்தனர். இவர் சைவசமயத் திற்குஞ் செந்தமிழ் மொழிக்கும் தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் உரிமைப் படுத்திச் செய்த தொண்டு மிகவும் போற்றற்பாலதாகும்

கசு. பேரம்பலப் புலவர்

தோற்றம்

ஈழநாட்டில் யாழ்ப்பாணத்து வேல்லணையூரில் வேளாளர் குலத்தில் பேரம்பலப் புலவர் பிறந்தார். பேரம்பலப் புலவர் தோன்றிய காலம் 1859-ஆம் ஆண்டு (ஆங்கிலம்) தைத் திங்கள் 21-ஆம் நாள். இவருடைய தந்தையார் பெயர் கோணமலை. தாயார் பெயர் சிவகாமியம்மை.

கூத்தப்பிரான் திருவருள்

கோணமலையாருக்கு நான்கு பெண்மக்களும் ஓராண் மகனும் தோன்றினர். ஆண்மகனுக்குத் தாமோதரன் என்று பெயரிட்டு அருமை பெருமையாக வளர்த்தார். உரிய காலத்திலே கல்விப் பயிற்சியையுஞ் செய்வித்தார். தாமோதரன் நன்கு கல்வி கற்றுக்கொண்டிருந்த நாளிலே தனது பன்னிரண்டாம் அகவையில் காய்ச்சல் நோயினால் விண்ணுலகேகினன். ஒரே மைந்தனை இழந்த தந்தையார் பெருந் துன்பமடைந்தார். அவருடைய மகப் பிரிவுத் துன்பம் மாற்றுதற்கரியதாக இருந்தது. இறைவழிபாடு செய்ய எண்ணினார். ஊரைவிட்டுப் புறப்பட்டார். இராமேசுரம் திருவாலவாய் முதலிய சிவப்பதிகளை வணங்கிக்கொண்டு

திருத்தில்லையை அடைந்தார். கூத்தப்பிராணைப் போற்றி வணங்கினர். "அமபலவாணனே! அடியேன் அரும் பெறற் புதல்வனை இழந்து பெருந் துன்படைந்து வாடுகின் றேன். வேண்டுவார் வேண்டுவதை வேண்டியவாறே அளிக் கும் வித்தகனே! என் அருமைச் செல்வனை மீளவும் எனக்குத் தந்தருளுதல வேண்டும். இன்றேல தேவரீ ருடைய திருமுன்பே உயிரை ஒழிப்பேன்," என்று கூறி ஏத்தி வணங்கினர். தில்லையிலேயே தங்கிக் கூத்தபிராணைப் போற்றி வழிபட்டுத் தேவாரம திருவாசகம் முதலிய நூல் களை ஓதிகொண்டிருந்தார். பொன்னம்பலவாணர் கோணு மலையின் மனங்கோணுமல் திருவருள் செய்ய நினைந்தார். ஓர்நாள் இரவிலே அந்தண வடிவுடன் கோணுமலையின் கன வில் தோன்றினர். "அன்பனே! உன்னுடைய பிளளை உன அறுபதாம் அகவையில உன்னிடம வந்து சேருவான். அவனுக்குப பேரம்பலம் என்று பெயரிடுவாயாக!" என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தருளினர். உடனே கோணு மலை உறக்கம் நீங்கி எழுந்தார். அமபலவாணரின் அருட் டிறனை எண்ணி எண்ணி உளம் மகிழ்ந்தார். கோயிலை யடைந்து வழிபாடு செய்தார். பின்னுஞ் சிலநாள் அங் கிருந்துவிட்டுத் தமது ஊரையடைந்தார். உற்றார் உற வினர் முதலிய யாவரிடமும் திருவருட்டிறத்தை உரைத்து மகிழ்ந்திருந்தார். அதன் பிறகுதான் முற்கூறியவாறு பேரம்பலம் பிறந்தார். தந்தையார் இறைவன் கட்டளைப் படி குழந்தைக்குப் பேரம்பலம் என்று பெயரிட்டுச் சிறப் போடு வளர்த்துச் செய்ய வேண்டிய பிள்ளைச் சடங்குகளை யுஞ் செய்தார்.

கல்வி

ஐந்தாம் ஆண்டிலே பேரம்பலத்தைப் பள்ளியில் வைத்து எழுத்தறிவிக்கச் செய்தார். பேரம்பலம் மிகு

விரைவாகவும் திறமையாகவும் கல்வியை நன்கு கற்றார். இவருடைய கல்வித் திறத்தைக் கண்டு எல்லோரும் போற்றினர்.

செய்யுள் இயற்றுதல்

அம்பலவாணன் அருளால் தோன்றிய இவர் இளமைப் பருவத்தில்தானே பாவாணரானார். பன்னிரண்டாவது அகவையில் ஏழாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார். தம நண்பன் ஒருவனிடம் இருந்து அகர வரிசை நூல் ஒன்றை இரவலாகப்பெற எண்ணினார்.

"சாந்தலிங்கம் என்றிச சகம்பழிசச வாழ்வுகூர்
சாந்தலிங்க சோதிடநற் சாகரமே—ஓர்ந்தும்
அகராதி தன்னை அனுப்புஞ் சிலசொல்
தகவாக நானுணரத் தான்"

என்னுஞ் செய்யுளை எழுதி நண்பன் ஒருவன் மூலமாக அனுப்பினார்.

இலக்கியப் பயிற்சி

இலக்கண இலக்கியப் புலவர் கனகசபைப் பிள்ளை என்பவர் பேரபலத்தின் கூரிய அறிவை உணர்ந்தார். இவரை வலிந்தழைத்து நிகண்டு, பாரதம், நைடதம், நன்னூல் விருத்தியுரை முதலிய நூல்களைப் போதித்தார். பிறகு கந்தப்பிள்ளை என்பவரிடத்தில் தேவாரம், திருவாசகம், புராணங்கள், இதிகாசங்கள், இலக்கண இலக்கியங்கள், சித்தாந்த நூல்கள் முதலியவைகளை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தார். சோதிடம வல்லாரிடத்தில் சோதிட நூல்களையும் கற்றுணர்ந்தார்.

அலுவல் பார்த்தல்

இவருடைய கல்விப் புலமையை நன்குணர்ந்த ஜொத்தாரிஸ் முருகேசு என்பவர், இவரைத் தமககு எழுத்தாள

ராக அமர்ந்து வேலை பார்க்குமாறு கேட்டுக்கொண்டார். பேரம்பலமும் சின்னாள் அத்தொழிலை மேற்கொண்டிருந்தார். பிறகு வேளாண் தொழில செய்வதிலும், விரும்பியவர்கட்கு நூல்களைக் கற்பிப்பதிலும் ஊரை நன்னிலைப் படுத்துவதிலும் தமது காலத்தைச் செலவிட்டார்.

மணமும் மக்கட்பேறும்

இவர் பெரியநாச்சிப்பிள்ளை என்னும் மங்கையை முதல் மனைவியாகவும், வள்ளியம்மைபபிள்ளை என்னும் மாதை இரண்டாம் மனைவியாகவும் மணந்தார். இரண்டு ஆண்மக்களும் மூன்று பெண்மக்களுந் தோன்றினர்.

நூல்கள் இயற்றல்

பேரம்பலத்தின் புகழ் நாள்தோறும் வளர்ந்தது. செல்வர்கள் பலர் இவரைத் தமக்கு நண்பராகக் கொண்டனர். குமாரசாமிப் பிள்ளை, நமசிவாய தேசிகர், வண்ணை வைத்தியலிங்கம பிள்ளை முதலிய புலவர்கள் பேரமபலப் புலவரின் பெருமையைப் பாராட்டினர். இவர் தனிப் பாடல்கள் பல பாடியிருப்பதுடன், வேலணை இலந்தைக் காட்டுச் சித்தி விநாயகர் இரட்டைமணி மாலை, வண்ணைச் சிலேடை வெண்பா, கடம்பர் யமக வந்தாதி, முத்துமாரி யம்மை ஊஞ்சல் என்னும் நூல்களும் இயற்றியுள்ளார். இவரிடம் கற்ற வேலாயுத பிள்ளை, கனகரத்தினம், இரத்தினம் என்பவர்கள் சிறந்த அறிஞர்களானர்கள்.

இறுதி

பேரம்பலப் புலவர் தமது இறுதிக்காலத்தில் நாலைந்தாண்டுகள் துறவியைப்போல் இறைவழிபாடு செய்திருந்து, தமது எழுபத்தாறுவது அகவையில் 1935-ஆம் ஆண்டு புரட்டாசித் திங்கள் 18-ஆம் நாள், இறைவன் திருவடி நீழலை அடைந்தார்.

கரு. வண்ணை செல்லையா

தோற்றம்

யாழ்ப்பாணத்து வண்ணார் பண்ணையிலே 1878-ஆம் ஆண்டு ஆகஸ்டு இரண்டாம்நாள் (வெகுதானிய ஆண்டு ஆடித்திங்கள் ௧௬-ஆம் நாள்) செல்லையா பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் வைத்தியலிங்கம் தாயார் பெயர் சீனியம்மாள்.

கல்வி

செல்லையா இளமையில் அவ்வூரில் உள்ள பாடசாலையில் கல்விகற்கத் தொடங்கினார். நடுத்தரப் பாடசாலைக்குச் சென்று ஆங்கிலமும் கற்றார். அதன்பின் ஆறுமுகநாவலரின் மருகர் ந. ச. பொன்னம்பல பிள்ளையிடம சில நூல்களைப் பாடங்கேட்டார். பிறகு ஏழெட்டாண்டுகள் இந்தியாவிற் சுற்றுப்பயணஞ் செய்து தம்முடைய கல்வியறிவைப் பெருக்கிக்கொண்டார். உரியகாலத்தில் திருமணமுஞ் செய்துகொண்டு இல்வாழ்க்கையில் ஈடுபட்டார்.

தமிழாசிரியர்

1925-ஆம் ஆண்டு முதல் 1931-ஆம் ஆண்டு வரை ஈபபோ ஈகரில் திருவள்ளுவர் கலாசாலைத் தலைமையாசிரியராகஇருந்து பிறருக்குக் கல்வியறிவை ஊட்டினார். தாமும் பல நூல்களை ஆராய்ந்து கற்றுக்கொண்டார். பிறகு கொழும்பையடைந்து பலருக்குத் தமிழ நூல்களைக் கற்பித்தார். நூல் வெளியிடுபவர்கட்கு உதவியாயிருந்து நூல்கள் வெளிவரச் செய்தார்.

முருக வழிபாடு

இவர் முருக வழிபாட்டிலே இறுகிய மனம் உடையவராக இருந்தார். திருச்செந்தூர் முருகக் கடவுளுடைய

படத்தை எப்பொழுதும் தாம் படிக்கும் பலகையின்மீது வைத்துக்கொண்டிருந்தார். முருகக்கடவுள்மீது அவ்வப் பொழுது தனிப்பாடல்கள் பலவற்றைப் பாடியிருக்கிறார். அன்றி நூல்களும் செய்திருக்கிறார். மூலநோயால் துன் புற்று வருந்திய இவரை, அறுவை மருத்துவத்தின் பொருட்டு மருத்துவசாலைக்கு அழைத்துச் சென்றனர். அறுவை மருத்துவம் தொடங்குவதற்கு முன்பு,

நல்லைவாழ் வுகந்த நாயகா எளியேன்
நலிவுறு மூலநோய் தன்னால்
எல்லையில் துயருற் றேங்கிவா டுதலுன்
இருங்கரு ணைக்கிழுக் கன்றே
வல்லையில் ஓர்கால் சதகிரம் இட்டு
மறித்துமிட் டுளுற்றவே மதித்தார்
ஒல்லையில் வந்தென் பக்கலில் இருந்தே
உறுதுணை புரிந்துகாத தருளே.

என்னும செய்யுளைப் பாடினர்.

இரமணர்மீது அன்பு

திருவண்ணுமலையில் எழுந்தருளியிருந்த இரமணமக ரிஷிகள் மீதும இவர் பேரன்புடையவராக இருந்தார். அவர்மீது பல பாடல்கள் பாடிப போற்றினர்.

கட்டுரைகள்

ஈழகேசரி, இந்துசாதனம், தினகரன, தமிழ்நேசன், மகாவிசயலட்சுமி, இந்தியநேசன் முதலிய பத்திரிகைகளில் சமயம், வரலாறு, இலக்கியம, ஆராய்ச்சி முதலியவைகளைப் பற்றிப் பல கட்டுரைகள் எழுதினர். இவருடைய உரைநடை தெளிவுடையதாகவும் எல்லோரும் எளிதில் உணர்ந்து கொள்ளத்தக்கதாகவும் இருக்கும. இவர் காலக் கணிதநூல் அறிவும் வாய்க்கப் பெற்றிருந்தார். எதிர்கால நிகழ்ச்சி

கள் பலவற்றை முன்னரேகூறி, அவை நிகழ்ந்த பின்னர் சிலரிடமிருந்து நன்கொடைகளும் பெற்றிருக்கிறார். சிறந்த தமிழ் அறிஞர்களுடைய பிறந்த நாட்குறிப்பை ஆராயச்சி செய்வதும், அவற்றைக் குறித்துக் கட்டுரைகள் வரைவதும் இவருடைய பொழுதுபோகாக இருந்தது.

நூல்தொகுத்தல்

விலையுயர்ந்த நூல்களைத தொகுப்பதில் இவர் எப் பொழுதும் கருத்துச் செலுததினார். தமது வருவாயின் பெரும்பகுதியை இதன்பொருட்டே செலவிட்டார். எவ் வளவு வறுமையான சமயததிலும் அருமையான நூல் ஒன்றைக் கண்டுவிட்டால் அதனை வாங்காமல் விடமாட்டார்.

இறுதி

தமிழத்தொண்டிலும முருகக்கடவுள வழிபாட்டிலும் ஈடுபட்டுக் காலத்தைக்கழித்த இவர் 1940-ஆம் ஆண்டு செப்டம்பர் ஏழாம்நாள் முருகன் திருவடியை அடைந்தார்.

இவர் இயற்றிய நூல்கள்

1. நல்லைசசண்முகமாலை
2. ஈப்போ தண்ணீர்மலை வடிவேலர் மும்மணிக்கோவை
3. வண்ணைத் திருமகள் இரட்டைமணிமாலை
4. வண்ணைத் திருமகள் பதிகம்
5. அரிகாம தோதத்திரம்
6. வண்ணை வேங்கடேசப்பெருமாள் ஊஞ்சல்
7. ஊஞ்சல் பதிகம்
8. நல்லைச் சுப்பிரமணியா திருவிருத்தம்
9. வடிவேலர் திருவிருத்தம்
10. வடிவேலர் ஊஞ்சல்பதிகம்
11. வடிவேலர் திருவருட்பத்து
12. மதுவிலக்குப் பாட்டு
13. ஒழுக்கமஞ்சரி

14. காந்தி இயன்மொழி வாழ்த்து
15. மதுமானிடக் கும்மி
16. பழமைப்பனுவல் ஐம்பானேந்து
17 கதிரை நான்மணிமாலை
18. இரமணமகரிஷி பஞ்சரத்தினம்
19. நாவலர் பதிகம்
20. ஆத்மானுபவ தீபிகை
21. திருமால் அவதார நாமாவளி
22 பாலர் பாடல்
23. ஆராய்சிக் கட்டுரைகள்

முதலியன.

ககூ. முத்துத்தாண்டவராய பிள்ளை

தோற்றம்

தென்னார்க்காடு மாவட்டத்திலே உள்ள பரங்கிப் பேட்டையில் முத்துத் தாண்டவராய பிள்ளை 1868-ஆம் ஆண்டு அக்டோபர்த்திங்கள் இருபத்தெட்டாம நாள் பிறந்தார். தந்தையார் பெயர் அப்பாசாமிப் பிள்ளை. தாயார் பெயர் அன்னம்மையார்.

கல்வி

இவர் இளம்பிராயத்தில் தானே கற்கவேண்டியவை களையெல்லாம் நல்லாசிரியரிடத்திலே கற்றுக் கல்வியறிவிற் சிறந்து விளங்கினர். இவரிடம் போதனைத் திறன் இயற்கையாகவே அமைந்திருந்தது. ஒருமுறை கேட்டதை மறுமுறை கேளாமலே எடுத்துரைக்கும் ஆற்றலும் அமைந்திருந்தது.

ஆசிரியத் தொழில்

முதன்முதலில் 1893-ஆம் ஆண்டில் தாங்கம்பாடி லூதரன் கல்லூரியில் தமிழாசிரியராக ஏற்படுத்தப் பெற்

ரூர். அதன்பிறகு 1916-ஆம் ஆண்டுமுதல் சிகாழி ஓதரன் உயர்தரப் பாடசாலையில் தமிழாசிரியராஞர்.

கலேத் தொண்டு

பள்ளிக்கூட ஆசிரியராக இருந்ததோடு அமையாமல் பலவழிகளினும் கலேததொண்டு செய்வதில் ஈடுபட்டார். பல ஐரோபபியாகளுக்கு இவர் தமிழாசிரியராக இருந்து அவர்களுக்குத் தமிழ்மொழியைக் கற்பித்தார் அவர்களேக்கொண்டு சொமன் முதலிய மொழிகளில் திருவாசகம், சிவஞானபோதம, சிவஞான சித்தியார் சுபக்கம், பரபக்கம், தொல்காப்பியப் பொருளதிகாரம, பெரியபுராணம், திருவிளேயாடற் புராணம, காரைக்கால அம்மையார் நூல்கள், ஆண்டாள் திருப்பாவை, தாயுமானவர் பாடல் ஆகிய இவைகளே முழுதும் மொழிபெயர்க்கச் செய்து வெளியிட்டார். தேவாரம், திவ்யபிரபந்தம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலே, பட்டினததார் பாடல் முதலியவற்றுள் சில முதன்மையான பகுதிகளே மொழிபெயர்த்து வெளியிடச் செய்தார். தமிழ் ஆங்கில அகராதி ஒன்று வெளிவருதற்குத் துணே புரிநதார். முகமதியர் மதப் புராணமாகிய சீறுப் புராணமும் இவருடைய உதவியால் உரையுடன் வெளிவந்தது. இவரிடத்தில் இருபதின்மர்க்கு மேற்பட்ட ஐரோப்பியர்கள தமிழ் கற்றறிநதனர். இவரிடம் தமிழ் கற்ற ஐரோப்பியர்கள் தமிழ் மொழியின் சிறப்பையும் பழந் தமிழரது சீர்ததியையும் புகழ்ந்து அரியபெரிய ஆராய்ச்சி நூல்கள் பல எழுதி வெளியிட்டனர்.

பலவகை ஆராய்ச்சிகள்

தமிழ் இலக்கண இலக்கியங்களேக் கற்றுணர்ந்ததோடு மட்டும் அமையாமல், இந்நாட்டின் பழைய வரலாற்றை

அறிதற்கேற்ற தொன்மை ஆராய்ச்சிகளினும் ஈடுபட்டார். பல ஆராய்ச்சி நூல்களைப் படித்துணர்ந்தார் கற்காலத்துப் பொருளகளையும், கற்குவை, கைவண்டி, சமாதிக்கல், சுமை தாங்கி, கல் வளைவு, தாழிகள் முதலியவற்றையும் பழங்காலத்து நாணயங்களையும், கல்வெட்டுக்களையும் ஆராய்ச்சி செய்தார். இவைகளைக் குறித்துப் பேரவைகளில் சொற்பொழிவுகள் பல செய்ததோடு பத்திரிகைகளினும் கட்டுரைகள் வரைந்தார்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் தொடக்க காலத்தில் "ஏடு தேடல" என்னும் பொருள்பற்றி அச் சங்கக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றினர். பாண்டித்துரைத் தேவர் இவரை அச் சங்கத்தின் புலவர்களில் ஒருவராக ஏற்படுத்தினர்.

கலை நிரம்பிய அறிஞர்

இவர் திருப்பரியலூர்ப் புராணத்தை அச்சிட்டு வெளியிட்ட காலத்தில் திருவாவடுதுறை யாதீனத்தலைவர் அம்பலவாண தேசிகர் "கலை நிரம்பிய அறிஞர்" என்று புகழ்ந்து பாராட்டிப் பேசினர்.

வித்வசிகாமணி

இவருடைய கல்விப் புலமையை நன்குணர்ந்த தருமபுர ஆதீனத் தலைவர் இவரைக்கொண்டு திருமுல்லைவாயிற் புராணம் முதலிய அரியநூல்கள் பலவற்றை நன்கு ஆராய்ந்து திருத்தமான பதிப்பாக வெளியிடச் செய்தார். இவருடைய அறிவுடைமையைப் பாராட்டி வித்வசிகாமணி என்னும் சிறப்புப் பெயரை வழங்கினர்.

நூல்கள்

இவர் இளம்பருவத்தில்தானே நூல்கள் பல செய்யத் தொடங்கிவிட்டார்.

1. சிந்தாமணி விநாயகர் மாலை
2. சாதாக்கியத் திருமுறை
3. ஒருபா ஒருபஃது
4. பிள்ளையார் ஊசல்
5. ஐயனரிதனார் மாலை
6. சாமியார் துதி
7. திருமகண்மாலை
8. முருகன் வருகைப் பத்து
9. தில்லையாடிப் புராணம்
10. வாருண மான்மியம்
11. பொய்யா விநாயகர் இருபா இருபஃது
12. வெள்ளை வாரணப் பிள்ளையார் திருவிரட்டை மணிமாலை
13 வைததிய நூல்
14. சோதிட நூல்
15. கார்மண்டல சதக உரை
16. மதுபான விலககு
17. சேதுபதி நாணயம்
18. காழிக் கல்வெட்டு

என்பன இவருடைய நூல்கள். இவருடைய நூல்களைப் போற்றிப் பொதுமக்கள் இவருக்குச் சிறப்புக்கள் பல செய்து பெருமைப் படுத்தினர்.

கஎ. கோவிந்தசாமிப் பிள்ளை

கல்வி

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் வரலாற்று விரிவுரையாளராக இருந்த கோவிந்தசாமிப் பிள்ளை, திண்ணிய அறிவு நலமும் நுண்ணிய ஆராய்ச்சித் திறமையும் உடையவர். இவர் 1920-ஆம் ஆண்டில் எஸ். எஸ். எல். சி. தேர்வில் சிறப்பாகத் தேறினர். பிறகு திருச்சிராப்பள்ளி செயின்ட் சோசப் கல்லூரியில் கல்வி பயின்று பி. ஏ. ஆனர்ஸ் தேர்வில் தேறினர்.

அலுவல்

முதலில் சென்னை சட்டசபைப் பிரிவில் வேலைபார்க்கத் தொடங்கினர் கல்வி வளர்ச்சியில் பணிபுரியவேண்டுமென்பதே இவருடைய நோக்கமாக இருந்தது. ஆகவே அண்ணுமலை நகர்க்குச் சென்று அண்ணுமலைப் பலகலைக் கழகத்தில வரலாற்று விரிவுரையாளராக வேலைபார்க்கத் தொடங்கினர் மேலுங் கல்வியறிவைப் பெருக்கிக்கொள்ள விரும்பினர் ஆங்கிலம் தமிழ் இரு மொழிகளிலும் உள்ள நூல்கள் பலவற்றைப் படித்துச் சீரிய புலமை பெற்றார். இந்தியநாட்டு வரலாற்றிலும் பிறநாட்டு வரலாறறிலும் வல்லவரானர். மேலும் கலவெட்டுக்கள், பண்டைய பட்டயங்கள், செப்புத்தகடுகளில் பொறிக்கப்பட்டிருந்த செய்திகள், பழமையான கோயில்களின்சிற்பங்கள், ஓவியங்கள் முதலியவைகளின ஆராய்ச்சியிலும் ஈடுபட்டு விளங்கினர்.

ஓவியக்கலை

ஓவியங்களை எழுதுவதிலும் சிறந்த வன்மைபெறறிருந்த இவர் இருண்மிகுந்த குகைக்கோயில்கள் பலவற்றிற்குச் சென்று விளக்கொளி அமைத்துக்கொண்டு சுவரில் இருந்த ஓவியங்களை உள்ளவாறே ஏட்டில் எழுதித்தொகுத்தார். நாளடைவில் இத்தொழிலில் இவர் கைதேர்ந்தவரானர். இததொழிலின் திறமைதான் இவருடைய புகழை வடநாட்டிலும் தென்னாட்டிலும் பரவச்செய்தது. ஈழநாட்டிற்குச்சென்று ஆங்கு இயற்றிய சொற்பொழிவுகளால் அந்நாட்டிலும் சிறந்த புகழ்பெற்றார்.

சித்தாந்தக் கலை

ஆங்கிலம் பயின்ற இவர் தமது காலம் முழுவதையும் ஆங்கில நூலகளைப் படிபபதிலேயே செலவிடவிலலை. சங்க நூல்களை நன்கு பயினறார். மெய்கண்ட சாத்திரங்கள்,

பன்னிரு திருமுறைகள் ஆகியவைகளையும் ஒதியுணர்ந்தார். சைவசித்தாந்தமாநாடுகட்குச்சென்று சொற்பொழிவாற்று தலையும மேற்கொண்டார சிறந்த கருத்துகள் பொதிந்து நயத்துடன் விளங்கிய இவருடைய சொற்பொழிவு எல்லா ருடைய உளளத்தையுங் கவர்ந்தது. இவருடைய கட் டுரைகள் தமிழ்ப் பத்திரிகைகளிலும் ஆங்கிலப் பத்திரிகை களிலும் வெளிவந்தன

நாடகக்கலை

காவியப் பயிற்சியிலும் ஓவியப் பயிற்சியிலும வன்மை பெற்று விளங்கிய இவர் இசைக் கலையிலும் சிறந்து விளங்கி னார். தமிழ்நாட்டில நாடகக்கலை மேன்மேலும் வளர்ச்சி யடைய வேண்டுமெனறு எண்ணினர் பல்கலைக் கழக மாணவாகளோடு சேர்ந்து நாடகங்களில் நடித்தார். மாணிக்கவாசகருடைய வரலாற்றை நாடகமாக நடித்தற் கும் அதில் தாம் ஒரு கோலம் பூண்டு கொள்ளுதற்கும் ஏற்பாடு செய்திருந்தார். ஆனால், அது நடைபெறுமலே போய்விட்டது.

ஞானியார் தொடர்பு

சைவசித்தாந்த நூல்களைக் கற்கத்தொடங்கியபிறகு ஞானியாரடிகளிடம் தொடர்புகொள்ளத் தொடங்கினர். ஞானியாருடைய மெய்யறிவாற்றலும் பேரறிவும் இவ ருடைய உள்ளத்தைக் கவர்ந்தன. ஞானியார் மறைவு வரையில் அவருடைய அடித்தொண்டராக விளங்கினர்.

நூல்இயற்றக் குறிப்புக்கள்

தென்னிந்திய சிற்பக்கலை, தென்னிந்திய ஓவியக்கலை, தென்னிந்திய வரலாறு ஆகிவைகளைக் குறித்து நூல்கள் எழுதவேண்டுமென்று திட்டமிட்டு அதற்கு வேண்டிய குறிப்புக்களை யெல்லாம தொகுத்துக்கொண்டிருந்தார்.

தமிழில் எழுதிய நாட்டு வரலாற்றின் முற்பகுதியை அண்ணுமலைப் பல்கலைக்கழகமே வெளியிடும் பொறுப்பேற்றுள்ளது.

பண்புநலம்

சிறந்த குணநலம் அமையப்பெற்றவர் இவர். சிறிது போது இவருடன் பழகினும் நீண்டகாலப பழக்கம் பெற்றவரைப்போல் காணபபெறுவா. இல்லதிற்குச் செல்லும் நண்பர்கட்குத் தக்காகுகு விருந்துசெய்து மகிழ்விப்பார். நண்பர்கட்கு இவர் எழுதுங் கடிதங்கள் பண்புநலம் கனிந்ததாக விளங்கும். ஒரு நண்பருக்கெழுதிய கடிதததில், "கல்வியினும் இனிய நண்ப!" என்று அவரை விளிதஎழுதினர்.

இறுதி

பிஞ்சிற் பழுத்துச் சுவையுடன் இலங்கிய இவர் பெருமையைத் தமிழ் உலகம் அறியத்தொடங்கிய சமயத்தில், அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழாராய்ச்சித் துறைத் தலைவராக ஏற்படுத்தப்பெற்று வேலையை ஏற்பதற்குள் 1941-ஆம் ஆண்டு சூன் திங்களில் காய்ச்சல் நோயினல் தமது முப்பத்தெட்டாவது அகவையில் காலமானர்.

கூ. சோமசுந்தர தேசிகர்

தோற்றம்

கு. சோமசுந்தர தேசிகர் தஞ்சைமாவட்டத்திலே 1897-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் பதினெறன்றும் நாள் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் குருசாமித் தேசிகர். தாயார் பெயர் செல்லத்தம்மாள்.

கல்வி

தேசிகர் இளமையிற் கற்கவேண்டிய கல்வியைக் கற்றார். பிறகு தமிழ்ப் புலவராதற்கு எண்ணித் திருவையாற்று அரசர் கல்லூரியிற சேர்ந்து தென்மொழியும் வடமொழியுங் கற்றார். 1917-ஆம ஆண்டில் தமிழ்ப் புலவர் தேர்வில் தேறிப் பட்டமம பெறறார. ஆங்கிலத்தில் பி. ஒ. எல். தேர்விலும் தேறினர். ஆகவே, இவரிடம் மும்மொழித் திறமையும் செமமையாக அமைந்துகின்றது.

ஆசிரியத் தொழில்

1918-ஆம ஆண்டில் திருச்சியைச் சேர்ந்த முசிரி உயர்நிலேப்பள்ளியில் தமிழாசிரியராக அமர்ந்தார். அங்கு சில ஆண்டுகள் ஆசிரியராக வேலேபார்த்தார் இவருடைய நுண்ணறிவைக்கண்ட திருவையாற்றுக கலலூரித் தலேவர் இவரைத் திருவையாற்றுக் கல்லூரியிலேயே 1924-ஆம் ஆண்டில் தமிழ்ப் பேராசிரியராக அமர்த்தினர்.

மணமும் மக்கட்பேறும்

1919-ஆம ஆண்டில் இவருக்குத் திருமணம் நடை பெற்றது. சட்டநாதன், விசுவநாதன், இராமநாதன், சந்திரசேகரன், திருஞானசம்பந்தன் என்னும ஆண்மக்கள் ஐவரும சிவகாமி என்னும பெண்மகள் ஒருத்தியும் மக்கட் பேறுகத் தோன்றினர்

தமிழ்த்தொண்டு

இவர் பேராசிரியராக அமர்ந்து தமிழ்ப் புலவர்களே உண்டாக்கும் பணிபுரிந்ததுடன் கலேத்தொண்டிலும் கருத்துச் செலுத்தினர். வடமொழியில் உள்ள அவிபாகம் என்னும் நாடகநூலேத் தமிழில் மொழிபெயர்த்தார். பிரபுலிங்கலீலே முதலிய நூல்களுக்குக குறிப்புரை எழுதினர். தமிழ்பபொழில், முதலிய பத்திரிகைகளில் அரிய

கட்டுரைகள் பல எழுதினர். சொல்லாற்றலில் நல்லாற்றல் படைத்தவராகலான் சங்கங்கள் பலவற்றில் சொற்பொழிவுகள் நிகழ்த்திப் புகழடைந்தார். 1930—36-ஆம் ஆண்டுகளில் பல்லாவரத்தில நடைபெறற பொதுநிலைக் கழக விழாக்களில் அடிகளால் அழைக்கப்பெற்றுச் சொற்பொழிவாற்றினர். இவருடைய சொறபொழிவை மறைமலையடிகளாரே போறறிப புகழ்ந்து பாராட்டினர். திருநெல்வேலியில் நடைபெறற மெய்கண்ட சாததிர மாநாட்டில் கா சுபபிரமணிய பிள்ளை எம் ஏ. எம். எல் அவாகள் தலைமையில 24—5—41-ல் போற்றிப் பஃறொடை என்னும் பொருள்பற்றி யாவரும புகழும்படியாகப் பேசினர்.

பண்பு

நல்லாசிரியர்கட்குத தொல்லாசிரியர்கள் கறின்ற நல்லிலக்கணங்கள் முற்றும் இவரிடம் ஒருங்கே அமைந்திருந்தன. அரிய பொருள்களையும் மிக எளிதாகக் கூறும் ஆற்றல் இவரிடம் மிகுதியாக விளங்கியது. மாணவர்கள் குற்றஞ்செய்தாலும அதனைக் குணமாகவே கருதுவார். குற்றதையுங் குணமாகக் கருதும் பான்மை இறைவனுடையது. இக்குணம் அமைவது அருமை. ஐயததுக்கிடமான செய்தியை மாணவர்கள் எத்தனைமுறை திருப்பித் திருப்பிக் கேட்பினும சிறிதுஞ் சலியாமல் மறுமொழி பகர்வார் ஓர் ஐயததை ஒருமுறைக்குமேல் கேட்பின் சிறிவிழும ஆசிரியப பெருந்தகைகள் நிறைந்துள்ள இவ்வுலகில் தேசிகரின் இச் சிரிய பண்பு போற்றதக்கதொன்று அன்றே?

இறுதி

சிரிய நல்லியல்புகளெல்லாம் ஒருங்கே செறியப்பெற்ற இந்நல்லாசிரியர் நீண்ட வாணாளைப் பெற்றிருக்கவில்லை.

நாற்பத்து நான்காம் அகவையில் 1941-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் பதினொன்றும் நாளில் சுரநோயின் கொடுமையால் யாக்கையையை தமர்பால்விட்டு வானகம் புகுந்தார்.

கசை. வல்லை. சண்முகசுந்தர முதலியார்

பிறப்பு

தொண்டை நாட்டிலே வல்லக்கோட்டை என்னும ஊரில் துளுவவேளாளாகுலத்தில் 1858-ஆம் ஆண்டு சூன் திங்கள் 24-ஆம நாள் சண்முகசுந்தர முதலியார் தோன்றினர். தந்தையார் பெயர் முத்துச்சாமி முதலியார். தாயார் பெயர் சுப்பம்மாள்.

கல்வி

இருமுதுகுரவர்கள் முதலியாரை உரிய பருவத்தில் பள்ளிக்கு அனுப்பினர். இவருடைய முன்னோர்கள் சென்னையை அடைந்து கொண்டித்தோப்பு என்னுமிடத்தில் குடியேறியிருந்தனர். ஆகவே முதலியாருடைய பள்ளிப் படிப்புச் சென்னையில் தொடங்கியது. தொண்டைமண்டலம் துளுவவேளாளர் பள்ளியில் ஏழாவது வகுப்பு வரையிற்படித்தார். ஆங்கிலமுஞ் சிறிது கற்றார். கல்வி கற்பது இவருக்கு மிக வெறுப்பாக இருந்தது. ஒழுங்காகப் பள்ளிக்குப் போகாமல் தில்லுமல்லுச் செய்து திரிந்தார். இந்தச் சமயத்தில் தந்தையாருங் காலமானார்.

சிலம்பம் பழகுதல்

சிலம்பம் பழகுதல் என்பது தடிகளைச் சுழற்றிச் சூழ்ச்சியாகப் பகைவர்களைத் தாக்குதற்குப் பழகும் தடிப் போர்க்கலையாகும். அடங்காப் பிடாரியாகத்திரிந்த முதலி

யார் அப்போது பக்கத்தில் வாழ்ந்திருந்த, "ஆட்பட்டா சண்முகசுந்தர முதலியார்" என்பவரிடத்திலே கோல்சுழற்று தல், கத்தி சுழற்றுதல், குத்துச்சண்டை முதலியவைகளை நன்கு கற்றுத்தேறினர் மற்றவர்கட்குச் சிலம்பக்கலை பழக்கும் ஆசிரியராகவும ஆனார். ஒருமுறை தம் ஆசிரி யரை எதிர்த்துவந்த பகைக்கூட்டத்தினரைப் பார்த்து, ஆசிரியர்கட்டளைப்படி,

"ஒருகுத்துக குத்த
உழககு இரத்தம் எடுக்க
நாலுபேர் சிரிக்க
நாலுமூலை நாலுசவுக்கம்
நடுவில்இருக்கும் செகுகான்கடை
ஓடுமாக கிருட்டிணகுளம்
ஒளிக்குமாம் பறைசசேரி
அமரவஸ்தாத் கொண்டிதோப்பு
சண்முக சுந்தரப்பா தீன்."

என்று சொல்லி முழகினர் இவருடைய ஆசிரியர் கூட்டத்தினர்களுக்கும் எதிரிகளுக்கும் ஏற்பட்ட போராட் டத்தில் எதிரிகள் புறங்காட்டியோடினர். முதலியார் எவரோடும் வலிய வம்பிழுப்பதில்லை. வந்த வம்பையும் விடுவதில்லை. இடையே நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளாலும் தாயார் வருந்திக் கேட்டுக்கொண்டபடியாலும் சிலம்ப வேலையை விட்டுவிட்டுக் கல்வி கற்கத்தொடங்கினர்.

தமிழ்நூல் கற்றல்

முதலியாரின் தாயார் நூல்கள் பலவற்றைக் கற்றுணர்ந்தவர். முதலியார் தம்முடைய தாயிடமே நூல்களைக் கற்கத்தொடங்கினர். நிகண்டு, திருக்குறள், நாலடியார், நைடதம், கம்பராமாயணம் முதலிய நூல் களைப் பாடங்கேட்டார். தொண்டைமண்டலம் துளுவ

வேளாளர் பள்ளியில் தமிழாசிரியராக இருந்த அப்பன் செட்டியாரை அடுத்து இலக்கணம், அநதாதி, கலம்பகம், பிள்ளைத்தமிழ், கோவை முதலியவை கற்றூர் பூவை கலியாணசுந்தர முதலியாரிடம் பெரியபுராணம், திரு ஞாயாடற் புராணம, கந்தபுராணம், திருக்கோவையார் முதலியவைகளைக் கற்றூர்.

சொற்பொழிவு கேட்டல்

அந்நாளில், வைதிக சைவசித்தாந்த சண்டமாருதம் சோமசுந்தர நாயகர், ஆறுமுக நாவலர், புரசை அட்டா வதானம் சபாபதி முதலியார், உரையாசிரியர் காஞ்சிபுரம் சபாபதி முதலியார், அட்டாவதானம் பூவை கலியாணசுந்தர யதீந்திரர் ஆகியோர் எல்லாவிடங்களினும் சைவ சமயச் சொற்பொழிகள் செய்து சைவதொண்டு செய்து கொண்டிருந்தாகள். முதலியார் சொற்பொழிவுகள் நடக் கும் இடங்களுக்கெல்லாஞ் சென்று சொற்பொழிவைக் கருதுதுடன் கேட்கத்தொடங்கினர். அதன் பயனக இவருடைய உள்ளத்தில் சைவநூல்களைக் கற்றல் வேண்டும் என்னும விருப்பமும் உண்டாகியது. சிவாசாரி யாரிடத்தில் தீட்சைபெற்றுச் சிவபூசை செய்தலை மேற் கொண்டதுடன் பூவை கலியாணசுந்தர யதீந்திரர் இடத் தில் சிவஞானபோதம் முதலிய நூல்களை ஐயந்திரிபறக் கற்றுணாந்தார். சிவஞானபோதம், சிவஞான சித்தியார், இருகளறுபோதம் முதலிய நூல்களைத் தம் கையால் எழுதினர்.

கச்சிக்கலம்பகம்

ஒரு நாள் தொண்டைமண்டலம் துளுவ வேளாளர் பள்ளியில் பெருங்கூட்டம் கூடியிருந்தது. சென்னை இராசதானிக் கல்லூரிப் பேராசிரியர் பூண்டி அரங்கநாத

முதலியாரால் இயற்றப்பெற்ற கச்சிக்கலம்பகம் என்னும் நூலின் அரங்கேற்றம நடந்துகொண்டிருந்தது. உயா நீதிமன்ற நீதிதகலைவர்களும் வழக்கறிஞர்களும் புலவர் பெருமக்களுங கூடியிருநதனா. அரங்கேற்றம் நடை பெறுஞ செய்தி இவருகதுத தெரியாது. தற்செயலாக அவ்வழியே வந்த இவர் கூட்டங்கூடியிருப்பதன் காரணத்தை உசாவியறிந்தார். உள்ளே சென்று உட் கார்ந்தார். எல்லோருடைய கைகளினும புதகம் இருப் பதைப் பார்த்தார். தாமும ஒரு புதகமபெற எண்ணினர்.

"மாகசிக் கனமொழியாள் முகையிலிட
இடப்பிதிரவாளிக் கொத்தை,
யேகசிக கலகமதப் பயலடமாச
சொரியவுடல் வாடிஙங்தென்
பாகசிக் கலுற்றனள்நற் பூண்டிரங்க
நாதகுங்கா அன்பாரும்பெட்
பாகசிக கலம்பகமாந தார்தந்தால்
உயிருறும்வீற் பன்ன ரேறே"

என்னும் பாட்டை எழுதிக கலமபக ஆசிரியர் அரங்க நாதரிடத்தே அனுப்பினர். பாட்டைக்கண்ட பேராசிரியர் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். தாமே நேரில் வந்து புதகம் ஒணறைக்கொடுத்தார். அவருடைய பாட்டைப் பாராட் டினர்.

சொற்பொழிவுகள் செய்தல்

சைவசமய உண்மைகளை எங்கும் பரப்ப எண்ணிய இவர் எல்லா இடங்களினும் சொற்பொழிவு செய்தார். இவருடைய சொற்பொழிவைக்கேட்டுப் பலர் சைவ சமய உண்மைகளை நன்றாக அறிநதுகொண்டாகள். வேதாந்தச் சொற்பொழிவுகள் நடக்கும் இடங்கள் பலவற்றிற்குச் சென்று அங்கு சொற்போரிட்டார். சைவச் சொற்பொழிவு

கள் நடக்குமிடத்தே இவர் சென்றிருப்பாராயின் கூட்டம் அமைதியாக நடக்கும். இவர் சொற்பொழிவுகள் செய்ததோடு பலருக்கு இலக்கண இலக்கியங்களைக் கற்பித்து அவர்களைப் புலவராகவுஞ் செய்தார். தனிப்பாடல்கள் பல செய்ததையன்றி இவர் நூல் செய்ததாகத் தெரியவில்லை

இறுதி

சைவசமய வளர்ச்சிக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் உழைத்திருந்த இவர் 1941-ஆம் ஆண்டு மேத்திங்கள் நான்காம நாள் சதுரங்கபட்டினத்திலே தமது 83-ஆவது அகவையில் இறைவன் திருவடி நீழலை எய்தினர்.

உ0. சண்முகம் பிள்ளை

தோற்றம்

செந்தமிழ்க் கடவுளாகிய முருகக் கடவுளிடத்திலே நீங்காத பேரன்பு கொண்டவராகிய வ. சு. சண்முகம் பிள்ளை 1880 ஆம ஆண்டு ஆக்டோபர்த் திங்கள் மூன்றும் நாள் தென்னார்க்காடு மாவட்டத்திலே உள்ள மஞ்சக்குப்பத்திற் பிறந்தார. தந்தையார் பெயர் சுப்பிரமணியப்பிள்ளை. தாயார் பெயர் வள்ளியம்மாள்.

கல்வி

தந்தையராகிய சுப்பிரமணியப்பிள்ளை அரசாங்க அலுவல் பார்த்தமையின் பல ஊர்களுக்கு மாற்றப்பட்டார். ஆகவே இளைஞராக இருந்த சண்முகம் பிள்ளையும், மஞ்சக்குப்பம், நாமக்கல், கும்பகோணம், திருவாரூர், தஞ்சை, மதுரை, சென்னை ஆகிய இடங்களுக்குப்போய் ஆங்காங்கிருந்த பள்ளிகளில் கல்வி கற்றார். மெட்ரிகுலேஷன்

தேர்வு வரைக்கும் வடமொழி கற்றுத்தேர்ந்தார். மதுரையில் நடைபெற்ற இராமநாதபுரம் அரசி தமிழ்ப் பரீட்சை எனப்பெறும் தேர்வில் முதலாவதாகத் தேறினர். பிறகு கிறிஸ்தவ கலாசாலைத் தமிழ்த தேர்வில முதலாவதாகத் தேறிச் சேதுபதிமெடலைப் பெற்றார். சூரியநாராயண சாததிரியாருடைய பன்னிரு மாணவர்களில இவர் ஒருவர்.

அலுவல்

இவர் பி. ஏ. பி. எல். தேர்வில் தேறிப் பட்டம் பெற்றார் முதலில் உயர்தர நீதிமன்றத்தில் அலுவலில் அமர்ந்தார். பிறகு 1921-ஆம் ஆண்டு முதல் 1935-ஆம் ஆண்டு வரையில் திண்டிவனம், பழனி, திருநெல்வேலி, கும்பகோணம், உடுமலைப்பேட்டை, திருக்கோவலூர், மஞசக்குப்பம, திருத்தருப்பூண்டி, மதுரை, இராமநாதபுரம், திருவையாறு, திருவள்ளூர் ஆகிய இடங்களில் மாவட்ட முன்சீபபாக வேலை பாததார. பிறகு 1935-ஆம் ஆண்டில் ஓய்வுபெற்றுக் கூடலூர் மஞசக்குப்பததில் தங்கினர்.

நற்பணிகள்

வேலையில் இருந்தபோதும், ஓய்வுபெற்ற பிறகும் இவர் தமது பொழுதை நல்ல வேலைகளிலே செலவிட்டார். சிவப்பதிகள் பலவற்றிற்குச் சென்று சிவபெருமானைப் போற்றி வழிபட்டார். பல சிவப்பதிகளின் புராணங்களை உரைநடையில் எழுதி அப்பதிகளின் வரலாற்றை எல்லோரும அறிந்து கொள்ளுமாறு செய்தார். மாணவர் கட்குத திருக்குறள், நாலடியார், நன்னூல் முதலிய நூல்களைப் பாடஞ சொன்னர். பெரியவர்களுக்குப் பெரிய புராணம் திருவிளையாடற் புராணம், உலாக்கள் கலம்பகங்கள் முதலியவைகளைப் படித்துப் பொருள் விளக்கினர். தேவாரம் பெற்ற சிவப்பதிகளில் 257 பதிகட்குச் சென்று

இறைவனைக் கண்டு வழிபட்டுப் போற்றினர். தந்தையார் வெளியிட்ட நூல்களுக்குப் பெருந்துணையாக அமைந்து நின்றதுடன் தந்தையாருக்குப்பின் அந்நூல்களை இரண்டாம் பதிப்பாக அச்சிட்டு வெளியிடுதலையும் மேற்கொண்டிருந்தார்.

இவர் தாமாகவே எழுதிவெளியிட்ட நூல்கள்.

நூல்கள்

1. திருவாடனைப் புராணம்
2. திருகுடவாயிற் புராணம்
3. கண்டியூர்ப் புராணம்
4. கோகாணத் தலபுராணம்

என்பன இவருடைய உரைநடை நூல்கள். திருத்தணிகை முருகன்மீது "தணிகை நூற்றெட்டு வெண்பா வந்தாதி" என்னும் செய்யுள் நூலையும் இவர் பாடினர். உ. வே. சாமிநாதையரைக்கொண்டு திருக்கழுக்குன்றத்து உலாவை வெளிப்படுத்தினர்.

இறுதி

இவ்வாறு பல நற்பணிகளில் ஈடுபட்டிருந்த இவர் நல்ல நினைவுடனும முருகப்பெருமானை மறவாப் பண்புடனும் 1941-ஆம் ஆண்டு மார்ச்சுத திங்கள் மூன்றும்நாள் மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலக வாழ்வை அடைந்தார்.

உ.வே. காழி. சிவ. கண்ணுச்சாமிப்பிள்ளை

பிறப்பு

சோழவளநாட்டிலே சீகாழிக்கு அண்மையில் உள்ள திருநல்லூர்ப் பெருமணம் என்னும் ஆச்சாபுரத்தில், வழி வழிச் சைவவேளாளர் குலத்தில் 1897-ஆம ஆண்டு மார்ச் சுத் திங்கள் பத்தொன்பதாம் நாள் கண்ணுச்சாமிப்பிள்ளை பிறந்தார். தந்தையார் பெயர் சிவலோகம்பிள்ளை. தாயார் பெயர் கண்ணம்மாள். கண்ணுசசாமிப்பிள்ளைக்கு உடன் பிறந்தவர்கள் நால்வர்.

கல்வி

கண்ணுச்சாமி சிறு குழந்தையாக இருந்தபோதே அவருடைய தந்தையார் வாணிகத்தை முன்னிட்டுச் சீகாழிக்குக் குடியேறினர். கண்ணுச்சாமியின் பள்ளிப்படிப்புச் சீகாழியில் தொடங்கியது. சீகாழியில் பத்தாவது வகுப்புவரையிற் படித்தார்; பிறகு திருச்சிராப்பள்ளிக்குச் சென்று அங்கு எப ஏ. வரையில் படித்தார்.

உருவுகண்டெள்ளாமை வேண்டும்

கண்ணுச்சாமி சிறுபிள்ளையாயிருக்கும்போது அகவைக்கேற்ற உடற்கட்டமையப் பெறாமல பார்வைக்குச் சிறு பையனைப் போலக் காணப்பட்டார். அவரை எப். ஏ. வகுப்பு மாணவர் என்று கூறின், கேட்பவர் பொய்யென நினைத்து எள்ளி நகையாடுவர். "உருவுகண்டெள்ளாமை வேண்டும். உருள்பெருந்தேர்க், கச்சாணியன்னர் உடைத்து" என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். ஆயினும் இவ்வுலகம் திருவள்ளுவர் கூறிய மறைமொழியை ஒரு பொருட்படுத்தாமல் காண்டலளவையைக்கொண்டே பெரும்

பாலான முடிவையும் செய்வதாக இருக்கிறது. ஒருநாள் கண்ணுச்சாமி பல புத்தகங்களைக் கையில் தாங்கியவாறு கடைதெருவில் பள்ளியை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார். சிறுபையன்போல் தோற்றமளிக்கும் இவர் பல புத்தகங்களுடன் செல்வதைப் பார்த்து முகமதிய இளைஞன் ஒருவன், "நீ எவ்வகுப்பில் படிக்கின்றாய்; இவ்வளவு புத்தகங்களைச் சுமந்துகொண்டு செல்லுகின்றாயே?" என்று கேட்டான். கண்ணுச்சாமி, "நான் எப். ஏ. வகுப்பில் படிக்கின்றேன்" என்று கூறினார். அம்முகமதிய இளைஞன் இவர் கூறியதை நம்பவில்லை. அங்கிருந்தவர்களைப் பார்த்துக் கைகொட்டி நகைத்தான். "இந்தப் பையன் நான்காவதோ ஐந்தாவதோ படிக்கக்கூடும். எப். ஏ. படிப்பதாகப் பொய் சொல்லுகிறான்," என்று இயம்பிக்கொண்டே இவருடைய கையில் இருந்த புத்தகங்களைப் பறித்துப் பார்த்தான்! எலலாப் புத்தகங்களும் எப். ஏ வகுப்பிற்குரிய பாடப்புதகங்களாகவே இருத்தலைப் பார்த்தான. கண்ணுசசாமி கூறியது மெய்ம்மைதான் என்று உணர்ந்தான், "நான் உன்னுடைய தோற்றத்தைப் பார்த்து ஏமாநது போனேன். நான் கூறியது குறிதது மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறேன்" எனறு கூறி அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான்.

சென்னையில் கற்றல்

திருச்சியில் எப். ஏ. த் தேர்வில் வெற்றியடைந்த கண்ணுச்சாமி சென்னையை அடைந்து பச்சையப்பன் கல்லூரியில் பி. ஏ. வகுப்பிற் சேர்ந்தார். அப்பொழுது புதிதாக பி. ஏ. வகுப்பிற்குத் தமிழை விருப்பப்பாடமாக ஏற்படுத்தியிருந்தனர். ஆயினும் அத்தேர்விற்கு ஐந்தாறு பேரே தேர்வு எழுதச் சென்றனர். அவர்களில் இவர் ஒருவர்

தாம் தேர்வில் தேறினர். கல்லூரித் தலைவர் இவருக்குச் சங்கநூல்கள் பலவற்றைப் பரிசாக வழங்கினர்.

திருமணம்

இவர் எப். ஏ. வகுப்பில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும்போதே சுந்தரம் என்னும பெண்மணியை மணம புரிந்தார். மக்களும் சிலர் தோன்றினர்.

சென்னையில் அலுவல்

பி ஏ த் தேர்வில் தேர்ச்சியடைந்த இவர் அஞ்சல் இலாகாப் பிரிவுத் தலைவரின் காரியாலயத்தில் அலுவல் பார்க்கத்தொடங்கினர்.

தமிழ்த்தொண்டு

அலுவலில் இருக்குங்காலத்திலேயே கண்ணுச்சாமி ஆங்கில நூல்கள் சிலவற்றைத் தமிழில் மொழிபெயர்த்தார். திருநெல்வேலிச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் அச்சிடும் நூல்களைத் திருத்துதல் அச்சுப் பிழை பார்த்தல் முதலிய தமிழ்ப் பணிகளையும் மேற்கொண்டு தமது இறுதி நாள் வரையிலும் செய்தார். இராமச்சந்திரபுரம் அன்புநிலையத்தினர் பதிப்பித்து வெளியிட்ட சுத்தானந்த பாரதியாருடைய நூல்களும இவருடைய பார்வையில் வெளிவந்தன. 'செந்தமிழ்ச் செல்வி' என்னும திங்கள் வெளியீட்டில் பல கட்டுரைகளும் கதைகளும் எழுதினர்.

நாடகத்தொண்டு

கண்ணுச்சாமி நாடக்கலை வளர்ச்சிக்கும் பணிபுரிந்தார். இவரும் இவருடைய நண்பர்கள் பலரும் நாடக சபை ஒன்றை ஏற்படுத்தினர். அதில் இவர்களே நாடக பாத்திரங்களாகக் கோலம் பூண்டு நடித்தனர். பல ஊர்

களுக்குஞ் சென்று செல்வர்களுடைய ஆதரவிலே நாடகம் நடித்தனர். நாடகத்தால் கிடைத்தபொருள்களை அறவழியிற் செலவிட்டனர். இறுதியில் திருவாங்கூர் அரசியார் முன்பும் ஒரு நாடகத்தை நடத்தி அரசியாருடைய பாராட்டுதலைப் பெற்றார்கள்.

இறுதி

செந்தமிழ் வளர்ச்சிக்கு நல்ல தொண்டு செய்திருந்த இவர் 1943-ஆம் ஆண்டு மார்கழித்திங்கள் 8-ஆம் நாள் தமது நாற்பதாறாம அகவையில் இவ்வுலக வாழ்வைத் துறந்தார்.

நூல்கள்

1. விலங்குகளின் அறிவுக்கதைகள்
2. ஊதர்பர்பாங
3. போர்க்கருவிகளின் வரலாறு
4. பெருமாள் மாடு
5. நீதிநெறி விளக்கவுரை
6. வேலனும் அவரைக்கொடியும்
7. அரக்கா மறலி
8. பிறந்தநாட் பரிசு
9. எலிக்குடும்பம்

முதலியன இவருடைய நூல்கள்.

---

௨௨. பலராம ஐயர்

பிறப்பு

தென்னார்க்காடு மாவட்டத்திலேயுள்ள கடலூரில் 1875-ஆம் ஆண்டில் பலராம ஐயர் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் கோதண்டராம ஐயர். தாயார் பெயர் சிவகாமசுந்தரி.

கல்வி

பள்ளிப்படிப்பையும் கல்லூரியில் எப். ஏ. வரையுள்ள படிப்பையும் கடலூரில் செயின்ட்சோசப் கல்லூரியிற் படித்து முடித்தார். பிறகு சென்னை மாநகரையடைந்து கிறித்துவக் கல்லூரியில் பி. ஏ. த் தேர்வுக்குப் படிக்கத் தொடங்கினர் கணிதத்திலும் தமிழிலும் கூரிய அறிவு அமையப்பெற்று விளங்கினர்

பரிதிமாற் கலைஞர்

அக்காலத்தில் அக்கல்லூரியில் தமது பெயரைப் பரிதிமாற் கலைஞன் என்று தமிழில் மொழிபெயர்த்த வி. கோ. சூரியநாராயண சாத்திரியார் தமிழாசிரியராக அமர்ந்திருந்தார். சூரியநாராயண சாததிரியார் தமிழைப் போதித்த திறம் பலராம ஐயருக்குத் தமிழார்வத்தை மிகுதிப்படுத்தியது. சாத்திரியாருடைய இயற்றமிழ் மாணவர்களில் இவரும் ஒருவராகித் தமிழை மிகுந்த முயற்சியுடன் கற்கத்தொடங்கினர். பெரும்பாலும் சாத்திரியாருடைய இல்லத்திலேயே தங்கிக் கருத்துடன் தமிழ் கற்றார். இளம்பருவத்திலேயே செய்யுள் பாடுந் திறனும் உரைநடையெழுதுந் திறனும் நன்றாக அமையப்பெற்றார். சொற்பொழி வாற்றலில் சிறந்த திறமையும் இவருக்கு உண்டாகியது. சாத்திரியாரிடம் பாடங்கேட்க இயலாதவர்கள் ஐயரிடம் பாடங்கேட்டலே அதற்கு ஒப்பாக எண்ணினார்கள்.

ஆசிரியத் தொழில்

ஐயருக்கு அகவை பதினெட்டு நடந்துகொண்டிருக்கும்போது தந்தையார் விண்ணுலகெய்தினர். குடும்பம் எளிய குடும்பமாகையால் குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்பு ஐயருடைய தலையில் விழுந்தது. கல்லூரிப்

படிப்புப் பி. ஏ. ப்பட்டம் பெறுவதற்கு முன்பே முடிந்து விட்டது. கடலூர் நகர உயர்நிலைப்பள்ளியிலும், காரைக்குடி மீனாட்சிசுந்தரேசுவரர் வித்தியாசாலையிலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், தமிழாசிரியராக அமர்ந்து பணியாற்றினார். 1911-ஆம் ஆண்டில் கள்ளிக்கோட்டைக்குச் சென்று வாணிபக்கல்வி, சுருக்கெழுத்து முதலிய கலைகளில் பட்டமும பற்சான்றிதழும பெற்றுவந்தார். 1935-ஆம் ஆண்டில் தமது அலுவலில் இருந்து ஓய்வு பெற்றார்.

நல்லியல்புகள்

ஐயர் கம்பராமாயணச் சொற்பொழி வாற்றுதலில் வல்லவர். இவருடைய இராமாயணச் சொற்பொழிவுகள் கேட்டார்ப் பிணிக்குந் தகையவாகவும் கேளாரும் வேட்பவும் விளங்கும். பள்ளியிற்பாடஞ் சொல்லுதலே யன்றி இல்லத்திலும மாணவர்பலாக்கு ஒய்வு ஒழிவு இல்லாமல் கல்வி கற்பித்துக்கொண்டிருந்தார். சாத்திரியாருடைய கொள்கையையே ஐயரும் பின்பற்றினர். தமமிடம் கல்வி கற்கும் மாணவரிடததில் இருந்து இவர் எத்தகைய கைம மாற்றினையும் பெறமாட்டார்.

எழுதிய நூல்கள்

இவர் அலுவலில் இருந்த காலத்திலும் ஓய்வு பெற்றிருந்த காலத்திலும் நூல்கள் பல எழுதினர்.

1. தசரதன் தவறு
2. வல்லி பரிணயம்
3. மத்தவிலாசப் பிரகசனம்
4. சூளாமணி உரைநடை
5. சிலப்பதிகாரக்கதை
6. ஆத்திசூடி நீதிக்கதைகள்

7. தசகுமாரசரித்திரம்
8. யௌவனும்பிகை பிள்ளைத்தமிழ்
9. தாமரை ஈண்மலர்

இறுதி

இவர் தமது அறுபத்தெட்டாவது அகவையில் 1943-ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

உங. சலசலோசனர்

பிறப்பு

சென்னை மாநகரில் சலசலோசனர் பிறந்தார். தந்தையார் பெயர் இராமசாமிச் செட்டியார். தாயார் பெயர் பூங்காவனத்தம்மையார். தந்தையாராகிய இராமசாமிச் செட்டியார் செய்யுள் செய்யும் திறம் அமையப்பெற்றவர். விநாயகர் பதிகம், திருவல்லூர்க்கலம்பகம் முதலிய நூல்கள் இயற்றியவர்.

கல்வி

சலசலோசனர் பள்ளிப்படிப்பை முடித்துவிட்டுக் கிறித்துவக் கல்லூரியிற் சேர்ந்து கல்வி கற்கத்தொடங்கினர் அக்காலத்தில் உவல்லியம் மில்லர்த்துரை என்பவர் கல்லூரித் தலைவராக இருந்தார். பரிதிமாற் கலைஞர் சூரியநாராயண சாத்திரியார் தமிழ்ப்பேராசிரியராக விளங்கினர். இவர்கள் இருவரிடத்தினும் ஆங்கிலத்தையும் தமிழையும் பாங்குறக் கற்றுணர்ந்தார் சலசலோசனர். "மகனறிவு தந்தையறிவு" என்பர் பெரியோர். பாவாணரின் திருமகனைப் பிறந்த சலசலோசனர் தாமும் பாப் பாடுந் தன்மையை இளமைக் காலத்திலேயே பெற்றார். இவருடைய பாடல்கள் இனிமையும் எளிமையும் திட்பநுட்பமுஞ்

செறிந்து விளங்கின. பாவின் சிறப்பைப் பார்த்து எல்லோரும் புகழ்ந்து கொண்டாடினர்கள். உடன்பயில் மாணவரும் ஒருசாலை மாணவரும் உளம் உவந்து போற்றினர். கல்லூரித் தேர்வுகளில் முன்மையாகத் தேறுதலும் பரிசுகள் பெறுதலும் இவருக்கு வழக்கமாக இருந்தன.

நூல் எழுதுதல்

மாணவராக விளங்கியிருந்த இவர் பரிதிமாற் கலைஞரிடம் கல்விகற்ற பண்பினாலும் குடிப்பிறப்பினாலும் நூல்யாக்கும செயலிலும் ஈடுபட்டார். திருவள்ளுவர் ஆணைமூகக் கடவுள்மீது செந்தமிழ்ப்பதிகம் ஒன்றுபாடிப் போற்றினர். உலகப் புகழ்பெற்ற ஆங்கிலப் புலவராகிய செகப்பிரியர் செய்த நாடகங்களுள் தலைசிறந்து விளங்குவது சிமபலின் (Cymbeline) என்பது. அதற்குச் சரசாங்கி எனப்பெயர் கொடுத்துத தமிழில் மொழி பெயர்த்து நூலாகச் செய்தார். மேலும் தாம்செய்த நாடகநூலைத தாமே நடித்துக் காட்டவுந் தொடங்கினர். இராவ்பகதூர் சம்பந்த முதலியாருடன் சேர்ந்து நாடகம் தொடங்கினர். தாமே சரசாங்கியாகக் கோலம் பூண்டு நடித்தார். இவருடைய நடிப்புத்திறனைக் கண்டவர்கள் வியப்படைந்து போற்றினர்கள்.

நூல் நயம்

இவருடைய நூல் எழுதப்பட்டவுடனே அஃதாவது ஐம்பதாண்டுகட்கு முன்னர் வெளியாயிற்று. இந்நூலைக் கல்லூரித் தலைவர் உவில்லியம் மில்லர்த்துரைக்கே உரிமையாக்கி வெளியிட்டார். நூல் சிறந்த முறையில் அமைந்து விளங்கியது. நூலைப் பார்வையிட்ட அறிஞர்கள் சலசலோசனரைப் பாராட்டிப் புகழுரை புகன்றார்கள். மனோன்மணீய ஆசிரியராகிய பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, இறைத்

தவக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் பரிதிமாற் கலைஞர், கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார் முதலியோர் புகழுரை புகன்றவர்களுட் சிலராவர்.

"கைகேசி மனந்திரியக் கற்பித்த கூனியைப்போல்
மையார்கண் மடவாரோ மைந்தரோ மண்ணுலகில்
ஐயாவென் காதலனே யாரோவிக் காரியத்தைச்
செய்வாயென் றிப்பொழுது சிந்தையுறக் கற்பித்தார்.

நடுவனெனப் பேர்கொண்டு நட்டாரைப் பிரித்திடுவாய்
படுதொழிலைக் கைககொண்ட பாதகனே கொடுங்கூற்றே
அடுதொழிலைக் கைக்கொள்ளா அருமைபெருஞ் சுந்தரனுக(கு)
இடர்செய்தாய் நன்றோஈ தியம்பிடுவாய் இயம்பிடுவாய்

என்பன சலசலோசனர் சரசாங்கியில் இயற்றிய செய்யுட்கள். உரைநடையும் பாட்டுமாக விரவிய இந்நூல் படித்தற்கும் நடித்தற்கும ஏற்றமுறையில் அமைந்துள்ளது.

இறுதி

கூற்றுவன் அறிவிலாரை விரும்பான். அறிவுடையாரையே மிகுதியும விரும்புவான். அறிஞர்கள் கரும்பின் சாற்றைப்போன்றவர்கள். அறிவிலிகளோ கரும்பின் சக்கையைப் போன்றவராகள் என்பது அவனுடைய முடிவு. வாழ்வின் நடுவிலே அவன் வந்து புகுந்துவிடுவான். இதனைக் கருதியே பெரியோர்கள் கூற்றுவனுக்கு நடுவன் என்னும் பெயரையும நவின்றுள்ளார்கள் கலைத்தலைவன் (எம.ஏ) என்னும் பட்டதைப் பெற்றுச் சிறந்து விளங்கிய சலசலோசனர், தமது இருபத்தொன்றாவது அகவையிலேயே கூற்றுவனுக்கு இரையாகி முடிந்துபோனர். "நனிபேதையே நயனில் கூற்றம்."

உசு. பண்டித வேங்கடசாமி நாட்டார்

தோற்றம்

தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவையாறு என்னுஞ் சிவப்பதிக்கு அண்மையில் உள்ள நடுக்காவேரி என்னும் ஊரில் வேங்கடசாமி நாட்டார் 1884-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் நான்காம் நாள் பிறந்தார். நாட்டாருடைய தந்தையார் பெயர் முத்துச்சாமி நாட்டார்.

கல்வி

நாட்டார் ஆறாம் அகவையில் திண்ணைப் பள்ளியில் சேர்ந்து கல்வி கற்கதொடங்கினர். சிலகாலம் அப் பள்ளியில் கற்ற பின்னர் அவ்வூரில் இருந்த தொடக்கப் பள்ளியில் சேர்ந்து படித்தார். நாட்டாருடைய தந்தை யாகிய முத்துச்சாமி நாட்டாரும், அவருடைய இளவலாகிய சொக்கலிங்க நாட்டாரும் தமிழறிஞர்களாக இருந்தனர். முத்துச்சாமி நாட்டார் இலக்கணப் பிழையில்லாமல் திருத்தமாகப் பேசும் சீரிய இயல்பு வாய்ந்தவர். அந்த நற்பழக்கம் வேங்கடசாமியையுந் தொடர்ந்தது. திண்ணைப் பள்ளி மாணவராக இருந்தகாலம் முதல்கொண்டே பிழை யறப்பேசி வந்தார் வேங்கடசாமி.

நாட்டார் தம் தந்தையாரிடமும் சிறிய தந்தை யாரிடமும் சிறிய தமிழ் நூல்களோப பாடங்கேட்டுக் கல்வி யறிவை நாளும் பெருக்கிக்கொண்டு வந்தார். இம்முறை யில் நிகண்டு, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றி வேற்கை, நல்வழி, மூதுரை, நன்னெறி, நீதிநெறி விளக்கம் முதலிய நூல்களோ முறையாகக் கற்றார். ஓய்வு நேரங்களில் தோட்ட வேலை முதலிய வீட்டு வேலைகளையும் செய்தார்.

சிறிய நூல்களைப் படித்து முடித்தபின் அந்தாதி கலம்பகம், பிள்ளைத் தமிழ், உலா, தூது முதலிய நூல்

களைத் தந்தையாரிடமே பாடங்கேட்டார். பல நூல்களைத் தாமாகவும் ஒதி உணரத்தொடங்கினர். நன்னூலைத் தந்தையாரிடமே கற்றறிந்தார்.

நாட்டார் எப்பொழுதும் நூல்களைப் படித்தலிலேயே பொழுது போக்குபவராகவும், வீண் பேச்சுப் பேசுதல் விளையாடுதல் முதலிய பயனற்ற தொழில்களில் ஈடுபடாதவராகவும், இருந்தபடியால் அவருடைய பெயர் நடுக் காவேரியில் சிறந்து விளங்கியது.

மதுரைத் தமிழ்ச் சங்கம்

அந்நாளில் மதுரைமாநகரில் பாண்டித் துரைத் தேவர் என்னும் ஆண்டகையினால மதுரைத் தமிழ்ச் சங்கம் என்னும் பெயருடன் சங்கம் ஒன்று ஏற்படுதப் பெற்றது அந்தச் சங்கத்தின் சார்பாகப் புலவர் பள்ளி யொன்றும் அமைக்கப்பட்டது. புலவர் பள்ளியில் பிரவேச வகுப்புப், பாலபண்டித வகுப்புப், பண்டித வகுப்பு என மூன்று பகுப்புகள் ஏற்படுத்தப்பெற்றன. மேற்படி வகுப்புக்களில் கல்வி கற்றுத் தேர்வு எழுதுபவர் கட்குப் பட்டமும பரிசும வழங்கப்பெற்றன. தமிழ் மொழியை வளர்க்கவேண்டும் என்பதையே சிறந்தநோக்க மாகக்கொண்ட அச்சங்கம் அங்கு கல்வி கற்பவர்களே யல்லாமல் எங்கு கல்வி கற்பவர்களும் அங்கு வந்து தேர்விற் கலந்து வினுத்தாள்கட்கு விடையெழுதிப் பட்டமும் பரிசும் பெறலாம் எனத் திட்டமாகத்தெரியப் படுத்தியது. இச்செய்தியை நாட்டார் நண்பர் ஒருவர் மூல மாக அறிந்தார். தாமும் தேர்வுக்குச் சென்று எழுதிப் பட்டம பெறவேண்டுமென எண்ணினர். ஆனல் மதுரைக்குச் சென்று அங்கு கல்லூரியில் சேர்ந்து படிப் பதற்கு எண்ணவில்லை. வீட்டில் இருந்தவாறே படித்து

முடித்துத் தேர்வுக்கு மட்டும் சென்று எழுதுவதென முடிவு செய்தார். மூன்று வகுப்புக்கட்கும் பல நூல்கள் பாடமாக அமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு வகுப்பு நூல்களும் ஆசிரியரிடத்தில் இரண்டாண்டுகள் கற்றுணரக் கூடிய அளவுக்கு அமைக்கப்பட்டிருந்தன.

தனிப்பட்ட முறை

கல்லூரியிற் சேர்ந்து படிக்காதவர்களும் தனிப்பட்ட முறையில் தேர்வு எழுதிப் பட்டம பெறலாம் என்று வழி வகுக்கப்பட்டிருந்தது நாட்டாருக்கு மிக உதவியாக இருந்தது. தேர்விற்குப் பத்துத் திங்கள் இருக்கும்போது தான் நாட்டாருக்குச் செய்தி தெரிந்தது. பிரவேச வகுப்பு நூலகளைப் பதுதுதிங்களில் படிதுமுடித்துத் தோவு எழுதுவதென்று முடிவுசெய்தார். இரண்டாண்டு கள் ஆசிரியரிடம் வருந்திக் கறறுணரவேண்டிய நூல்களை யெல்லாம் பத்துத் திங்களில்படித்து முடித்துத் தேர்வுக்குச் சென்று எழுதினர். பிரவேச வகுப்பில் (முதல் தேர்வில்) இரண்டாம் மாணவராக வெற்றிபெற்றார். பரிசும் கிடைத்தது.

பாலபண்டிதர்

பிரவேச வகுப்பிற்கு அடுத்த வகுப்புப் பாலபண்டிதர் வகுப்பு. அவ்வகுப்புக்குரிய நூல்களையும் நாட்டார் ஒரே ஆண்டில் படித்துமுடிக்க எண்ணினர். அவ்வாறே படித்து முடித்து 1906-ஆம் ஆண்டில் பாலபண்டிதத் தேர்வில் எழுதினர். குறித்தகாலத்தில் தேர்வின் முடிவு வெளியா கியது. பாலபண்டிதத் தேர்விலும் நாட்டார் முதல் வகுப்பில் தேறினர். முதல் வகுப்பில் தேர்ச்சிபெற்றவர் நாட்டார் ஒருவரே; பரிசும் கிடைத்தது.

பண்டிதர்

இரண்டு தேர்வுகளினும் வெற்றிபெற்ற நாட்டார் மூன்றுவது தேர்வாகிய பண்டித வகுப்புத் தேர்விற்கும் ஓராண்டில் படித்துமுடித்துச் சென்றார். இம்மாணவரைப்புல மிக்க நாட்டாருக்கு இதுதேர்வும் எளிதாகவே இருந்தது. நாட்டார் இத்தேர்விலும் முதன்மையாகத்தேறித தங்கத் தோடாவைப் பரிசாகப்பெற்றார். அதுமுதல நாட்டாரு டைய பெயர், பண்டித. ந. மு. வேங்கடசாமி நாட்டார் என வழங்கத்தொடங்கியது நாட்டார் தங்கத்தோடா பரிசுபெற்ற செய்தி நாள்தாள்களிலெல்லாம வெளிவந் தமையின் நாட்டாரைத் தமிழுலகம் நன்றாக அறிந்து கொண்டது. பழம்பெருந்தமிழ் நூல்களாகிய சிந்தாமணி, சிலப்பதிகாரம் புறநானூறு முதலிய நூல்களைத தாமே கற்றுணர்ந்த அவருக்கு ஏற்பட்ட சிறப்பைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ?

ஆசிரியத் தொழில்

நாட்டார் பண்டிதப்பட்டம்பெற்று மேலும் பல நூல் களை ஆராய்ச்சி செய்துகொண்டு தமது ஊரில் இருந்தார். அப்பொழுது திருச்சிராப்பள்ளியில ஹீபர் கல்லூரியில் பிச்சை இப்ராகிம புலவர் என்பவர் தமிழ்ப் புலவராக அமர்ந்திருந்தார் அவர் பெருஞ்செல்வர் தமிழில் நல்ல அறிஞர். அவர் ஊதியத்தைநாடித் தொழிலை மேற் கொள்ளவில்லை. கல்லூரித் தலைவருடைய வேண்டுகோளின் மீதும் தமிழ் வளர்ச்சியைக் கருதியுமே அப்பணியை மேற் கொண்டிருந்தார். அவர் 1908-ஆம் ஆண்டில் சிலதிங்கள் கள் விடுமுறை பெறநேர்ந்தது. அவர் தமது இடத்திற்குத் தக்கார் ஒருவரைத தேடினர். நாட்டார் மதுரைத் தமிழ்ச் சங்கத்தேர்வில் முதன்மையாகத் தேறியதை அறிந்திருந்த அவர் நாட்டாரைத் தம்மிடம வரவழைத்தார். தாம்

திரும்பி வரும் வரையிலும் அவரை அப்பணியில் அமர்த்திச் சென்றார்.

கற்பிக்கும் திறன்

தாம் கற்ற கல்வியைப் பிறருக்குப் போதிக்கும் வகையில் நாட்டார் திறமை மிகுந்தவராக இருந்தார். நாட்டாருடைய திருத்தமான தமிழ்ப் பேச்சும், போதனைத் திறமும் மாணவர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. நாட்டாரிடம் நன்மதிப்புக்காட்டி அமைதியுடன் பாடங்கேட்டனர். அவர்மீது நல்லன்பும் பற்றுங் கொண்டனர்.

சொற்பொழிவுகள்

திருச்சிராப்பள்ளியில் இருந்த சங்கங்களிலும் அவைகளிலும் நாட்டார் சொற்பொழிவுகள் பல செய்தார். சைவ சமய நூல்களையும் தேவார திருவாசகம் முதலியவைகளையும் நாட்டார் நன்கு ஆராய்ந்திருந்தமையின் அவருடைய சொற்பொழிவு மிகச் சிறந்ததாக இருந்தது. இதனால் பொதுமக்களும் நாட்டாரை நனகுணர்ந்து கொண்டனர்.

உயர்நிலைப்பள்ளியில் வேலை

பிச்சை இப்ராகிம் வேலைக்குத் திரும்பிய பிறகு நாட்டார் ஊருக்கு மீண்டார். ஆனால் அவருக்கு வேறூர் இடத்தில வேலை கிடைத்தது. 1909-ஆம் ஆண்டில் கோயமுத்தூர் செயின்ட் மிக்கேல் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராக அமர்ந்தார். அங்கும் அவருக்குப் பேரும் புகழும் உண்டாயின.

ஹீபர் கல்லூரியில் 24-ஆண்டுகள்

1910-ஆம் ஆண்டில் பிச்சை இப்ராகிம் புலவர் ஹீபர் கல்லூரியில் இருந்து விலகினர். அவருக்குப்பின் அவ்

வேலை நாட்டாருக்குக் கிடைத்தது. மாணவர்களும் மற்றவர்களும் அதுகுறித்துப் பெருமகிழ்ச்சியடைந்தனர். 1910-முதல் 1933-ஆம் ஆண்டு சூன்திங்கள் முடிய இருபத்து நான்கு ஆண்டுகள் அக்கல்லூரியில் நாட்டார் தமிழ்ப் பேராசிரியராக அமர்ந்திருந்தார். இவ்வாறு ஒரே இடத்தில் ஒரே கல்லூரியில் நிலையாக வேலை பார்த்தவர்கள் மிகச் சிலரே.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

நாட்டார் ஹீபர் கல்லூரியில் இருந்து ஓய்வு பெற்ற பின் நீண்டநாள் ஓய்வாக இருக்கவில்லை. மறுதிங்களே அவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக அமர்த்தப்பட்டார் நாட்டாருடைய புலமைக்குப் புலவர்களைத் தோற்றுவிக்கும அக்கலலூரி நல்லிடமாக அமைந்தது. ஆண்டமர்ந்து, ஏழு ஆண்டுகள் வரை பணி புரிந்தார். பிறகு 1940-ஆம் ஆண்டில் ஓய்வுபெற்றுத் தஞ்சை நகரையடைந்தார்.

குணநலன்கள்

நாட்டார் உண்மையான தமிழ்ப் புலவர். நாட்டில் எத்தனையோ போலிப் புலவர்களைப் பார்க்கிறோம அத்தகைய போலிப் புலவாகட்கெல்லாம் அரியேறுக விளங்கினர் நாட்டார். தெய்வ அன்பு நாட்டாரிடம் மிகுதியாகக் குடிகொண்டிருந்தது. அடக்கமும் பொறுமையும் ஒருங்கே அமையப்பெற்றவர். நாட்டார் பாடம் நடத்தும் வகுப்பில் அமைதி குடிகொண்டிருக்கும. மாணவர்கள் நாட்டாருடைய அன்பில்கட்டுண்டு அமர்ந்திருப்பர். ஒன்பான் வகைச் சுவைப் பாடல்களையும் நாட்டார் படித்துரைக்கும்போது கேட்போர் அவ்வச் சுவையின் பாற்பட்டு விளங்குவர். நாட்டார் பாட்டைப் பதம் பிரித்துப்

படித்துக் காட்டும்போதே மாணவர்கள் பொருளறிந்து கொள்வார்கள்.

உடன்பழகிய புலவர்கள்

நாட்டார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அமர்ந்து பணிபுரியும்போது, ரா. இராகவையங்கார், பண்டிதமணி—மு. கதிரேசச் செட்டியார், ச. சோமசுந்தர பாரதியார், சர்க்கரை—இராமசாமிப புலவா, சோழவந்தான்—கந்தசாமியார் முதலியோர் அங்கிருந்து பணிபுரிந்துகொண்டிருந்தனர். ஆகவே நாட்டார்க்கு மேற்கூறிய புலவா பெருமக்களுடைய கூட்டுறவும இருந்தது.

தொடர்புகள்

மதுரைத் தமிழ்ச் சங்கம, கரந்தைத் தமிழ்ச்சங்கம் முதலிய சங்கங்களில் நாட்டார் கலந்துகொண்டுபொதுநலப் பணிகள் பலவற்றில ஈடுபட்டிருந்தார். மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் செந்தமிழ்ப் பத்திரிகையிலும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத் 'தமிழ்ப்பொழி'லிலும் அரிய ஆராய்ச்சிக்கட்டுரைகள் பல எழுதினர். சைவ சித்தாந்த மகாசமாசத்துச் சித்தாந்தப் பத்திரிகையிலும் பல கட்டுரைகள் எழுதினர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் கல்லூரிப் பாடத்திட்டங்களை வகுக்கவும் பாடநூல்களை அமைக்கவும் பலர் சேர்ந்த அவை உண்டு. அவற்றுள் தமிழ் அவை ஒன்று. அதில் கல்லூரித் தமிழாசிரியர் பலரும் இடம் பெற்றிருப்பர். அக்கூட்டததில் நம் நாட்டாரும் பல ஆண்டுகள் இடம் பெற்றிருந்தார். தேர்வுகள் பலவற்றிற்குத் தேர்வாளராக இருந்தார்.

நாட்டார் எழுதிய நூல்கள்

ஆசிரியத்தொழிலில் வாணாள் முழுவதும் அமர்ந்திருந்த நாட்டார் நூல்களும் எழுதித் தமது பெயரைத் தமிழ் உலகத்தில் நிலைநாட்டினர்.

1. ஆத்திசூடி உரை
2. கொன்றை வேந்தன் உரை
3. உலக நீதி உரை
4. நறுந்தொகை உரை
5. மூதுரை உரை
6. நல்வழி உரை
7. நன்னெறி உரை
8. கார் நாற்பது உரை
9. திருவிளையாடற் புராணம் உரை
10. இன்ன நாற்பது உரை
11. களவழி நாற்பது உரை
12. சிலப்பதிகார உரை
13. மணிமேகலை உரை
14. அகநானூறு உரை
15. கண்ணகி வரலாறும் கற்புமாண்பும்
16. நகரீரா
17. பரணர்
18. கள்ளர் சரித்திரம்
19. சோழர் சரித்திரம்

முதலியன நாட்டாருடைய நூல்களாகும்.

இறுதி

வேலையில் இருந்து ஓய்வுபெற்ற பின் நாட்டார் தமது பெயரால் நூல் வெளியீட்டுக் கழகம் ஒன்றை அமைத்து நடத்தத்தொடங்கினர். அதன் வாயிலாகவும் நூல்கள் பல வெளிவந்தன. நாட்டாருக்கு ஆண்மகன் ஒருவனும் பெண்மக்கள் இருவரும் மக்கட்பேறாக அமைந்தனர். பெண்களில் பார்வதியம்மை என்னும் மூத்தபெண்ணும் புலவர் கல்வி கற்று வித்துவான் என்னும் பட்டமும் பெற்றுச் சிறப்படைந்தார். அந்த அம்மையாரும் நூல் கள் எழுதும் சால்பு அமையப்பெற்றவர். செந்தமிழ்த் தாயின் அருந்தவமகனாகத் தோன்றிய நாட்டார் இவ்வாறு

தமிழ்த்தொண்டு செய்து சீர்த்திபெற்றிருக்கும் நாளில், 1944-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் தமது அறுபதாவது அகவையிலே இறைவன் திருவடிநீழலை அடைந்தார்.

உரு. சற்குணர்

பிறப்பு

சற்குணர் 1877-ஆம் ஆண்டு மேத்திங்கள் 7-ஆம் நாள் சென்னைமாநகரிலே பிறந்தார். இவருடைய முன்னோர்கள் திருநெல்வேலியில் இருந்து சென்னைக்கு வந்தவர்களாம். சற்குணருடைய தந்தையார் பெயர் சாமுவேல் சற்குணர். தாயார் பெயர் ஞானப்பூஅம்மாள் சற்குணருடைய முழுப் பெயர் நரும்ராச சற்குணர் என்பது.

கல்வி

சற்குணர் தம் தந்தையாரிடத்தே கல்விகற்கத்தொடங் கினர். 'சி. எஸ். எம். உயர்தரக் கலாசாலையில் புகுமுக வகுப்புத் தேறியபின் கிறித்தவக் கல்லூரியிற் சேர்ந்து கல்வி கற்றார். ஆங்கிலக் கல்வி கற்கும்போதே தமிழ் நூல் களையும் பாடங்கேட்கத் தொடங்கினர். அப்பொழுது கிறித்தவக் கல்லூரியில் தமிழாசிரியர்களாயிருந்தவர்கள், கோபாலாச்சாரியார், மகாதேவ முதலியார், மறைமலையடி கள், வி. கோ. சூரியநாராயண சாத்திரியார் ஆகியோர் இவர்கள் சற்குணருடைய சிறந்த தமிழறிவைச் சிறப்பாக மதித்துப் போற்றினர்கள்; கலாசாலைக் கல்வியோடு தமிழ்க் கல்வியையும் இவர் தொடர்ந்து கற்றார். தொல் காப்பிய உரிஇயல் சூத்திரங்களை அப்பொழுதே நெட்டுருச் செய்துவிட்டார். பி. ஏ. வகுப்பில், கல்லூரியில் தமிழில் முதன்மையாகத் தேறியதற்காகச் சேதுபதியின் பொற்

பதக்கத்தைப் பெற்றார். மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பரீட்சையிலும் முதற் பரிசு பெற்றார்.

ஆசிரியர்

ஆசிரியராகவேண்டும் என்னும் அவா இவருக்கு மிகுதியாக இருந்தது. 1905-ஆம் ஆண்டில் சென்னை ஹாரிஸ் உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராக அமர்ந்து ஏறக்குறைய ஒன்பது ஆண்டுகள் தொண்டுசெய்தார். 1914-ஆம ஆண்டில் சென்னைத் திருப்பவுற் கலாசாலையைவிட்டுக், கா. நமச்சிவாய முதலியார் நீங்கியபோது இவர் மேற்படி கல்லூரியில் தமிழாசிரியராக அமர்ந்தார். இவர் ஆசிரியரான பின்பு மாணவர்களுக்கு இலக்கியச் சுவையும் பாட்டெழுதும் திறமையும் ஏற்பட்டன. நாட்டுப்பற்றையும் மொழிப் பற்றையும் இவர் மாணவர்களுக்கு நன்றாக ஊட்டினர். 1928-ஆம் ஆண்டில் மெஸ்டன் துறையின் வேண்டுகோளுக்கு இணங்கிச் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக அமர்ந்தார். அங்கு இவர் ஆசிரியராக இருந்த காலத்தில் ஒவ்வோராண்டிலும் 95%க்கு மேல் மாணவர்கள் தமிழில் தேறினர்கள்.

ஈடுபாடு

சங்க நூல்களிலே இவருக்கு மிகுந்த விருப்பம் உண்டு. புறநானூறும், சிந்தாமணியும கலித்தொகையும் இவருக்கு மிகவும் பிடித்தமான நூல்கள். உரைநடை நூல்களைவிடச் செய்யுள் நூல்களை மிகுதியாக விரும்பிக் கற்பார்.

எழுதிய நூல்கள்

இவர் எழுதிய நூல்கள் இரண்டு. ஒன்றின் பெயர் இலக்கண ஆக்கம். மற்றொன்று தமிழ்ப்பாடப் புத்தகம்.

குணநலன்கள்

யாவரிடத்திலும் இவருக்கு மிகுந்த அன்புண்டு. நண்பர்களிடத்தில் உள்ள குற்றங் குறைகளை இவர் அறவே

எண்ணிப்பார்க்கமாட்டார். கல்வி கற்க ஊக்குவதில் இவருக்கு ஒப்பாரும் மிக்காரும் இலர். தாம்கண்ட உண்மையை எந்த இடத்திலும் அஞ்சாது எடுத்துரைப்பார். தம் தந்தையாரிடத்தில் இவருக்கு மிகுந்த அன்புண்டு. கைம்மாறு கருதாது பல மாணவர்களுக்குத் தமிழ் நூல்களைப் பாடஞ்சொல்லி அவர்களைப் புலவர்களாக்கினர். தம் பெயருக்கேற்பக் குணம் அமையப் பெற்றவர்களில் இவர் ஒருவர். இவர் ஆங்கிலப்பட்டம் பெற்றிருந்தபோதிலும் தமிழன்னையிடத்திலேதான் மிகுந்த விருப்பமும் பற்றுங் கொண்டிருந்தார். உள்ளொன்றுவைத்து வெளியில் ஒன்று பேசமாட்டார். எக்காரணத்தை முன்னிட்டும் ஒருவருடைய மனம் புண்படுமாறு மொழிகளைக் கூறமாட்டார். எப்பொழுதும் கையில் புத்தகத்தோடுதான் காட்சியளிப்பார்.

உசூ. கா. சுப்பிரமணிய பிள்ளை

தோற்றம்

தென்பாண்டிநாட்டிலே திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலியில் 1889-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் ஐந்தாம் நாள் சுப்பிரமணிய பிள்ளை தோன்றினர். சுப்பிரமணிய பிள்ளையின் தந்தையார் பெயர் காந்திமதிநாத பிள்ளை. தாயார் பெயர் மீனுட்சியம்மையார். காந்திமதிநாத பிள்ளை திருநெல்வேலியில் சைவ வேளாள மரபில் முதன் முதலாகப் பி. ஏ. (இளங்கலைஞர்) என்னும் பட்டம் பெற்றமையின் பி. ஏப் பிள்ளை எனவும் அழைக்கப்பெற்றார்.

கல்வி

சுப்பிரமணிய பிள்ளை தமது ஐந்தாம் ஆண்டிலே திண்ணைப்பள்ளியில் கல்வி கற்கத் தொடங்கினர். முதல்

மூன்று வகுப்புக்கள் வரையில் அப்பள்ளியில் படித்தார். தந்தையார் இளமையிலேயே நிகண்டினைக் கற்பித்ததோடு ஆங்கிலமும் கற்பித்தார். பிறகு கிறித்துவ சங்கத்தாருடைய பள்ளியில் சேர்ந்து கல்வி கற்கத் தொடங்கினர். இவருக்கு நினைவாற்றல் நன்றாக அமைந்திருந்தமையின் எல்லா வகுப்புக்களினும் முதல்வராகத் திகழ்ந்தார். அதனால் சம்பளம இல்லாமல் கல்வி கற்கும் வாய்ப்பும் இவருக்குக் கிடைத்தது. 1906-ஆம் ஆண்டில் மெட்ரிக் தேர்வில் தேறினர். 1908-ல் எப். ஏயில் தேறினர். பிறகு சென்னைக்குச் சென்று மாகாணக் கல்லூரியிற் சேர்ந்தார். அங்கு நன்றாகக் கல்வி கற்று 1910-ஆம் ஆண்டில் பி. ஏ., வகுப்பில் முதன்மையாகத் தேறி பி. ஏ. பட்டம் பெற்றார். மேலும் கல்வியைக் கருத்துடன் கற்று 1913, 1914-ஆம் ஆண்டுகளில் எம். ஏ. த்தேர்விலும் தேறினர்.

சட்டப் பேரறிஞர்

பின் இவர் சட்டப் பேரறிஞர் (எம். எல்) என்னும் பட்டம்பெற விழைந்தார். அதற்குரிய நூல்களைச் சுருங்கிய காலஎல்லையிற் கற்று 1917-ஆம் ஆண்டில் எம். எல். என்னும் பட்டத்தையும் பெற்றார். அதுமுதல் இவருடைய பெயர் எம். எல். பிள்ளை என்று வழங்கியது.

திருமணம்

கல்வியறிவிற் சிறந்து விளங்கிய சுப்பிரமணிய பிள்ளைக்குப் பலர் பெண்கொடுக்க முன்வந்தனர். இறுதியில் நெல்லைநாயகம் பிள்ளை என்பவருடைய திருமகளான பிரமு அம்மாள் என்னும் மங்கையத் திருமணம் புரிந்தார்.

சட்டக்கல்லூரியில் வேலை

நேர்மையான வழியில் வாழ்க்கையைச் செலுத்த வேண்டுமென்பது இவருடைய நோக்கமாக இருந்தது.

ஆசிரியத்தொழில் சிறந்தது என்று எண்ணினர். சட்டக் கல்லூரியில் வேலை பெறுதற்கு முயன்றார். அவ்வேலை இவருக்குக் கிடைத்தது 1919-ஆம் ஆண்டுமுதல் 1927 ஆம் ஆண்டுவரையில் சட்டக்கல்லூரியில் ஆசிரியராக விளங்கினர்.

தாகூர் சட்ட விரிவுரையாளர்

இரவீந்திரநாத தாகூர் என்பவர் "உலகப் பெருங் கவி" என்று புகழ்பெற்றவர். "நோபல் பரிசு" என்னும் பரிசினைப்பெற்றவர். அவருடைய புகழ் உலகம் எங்கும் பரவியுள்ளது. அவருடைய குடும்பப்பெயரால் கல்கத்தாப் பல்கலைக் கழகத்திலே "தாகூர் சட்ட விரிவுரையாளர்" என்னும் பெயருடைய பரிசு ஒன்று அமைந்திருக்கிறது. சட்டக்கலையைப் பற்றி மூன்று பொருள்கள் கொடுக்கப் பெறும. அவைகளுள் ஏதாவது ஒன்றைபபற்றி பன்னிரண்டு சொற்பொழிவுகள் செய்தல்வேண்டும். அப் பரிசுப்போட்டியிற் கலந்துகொள்பவர்கள் தங்களுடைய விரிவுரைகளின் சுருக்கத்தை எழுதிக் கல்கத்தா பலகலைக் கழகத்திற்கு அனுப்புதல்வேண்டும். அச் சுருக்கத்தை வைதுக்கொண்டு விரிவுரையாளர்களுடைய தகுதி அளவிடப்பெறும். மிகச் சிறந்ததாக எண்ணப்பெறும் சுருக்கத்தை எழுதியவரைத் தாகூர் சட்ட விரிவுரையாளராகக் குறிப்பிட்டு ஆணை அனுப்புவார்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றவர் கல்கத்தாவுக்குச்சென்று தமது பன்னிரண்டு விரிவுரைகளையும் நிகழ்த்துதல்வேண்டும். பல்கலைக் கழகம் விரிவுரையாளருடைய எல்லாச் செலவுகளையும் ஏற்றுக் கொள்ளும். பேரவை ஒன்று கூட்டி அப்பேரவையில் பதினாயிரம் வெண்பொற் காசுகளை நன்கொடையாக வழங்கும்.

1920-ஆம் ஆண்டில் நம் சுப்பிரமணிய பிள்ளை இப் பரிசுப்போட்டியிற் கலந்து கொண்டார். இந்தியாவில் இருந்த சட்டப் பேரறிஞர்கள பலரும் அதிற் கலந்து கொண்டனர். சுப்பிரமணிய பிள்ளையோடு போட்டியிட்ட வர்களில் சென்னை உயர்நீதி மன்றத்து நீதித்தலைவராக இருந்த சி. மாதவன் நாயர் என்பவரும் ஒருவர்.

அவ்வாண்டில் கொடுக்கபபெற்ற மூன்று பொருள் களில் மிகக் கடுமையானது, "குற்றங்களின் நெறிமுறைகள" என்பது. சுப்பிரமணிய பிள்ளை இதனையே தமது விரி வுரைப்பொருளாகத் தெரிந்தெடுத்தார். சொற்பொழிவின் சுருக்கத்தை எழுதிக் கல்கத்தாப் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பிவைத்தார். கழகத்தினர் தமக்குவந்த சுருக்கங் கள் எல்லாவற்றையும் ஆராய்ந்துபார்த்து, சுப்பிரமணியப் பிள்ளையின் சுருக்கத்தைச் சிறந்தது என்று தேர்ந்தெடுத் தார்கள். இவரை அவ்வாண்டுக்குரிய தாகூர் சட்டவிரி வுரையாளராக வருமாறு அழைனயனுப்பினர்கள். சுப்பிர மணிய பிள்ளை குறிப்பிட்ட காலத்தில் மேற்படி விரிவுரை யைச்செய்து பெரும்புகழையும் பொருளையும் அடைந்தார். இது தமிழ் நாட்டிற்கே தனிப்பெருஞ் சிறப்பாகியது.

உயர் பதவியை நாடல்

தாகூர் சட்ட விரிவுரையாளரான இவருக்கு மூனிசிப் பாக வேலை பார்க்குமாறு அழைப்புக் கிடைத்தது. உயர் பதவியையே சுபபிரமணிய பிள்ளை நாடி நின்றதால் அப் பதவியை வேண்டாமென மறுத்துவிட்டார்.

பூசைப்பிள்ளை

இறைவனைப்போற்றி வழிபாடுசெய்யும் பூசனையை சுப்பிரமணிய பிள்ளை இளம்பருவம் முதற்கொண்டே மேற் கொண்டிருந்தார். பல்கலைக் கழகப்படிப்பை மேற்கொண்டு

மாணவர் விடுதியில் தங்கியிருந்தபோதும் பூசையை விட வில்லை. மாணவர்கள் ஐயாண்டி செய்ததையும் ஒருபொரு ளாக மதிக்கவில்லை. மேலும் இவர் தமிழர்க்கே தனிப் பண்பாடாகிய விருந்தோம்பலினும் திருந்திய மனப் பான்மை அமைந்தவராகப் பொருந்தியிருந்தார். சிறப் பாகப் பூசனை நிகழ்ந்த ஒருநாளில் நீதிபதி வேங்கட சுப்பாராவ், நீதிபதி தேவதாசுப்பிள்ளை என்னும் நண்பர்கள் இருவரைத் தம் இல்லத்திற்கு விருந்துண்ணவருமாறுவேண் டியழைத்தார். அவர்களும வருவதாக உடன்பாடு தெரி வித்தனர். குறிப்பிடப்பட்ட நாள் வந்தது. குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிடப்பட்ட நீதித்தலைவர்கள் இருவரும் பிள்ளையின் இல்லதுக்கு வந்துசேர்ந்தனர். பிள்ளையோ இறைவழிபாட்டில் ஈடுபட்டு மெய்ம்மறந்து, கருங்கல் மனத்தையும் கசிந்துருகச்செய்யும் திருவாசகமெனும் பெருவாசகத்தைக் கண்ணீர்சோர ஓதுவதில் உளஞ் செலுத்தியிருந்தார். விருந்தினராகவந்த நீதிபதிகள் பிள்ளை யின் பூசையைப் பார்த்துக்கொண்டு அமைதியாக அமர்ந் திருந்தனர். தம்மைக் கண்டதும் பூசையையெல்லாம் போட்டுவிட்டு ஓடிவராமல் உலகத்தையே மறந்து நின்ற பிள்ளையின்மெய்யன்பு நீதித்தலைவர்கட்கு மிகுந்த வியப்பை யளித்தது. பிள்ளை பூசையை முடித்துக்கொண்டு விரைந்து வந்தார். விருந்தினரைப் போற்றினர். அவர்களை வர வேற்காமல் காக்கவைத்தமையின்பொருட்டு மன்னிக்க வேண்டினர். நீதிபதிகளோ பிள்ளையைப்பார்த்து "பெரி யீர்! உண்மை வழிபாட்டை நாங்கள் இன்றுதான் பார்த் தோம். பூசையில் ஈடுபட்டுள்ள பலர் உலகினர் தம்மைப் புகழ்தல் ஒன்றையே நாடிப் பூசைசெய்கிறார்கள்" என்று கூறிப் புகழ்ந்துபோற்றி மகிழ்ந்து விருந்துண்டு சென் றார்கள்.

இரவீந்திரநாத தாகூர்

உலகப் புகழ்ப்பெற்ற வங்காளக் கவிஞராகிய இரவீந் திரநாத தாகூர் சென்னைக்கு வந்தார். சென்னைமாநகர மக்கள் பல இடங்களில் அவருடைய செஞ்சொன்மாரியைக் கேட்டுக் களித்தனர். அவர், தாகூர் சட்டவிரிவுரைப் பரிசு பெற்ற சுப்பிரமணிய பிள்ளையைப் பார்க்கவேண்டும் என் னும் விருப்பத்துடன் இருந்தார். சுப்பிரமணிய பிள்ளை இருக்கும் இடம் தேடிவந்து கண்டுகளித்து உரையாடி மகிழ்ந்தார் மேலும் இவருடன் அமர்ந்து கிழலோவியம் ஒன்றும் எடுத்துக்கொண்டார்.

அண்ணமலைநகரில் ஆசிரியர்

சென்னை அரசாங்கத்தின் சட்டத்துறைத் தலைவராக சர். சி. பி. இராமசாமி ஐயர் அமர்ந்தார். சட்டக்கல்லூரி யில் நிலையாகப் பேராசிரியர்களை வைத்திருப்பதால், மற் றைப் பேரறிவாளர்களுடைய புலமை சட்டக்கல்லூரி மாணவர்கட்குப் பயன்படாது போகிறது என்று எண்ணி னர். "இனிமேல் சட்டக் கல்லூரிக்கு நிலையான பேராசிரி யரோ விரிவுரையாளரோ வேண்டியதில்லை. தகுந்தவர் களை அவ்வப்பொழுது அமைத்துக்கொள்ளலாம்" என்று கட்டளை அனுப்பினர். இம்முடிவால் சுப்பிரமணிய பிள்ளை 1927-ஆம் ஆண்டில் சட்டக்கல்லூரிப் பேராசிரியர் பதவி யில் இருந்து விலகினர். 1929-ஆம் ஆண்டில் அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்பேராசிரியராக அமர்த் தப்பெற்று இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்தார்.

கோயில் தருமத்தலைவர்

திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலின் தலைவராக அமர்ந்து சிரிய திருத்தொண்டுகள் பலசெய்தார். தேவாரப் பாடசாலை சிவாகம பாடசாலை ஆகியவைகளை ஏற்படுத்தி

னர். மற்றும் பல திருத்தொண்டுகள் செய்து மக்களுக்கு நலம் புரிந்தார்.

சங்கங்கள் அமைத்தல்

சங்கங்கள் அமைத்து அதன் வாயிலாகத்தொண்டுகள் பல செய்தால் எல்லோரும் நன்மையை எய்தலாம் என்னும் கொள்கை சுப்பிரமணிய பிள்ளையின் உள்ளத்தில் வேரூன்றி நின்றது. தாம் பள்ளியில் கல்விபயின்றுகொண்டிருந்தகாலத்தில் தானே "சைவ சித்தாந்த சங்கம்" என்னும் பெயருடன் சங்கம் ஒன்று அமைத்தார். இச்சங்கத்திற்கு இவரே தலைவர். சங்கம் ஞாயிற்றுக்கிழமைதோறுங் கூடிப் பல ஆராய்ச்சிகளையும் முடிவுகளையும் செய்தது. பிறகு இவர் சென்னையை அடைந்து கல்விகற்றபோது அங்கும் "நண்பர் சங்கம்" ஒன்றை ஏற்படுத்தி நடத்தி வந்தார். பிறகு திருவள்ளுவர் வாழ்ந்திருந்த திருமயிலையில் திருவள்ளுவர் கழகம் ஒன்றை அமைத்தார். திருநெல்வேலியில் இருந்த காலத்திலும் சங்கங்கள் அமைத்துப் பணிபுரிந்தார். பல சங்கங்களுக்கும் பேரவைகட்குஞ் சென்று சொற்பொழிவாற்றினர்.

பல்கலைப்புலவர்

சுப்பிரமணிய பிள்ளையின் பலவகைக் கலைத்திறமையையும் நன்குணர்ந்த சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் "பல்கலைப்புலவர்" என்னும் சிறப்புப் பெயரை 25—12—1940-ல் வழங்கியது.

மீண்டும் அண்ணாமலைநகரில்

இடையே உடல்நோய் ஒன்று சுப்பிரமணிய பிள்ளையைப்பற்றியது. அத்துடன் வறுமை நோயுஞ்சேர்ந்து கொண்டது. இரு நோய்களாலும் இவர் உள்ளம் கலங்கித் தன்புற்றுப் பல இடங்களினும் தங்கியிருந்தார். இவ

ருடைய இன்னல் நிலையைப் பண்டிதமணி கதிரேசச் செட்டியார் உணர்ந்தார். இவருடைய அறிவுத்திறனை அண்ணுமலைச் செட்டியாருக்கு எடுத்துரைத்தார். மீண்டும் ஆங்கு தருவித்து ஆசிரியத்தொழிலில் அமர்த்தவேண்டும் என்று அறிவுறுத்தினர். ஆகவே, சுப்பிரமணிய பிள்ளை மீண்டும் 1940-ல் அண்ணுமலைப் பல்கலைகழகப்பேராசிரியராஞர்.

இறுதி

அண்ணுமலை நகரில் இரண்டோராண்டுகள் பணி புரிந்தார். 1944 ஆம் ஆண்டு தொடங்கியவுடன் உடல்நிலை மிகவும் சீர்கேடடைந்துவிட்டது. பணி செய்யமுடியாத நிலைமைக்கு வந்துவிட்டார். திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் சுப்பிரமணிய பிள்ளையை நெல்லைக்கு அழைத்துச்சென்று தக்க சமயத்தில் நல்ல உதவி புரிந்தனர். பொருட்செலவைக் கவனியாது மருத்துவ உதவி முதலியன அன்புடன் அளித்தனர். ஆயினும் நோயினின்றும விடுதலைபெறாது தமது ஐம்பத்தாறாவது அகவையில் 1945 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முப்பதாம் நாள இறைவன் திருவடி நீழலை அடைந்தார்.

குணநலன்கள்

சுப்பிரமணிய பிள்ளை சீரிய மனப்போக்கு அமையப் பெற்றவர். பகட்டான கோலம்பூண்டு செருக்கித் திரிதல் இவருக்கு அடியோடு பிடிக்காது. சட்டக் கல்லூரியில் வேலைபார்ப்பதற்கு முயற்சிசெய்த காலையில் சட்டையணியாமலே நீதிமன்றத் தலைவர் ஒருவரைச் சென்று கண்டார். நடந்துபோதல் இழிவென்று எண்ணமாட்டார். நண்பர்களோடு உரையாடியபடியே மைல் கணக்காக நடந்து செல்வார். ஏழை எளியவர்களையும் செல்வர்களையும் ஒரே

நோக்குடன் பார்க்கும் பெருந்தன்மை இவருக்கு இயல் பாகவே அமைந்திருந்தது. இவருடைய நினைவாற்றல் எல்லோராலும் வியந்து பாராட்டக்கூடியது. ஒருமுறை கேட்ட செய்தியை மறுமுறை அவ்வாறே திரும்ப உரைக் கும் ஆற்றல் இவருக்கு நிரம்ப அமைந்திருந்தது. ஒரு நாள் ஆசிரியர் சொல்லிய நீண்டபொருளை மாணவர்கள் கேட்டு எழுதிக்கொண்டிருந்தனர். இவர் எழுதவில்லை. கேட்டுக்கொண்டிருந்தார். இவருடைய தன்மையை ஆசிரி யர் நன்கு அறிந்துகொள்ளவில்லை. இவர் எழுதாமல் இருப்பதைமட்டும் பார்த்துவிட்டு, "எங்கே நீ எழுதிய தைப் படி பார்ப்போம்," என்றார். இவர் தாம் கேட்ட வாறே திரும்பச்சொன்னார். மறறைய மாணவர்களோ இவர் சொல்லியதைச் சரிபாத்தார்கள். இந்நிகழ்ச்சியைக் கண்ட ஆசிரியர் பெரிதும் வியப்படைந்தார்.

இவர் எழுதிய நூல்கள்

சுப்பிரமணிய பிள்ளை போதகாசிரியராக மட்டும் இருக்கவில்லை. நூலாசிரியராகவும் உரையாசிரியராகவும் விளங்கினார். இவர் பள்ளியில் வேலைபார்க்கும் நேரத்தைத் தவிர மறறைய நேரங்களிலெல்லாம் நூலாராய்ச்சியிலும் நூல்கள் எழுதுவதிலும் ஈடுபட்டிருந்தார். கீழ்க்குறிப் பிடப்பெறும் நூல்களைத் தவிரப் பல பத்திரிகைகளில் கட்டுரைகளும் எழுதியிருக்கிறார்.

நூல்கள்

1. தமிழ் இலக்கிய வரலாறு
2. பழந்தமிழர் நாகரிகம்
3. திருவாசகப் பொழிப்புரை
4. திருக்குறட் பொழிப்புரை
5. தனிப்பாடல் திரட்டுரை
6. திருமுருகாற்றுப்படை உரைநடை

7. கந்தர் கலிவெண்பா உரைநடை
8. சர். சி. பி. ராய்
9. திருஞானசம்பந்தர் வரலாறு
10. திருநாவுக்கரசர் வரலாறு
11. சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாறு
12. மாணிக்கவாசக சுவாமிகள் வரலாறு
13. சேக்கிழார் வரலாறும் பெரியபுராண ஆராய்ச்சியும்
14. தாயுமானவர் வரலாறும் நூலாராய்ச்சியும்
15. பட்டினத்தடிகள் வரலாறும் நூலாராய்சியும்
16. குமரகுருபர அடிகள் வரலாறு
17. சிவஞானமுனிவர் வரலாறும் நூலாராய்ச்சியும்
18. மெய்கண்டாரும் சிவஞானபோதமும்
19. உலகப்பெருமகனர் வரலாறு
20. அறிவு விளக்க வாசகம்
21. திருஞானசமபந்தர் தேவார இயற்கைப்பேரழகு
22. மொழிநூற் கொள்கையும் தமிழ்மொழி அமைப்பும்
23. இறையனார் அகப்பொருளாராய்சசி
24. செகப்பிரியர் வரலாறும் நாடகக் கதைகளும்
25. இந்து சமயங்களின் சுருக்க வரலாறு
26. திருநான்மறை விளக்கம்
27. சைவசித்தாந்த விளக்கச சுருக்கம்
28. முருகன் பெருமை
29. சைவ சித்தாந்த உண்மை வரலாறு
30. சைவச சடங்கு விளக்கம்
31. மெய்கண்ட நூல்களின் உரைநடை
32. தமிழர் சமயம்
33. சிவஞானபோதப் பொழிப்புரை
34. தியானமும் வாழ்க்கை உயர்வும்
35. கடவுளும் வாழ்க்கை நலமும்
36. உலக நன்மையே ஒருவன் வாழ்வு
37. மக்கள் வாழ்க்கைத் தத்துவம்
38. வாழ்க்கை இன்பம்
39. உடல் நூல்
40. நோய் நீக்கம்

41. வான நூல்
42. சிவப்பிரகாசம் ஆங்கிலமொழிபெயர்ப்பு
43. நீதிநெறி விளக்கம் ஆங்கில மொழிபெயர்ப்பு
44. சைவசித்தாந்த இயற்கைத் தத்துவம் (ஆங்கிலம்)
45. இந்து சமயங்களின் சுருக்க வரலாறு
46. பொருட் சட்டம்
47. பதிவு விதி
48. குற்றச சட்டம்
49. இந்தியத் தண்டனைத்தொகுதி
50. குற்றங்களின் நெறிமுறைகள்

உ.ஏ. மோதூர் கந்தசாமி முதலியார்

தோற்றமும் கல்வியும்

சென்னைமாநகரில் அரிசி வாணிகஞ் செய்திருந்த மோதூர் பொன்னம்பல முதலியாருடைய அருமைத் திருமகனுகக் கந்தசாமி முதலியார் 1887 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் ஒன்பதாம் நாள் பிறந்தார். தாயாருடைய பெயர் உண்ணுமுலையம்மையார்.

கந்தசாமி முதலியார் முதலில் சென்னைத் தொண்டை மண்டலம துளுவவேளாளர் பாடசாலையில் கல்விபயிலத் தொடங்கினர். பிறகு பச்சையப்பன் கல்லூரியில் கல்வி பயலத்தொடங்கி பி. ஏ. வகுப்பில் ஒரு பகுதியை முடித்தார். பிறகு சென்னை அரசாங்கக் கணக்கிலாகாத தலைவர் அலுவலகத்தில் எழுத்தாளராக அமர்ந்தார். அவ்வேலையில் இருந்துகொண்டே பி. ஏ.த் தேர்வுக்குச் சென்று பி. ஏ. பட்டம் பெற்றார்.

தமிழ்க் கல்வி

சித்தாந்த சபம் அட்டாவதானம் பூவை கலியாண சுந்தர முதலியாரிடம் நெருங்கிப் பழகும்பேறு பெற்றிருந்

தமையின் இவர் அப்பெரியாரிடம் தமிழ் நூல்கள் பல வற்றைப் பாடங்கேட்டார். கல்லூரியில் இவருக்குத் தமிழாசிரியராக விளங்கியவர் திருமணம் செல்வக்கேசவராய முதலியார். அவர் தமிழ் மொழியைப் போதித்த திறமும் இவருடைய தமிழார்வத்தை நன்கு வளர்த்தது. மேலுஞ் சில நூல்களைத் தக்காரிடம் கற்றுணர்ந்தார்.

தமிழாசிரியர்

இவருடைய நோக்கம் தமிழாசிரியராக அமர்ந்து மாணவர்கட்குத் தமிழ் பயிற்றவேண்டும் என்பதாக இருந்தது அவ்வாறு செய்யின் தமிழறிவை மேலும் நன்றாக வளர்த்துக்கொள்ளலாம என்று எண்ணினர். ஆகவே, 1918 ஆம் ஆண்டில் பச்சையப்பன் கல்லூரியில் தமிழாசிரியர் வேலையை மேற்கொண்டார். தமிழாசிரியராக இருந்த போதிலும பேராசிரியர் தி. த. கனகசுந்தரம் பிள்ளையிடம் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களைப் பாடங்கேட்டுத் தமது தமிழறிவை நன்கு வளர்த்து வளம்படுத்திக்கொண்டேயிருந்தார். பிறகு இராமலிங்கத் தம்பிரானிடம் காஞ்சிப்புராணம் முதலிய நூல்களைப் பாடங்கேட்டார்.

திருமணம்

இவருக்கு இருமுறை திருமணம் நிகழ்ந்தது. இவர் வடலூர் இராமலிங்க அடிகளிடம் மிகுந்த அன்புடையவர். அதனால் முதல் மகளுக்கு அருட்பிரகாசம் என்றும் முதல் மகனுக்கு இராமலிங்கம் என்றும் பெயர்கள் வைத்தார்.

பலவகைத் தொண்டுகள்

1922-ஆம் ஆண்டு முதல் அவ்வப்போது பல தடவைகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் தீர்ப்புமுறைக் கூட்டத்தினரில் (சூரிகளில்) ஒருவராக இருந்தார். 1924-ஆம்

ஆண்டில் இவருடைய மேற்பார்வையில் திருவருட்பதிப்பு ஒன்று வெளியாயிற்று. 1925-ஆம் ஆண்டில் சென்னைப் பெத்துநாய்க்கன்பேட்டை அருணசலக்கடவுள் கோயில் அறச்செயலாளர்களில் ஒருவராக அமர்த்தப்பட்டுக் கோயிலுக்குப் பல திருப்பணிகள் செய்தார். 1931-ஆம ஆண்டு முதல் 1935-ஆம ஆண்டுவரை சென்னை அரசாங்கக் கலாசாலைப் பாடப் புத்தகக் கூட்டத்தினரில் ஒருவராக அமர்ந்து வேலைசெய்தார். பல ஆண்டுகள் சென்னைப் பல்கலைக் கழகத்து உறுப்பினராகவும், அண்ணமலைப் பல்கலைக் கழகத்து உறுப்பினராகவும் இருந்தார்.

உரையாசிரியர்

நூல்களுக்கு உரை இயற்றவேண்டும் என்னும் எண்ணம் இவருக்கு மிகுதியாக இருந்தது. மோசூர் ஆலடிப் பிள்ளையார் புகழ்பத்து என்னும் பெயருடைய நூல் ஒன்றை 1940-ஆம் ஆண்டில் இயற்றி அதற்குத் தாமே விரிவுரையும் இயற்றி வெளியிட்டார். இவரால் உரை யெழுதப்பட்ட நூல்கள் 1. கச்சிக்கலம்பகம் 2 திருவாமாத்தூர்க் கலம்பகம் 3 புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம் 4. திருவொற்றியூர்க் கலம்பகம் 5 ஏகாம்பரநாதர் உலா 6. சந்தானகுரவர் நான்மணிமாலை 7. மகிழ்மாக் கலம்பகம் என்பன. இவற்றுள் கச்சிக் கலம்பகம் பூண்டி அரங்கநாத முதலியாரால் இயற்றப்பட்டது. திருவாமாத்தூர்க் கலம்பகம் இரட்டைப் புலவர்களால் இயற்றப்பட்டது. புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம் படிக்காசுப் புலவரால் இயற்றப்பட்டது. மகிழ்மாக்கலம்பகம் தொழுவூர் வேலாயுத முதலியாரால் இயற்றப்பட்டது. திருவொற்றியூர்க் கலம்பகம் அட்டாவதானம் பூவை கலியாணசுந்தர முதலியாரால் இயற்றப்பட்டது. சந்தான குரவர் நான்மணிமாலை

திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளையால் இயற்றப் பட்டது. ஏகாம்பரநாதர் உலாவும் இரட்டைப்புலவர்களால் இயற்றப்பட்டதே.

இறுதி

தமிழ்த் தொண்டுகள் பல செய்து சிறப்புடன் விளங் கிய இவர் 1945-ஆம் ஆண்டு ஆகஸ்டு இருபத்தொன்பதாம் நாள் விண்ணுலகெய்தினர்.

பண்புநலம்

இவர் பேசும் ஆற்றலில் சிறந்து விளங்கினர். ஆங்கிலப் புலவர்களுடன் வியப்பெய்தமாறு ஆங்கிலத்திலே பேசுவார். இவர் தாம் கருதிய பொருளை எத்தகையோரிடமும் அஞ்சாது எடுத்துரைக்கும் நெஞ்சுரம் படைத்தவர். இவர் பேசத் தொடங்கிவிட்டால் மணிக்கணக்காகப் பேசிக் கொண்டிருப்பார். நூல்கள் பலவற்றை வெளிப்படுத்த வேண்டுமென்பதில் மிகுந்த விருப்பமகொண்டிருந்தார். இவருடைய உரைகள் விரிவாக அமைந்து சிறப்பாக விளங்கு கின்றன.

உஅ. புதுமைப்பித்தன்

தோற்றம்

புதுமைப்பித்தன் என்னும் புனைப்பெயரால் விளங்கிய சொ. விருத்தாசலன் 1906-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தென்னார்க்காடு மாவட்டத்திலே உள்ள திருப்பாதிரிப்புலி யூரில் பிறந்தார். தந்தையார் பெயர் சொக்கலிங்கம் பிள்ளை. தாயார் பெயர் பர்வதத்தம்மாள். சொக்கலிங்கம் பிள்ளையின் ஊர் திருநெல்வேலி. இவர் தாசில்தாராகத் திருப்பாதிரிப் புலியூரில் வேலைபார்த்துக்கொண்டிருந்தவிடத்தில் புதுமைப் பித்தன் பிறந்தார்.

கல்வி

புதுமைப்பித்தனின் தந்தை பல இடங்களுக்கும் மாற்றப்பட்டபடியால் புதுமைப்பித்தன் ஒரிடத்தில இருந்து நிலையாகக் கல்விகறக முடியவில்லை. பள்ளிக் கல்வியைப் பலஇடங்களிலும கற்றார். தந்தை வேலையிலிருந்து ஒய்வு பெறறு நெல்லையை அடைந்தபின் இந்துக் கல்லூரியில் கலவி கற்கத் தொடங்கினர். பள்ளியின் பாடப் புத்தகங்களைக் கற்பதில் இவருடைய நாட்டம் செல்லவில்லை. புனைகதைகளைப் படிப்பதிலேயே தமது பொழுதையெல்லாஞ் செலவிட்டார். இதனால் கல்லூரிப் படிப்பு மெதுவாகவே சென்றுகொண்டிருந்தது. ஆகவே தமது இருபத்தைந்தாவது அகவையில் பி. ஏ. தேர்வில் தேறினர்.

திருமணம்

பி. ஏ. கல்வியை முடித்த புதுமைப் பித்தனுக்கு 1931-ஆம் ஆண்டில் திருமணம் நடைபெற்றது திருவனந்தபுரத்திலிருந்த சுப்பிரமணிய பிள்ளை என்பவருடைய, அருமைத் திருமகளாகத தோன்றிய கமலாம்பாள் என்னும் பெண்மணியே வாழ்ககைத துணைவியாக அமைந்தாள

சென்னையை அடைதல்

புதுமைப்பித்தன் சட்டப்படிப்பைப் படித்து, வழக்கறிஞராகவோ அரசியல் அலுவலாளராகவோ ஆகவேண்டும் என்னும் எண்ணம் புதுமைப்பித்தனுடைய தந்தையாருக்கு இருந்தது. புதுமைப்பித்தனோ தந்தையின் போக்கிற்கு இணங்கி நடக்கவில்லை. தம் மனம்போனவாறு வாழ்க்கை நடத்தவேண்டும் என்று எண்ணினர். புனைந்துரைக் கதைகளைப் புதுமையான முறையில் எழுதி இலக்கியத்தொண்டுசெய்யவேண்டும் என்பதே புதுமைப் பித்தனுடைய எண்ணமாக இருந்தது. இதனால் தந்தைக்கும்

மைந்தனுக்கும் மாறுபாடுகள் உண்டாயின. தந்தை மகனை வெறுத்தார். மகன் தந்தையை வெறுத்தார். தாமும் மனைவியும் வீட்டைவிட்டு வெளியேறினர். மனைவியை உறவினர் வீட்டில் இருக்கச்செய்துவிட்டுத் தாம் மட்டும் சென்னையை அடைந்தார் 'மணிக்கொடி' முதலிய பத்திரிகைகளில் கதைகள் எழுதினர். கதைகள் நன்றாக அமைந்தன. பத்திரிகைகளினும் வெளிவந்தன. ஆனால் அதன்பொருட்டுப் பணம் கிடைக்கவில்லை. அந்நாளில் பத்திரிகைகள் உயிரைக் கையில்பிடித்துக்கொண்டு ஏழ்மையான நிலையில் வாழ்ந்திருந்தன. இந்நிலையில் அவைகள் எழுத்தாளர்களுக்கு எத்தகைய உதவியுஞ் செய்யவில்லை.

கதைவெறி

புதுமைப்பித்தனும் அவரைப்போன்ற பிற எழுத்தாளர்களும் வறுமையால் வாடி நொந்தனர் நாட்கணக்காகப் பட்டினியுங் கிடந்து வருந்தினர். ஆனால், கதை யெழுத வேண்டும் என்னும் ஆர்வமும் வெறியும் அவர்களைவிட்டு நீங்கவில்லை. கதையெழுதிக்கொண்டே இருந்தனர். ஒரு நாள் புதுமைப்பித்தனுக்கு நண்பர் ஒருவர் இரண்டு ரூபா செலவுக்குக் கொடுத்தார். உணவு முதலியவற்றின் பொருட்டு அவர் அப்பொருளைச் செலவிடுவார் என்பது பணங் கொடுத்தவருடைய எண்ணம். புதுமைப்பித்தன் பணங் கிடைத்ததும் மூர்மார்க்கெட் பக்கஞ் சென்றார். பழைய புத்தகங்களை விற்கும் கடையில் இருந்து மாப்பஸான் கதைகள் என்னும் கதைப் புத்தகத்தை வாங்கிக் கொண்டு எஞ்சிய சில்லரைக்குப் பாக்கு, வெற்றிலை, புகையிலை முதலியவைகளுடன் இருப்பிடத்தை யடைந்தார். இவருக்குப் பணங்கொடுத்தவர் இவர் செய்திருக்கும் செலவைப் பார்த்துத் திடுக்கிட்டார். "என்ன இப்படிச்செய்து

விட்டீர்?" என்று வருந்தினர். இவ்வாறு புதுமைப்பித்தனுக்குக் கதைப்பசிதான் மிகுதியாக இருந்ததே தவிர வயிற்றுப்பசியை அவர் ஒரு பொருளாக மதிக்கவில்லை.

பத்திரிகைத் தொழில்

ஊழியன், தினமணி, தினசரி முதலிய பத்திரிகைகளில் இவர் உதவியாசிரியராகச் சிறிது சிறிதுகாலம் வேலை பார்த்தார். தமது அறிவுடைமைக்குச் சிறுமை வருமாறு அடங்கி நடக்கும் வழக்கம் இவரிடம் சிறிதும் இல்லை. ஆகவே பத்திரிகைத்தொழிலில் இவர் சிலைபெற்றிருக்கவில்லை.

சினிமாக் கதை

இறுதியில் இவர் சினிமாக் கதை எழுதும் துறையில் இறங்கினர். இரண்டொரு படங்களுக்குக் கதைகளும் எழுதிக்கொடுத்தார். இறுதியில் தாமே ஒரு சினிமாப் படம பிடிக்கவேண்டும் என்று முயற்சி செய்தார். ஆனால் அம்முயற்சி வெற்றியடையவில்லை. இருமல் நோய் இவரைப் பிடித்து வருத்தியது. அதனால் வருந்தி 1948-ஆம் ஆண்டில் தமது நாற்பத்திரண்டாம் அகவையில் திருவனந்தபுரத்தில் காலமானர்.

பண்பு நலம்

விறுவிறுப்பாகவும் வியக்கத்தக்க வகையிலும் இவர் கதைகள் எழுதியமையின் இவருடைய பெயர் தமிழ் நாடெங்கும் விரைவாகப் பரவிப் புகழ்பெற்றுவிட்டார். இவருடைய கதைகள் நல்ல முறையில் அமைந்தமையின் மக்கள் மிகவும் பாராட்டினர்கள். கதைகளின் மூலம் இவர் தமிழ் உலகிற்குச் செய்ததொண்டு போற்றத்தக்கது. இவருடைய கதைகளேயன்றிப் பேச்சும் நகைச்சுவை நன்கமையப் பெற்றிருந்தது.

இவர் எழுதிய கதைகள்

1. இன்று இரவு
2. மணியோசை
3. புதிய ஒளி
4. கட்டுரைகள
5. கவிதைகள்
6. உலகத்துச சிறுகதை
7. தெய்வங்கொடுத்த வரம்
8. முதலும் முடிவும்
9. ஆண்மை
10. பளிங்குசிலை
11. பிரேத மனிதன்
12. அவளும் அவனும்
13. உயிர் ஆசை
14. வேடிக்கை மனிதர்கள்
15. சிற்றன்னை
16. பலிபீடம்
17. வாக்கும் வக்கும்
18. உலக அரங்கு
19 கபாடபுரம்
20. விபரீத ஆசைகள்
21. புதுமைப் பித்தன் கதைகள்
22. நாசகாரக்கும்பல்
23. பகதகுசேலா
24. ஆறு கதைகள்
25. பேஷிஸ்ட் சடாமுனி
26. கப்சிப் தர்பார்

ஆகியன இவர் எழுதிய கதை நூல்களாம்.

உஉ. முத்துக்குமாரத் தம்பிரான்

தோற்றம்

இலக்கண நூல்களை நன்கு கற்றுச் சிறந்து விளங்கிய படியால் "இலக்கணச்சாமிகள்" என்னும் காரணப்பெயரைப் பெற்ற முத்துக்குமாரத்தம்பிரான் ஈழ நாட்டிலே யாழ்ப்பாணத்திலே பிறந்தார். தந்தையாருடைய பெயர் வெற்றிவேற் பிள்ளை. இளமைக் காலத்தில் கற்கவேண்டிய பள்ளிப் படிப்பைச் செவ்வனே கற்றூர். அடக்கம், பொறுமை, தெய்வ வழிபாடு, நல்லோர் கூட்டுறவு முதலிய சீரிய பண்புகள் இவரிடம் இளமைப் பருவத்திலேயே அமைந்து விளங்கின. துறவறத்தை மேற்கொள்ளுதல் வேண்டும் என்னும கருத்துடன் இருந்த இவர் பதினைந்காம் அகவையில் ஈழநாட்டைவிட்டுப் புறப்பட்டு இந்தியாவை அடைந்தார்.

இலக்கண இலக்கியப் பயிற்சி

திருவதிகைப்பதி இவருக்குப் பிடித்தமான இடமாக இருந்தது. கூத்தப்பிரானைப் போற்றிப் பணிந்துகொண்டு அங்குத் தங்கியிருந்தார். அந்நாளில் அங்கு ஈசானியமடத்தில் இராமலிங்க அடிகள் என்னும் பெரியார் கல்விகேள்விகளில் வல்லவராய் மாணவர் பலர்க்கு நூல்களைப் பாடஞ் சொல்லிக்கொண்டு, நூல்களை ஆராய்ச்சி செய்து வெளியிடுதல் முதலிய பணிகளிலே சிறந்து விளங்கியிருந்தார். முத்துக்குமாரசாமி என்னும் பெயருடன் வந்து சேர்ந்த இவர் அப்பெரியாருடைய கல்விப் பெருமை முதலியவைகளை நன்குணர்ந்தார். அவரிடம் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றுத்தெளிந்தார்.

தம்பிரானுதல்

பிறகு சைவ நூல்களைக் கற்றுணரவேண்டும் என்று எண்ணினர். அந்நாளில் சூரியனர்கோயில் ஆதீனத்தில்

எழுந்தருளியிருந்த முத்துக்குமாரதேசிகர் சைவ நூல்களில் வல்லவராக விளங்குகிறார் என்பதை அறிந்து அவரிடஞ் சென்று சைவசித்தாந்த அறிவு நூல்களை ஓதியுணர்ந்தார். அவரிடமே சிவதீக்கையும் கல்லாடையும் பெற்று முதத்துக்குமாரத் தமபிரான் என்னும பெயரை யடைந்தார.

இலக்கணச்சாமிகள்

இவர் உண்மைததுறவை உள்ளவாறு மேற்கொண்டார், நியதி திறம்பாமை, சைவ சமயத்தில் பேரன்பு, புறநெறியிற் சிக்கிய உயிர்களைச் சிவநெறிப்படுத்துதல் முதலிய நற்குணங்களை மேற்கொண்டு விளங்கினர். இலக்கண அறிவாற்றல் நன்கு அமையப்பெற்றிருந்த படியாலும், சிவனடியார்கட்குரிய இலக்கணங்களிலெல்லாம் சிறந்து விளங்கினமையானும் இலக்கணச்சாமி என்னும் பெயரும் இவருக்கு உண்டாயிற்று.

நூல் வெளியீடு

வெளிவராதிருந்த சிவஞானமாபாடியத்தையும் சிவாக்கிர பாடியத்தையும், இவை போன்ற வேறு பல அரிய நூல்களையும் ஏட்டுச் சுவடிகள் பலவற்றைத்தேடி ஆராய்ந்து அச்சிற் பதிப்பித்து வெளியிட்டார் முத்துநிச்சய பாடியம் என்னும் அரியநூல் தருமபுர ஆதீனத்தில் இருந்து வெளி வருவதற்குக் காரணமாக இருந்தார். சிவக்கவிமணி சி. கெ. சுப்பிரமணிய முதலியார் எழுதிய பெரியபுராண விரிவுரை அடிகளாரால் பார்வையிடப்பட்ட பிறகே அச்சிற்பதிப்பிக்கப்பட்டு வெளி வந்துகொண்டிருந்தது.

நூல்நிலையம்

இவர் திருத்தில்லையில் காரைக்குடிச் சொக்கலிங்க ஐயாவால் அமைக்கப்பட்ட மெய்கண்ட சித்தாந்த வித்தியா

சாலையிலேயே பெரும்பாலும் தங்கியிருந்தார். கிடைத்தற் கரிய நூல்கள் பலவற்றை இவர் தொகுத்து வைத்திருந் தார். அந்நூல்களை இறுதியில் இலவச வாசகசாலையாகச் செய்து அவ்வாசகசாலை நடந்து வருவதற்காகத் தமது பொருளையும அவ்வாசகசாலைக்கு உரிமையாக்கினர்.

இறுதி

சைவசமயத்திற்கும் செந்தமிழ் மொழிக்கும் நல் தொண்டு செய்திருந்த இவர் இறுதியில் ஞானவரணம் என்னும் நூலை அச்சிடுதற்கு ஆராய்ச்சி செய்துகொண் டிருந்தார். அந்நூல் முடிவு பெறுவதற்குள் தமது எழு பதாம அகவையிலே 1949-ஆம ஆண்டு ஏப்ரல் திங்கள் இருபத்திரண்டாம் நாள இறைவன் திருவடிநீழலை அடைந் தார். இவருடைய உடல் ஞானப் பிரகாச தீர்த்தம் என்னும் குளக்கரையில் அடக்கஞ் செய்யப்பட்டது

ஈ0. இராமசாமிக் கவுண்டர்

பிறப்பு

வடார்க்காடு மாவட்டத்திலே உள்ள மாடப்பள்ளி என்னுஞ் சிற்றூரில் 1889-ஆம் ஆண்டு சூலைத்திங்கள் பதினைனரும் நாள் இராமசாமிக் கவுண்டர் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் அனுமந்தராயக் கவுண்டர், தாயார் பெயர் அங்கம்மாள்.

கல்வி

அக்காலத்திலே மாடப்பள்ளியில் தகுந்த பள்ளிக் கூடம் இல்லை. ஆகவே இராமசாமியார் திருப்பத்தூர் சென்று கல்வி கற்றார். திருப்பத்தூர் ஈகராட்சி உயர் நிலைப்பள்ளியிலேயே பள்ளியிறுதி வகுப்பு வரை படித்துத்

தேறினர். உயர்நிலைப்பள்ளியில் பயின்று வருங்காலத்தில் தானே தமிழார்வம் மிகுந்தவராக விளங்கினர். கணக்கை அவர் தம்முடைய விருப்பப்பாடமாக எடுத்துக்கொண்டிருந்தாரெனினும் தமிழார்வமும் தமிழ்ப் பற்றும் அவரிடம் மிகுதியாக வளர்ந்து வந்தன.

பாரதத்தில் பற்று

இராமசாமியாருக்கு அகவை பன்னிரண்டு பதின் மூன்று நடந்துகொண்டிருக்கும் போதே வில்லிபாரதப் பாடல்களைப் பாடுவதில் பெருவிருப்பங்கொண்டிருந்தார். வில்லிபாரதத்தை இவருடைய தாயாரே இவருக்குக் கற்பித்தார். வேறுசில மாணவரோடு கூடி இவர் அதனைக் கற்றார். வில்லிபாரதம் இவருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது.

வேட்டகம்

ஒருமுறை இவர் தம்மைப்போன்ற வேறுசில மாணவர்களுடன் விளையாடிக்கொண்டிருந்தார். இவர் பாரதம் முதலிய நூல்களைப் படித்துக்கொண்டிருத்தலை நன்குணர்ந்த ஓர் அறிஞர் இராமசாமியைப் பார்த்து, "வேட்டகம்" என்றால் என்ன சொல் பார்ப்போம். என்று கேட்டார். இவர் உடனே, "விரும்புதற்குரிய இடம்" என்று மறுமொழி பகர்ந்தார். "மாமியார் வீடு" என்று சொல்லாமல் ஏன் இவ்வாறு கூறுகிறாய்?" என்று கேட்டார் அந்த அறிஞர். அதற்கு இராமசாமியார், "மாமனார் வீட்டார் மாப்பிள்ளையின் வருகையை மிகவும் விரும்புகின்றார்கள். மாப்பிள்ளையும் மாமனார் வீட்டைப் பெரிதும் விரும்புகிறார். அதனால்தான் இவ்வாறு கூறினேன்" என்று சொன்னார். இவ்வாறு இவர் இளமையிலேயே பலவகையான ஆராய்ச்சியில் ஈடுபட்டார்.

கல்வியுங் கவலையும்

இராமசாமியார் ஐந்தாவது படிவத்தில் படித்துக் கொண்டிருந்தபோது தந்தையுந்தாயும் கழிச்சல் நோய்க்கு இரையானார்கள். பிறகு சிறிய தந்தையார் இவரைப் பாதுகாத்தார் பதினேழாவது ஆண்டில் பள்ளியிறுதி வகுப்பில் தேறினர். பிறகு வடார்க்காடு மாவட்டத்தில் உள்ள ஊரிஸ் கல்லூரியிற் சேர்ந்தார். கல்லூரி வகுப்புக்களிலும் கணக்குப் பாடத்தையே எடுத்துப் படித்தார் எப். ஏ. தேர்விற்குச் செல்லவிருந்த சமயத்தில் இவருடைய தங்கையார் நோய்வாய்ப்பட்டுக் காலமாயினர். அதனால் உளங் கலங்கினர். அவ்வாண்டு நடந்த அத்தேர்விலும் தேறுமல் தவறினர்.

பிறகு திருச்சிக்குச் சென்றார். செயின்ட் சோசப் கல்லூரியிற் சேர்ந்தார். நடுத்தர வகுப்பிலும் (இண்டர் கிளாஸ்) தேறினர். பிறகு திருச்சியில் இருந்து சென்னைக்குச் சென்று கிறித்தவக் கலாசாலையிற் சேர்ந்தார். கணக்கு நூலில் மிகப் புகழ்பெற்ற பேராசிரியர் தாஸ் என்பவரிடம் கற்கும வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. பி. ஏ. ஆனர்ஸ் தேர்வில் தேறினர்.

திருமணம்

1923-ஆம் ஆண்டில் இவருக்குத் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. வாழ்க்கைத் துணையாக அமைந்தவர் பைந்தொடியின் பெயர் கனகம்மாள். இராமசாமியார் கனகம்மாளுடன் இல்லறத்தை இனிது நடத்தத்தொடங்கினர். மக்கட்பேறும் அமைந்தது.

அலுவல்

1924-ஆம் ஆண்டில் வாணியம்பாடி இசுலாமியா உயர்நிலைப்பள்ளியில் கணக்காசிரியராகப் பணிபுரியத்

தொடங்கினர். 1925-26-ஆம் ஆண்டில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியிற் சேர்ந்து எல். டி. பட்டம பெற்றார். எம்.ஏ.எல்.டி பட்டம் பெற்றவுடன் வாணியமபாடி இசுலாமியக் கல்லூரியின தலைவராக வேலை பாக்குமாறு அழைத்தனா. அப்போது இவருக்கு அகவை இருபத்தேழு. இருபத்தேழாம் அகவையில ஒருவர் ஒரு கல்லூரியின் தலைவராகப் பொறுப்பேற்றனர் எனின் அவருடைய அறிவுநலததைப் பற்றிப் புகழ்ந்து கூறவும் வேண்டுமோ?

சேலங் கல்லூரித் தலைவர்

1927 ஆம் ஆண்டில் சேலங்கல்லூரியில் தலைவர் பதவிக்கு ஆளதேவை என்பதை அறிந்தார். அதனைப் பெறுவதற்கு விண்ணப்பஞ்செய்தார். சேலங்கல்லூரி அப்போது இரண்டாந்தரக் கல்லூரியாக இருந்தது. கல்லூரியையும உயர்நிலைப் பள்ளியையும் ஒருவரே மேற்பார்த்து வந்தார். அவரே உயர்நிலைப்பளளித் தலைமை ஆசிரியராயும கலலூரிததலவராயும செயலாற்றிவந்ததால் பொறுப்பு மிகுதியாக இருந்தது. கல்லூரித்தலைவர் பொறுப்பிற்குப் பலரிடம் இருந்து விண்ணபபங்கள் வந்திருந்தன. இவரோ இளைஞர், அகவையும பழக்கமும் முதிர்ந்த பலர் தமக்கு அப்பொறுப்புவேண்டும் என்று போட்டியிட்டனர். அவர்களுக்கே அவ்வேலையைக் கொடுக்கவேண்டும் என்று தக்கார் பலரும் துணைநின்றனர். அப்போது தம்மண்ணைச் செட்டியார் என்பவர் சேலம் நகராட்சித்தலைவராக இருந்தார். அவர் ஊக்கமும் இளமையும் அமையப்பெற்றவராக விளங்கினர். அவர் இந்த வேலையை இராமசாமிக் கவுண்டருக்கே கொடுக்கவேண்டும் என்று எண்ணினர். பலமான எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் இவருக்கே அவ்வேலையைக் கொடுத்தார். கல்லூரியின் முன்னேற்றத்தின்

பொருட்டுக் கவுண்டர் செய்யுந் திட்டங்களுக்குப் பக்கத் துணையாகவும் அமைந்து நின்றார். கவுண்டர் தம் பணியைச் சிறப்பாக நடத்தினர். ஆண்டுகள் நான்கு சென்றன. நகராட்சியின் சூழ் மாறியது. தம்மண்ணச் செட்டியார் விலகியதும் பலர் கவுண்டரைக் கல்லூரித்தலைவர் பதவியிலிருந்து விரட்டிவிடப் பெருமுயற்சி செய்தனர். அம்முயற்சி வெற்றியடையாமல தோல்வியடைந்தது.

நல்லியல்புகள்

கவுண்டர் மாணவர்களின் நன்மையிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தார். தமிழிலேயே எல்லாப் பாடங்களையும் கல்லூரி வகுப்புவரையிலும் நடத்துதல்வேண்டும் என்னும் நோக்கம் இவருக்கிருந்தது. தமிழிலேயே பாடங்களை நடைபெறச்செய்தார் தமிழில் பாடநூல்கள் நடைபெறுதலை ஒருமுறை பார்வையிட்ட இராசகோபாலாச்சாரியார் கவுண்டரைப் பெரிதும பாராட்டினர். கல்லூரி ஆசிரியர்களோடு கவுண்டர் கலந்து பழகிக் காரியங்களை நடத்தினர். தனித்தமிழ் வளர்ச்சியிலும இவர் கருத்துச்செலுத்தி அதன்பொருட்டும் வேலைசெய்தார். தமிழறிஞர்மாட்டுத் தணியாப் பெருங்காதல் கொண்டவர் இவர். எவரேனும் தமிழறிஞர்களின் கூட்டுறவு கிடைத்தால் அவர்களைப் பெரிதும் போற்றிப் பாராட்டி, ஆகவேண்டியவைகளைச் செய்வார்.

நூல்கள் எழுதுதல்

தமிழில் நூல்கள் எழுதவேண்டும் என்னும் வேட்கையும் இவருக்கு மிகுதியாக இருந்தது. நெப்போலியன், நெல்சன் முதலியவர்களுடைய வரலாற்றைத் தமிழில் எழுதினர். கபிலியின் கதை என்னும் நூலும் இவரால் எழுதப்பட்டது. தமிழாராய்ச்சியிலும் ஈடுபட்டுப் பல

நூல்களை ஆராய்ச்சி செய்தார். தமிழர் வரலாறு என்னும் நூல் ஒன்று எழுதத்தொடங்கினார். ஆனால், அந்நூல் முடிவுபெறவில்லை. தத்துவநூற் பயிற்சியிலும் இவருக்கு ஈடுபாடு உண்டு. கைவல்லியம், பகவத்கீதை, விவேகானந்தர் நூல்கள் முதலியவற்றைக் கற்றுணர்ந்தார். பகவதகீதையை நன்கு கற்றுணர்ந்ததுடன் வடமொழிக் கீதையை எளிய தமிழ்நடையில் எல்லோருக்கும் பயன்படும் வண்ணம மொழிபெயர்த்தார். இதறகாகவே வடமொழியையுங் கற்றுணர்ந்தார்.

இறுதி

"என்கடன் பணிசெய்துகிடப்பதே" என்னும் பெரியார் கூற்றுக்கிணங்கத் தமிழ்த்தொண்டு செய்திருந்த இவர் மாரடைப்பு நோயினால் 1950 ஆம் ஆண்டு ஆகஸ்டுதிங்கள் இருபதாம் நாள், தம் ஐம்பததோராம் அகவையில் பூத வுடலை நீத்துப் புகழுடலை உலகில் நிறுவினர்.

ஈக. புகழ். முத்துச்சாமிப் பிள்ளை

தோற்றம்

நெல்லை மாவட்டத்தில் எல்லையில் புகழுடன் விளங்கும் திருச்செந்தூர்க்கூற்றம் (தாலுகா) உடன்குடி என்னும் சிற்றூரிலே முத்துச்சாமிப்பிள்ளை 1890 ஆம் ஆண்டு ஆகஸ்டுத்திங்கள் பதினைறாம நாள் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் புகழும்பெருமாள் பிள்ளை. தாயார் பெயர் சுப்பம்மையார்.

கல்வி

தொடக்கத்தில் முத்துச்சாமி பள்ளிக் கல்வியை உள்ளூரில் கற்றார். பிறகு தமிழ்மொழியை நன்றாகக் கற்க

வேண்டும் என்னும் ஆர்வம் இவருக்கு மிகுதியாக ஏற்பட்டது. அகவை பன்னிரண்டில் இருக்கும்போதே புறப்பட்டுத் திருத்தில்லையை அடைந்தார். நானகாண்டுகள் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையிலே தமிழ் கற்றுத்தேறி வல்லவரானார். தில்லையிற் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் போதே இவருக்கு மறைமலையடிகளின் நட்புக் கிடைத்தது. மூன்றாறுகல் தொலைவில் இருந்து தமிழ் கற்க வந்த முத்துச்சாமிப் பிள்ளையின் தமிழார்வம் மறைமலையடிகளின் உள்ளத்தைக் கவர்ந்தது. ஆகவே இருவரும் நெருங்கிய நண்பர்களாகத் திகழ்ந்தனர்.

செந்தமிழ்த்தொண்டு

செந்தமிழை நன்கு கற்றுத்தேறிய இவர் மாணவர் பலர்க்குத் தமிழ் நூலகளைக் கற்பித்தார். தந்தையார் நடத்திய பலசரக்குக் கடையையும் நடத்தினர். 'செந்தமிழ்ச் செல்வி'யிலே பல கட்டுரைகள் எழுதினர். பாளையங்கோட்டைச் சைவசபைச் சார்பில் நடந்த பல கூட்டங்களிலும் ஆண்டு விழாக்களிலும் அரியபெரிய பொருள்களைக் குறித்து விரிவுரைகள் பல செய்தார். வேறு பல கழகங்களிலும் இவருடைய சொற்பொழிவு நடந்தது.

இயற்றிய நூல்கள்

1. ஒழுக்க விளக்கம்
2. செல்வக்கணபதி இரட்டைமணிமாலை
3. தேவார உரை
4. திருவாசக திருச்சதக உரை

முதலியன இவருடைய நூல்கள்.

இறுதி

தம் உறவினர் ஒருவரைக்கொண்டு உடன்குடியில் நடுநிலைப்பள்ளி ஒன்றை அமைக்கச்செய்தார். இவரால் பல

ருடைய பயனுக்குகாக அமைக்கப்பெற்ற கிணறு அறக் கிணறு என்னும் பெயருடன் வழங்குகின்றது. இப்பெரியார் நோயடையும் சமயங்களில் மருந்துகளே உண்பதில்லை. முருகக்கடவுளைப் புகழ்ந்துபாடியே நோய்களைப் போக்கிக் கொள்வது வழக்கம். இவர் தமது அறுபதாவது அகவையிலே 1950 ஆம் ஆண்டு டிசம்பர்த்திங்கள் பதினேழாம் நாள் கண்ணுதற்பெருமானின் கழலிணைகளையடைந்தார்.

ந.உ. சிதம்பரம் பிள்ளை

பிறப்பு

சிதம்பரம் பிள்ளை நாகர்கோவிலில் வேளாண்குடியில் பிறந்தார். தந்தையார் பெயர் பழனியா பிள்ளை

கல்வி

பள்ளிப் படிப்பு முதலியவைகளை வரன்முறையாகக் கற்றுப் பி.ஏ., பி.எல்., பட்டம் பெற்றார். இளமையிலேயே கூரிய அறிவும் சுறுசுறுப்பும், ஆழ்ந்த எண்ணமும் ஆராய்ச்சித்திறமையும் அமையப்பெற்றவராக விளங்கினர். ஆங்கில மொழியிற் சிறந்து விளங்கியதைப்போலவே தமிழ்மொழியையும் மலையாளமொழியையும் நன்கு கற்றுத் தேர்ச்சிறந்து விளங்கினர்.

தொழில்

வழக்கறிஞராகத் தொழில்புரிந்த இவர் வாய்மை தவறாத நேர்மையராக விளங்கினர். இவருடைய சொற்போர்த்திறன் மிக வியக்கத்தக்கதாக விளங்கியது. திருவிதாங்கூர் சட்டசபை உறுப்பினராகவும் எதிர்க்கட்சித் தலைவராகவும் பல ஆண்டுகள் பலரும் புகழுமாறு தொடர்ந்து பணியாற்றினர்.

முனிசிபல் தலைவர்

நாகர்கோவில் நகராண்மைக் கழகத் தலைவராகப் பல ஆண்டுகள் அமர்ந்து மக்களுக்கு நலம்பல உளற்றினர். எதனையும் வாய்ப்பேச்சளவில் நிறுத்தாமல் செயல்முறையில் செய்துகாட்டுவதில் இவர் சிறந்து விளங்கினர்.

தமிழ்த்தொண்டு

"தீண்டத்தகாதவர்களும் மக்களே. அவர்கள் கோவிலுக்குள் தழைந்து கடவுளை வழிபடத்தொடங்கினால் அங்குள்ள கடவுள் வெளியே ஓடிப்போகமாட்டார். மக்கள் எல்லோரும் பிறப்பால் ஒத்த நிலைமையுடையவர்கள்" என்னும் இக்கொள்கையைக் காந்தியடிகள் கண்டுபிடித்துக் கோயில் நுழைவுரிமைச் சட்டத்தைக்கொண்டு வருவதற்குப் பல ஆண்டுகள் முன்னரே சிதம்பரம் பிள்ளை இந்த முன்னேற்றப்பணியில் இறங்கிவிட்டார். "கோயில் நுழைவுரிமை" என்னும் நூலை எழுதி அதனைப் பதிப்பித்து வெளியிட்டார். அப்பொழுது சிதம்பரம் பிள்ளையின் அக்கொள்கையைக்கண்டு பலபேர் வெறுப்படைந்தனர். ஆனால், இது குறித்துச் சட்டம் வந்தவுடன் எல்லோரும் தலைவணங்கிப்போயினர். வரலாற்றுத்துறையிலும் இவர் இறங்கிப் பல நூல்களை ஆராய்ச்சி செய்தார். "திராவிடன்—ஆரியன்" என்னும் நேரிய நூலைச் சிரியமுறையில் கூரிய அறிவுடன் எழுதிவெளியிட்டார்.

கட்டுரைகள்

'ரிவோல்ட்' என்னும் ஆங்கிலக் கிழமையிதழில் பல கட்டுரைகள் எழுதினர். தமிழ்ப் பத்திரிகைகளிலும் பல வற்றில் அரிய கட்டுரைகள் எழுதினர். இவருடைய கட்டுரைகள் திட்பநுட்பஞ் செறிந்தனவாய்க் கற்போருக்குக் கழிபேருவகையளித்து விளங்கின.

சொற்பொழிவுகள்

பேரவைகளில் சொற்பொழிவு செய்வதினும் இவர் வல்லவர். தமிழ் நாட்டில் இருந்த பல சங்கங்களும் பேரவைகளும் இவரையுஞ் சொற்பொழிவாளராகப் பெற்றுச் சிறப்படைந்தன.

கழகத்தொடர்பு

திருநெலவேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகததின் தொடக்க காலமுதலே கழகத்தின் வளர்ச்சியிலும் ஆக்கத்திலும் கண்ணும் கருத்துமாக இருந்து சொல்லாலும் செயலாலும் தூண்டுதலாலும் அறிவுரை நல்கலாலும் உதவிசெய்து துணைபுரிந்தார். 1938 ஆம ஆண்டுமுதல் பத்தாண்டுகளுக்குமேல் தொடர்பாகக் கழகத தலைவராயிருந்து நன்மைகள் பல செய்தார்.

இறுதி

விரிவுரையாற்றலாலும் ஆராய்ச்சி நூல்கள் எழுதுதலாலும் கட்டுரைகளைப் பத்திரிகைகட்கு வரைதலாலும் சீரிய தமிழ்த்தொண்டு செய்திருந்த இப்பெரியார் 1951 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 25 நாள் இவ்வுலக வாழ்வைத் துறந்து விண்ணகம் புகுந்தார். இவருக்கு வாழ்க்கைத் துணைவியாரும் மக்களும் இருக்கின்றனர்.

ஈஈ. திருக்குறள் அவதானி சுப்பிரமணியதாசு

தோற்றம்

திருவிதாங்கூர் நாஞ்சில்நாட்டில் உள்ளதும், திருமால் திருப்பதிகள் நூற்றெட்டனுள் முதன்மை பெற்றதுமாகிய திருப்பதிசாரம் என்னும் ஊரில், திருக்குறள் அட்டாவதானம் சுப்பிரமணியதாசு பிறந்தார். பிறந்தகாலம் 1878-ஆம் ஆண்டு தைத்திங்கள். இவருடைய தந்தையார் பெயர் பசுங்கிளித்தேவர். தாயார் பெயர் ஆச்சியம்மாள்.

கல்வி

திண்ணைப்பள்ளியில் நான்காவது வகுப்பு வரையில் கல்வி கற்றார். பிறகு மற்போர்த் தொழிலே மாண்புடன் கற்று மேன்மையுற்றார். நாடகத்துறையிற்புகுந்து பழகி நடித்துக்காட்டும் கலையையுங் கற்றார். உழவுத்தொழிலையும் உளம் உவந்து மேற்கொண்டார். பிறகு மூப்பதாம் அகவையில் வடசேரி இராமசுப்பு ஆசாரியார் என்பவரிடம் வேதாந்த நூல்கள் இலகண இலகிய நூல்கள் முதலியவைகளை ஓதியுணர்ந்தார். நாகாகோவில் மார்க்கண்டேயர் என்பவரிடம் திருக்குறளைப் பயின்றார். திருக்குறளைக் கற்றதனால் ஊன் உணவு உண்டலை ஒழித்தார். கோட்டாறு சதாவதானி செய்குத்தம்பிப் பாவலரிடம் திருக்குறளை மீண்டும் ஒருமுறை பயின்றார். திருக்குறளில் எல்லாப் பொருள்களும் ஒருங்கமைத்திருத்தலைக் கண்டார். "ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும், பாயிரத்தி னேடு பகர்ந்ததற்பின்-போயொருத்தர், வாய்கேட்க நூலுளதோ மன்னு தமிழ்ப்புலவர், ஆய்க்கேட்க வீற்றிருக்கலம்" என்னும் செய்யுட்பொருளை உள்ளவாறுணர்ந்தார். திருக்குறளை வழுவற நன்கு பயின்றார். தமிழ்நாடு முழுவதற்கும் திருக்குறளைப் பரப்பவேண்டும் என்னும் எண்ணங்கொண்டார்.

அட்டாவதானம்

திருக்குறள் நூலில் அட்டாவதானம் செய்யவேண்டும் என்னும் எண்ணம் உண்டாகியது. திருக்குறளின் பாட்டிலக்கம், உரை, அதிகாரம், தொடர் எண் முதலியவைகளில் முழுக்கருத்தையும் செலுத்திப் பழகினர். முதன் முதலாக 1920-ஆம் ஆண்டில் சென்னைமாநகரில் விபுலாநந்த அடிகள், டாக்டர். சி. நடேச முதலியார் முதலியவர்களுடைய தலைமையில் பல்வேறிடங்களில் திருக்குறள் அட்டாவதானஞ் செய்துகாட்டினர்.

பின்னர் 1933-ஆம் ஆண்டில், உ. வே சாமிநாதையர், இரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார், கோ. வடிவேலுச் செட்டியார், கா நமச்சிவாய முதலியார், திரு. வி. கலியாணசுந்தர முதலியார், மணி. கோடீசுர முதலியார் முதலிய பேரறிஞர்கள் குழுமிய பேரவையில் அட்டாவதானம் நிகழ்த்தினர். அதன்பின் 1949-ஆம் ஆண்டில் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் தலைமையில் கூடிய திருக்குறள் மாநாட்டில் அவதானஞ் செய்தார். இறுதியில் 1951-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் கோகலே மண்டபத்தில் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தலைமையில் நடைபெற்றது. கோயமுத்தூர், தென்காசி, காரைக்குடி முதலிய ஊர்களினும் இவருடைய திருக்குறள் அவதானம் நடைபெற்றது.

திருமணம்

இவர்க்கு இருமுறை திருமணம் நடைபெற்றது. இவருடைய திருமகன் இராமதாசும் பன்னிரண்டாவது அகவையில் திருக்குறள் அவதானஞ்செய்யும் சீரிய நிலையை அடைந்தார்.

நூல்கள்

திருக்குறளில் தாம் கண்ட முடிபுகளையெல்லாம் தொகுத்தெழுதி "வள்ளுவர் வகுத்த அரசியல்" என்னும்

பெயரோடு வெளியிட்டதுடன் வேறு சில நூல்களும் எழுதி வெளியிட்டார்.

இறுதி

திருக்குறட் புலமையிற் சிறந்து விளங்கிய இவர் தமது எழுபத்துமூன்றும் அகவையில் 1951-ஆம் ஆண்டு அக்டோபர்த திங்கள் இருபத்தொன்பதாம் நாள மண்ணக வாழ்வை நீதது விண்ணகம் புகுந்தார்.

கூ. நவநீதகிருட்டிண பாரதியார்

தோற்றம்

பண்டிதமணி க. சு. நவநீதகிருட்டிண பாரதியார் சோழவளநாட்டிலே மணல்மேல்குடிக்குப் பக்கத்தில் உள்ள கரவட்டங்குடி என்னுஞ் சிற்றூரிலே வாழ்ந்திருந்த, சுப்பிர மணிய பாரதியார் என்பவருடைய புதல்வராகக் கிருட்டிண வடம் என்னும் ஊரில் 1889-ஆம் ஆண்டு மார்ச்சுத்திங்கள் முதல் நாள் பிறந்தார். இவருடைய தாயார் பெயர் தைலம்மையார்.

கல்வி

இவர் பள்ளிக் கல்வியைக் கற்று முடித்தபின் சர்க் கரை இராமசாமிப்புலவர், பண்டித, அ. கோபாலையர், நற் றிணை உரையாசிரியராகிய பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர், சோழவந்தான் அரசன் சண்முகனார் ஆகியவர்களி டத்திலே இலக்கண இலக்கியங்களையும் சங்க நூல்களையும் கற்றுதேறினர்.

ஆசிரியத்தொழில்

பாலக்காடு விக்டோரியாக் கல்லூரியில் சில ஆண்டு கள் தமிழ்ப்புலவராக அமர்ந்து பணியாற்றினர். பிறகு

திருவாவடுதுறை யாதீனத்தில் அம்பலவாண தேசிக சுவாமி கள்பால் திருமுறை ஆராய்ச்சித் துணைவராக அமர்ந்தார்.

ஈழநாட்டில் வேலை

1917-ஆம் ஆண்டில் இவருடைய புலமையை வியந்து, ஈழநாட்டு வள்ளல் சர். பொன்னம்பலம் இராமநாததுரை தமது பெண்கள் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியராக ஏற்படுத்தினர். இவருடைய புலமைத் திறத்தால் மாண வர்கள் தமிழறிவிற் சிறந்து விளங்கினர்கள். பிறகு பரமேசுவரா கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராக அமர்ந் தார். அந்தக் கல்லூரியில் நல்ல தமிழ்த்தொண்டு செய்தார்.

நூல்கள் இயற்றல்

பாரதியார் ஆசிரியத் தொழிலோடு அமைதியாகப் பொழுதுபோக்கவில்லை. ஓய்வு நேரங்களில் நூலாராய்ச்சி யில் ஈடுபட்டார். "உலகியல் விளக்கம்" எனனுஞ் செய் யுள் நூலை எழுதி 1922-ஆம் ஆண்டில் வெளிப்படுத்தினர். இந்நூல் பல ஆண்டுகள் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட மொழிவளர்ச்சிச சங்கப் பண்டித பரீட்சைக்குப் பாட நூலாக அமைந்தது. இந்நூல் ச. பூபால பிள்ளை என்பவர் எழுதிய உரையோடு விபுலாநந்த அடிகளால் பதிப்பிக்கப் பெற்றது. 1929-ஆம் ஆண்டில் "புத்தளஞ்செங்கதிர்" "பரம்புமலைப்பாரி" "செழுங்கதிர்ச்செல்வம்" என்னும் நூல் களை எழுதினர். இளஞ்சிறுவர்கள் எளிதாகக் கற்றற் கேற்ற இலக்கண நூல்கள் இல்லாத குறையைப் போக்கு தற்கு எண்ணிப், "பாரதீயம்" என்னும் பெயருடன் 1947-ஆம் ஆண்டில் இலக்கண நூல் ஒன்று எழுதி வெளியிட்டார். பத்திரிகைகளிலும் பல கட்டுரைகள் எழுதினர். மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் நடத்தும் தனித்தமிழ்த் தேர்வுகளிலும்

வேறு தேர்வுகளிலும் பரீட்சகராக அமர்ந்து பல ஆண்டுகள் தொண்டுபுரிந்தார்.

பண்டிதமணி

தமிழ்மொழி வளர்ச்சியின்பொருட்டு ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் மன்றம் ஒன்றினை அமைத்து அதன் வாயிலாகவும் தமிழ் வளர்ச்சிக்கு நல்ல வேலைசெய்தார். அம் மன்றம் "பண்டிதமணி" என்னும் பட்டத்தினை இவருக்கு வழங்கியது. 1952-ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட மொழிவளாச்சிச் சங்கம் "புலவர்மணி" என்னும் பட்டத்தினை வழங்கியது, இவ்வாண்டில் அன்பர்கள் முயற்சிசெய்து பணமுடிப்பு ஒன்றினை இவருக்கு நன் கொடையாக வழங்கினர்கள்.

திருவாசக ஆராய்ச்சிப்பேருரை

பாரதியார் நீண்டகால உழைப்பை மேற்கொண்டு திருமுறைகளிற் சிறந்துவிளங்கும் திருவாசகத்திற்கு ஆராய்ச்சிப் பேருரை ஒன்று அருமையும் பெருமையும் அமையப்பெற்றதாக எழுதி, ஆயிரம் பக்கங்கட்கு மேற் கொண்ட பெரிய புத்தகமாகப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

இறுதி

இவர் 1954-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 22-ஆம் நாள் இறைவன் திருவடி நீழலையடைந்தார்.

கு. இராசம் அய்யர்

பிறப்பு

மதுரை மாவட்டத்தில் உள்ள வத்தலக்குண்டு என்னும் சிற்றூரில் 1872-ஆம் ஆண்டில் இராசம் அய்யர் பிறந்தார்.

கல்வி

தொடக்கத்தில் பள்ளிக் கல்வியை வத்தலக்குண்டில் தொடங்கினர். பிறகு மதுரையை அடைந்து எப். ஏ. த் தேர்வுவரை மதுரையிற் படித்தார். அதன்பின் சென்னையை அடைந்து கிறித்தவக்கல்லூரியிற் சேர்ந்தார். வரலாற்றுப்பகுதியை முதன்மைப்பாடமாக எடுத்துக்கொண்டு பி. ஏ. தேர்விற்குப் படித்தார். 1899-ஆம ஆண்டில் பி. ஏ. த் தேர்வில் தேறினர்.

மனக்கோட்டை

பி. ஏ. த் தேர்வுக்குப் படிக்கும்போது ஆங்கில நூல்கள் பலவற்றைக் கற்றார். மேல் நாடுகளில் சுற்றிப்பார்த்து அவ்விடத்து நாகரிக மேன்மைகளையெல்லாம் அறியவேண்டும் என்றும் அவைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் எண்ணி எண்ணி மனக்கோட்டைகள் பல கட்டினர். ஆங்கில நாவல்கள் பலவற்றை ஊக்கத்துடன் படித்தார். மேற்கூறிய நோக்கங்களோடு பி. எல். தேர்வுப் படிப்பைத் தொடங்கினர். மனக்கோட்டை கட்டுவதில் மூழ்ந்திருந்த இவருடைய பி. எல். தேர்வு தேறாமற் போயிற்று. மனக்கோட்டைகள் யாவும் சடசடவென்று இடிந்து விழுந்தன.

வேதாந்த ஆராய்ச்சி

சட்ட கலாசாலை மாணவராக இருந்த இராசம் அய்யர் வேதாந்த ஆராய்ச்சி மாணவராக மாறினர். கைவல்லியம்

என்னும் வேதாந்த நூலைக் கற்கத்தொடங்கினர். குரு இல்லாதவரையில் வேதாந்த அறிவு பலிக்காது என்று அறிந்தார். வேதாந்தங் கற்று மெய்ஞ்ஞானியாக விளங்கிய ஒரம்மையாரை யடுத்து அவரிடம் வேதாந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டார். அனறியும் இளமையிலேயே இவர் 'ரேம்பிள்ஸ் இன் வேதாந்தா' என்ற அருமையான வேதாந்த நூலையும் எழுதியிருக்கிறார்.

கமலாம்பாள் சரித்திரம்

இதே சமயத்தில் அய்யர் கட்டுக்கதைகள் எழுதும் பணியிலும் ஈடுபட்டார். அந்நாளில் சென்னை மயிலாப்பூரினின்றும் வெளிவந்துகொண்டிருந்த விவேகசிந்தாமணி என்னும் திங்களிதழில் ஆபத்துக்கிடமான அபவாதம் அல்லது கமலாம்பாள் சரித்திரம் என்னும் புதுமாதிரியான தொடர்கதையை எழுதி வெளியிட்டார். கற்பனையாக எழுதப்பட்ட இந்தக் கதை படித்தவர்களுடைய உள்ளத்தைக் கவர்வதாக இருந்தது. இதனால் இராசம் அய்யருடைய பெயர் எல்லா இடங்களினும் பரவத்தொடங்கியது. மேலும் வேதாந்தக்கட்டுரைகளையும் எழுதினர். இவருடைய ஒரே நூல் இக் கமலாம்பாள் சரித்திரந்தான்.

குருவையடைதல்

பி. எல். தவறியதில் இருந்து இராசம் அய்யருடைய உலக வெறுப்பு மிகுதிப்பட்டுக்கொண்டே வந்தது. குருவாக விளங்கிய அம்மையார் யாண்டோ சென்றுவிட்டார். இராசம் அய்யர் வேறு குருவைத் தேடினர். அந்நாளில் சாந்தானந்த சரசுவதி என்னும் பெரியார் உண்மையான வேதாந்தப் பெரியாராக விளங்கியிருந்தார். அய்யர் அவரை அடுத்தும் பல செய்திகளை அறிந்தார்.

விவேகானந்தர்

அந்நாளில் விவேகானந்தர் சென்னைக்கு வந்தார். மயிலையில் வேதாந்த நோக்கமுடையவர்களாக இருந்த செல்வர்கள் சிலர் இராசம் அய்யரை விவேகானந்தருக்கு அறிமுகப்படுத்தினர்கள். தாங்கள் இராசம் அய்யரைக் கொண்டு ஒரு வேதாந்தப் பத்திரிகை வெளியிட விரும்புவ தாகவும் அப்பத்திரிகைக்குத் தகுந்த பெயரை விவேகா னந்தரே குறிப்பிடவேண்டும் எனவுங் கேட்டுக்கொண் டார்கள்.

பிரபுத்தபாரதம்

இராசம் அய்யரோடு உரையாடிப்பார்தத விவேகா னந்தர் இராசம் அய்யருடைய வேதாந்த ஆராய்ச்சியில் மன நிறைவு கொண்டார். அவர்கள் வெளியிட விரும்பிய பத்திரிகைக்குப், "பிரபுத்தபாரதம்" என்று பெயர சூட்டு மாறு கூறினர். இராசம அய்யரை ஆசிரியராகக்கொண்டு பிரபுத்தபாரதம் வெளியாயிற்று இராசம் அய்யர் வேதாந்தத்தைக் குறித்து அப்பதிரிகையில் பல கட்டுரை கள் எழுதினர். அக்கட்டுரைகளைப் படித்தவர்கள் இராசம் அய்யருடைய வேதாந்த நூல் திறனை வியந்து போற்றினர் கள். பத்திரிகையை வாங்கிப்படிப்போர் தொகையும் வளர்ந்தது.

இறுதி

இராசம் அய்யர் திருமணம் முடியப்பெற்ற இளைஞராக இருந்தும் இல்லற நடவடிக்கைகளில் சிறிதும் கலந்து கொள்ளாமல் வேதாந்தக் கட்டுரை எழுதுதல் ஆத்ம சாதனை செய்தல் முதலியவைகளிலே ஈடுபட்டிருந்தார். இதனால் இவரது உடலை நோய்கள் பற்றின. அதற்கு மருத்துவஞ்செய்து சிலமுறை நலமடைந்தாராயினும்

இறுதியில் நோய் கடுமையாகிவிட்டது. 1898-ஆம் ஆண்டு மேத் திங்கள் 13-ஆம் நாளில் தமது இருபத்தாறும் அகவையில் இவ்வுலக வாழ்வைத் துறந்தார்.

ஏமாற்றம்

இவரது வேதாந்தக்கட்டுரை ஒன்றின்பொருள நன்கு விளங்காதபடியால், அகக்கட்டுரை அரசாங்கக்குற்றமுடையது என்று அரசியல் அலுவலாளர்கள் எண்ணினர். ஐயரைக் கைது செய்யுமாறு பிடிகட்டளை (வாரண்டு) அனுப்பினர். ஐயரைக் கைதுசெய்யச்சென்ற ஊர்க்காவலர் அவர் விண்ணுலகஞ் சென்றுவிட்டாரென்பதைக் கேள்விப்பட்டு மிகுந்த ஏமாற்றத்துடன் திரும்பினர்.